கலைஞர்
100
1924 - 2023

விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு



விடுதலைப் போராட்டத்தில்
தமிழ் நாட்டின் பங்களிப்பு



சிறப்பு மலர் - 2023

மு.க. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

31.07.2023

வாழ்த்துச் செய்தி

நான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக, நமது தேசியக் கொடியை மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து ஏற்றியிருப்பது குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மாபெரும் இந்திய விடுதலைப் போராட்டத்திற்கான விதைகள் நமது தமிழ் மண்ணிலிருந்தே விதைக்கப்பட்டுள்ளதை எண்ணி ஒரு தமிழனாக நான் பெருமிதமுறுகிறேன்.

தமிழ்நாட்டு சுதந்திரப் போராட்ட வீரர்களின் மறைக்கப்பட்ட வரலாறுகளை, இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கான தமிழர்களின் மாபெரும் பங்களிப்புகளை உலக அரங்கிற்கு எடுத்துச் செல்லும் இந்த அரிய நூலை உங்களுக்குப் படைப்பதில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

காலனி ஆதிக்கத்தின் இருண்ட நாட்களில்கூடச் சுதந்திரத்தீ கொழுந்துவிட்டெரிந்த நிலமாகவே நமது தாய்த் தமிழ்நாடு இருந்தது. நமது தமிழர்களின் வல்லமையும் நெஞ்சுறுதியும் சாதிக்கும் ஆளுமையும் அன்றும் இன்றும் என்றும் இந்தியாவுக்கே சிறந்த முன்மாதிரியாக இருப்பதில் வியப்பில்லை.

பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து அநீதிக்கும் கொடுங்கோன்மைக்கும் எதிரான உணர்ச்சிமிகு போராட்டத்திற்கு வித்திட்டதன் மூலம், நமது தமிழ் நிலம், வரலாற்றில் தலைநிமிர்ந்து நின்றதைப் பெருமையுடன் இந்நூல் வழிமொழிகிறது. இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு பங்களித்த தன்னலமற்ற அனைத்து தமிழ்நாட்டு வீரர்களின் நினைவையும் இங்கு நான் போற்றி வணங்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மிக நீண்ட காலமாக நம்மிடம் மட்டுமே பேசுபொருளாக இருந்த நமது வரலாற்றின் மறைக்கப்பட்ட அத்தியாயங்களைப் பொதுமக்களின் முன் உரிய ஆவணங்களுடன் பகிர்ந்துகொள்ள இந்நூல் முனைகிறது. இந்த வரலாற்றுச் சான்றுகளை ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிடுவதன் மூலம் இதுவரை பதிவுசெய்யப்படாத தமிழினத்தின் பெருமைமிகு வரலாறு மிகச்சிறப்பான முறையில் இந்நூல் மூலம் உலக அரங்கிற்கு செல்வதாகக் கருதுகிறேன்.

நமது மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய முன்னாள் முதலமைச்சர்களான பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் நமது சுதந்திரப் போராட்ட வீரர்களை எப்போதும் உரிய முறையில் போற்றி மதித்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரர்களும் தேசியத் தலைவர்களுமான இராஜாஜி மற்றும் காமராஜருக்கு நினைவுச் சின்னங்களைத் தமிழ்நாட்டில் முதன்முதலில் எழுப்பினார். மேலும், கலைஞர்தான் மாபெரும் தலைவர்களான நேதாஜிக்கும் கக்கனுக்கும் சிலைகளைத் தமிழ்நாட்டில் அமைத்தார்.

நமது தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள், 1962இல் நிகழ்ந்த இந்திய - சீனப் போரில், இந்தியாவுக்குத் தோள்கொடுத்து உளப்பூர்வமாகப் போராட்டக் களத்தில் ஆதரவளித்தார். அதேபோல் கலைஞர் அவர்கள், 1972இல் நடந்த பாகிஸ்தானுக்கெதிரான போரில், இந்திய அரசாங்கத்திற்கு உதவும் வண்ணம் ஆறு கோடி நிதி திரட்டியளித்தார் (தமிழகத்தைத் தவிர மற்ற அனைத்து மாநிலங்களின் ஒட்டுமொத்தப் பங்களிப்பு வெறும் 18 கோடி மட்டுமே). 1999இல் நடைபெற்ற கார்கில் போரிலும், வாஜ்பாய்

தலைமையில் நடந்த ஒன்றிய அரசுக்குக் கலைஞரின் அரசு 50 கோடிகளைத் தமிழ்நாட்டின் பங்களிப்பு நிதியாக அளித்துப் பெருமையுற்றது.

இந்தியாவின் 75ஆம் ஆண்டு சுதந்திரப் பொன்விழாவை அண்மையில் நாம் மிகச் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தோம். தென்னிந்திய ஆற்றுப் படுகைகளிலிருந்தே இந்தியாவின் வரலாறு குறிப்பாகத் தமிழ்நாட்டிலிருந்தே இந்திய வரலாறு திரும்பவும் புதிய முறையில் எழுதப்பட வேண்டும் என்பது குறித்துத் தொடர்ந்து நான் வலியுறுத்தி வருகிறேன். அப்படி நான் வலியுறுத்துவதற்கு மிகப் பொருத்தமான பல காரணங்கள் நம்மிடம் உண்டு.

நமது தமிழ்மொழி உலகின் மூத்த மொழிகளில் ஒன்று மட்டுமன்று. செம்மொழிகளின் செம்மொழி மட்டுமன்று நமது தமிழ். அன்று முதல் இன்று வரையில், "சமயச்சார்பற்ற மொழி" என்ற அடையாளத்திற்குத் தகுதி பெற்ற ஒரே வாழும் மொழியாகத் தமிழ் தொடர்ந்து இருந்து வருகிறது. இது ஒரு வெறும் பெருமை மட்டுமில்லை. நமது வரலாற்றின் மூலம் நிறுவப்பட்ட ஓர் உண்மையாகும். எதற்காக நாம், இந்தியாவின் வரலாறு, தமிழ் நிலத்திலிருந்தே தொடங்கி எழுதப்பட வேண்டும் என்று சொல்கிறோம்? அப்போதுதான் இந்தியத் துணைக்கண்டத்தின் உண்மை வரலாற்றைப் பக்கச் சார்புகள் எதுவுமின்றி உண்மை வரலாறாக நாம் எழுத முடியும் என்பதற்காகத்தான் அப்படிச் சொல்கிறோம்.

இந்த நூலால் விளையும் பயன்கள் இரண்டு. 1.இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் மறைக்கப்பட்ட தமிழர்களின் பங்களிப்புகளைச் சான்றாதாரங்களுடன் இந்நூல் எடுத்துரைக்கிறது. 2. இதுவரை கொண்டாடப்படாத நமது வரலாற்று நாயகர்கள் பலரை இந்த நூல் நமக்கு அடையாளப்படுத்துகிறது. இந்நூலில் உள்ள கட்டுரைகளை எழுதிய கட்டுரையாளர்களை - மறைக்கப்பட்ட தமிழ்நாட்டு வரலாற்றை பொதுமக்களின் பார்வைக்கு கொண்டுவந்த - அந்த மகத்தான பெருமைக்காக- நான் பெரிதும் பாராட்டுகிறேன். இதைப்போல் மறைக்கப்பட்ட அரிய வரலாறுகளை வெளிக்காட்டும் பல நூல்கள் இனியும் தொடர்ந்து வெளிவரும் என்று நம்புகிறேன். கொண்டாடப்படாத கதாநாயகர்களின் கதைகள்,இந்நூலுக்குப்பிறகு நம் தேசத்தின் அடையாளச் சின்னங்களாக மாறிவிடும் என்பதில் எனக்கு எந்தவித ஐயமும் இல்லை.

தமிழ் வளர்ச்சித் துறைச் செயலாளர் மரு. இரா. செல்வராஜ் இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. த. மோகன் இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் (வெளியீடுகள்), தமிழரசு, இக்கட்டுரைகளை எழுதிய ஆசிரியர்கள், அறிவுறுத்தல் குழு மற்றும் இந்நூலின் உருவாக்கத்தில் பங்களித்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டு சுதந்திரப் போராட்ட வீரர்களின் அருங்கதைகளைப் பொதுமக்களுக்குக் கொண்டுசென்று,நமது நாட்டின் ஒற்றுமையையும் வலிமையையும் கட்டியெழுப்ப இந்நூல் பயன்படும். இனி வரும் நமது எதிர்காலத் தலைமுறையினருக்கு இந்நூல் ஒரு கலங்கரை விளக்கமாக இருந்து ஒவ்வொருவரின் இதயத்திலும் நாட்டுப்பற்றைக் கொழுந்து விட்டெரியச் செய்யட்டும் என்று வாழ்த்துகிறேன்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து,இந்தநாட்டின் சாதிசமயச் சார்பற்றதேசியஒருமைப்பாட்டுக்கும், அரசியல் சாசனம் வகுத்துக் கொடுத்துள்ள இறையாண்மைக்கும் வழிகோலிய நமது வீரம் வாய்ந்த முன்னோரின் நினைவுகளைப் போற்றிக் கொண்டாடுவோம். என்றும் வாழ்க தமிழ்நாடு! என்றும் வாழ்க இந்தியா!

அன்புடன்,

(மு.க.ஸ்டாலின்)

மு.பெ. சாமிநாதன்
தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

13.07.2023
நாள்.....

அணிந்துரை

"விடுதலைப் பெற ஒரே வழிதான் உண்டு – வீரத்தியாகம்"
– என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

"இருள் – மழை – புயல் இவற்றுக்கிடையே மின்னல் வெளிச்சத்தில் வழிதெரிந்து நடப்பதைப்போல, நெருக்கடி நெருப்பாற்றையும் கடந்து நிற்பதுதான் இந்தியாவின் ஜனநாயகமாகும்."
– என்றார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

விடுதலைக் காற்றை சுவாசிப்பதற்காக உயிரையும், உதிரத்தையும், தனிமனித வாழ்க்கையையும் இழந்ததன் காரணமாக அமைந்த வீரத்தியாகிகளின் பட்டியலே தமிழ்நாடுதான்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே விடுதலைக்காக முதலில் குரல் கொடுத்தது நமது தமிழ் மண்தான்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு ஒரு நெல்மணியைக் கூட கப்பம் கட்ட முடியாது என்று சொன்ன நெற்கட்டான் செவல் பூலித்தேவன், ஆங்கிலேயர்களுக்கு மண்டியிடாத மானப்போர் புரிந்த மாவீரன் காள் சாகிப் மருதநாயகம், தானம் கேள் தருகிறேன், வரி கேட்டால் தர மாட்டேன் என்று உரைத்த வீரபாண்டிய கட்டபொம்மன், அவர்தம் படைத்தளபதி மாவீரன் சுந்தரலிங்கம், ஆங்கிலேயரிடம் இருந்த சிவகங்கையை எட்டு ஆண்டுகள் போராடி மீட்ட வீரமங்கை வேலுநாச்சியார்,

பிரிட்டிஷ் ஆயுதக்கிடங்கிலேயே தாக்குதல் நடத்திய முதல் தற்கொலைப் படை வீரப்பெண் குயிலி, பீரங்கிகளே சரியும் அளவிற்கு வளரியால் வாகை சூடிய சின்னமருது, பெரியமருது, உயிரை துச்சமென மதித்து தூக்கு மேடை ஏறிய தீரன் சின்னமலை, ஆங்கிலேய இராணுவத்துக்கு பயத்தை காட்டிய வேலூர் கோட்டை, இந்திய விடுதலைப்போரின் முதல் சிப்பாய் புரட்சி, ஆங்கிலேயர்களுக்கு எதிராக கப்பல் வணிகம் செய்த கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி அவர்கள், பாரதியின் சுதந்திர தியாகத்தின் புரட்சிப்பாடல்களால் ஆங்கிலேய அரசை ஆட்டம் காண வைத்தது நமது தமிழ்மண்,

மு.பெ. சாமிநாதன்
தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

நாள் 13.07.2023

வேதாரண்ய உப்பு சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு என அறிவிக்கப்பட்ட பல்வேறு போராட்டங்களால் தமிழ் மண்ணில் விளைந்த சுதந்திர விடுதலை தியாகத்தின் பலன், ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுதலைப் பெற்றது.

இத்தகைய வரலாறுகளை போற்றும் வகையில், இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாடு ஆற்றிய பங்களிப்பை குறித்து முழுமையான ஆவணம் ஒன்றினை தமிழிலும், ஆங்கிலத்திலும் தயாரித்து வெளியிடப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2021ஆம் ஆண்டு சுதந்திரத் தினத்தன்று சென்னை கோட்டை கொத்தளத்தில் முதன் முறையாக தேசிய கொடியினை ஏற்றி வைத்து அறிவித்த அறிவிப்பிற்கிணங்க,

இந்திய சுதந்திரப் போராட்ட வீர வரலாற்றில் ஈடுபட்ட எண்ணற்ற தமிழக தியாகிகளின் தன்னலமற்ற தியாகத்தைப் போற்றும் வகையில் அவர்களின் தியாக வரலாறுகளை இன்றைய இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ள ஏதுவாக செய்தி மக்கள் தொடர்புத்துறையின் 'தமிழரசு' வாயிலாக "இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு தமிழ்நாடு அளித்த பங்களிப்பு" குறித்த வரலாற்று தொகுப்பு நூல் ஒன்றினை தயாரித்து வெளியிட்டுள்ளது என்பதை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இத்தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ள தமிழகத் தியாகிகளின் வரலாற்று பதிவுகளைப் படித்து பயன்பெற வேண்டுகிறேன்.

நன்றி! வணக்கம்.

அன்புடன்

(மு.பெ.சாமிநாதன்)

சிவ் தாஸ் மீனா
தலைமைச் செயலாளர்

தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

முன்னுரை

"நம்முடைய ஒவ்வொரு பணியிலும், புதிய புதிய சோதனைகள் ஏற்படலாம். பணிவு, எளிமை, அகிம்சை, சகிப்புத்தன்மை ஆகிய நல்ல பண்புகளினால் அத்தகைய சோதனைகளில் எல்லாம் நாம் பரிபூரணமான வெற்றியை அடைந்து விடலாம்." – என்றார் மகாத்மா காந்தியடிகள் அவர்கள்.

ஆங்கிலேயர்களால் பறிக்கப்பட்ட நமது நாட்டை மீட்டெடுக்கப் போராடிய சுதந்திரப் போராட்ட தியாகிகளால் இந்தியா விடுதலைபெற்றது.

தீரம் மிக்க தியாகிகள், தமிழ் நில மீட்பர்கள் விடுதலைப் போராட்டத்துடன் தொடர்புடைய பல்வேறு இயக்கங்களை நடத்தி, அவற்றை அமைப்பு ரீதியாக வலுப்படுத்தி ஆங்கிலேயரிடமிருந்து இந்தியா விடுதலை பெற தங்களின் சிறப்பான பங்களிப்பை அளித்துள்ளனர்.

அத்தகைய, சுதந்திரப்போராட்ட தியாகிகளின் தியாகம் இன்றைக்கும் ஒவ்வொரு தமிழர்களின் எண்ணத்தாலும், சிந்தனையாலும் வருங்கால தலைமுறையினர்களால் போற்றி பாராட்டப்பட்டு வருகிறது.

நாம் இந்த சுதந்திரப் போராட்ட தியாகிகளின் வீர வரலாற்றை என்றென்றும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் கருதி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்திய விடுதலைப் போராட்டத்துக்குத் தமிழ்நாடு அளித்த பங்களிப்பு குறித்த ஆவணத்தினைத் தயாரித்து வெளியிடப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு அரசு, செய்தித்துறை, 'தமிழரசு' வெளியீடாக "இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு தமிழ்நாடு அளித்த பங்களிப்பு" குறித்த வரலாற்று தொகுப்பு நூலினை மிகச் சிறப்பாக, வரலாற்று அறிஞர்களால் தொகுத்து உருவாக்கியிருப்பது பெரும் போற்றுதலுக்குரியதாகும்.

தமிழரசு இதழின் இந்தப் பதிப்பின் மூலம், இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பினை வாசகர்கள் தெளிவாக அறிந்துகொள்ள முடியும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

அன்புடன்,

சிவ்தாஸ்மீனா

தொலைபேசி: 044–25671555 நிகரி: 044–25672304 மின்அஞ்சல்: cs@tn.gov.in

மரு. இரா. செல்வராஜ், இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்,

தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

வாழ்த்துரை

இந்திய விடுதலைக்காக 150 ஆண்டுகளுக்கு முன்னதாகவே போராடிய மண்தான் நமது தமிழ்நாடு.

இந்திய விடுதலைக்காகப் போராடிய வீரர்களையும் குறிப்பாக, தமிழ் மண்ணிலிருந்து விடுதலைக்காகப் போராடிய தியாகிகளை நினைவு கூர்வதிலும், அவர்களைப் போற்றி பெருமை சேர்ப்பதிலும் தமிழ்நாடு அரசு எப்போதும் தவறியது இல்லை.

சுதந்திரப் போராட்ட தியாகிகளின் தியாகம் ஒவ்வொரு இந்தியர்களின் நெஞ்சத்திலும் நிரம்பியிருக்கிறது. அறவழி ஒன்றையே தங்களின் குறிக்கோளாகக் கொண்டு அதனைப் போராட்டமாக நடத்திக்காட்டி வெற்றி அடைந்து இன்று இந்தியா சுதந்திரக் காற்றை சுவாசித்துக் கொண்டிருக்கிறது. அவ்வாறு அகிம்சை வழியில் போராடிய தியாகிகளை போற்றிப் பாதுகாக்க வேண்டியது நமது தலையாயக் கடமையாகும்.

அந்த வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சுதந்திர தின உரையின்போது அறிவித்தபடி சுதந்திரப் போராட்டத்திற்கு தமிழ்நாடு அளித்த பங்களிப்பினை சேகரித்து, அதனை ஒரு ஆவணமாகத் தயாரித்து தமிழ் வழியிலும், ஆங்கில வழியிலும் வெளியிடப்படும் என்பதற்கிணங்க செய்தி மக்கள் தொடர்புத்துறை தமிழரசு மூலம் "இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு தமிழ்நாடு அளித்த பங்களிப்பு" குறித்த வரலாற்று தொகுப்பு நூலினை வடிவமைத்து வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சி கொள்கிறேன்.

இந்த வரலாற்று தொகுப்பு நூல் சுதந்திரப் போராட்ட வீரத்தலைவர்களின் தியாகத்தினை தங்களின் கண் முன்னே படம் பிடித்துக் காட்டும் என்பதில் ஐயமில்லை.

இவ் ஆவணம் தமிழ்நாட்டு மக்களின் கரங்களில் ஒரு மணிமகுடமாகத் திகழ வாழ்த்துகிறேன்.

அன்புடன்

(இரா. செல்வராஜ்)

தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை , சென்னை–600 009. மின்னஞ்சல்: tdinfosec@tn.gov.in
தொலைபேசி (அலுவலகம்) : 044-25672887, நகரி : 044-25672021

த. மோகன், இ.ஆ.ப
இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலகம் அரசு இணைச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை,
நாமக்கல் கவிஞர் மாளிகை (9–வது தளம்)
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
தொலைபேசி : 044–25671300
நகரி : 044–25677777
மின்னஞ்சல் : dipr@tn.gov.in

ஆசிரியர் உரை

அடிமை இருளில் தத்தளித்த இந்தியா, சுதந்திர வெளிச்சத்திற்கு வருவதற்காக, மகாத்மா காந்தியடிகளின் தலைமையில் வீறுகொண்டு எழுந்து முன்னின்று நடத்திய பல போராட்டங்களில் தமிழ்நாடும் மிகப்பெரிய பங்களிப்பை நல்கியுள்ளது. சுதந்திரப் போராட்ட வீரர்கள் பலர் தம்முடைய உயிரைத் துச்சமென மதித்துக் களமிறங்கினார்கள்; 'சுதந்திரம் எமது உயிர் மூச்சு, அதை அடைந்தே தீருவோம்' என்று போர்க்குரல் எழுப்பினார்கள். அப்படிப்பட்ட விடுதலைத் தியாகிகளை நாம் என்றென்றும் நினைவில் வைத்திருக்கும் விதமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எண்ணிலடங்கா முன்னெடுப்புகளை மேற்கொண்டிருக்கிறார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்த தமிழ்நாட்டுத் தலைவர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்திடும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டன. சென்னை கிண்டியில் வ.உ.சி. அவர்களுக்கு செக்குடன் கூடிய மணிமண்டபம், சென்னை கிண்டியில் உத்தமர் காந்தி அவர்களுக்கு மணிமண்டபம், சென்னை திருவல்லிக்கேணியிலும், தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் மற்றும் ஓட்டப்பிடாரத்திலும் மகாகவி பாரதியார் அவர்களுக்கு நினைவு இல்லம்,

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு மணிமண்டபம், திண்டுக்கல் மாவட்டம், விருப்பாச்சியில் கோபால் நாயக்கர் அவர்களுக்கு மணிமண்டபம், ஈரோடு மாவட்டம், ஓடாநிலையில் தீரன் சின்னமலை அவர்களுக்கு மணிமண்டபம் மற்றும் சங்ககிரியில் நினைவுச் சின்னம், திண்டுக்கல் வள்ளியம்மை அவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்டம், தில்லையாடியில் நினைவகம், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் மருதுபாண்டியர் அவர்களுக்கு நினைவு மண்டபம்,

சிவகங்கை மாவட்டம், சூரக்குளத்தில் வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு நினைவு மண்டபம், தென்காசி மாவட்டம், செங்கோட்டையில் தியாகி வாஞ்சிநாதன் அவர்களுக்கு மணிமண்டபம், திருநெல்வேலியில் வ.உ.சி. அவர்களுக்கு மணிமண்டபம், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் ஒண்டிவீரன் அவர்களுக்கு மணிமண்டபம், தூத்துக்குடி மாவட்டம், கட்டாலங்குளத்தில் வீரன் அழகு முத்துக்கோன் அவர்களுக்கு மணிமண்டபம்,

தூத்துக்குடி மாவட்டம், கவர்னகிரியில் வீரன் சுந்தரலிங்கம் அவர்களுக்கு நினைவகம், தூத்துக்குடி மாவட்டம், கயத்தாரில் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு மணிமண்டபம், சென்னை கிண்டியில் வெள்ளையனே வெளியேறு இயக்கப் பொன்விழா நினைவுத் தூண், வேலூர் மாவட்டத்தில் சிப்பாய் புரட்சி நினைவுத் தூண், சிவகங்கை மாவட்டம், சூரக்குளத்தில் வீரத்தாய் குயிலி நினைவுச் சின்னம், சென்னை காமராஜர் சாலையில் சுதந்திரப் பொன்விழா நினைவுச் சின்னம்,

நம்முடைய தியாகிகளையும் நம்முடைய வரலாற்றையும் நினைவுகூரும் வகையில் இவையெல்லாம் அமைக்கப்பட்டுள்ளன. இதன்வழியாக, இவ்வுறைய தலைமுறையினரும் நம் முன்னோடிகளின் வரலாற்றை அறிந்து வருகிறார்கள்,

தற்போதைய ஆட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு நம் நாட்டின் விடுதலைக்கு வித்திட்ட தியாகிகளைப் போற்றும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது,

உத்தரப்பிரதேச மாநிலம் காசியில் பாரதியார் அவர்கள் வாழ்ந்த வீடு புனரமைக்கப்பட்டுள்ளது. சென்னை காந்தி மண்டபத்தில் வ.உ.சி., மருதுபாண்டியர்களுக்கும்

வீரபாண்டிய கட்டபொம்மனுக்கும் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. கோவைச் சிறையில் வ.உ.சி. இழுத்த செக்கு பொலிவூட்டப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரத்தில் வ.உ.சி. அவர்களின் நினைவில்லம் புனரமைக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலியில் வ.உ.சி. அவர்களின் மணிமண்டபத்தில் ஒலி, ஒளிக்காட்சி அமைப்பு, கோயம்புத்தூரில் வ.உ.சி. அவர்களுக்குச் சிலை, கடலூரில் சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலையம்மாள் அவர்களுக்குச் சிலை, இந்தியத் திருநாட்டின் 75ஆவது சுதந்திரநாள் விழாவை முன்னிட்டு ஒலி, ஒளிக்காட்சி அமைப்பு, சுதந்திரப் போராட்ட வீரர் தளபதியாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் அவர்களுக்குச் சிலை ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி மாவட்டம், கவர்னகிரியில் வீரன் சுந்தரலிங்கம் மணிமண்டபத்தில் அன்னாருக்குப் புதிய சிலை நிறுவப்பட்டுள்ளது. சென்னை எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் உத்தமர் காந்தியடிகள் அவர்களுக்கு சிலையும், 'விடுதலைப் போரில் தமிழகம்' என்ற தலைப்பில் புகைப்படக் கண்காட்சியும் அமைக்கப்பட்டுள்ளன. மதுரை மாவட்டம், உசிலம்பட்டியிலும் பெருங்காமநல்லூரிலும் தியாகிகள் நினைவு மண்டபம் நிறுவப்பட்டுள்ளது. வ.உ.சி. பிறந்த 150 ஆண்டைக் கொண்டாடும் விதமாக சிறப்புமலர் ஒன்று வெளியிடப்பட்டது. அத்துடன், சென்னை கோயம்பேட்டில் வ.உ.சி. அவர்களின் சிறப்பைப் போற்றும் வகையில் நகரும் புகைப்படக் கண்காட்சியும் நடத்தப்பட்டது. பாரதி மறைந்து 100 ஆண்டு ஆனதை நினைவுகூரும் வகையில் மலர் ஒன்று வெளியிடப்பட்டது. வீரமங்கை வேலுநாச்சியார் நாட்டிய நாடகம் அரங்கேற்றப்பட்டது. விடுதலைப்போரில் வீரத்தமிழகம் முப்பரிமாண ஒளி, ஒலிக்காட்சி உருவாக்கப்பட்டது. இவையெல்லாம் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் அமைக்கப்பட்டதோடு, நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட இந்த மகத்தான தலைவர்களின் சிலைகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் அரசு சார்பில் விழா எடுத்து மாலை அணிவித்து மரியாதையும் செய்யப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, சுதந்திரப் போராட்டப் போர்க்களத்தில் தமிழ்நாட்டுத் தீரர்களின் பங்கெடுப்பினை இன்னும் ஆழமாகப் புரிந்துகொள்ளும் நோக்கத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடந்த சுதந்திரதின உரையில் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். இந்திய விடுதலைப்போரில் தமிழ்நாட்டின் பங்களிப்பை முழுவதுமாக ஆராய்ந்து ஆவணம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும் என்ற அந்த அறிவிப்பிற்கிணங்க செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில், 'இந்திய விடுதலைப் போராட்டத்திற்குத் தமிழ்நாடு அளித்த பங்களிப்பு' குறித்த வரலாற்றுத் தொகுப்பு நூலை 'தமிழரசு' வெளியிடுவதில் இத்துறை மிகுந்த பெருமைகொள்கிறது.

இவ்வரலாற்றுத் தொகுப்பு நூலில் இடம்பெற்றிருக்கும் கட்டுரைகளை, தங்களுடைய ஆற்றல் மிகுந்த எழுத்துகளால் படைத்த கட்டுரையாளர்களுக்கும், உறுதுணையாக நின்று பணியாற்றிய துறை அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புடன்,

(தா. மோகன்)

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது : புரட்டாசி - ஐப்பசி
அக்டோபர் 2023
"விடுதலைப் போராட்டத்தில்
தமிழ்நாட்டின் பங்களிப்பு"
சிறப்பு வெளியீடு

ஆசிரியர் - வெளியிடுபவர்
த. மோகன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
க.அ. முகம்மது ரசூல்
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
சி. சுஜிதா
இரா. பாலாஜி
கு. சுபாஷ்

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீநந்தர்
ஜெ.ஜெயசிம்ஹன்

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.



"நம்முடைய தமிழ்ச் சமூகமானது சிந்தனையால், பண்பாட்டால், நாகரிகத்தால், பழக்கவழக்கத்தால் உயர்வடைய வேண்டும். அதாவது ஏற்றத்தாழ்வற்ற, உயர்வுதாழ்வற்ற ஒரு மனித உரிமைச் சமூகமாக நாம் மாற வேண்டும். அதைத்தான் நம்முடைய சுதந்திரப் போராட்டத் தியாகிகள் விரும்பினார்கள், அதற்காகத்தான் போராடினார்கள், அதற்காகத்தான் தியாகம் செய்தார்கள்."

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

பொருளடக்கம்

- நன்றி 12
- ஆசிரியர்களைப் பற்றி 14
- முன்னுரை 18
- ஆங்கிலேயர்களின் அடக்கு முறைக்கு எதிராக தமிழகத்தில் நடைபெற்ற போற்றத் தக்க போராட்டங்கள் 22
- விடுதலைப் போரில் பெண்கள் 31
- விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டு ஆளுமைகளின் பங்கு 35
- மெட்ராஸ் நிர்வாகத்தில் படிப்பு
  டாக்டர் B.S. பாலிகா 44
- தென்னிந்தியா கிளர்ச்சி
  டாக்டர் K. ராஜய்யன் 76
- சிப்பாய்கள், போர்கள் தமிழ்நாட்டில் சமூக தாக்கம் மற்றும் காலனித்துவ மாற்றம் (1565–1875)
  S. ஜெயசீலா ஸ்டீபன் 96
- தமிழ்நாட்டில் சுதந்திரப் போராட்டத்தின் சுருக்கமான வரலாறு
  டாக்டர் C. நடராஜன் 118
- இந்திய தேசியவாதமும், சங்கத் தமிழ் இலக்கியமும்
  டாக்டர் ராஜேஷ் வெங்கட சுப்பிரமணியன் 162

✶ தமிழ்நாட்டில் பழங்குடியின சுதந்திரப் போராட்ட வீரர்கள்: ஓர் ஆய்வு செய்யப்படாத வரலாறு
டாக்டர் வேலாயுதம் சரவணன் மற்றும் S. வீரமணி 172

✶ தமிழ்நாட்டில் விவசாயிகள் எழுச்சி (1920–1947)
டாக்டர் K. ரமேஷ்குமார் 186

✶ தேசியவாதமும் தமிழ்நாட்டின் உழைக்கும் வர்க்கமும்
பேராசிரியர் V. கிருஷ்ணா அனந்த் 198

✶ சுதந்திரப் போராட்டமும் தமிழ்நாட்டின் வெள்ளித்திரையும்
டாக்டர் தியோடர் பாஸ்கரன் 216

✶ இந்தியாவுடன் இணைதல்: புலம்பெயர் தமிழர்களும் இந்திய சுதந்திரப் போராட்டமும்
டாக்டர் S.N. நாகேஸ்வர ராவ் 228

✶ காலனித்துவ தமிழ்நாட்டில் தடைசெய்யப்பட்ட புத்தகங்கள்
R. முகமது ஹாசன் 254

✶ காலனித்துவ தமிழ்நாட்டில் பொதுவுடமைவாதிகளின் எழுத்துக்களுக்கான முக்கிய மேடை(1925–1945)
டாக்டர் V. வெங்கட்ராமன் 266

✶ காலனித்துவ மதராசில் கல்வி, வேலையின்மை மற்றும் சுதந்திரப் போராட்டம்
டாக்டர் கௌதம் சந்திரா 286

✶ மாணவர் இயக்கங்களும் சுதந்திரப் போராட்டமும்–1
டாக்டர் சிந்தியா ஜீட் 304

✶ மாணவர் இயக்கங்கள் மற்றும் சுதந்திரப் போராட்டம்–2
டாக்டர் D. எபி ஜேம்ஸ் 316

✶ சுதந்திரப் போராட்டத்தில் தமிழ்நாடு கிறிஸ்தவர்களின் பங்களிப்புகள்
டாக்டர் M. ஆரோக்கியசாமி சேவியர் S.J. 324

✶ சுதந்திரப் போராட்டத்தில் இஸ்லாமியர்களின் பங்களிப்புகள்
டாக்டர் J. ராஜா முஹம்மது 342

✶ தமிழ்நாடு சட்டமறுப்பு இயக்கத்தில் ஐரோப்பிய மேட்டுக் குடியினரின் காந்திய ஆதரவு அணுகுமுறை(1930–1932)
டாக்டர் V. வெங்கட்ராமன் 358

✶ தியாகத்தின் அடையாளங்கள்: தமிழ்நாட்டின் சுதந்திரப் போராட்ட நினைவுச் சின்னங்கள்
டாக்டர் K. அசோக், டாக்டர் P. சுமபாலா மற்றும் டாக்டர் S. தீபிகா 378

✶ இந்திய தேசிய வாதமும் புதுச்சேரியின் விடுதலையும்
டாக்டர் M.P. ராமானுஜம் 396

நன்றி

தமிழ்நாட்டின் சுதந்திரப் போராட்டம் தொடர்பான நிகழ்வுகள், மனிதர்கள், செயல்முறைகள், அமைப்புகளை பதிவு செய்யும் வகையில் ஒரு தொகுதியை உருவாக்குவது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததுமே, இதற்கான குழுவை அமைத்த செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. த.மோகன், இ.ஆ.ப., மற்றும் முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., அவர்களுக்கு நன்றி. அவருடைய ஊக்கமும் ஆதரவும் அளப்பரியதாகும்.

1. இத்திட்டத்தின் மையப் புள்ளியாக இருந்து, மேற்பார்வையிட்டு, கூட்டங்களை ஒருங்கிணைத்த செய்தி மக்கள் தொடர்புத் துறை இணை இயக்குநர் திரு. இரா.அண்ணா அவர்களுக்கு நன்றி. இத்திட்டம் வேகமாக முன்னேறுவதற்கு அக்கூட்டங்கள் உதவின என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கட்டுரையாளர்களின் பங்களிப்பிற்கு மனமார்ந்த நன்றி. சுதந்திரப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு தொடர்பாக அதிகம் அறியப்படாத அம்சங்களை வெளிக்கொண்டுவர இக்கட்டுரைகள் உதவி இருக்கின்றன. இவர்கள் அனைவரும் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் முழுநேரம் பணியாற்றுபவர்கள். இவர்களின் கட்டுரைகள் பல ஆண்டு கள உழைப்பு மற்றும் ஆவணக்காப்பக ஆய்வுகள் மூலம் எழுதப்பட்டவை. கட்டுரைகள் எழுத ஆவணக் காப்பகத்தின் முதன்மை தரவுகளை பயன்படுத்தியுள்ளதால் அனைத்து கட்டுரைகளும் செழுமையாக உள்ளன.

ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி

1. டாக்டர் ஆ.இரா.வேங்கடாசலபதி, வரலாற்றுப் பேராசிரியர், சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் (MIDS), சென்னை.
2. திரு. சங்கர சரவணன், இணை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் கழகம், சென்னை.
3. திரு. ஸ்டாலின் குணசேகரன், எழுத்தாளர், நூலாசிரியர்.
4. திரு. விஜயராஜா, ஆய்வு அதிகாரி, தமிழ்நாடு ஆவணக் காப்பகம், சென்னை.

பிற உறுப்பினர்கள்:

1. டாக்டர் N. தனலட்சுமி, (வெளித் தேர்வாளர்), பேராசிரியர், இயக்குநர், தலைவர், கலை ஆசிரியர், வரலாறு மற்றும் சுற்றுலா ஆய்வுகள் பள்ளி, தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம், சைதாப்பேட்டை, சென்னை – 600 015.
2. டாக்டர் சிந்தியா ஜூட், உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை, ஸ்டெல்லா மேரி கல்லூரி (தன்னாட்சி), சென்னை – 600 086.
3. டாக்டர் A.அற்புதச் செல்வி, உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை, லயோலா கல்லூரி, (தன்னாட்சி) சென்னை – 600 034.

4. டாக்டர் ட.செல்வநாதன், இணைப் பேராசிரியர் (ஓய்வு) வரலாற்றுத் துறை, லயோலா கல்லூரி, (தன்னாட்சி) சென்னை – 600 034.

5. டாக்டர் சேவியர், உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை, லயோலா கல்லூரி, (தன்னாட்சி) சென்னை – 600 034.

6. டாக்டர் K.அசோக், உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை, சென்னை கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை – 600 059.

7. டாக்டர் V.வெங்கட்ராமன், முன்னாள் முதல்வர் மற்றும் தலைவர் வரலாற்று ஆய்வு மையம், இராஜபாளையம் ராஜூஸ் கல்லூரி, இராஜபாளையம் – 626 117.

8. டாக்டர் T.பாலசுப்பிரமணியன், உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி – 630 003.

9. திரு. செந்தில் குமரன், ஆய்வாளர், தமிழ்நாடு மெய்நிகர் பல்கலைக்கழகம், தரமணி – கோட்டூர்புரம்.

10. திரு. இரா.அண்ணா, இணை இயக்குநர் (வெளியீடுகள்), தமிழரசு, தரமணி, சென்னை – 600 113.

இத்திட்டத்திற்கான அனைவரின் ஆதரவு மற்றும் ஆலோசனைகளுக்கு நன்றி.
உங்கள் அனைவரின் ஒத்துழைப்பு மற்றும் ஈடுபாட்டிற்கும் நன்றி.

டாக்டர் பெர்னார்ட் டி சாமி

ஆலோசனைக்குழுத் தலைவர்,
இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு தமிழ் நாடு அளித்த பங்களிப்புத் திட்டம்,
முன்னாள் தலைவர், வரலாற்றுத் துறை, லயோலா கல்லூரி (தன்னாட்சி) சென்னை – 600 034.
மூத்த புத்தாய்வாளர், சமூக அறிவியல் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (LISSTAR)
லயோலா கல்லூரி (தன்னாட்சி) சென்னை – 600 034.

ஆசிரியர்களைப் பற்றி

டாக்டர் பெர்னார்ட் டி'சாமி,
மூத்த புத்தாய்வாளர், லயோலா சமூக அறிவியல் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (LISSTAR) லயோலா கல்லூரி (தன்னாட்சி) சென்னை - 600 034
மொபைல் எண்: 94442 88774, மின்னஞ்சல்: bernarddsami@gmail.com

&

டாக்டர் என்.தனலட்சுமி,
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக வரலாறு மற்றும் சுற்றுலாத்துறைப் பேராசிரியர், 577, அண்ணாசாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015

அத்தியாயம்-1

தமிழ்நாட்டில் சுதந்திரப் போராட்டத்தின் சுருக்கமான வரலாறு

டாக்டர் சி.நடராஜன்,
பேராசிரியர், வரலாற்றுத்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்
அலைபேசி எண். 94428 91836, 96292 41836,
மின்னஞ்சல்: drnadarajan_auhis@yahoo.in

அத்தியாயம்-2

இந்திய தேசியவாதமும், சங்கத் தமிழ் இலக்கியமும்

டாக்டர் ராஜேஷ் வெங்கட சுப்ரமணியன்,
இணைப் பேராசிரியர் & தலைவர், மனிதநேயம் மற்றும் சமூக அறிவியல் துறை
இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (IISER) மொஹாலி, பஞ்சாப்
அலைபேசி எண்: +91 89682 16358, மின்னஞ்சல்: rajeshv@iisermohali.ac.in

அத்தியாயம்-3

தமிழ்நாட்டில் பழங்குடியின சுதந்திரப் போராட்ட வீரர்கள்: ஓர் ஆய்வு செய்யப்படாத வரலாறு

டாக்டர் வேலாயுதம் சரவணன்,
ஜவஹர்லால் நேரு ஆய்வு மையம்
ஜாமியா மில்லியா இஸ்லாமியா, புது தில்லி - 100 025
மின்னஞ்சல்: Saravanan.JMI@gmail.com

&

டாக்டர் வீரமணி.எஸ்,
மேலாண்மை ஆய்வுத் துறை, ஜாமியா மில்லியா இஸ்லாமியா, புது தில்லி - 110 025
மின்னஞ்சல்: veeramanis@jmi.ac.in

அத்தியாயம்-4

தமிழ்நாட்டில் விவசாயிகள் எழுச்சி (1920-1947)

டாக்டர் கே.ரமேஷ்குமார்,
இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர், முதுகலைத் துறை மற்றும் வரலாற்று ஆராய்ச்சி மையம்
இராஜபாளையம் ராஜூஸ் கல்லூரி, இராஜபாளையம் கைபேசி எண்: 94429 57234,
மின்னஞ்சல்: rameshkumarraja@gmail.com

அத்தியாயம்-5

தேசியவாதமும் தமிழ்நாட்டின் உழைக்கும் வர்க்கமும்

பேராசிரியர் வி.கிருஷ்ணா ஆனந்த்,
வரலாற்றுத் துறை, சிக்கிம் பல்கலைக்கழகம், காங்டாக்
மின்னஞ்சல்: krishnananth@gmail.com

அத்தியாயம்-6

சுதந்திரப் போராட்டமும், தமிழ்நாட்டின் வெள்ளித்திரையும்

டாக்டர் தியோடர் பாஸ்கரன், எழுத்தாளர்
26, ஆஷா டவுன்ஷிப் இரண்டாம் கட்டம்
டோடா குப்பி போஸ்ட், பெங்களூரு: 560 077
தொலைபேசி எண்: 080 - 2844 4949
மின்னஞ்சல்: theodorebaskaran@gmail.com

அத்தியாயம்-7

இந்தியாவுடன் இணைதல்: புலம்பெயர் தமிழர்களும் இந்திய சுதந்திரப் போராட்டமும்

டாக்டர் எஸ்.என்.நாகேஸ்வர ராவ்,
முன்னாள் தலைவர், முதுகலை - வரலாற்று ஆய்வுகள் ஆராய்ச்சித் துறை,
சர் தியாகராய கல்லூரி, சென்னை 600 021
அலைபேசி எண்: 94441 41218,
மின்னஞ்சல்: rao.nageshwar@gmail.com

அத்தியாயம்-8

அரசியல் உரை மற்றும் தேசியவாத கதைகள்: காலனித்துவ தமிழ்நாட்டில் தடைசெய்யப்பட்ட புத்தகங்கள்

பேராசிரியர் முகமது ஹாசன்,
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை,
சி.அப்துல் ஹக்கீம் கல்லூரி (தன்னாட்சி) மேல்விஷாரம், இராணிப்பேட்டை
அலைபேசி எண்: 93841 39721/63831 34221
மின்னஞ்சல்: mohamedhasan82@gmail.com

அத்தியாயம்-9

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தின் இறக்குமதி: காலனித்துவ தமிழ்நாட்டில் பொதுவுடைமைவாதிகளின் எழுத்துக்களுக்கான முக்கிய மேடை (1925 - 1945)

டாக்டர் வி.வெங்கட்ராமன், Ph.D.,
முன்னாள் முதல்வர் மற்றும் தலைவர்,
வரலாற்று ஆராய்ச்சி மையம், இராஜபாளையம் ராஜூஸ் கல்லூரி, இராஜபாளையம்.
அலைபேசி எண்: 94434 24148, மின்னஞ்சல்: drvv1964@gmail.com

அத்தியாயம்-10

காலனித்துவ மதராஸில் கல்வி, வேலையின்மை மற்றும் சுதந்திரப் போராட்டம்

டாக்டர் கௌதம் சந்திரா
பேராசிரியர், வரலாற்றுத்துறை
பாபாசாகேப் பீம்ராவ் அம்பேத்கர் பீகார் பல்கலைக்கழகம், முசாஃபர்பூர், பீகார் - 842 001
அலைபேசி எண்: 91424 52618, மின்னஞ்சல்: gautam.pondy@gmail.com

அத்தியாயம்-11

மாணவர் இயக்கங்களும், சுதந்திரப் போராட்டமும்-1

டாக்டர் சிந்தியா ஜூட்,
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை,
ஸ்டெல்லா மேரி கல்லூரி (தன்னாட்சி) சென்னை - 600 086,
மின்னஞ்சல்: cinthia.jude@gmail.com

அத்தியாயம்-12

மாணவர் இயக்கங்கள் மற்றும் சுதந்திரப் போராட்டம்-2

டாக்டர் டி.எபி ஜேம்ஸ் M.A.,M.Phil,Ph.D.,
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை, இராஜபாளையம் ராஜூ கல்லூரி
இராஜபாளையம்.

அத்தியாயம்-13

சுதந்திரப் போராட்டத்தில் தமிழ்நாட்டு கிறிஸ்தவர்களின் பங்களிப்புகள்

டாக்டர் எம்.ஆரோக்கியசாமி சேவியர் எஸ்.ஜே.,
முதல்வர் மற்றும் இணைப் பேராசிரியர், வரலாற்றுத்துறை
செயின்ட் ஜோசப் கல்லூரி, திருச்சிராப்பள்ளி
அலைபேசி எண்: 89393 97609, மின்னஞ்சல்: arockxavi66@gmail.com

அத்தியாயம்-14

சுதந்திரப் போராட்டத்தில் இஸ்லாமியர்களின் பங்களிப்புகள்

டாக்டர் ஜே.ராஜா முகமது
இயக்குநர், தமிழ்ப் பண்பாட்டு ஆராய்ச்சி மையம், ஜமால் முகமது கல்லூரி, திருச்சிராப்பள்ளி
(முன்னாள் உதவி இயக்குநர், அருங்காட்சியகத்துறை, தமிழ்நாடு) அலைபேசி எண்: 94431 32922,
மின்னஞ்சல்: jrajamohamad@yahoo.com

அத்தியாயம்-15

தமிழ்நாடு சட்ட மறுப்பு இயக்கத்தில் ஐரோப்பிய மேட்டுக்குடியினரின் காந்திய ஆதரவு அணுகுமுறை (1930-1932)

டாக்டர் வி.வெங்கட்ராமன், Ph.D.,
முன்னாள் முதல்வர் மற்றும் தலைவர், வரலாற்று ஆராய்ச்சி மையம்
இராஜபாளையம் ராஜூஸ் கல்லூரி, இராஜபாளையம்
அலைபேசி எண்: 94434 24148, மின்னஞ்சல்: drvv1964@gmail.com

அத்தியாயம்-16

தியாகத்தின் அடையாளங்கள்: தமிழ்நாட்டின் சுதந்திரப் போராட்ட நினைவுச் சின்னங்கள்

டாக்டர் கே.அசோக்,
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை
மெட்ராஸ் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி) சென்னை - 600 059.
அலைபேசி எண்: 98404 94609, மின்னஞ்சல்: ashok@mcc.edu.in

&

டாக்டர் பி.சுமபாலா,
உதவிப் பேராசிரியர், வரலாற்று ஆய்வுத் துறை,
காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி, சென்னை - 600 002.

&

டாக்டர் எஸ். தீபிகா,
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை, சென்னை கிறிஸ்துவக் கல்லூரி (தன்னாட்சி)
சென்னை - 600 059.

அத்தியாயம்-17

இந்திய தேசியவாதமும் புதுச்சேரியின் விடுதலையும்

டாக்டர் எம்.பி.ராமானுஜம், Ph.D.,
உறுப்பினர், பாண்டிச்சேரி மாநில உயர்கல்வி மன்றம் (PONSCHE- RUSA) புதுச்சேரி அரசு, புதுச்சேரி - 605 008.
அலைபேசி எண்: 94420 67567, மின்னஞ்சல்: mpraman@gmail.com
257, மூன்றாவது பிரதான சாலை, மகாவீர் நகர், புதுச்சேரி - 605 008.

முன்னுரை

டாக்டர் பெர்னார்ட் டி சாமி

சுதந்திரப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு – ஒரு புதிய பார்வை

சுதந்திரப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்புகள் போதுமான அளவுக்கு ஆவணப்படுத்தப்படவில்லை என்னும் முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் கருத்து பலவிதங்களில் சரியானதாகும். தமிழ்நாட்டின் தீவிர பங்களிப்பு குறித்து எவ்விதமான புதிய தகவல்களும் இல்லாமலே, மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டு, வருகிறது. கட்டபொம்மன், மருது சகோதரர்கள், வ.உ.சிதம்பரம், வேலுநாச்சியார், மற்றும் பலர் ஆங்கிலேயர்களை எதிர்த்து துணிச்சலுடன் நேரடியாகப் போரிட்டனர். இந்த வரலாற்று நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டு, சொல்லப்பட்டு வருகின்றன.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்புகள் குறித்து பல்வேறு பார்வைகளிலான நிகழ்வுகள், செயல்முறைகள், செய்திகள் மற்றும் சொல்லாடல்கள் ஆகியவை போதுமானதாக இல்லை. ஆகவே இந்நூல், 1895இல் நிகழ்ந்த பிர்சா முண்டாவின் சந்தால் எழுச்சிக்கு முன்னதாகவே 1795இல் தமிழ்நாட்டின் கொல்லிமலையில் மலையாள பழங்குடியினர் ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடியது உள்ளிட்ட அதிகம் அறியப்படாத தமிழ்நாட்டு விடுதலைப் போராட்டப் பங்களிப்பின் மாறுபட்ட பார்வைகளை நினைவுகூர்கிறது. ஆங்கிலேயருக்கு எதிரான முதல் எழுச்சி, தமிழ்நாட்டின் மலைவாழ் மக்களிடமிருந்தே தொடங்கியிருக்கிறது. பல இடங்களில் விவசாயிகளின் எழுச்சிகள் நிகழ்ந்துள்ளன, தஞ்சை இவற்றின் மையமாகத் திகழ்ந்தது. தமிழ்நாட்டின் தலைவர்கள் தமிழ் இலக்கியங்களை எவ்வாறு சுதந்திரப் போராட்டத்திற்காக பயன்படுத்திக்கொண்டனர் என்பது, சுதந்திரப் போராட்டங்களில் ஆர்வமுள்ள எவருக்கும் ஓர் விடிவாக அமையும்.

ஆங்கிலேயர்களின் தொழிற் கொள்கை, பல்வேறு தொழில்கள், குறிப்பாக ஜவுளி ஆலைகள் உருவாகக் காரணமாக அமைந்தன. 1937இல் இந்தியாவில், 6,50,000 தொழிலாளர்களை உள்ளடக்கி நடைபெற்ற 179 வேலைநிறுத்தங்களில், 60,980 தொழிலாளர்கள் தொடர்புடைய 61 போராட்டங்கள் சென்னை மாகாணத்தில் நடைபெற்றன. சிங்காரவேலர் தலைமையில் தொழிற்சங்க இயக்கம் வலுவாக இருந்தது. வேலை நிறுத்தம், முழு அடைப்பு, துப்பாக்கிச்சூடு, தொழிற்சங்க இயக்கத்தை நசுக்குவது ஆகிய உத்திகளை ஆங்கிலேய அரசாங்கம் கையாண்டது. மார்க்சிய கொள்கைகள் பல்வேறு தலைமறைவு இயக்கத்திற்கு வித்திட்டாலும், ஆங்கிலேயரின் அடக்குமுறையை தாக்குப்பிடித்தன.

சென்னையில் செயல்பட்ட அன்னி பெசன்ட் அம்மையார் உள்ளிட்ட பல ஆங்கிலேயர் அல்லாத வெளிநாட்டவர் சுதந்திரப் போராட்டத்தை ஆதரித்தனர். அயர்லாந்தின் மார்கரெட் சகோதரிகள், பெண்களின் வாக்குரிமைக்காகப் போராடினார்கள்; மேலும், பெண்களின் வாக்குரிமைக்காக குரல் கொடுத்த டோரத்தி தினராஜதசா, 1921இல் வாக்களிக்கவும் செய்தார். இங்கிலாந்தில் பெண்களுக்கு 1928இல் வாக்குரிமை அளிக்கப்படுவதற்கு முன்பே இந்தியாவில் பெண்கள் வாக்களித்தனர். காந்தியின் ஐரோப்பிய/ஆங்கிலேய ஆதரவாளர்கள் காவல்துறை மற்றும் புலனாய்வு அமைப்புகளால் குறி வைக்கப்பட்டனர். டாக்டர் பேட்டன் வழக்கு இந்நூலில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

தமிழ் திரைப்படங்கள் மற்றும் ஊடகங்கள் பிரிட்டனிடமிருந்து விடுதலை பெறுவது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் முக்கியப் பங்காற்றின. தமிழ் திரைப்படங்கள் சென்னை மாகாணத்தின் மூளை முடுக்கெல்லாம் சென்று, வெள்ளித்திரையின் மூலம் மக்கள் பலரையும் சுதந்திரப் போராட்ட வேட்கை கொள்ள வைத்தது. சுதந்திரப் போராட்டப் பாடல்களை மக்களின் உதடுகள் தொடர்ந்து பாடியபடி இருந்ததால், எல்லா தரப்பு மக்களும் சுதந்திரப் போராட்டத்தின் அருமையை புரிந்து கொண்டனர். உலகின் 56 நாடுகளில் தொழிலாளர்களாக இருந்த இந்திய வம்சாவளியினர் பலருக்கும் அதிர்ச்சி, ஆச்சர்யம் அளிக்கும் வகையில் நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடினர். தென்னாப்பிரிக்காவில் மகாத்மா காந்தி துவங்கிய முதல் பத்திரிகையான '**இந்தியன் ஒபினியன்**', தமிழ் உள்ளிட்ட நான்கு மொழிகளில் அச்சிடப்பட்டது. காந்தியுடன் தில்லையாடி வள்ளியம்மை இணைந்து செயல்பட்டதும் அவரது பங்களிப்பும் நன்கறியப்பட்டது. சுபாஷ் சந்திர போஸின் இந்திய தேசிய ராணுவம், ஜான்சி ராணி படை என்னும் பெயரில் பெரும்பான்மை தமிழ்ப் பெண்களைக் கொண்ட ஓர் பெண்கள் பிரிவைக் கொண்டிருந்தது. கேப்டன் லட்சுமி சேகல் மற்றும் ஜானகி அதிநாகப்பன் (1925 – 2014) ஆகியோர் சுதந்திரப் போராட்டத்தில் முக்கியப் பங்காற்றினர்.

வெளிநாடுவாழ் தமிழர்கள் நடத்திய தமிழ் நாளிதழ்களும், தமிழ் பத்திரிகைகளும் எண்ணிலடங்காமல் இருந்தன. தாய்நாட்டிற்கு சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்பது, வெளிநாட்டில் அச்சான ஊடகங்களின் மையக் கருத்தாக இருந்தது. கல்கத்தா மற்றும் மும்பை மாகாணத்தில் ஆங்கிலேயர்கள் கல்வியை முன்னிறுத்திய நிலையில், சென்னை மாகாணத்தில் மக்கள் ஆங்கிலேயரிடமிருந்து கல்வியைக் கோரினர். கல்வி ஒரு சிலருக்கே சாத்தியமானாலும், அவர்கள் தெருக்களில் இறங்கி சுதந்திரத்திற்காகப் போராடினர். தமிழ்நாட்டில் உள்ள பல கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் புறக்கணிப்பு, ஆர்ப்பாட்டம், மற்றும் சுதேசி இயக்கங்களில் பங்கேற்றனர்.

சுதந்திரப் போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரின் பங்களிப்பும் பிராந்திய மற்றும் தேசிய அளவிலிருந்து உறுதியானது. தமிழ்நாடும் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. பிரிட்டனின் பிடியிலிருந்து இந்தியாவை விடுவிப்பதற்கான கிறிஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர்களின் பங்களிப்பு கணிசமானதாக இருந்தது.

பாண்டிச்சேரி ஃபிரெஞ்சு ஆட்சியின்கீழ் இருந்தாலும், ஆங்கிலேயே ஆட்சி, மக்கள் மற்றும் இயக்கங்களை ஒடுக்கியபோது அவர்களுக்கு அடைக்கலம் அளித்தது. பாண்டிச்சேரி எப்படி ஓர் அரசியல் புகலிடமாக உருவானது என்பதை இந்நூலில் காணலாம்.

சுருக்கமாகச் சொன்னால், சுதந்திரப் போராட்டத்தில் தமிழர்களின் பங்களிப்பை இதுவரை பரவலாக அறியப்படாத பல்வேறு திசைகளில்அவற்றின் கருப்பொருளில் இந்நூல் பதிவு செய்கிறது.

டாக்டர் பெர்னார்ட் டி சாமி
ஆலோசனைக்குழுத் தலைவர்,
இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு தமிழ் நாடு அளித்த பங்களிப்புத் திட்டம்,
முன்னாள் தலைவர், வரலாற்றுத் துறை, லயோலா கல்லூரி (தன்னாட்சி) சென்னை – 600 034.
மூத்த புத்தாய்வாளர், சமூக அறிவியல் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (LISSTAR)
லயோலா கல்லூரி (தன்னாட்சி) சென்னை – 600 034.


செய்தி மக்கள் தொடர்புத் துறை
விடுதலைப் போரில் தமிழகம்
புகைப்படக் கண்காட்சி


வ.உ.சிதம்பரனாரின்





ஆங்கிலேயர்களின் அடக்குமுறைக்கு எதிராக தமிழகத்தில் நடைபெற்ற போற்றத்தக்க போராட்டங்கள்





(1710 – 1759 : தூத்துக்குடி)

வீரன் அழகுமுத்துக்கோன், ஆங்கிலேயர்களுக்குக் கப்பம் கட்டுவதைத் தடுத்தார். அவருடைய படையினர் சங்கிலியால் பிணைக்கப்பட்டு நடுக்காட்டூர் என்னும் இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர். மன்னிப்புக் கேட்டால் உயிர் மிஞ்சும் என்று கேட்டும் மன்னிப்புக் கேட்க மறுத்துவிட்டனர். பீரங்கி முன் அவரும், ஆறு தளபதிகளும் மார்பில் சுடப்பட்டு வீர மரணம் அடைந்தனர்.



(1715 – 1767 : திருநெல்வேலி)

நெல்லையின் நெற்கட்டும்செவல் கோட்டையை முற்றுகையிட்டு வரிவசூல் செய்த கர்னல் ஹெரோனையும், அவனது படைகளையும் விரட்டியடித்து விடுதலைக்கு வித்திட்ட முதல் மாவீரன் பூலித்தேவன். 1750 முதல் 1767 வரை ஏறத்தாழ 17 முறை வெள்ளையர்களுக்கு எதிராகச் சண்டையிட்ட மாவீரன் பூலித்தேவன்.

(1725 – 1764 : இராமநாதபுரம்)



மருதநாயகம் என்றழைக்கப்பட்ட முகமது யூசுப்கானை ஆங்கிலேயரும் ஆற்காட்டு நவாபுகளும் தமது எதிரியான தமிழ் நாட்டைச் சேர்ந்த பாளையக்காரர்களுக்கு எதிராகப் போரில் ஈடுபடச் செய்தனர். பிற்காலத்தில் மதுரையை ஆளும் அதிகாரத்தினை இவருக்கு அளித்தபோதும் தம் வாழ்நாளின் இறுதியில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியாளருக்கு எதிராகச் செயல்பட்டார். அக்டோபர் 15, 1764ஆம் ஆண்டில் மதுரை சம்மட்டிபுரம் பகுதியில் ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டார்.


உடன்படிக்கை ஒன்றின் மூலம் ஆற்காட்டு நவாப்பிடமிருந்த ஆட்சிப் பொறுப்பை கிழக்கிந்தியக் கம்பெனி கைப்பற்றியது.



(1725 – 1774 : இங்கிலாந்து)

செப்டம்பர் 23 முதல் 1751 நவம்பர் 14 வரை ஆற்காடு கோட்டை, கிழக்கிந்தியக் கம்பெனியின் ராபர்ட் கிளைவ் என்பவரின் தலைமையில் முற்றுகை இடப்பட்ட நேரத்தில், சாந்தா சாஹேப் பிரெஞ்சுப் படையுடன் திருச்சியில் முற்றுகையில் ஈடுபட்டிருந்தார். ஆற்காட்டு நவாப் ஊரில் இல்லாத சமயத்தில், கோட்டையை நவாப்பின் சிறிய படையும், பிரான்ஸ் நாட்டின் கிழக்கிந்தியக் கம்பெனி படை வீரர்கள் சிலரும், சாந்தா சாஹேபின் சார்பில் கோட்டையைப் பாதுகாப்பதற்காக ஆற்காட்டில் தங்கி இருந்தனர். அப்போது நடந்த இரண்டாம் கருநாடக யுத்தத்தின் மூலம் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் காலூன்றியது.

(1748 – 1801 : சிவகங்கை)



தென்னிந்திய விடுதலைப் போராளிகளில், ஆங்கிலேயரை எதிர்த்துப் போராட, முதன்முதலாக மக்களைத் திரட்டியவர்கள் சிவகங்கை சீமையின் மன்னர்களான மருது பாண்டியர்கள். 1801ஆம் ஆண்டு மருது சகோதரர்களின் புகழ்பெற்ற ஜம்புத்தீவு பிரகடனம் திருச்சி கோட்டையில் பிரகடனப்படுத்தப்பட்டது. இராமநாதபுரத்தின் அருகே அமைந்த திருப்பத்தூர் கோட்டையில் 1801 அக்டோபர் 24 அன்று மருதுபாண்டியர்கள் ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்டனர். இதே ஆண்டு கட்டபொம்மனின் தம்பிகளான ஊமைத்துரையும், செவத்தையாவும் பிடிக்கப்பட்டு 1801 நவம்பர் 16இல் பாஞ்சாலங்குறிச்சியில் வெள்ளையர்களால் தலை துண்டிக்கப்பட்டு வீரமரணம் அடைந்தனர்.

(1756 – 1805 : காங்கேயம்)



கோவைப் புரட்சியை நடத்திய தீரன் சின்னமலை வெள்ளையர்களால் 1805ஆம் ஆண்டு ஜூலை 31 அன்று சங்ககிரிக் கோட்டையின் உச்சியில் தூக்கிலிடப்பட்டார்.

(1760 – 1809 : இராமநாதபுரம்)



வெள்ளையர்களுக்கு அடங்க மறுத்த இராமநாதபுரம் மன்னர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி 1795ஆம் ஆண்டு பிப்ரவரி 8 அன்று ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டார். தொடர்ந்து 14 ஆண்டுகள் சிறைவைக்கப்பட்ட ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி மன்னர் சென்னை கோட்டையிலுள்ள சிறையில் 23.01.1809 அன்று இயற்கை எய்தினார்.

(1760 – 1799 : பாஞ்சாலங்குறிச்சி)



வெள்ளை அரசுக்கு வரி தர மறுத்து, 1792 முதல் 1798 வரை வெள்ளையருடன் போராடிய பாஞ்சாலங்குறிச்சி மன்னன் வீரபாண்டிய கட்டபொம்மன் வெள்ளையர்களால் கைது செய்யப்பட்டு, கயத்தாறில் தூக்கிலிடப்பட்டார். 1974ஆம் ஆண்டு கட்டபொம்மனின் தியாகத்தைப் போற்றி, அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி அவர்கள் பாஞ்சாலங்குறிச்சியில் மாதிரி கோட்டையைக் கட்டினார்.

(1806 – 1857 : காங்கேயம்)



வேலூர் கலகம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து முதன் முதலில் இராணுவப் புரட்சி செய்தவர்கள் தமிழ்நாட்டுப் படைவீரர்களே; 1806, ஜூலை 10ஆம் தேதி வேலூர் கோட்டையில் வைக்கப்பட்டிருந்த இந்தியப் படைவீரர்கள், புரட்சி செய்து ஆங்கில அதிகாரிகளையும் வீரர்களையும் கொன்றனர். இந்தப் புரட்சி 1857இல் நடந்த சிப்பாய் கலகத்திற்கான ஒத்திகை ஆகும்.

1852 - சென்னைவாசிகள் சங்கம் தென்னிந்தியாவில், தொடங்கப்பெற்ற காலத்தால் முற்பட்ட இவ்வமைப்பு, தனிப்பட்ட குழுக்களின் விருப்பங்களைக் காட்டிலும் பொதுமக்களின் தேவைகளை அனைவருக்கும் தெரிவிப்பதை நோக்கமாகக் கொண்டு உருவானது. இவ்வமைப்பு 1852இல் காஜூலு லட்சுமிநரசு, சீனிவாசனார் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களால் நிறுவப்பெற்றது.

(1810 – 1857 : இங்கிலாந்து)



நீல் சிலை அகற்றும் போராட்டம் ஜேம்ஸ் நீல், துப்பாக்கி ஏந்திய காலாட்படை, மதராஸ் பிரிவைச் சேர்ந்தவர். 1857 பேரெழுச்சியின்போது நடைபெற்ற கான்பூர் படுகொலை என்றழைக்கப்படும் சம்பவத்தில் பல ஆங்கிலப் பெண்களும் குழந்தைகளும் கொல்லப்பட்டனர். இதற்கு வஞ்சம் தீர்க்கும் வகையில் நீல் கொடூரமாக நடந்துகொண்டார், பின்னர், நீல் இந்திய வீரர் ஒருவரால் கொல்லப்பட்டார். சென்னை மௌண்ட்ரோட்டில் ஆங்கிலேயர் அவருக்கு ஒரு சிலை வைத்தனர். இதை, இந்தியர்களின் உணர்வுகளுக்கு இழைக்கப்படும் அவமரியாதை எனக் கருதிய தேசியவாதிகள் சென்னையில் தொடர் போராட்டங்களை மேற்கொண்டனர். சென்னை மாகாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த போராட்டக்காரர்களுக்குத் திருநெல்வேலியைச் சேர்ந்த எஸ்.என்.சோமையாஜூலு தலைமையேற்றார். பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அச்சமயம் சென்னைக்கு வந்த காந்தியடிகள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தார்.

(1828 – 1902 : எழும்பூர்)



சென்னை மகாஜன சபை தென்னிந்தியாவில், தெளிவான தேசிய நோக்கங்களுடன் துவங்கப்பெற்ற தொடக்கக் கால அமைப்பு சென்னை மகாஜன சபையாகும். 1884 மே 16இல் மு.வீரராகவாச்சாரியார், பி.அனந்தாச்சார்லு, பி.ரங்கையா மற்றும் சிலரால் நிறுவப்பட்ட இவ்வமைப்பின் முதல் தலைவராக பி.ரங்கையா பொறுப்பேற்றார்.

(1839 – 1895 : திருநெல்வேலி)



ஆங்கிலேயர்களை எதிர்த்து, மன்னர்களும் மக்களும் மட்டுமல்ல; தமிழ் இலக்கியங்களும் முழங்கின. ஆங்கிலேயர்களை எதிர்த்து "ஆங்கிலேய அந்தாதி" எழுதிய வண்ணச்சரபம் தண்டபாணிசாமிகள் மறைந்தார்.

(1847 – 1933 : லண்டன்)



ஹோம்ரூல் லீக் 1916ஆம் ஆண்டு இந்திய அரசியலில் ஒரு புதிய அமைப்பு உதயமானது. ஹோம்ரூல் லீக் எனப்படும் தன்னாட்சி இயக்கம் தொடங்கப்பட்டது. இந்த இயக்கத்தைத் தொடங்கியவர் அன்னிபெசன்ட் அம்மையார், தொடங்கப்பட்ட இடம் தமிழ்நாடு. சென்னையில்தான் ஹோம்ரூல் இயக்கம் தொடங்கப்பட்டது.

(1855 – 1916 : தஞ்சாவூர்)




தமிழில் வெளிவந்த முதல் அரசியல் இதழான சுதேசமித்திரன் ஜி.சுப்பிரமணிய ஐயரால் தொடங்கப்பட்டது.

(1855 – 1916 : தஞ்சாவூர்)



இந்திய தேசிய காங்கிரசின் முதல் கூட்டம் 1885 டிசம்பர் 26 அன்று பம்பாயில் கூடியது. சென்னை மாநிலத்தின் பிரதிநிதியாக ஜி.சுப்பிரமணிய ஐயர் கலந்துகொண்டார்.

1887 - இராவ்சாகிப் தஞ்சை மூக்கன் ஆசாரி மூன்றாம் காங்கிரஸ் மாநாட்டில் தமிழில் உரையாற்றியவர்.



(1869 – 1948 : போர்பந்தர்)

அக்டோபர் 14 அன்று காந்தியடிகள் முதன்முறையாகத் தமிழகம் வந்தார்.

(1869 – 1948 : போர்பந்தர்)

1919 - மார்ச் 18இல் மெரினா கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் காந்தியடிகள் உரையாற்றினார். 1919 ஏப்ரல் 6இல் 'ரௌலட் சட்டத்தை' எதிர்க்கும் நோக்கில் கடையடைப்பும் வேலை நிறுத்தங்களும் நடத்தப்பட்டன. தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.



(1872 – 1936 : திருநெல்வேலி)

வ.உ.சி.யும், மகாகவி பாரதியும் இணைந்து சென்னையில் சென்னை ஜனசங்கத்தைத் தோற்றுவித்தனர். 1906 அக்டோபர் 16ஆம் நாள் வ.உ.சியின் சுதேசிக் கப்பல் நிறுவனம் முறைப்படி பதிவு செய்யப்பட்டது. மண்டையக் குடும்பத்தினரால் 1906ஆம் ஆண்டு இந்தியா பத்திரிகை தொடங்கப்பட்டது. இந்தியா பத்திரிகையின் ஆசிரியர் மகாகவி பாரதியார் ஆவார்.



(1873 – 1938 : பாட்னா)

1920 - தமிழ்நாட்டில் 1920 ஏப்ரல் 17இல் மௌலானா சௌகத் அலி தலைமையேற்ற ஒரு பொதுக்கூட்டத்துடன் கிளாபத் நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

தாஷ்கண்டில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி எம்.என்.ராய் தலைமையில் தொடங்கப்பட்டது. தமிழகத்தைச் சேர்ந்த எம்.பி.டி. ஆச்சார்யா அதன் தோற்றுநர்களில் ஒருவர்.

நாகபுரியில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் கூட்டத்தைத் தலைமையேற்று நடத்திய தமிழர் சி.விஜயராகவாச்சாரியார்.



(1878 – 1898)

இந்திய தேசிய நாளிதழ் 'தி இந்து' தோற்றம். ஜி. சுப்பிரமணிய ஐயர், முடும்பை வீரராகவாச்சாரியார் உள்ளிட்ட ஆறு இளைஞர்கள் இதனைத் தொடங்கினர். தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரம் வேதநாயகம் பிள்ளையால் எழுதப்பெற்றது. இந்நாவலில் ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை எதிர்க்கும் உரையாடல்கள் இடம்பெற்றன.



(1878 – 1972 : ஓசூர், கிருஷ்ணகிரி)

வரலாற்றுப் புகழ்பெற்ற வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரக நடைப்பயணத்தை இராஜாஜி மேற்கொண்டார். 1930 ஏப்ரல் 13இல் திருச்சிராப்பள்ளியிலிருந்து தொடங்கி, ஏப்ரல் 28இல் தஞ்சாவூர் மாவட்டத்தின் வேதாரண்யத்தைச் சென்றடைந்தது. இவ்வணிவகுப்புக்கென்றே "கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது, சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்" எனும் சிறப்புப் பாடல் நாமக்கல் கவிஞர் இராமலிங்கனாரால் புனையப்பட்டது.



(1879 – 1973 : ஈரோடு)

1924 – 1925 வைக்கம் சத்தியாகிரகத்தை தந்தை பெரியார் ஈ.வெ.ரா. வெற்றிகரமாகத் தலைமை தாங்கி நடத்தினார். அகிம்சை எனும் அறவழியில் போராடி வெற்றிகண்ட போராட்டம் இதுதான்.



(1884 – 1925 : சென்னை மாகாணம்)

தூத்துக்குடி சதி வழக்கு 1908 மார்ச் 13இல் வ.உ.சியும், சிவாவும் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து நெல்லையில் கலகம் வெடித்தது. இதன் காரணமாக, 07.07.1908 அன்று வ.உ.சிக்கு இரட்டை ஆயுள் தண்டனையும், சிவாவுக்குப் பத்தாண்டு கடுங்காவல் தண்டனையும் ஆங்கிலேயர்களால் வழங்கப்பட்டது.



(1886 – 1911 : செங்கோட்டை)

ஆஷ் கொலை - (திருநெல்வேலி சதி வழக்கு) 1904இல் நீலகண்ட பிரம்மச்சாரியும் வேறு சிலரும் பாரத மாதா சங்கம் எனும் இரகசிய அமைப்பை உருவாக்கினர். ஆங்கில அதிகாரிகளைக் கொல்வதன் மூலம் மக்களிடையே நாட்டுப்பற்று உணர்வைத் தூண்டுவதே இவ்வமைப்பின் நோக்கமாகும். செங்கோட்டையைச் சேர்ந்த வாஞ்சிநாதனின் உள்ளுணர்வு இவ்வமைப்பினால் தூண்டப்பட்டது. 1911 ஜூன் 17இல் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரான ராபர்ட் ஆஷ் என்பவரை மணியாச்சி இரயில் சந்திப்பில் வாஞ்சிநாதன் சுட்டுக் கொன்றார்.



(1891 – 1934 : திருவனந்தபுரம்)

1915ஆம் ஆண்டு டிசம்பர் முதல் நாள் இந்தியாவிற்கு வெளியே "நாடு கடந்த இந்திய சுதந்திர அரசு" ஆப்கான் தலைநகர் காபூலில் அமைக்கப்பட்டது. இதன் மூளையாகச் செயல்பட்டவர் நாடு கடந்த இந்திய அரசின் வெளியுறவு அமைச்சரும், நாஞ்சில் தமிழருமான வீரன் செண்பகராமன்.



(1904 – 1932 : ஈரோடு)

1932 - ஜனவரி 11இல் திருப்பூரில், திருப்பூர் குமரன் என்றழைக்கப்பட்ட குமாரசாமி தேசியக் கொடியை உயர்த்திப் பிடித்தவாறே விழுந்து இறந்தார்.

ஜனவரி 25 அன்று நள்ளிரவு பாஷ்யம் என்று அழைக்கப்பட்ட ஆரியா சென்னை கோட்டையில் இரகசியமாக நுழைந்து தேசியக் கொடியை ஏற்றினார்.

1922 - வேல்ஸ் இளவரசர் வருகையை எதிர்த்து ஈரோட்டில் பெரியார் கடையடைப்புப் போராட்டம் நடத்துதல். இளவரசரின் வருகையைப் புறக்கணித்து பொது வேலை நிறுத்தத்தை நடத்துமாறு காந்தி தனது ஆதரவாளர்களுக்கு அழைப்பு விடுத்தார்.



1928 - சைமன் கமிசன் எதிர்ப்பு இயக்கம்

பாரதி பாடல்கள் பறிமுதல். இதற்கு எதிராக சென்னை சட்டமன்றத்தில் ஒத்திவைப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தியர்களின் அரசியல் எதிர்காலத்தை முடிவு செய்ய நியமிக்கப்பட்ட குழுவில் இந்தியர் ஒருவர் கூட இடம் பெறாததால் பெரும்பாலான இந்தியர்கள் அதிருப்தி கொண்டனர். இந்திய தேசிய காங்கிரசு, சுயாட்சி கட்சி புறக்கணிக்க முடிவு செய்தனர்.



1931 - சட்டமறுப்பு இயக்கம் இராஜாஜி தலைமையில் நடைபெற்றது. ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள், மறியல்கள் நடைபெற்றன. உச்சகட்டப் போராட்டமாக உப்பு சத்தியாகிரகம் நடைபெற்றது. 1930, ஏப்ரல் 30 அன்று வேதாரண்யத்தில் உப்பு காய்ச்சுவதற்காக இராஜாஜி தலைமையில் 100 தொண்டர்கள் திருச்சியிலிருந்து புறப்பட்டனர்.


MADRAS : TUESDAY, AUGUST 8, 1942.

A GANDHI

QUIT INDIA MOVEMENT

8th August

Mantra DO OR DIE

Karo Ya Maro

1937 - தமிழகத்தில் இராஜாஜி தலைமையில் காங்கிரஸ் அமைச்சரவை பதவியேற்பு.

1939 - இந்தியா முழுவதும் காங்கிரஸ் அமைச்சரவைகள் (சென்னையில் இராஜாஜி உட்பட) பதவி விலகின.

1940 - தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக காமராஜர் தேர்வு.

1942 - வெள்ளையனே வெளியேறு இயக்கம், சீர்காழி சதி வழக்கு, குலசேகரப்பட்டினம் சதி வழக்கு, குரும்பூர் மெய்ஞ்ஞானபுரம் சதி வழக்கு.

1947 - வெள்ளையர் ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுதலை பெற்றது.



Help the Refugees
AHUJA SWADESHI STORES
Chandni Chowk, Delhi.

DELHI EDITION
The Hindustan Times
LARGEST CIRCULATION IN NORTHERN, NORTH-WESTERN AND CENTRAL INDIA
NEW DELHI: FRIDAY, AUGUST 15, 1947

QUALITY PUBLICITY SERVICE
DESIGNERS & PRINTERS

INDIA INDEPENDENT : BRITISH RULE ENDS

CONSTITUENT ASSEMBLY TAKES OVER

MOUNTBATTEN'S APPOINTMENT AS GOVERNOR-GEN

COLOURFUL CE
BIRTH O

(By Our Spec

NEW DELHI, Thursday.—At

sembly, consisting of the chosen re
assumed sovereign power and the
serve India and her people. "We
India discovers herself again," said
bers to take the new pledge.

NEW STAR RISES IN THE EAST

LEADERS TELL NATION OF TASKS AHEAD

The appointed day has come—the day appointed by destiny—and India stands forth again after long slumber, and struggle, awake, vital, free and independent, says Pandit Jawaharlal Nehru in a message to the nation on Freedom Day.

"The past clings on to us still in some measure and we have to do much before we redeem the pledges we have so often taken. The turning point is past, history begins anew for us, the history which we shall live and act and others will

Attlee's Greetings To Nehru





Kooltex

Indian Express

DNA

INDIA CELEBRATES FREEDOM

Consambly Takes Over Governance

HISTORIC MIDNIGHT SESSION

Memorable Scenes In Madras

National Flag Over Fort: Mammoth Meeting In Beach

MOUNTBATTEN ASKS TO BE RELIEVED IN APRIL



The Statesman

PUBLISHED SIMULTANEOUSLY FROM CALCUTTA AND DELHI.

RELATIONS WITH COMMONWEALTH

Churchill Recalls Cripps Mission

INDIAN UNITY THROUGH PARTITION

VICEROY REGRETS THAT INDIA CANNOT BE PA

Lord Mountbatten's Personal Me

APPEAL TO COUNTRY TO CA IN SPIRIT OF GANDH



REGD. No. B111

LARGEST NET SALES of any Daily Newspaper Printed in Northern, Southern, Central or Western India.

The Times of India

ESTABLISHED 1838

PRICE TWO ANNAS

NO. 195. VOL. CIX. BOMBAY: FRIDAY, AUGUST 15, 1947

OPTICIANS

RALIWALLA & HOMJI Ltd.

166 HORNBY RD. ETC. BOMBAY

For CARPETS and FURS visit

BIRTH OF INDIA'S FREEDOM

NATION WAKES TO NEW LIFE

Mr. Nehru Calls For Big Effort From People

STATE VISIT TO KARACHI

FRENZIED ENTHUSIASM IN BOMBAY

Crowds In Festive Mood

"MAY BOMBAY PROSPER"

Governor's Message

விடுதலைப் போரில் பெண்கள்





வேலு நாச்சியார் (1730 – 1796 : இராமநாதபுரம்)

கணவர் முத்துவடுகநாதனையும், சிவகங்கையையும் ஆங்கிலேயரிடம் 1772இல் பறிகொடுத்து, 8 ஆண்டுகள் கழித்து 1780இல் போரிட்டு மீண்டும் சிவகங்கையை மீட்டார். சுதந்திரப் போராட்ட வரலாற்றில் இழந்த நாட்டை மீட்ட ஒரே ராணி.



குயிலி (1780 : சிவகங்கை)

1780ஆம் ஆண்டு விஜயதசமி அன்று, வேலுநாச்சியாருடன் சிவகங்கை அரண்மனையிலுள்ள கோயிலுக்குச் செல்வது போல் சென்று, தன் சேலையில் தீயைப் பற்ற வைத்துக்கொண்டு ஆங்கிலேயரின் ஆயுதக் கிடங்குக்குள் விழுந்து உயிர் நீத்தாள் இந்தத் தியாக மங்கை.



நாகம்மையார் ஈ.வெ.ரா. (1885 – 1933 : சேலம்)

தந்தை பெரியாரின் மனைவி. காந்தியடிகள் ஈரோட்டில் பெரியார் இல்லத்தில் தங்கியிருந்தபோதுதான் கள்ளுக்கடை முன்பு மறியல் போராட்டம் நடத்த முடிவெடுக்கப்பட்டது. பெரியார் மறியலில் இறங்கி கைதானார். அடுத்த நாள் நாகம்மையார், பெரியாரின் தங்கை எஸ்.ஆர். கண்ணம்மாள் ஆகிய இருவரும் களமிறங்கினர். 1924இல் கேரள மாநிலம், வைக்கத்தில் நடைபெற்ற கோயில் தெரு நுழைவு போராட்டத்தில் கலந்துகொண்டார்.



அஞ்சலை அம்மாள் (1890 – 1961 : கடலூர்)

கடலூரில் பிறந்து இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தன் கணவர் முருகப்பன், 10 வயது மகள் லீலாவதி ஆகியோருடன் கைது செய்யப்பட்டு, குடும்பத்துடன் சிறை சென்றார். கர்ப்பிணியாக இருந்தும், அஞ்சலையம்மாள் தொடர்ந்து போராடி, சிறையிலிருந்து பரோலில் வந்து குழந்தைப் பெற்றார். 1961ஆம் ஆண்டு பிப்ரவரி 20இல் மறைந்தார்.



எஸ்.ஆர்.கண்ணம்மாள் (1891 – 1971 : ஈரோடு)

பெரியாரின் இளைய சகோதரி. 1930களில் குடியரசு இதழின் வெளியீட்டாளராக விளங்கினார். இவ்விதழில் “இன்றைய ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்” என்ற தலைப்பிலான பெரியார் எழுதிய தலையங்கத்திற்காக ஆசிரியர் பெரியாரும் வெளியீட்டாளர் கண்ணம்மாளும் கைது செய்யப்பட்டனர். பெரியாருக்கு 6 மாதங்களும், கண்ணம்மாளுக்கு 3 மாதங்களும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. கண்ணம்மாள் 1925க்குப் பிறகு பெரியாரின் வழியைப் பின்பற்றிச் சென்றவர். கண்ணம்மாள் 1932இல் ஈரோடு நகர மன்ற உறுப்பினராக இருந்தார்.



ருக்மணி லட்சுமிபதி (1892 – 1951 : மெட்ராஸ்)

1930இல் வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகத்தில் பங்கேற்றுக் காவல்துறையால் தாக்கப்பட்டவர். சிறைத் தண்டனை பெற்றார். அந்நியத்துணி மறியல் போராட்டத்திலும் சிறை சென்றார். தன் நகைகள் அனைத்தையும் 1933இல் காந்தியடிகளிடம் அரிஜன நிதிக்காக அளித்தார். 1937இல் சென்னை மாகாண சட்ட மேலவைத் துணை சபாநாயகராக விளங்கினார். 1940இல் தனி நபர் சத்தியாகிரகத்திலும் சிறை சென்றார். 1946இல் சட்டமன்றப் பேரவை உறுப்பினராக ஆனார். அமைச்சராகவும் திகழ்ந்தார்.



அம்மு சுவாமிநாதன் (1894 – 1978 : பாலக்காடு, கேரளா)

பாலைவனமான கிராமங்கள் மற்றும் கிராமப்புற மக்கள்தொகை இல்லாத தமிழ்நாட்டில் முந்தைய காலங்களுடன் ஒப்பிடுகையில், பெரிய அளவில் ஐரோப்பிய விரிவாக்க யுகத்தில் தோன்றியது. 1740களிலிருந்து ஆங்கிலேய நிறுவனத்தால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலுக்கு எதிர்வினையாக மட்டுமே தமிழ் நாட்டில் பூர்வீக ஆட்சியாளர்களிடையே கையால் பிடிக்கப்பட்ட துப்பாக்கிகள் மற்றும் பீரங்கிகளின் பயன்பாடு ஏற்பட்டது. இது ஒரு வகையில் தீயை மையப்படுத்திய போர் என வகைப்படுத்தலாம், இது தீயைப் பயன்படுத்துவதால் ஆதிக்கம் செலுத்தும் போர்கள் மற்றும் முற்றுகைகளால் வகைப்படுத்தப்படுகிறது.

இந்தப் புதிய போர்முறையின் எழுச்சியானது துப்பாக்கித்தூள் தொழில்நுட்பங்களின் பரவலுக்கும், மாற்றத்திற்கும் வழிவகுத்தது. ஆங்கிலக் கம்பெனியின் உயர்ந்த நிதி முறையானது விலையுயர்ந்த மூலதன தீவிரப் படைகளைப் பராமரிக்க உதவியது தமிழ் பிராந்தியத்தின் பூர்வீக ஆட்சியாளர்கள் தங்கள் காரணத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு தொழில்முறை அதிகாரி படையை உருவாக்கத் தவறிவிட்டனர். தொழில்நுட்பத்தில் பின்தங்கிய எந்தவொரு சமூகமும் தொழில்நுட்ப பின்னடைவைக் கடக்க முடியாவிட்டால் அது வீழ்ச்சியடைகிறது என்பது வரலாறு கூறும் பாடம்.





இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தமிழ் நாட்டின் பங்களிப்பு





1

தமிழ் நாட்டில் சுதந்திரப் போராட்டத்தின் சுருக்கமான வரலாறு

டாக்டர் சி.நடராஜன்,
பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு தனித்தன்மையானது. இந்த மகத்தான நிகழ்வில், வீரபாண்டிய கட்டபொம்மன், பூலித்தேவர், மருது சகோதரரகள் மற்றும் இதர தேச பக்தர்களை அடியொற்றி பாளையக்காரர்கள் தங்கள் பகுதிகளில் மகத்தான தியாகங்களை செய்தனர். வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய பாரதியார், வாஞ்சி ஐயர், சுப்பிரமணிய சிவா, வரதராஜுலு நாயுடு, ஈ.வே.ரா.பெரியார், சத்தியமூர்த்தி, கேப்டன் லட்சுமி, அம்புஜம்மாள், ராஜாஜி, கமாராஜர் உள்ளிட்ட தலைவர்கள் மக்களிடையே நாட்டுப்பற்றை தூண்டியதோடு, தமிழ்நாட்டிற்காக மட்டுமல்லாமல் நாட்டுக்காக தங்களது வாழ்க்கையை தியாகம் செய்தனர். 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிராந்திய அளவில் இருந்த நாட்டுப்பற்று, பின்னர் பரவலான அளவில் வலுவான தேசிய உணர்வாக வளர்ந்து மற்ற பகுதிகளுக்கும் பரவியது. அதன் பின்னர் தோன்றிய தலைவர்களுக்கும், மக்களுக்கும் பிராந்தியத்துக்கான விடுதலை அவர்களின் இலக்காக இருக்கவில்லை, தேச விடுதலையே அவர்களது உயர் நோக்கமாக இருந்தது. இதற்கான விதையை தமிழ்நாட்டின் தேச பக்தர்கள் ஏற்கனவே விதைத்திருந்தனர்.

பாளையக்காரர்கள் புரட்சி (1799)

தமிழ்நாடு, நீதி, உரிமைகள், மற்றும் விடுதலைக்காகப் போராடும் தீரமிகு பாரம்பரியம் கொண்டது. தாங்கள் மிகவும் போற்றிய உரிமைகளுக்கு அச்சுறுத்தலாக கிழக்கிந்திய கம்பெனி, அமைந்தபோது தங்கள் பாரம்பரியத்திற்கு ஏற்ற வகையில் தமிழ் மக்கள் வீறுகொண்டு எழுந்தனர். பாளையங்கள்மீது கம்பெனி அளவுக்கதிகமான ஆதிக்கம் செலுத்தியதே, பாளையக்காரர்களின் புரட்சிக்கு வித்திட்டது. பாண்டிய அரசின் தென்பகுதியாக அமைந்திருந்த திருநெல்வேலியில் பிறந்த புரட்சிகரமான தலைவராக பூலித்தேவர் விளங்கினார்.



நிகரில்லாத போர்வீரரான அவர், நெற்கட்டான் செவல் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த நாயக்கர் மன்னர்களில் ஒருவர். நம்முடைய மண்ணிலிருந்து அந்நியர்களை வெளியேற்றுவோம் என்பதற்கான விதையை முதலில் விதைத்த ஆட்சியாளராக இவர் கருதப்படுகிறார். பாளையக்காரர்கள் கிளர்ச்சி பாஞ்சாலக்குறிச்சியின் பாளையக்காரர் ஜகவீர பாண்டிய கட்டபொம்மனால் வழிநடத்தப்பட்டது. கட்டபொம்மன், நேர்மையான, கடவுள் பக்தி கொண்ட, சட்டத்தை மதிக்கும், கடமை, கண்ணியம், ஒழுக்கம் மிக்கவர் ஆவார். ஆட்சியர் ஜாக்சனின் மோசமான மற்றும் கடுமையான அணுகுமுறையால் கொதித்துப்போன கட்டபொம்மன், 19 செப்டம்பர் 1798 அன்று இராமநாதபுரத்தில் ஆட்சியருடன் ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போது, தனது சகோதரர் ஊமைத்துரை மற்றும் அமைச்சர் சிவசுப்பிரமணிய பிள்ளையுடன் தப்பிச்சென்றார். சிவகங்கையின் மருது பாண்டிய சகோதரர்கள் ஆதரவால் ஊக்கம் பெற்ற கட்டபொம்மன், சகோதரர்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராட உதவினார். இதை சென்னை மன்றம், ஆட்சி அதிகாரத்திற்கு எதிரான செயலாகப் பார்த்தது. தலைமை ஆளுநர் வெலஸ்லி பிரபுவிடமிருந்து உத்தரவு வந்தவுடன், மேஜர் பான்மர்மன், செப்டம்பர் 5ஆம் தேதி பாஞ்சாலங்குறிச்சி கோட்டைமீது தாக்குதல் நடத்தினார். புதுக்கோட்டை பாளையக்காரரால் காட்டிக்கொடுக்கப்பட்ட கட்டபொம்மன், பிடிபட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, 17 அக்டோபர் 1799 அன்று கயத்தாரில் தூக்கிலிடப்பட்டார். இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முதல் உயிர்த் தியாகம் அவருடையதே ஆகும்.

தென்னிந்திய கிளர்ச்சி, (1800-1801)

தென்னிந்திய கிளர்ச்சி (1800–1801), ஆங்கிலேயர்களிடம் மன்னர்கள் அடிபணிந்தது மற்றும் சுதந்திரம் இழந்த நிலைக்கு எதிராக வெடித்த கிளர்ச்சியாகும். ராஜதந்திரம், அச்சுறுத்தல் மற்றும் போர் வாயிலாக அந்நியர்கள் இந்த மண்ணின்மீது தங்கள் ஆதிக்கத்தை நிறுவினர். ஏகாதிபத்தியம் உண்டாக்கிய திகில் காரணமாக எதிர்ப்பு அலை பரவி, மக்களை ஒன்றுபட்டு போராட வைத்தது. சாமானிய தென்னிந்திய மக்கள் தங்களை ஆங்கிலேயர்களின் நுகத்தடியிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கும், எஞ்சிய இந்தியப் பகுதிகள் ஐரோப்பிய ஆதிக்கத்தின்கீழ் வருவதை முன்கூட்டியே தடுத்து நிறுத்துவதற்கும் மேற்கொண்ட உறுதிமிக்க முயற்சிகளின் உச்சமாக கிளர்ச்சி வெடித்தது.இதன்மூலம் இம்மண்ணின் குடிகள் அனைவரும் கண்ணீரின்றி நிலையான மகிழ்ச்சியுடன் வாழலாம் என புரட்சியாளர்கள் அறி வித்தனர். சிவகங்கையின் மருது பாண்டியர்கள், திண்டுக்கல் கோபால நாயக்கர், கோவையின் கான் இ ஜா கான், மலபாரின் கேரளா வர்மா, மைசூரின் கிருஷ்ணப்பா நாயக்கர், மகாரஷ்டிராவின் தொண்டாஜி வாக், போன்ற ஆங்கிலேய ஆட்சியை தூக்கியெறிய கூட்டமைப்பை உண்டாக்கியவர்கள் இந்த இயக்கத்தை முன்னின்று நடத்தினர். பழனி அருகே விருப்பாட்சியில் சதி ஆலோசனை நடத்தியவர்கள், 3 ஜூன் 1800 அன்று கோவையில் ஆயுதம் ஏந்திப் போராடினர். இக்கிளர்ச்சி வடக்கே சோளாபூரில் இருந்து தெற்கே நாங்குநேரி வரை பரவியது. இப்பெரும் போராட்டத்தில் தமிழர்கள் முக்கியப் பங்காற்றினர்.




மே 1801இல், கிளர்ச்சி வடக்கு மாகாணத்திற்குப் பரவியது. அதிருப்தி அடைந்த ஒவ்வொரு தலைவர்களுடனும் இணைந்து, தங்கள் மாவட்டத்தின் அனைத்து மக்களையும் ஒன்று திரட்டிய மருது பாண்டியர் மற்றும் அவருக்கு ஆதரவு அளித்தவர்கள் வலுவான சக்தியாகத் திரண்டனர். அவர்கள் முத்துகருப்ப தேவரை ராமநாதரபுரம் மன்னராக அறிவித்து, திருப்பத்தூர், மேலூர், நத்தம் மற்றும் திருமேலூர் ஆகிய கோட்டைகளை அடிபணிய வைத்தனர். மேலப்பன் மற்றும் பட்டூர் ஆகிய தளபதிகளால் வழிநடத்தப்பட்ட கிளர்ச்சியாளர்கள், மறவர்கள் பகுதியில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். நீண்ட கடற்கரையை கட்டுப்படுத்தி, இலங்கை மற்றும் பிற பகுதிகளிலிருந்து தொண்டி துறைமுகம் வழியே பெரிய படகுகளில் தானியங்கள் மற்றும் ஆயுதங்களைக் கொண்டு வந்தனர். ஜூலை மாதம் ஊமைத்துரை தனது ஆதரவாளர்களை மதுரை அருகே உள்ள பாளையநாட்டில் திரட்டி அதைக் கைப்பற்றினார். மருது பாண்டியரின் சகோதரர் செவத்த தம்பி தலைமையிலான சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் படைகள் தஞ்சாவூரை நோக்கி முன்னேறின. விவசாயிகள் தாமாக முன்வந்து கிளர்ச்சியாளர்களை ஆதரிக்க, அவர்கள் பட்டுக்கோட்டையை கைப்பற்றி

அறந்தாங்கி மற்றும் அடியார்குடி ஆகிய பகுதிகளில் தங்கள் கொடியை நிலைநாட்டினர். அனைத்து கிளர்ச்சியாளர்களும் ஆங்கிலேயர்களுக்கு எதிரான பொதுவான நோக்கத்தைக் கொண்டிருந்தனர். இந்த ஒற்றுமை அவர்கள் எதிர்ப்புக்கு வலு சேர்த்தது. எதிரிகளை இன்னலுக்கு உள்ளாக்கும் வகையில் கிளர்ச்சியாளர்கள், தகவல் தொடர்பைத் துண்டித்து, கோட்டைகளைத் தகர்த்து, அடர்ந்த காடுகளில் பதுங்கி, கொரில்லா உத்திகளைக் கையாண்டனர். தங்களின் துரிதமான, சீரில்லாத இயக்கம் மூலம், மொத்தப் பகுதியையும் தாக்கினாலும், ஆங்கிலேயப் படைகளின் கண்களில் சிக்காமல் எளிதாகத் தப்பினர். ஆங்கிலேயப் படைகளால் தங்கள் வீரர்களுக்கு பொருட்களை வழங்கவும் முடியவில்லை, காக்கவும் முடியவில்லை. இதன் விளைவாக, ஆங்கிலப் படையினர் கிளர்ச்சியாளர்களின் தாக்குதலுக்கு அடிக்கடி இலக்காயினர்.

முதன்மையான கிளர்ச்சியாளர்கள் தூக்குக் கயிற்றை எதிர்கொண்டனர். கிளர்ச்சியாளர்களை வழிநடத்திய மருது பாண்டியும், அவரது தீரமிகு சகோதரர் வெள்ள மருதுவும், 24 அக்டோபர் 1801 அன்று திருப்பத்தூர் கோட்டை சிதிலங்களில் தூக்கிலிடப்பட்டனர். மருது பாண்டியரின் மகன்கள் செவத்த தம்பி, சிவஞானம், மற்றும் வெள்ள மருதுவின் மகன்கள் கருத்த தம்பி, மொல்லி குட்டி தம்பி, மேலும் ராமநாதபுரம் மன்னர் மற்றும் கடல்குடி பாளையக்காரர் ஆகியோரின் வழியில் வந்த செவத்த தம்பி முத்துகருப்ப தேவரின் இளைய மகன் முத்துசாமி, ஆகியோர் அதே இடத்தில் தங்கள் இறுதியை எட்டினர்.

துயரம் என்னவெனில், பழிவாங்கும் எண்ணம் கொண்ட ஆங்கிலேயர்கள், தாத்தாக்கள், மகன்கள், பேரன்கள் என மொத்த குடும்பத்தையும் ஒரே தூக்கில் இட்டனர். மருது பாண்டியரின் தலை துண்டிக்கப்பட்டு, காளையார் கோயிலுக்கு எடுத்துச்செல்லப்பட்டது, அவரது உடல் திருப்பத்தூரில் புதைக்கப்பட்டது. தற்போது அது ஸ்காட்டிஷ் குழு வளாகத்தில் உள்ளது.



ஊமைத்துரை மற்றும் செவத்தையா பாஞ்சாலங்குறிச்சிக்கு கொண்டு செல்லப்பட்டு நவம்பரில் கழுத்து வெட்டி கொல்லப்பட்டனர். முக்கிய கிளர்ச்சியாளர்கர் 73 பேர் இவ்விதம் கொல்லப்பட்டனர். இவர்களில் சிவங்கையின் வேங்கம் பெரிய உடையத் தேவர், வேரப்பூரின் பொம்ம நாயக்கர், பஞ்சாலங்குறிச்சியின் தளவாய் குமாரசாமி நாயக்கர், மற்றும் மருது பாண்டியர் மகன் துரைசாமி ஆகியோரும் அடக்கம்.

1800–1801 கிளர்ச்சி, ஆங்கில ஏகாதிபத்தியத்தை அழிக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது. இது பரவலாகப் பரவி, மாபெரும் இயக்கமாக மாறியது. இந்த தென்னிந்திய கிளர்ச்சியை "முதல் இந்திய சுதந்திரப் போர்" என அழைக்கலாம்.

வேலூர் கிளர்ச்சி (1806)

தென்னிந்திய கிளர்ச்சி ஒடுக்கப்பட்டது பற்றி கவலைப்படாமல், கிளர்ச்சியாளர்கள் தங்கள் களத்தை வேலூருக்கு மாற்றிக்கொண்டனர். அவர்கள் மீண்டும் ஒன்று திரண்டு, அதிருப்தியடைந்த சிப்பாய்களை தொடர்பு கொண்டு, ஆங்கிலேயர்களுக்கு எதிராக திட்டம் தீட்டினர். 13 ஜூலை 1806 அன்று கம்பெனி ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி செய்தனர். சிப்பாய்கள் இனரீதியான கட்டுப்பாடுகளால் கொதித்துப் போயிருந்தனர். இந்துக்கள் தங்கள் முன்நெற்றியில் மத அடையாளம் பூண அனுமதி மறுக்கப்பட்டது. அதேபோல இஸ்லாமியர்களை தாடையை மழித்து, மீசையை குறைக்கும்படி கூறப்பட்டது. இத்தகைய, ஒரே நடவடிக்கையால் இந்து மற்றும் இஸ்லாமிய சிப்பாய்கள் என இரு பிரிவினரும் அதிருப்தி அடைந்தனர். இவற்றுக்கும் கீழாக, கிளர்ச்சி வீரர்கள் புனித ஜார்ஜ் கோட்டைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அவர்களில் இருவருக்கு 900 கசையடிகள் கொடுக்கப்பட்டு வேலை நீக்கம் செய்யப்பட்டனர். 19 வீரர்களுக்கு 500 கசையடி கொடுக்கப்பட்டு, தங்கள் செயலுக்காக மன்னிப்பு கேட்க வைக்கப்பட்டனர். உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிக்கப்பட்டிருந்த வீரர்கள், மனிதாபிமானமற்ற, உணர்வற்ற அந்நிய ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சியாளர்களுடன் இணைய தயாராக இருந்தனர். வேலூர் கிளர்ச்சி அடக்கப்பட்டு விட்டாலும், இரண்டாவது சுதந்திரப் போர் எனக் கருதப்படும் 1857 சிப்பாய் கலகத்திற்கு முன்பான சிறு ஒத்திகையாக இக்கிளர்ச்சி கருதப்படுகிறது.

காங்கிரசுக்கு முந்தைய அரசியல் கூட்டணி

பூகோள அமைப்பு, மாகாணத்தின் தலைநகரம் எனும் அந்தஸ்து மற்றும் ஐரோப்பிய நாகரீகத்தின ஆரம்ப தாக்கம் ஆகியவற்றின் காரணமாக மதராசின் படித்த மேட்டுக்குடியினர் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உண்டான அரசியல் அமைப்புகளில் முக்கியப் பங்காற்றினர். மாகாணத்தின் நில உரிமையாளர்கள், பணக்கார வணிகர்கள், மற்றும் சேவை மனம் கொண்டவர்கள், தங்கள் சமூக செல்வாக்கு, அந்தஸ்து மற்றும் தங்களது, மக்களது நலன்களை பேசும் விழைவு ஆகியவற்றைக் கொண்டு, மதராஸ் நேட்டிவ் அசோசியேஷன் (1852), தி தியாசிபிகல் சொசைட்டி (1882), தி மெட்ராஸ் மகாஜன சபா (1884) ஆகிய அமைப்புகளை உருவாக்கினர். இந்த முக்கிய அரசியல் அமைப்புகள் தவிர, மதராஸ் இஸ்லாமியர்கள் வங்காளத்தின் மத்திய தேசிய முகமதியர்கள் சங்கத்தின் சென்னை பகுதியை (1883) உருவாக்கினர். இதேபோல, மதராஸ் கிறிஸ்தவர்கள் தங்கள் அடையாளத்தை நிறுவவும், ஐரோப்பிய அமைப்புகள் ஆதிக்கத்திலிருந்து விடுபடவும் தேசிய தேவலாயம் (நேஷனல் சர்ச்) அமைப்பை உண்டாக்கினர்.

மதராஸ் மகாஜன சபையின் தொடக்கம், 1884இல் தேசிய இயக்க வரலாற்றில் முக்கிய நிகழ்வாக அமைகிறது. அரசியல் சாசன சீர்திருத்தத்தை முக்கிய நோக்கமாக

அறிவித்த அவ்வமைப்பு, மக்களின் அரசியல் கல்விக்கான விழிப்புணர்வு திட்டத்தையும் அறிமுகம் செய்தது. எனினும், மிக விரைவாகவே, அதன் நடவடிக்கைகள் இந்திய தேசிய காங்கிரசுடன் இணைக்கப்பட்டன. மகாஜன சபையில் முக்கியமாக திகழ்ந்த ரெங்கையா நாயுடு மற்றும் G.சுப்பிரமணிய ஐயர் காங்கிரசில் இணைந்து செயல்படத் துவங்கினர். 1887இல் சென்னையில் நடைபெற்ற மூன்றாவது கூட்டத்தில், காங்கிரஸ் கட்சியும் மக்களின் அரசியல் கல்வி முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்கான உள்ளூர் குழுக்களை அமைத்தது. மேலும், மக்களுக்கு பொறுப்பளிக்கும் வகையில் நிர்வாக மற்றும் அரசியல் சாசன மாற்றங்களையும் கோரியது.

சென்னை பிரதிநிதிகள் மற்றும் முதல் காங்கிரஸ் கூட்டம் (1885)

பாம்பே, சமஸ்கிருத கல்லூரியில் 28 டிசம்பர் 1885 அன்று கோகுல்தாஸ் தேஜ்பால் அரங்கில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் முதல் கூட்டத்தில் கலந்து கொண்ட, 72 நேர்மையான, விசுவாசமான, ஈடுபாடுள்ளவர்களில், 21 பிரதிநிதிகள் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் 16 பேர் மெட்ராஸ் மகாஜன சபையைச் சேர்ந்தவர்கள்.

சென்னையில் மூன்றாவது கூட்டம் (1887)

இந்திய தேசிய காங்கிரசின் முதல் கூட்டம், உள்ளூர் இணைப்புகளை கொண்டிருந்த வலுவில்லாத நிகழ்ச்சியாக இருந்தது. 1888இல் கல்கத்தாவில் நடைபெற்ற இரண்டாவது கூட்டத்தில் தமிழ்நாட்டிலிருந்து 47 பிரதிநிதிகள் பங்கேற்றனர். 1887இல் மூன்றாவது கூட்டத்தை நடத்தும் பெருமை சென்னைக்கு கிடைத்தது. தற்போது ஆயிரம் விளக்கு என்றழைக்கப்படும் மக்கீஸ் தோட்டத்தில் நடைபெற்றது. 670 பிரதிநிதிகள் பங்கேற்றனர். பத்ரூதின் தியாப்ஜி தலைமை வகித்தார்.

தமிழ்நாடு மிதவாதிகள்

கோபால கிருஷ்ண கோகலேவின் ஆதரவாளர்கள் காங்கிரஸ் மிதவாதிகள்போல பழுப்பு நிறத்தவர்களாக இருந்தனர். V.S.ஸ்ரீனிவாச சாஸ்திரி, P.S.சிவசாமி ஐயர், V.கிருஷ்ணசாமி ஐயர், T.R.வெங்கடராம சாஸ்திரி, இந்தியன் ரிவ்யூ ஆசிரியர் G.A.நடேசன், T.M.மாதவ ராவ், S.சுப்பிரமணிய ஐயர், C.விஜயராகவாச்சாரி, S.A.ஸ்வாமிநாத ஐயர் ஆகியோர் குறிப்பிடத்தக்க சென்னை மிதவாதிகள். அவர்களில் பெரும்பாலானோர், பிராமண வழக்கறிஞர்கள், அரசியல் சாசன வல்லுனர்கள் மற்றும் அரசு ஆதரவாளர்கள். அவர்கள் நிர்வாகத்தில் பங்கேற்று, மாண்ட்ஃபோர்டு சீர்திருத்தம் போன்றவற்றை வரவேற்றாலும் ரௌலட் சட்டம் போன்ற அடக்குமுறையை எதிர்த்தனர்.

தமிழ்நாடு தீவிரவாதிகள்

பாலகங்காதிர திலகரின் ஆதரவாளர்கள் தீவிரவாதிகள் என கருதப்பட்டனர். சேலம் விஜயராகவாச்சாரி, C.ராஜகோபாலாச்சாரி, T.M.நாயர், S.கஸ்தூரி ரங்க ஐயங்கார், A.ராமசாமி ஐயங்கார், T.ரங்கச்சாரி ஆகியோர் நன்கறியப்பட்ட திலகர் ஆதரவாளர்கள் ஆவர். வ.உ.சிதம்பரம் பிள்ளை 'தமிழகத்தின் திலகர்' என அழைக்கப்பட்டார். மண்டயம் ஸ்ரீனிவாச்சாரி, சுரேந்திரநாத் எத்திராஜ், திருவல்லிக்கேணி கிருஷ்ணமாச்சாரி, சர்க்கரை செட்டியார் மற்றும் சுப்பிரமணிய சிவா ஆகியோரும் இப்பிரிவில் குறிப்பிடத்தக்கவர்கள்.

சுதேசி இயக்கம் (1905-1907)

வங்காளத்தில் உண்டான சுதேசி இயக்க நெருப்பு தமிழ்நாட்டிலும் உடனடியாகப் பரவியது. சுதேசியம் தமிழக தீவிரவாதப் பிரிவினரை ஈர்த்தது. அவர்கள் அந்நிய துணிகள், பொருட்களை புறக்கணித்து சுதேசி பொருட்களை ஆதரித்தனர். சுதேசி இயக்கம், அதிருப்தியிலிருந்த மக்களிடையே சுதேசிய கொள்கையை கொண்டு சென்றது. இந்த மக்கள் இயக்கத்திற்கு ஆதரவாக விவாத நிகழ்ச்சிகளை பாலபார்த் சங்கம் ஏற்பாடு செய்தது. அதேபோல, சுதேசிவஸ்து பிரச்சாரினி சபா, உள்ளூரில் உற்பத்தியான பொருட்கள் விற்பனையை பிரபலமாக்கியது. இந்த இயக்கத்திற்கு ஆதரவாக தேசிய நிதி திரட்டப்பட்டது.

சுப்பிரமணிய பாரதியாரின் நாட்டுப்பற்றுமிக்க பாடல்கள் சுதேசி தேசியவாதத்தின் தீயை பரவச்செய்வதோடு, இந்தியா இதழில் அவர் எழுதிய கட்டுரைகள், சுதேசி இயக்கம் தமிழ்நாட்டில், குறிப்பாக திருநெல்வேலியில் ஆழ வேறூன்றியிருப்பதை உணர்த்தியது. முக்கியமாக, வ.உ.சிதம்பரம் 1906இல் துவக்கிய சுதேசி கப்பல் கம்பெனி, கப்பல் துறையில் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திற்கு சவால் விடுத்தது, இயக்க வரலாற்றில் மகத்தான தருணமாக அமைந்தது.

ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிரான பரவலான அதிருப்தி புறக்கணிப்பு மற்றும் சுதேசியத்தில் வெளிப்பட்டது. காங்கிரஸ் தொண்டர்கள் மற்றும் நாட்டுப்பற்று அமைப்புகள் மக்கள் அந்நிய பொருட்களை, குறிப்பாக ஜவுளிகளை வாங்குவதை நிராகரித்து, இந்திய பொருட்கள் விற்பனையை ஊக்குவிக்கும் ஆர்ப்பாட்டத்தை நடத்தின. 1906–1907 காலகட்டத்தில் சென்னையில் சுதேசிய கொள்கை வளர்ச்சிக்காக மூன்று அமைப்புகள் உருவாக்கப்பட்டன. தொழிற்சாலை சங்கம் சிறிய தொகைகளை திரட்டி, சுதேசி பொருட்களை வைத்து விற்பனை செய்வதற்கான கிடங்கை அமைத்தது. சுதேசி இயக்கம், சுதேசி கொள்கையை மக்களிடம் கொண்டு செல்லும் பணியிலும் சுதேசி பொருட்கள் விற்பனையிலும் ஈடுபட்டது. பாலபாரத் சங்கம் அல்லது யங் இந்தியா அசோசியேஷன் தமிழில் பிரசுரங்களை வெளியிட்டதோடு, இயக்கத்திற்கு ஆதரவாக உரை நிகழ்ச்சிகளை நடத்தியது. சென்னையில் தலைமையகம் கொண்டிருந்த சுதேசிவஸ்து பிரச்சாரினி சபா, உள்ளூரில் உற்பத்தி செய்த பொருட்களை பிரபலமாக்கியது. இதனிடையே, சுதேசி இயக்கத்திற்கு ஆதரவாக தேசிய நிதி திரட்டப்பட்டது.

சுதேசி கப்பல் கட்டும் கம்பெனி உருவாக்கப்பட்டது இவ்வியக்கத்தின் வரலாற்றில் மைல்கல்லாக அமைந்தது. தமிழர்களின் கடலோடி வரலாற்றை புதுப்பிக்கும் உத்வேகத்துடனும், கடல்சார் போக்குவரத்தில் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திற்கு சவால் விடும் வகையிலும் வ.உ.சிதம்பரம் (1872–1936) 1906இல் கப்பல் கம்பெனியை உருவாக்கும் தனது முடிவை ஷியாலியில் அறிவித்தார். இதன்படி, வணிகர்கள் மற்றும் நாட்டுப்பற்று அமைப்புகளிடம் இருந்து திரட்டப்பட்ட உறுப்பினர் தொகையைக் கொண்டு, தூத்துக்குடியில் சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி எனும் பெயரில் கப்பல் நிறுவனத்தைத் துவக்கினார். ரூ.10 இலட்சம் நிதி திரட்டி, கலியா மற்றும் லாவோ ஆகிய இரண்டு கப்பல்களை வாங்கி, ஆங்கிலேயர்களுக்குப் போட்டியாக தூத்துக்குடி–இலங்கை கடல்வழியில் அறிமுகம் செய்தார். கொழும்பு மற்றும் தூத்துக்குடி இடையே செயல்பட்டு வந்த ஆங்கிலேய கப்பல் நிறுவனமான பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நேவிகேஷனுக்கு போட்டியாக இது அமைந்தது. இந்த துணிச்சலான நடவடிக்கை தேசியவாதிகள் மத்தியில் பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியது.

ஆஷ் படுகொலை (1911)

மிதவாதிகள், தீவிரவாதிகள், மற்றும் புரட்சியாளர்களின் இருப்பிடமாக தமிழ்நாடு திகழ்ந்தது. V.VS.ஐயர், T.S.S.ராஜன், M.P.T.ஆச்சார்யா ஆகியோர் வெளிநாட்டில் புரட்சிகர தேசியவாதத்தின் மையங்களாக திகழ்ந்த லண்டன், தன்னாட்சி இயக்கம், இந்தியா ஹவுஸ் ஆகியவற்றில் பயிற்சி பெற்றனர். வாஞ்சிநாதன், நீலகண்ட பிரம்மச்சாரி, மாடசாமி, குருநாத ஐயர், மற்றும் டாக்டர் செண்பகராமன் ஆகியோர் ஈடுபாடுமிக்க புரட்சிகர தீவிரவாதிகளாக இருந்தனர். ஆங்கிலேயர்களின் கொடுமைகளால், குறிப்பாக, துணை ஆட்சியர் ஆஷின் துப்பாக்கிச் சூடு உத்தரவால் கொதிப்படைந்த வாஞ்சிநாதன், 17 ஜூன் 1911 அன்று தனது மனைவியுடன் திருநெல்வேலியிலிருந்து கொடைக்கானல் சென்று கொண்டிருந்த ஆஷை மணியாட்சி இரயில் நிலையத்தில் சுட்டுக்கொன்றார். அதன் பிறகு அவர் தன்னையும் மாய்த்துக்கொண்டார். வாஞ்சிநாதனின் நடவடிக்கை கண்டனத்திற்கு உள்ளானாலும், தமிழ்நாட்டின் தலைசிறந்த தேசப்பற்றாளர்களில் ஒருவராக அவர் கருதப்படுகிறார்.



தன்னாட்சி போராட்டம் (1916)

தன்னாட்சி போராட்டத்தின் இல்லமாக சென்னை விளங்கியது. அன்னி பெசன்ட் அம்மையார், ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தை வழிநடத்தினார். அவர் மெட்ராஸ் பார்லிமெண்ட் எனும் அமைப்பையும், அமைச்சரவையையும் உண்டாக்கி, தன்னை பிரதமராகவும், ஒரு சில பிராமணர்களை அமைச்சர்களாகவும் நியமித்து, கோக்கலே அரங்கில் அடிக்கடி கூட்டங்கள் நடத்தி, நாடாளுமன்ற செயல்முறைகளில் மக்களுக்கு பயிற்சி அளிக்க முயன்றார். 1916இல்; அருண்டேல் மற்றும் வாடியா ஆதரவுடன் சென்னையில் அவர் தன்னாட்சி கூட்டமைப்பை நடத்தினார். அதன் நோக்கம் சில வரம்புகள் கொண்டதாக இருந்தது. ஏனெனில், ஆங்கிலேயேப் பேரரசுக்குள் இந்தியா ஒரு சுதந்திர நாடாக விளங்க அரசியல் சாசன முறையில் தன்னாட்சியை அடைவதாகவும், இந்திய தேசிய காங்கிரசுக்கு ஆதரவு அளிப்பதாகவும் இருந்தது. "சுதந்திரம், சுயமரியாதை, கவுரவம், சரியான லட்சியம், நாட்டுப்பற்று, உன்னத வாழ்க்கைமுறை ஆகியவற்றினால் ஆனதே வாழ்க்கை, இவையன்றி அவ்வாழ்க்கை வாழத் தகுதியற்றது" என்று அவர் முழங்கினார்.

இரயில் பெட்டிகளில் ஐரோப்பியர்களுக்கு பிரத்யேக முன்பதிவு வழங்கப்படுவதை கண்டித்து 24 ஜூலை 1916 அன்று மாணவர்கள் எழும்பூர் ரெயில் நிலையம் முன் போராட்டம் நடத்தினர். கோட்டை ரயில் நிலையத்தில் மாணவர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் இடையே கைகலப்பு உண்டானது. தன்னாட்சிப் போராட்டத்தின் தீவிரம் காரணமாக ஆளுநர் பெண்ட்லாண்ட் பிரபு இயக்கத்தின் அரசியல் நடவடிக்கைகளில் மாணவர்கள் பங்கேற்பை தடை செய்தார். அன்னி பெசன்ட் அம்மையார் அவர் நடத்தி வந்த இதழுக்காக வைப்புத்தொகை கட்ட உத்தரவிடப்பட்டது. அவர் நீலகிரி சிறையில் அடைக்கப்பட்டார். அரசின் இந்த நடவடிக்கை போராட்டத்தை தீவிரமாக்கியது. திரு.வி.கலியாணசுந்தரம், வெஸ்லி கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் பணியை விட்டு விலகி போராட்டத்தில் குதித்தார். மதுரை ஹார்வே மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். வெளிநாட்டு பொருட்கள் புறக்கணிக்கப்பட்டன.

சென்னையில் இருந்து கிராமப்பகுதிகளுக்கு இந்த போராட்டம் பரவிய நிலையில் அன்னி பெசன்ட் அம்மையார் நீலகிரி சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவர் சென்னை திரும்பிய போது, வழிநெடுக சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. தன்னாட்சி இயக்க நாயகி அன்னி பெசன்ட் அம்மையாருக்கு சேலம் ரெயில் நிலையத்தில் சி.ராஜகோபாலாச்சாரி பெரு வரவேற்பு அளித்தார். 1917இல் அன்னி பெசன்ட் அம்மையார் காங்கிரஸ் தலைவராக தேர்வு செய்யப்பட்டார். ஒருவிதத்தில் இந்த போராட்டமே, 1917 ஆகஸ்ட் இ.எஸ்.மாண்டேகு அறிவிப்புக்கு காரணமானது.

ஒத்துழையாமை இயக்கம் (1920-1922)

தமிழ்நாட்டில் C.ராஜகோபாலாச்சாரி தலைமையில் ஒத்துழையாமை இயக்கம் வேகமாக வளர்ந்தது. இது மக்கள் இயக்கமாக மாறியது. தமிழ்நாடு மக்கள் தேசியக்கொடி ஏற்றி, தலைவர்கள் படங்களை நிறுவி, கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், முழு அடைப்புகளை நடத்தினர். மதுரை வழக்கறிஞர் ஜார்ஜ் ஜோசப், S.ஸ்ரீனிவாச ஐயங்கார், N.S.வரதாச்சாரி, S. ராமநாதன், வ.உ.சிதம்பரம் தங்கள் பட்டங்களை துறந்தனர், தங்கள் பதவிகளை விட்டு விலகி இவ்வியக்கத்தில் இணைந்தனர். 1920களின் இறுதியில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினர் சட்டமன்றத் தேர்தலை புறக்கணித்தனர். பக்கிங்காம் ஆலைகளின் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். (1921 ஜூன் 27). கள்ளுக்கடைகள் மூடப்பட்டன. ராஜபாளையம் உள்ளிட்ட நகரங்களுக்கு S.சத்தியமூர்த்தி விஜயம் செய்தது மக்களை எழுச்சி பெற வைத்தது. I.R.அரங்கசாமி ராஜா, நகரில் வரலாற்று சிறப்புமிக்க காதி இயக்கத்திற்கு வலுவான அடித்தளம் அமைத்தார். V.G.வெள்ளியங்கிரி கவுண்டர், N.S.ராமசாமி ஐயங்கார், ஈ.வே.ராமசாமி நாயக்கர் போன்ற தலைவர்களால் மதுவுக்கு எதிரான இயக்கம் தீவிரம் பெற்றது. வேல்ஸ் இளவரசர் கன்னாட் பிரபு சென்னைக்கு வருகை தந்தபோது, நீதிபதிகள் சிறப்பான வரவேற்பு அளித்தாலும் மக்கள் புறக்கணித்தனர். 18 மார்ச் 1922 அன்று மகாத்மா காந்தி கைது செய்யப்பட்டபோது தமிழ்நாட்டில் மக்களிடையே தன்னெழுச்சி உண்டானது. ஆக்கப்பூர்வமான திட்டங்கள், போராட்டங்கள், சுய தியாகம் மூலம் காங்கிரஸ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இயக்கமாக மாறியது. இதனிடையே, பிராமண மேட்டுக்குடியினர் மற்றும் திராவிட மேட்டுக்குடியினர் மத்தியில் ஏற்பட்ட உட்பூசல் மதவாத சக்திகளை பலவீனமாக்கின. தமிழ் பிராமணர்கள் மற்றும் தெலுங்கு பிராமணர்கள் பதவி மற்றும் செல்வாக்கிற்காக மோதலில் ஈடுபட்டனர். அவர்கள் தலைவர்கள் S.சத்தியமூர்த்தி மற்றும் T.பிரகாசம் இடையிலான மோதல் இதன் வெளிப்பாடாக அமைந்தது. C.ராஜகோபாலாச்சாரி செல்வாக்கால் சத்தியமூர்த்தி அதிருப்தி அடைந்ததாக 1931இல் வெளியான செய்தி தமிழ் பிராமணர்கள் மத்தியிலும் எதிர்ப்பை உண்டாக்கியது. இந்த

மோதல் காரணமாக, மண்ணின் மைந்தரான கு.காமராஜர் செல்வாக்கு பெற வழிவகுத்தது. இந்தப் போக்கு காங்கிரஸ் கட்சி பெரிய இயக்கமாக வளர உதவியது. கல்யாண சுந்தர முதலியார் திராவிடர்கள் ஆதரவைக் கோர முயன்றார். திரு.வி.க. என அழைக்கப்பட்ட தீவிர தேசப்பற்று மிக்கவர், தமிழ் அறிஞர் மற்றும் பத்திரிகையாளராகவும் விளங்கினார். மேலும், பல திராவிடர்கள் காங்கிரஸ் கட்சியில் இணைய 1922இல் மாகாண காங்கிரஸ் தலைவராக ஈ.வே.ராமசாமி நாயக்கர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட வழிவகுத்தது.

சுயராஜ்ய ஆதரவாளர்கள் (1923)

மாற்றத்திற்கு ஆதரவான தலைவர்கள் சி.ஆர். தாஸ் மற்றும் மோதிலால் நேரு ஆகிய தலைவர்கள் 1 ஜனவரி 1923 அன்று சுயராஜ்ய கட்சியைத் துவக்கியபோது, ஒத்த கருத்துள்ள காங்கிரஸ் தலைவர்கள் கஸ்தூரி ரங்க ஐயங்கார், ஸ்ரீனிவாச ஐயங்கார், வரதராஜுலு நாயுடு, விஜயராகவாச்சாரி, A.ரங்கசாமி ஐயங்கார் ஆகியோர் அதில் இணைந்தனர். 1923ஆம் ஆண்டு நவம்பர் 13இல் பாராளுமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் சுயராஜ்ஜியர்கள், A.ரங்கசாமி ஐயங்கார், R.K.சண்முகம் செட்டி, N.ஸ்ரீனிவாச ஐயங்கார், தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். சென்னை சட்டமன்றத்தில் இக்கட்சி 41 உறுப்பினர்களையே பெற்றிருந்தாலும் ஆட்சி அமைக்க அழைக்கப்பட்டது. அதற்கு மாறாக சிறந்த பேச்சாளரான S.சத்யமூர்த்தி தலைமையிலான அணியுடன் இணைந்து ஒத்துழையாமையில் ஈடுபட்டனர். தமிழ்நாடு சுயராஜ்ய சட்டமன்ற உறுப்பினர்கள் அரசு கொண்டு வந்த சட்டங்கள் அனைத்தையும் எதிர்த்தனர். ஆளும் நீதிக்கட்சிக்கு எதிராக C.R.ரெட்டி கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை அவர் வலுவாக ஆதரித்தார். சீரான சட்டமன்ற நடவடிக்கைகள் மூலம், சென்னை சுயராஜ்யவாதிகள் கட்சியின் எதிர்பார்ப்புக்கு ஈடு கொடுத்தனர்.

நீதிக்கட்சி

இந்த காலகட்டம், தமிழ்நாடு மக்கள் பிராமணர்களுக்கு எதிராக கடுமையான உணர்வுகளை கொண்டிருந்ததாக அமைந்தது. இதற்கு அவர்கள் அனுபவித்த இன்னல்கள் ஒரு காரணமென்றால், புதிய கலாச்சார தாக்கத்தினால் சமூகத் தீங்குகள் குறித்த விழிப்புணர்வை அவர்கள் பெற்றது மற்றொரு காரணமாக அமைந்தது.

1916இல் சென்னை மாநகராட்சியின் செல்வாக்குமிக்க உறுப்பினர்களில் ஒருவரான P.தியாகராய செட்டி மற்றும் இதர தலைவர்கள் இணைந்து தென்னிந்திய சுதந்திர கூட்டமைப்பை உருவாக்கினர். T.M. நாயர், பனகல் அரசர், K.V.ரெட்டி, C.நடேச முதலியார், பொப்பிலி அரசர் ஆகியோர் இதில் இணைந்தனர். மதராஸ் திராவிடர்கள் சங்கம் மற்றும் தென்னிந்திய மக்கள் சங்கம் என்கிற இரண்டு அமைப்புகளும் தோன்றின. இந்த மூன்று சங்கங்களும் இணைந்து நீதிக்கட்சியாக உருவெடுத்தது. இந்திய தேசிய காங்கிரசை பிராமணர்கள் கட்சி என்று கண்டனம் செய்த நீதிக்கட்சி, அரசியல் சாசன முறைகளில் பொறுப்பான அரசை சாத்தியமாக்கி, அனைத்து திராவிட சமூகத்திற்கும நீதியைக் கோரியது.

இந்திய அரசு சட்டம் 1919, ஆதரவையும், எதிர்ப்பையும் பெற்றது. தேசியவாதிகள் இதை போதுமானதல்ல, திருப்தி இல்லாதது, மற்றும் ஏமாற்றம் அளிப்பது எனக் கூறினர். இந்த அதிருப்தி காரணமாக காங்கிரஸ் கட்சி, இச்சட்டத்தின்படி நடைபெற்ற 1920 தேர்தலை புறக்கணித்தது. நீதிக்கட்சி இச்சீர்திருத்தங்களை வரவேற்று ஆங்கிலேயர்களுடன் ஒத்துழைக்க தீர்மானித்தது. ஏனெனில், ஆட்சியை கைப்பற்றுவதற்கும் வளரும் பிராமணர்களின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்துவதற்குமான வாய்ப்பாக இதைக் கருதியது.





இக்காலகட்டத்தில், தேசியவாதம் மற்றும் மன்ற நுழைவு ஆகிய இரண்டு முக்கிய அம்சங்கள் அரசியல் நடவடிக்கைகளில் முக்கியப் பங்கு வகித்தன. நீதிக்கட்சியின் பிராமண எதிர்ப்பு நிலைப்பாடு மற்றும் மேட்டுக்குடி ஆதரவு ஆகியவை தேசிய நலனுக்கு எதிரான கொள்கைகளைப் பின்பற்றும் வகையில் அதன் பார்வையை மங்கச்செய்தது. நீதிக்கட்சி தலைவர்கள், தன்னாட்சி நோக்கி முன்னேறுவதை சாத்தியமாக்க பிராமண ஆதிக்கத்தை ஒடுக்குவது மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தின் நலனை காப்பது ஆகியவற்றுக்கு ஆதரவாக இருப்பதாக தெரிவித்தனர்.

நீதிக்கட்சி 13 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தது. அரசுப் பணிகளில் திராவிட சமூகத்தினருக்கு பிரதிநித்துவம் அளித்தது, விளிம்பு நிலை மக்களின் மேம்பாடு மற்றும் கல்வி சீர்திருத்தங்கள் ஆகிய அம்சங்களுக்காக இதன் நிருவாகம் முக்கியமாக கருதப்படுகிறது.

பனகல் அமைச்சரவை, 1921இல் இந்து சமய அறநிலைய சட்டத்தை இயற்றியது. கோயில்களில் பூசாரிகள் சோம்பலோடு இருக்க வழி செய்த தேவதாசி முறையை இரத்து செய்தது. கட்சி, பின்தங்கிய மக்களுக்கு, கட்டண சலுகை, உதவித் தொகை, மதிய


உணவு ஆகிய திட்டங்கள் மூலம் தொடக்க கல்வியின் பலனை அளிக்க முற்பட்டாலும், வேலைவாய்ப்பை அதிகரிக்க நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

நிருவாகம், சென்னை பல்கலைக்கழகப் பணியை மாற்றி அமைத்தது. தமிழர்கள் மற்றும் தெலுங்கர்கள் மேலும் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படக் கோரினர். இதன் விளைவாக, 1926இல் ஆந்திரப் பல்கலைக்கழகம் மற்றும் 1929இல் அண்ணாமலை பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது.

இதனிடையே, காங்கிரஸ் கட்சி அதிருப்தியில் இருந்த மக்களுக்கு மாற்று அளித்தது. சமத்துவம், தீண்டாமை ஒழிப்பு, சுதேசி பொருட்கள் பயன்பாடு, மதுவிலக்கு ஆகிய திட்டங்கள் மூலம் காங்கிரஸ் சாதாரண மக்களைக் கவர்ந்தது. இதன் விளைவாக பிராமணர் அமைப்பாக இருந்த கட்சி தமிழ்நாட்டில் திராவிட அமைப்பாக மாறியது. கட்சியின் போக்கில் அவ்வாறு இல்லையென்றாலும் அவ்வேறுபாட்டை இராஜாஜியும், காமராஜரும் பிரதிபலித்தனர்.

நீல் சிலை சத்தியாகிரகம் (1927)

ஜேம்ஸ் நீல், சென்னை படைப்பிரிவில் படைத்தலைவராகப் பணியாற்றியவர். 1857 கிளர்ச்சியை அவர் ஈவிரக்கமின்றி ஒடுக்கினார். குற்றம் செய்தவர்கள் எனக் கருதியவர்களை மனிதாபிமானமற்ற முறையில் பழி தீர்த்தார். அவர்கள் அவமானப்படுத்தப்பட்டனர் அல்லது தூக்கிலிடப்பட்டனர். அவரது சேவையைப் பாராட்டி சென்னையின் மத்திய பகுதியில் ஆங்கிலப் பேரரசு நீலுக்கு ஓர் சிலை வைத்தது. தமிழ்நாடு மக்கள் அதை ஓர் அவமானச் சின்னமாகக் கருதி கிளர்ந்தெழுந்தனர். N.V.N.சோமயாஜூலு தலைமையில் சத்யாகிரக குழு அமைக்கப்பட்டது. சிலையை அகற்ற



தீர்மானிக்கப்பட்டது. மதுரை ஸ்ரீனிவாசநாத ஐயங்கார், அவரது மனைவி பத்மாசனி அம்மாள், ஆர். சிதம்பர பாரதி, டாக்டர் பி.வரதராஜுலு ஆகியோர் சத்யாகிரகத்திற்கு ஆதரவு அளித்தனர். 1927 ஆகஸ்ட் 11இல் சுப்பராயலு நாயுடு, முகமது சலியா தலைமையில் சத்யாகிரக ஆதரவாளர்கள் சிலையை சேதப்படுத்தினர். நெல்லை சோமயாஜுலு, குடியாத்தம் சாமிநாத முதலியார், S.A.தேவநாயக ஐயா ஆகிய சத்யாகிரக தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். ஆகஸ்ட் மாதம் துவங்கிய இப்போராட்டம் டிசம்பர் வரை நீடித்தது. அச்சமயம் பல மாவட்டங்களைச் சேர்ந்த தன்னார்வலர்கள் போராட்டத்தில் பங்கேற்றனர்.

சைமன் குழு புறக்கணிப்பு (1929-1930)

காங்கிரஸ் கட்சியின் 1927 சென்னை ஆண்டு அமர்வு வெள்ளையர்களை மட்டுமே கொண்ட சைமன் குழுவினை புறக்கணிக்க தீர்மானித்தது. 1929இல் குழு சென்னை வந்தபோது கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இப்புறக்கணிப்பு பெரிய மக்கள் இயக்கமாக மாறியது. அதிகாரப்பூர்வ வரவேற்பு எனும் போர்வையில் காங்கிரஸ் தொண்டர்கள் பெரிய அளவில் ஆர்ப்பாட்டம் நடத்தியதன் விளைவாக காவல்துறை துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் கொல்லப்பட்டனர். T.பிரகாசம், முத்துரங்க முதலியார், மற்றும் M.பக்தவச்சலம் ஆகியோர் கடுமையான தடியடிகளுக்கு இலக்காயினர். ஆயுதம் இல்லாத போராட்டக்காரர்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. மெரினா கூட்டத்தில் சைமன் குழு மற்றும் நீதிக்கட்சி கண்டனத்திற்கு



Boycott of Simon Commission, 1929-1930

உள்ளானது. சைமன் குழுவிற்க்கு கொடுக்கப்பட்ட அதிகாரப்பூர்வ வரவேற்பில் டாக்டர் பி. சுப்பராயன் பங்கேற்றதை எதிர்த்து ரங்கநாத முதலியார் மற்றும் ஆரோக்கியசாமி முதலியார் ஆகியோர் கட்சியிலிருந்து விலகினர். அதிகாரத் தரப்பு ஆதரவை மீறி, சைமன் குழு புறக்கணிப்பு தமிழ்நாட்டில் பெரும் வெற்றி பெற்றது.

பூரண விடுதலை தினம் (1930)

1927 சென்னை மாநாட்டில் இந்திய தேசிய காங்கிரஸ், இந்தியாவின் இலக்காக பூரண விடுதலையை அறிவித்தது. அரசியல் சாசன சீர்திருத்த பிரச்சனையை கவனிக்க மோதிலால் நேரு தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இருப்பினும், 'நேரு அறிக்கை' என குறிப்பிடப்பட்ட அறிக்கையில், இந்தியாவின் அரசியல் நோக்கமாக முழு விடுதலையைக் குறிப்பிடாமல் அரசுரிமை அந்தஸ்தை குறிப்பிட்டது மிகப்பெரிய சரிவாக கருதப்பட்டது. அரசியல் விழிப்புணர்வு மிக்க தேசியவாதிகளுக்கு இது ஏமாற்றம் அளித்தது. காங்கிரஸ் உறுப்பினர்கள் இதை வரவேற்றாலும், தீவிர தேசியவாதிகள் கண்டனம் செய்தனர். இந்தியாவின் இலக்காக முழு சுதந்திரம் எனும் அவர்களின் கோரிக்கை ஒரு பிளவை உண்டாக்குவதாக கட்சி தெரிவித்தது. சீதாநகரம் காங்கிரஸ், 18 டிசம்பர் 1928 அன்று நேரு குழுவின் தோல்வி அணுகுமுறையை கண்டனம் செய்தது. "சென்னை காங்கிரஸ், முழு விடுதலையே இந்தியாவுக்கு உகந்தது என அறிவித்த நிலையில், அரசாட்சி அந்தஸ்தை அடிப்படையாகக் கொண்டு நேரு குழு தனது திட்டத்தைத் தயாரித்துள்ளது கண்டனத்திற்கு உரியது" என வெளிப்படையாக அறிவித்தது. காங்கிரஸ் கட்சியில் உள்ள இளைஞர்கள் அரசாட்சி அந்தஸ்தில் மட்டுமே திருப்தி அடைந்து அமைதியாகிவிட மாட்டார்கள். முழுமையான சுதந்திரமே அவர்களின் இலக்கு". தேசியவாதிகள் மத்தியில் உண்டான அதிருப்தி காரணமாக, 1929இல் லாகூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் சுதந்திரமே இந்தியாவின் இலக்கு எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஜனவரி 26ஆம் தேதியை முழு சுதந்திர தினமாகக் கொண்டாடவும் தீர்மானிக்கப்பட்டது. அப்போதைய காங்கிரஸ் தலைவர் ஜவகர்லால் நேரு லாகூரில் ரவி நதிக்கரையில் மூவர்ணக் கொடியை ஏற்றினார். இந்த அறிவிப்பு இந்தியாவின் இலக்கை தெளிவாக உணர்த்தியது. காங்கிரஸ் செயல்குழு, சுதந்திரத்தை அடைவதற்காக ஒத்துழையாமை இயக்கத்தை மேற்கொள்ளுமாறு மக்களுக்கு அழைப்பு விடுத்தது.

உப்பு சத்தியாகிரகம், 1930

சட்ட மறுப்பு இயக்கம் வாயிலாக, அரசியல் போராட்டம் மற்றும் ஆக்கப்பூர்வமான பணிகளை மேற்கொண்டு அதன் மூலம் பெறப்பட்ட அதிகாரத்தைக்கொண்டு இரட்டை ஆட்சியை ஒழிப்பதையே காங்கிரஸ் கட்சி நோக்கமாகக் கொண்டிருந்தது. 1930இல் கட்சியின் முடிவின் விளைவாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, சத்தியமூர்த்தி தலைமையில் சட்ட மறுப்பு போராட்டத்திற்காக ஓர் செயற்குழுவை அமைத்தது.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் C.ராஜகோபாலாச்சாரி, அதன் தலைமையகத்தை சென்னையிலிருந்து திருச்சிக்கு மாற்றி, அந்நகரை சட்ட மறுப்பு இயக்க செயல்பாடுகளின் மையமாக்கினார். கோடியக்கரை மணல் பகுதியில், ஓர் உப்பு ஆலை அருகே அமைந்திருந்த இடத்தில் உப்பு சட்டத்தை எதிர்த்து போராட்டம் நடத்த காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்தது. இந்தப் போராட்டத்தை C.ராஜகோபாலாச்சாரி வழிநடத்தினார். T.S.S.ராஜன் குழுத் தலைவராகவும், C.சாமிநாத செட்டி ஒருங்கிணைப்பாளராகவும் இருந்தனர். சட்டத்தை மீறி, ஆங்கிலேயர் அதிகாரத்தைப் புறக்கணித்து, தமிழ்நாட்டில் சட்ட மறுப்பு இயக்கத்தை துவக்குவது நோக்கமாக அமைந்தது.

13 மார்ச் 1930 அன்று திருச்சியில் ஒரு பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. C.ராஜகோபாலாச்சாரி மற்றும் T.S.S.ராஜன் இருவரும் உரையாற்றினர். ஆயிரம் தொண்டர்கள் முன்வந்தாலும், நூறு பேர் மட்டுமே வேதாரண்யம் செல்ல அனுமதிக்கப்பட்டனர். முன்னதாக நாட்டுப்பற்றுப் பாடலைகளை பாடியபடி ஒரு குழு நன்கொடை சேகரித்து சென்றது. முதல் பிரிவை C. ராஜகோபாலாச்சாரி வழிநடத்தினார். தமிழ் புத்தாண்டு மற்றும் ஜாலியன் வாலாபாக் தினமான ஏப்ரல் 13ஆம் தேதி உப்பு யாத்திரை செல்ல தீர்மானிக்கப்பட்டது. ஈழம், பர்மா, சென்னை, மற்றும் பாம்பேயிலிருந்து வந்த தொண்டர்கள் இணைந்துகொள்ள, தண்டியில் காந்தியடிகள் யாத்திரையுடன் ஒத்துப்போகும் வகையில் சத்தியாகிரக தொண்டர்கள் யாத்திரை மேற்கொண்டனர். நாமக்கல் V.ராமலிங்கம் பிள்ளை இந்த நிகழ்வுக்காக,

"கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது,
சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் ஒன்று சேருவீர்" எனும் பாடலை எழுதினார்.

ஆங்கிலேய அரசு சத்தியாகிரக தொண்டர்களுக்கு மக்கள் இடம் தரக்கூடாது என எச்சரித்தாலும், உப்பு சட்டத்தை மீறுவதற்குமுன் அவர்களை கைது செய்ய முற்படவில்லை. 14ஆம் தேதி மாலை 99 பேர் அடங்கிய முதல் பிரிவு கோவிலோடியை அடைந்தது. அங்கிருந்த சத்திரம் மூடப்பட்டிருக்கவே, அனைவரும் ஆற்றங்கரையில் தங்கினர். இராஜாஜி, ஐயங்கார் ஒருவர் வீட்டில் தங்கினார். திருவாடி, தஞ்சாவூர், மற்றும் கும்பகோணம் வழியே யாத்திரை சென்றது. இவர்களுக்கு இடம் அளித்தவர்கள் கைது செய்யப்பட்டனர். 30ஆம் தேதி, தொண்டர்கள் உப்பு சேகரித்தனர். இதையடுத்து, இராஜாஜி கைது செய்யப்பட்டு, திருச்சியில் ஆறு மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ராமேஸ்வரத்தில் உப்பு சேகரித்த தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர். ஓவரி, ஏஞ்சன்கோ, வேப்பலோடை, தூத்துக்குடி ஆகிய கடலோரப் பகுதியில் உப்பு சத்தியாகிரக முயற்சி மேற்கொள்ளப்பட்டாலும் அவை முறியடிக்கப்பட்டன. தொண்டர்கள் பின்வருமாறு உற்சாகமாகப் பாடினர்.

"நாம் யாத்திரை செல்வோம்,
உப்பு சத்தியாகிரக யாத்திரை செல்வோம்"





மதுரையில், 17 ஜூலை 1930 அன்று கள்ளுக்கடையில் தொண்டர்கள் போராட்டம் நடத்தினர். கூட்டத்தினர் கடைக்கு தீ வைக்க முயன்றதால், காவலர்கள் துப்பாக்கி சூடு நடத்தியதில், பல தொண்டர்கள் பலியானார்கள். 6 ஆகஸ்ட் 1930 அன்று மேலும் பலர் பலியானார்கள். திருப்பூரில், 11 ஜனவரி 1932 அன்று தேசியக்கொடி ஏந்தியபடி நாட்டுப்பற்று பாடல்களை பாடிச்சென்ற தொண்டர்கள்மீது காவலர்கள் தடியடி நடத்தினர். இதன் விளைவாக, திருப்பூர் குமரன் பலியானார். இதனிடையே ஆங்கிலேயர்கள் மக்கள் மத்தியில் பிரிவை உண்டாக்க முயன்றனர்.

காங்கிரஸ் தனிநபர் சத்தியாகிரகத்தை அறிமுகம் செய்தது. பல்வேறு மாவட்டங்களில் போராட்டக்காரர்கள் குழு அமைத்து, போருக்கு எதிரான பிரசுரங்களை விநியோகித்து, போர் எதிர்ப்பு கோஷங்களையும், ஜெர்மனி ஆதரவு கோஷங்களையும் எழுப்பினர். 26 ஜனவரி 1940 அன்று மக்கள் சுதந்திர தினத்தை பெரிய அளவில் கொண்டாடினர். தேசியக்கொடி ஏற்றி, ஆங்கிலேய ஏகாதிபத்திய கொடும்பாவி எரித்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். நிர்வாகம் தடியடி நடத்தி கைதுகளை மேற்கொண்டது.

தனிநபர் சத்தியாகிரகம் (1940-1941)

லின்லித்கோ பிரபு அளிக்க முன்வந்த ஆகஸ்ட் சலுகை அறிவிப்பு (8 ஆகஸ்ட் 1940), மகாத்மா காந்திக்கு ஏமாற்றம் அளித்தது. போர் சூழலுக்கு மத்தியில் மக்கள்திரள் சத்தியாகிரகத்தைவிட தனிநபர் சத்தியாகிரகமே நம்முடைய மறுப்பை உணர்த்த ஏற்றதாக இருக்கும் என அவர் கருதினார். தேசிய அளவில் முதல் சத்தியாகிரக தொண்டராக ஆச்சார்ய வினோபா பாவே மகாத்மா காந்தியால் தேர்வு செய்யப்பட்டார். தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்டு கைது செய்யப்பட்ட முதல் சத்யாகிரகி டாக்டர் T.S.S.ராஜன் ஆவார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக கு.காமராஜர் பொறுப்பேற்றுக்கொண்டு மாகாணம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, இவ்வியக்கத்தில் பங்கேற்கும் தொண்டர்கள் பட்டியலை தயாரித்தார். அவர் தயார் செய்திருந்த அதிகாரப்பூர்வ பட்டியலை காந்தியிடம் காண்பித்து ஒப்புதல் பெறுவதற்காக சென்ற வழியில் குண்டூர் இரயில் நிலையத்தில் கைது செய்யப்பட்டு, வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த செல்வாக்கு மிக்கவர்கள் பலர் இந்த சத்தியாகிரகப் போராட்டத்தில் பங்கேற்றனர்.



வெள்ளையனே வெளியேறு இயக்கம், 1942

கிரிப்ஸ் குழுவின் தோல்வியை அடுத்து மகாத்மா காந்தி, "செய் அல்லது செத்து மடி" என அறைகூவல் விடுத்தார். 9 ஆகஸ்ட் 1942 அன்று அரசு, காங்கிரஸ் முக்கியத் தலைவர்களை கைது செய்தது. மகாத்மா காந்தி மற்றும் இதர தலைவர்கள் ஒரே நேரத்தில் கைது செய்யப்பட்டு ரகசிய இடத்தில் சிறை வைக்கப்பட்டனர். தமிழ்நாட்டில், கு.காமராஜர், வேலூர் V.M. உபயதுல்லா, திருவண்ணாமலை N.அண்ணாமலை, C.N.முத்துரங்க முதலியார், M. பக்தவச்சலம், S. சத்தியமூர்த்தி ஆகியோர் கைது செய்யப்பட்டனர். பாம்பே கூட்டத்தில் பங்கேற்று சென்னை திரும்பியபோது இவர்கள் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டனர். தமிழ்நாட்டில் போராட்டம் தீவிரமாகவும் பரவலாகவும் இருந்தது. சாமானிய மக்கள், தொழிலாளர்கள், மற்றும் மாணவர்கள் இயக்கத்தில் பங்கேற்றனர். சென்னையில், பேரணிகள், வேலை நிறுத்தங்கள், கள்ளுக்கடை மறியல்கள் ஆகியவை நடத்தப்பட்டு, வெள்ளையனே வெளியேறு முழக்கங்கள் எழுப்பப்பட்டன. பொது அலுவலகங்கள் எரிக்கப்பட்டன. பக்கிங்காம் மற்றும் கர்நாட்டிக் மில் தொழிலாளர்கள், சென்னைத் துறைமுகம், மாநகராட்சி, மற்றும் மின்சார டிராம் தொழிலாளர்கள் ஆகியோர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். சூளையில் இருந்த கள்ளுக்கடை தீ வைக்கப்பட்டது. ஆற்காடு பகுதியில் போராட்டம் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் தீவிரமாக இருந்தன. போராட்டக்காரர்கள் தொலைபேசி மற்றும் தந்தி கம்பிகளை துண்டித்தனர், வேலூர் மற்றும் பனப்பாக்கத்தில் அரசு அலுவலகங்களுக்கு தீ வைத்தனர், ஆதிச்சனூர் அருகே சரக்கு ரயிலை கவிழ்த்தனர். செங்கல்பட்டு மற்றும் தென்னார்க்காடு பகுதிகளில் இதே போன்ற போராட்டம் நடைபெற்று, கிறிஸ்தவக் கல்லூரி, லயோலா கல்லூரி, மற்றும் அண்ணாமலை பல்கலைக்கழக மாணவர்கள் பங்கேற்றனர். கோயம்புத்தூரில் வேலைநிறுத்தம், முழு அடைப்பு மற்றும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. விமான நிலைய கூரைகள் தகர்க்கப்பட்டு, ரெயில்கள் தடம் புரள வைக்கப்பட்டன. கிராம அலுவலகங்கள், கள்ளுக்கடைகள் தீ வைக்கப்பட்டன. இருப்பினும், தென் மாவட்டங்களில் தான் போராட்டம் தீவிரமாக இருந்தது. தகவல் தொடர்பு சாதனங்களை துண்டித்ததோடு, அரசு அலுவலகங்கள்,

மற்றும் அதிகாரிகளைத் தாக்கினர். போராட்டத்தின்போது, நகராட்சி அலுவலகங்கள், பள்ளிக் கட்டிடங்கள், இரயில் நிலையங்கள், வன அலுவலகங்கள் ஆகியவை தீ வைக்கப்பட்டன. மதுரையில் காங்கிரஸ் தொண்டர்கள் இராணுவ அதிகாரிகளுடன் மோதலில் ஈடுபட்டனர், துப்பாக்கிச்சூட்டில் P.M.துரைசாமி நாடார் கொல்லப்பட்டார். ராஜபாளையம், தேவக்கோட்டை, காரைக்குடி, திருவாடனை, பூலாங்குறிச்சி ஆகிய இடங்களில் நடந்த துப்பாக்கிச்சூடு மேலும் பல உயிர்ப் பலிகளை உண்டாக்கியது. போராட்டத்தை அடக்குவதற்காக நிருவாகம் அடக்குமுறையை கையாண்டது. 1946இல் கேபினட் குழு இந்தியா வருகை தந்து, அரசியல் சூழலை ஆய்வு செய்து, காங்கிரஸ் தலைவர்கள், முஸ்லீம் லீக் தலைவர்களுடன் சுதந்திரம் தொடர்பான கேள்வியை விவாதித்தது. மாகாணங்கள் தன்னாட்சி பெற்றிருக்கும் வகையில் கூட்டமைப்பை ஏற்படுத்தலாம் என ஆலோசனை கூறியது. ஜூலை 1946இல், அரசியல் நிர்ணய சபை தேர்தல் நடைபெற்றது. செப்டம்பர் 2ஆம் தேதி, நேரு தலைமை யிலான இடைக்கால அரசு பதவியேற்றது. வற்புறுத்தலுக்குப் பிறகு லீக் அரசில் இணைந்தது. இருப்பினும் அரசியல் நிர்ணய சபையில் இணைய மறுத்துவிட்டது. பிரதிநிதி மவுண்ட்பேட்டன் பிரபு, நாட்டின் பிரிவினையை அறிவித்தார். மகாத்மா காந்தி மற்றும் பண்டிட் ஜவஹர்லால் நேரு இந்த அமைப்பிற்கு ஒப்புக்கொண்டனர். பிரிட்டன் நாடாளுமன்றம் இந்திய சுதந்திர சட்டத்தை நிறைவேற்றியது, இதன்படி, 15 ஆகஸ்ட் 1947 அன்று பிரிக்கப்பட்ட நாட்டிற்கு சுதந்திரம் அளிக்கப்பட்டது. கட்சிக்காரர்கள் கொடியேற்றி கொண்டாடி, கூட்டங்கள் நடத்தினர். தொழிலாளர்கள், மாணவர்கள் பேரணி நடத்தி ஆங்கில ஏகாதிபத்திய கொடும்பாவி எரித்தனர். இந்தியா சுதந்திரம் அடைந்ததை தமிழ்நாடு, உற்சாகத்துடனும், துடிப்புடனும், மகிழ்ச்சியுடனும் கொண்டாடியது. செயின்ட் ஜார்ஜ் கோட்டையில், ஆங்கிலேயக் கொடி இறக்கப்பட்டு, அசோக சக்கரத்துடன் கூடிய மூவர்ண தேசியக்கொடி ஏற்றப்பட்டது. சென்னை சட்டமன்றம், இந்தியாவுக்கு ஆட்சி அதிகாரம் மாற்றப்பட்டத்தை வரவேற்று தீர்மானம் நிறைவேற்றியது.

சுதந்திரப் போராட்டத்தில் பெண்கள் பங்கு

சுதந்திரப் போராட்டத்தில் பெண்களின் பங்கு மகத்தானது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்திய தேசிய காங்கிரஸ் சுதந்திரப் போராட்டத்தை வழிநடத்தி, அடக்குமுறையை எதிர்கொள்வதில் கவனம் செலுத்தியது. சரோஜினி நாயுடு, கமலா தேவி, சட்டோபாத்யாய், ராஜ்குமாரி, மற்றும் அம்ரித் கவுர் போன்ற பெண் அரசியல் செயல்பாட்டாளர்கள், எதிர்பாராமல் அரங்கேறிய நிகழ்வுகளில் நெருக்கமாக இணைந்து செயல்பட்டனர். இந்த நடவடிக்கைகளில் தமிழ் செயற்பாட்டாளர்கள் தங்களுக்கான அடிப்படை பங்கை எதிர்பார்த்தனர். ருக்மணி லட்சுமிபதி, அம்புஜம்மாள், ஞானம்மாள், பத்மாவதி ஆஷர், வை.மு.கோதைநாயகி அம்மாள், பத்மினி அம்மாள் ஆகியோர் தமிழக பெண் அரசியல் போராட்டக்காரர்களில் முக்கியமானவர்களாகத் திகழ்ந்தனர்.

1857 கிளர்ச்சிக்கான பெண்கள் பங்களிப்பில் ஜான்சி ராணி லட்சுமிபாய் ஓர் பெரும் நாயகியாக உருவெடுத்தார். தமிழ்நாட்டின் சிவகங்கை ராணி வேலு நாச்சியார் (1780–1790), இந்தியாவில் காலனித்துவ ஆட்சிக்கு எதிராகப் போராடிய முதல் ராணியாக திகழ்கிறார். தீவிர எதிர்ப்புணர்வின் உத்வேகம் ஆங்கிலேய வெற்றியால் ஒடுக்கப்பட்டாலும், அது முற்றிலுமாக மறைந்துவிடவில்லை. சொல்லப்போனால், வாய்ப்பு கிடைக்கும்போது காட்டுத்தீபோல பரவுவதற்காக மக்களின் மனதில் அது கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது.

1885இல் இந்திய தேசிய காங்கிரஸ் தொடங்கப்பட்டது. 1889 பம்பாய் அமர்வில், பத்து பெண்கள் பங்கேற்றனர். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் மத்திய வகுப்புப் பெண்கள் இடையே கல்வி வாய்ப்பு சாத்தியமானபோது, இந்தியாவில் பல பெண்கள் தங்கள் சமூக மற்றும் அரசியல் வாழ்வில் தீவிரம் காட்டினர். சுதேசி இயக்கத்தில் இணைந்து, இந்திய தேசிய காங்கிரசின் செயல்பாடுகளில் பல பெண்கள் பங்கெடுத்தனர்.

தமிழ்நாட்டின் சுதேசி இயக்கத்தில் அசலாம்பிகை அம்மாள், அகிலாண்டம்மாள் ஆகியோர் முக்கியப் பங்காற்றினர். சுதேசி இயக்கம் அமைதியான முறையில் ஓர் பெரும் தேசிய இயக்கமாக உருமாறிய பின்னர், சுதந்திரப் போராட்டத்தில் தன்னை வெற்றிகரமாக இணைத்துக் கொண்டது. மதராசில் அன்னி பெசன்ட் அம்மையார் தன்னாட்சி இயக்கத்தைத் துவக்கினார். இந்திய தேசிய இயக்கம் வாயிலாக பெண்களை விழிப்புணர்வு பெற வைக்கும் நோக்குடன், வேலைநிறுத்தங்கள், முழு அடைப்புகள் மற்றும் மாணவர்கள் போராட்டங்களை நடத்தினார்.

மகாத்மா காந்தியின் வருகை மற்றும் பெண்களுக்கு அவர் விடுத்த அழைப்பின் காரணமாக, இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பெண்கள் பெருமளவு பங்கேற்றது தேசியத் தலைவர்களின் புரிதலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. ஒத்துழையாமை இயக்கம் மற்றும் கிலாபத் இயக்கம், இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி தலைமையில் ஆங்கிலேயர்களுக்கு எதிரான பெண்களின் செயல்பாடுகளை விவரிக்கின்றன. கள்ளுக்கடை மறியல், வெளிநாட்டு துணிகள் புறக்கணிப்பு, பொதுக்கூட்டங்கள் போன்ற காங்கிரஸ் செயல்பாடுகளில் தமிழ்நாட்டுப் பெண்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். பெரியாரின் மனைவி நாகம்மாள் மற்றும் சகோதரி கண்ணம்மாள் இருவரும் தமிழ்நாட்டின் ஒத்துழையாமை இயக்கத்தில் முக்கிய பங்காற்றினர். இப்போராட்டத்தில் ஆண்கள் பங்கேற்கவும், அகிம்சை வழியிலான சத்தியாகிரகப் போராட்டம் வெற்றி பெறவும் பெண்கள் ஊக்குவித்தனர். இதனிடையே, தென்னார்க்காடு மாவட்டத்தில், சென்னையின் அஞ்சலை அம்மாள், அம்புஜம்மாள் அவரது மகள் அம்மாக்கன்னு ஆகியோர் காங்கிரஸ் கட்சியின் செயல்பாடுகளிலும், ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டங்களிலும் பங்கேற்றனர். அம்புஜம்மாளும் அவரது மகள் அம்மாக்கன்னுவும், நீல் சிலை சத்தியாகிரக்த்தில் பங்கேற்றதற்காக, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர்.

1930இல் சுதந்திரப் போராட்டத்தைத் தொடர, ஒத்துழையாமை இயக்கம் துவங்கப்பட்டபோது, போராட்டங்களில் பங்கேற்க மதராஸ் பெண்கள் மிகுந்த ஆர்வம் காட்டுவார்கள் என்பது தெளிவானது. ருக்மணி லட்சுமிபதி, லட்சுமி பாரதி, அம்புஜம்மாள், ஞானம்மாள் மற்றும் வை.மு.கோதைநாயகி அம்மாள் ஆகியோர் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றனர். பத்மாவதி ஆஷர், தேசியவாத இயக்கத்திலும், தனிநபர் சத்தியாகிரகத்திலும் முக்கியப் பங்காற்றினார். வெள்ளையனே வெளியேறு இயக்கத்திலும், இந்திய தேசிய இராணுவத்திலும் பங்கேற்ற பெண்கள் பலர் அவ்வியக்கங்களுக்குப் புத்தொளி பாய்ச்சினர். தமிழ்நாட்டில் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்ற அம்மு சாமிநாதன், ருக்மணி லட்சுமிபதி போன்ற பெண்கள் கைது செய்யப்பட்டனர். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் 1943இல் இந்திய தேசிய ராணுவத்தை துவக்கினார். லட்சுமி சேகல் இதில் முக்கியப் பங்கு வகித்தார். பெண்கள் பிரிவான ஜான்சி ராணி படைக்கு அவர் தலைமை தாங்கினார்.


மகாத்மா காந்தி 1943இல் மீண்டும் போராட்டங்களைத் துவங்கியபோது தமிழ்நாட்டிலும் அவை தொடரப்பட்டன. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவை 9 ஆகஸ்ட் 1944 அன்று தமிழ்நாட்டு மக்கள் கொண்டாடினர். மேலும்,

விடுதலைக்கு முன்பான சுதந்திரப் போராட்டத்தின் பல்வேறு கட்டங்களில் பெரும் எண்ணிகையிலான பெண்கள் வெவ்வேறு நடவடிக்கைகளில் பங்கேற்றதற்காக கைது செய்யப்பட்டு, சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர். பெண்களின் பங்களிப்புகள் குறிப்பிடப்படாமல், இந்தியா பெற்ற சுதந்திரம் முழுமை அடையாது. இவ்வாறாக இந்தியப் பெண்கள், குறிப்பாக தமிழ்நாட்டுப் பெண்கள், சுதந்திரப் போராட்டத்தில் முக்கியப் பங்காற்றி, தங்கள் உடல், பொருள், ஆவிகளை தியாகம் செய்தனர்.

தமிழ்நாட்டின் முன்னணி சுதந்திரப் போராட்ட வீரர்கள்

1. வீரபாண்டிய கட்டபொம்மன்

கட்டபொம்மன் என்றும் அழைக்கப்படும் வீரபாண்டிய கட்டபொம்மன், 18ஆம் நூற்றாண்டில் பாஞ்சாலங்குறிச்சியை ஆண்ட பாளையக்காரர் மற்றும் ஆங்கிலேயர்களை முதலில் எதிர்த்தவர்களில் ஒருவர். முதல் இந்திய சுதந்திரப் போர் 1857இல் வட இந்தியாவில் நடைபெறுவதற்கு 60 ஆண்டுகளுக்கு முன் அவர் ஆங்கிலேயர்களை எதிர்த்து போரிட்டார். கட்டபொம்மன், ஆங்கிலேயர்களுக்கு வரி செலுத்த மறுத்ததோடு, கிழக்கு இந்திய கம்பெனி ஆட்சியர் ஜாக்சனை சந்திக்கவும் மறுத்தார். இறுதியில், ராமநாதபுரம் சேதுபதி அரண்மனை ராமலிங்க விலாசத்தில் அவர் ஜாக்சனை சந்தித்தார். இந்த சந்திப்பு மோதலாக மாறி, கைகலப்பில் முடிந்தது. கம்பெனி படையின் துணை தளபதி கிளார்க் அதில் உயிரிழந்தார். கட்டபொம்மன் மற்றும் அவரது வீரர்கள் போரிட்டு விடுதலை பெற்றனர். ஆனால் கட்டபொம்மனின் செயலாளர் தானாபதி பிள்ளை சிறைப்பிடிக்கப்பட்டார்.




இந்த சம்பவம் தொடர்பான விசாரணைக் குழு ஜாக்சன் செய்தது தவறு என தீர்மானித்து அவரை பதவியில் இருந்து நீக்கியது. வீரபாண்டிய கட்டபொம்மனுடனான ஜாக்சனின் மோதல் கிழக்கு இந்திய கம்பெனி மொத்த நாட்டையும் படிப்படியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதை பாதிக்கும் என நினைத்து இவ்வாறு முடிவு செய்யப்பட்டது.

புதிய ஆட்சியர், 16 மார்ச் 1799 அன்றுகட்டபொம்மனை சந்திப்பிற்கு அழைத்தார். கடும் வறட்சியைக் காரணம் காட்டி வரி நிலுவையை செலுத்த முடியாது என கூறிய கட்டபொம்மன், ராமநாதபுரத்தில் தன்னிடமிருந்து பறிக்கப்பட்ட செல்வங்கள் திருப்பி அளிக்கப்பட வேண்டும் என்றார். சேதுபதி மன்னரின் அமைச்சரவை கம்பெனியின் எதிரிகளுடன் கட்டபொம்மன் சேர்வதை தடுக்க வேண்டும் என விரும்பிய ஆட்சியர், கட்டபொம்மன்மீது தாக்குதல் நடத்த தீர்மானித்தார். ஆங்கிலேயர்கள், கட்டபொம்மனுடன் நீண்ட காலமாக எல்லைப் பிரச்சனை தொடர்பாக மோதலில் இருந்த எட்டயபுரம் பாளையக்காரரை அவருக்கு எதிராகத் தூண்டிவிட்டு, போர் தொடுக்க செய்தனர்.

கட்டபொம்மன் ஆட்சியரை சந்திக்க மறுத்துவிட்டார். மேஜர் பானர்மன் தலைமையில் ராணுவம் பாஞ்சாலங்குறிச்சியின் நான்கு வாயில்களையும் முற்றுகையிட்டது. தென் பகுதியில் தளபதி காலின்ஸ் தாக்குதல் நடத்தினார். கோட்டையின் தென் பகுதிக் கதவுகள் திறக்கப்பட்டபோது கட்டபொம்மன் மற்றும் அவரது வீரர்கள் பின்பகுதியில் இருந்த ராணுவ வீரர்கள்மீது கடுமையான தாக்குதல் நடத்தி காலின்சை கொன்றனர். பெரும் சேதமடைந்த ஆங்கிலேய ராணுவம் பாளையங்கோட்டையிலிருந்து மேலும் வீரர்கள் மற்றும் ஆயுதங்கள் வர காத்திருந்தது. பீரங்கித் தாக்குதலை கோட்டை தாக்குப்பிடிக்காது என உணர்ந்த கட்டபொம்மன் அன்றிரவு அங்கிருந்து வெளியேறினார்.

கட்டபொம்மன் தலைக்கு விலை வைக்கப்பட்டது. தானாபதி பிள்ளை மற்றும் 16 பேர் சிறைப் பிடிக்கப்பட்டனர். தானாபதி பிள்ளை தூக்கிலிடப்பட்டு அவரது தலை மூங்கிலில் குத்தி பாஞ்சலங்குறிச்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டு எதிர்ப்பாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர். மற்றொரு கிளர்ச்சியாளரான சௌந்திர பாண்டிய நாயக்கர் கிராமத்தின் சுவர் ஒன்றில் மூளை சிதறடிக்கப்பட்டு கொடூரமாக கொல்லப்பட்டார். திருமயம், வீரசிலை, உள்ளிட்ட பல இடங்களில் பதுங்கியிருந்த கட்டபொம்மன் கடைசியாக கோலார்பட்டி ராஜகோபால நாயக்கரின் வீட்டில் தங்கியிருந்தபோது, ராணுவம் அந்த வீட்டை சுற்றி வளைத்தது. கட்டபொம்மன் மற்றும் சகாக்கள் அங்கிருந்து தப்பி புதுக்கோட்டை அருகே உள்ள திருக்களம்பூர் காட்டில் பதுங்கினர். கட்டபொம்மனைக் கைது செய்யுமாறு புதுக்கோட்டை மன்னருக்கு பானர்மன் உத்தரவிட்டார். கடுமையான போருக்குப்பிறகு கட்டபொம்மன் 19 அக்டோபர் 1799 அன்று சிறைப்பிடிக்கப்பட்டு கயத்தாரில் தூக்கிலிடப்பட்டார்.

கட்டபொம்மன், தமிழ் மக்களிடையே தோன்றிய தேச உணர்வின் முக்கிய திருப்புமுனையாக அமைந்தார். அவரது கதை பாடல்களாகவும், கதைகளாகவும் தமிழ்நாட்டில் இன்றளவும் கொண்டாடப்படுகிறது. ஆங்கிலேயர்களை ஆரம்பத்தில் எதிர்த்த சுதந்திரப் போராட்ட வீரர்களில் ஒருவராகவும், ஆங்கிலேயர்கள் சிப்பாய் கலகம் என அழைத்த, 1857இல் நடந்த முதல் சுதந்திரப் போருக்கான ஊக்கமாகவும் திகழ்ந்தவர் என்றும் கட்டபொம்மன் இன்று அரசால் அங்கீகரிகப்பட்டுள்ளார். 1974இல் தமிழ்நாடு அரசு புதிய நினைவுக்கோட்டை ஒன்றை அமைத்தது. இந்த நினைவகத்தின் சுவர்களில் அவரது வீரதீர சாகசங்கள் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. இவை அக்கால வரலாற்றை உணர்த்துகின்றன.



2. மருது பாண்டியர்

மருது பாண்டிய சகோதரர்கள் (சின்ன மருது, பெரிய மருது) தமிழ்நாட்டின் சிவகங்கையை 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆண்டார்கள். காலனியாதிக்க ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக 10 ஜூன் 1801 அன்று திருச்சி திருவரங்கம் கோயிலில் முதல் சுதந்திர அறைகூவல் விடுத்தவர்கள் அவர்களே. ராமநாதபுரம் அருகே உள்ள சமஸ்தானமான சிவகங்கையின் மன்னர், முத்து வடுகநாதர், இவர்களின் வீரம் பற்றி கேள்விபட்டு, ராமநாதபுரம் அரசரிடம் கூறி இவர்களை சிவகங்கை ராணுவத்தில் சேவையாற்ற கேட்டுக்கொண்டார். இதையடுத்து சிவகங்கை ராணுவ தளபதிகளாக அறிவிக்கப்பட்ட சகோதரர்கள் இந்திய ராணுவ வரலாற்றில் அழிக்க முடியாத தடம் பதித்தனர். 1772இல் கிழக்கு இந்தியா கம்பெனியின் ஆங்கிலேய ராணுவம், துணை நிலை படைத்தலைவர் பான் ஜோர் தலைமையில், காளையார்கோயில்மீது தாக்குதல் நடத்தியது. இப்போரில் மன்னர் முத்து வடுகநாதர் உயிரிழந்தார். எனினும், அவரது மனைவி வேலு நாச்சியார் மற்றும் மருது பாண்டியர்கள் தப்பித்து, மைசூர் ஹைதர் அலியால் ஆட்சி செய்யப்பட்ட திண்டுக்கல்லில் தஞ்சம் அடைந்தனர். ஹைதர் அலி அவர்களுக்கு எல்லாவிதத்திலும் ஆதரவளித்தார். கிழக்கிந்தியக் கம்பெனியின் பங்குதாரராக இருந்த ஆற்காடு நவாப், 8 ஆண்டுகளாக சிவகங்கை மக்களிடமிருந்து வரி வசூலிக்க முடியாமல் இருந்தார்.

வேலு நாச்சியாரிடமிருந்து வரி பாக்கியை பெற்றுக்கொண்ட பிறகு அவரை சிவகங்கை ஆட்சிப்பொறுப்பில் அமர்த்துவதாக அவர் ஒப்பந்தம் செய்து கொண்டார். மருது பாண்டியர்கள் 12,000 வீரர்களுடன் சிவகங்கையை தாக்கி ஆற்காடு நவாப் பகுதிகளை சூறையாடினர். 10 மார்ச் 1789 அன்று நவாப் சென்னை மன்றத்திடம் உதவி கோரினார். ஏப்ரல் 29ஆம் தேதி ஆங்கிலேயப் படைகள் கொல்லங்குடியைத் தாக்கியது. மருது பாண்டியர்களின் படை அவர்களை தோற்கடித்தது. அவர்கள் பாஞ்சாலங்குறிச்சியின் வீரபாண்டிய கட்டபொம்மனுடன் நெருக்கமாக இருந்தனர். கட்டபொம்மன் அவர்களுடன் அடிக்கடி ஆலோசனை நடத்தினார். 17 அக்டோபர் 1799 அன்று கயத்தாறில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட பிறகு, சின்ன மருது, கட்டபொம்மனின் சகோதரர் ஊமைத்துரைக்கு அடைக்கலம் அளித்தார். எனினும் ஆங்கிலேயர்கள் இதை ஒரு காரணமாக வைத்துக்கொண்டு 1801இல் வலுவான ராணுவத்துடன் சிவகங்கையைத் தாக்கினர். மருது பாண்டியர்கள் மற்றும் சகாக்கள் ஆங்கிலேயர்களின் மூன்று மாவட்டங்களைக் கைப்பற்றினர். இதை இந்தியாவில் தங்கள் எதிர்காலத்திற்கு ஏற்பட்ட அச்சுறுத்தலாகப் பார்த்த ஆங்கிலேயர்கள், மருது பாண்டியர்கள் கிளர்ச்சியை அடக்க மேலும் படையை அனுப்பினர். காளையர்கோவிலில் மருது பாண்டியர் சகோதரர்களை ஆங்கிலேயப் படைகள் சூழ்ந்து கொண்டன. மருது பாண்டியர்கள் மற்றும் தளபதிகள் தப்பித்துச்சென்றனர். அவர்கள் மீண்டும் ஒன்று சேர்ந்து, விருப்பாட்சி, திண்டுக்கல், சோழபுரம் ஆகிய இடங்களில் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போரிட்டனர். விருப்பாட்சியில் வெற்றி பெற்றவர்கள் மற்ற இரண்டு இடங்களில் தோல்வி அடைந்தனர். மருது

பாண்டியர்கள் மற்றும் குடும்பத்தினர் சோழபுரத்தில் சிறைப்பிடிக்கப்பட்டு 24 அக்டோபர் 1801 அன்று தூக்கிலிடப்பட்டனர்.

3. வ.உ.சிதம்பரம் பிள்ளை

தூத்துக்குடி மற்றும் கொழும்பு இடையே கப்பல்களை இயக்கிய சுதேசி நீராவி கப்பல் நிறுவனத்தைத் துவக்கி நடத்திய சுதந்திரப் போராட்ட வீரரும், அரசியல் தலைவருமான வள்ளிநாயகம் உலகநாதன் சிதம்பரம், 'கப்பலோட்டிய தமிழன்' எனப் போற்றப்படுகிறார். ஆங்கிலேயர் காலத்தில் இப்படி மேற்கொள்ளப்பட்ட முதல் தொழில்முறை முயற்சி இது. அவர் பாரிஸ்டரான தனது தந்தையைப் பின்பற்றி வழக்கறிஞரானார். வழக்கறிஞர் தொழில் தவிர, அவர் தீவிர தமிழ் அறிஞர் மற்றும் எழுத்தாளராக இருந்தார். 1905 வரை அவரது தொழில்முறை செயல்பாடுகள் மற்றும் பத்திரிகையாளர் பணி பெரும்பாலான நேரத்தை எடுத்துக்கொண்டது. 1905 வங்காளப் பிரிவினையே அவரை அரசியலில் ஈடுபட வைத்தது. இந்திய தேசிய காங்கிரசில் இணைந்தவர் சுதேசி இயக்கத்தில் ஆர்வத்துடன் ஈடுபட்டார். பாலகங்காதர திலகரை தனது குருவாக ஏற்றுக்கொண்டவர் அவரது புகழ்பாடும் வாழ்க்கை வரலாற்றை தமிழில் எழுதினார். ராமகிருஷ்ணா மிஷனின் ஸ்ரீராமகிருஷ்ணானந்தா தான் இந்திய, இலங்கை கடல் பகுதியில் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திற்கு சவால் விடும் எண்ணத்தை அவரிடம் விதைத்தார். 1906இல் சுதேசி கப்பல் நிறுவனத்தை துவக்கிய வ.உ.சி தூத்துக்குடி இலங்கை இடையே கப்பல்களை இயக்கி ஆங்கிலேய கப்பல் நிறுவனத்துக்குப் போட்டியாக திகழ்ந்தார். ஆங்கிலேயர் அளித்த அதே கட்டணத்தில் பயணச்சீட்டுகளை அளித்தார். அவர் சொந்தமாக இரண்டு கப்பல்களை வாங்க தீர்மானித்தபோது, இந்த வெற்றி ஆங்கிலேயர்களை எரிச்சலடைய வைத்தது.

1908 பிப்ரவரி 27ஆம் தேதி, வ.உ.சி. தனது நண்பர்கள் பத்மனாப ஐயங்கார், சுப்பிரமணிய சிவா ஆகியோருடன் இணைந்து, ஆங்கிலேயர்களுக்கு சொந்தமான தூத்துக்குடி கோரல் ஆலையில் தொழிலாளர்களின் மோசமான நிலையை எதிர்த்து வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தினார். தேசியவாதத் தலைவர்கள், தூத்துக்குடி மக்களின் ஆதரவோடு, நெல்லை சிறையிலிருந்து பி.சி.லால் விடுதலை செய்யப்படுவதை கொண்டாடும் வகையில் மாபெரும் பேரணி நடத்தி சுதந்திரக்கொடி ஏற்ற 9 மார்ச் 1908 அன்று தீர்மானித்தனர்.



இதை அறிந்த ஆங்கிலேய அதிகாரிகள், மார்ச் 12ஆம் தேதி வ.உ.சி, சுப்பிரமணிய சிவா மற்றும் ஐயங்காரை கைது செய்து மாவட்ட சிறையில் அடைத்தனர். தங்கள் தலைவர்கள் சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டதால் கொதித்துப்போன நெல்லை மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டபோது மாவட்டத்தில் கலவரம் வெடித்தது. இன்று வரை, மார்ச் 13ஆம் தேதியை நெல்லை மக்கள், திருநெல்வேலி எழுச்சி தினமாகக் கொண்டாடுகின்றனர்.

மூன்று வீரர்களும் விடுதலை செய்யப்பட்ட பிறகு வ.உ.சி மற்றும் சுப்பிரமணிய சிவா மீண்டும் தேசத்துரோக வழக்கை எதிர்கொண்டனர். நீதிமன்றத்தில் இருவருக்கும் இருபது ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டது. பல்வேறு மேல் முறையீடுகளுக்குப் பிறகு வ.உ.சிக்கு தண்டனை ஆறு ஆண்டுகளாகவும், சிவாவுக்கு 3 ஆண்டுகளாகவும் குறைக்கப்பட்டது. கோவை சிறையில் வ.உ.சி மனிதாபிமானமற்ற முறையில் கொடுமைப்படுத்தப்பட்டார். செக்கிழுக்க வைக்கப்பட்டார். 1912இல் அவர் விடுதலையானபோது, அவரது கப்பல் நிறுவனம் ஆங்கிலேயர்களால் கையகப்படுத்தப்பட்டிருந்தது. அவரது பாரிஸ்டர் பட்டமும் பறிக்கப்பட்டு, வறுமை நிலைக்கு தள்ளப்பட்டார்.

4. சுப்பிரமணிய சிவா



சுப்பிரமணிய சிவா என அன்போடு அழைக்கப்பட்ட சுப்பிரமணிய சிவம், ராஜம் ஐயர் நாகலட்சுமி தம்பதிக்கு திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள வத்தலகுண்டுவில் 1884இல் பிறந்தார். இளம் வயதிலேயே அவருக்கு ஆன்மிகத்தில் நாட்டம் இருந்தது. ஊதா சாமி என அழைக்கப்பட்ட தனது தாய் மாமாவின் தீவிர சீடரானார். அவரது குடும்ப சூழ்நிலை காரணமாக மாவட்ட நீதிமன்றத்தில் குமாஸ்தாவாக பணிக்குச் சேர்ந்தவர் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்பதற்காக அந்த வேலையையும் துறந்தார். மிகச்சிறந்த பேச்சாளரான சிவா தனது மனதின் கருத்துக்களை வெளிப்படையாகப் பேசினார். இன்னல்களை உறுதியுடனும், சமரசம் இல்லாமலும் எதிர்கொள்ள வேண்டும் எனும் பாலகங்காதர திலகரின் கொள்கை அவருக்கு ஏற்புடையதாக இருந்தது.

சில நண்பர்கள் அவரை, தனது சொந்த கப்பல் கம்பெனி மூலம் ஆங்கிலேயர்களுக்கு சவால் விடும் துணிவும், நிர்வாகத்திறனும் பெற்றிருந்த வ.உ.சிக்கு அறிமுகம் செய்து வைத்தனர். இதையடுத்து வ.உ.சியின் நெருக்கமான நண்பராக மாறிய சிவா, அவரது கப்பல் நிறுவன செயல்பாடுகளுக்கு வெளிப்படையாக ஆதரவு திரட்டியதோடு, தொழிற்சங்கத் தலைவராக இருந்து அவரது பணிக்கும் ஆதரவு தெரிவித்தார்.

9 மார்ச் 1908 அன்று, மாவட்ட ஆட்சியர் வெய்ன்ச் உத்தரவை மீறி, கொல்கத்தாவின் பிபின் சந்திர பால் விடுதலையை கொண்டாடும் வகையில் நடந்த பேரணியில் பங்கேற்றனர். கைது செய்யப்பட்டு அவர்கள்மீது வழக்கு தொடரப்பட்டது. பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டு மார்ச் மாத இறுதியில் விடுதலை ஆனார்கள்.

இருப்பினும், சிவா மற்றும் வ.உ.சி ஆகியோரின் அனல் கக்கும் பேச்சுகளால் கொதிப்படைந்த ஆங்கிலேய அரசு, நாடு முழுவதும் இத்தலைவர்களுக்கு கிடைத்த ஆதரவு குறித்து கவலைப்படாமல், இருவர் மீதும் தேசத்துரோக வழக்கு தொடர்ந்து, 20 மற்றும் 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்தது. மேல்முறையீட்டில் வ.உ.சிக்கு 6 ஆண்டுகளாகவும், சிவாவுக்கு 3 ஆண்டுகளாகவும் தண்டனை குறைக்கப்பட்டது. கோயம்புத்தூர் சிறையில் இவர்கள் கடுமையாக நடத்தப்பட்டனர். சிறையில் சிவாவுக்கு தொழுநோய் பாதிப்பு உண்டானது. இதனால் அவர் தனது பயணங்கள் மற்றும் பேச்சுகளை குறைத்துக்கொள்ள நேர்ந்தது. இருப்பினும், நாட்டுப்பற்று காரணமாக தன்னால் இயன்றவரை தொடர்ந்து மக்களை ஈர்க்கும் வண்ணம் அவர் செயலாற்றினார்.

5. வாஞ்சிநாதன்



திருவிதாங்கூரில் மகிழ்ச்சியாக குடும்ப வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தபோது, வாஞ்சிநாதன், ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஒடுக்கப்பட்டவர்கள் உரிமைக்காக வ.உ.சிதரம்பரம் பிள்ளை போராடுவது பற்றி கேள்விப்பட்டார். ஆங்கிலேய ஏகபோகத்தை எதிர்த்து கப்பல் நிறுவனம் நடத்தியது, தூத்துக்குடி கோரல் ஆலைத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டது மற்றும் குறைவான ஊதியமளித்த ஏ & எப் ஹார்வி நிறுவனத்துக்கு எதிராக நடத்திய வேலைநிறுத்தப் போராட்டம் போன்ற வ.உ.சியின் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்ட இந்த இளைஞர் அவரை தீவிரமாகப் பின்பற்றத் துவங்கி தானும் சுதந்திரப் போராட்ட வீரராக கனவு கண்டார்.

1906 முதல் 1908 வரை, வ.உ.சி மற்றும் ஆங்கிலேய கப்பல் நிறுவனங்களுக்கிடையில் பலத்த போட்டி ஏற்பட்டபோது, நெல்லை, தூத்துக்குடி பகுதியின் துணை ஆட்சியராக ஆஷ் நியமிக்கப்பட்டார். சுதேசி கப்பல் நிறுவனத்தை செயலிழக்கச் செய்யும் வகையில் தன்னால் இயன்ற அனைத்துப் பணிகளையும் ஆஷ் மேற்கொண்டதாக கூறப்படுகிறது. மேலும், ஏ & எப் ஹார்வி நிறுவனப் போராட்டத்தின் போது ஆஷ் நிறுவனத்தை ஆதரித்தார். வ.உ.சி. கைதை அடுத்து நடைபெற்ற போராட்டத்தை கலைக்க ஆஷ் கண்டதும் சுட உத்தரவிட்டதாகவும் கூறப்படுகிறது. இக்காரணங்களுக்காகவே ஆஷை கொல்ல வாஞ்சிநாதன் முடிவெடுத்திருக்க வேண்டும். 1910இல் ஆங்கிலேயர்களுக்கு எதிரான சதித் திட்டங்களை மேற்கொள்வதற்காக சென்னை மாகாணத்தில் தொண்டர்களை திரட்டுவதில் ஈடுபட்ட நீலகண்ட பிரம்மச்சாரியால் இப்படுகொலை திட்டமிடப்பட்டது.

இத்திட்டத்தில், இருவரையும் பரஸ்பரம் அறிமுகம் செய்த, வாஞ்சிநாதனின் மைத்துனர் சங்கர் ஐயரும் அவருடன் இணைந்து செயல்பட்டார். அப்போது, வாஞ்சிநாதன் சுதந்திரத்திற்காக ஆயுதப் போராட்ட முயற்சியைத் துவக்கியிருந்தார். நீலகண்ட பிரம்மச்சாரி, வாஞ்சிநாதன், சங்கர் ஐயர் மற்றும் சிலருடன் இணைந்து பாரதமாதா சங்கம் என்னும் அமைப்பை அவர்கள் தொடங்கினர். இவ்வமைப்பே, செல்வாக்கு வாய்ந்த ஆங்கிலேயர்களை கொல்ல சதித் திட்டம் தீட்டியது. 1911 ஜனவரி துவக்கத்தில்


வாஞ்சிநாதன் மூன்று மாத விடுப்பு எடுத்துக்கொண்டு பாண்டிச்சேரியில் வ.வே.சு. ஐயரை சந்தித்தபோது கொலைக்கான ஏற்பாடுகள் துவங்கின. ஆங்கிலேயர்களுக்கு எதிரான பல்வேறு சதிகளில் தொடர்புடையவராக கூறப்பட்ட வ.வே.சு. ஐயர், வாஞ்சிநாதனுக்கு துப்பாக்கி சுடுவது உள்ளிட்டவற்றைக் கற்றுத்தந்தார்.

வ.உ.சி கைது மற்றும் தொடர்ந்து நடைபெற்ற போராட்டத்திற்காக ஆஷை கொலை செய்ய இருப்பதாக வ.வே.சு. ஐயரிடம் வாஞ்சிநாதன் ஒப்புக்கொண்டார். சில மாதங்களுக்குப் பிறகு, வாஞ்சிநாதனின் குழந்தை இறந்துவிட்டது. இறுதிச்சடங்கில் வாஞ்சிநாதன் பங்கேற்கவில்லை. ஆஷ் நெல்லைக்கு பொறுப்பு வகிக்கும் ஆட்சியராக பதவி உயர்வு பெற்றார். எல்லாம் தயாரானது. 11 ஜூன் 1911 என்கிற நாள் குறிக்கப்பட்டது. தற்செயலாக, ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் முடி சூட்டும் விழாவும் அன்று திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், என்ன காரணத்தினாலோ அன்றைய தினம் எந்த முயற்சியும் நடைபெறவில்லை. 17 ஜூன் 1911 அன்று இரண்டாவது முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அன்று, ஆஷ், மனைவி மேரியுடன் திருநெல்வேலியிலிருந்து கொடைக்கானலுக்கு தனது குழந்தைகளை பார்க்கச் சென்றார். வாஞ்சிநாதன் மற்றும் பாரதமாதா சங்கத்தைச் சேர்ந்த மூன்று பேர் அவர் சென்ற அதே இரயிலில் ஏறிக்கொண்டனர். காலை 9.30 மணிக்கு இரயில் மணியாச்சியை அடைந்தது. இரயில் நின்றதுமே, ஆஷ் மற்றும் அவர் மனைவி பயணம் செய்த முதல் வகுப்புப் பெட்டியில் வாஞ்சிநாதன் ஏறிக்கொண்டார். ஆஷை துப்பாக்கியால் சுட்டுவிட்டு, இரயிலிலிருந்து குதித்து ரயில் நிலையக் கழிவறைக்குச் சென்று, தன்னைத்தானே சுட்டுக்கொண்டார். காவலர்கள் வந்தபோது ஆஷ் மற்றும் வாஞ்சிநாதன் இறந்து கிடந்தனர். வாஞ்சிநாதன் சட்டைப் பையில், R.வாஞ்சி ஐயர், செங்கோட்டை என கையெழுத்திட்டிருந்த கடிதத்தை காவலர்கள் கண்டெடுத்தனர்.

6. கொடி காத்த குமரன்

1932இல் மகாத்மா காந்தி பம்பாயில் ஓர் ஆர்ப்பாட்டத்தை நடத்தியபோது, அவரை கைது செய்து சிறையில் அடைக்க ஆங்கிலேயர்கள் தீர்மானித்தனர். இதையடுத்து நாடு முழுவதும் போராட்டங்களும், கலவரங்களும் வெடித்தன. திருப்பூரில் தியாகி P.S.சுந்தரம் தலைமையில் நாட்டுப்பற்று பேரணி நடைபெற்றது.

அச்சமயம், தடை விதிக்கப்பட்டிருந்த தேசியக் கொடிகளை மக்கள் கைகளில் ஏந்தியிருந்தனர். போராட்டத்தில் தேசியக் கொடியோடு பங்கேற்றவர்களில் திருப்பூர் குமரனும் ஒருவர்.



தமிழ்நாட்டின் தற்போதைய ஈரோட்டில் இருக்கும் சென்னிமலையைச் சேர்ந்தவர் O.K.S.R.குமாரசாமி முதலியார். நாட்டில் சுதந்திர இயக்கம் தீவிரமடைந்த காலத்தில், குமாரசாமியும் அதன் தாக்கத்தை உணர்ந்தார். மகாத்மா காந்தியின் கொள்கைகள், இலட்சியங்களால் ஈர்க்கப்பட்ட குமாரசாமி, மகாத்மா காந்தி முன்னின்று நடத்திய போராட்டங்களில் பங்கேற்க முடிவு செய்தார். போராட்டத்தில் பங்கேற்ற பல புரட்சியாளர்களில் ஒருவராக இருந்தாலும் அவர் தனது முத்திரையைப் பதித்தார். அன்று முதல் திருப்பூர் குமரன் என அன்போடு

அழைக்கப்பட்டார். தேசபந்து இளைஞர் சங்கம் என்னும் அமைப்பையும் அவர் நிறுவினார். 11 ஜனவரி 1932 அன்று, ஆங்கிலேயர்கள் போராட்டக்காரர்கள்மீது தடியடி நடத்தியபோதும், குமரன் அங்கிருந்து வெளியேறவில்லை. காவலர்கள், போராட்டக்காரர்களை பலமாக தாக்கிய நிலையில் குமரன் அவர்களிடையே சிக்கி கொண்டார். பலத்த காயமடைந்து கீழே விழுந்தபோதும், தேசியக்கொடியை விடாமல் ஏந்திக் கொண்டிருந்தார்.

7. சி.விஜயராகவாச்சாரியார்



1885இல் இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவப்பட்டபோது, சிறப்பு அழைப்பாளர்களில் ஒருவராக விஜயராகவாச்சாரியார், காங்கிரசின் நிறுவனர்களில் ஒருவரான A.O.ஹியூமின் நெருக்கமான சகாவாக இருந்தார். காங்கிரசின் பம்பாய் கூட்டத்தில் பங்கேற்ற அவர், 1887இல் காங்கிரஸ் கட்சியின் அடிப்படை விதிகளை வகுத்த குழுவின் உறுப்பினர்களில் ஒருவராக விளங்கினார். அன்று முதல், விஜயராகவாச்சாரியார் தீவிர சுதந்திரப் போராட்ட வீரராக செயல்பட்டார். 1895இல், சென்னை சட்டமன்றத்திற்கு தேர்வான அவர், 1901 வரை ஆறு ஆண்டுகள் பதவி வகித்தார். 1913இல் நாடாளுமன்ற அவைக்கு தேர்வு செய்யப்பட்டவர் 1916 வரை அதில் பதவி வகித்தார். இந்தியாவுக்கான உள்துறை அமைச்சர் பிர்கென்ஹெட், இந்தியர்களால் அரசியல் சாசனத்தை உருவாக்க முடியுமா என சவால் விடுத்தபோது, விஜயராகவாச்சாரியார் அதை ஏற்றுக்கொண்டு சுயராஜ்ய அரசியல் சாசனத்தை உருவாக்கிக் காட்டினார்.

மகாத்மா காந்தியின் வருகைக்குப் பிறகு காங்கிரசில் மிதவாதிகள் மற்றும் புதிய புரட்சியாளர்கள் இடையே மோதல் உண்டானது. அதற்கு முன்பும்கூட மிதவாத சிந்தனைகள் விஜயராகவாச்சாரியாருக்கு ஏற்புடையதாக இல்லை. காங்கிரசின் சூரத் பிளவுக்கு பிறகு சில காலம் அவர் கட்சி நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டாமல் இருந்தார். அதன் பிறகு மீண்டும் இணைந்து மகாத்மாவின் கொள்கைகளை இருமடங்கு உற்சாகத்தோடு பரப்பினார். 1920இல் நாக்பூர் காங்கிரஸ் மாநாட்டில் அவர் தலைவராக தேர்வு செய்யப்பட்டபோது அவரது அரசியல் வாழ்க்கை உச்சத்தைத் தொட்டது. இந்த மாநாட்டில்தான், அகிம்சை, ஒத்துழையாமை வழிகளில் பூர்ண சுதந்திரத்தை அடைவது என்னும் மகாத்மா காந்தியின் கருத்து விவாதத்திற்குப்பின் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1929இல் சைமன் குழு வருகைக்கு எதிர்ப்பு தெரிவிப்பதில் முன்னிலை வகித்தார். மேலும், மோதிலால் நேரு தலைமையில் இந்திய அரசியல் சாசனத்தை உருவாக்கிய குழுவில் அவர் முக்கியப் பங்கு வகித்தார்.

8. வரதராஜுலு நாயுடு

வரதராஜுலு நாயுடு இளம் வயதிலேயே அரசியலில் ஈடுபட்டு, இந்திய தேசிய காங்கிரசில் இணைந்த அவர், 1917இல் தனது மருத்துவத் தொழிலை

கைவிட்டார். தன்னாட்சி இயக்கத்தில் பங்கேற்ற அவர், சேரன்மாதேவி பள்ளி சர்ச்சையின்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருந்தார்.



வ.வே.சு.ஐயர் நடத்திய குருகுலத்தில் பிராமணர்களுக்கும், பிராமணர் அல்லாதவர்களுக்கும் தனித்தனியே உணவுப் பரிமாறப்பட்டதை பெரியார் மற்றும் கலியாணசுந்தரத்துடன் இணைந்து அவர் கடுமையாக எதிர்த்தார். இவ்விஷயம் மகாத்மா காந்தியின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு ஐயர் ராஜினாமா செய்தார். இது குறித்து விவாதிக்க 1925 ஏப்ரலில் காங்கிரஸ் கமிட்டி கூடியபோது, காங்கிரஸ் இப்பிரச்சனையில் தலையிடக்கூடாது, அப்பள்ளியே இவ்வழக்கத்தைக் கைவிடுமாறு அறிவுறுத்தப்பட வேண்டும் என்னும் இராஜாஜி மற்றும் ராஜனின் யோசனை ஏற்கப்படவில்லை.

பிறப்பின் அடிப்படையில் பட்டம் வழங்குவதை தேசியவாத கட்சிகள் கடைப்பிடிக்க கூடாது என்னும் தீர்மானம் ராமநாதனால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. சாதியப் பாகுபாடுகளைக் களைய வேண்டுமானால் அதை வற்புறுத்தலின் மூலம் செய்ய முடியாது என எதிர்ப்பு தெரிவித்து ராஜகோபாலாச்சாரி மற்றும் அவரது ஆதரவாளர்கள் ஆறு பேர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலிருந்து விலகினர். எனினும், பெரியார் காங்கிரசை விட்டு விலகிய நிலையிலும் வரதராஜுலு காங்கிரசில் தொடர்ந்தார். பின்னர் அவர் சென்னை மாகாணத்தில் நடைபெற்ற ஆலய நுழைவுப் போராட்டங்களில் தீவிரமாகப் பங்கேற்றார்.

9. ஈ.வே.ரா.பெரியார்

1920இல் ஈ.வே.ரா. காங்கிரஸ் கட்சி உறுப்பினராக இணைந்தார். அவர் கட்சியில் இணைந்தது தற்செயலான திடீர் நிகழ்வு அல்ல. சிறுவயது முதல் காங்கிரஸ் செயல்பாடுகளையும் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக மக்கள் மத்தியில் அக்கட்சி உண்டாக்கிய நாட்டுப்பற்று உணர்வுகளையும் குறித்து அவர் அறிந்திருந்தார். 1914 முதல் ஈரோடு மற்றும் சென்னையில் நடைபெற்ற பல்வேறு காங்கிரஸ் கூட்டங்களில் அவர் கலந்து கொண்டு பேசியிருக்கிறார். தன்னாட்சி இயக்கத்திற்கான ஆதரவு மற்றும் அதைத்தொடர்ந்து 1917இல் மதராஸ் மாகாண சபையின் நிறுவன உறுப்பினரானது போன்றவை அவருடைய தீவிர அரசியல் செயல்பாட்டின் துவக்கமாக அமைந்தது.

1920இல் காங்கிரஸ் கட்சியுடனான அவரது தொடர்பு உறுதியானது. நீதிக்கட்சியின் ஆங்கில ஆதரவு நிலைப்பாட்டிற்கு மாறாக, நாட்டுப்பற்று உணர்வோடு, சமூக நீதிக்கும் ஆதரவாக இருந்ததால் ஏற்கனவே அவருக்கு காங்கிரஸ்மீது ஆர்வம் இருந்தது. காங்கிரசின் சகோதர அமைப்பான இதன் உறுப்பினர்கள் தீவிர காங்கிரஸ் ஆதரவாளர்களாகவும் இருந்தனர். காங்கிரசில் இணைந்த குறுகிய காலத்தில், 1920இல், அவர் தமிழ்நாடு கிளையின் தலைவரானார்.



1920 முதல் 1925 வரை பெரியார் காங்கிரஸ் கட்சியில் தீவிர உறுப்பினராகவும், ஈடுபாடுமிக்க செயற்பாட்டாளராகவும் விளங்கினார். இக்குறுகிய காலத்தில், தனது தகுதி மற்றும் திறமையால் சாதாரண உறுப்பினரிலிருந்து தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் முன்னணி தலைவர்களில் ஒருவராக உயர்ந்து, கட்சி வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றினார். 1920 முதல் 1924 வரை, அவர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக செயல்பட்டார், 1921 முதல் 1922 வரை செயலாளராகப் பணியாற்றினார். 1924இல் திருவண்ணாமலையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு தலைமை வகித்தார். மேலும் பல மாவட்ட மாநாடுகளுக்கு தலைமை வகித்தார். தீவிர கதர் பிரச்சாரத்தின்போது, அகில இந்திய நூற்பாளர்கள் சங்கத்தின் தமிழ்நாடு பிரிவுக்கு அவர் தலைவராக தேர்வு செய்யப்பட்டது, கதர் பொருட்கள் விற்பனையை ஊக்குவித்து, மக்கள் வெளிநாட்டு உடைகளை புறக்கணிக்க தூண்டும் விதமாக அமைந்தது. ஒத்துழையாமை இயக்கம் 1920–1921, நிதான இயக்கம் 1922, கதர் இயக்கம் 1922–1924, மற்றும் வைக்கம் சத்தியாகிரகம் 1924–1925 ஆகியவற்றில் அவரது பங்களிப்பு தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி வளர்ச்சிக்கு உதவியதோடு, கட்சியில் அவரது பிம்பம் மற்றும் நிலையை வலுவாக்கியது.

தியாக உள்ளம் கொண்ட தேசப்பற்றாளரான வ.வே.சு. ஐயர் 1922இல் கள்ளிடைக்குறிச்சியில் குருகுலம் ஒன்றை துவக்கி பின்னர் சேரன்மாதேவிக்கு அதை மாற்றினார். திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்த இந்த இரண்டு இடங்களுமே பிராமண கலாச்சாரம் மற்றும் கல்விக்காக அறியப்படுபவை. ஒத்துழையாமை இயக்கம் மற்றும் சுதேசி இயக்கத்தின்போது அந்நிய ஆட்சிக்கு எதிராக இப்பள்ளி தோற்றுவிக்கப்பட்டது. இளைஞர்களுக்கு ஆன்மிக கல்வி அளித்து, அவர்களுக்குள் நாட்டுப்பற்றை விதைத்து, நாட்டிற்கு பயன்மிக்க பரந்த உள்ளம் கொண்டவர்களாக உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. இப்பள்ளியில், அதன் தலைவர் வ.வே.சு. ஐயர் அனுமதியுடன் பிராமணர்களுக்கும், பிராமணர் அல்லாதவர்களுக்கும் தனித்தனியே உணவு பரிமாறப்பட்டது. இந்த அநீதி மற்றும் பாகுபாடு தொடர்பாக காங்கிரஸ் கட்சி செயலாளர் என்ற முறையில் பெரியாருக்கு தொடர்ந்து புகார்கள் வந்தன. குருகுலத்திற்கு எதிரான இப்புகார்கள் குறித்து விசாரிக்க அவரால் அமைக்கப்பட்ட குழு, இந்த நடைமுறை இருப்பதை உறுதிப்படுத்தியது. பெரியார், வரதராஜுலு நாயுடு, S.ராமநாதன், V. கலியாணசுந்தரம் மற்றும் இதர பிராமணர் அல்லாத தலைவர்கள், இப்பள்ளியின் நிதி, பிராமணர் அல்லாத கொடையாளர்கள் மற்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நன்கொடையை சார்ந்திருப்பதாலும், காங்கிரஸ் உன்னதமான லட்சியங்களைக் கொண்டிருப்பதாலும் இத்தகைய சமூக வேறுபாடுகளை ஊக்குவிப்பது முறையாக இருக்காது என்றும், அப்பள்ளியில் படிக்கும் பிற மாணவர்கள் மத்தியில் தாழ்வு மனப்பான்மையை உண்டாக்கும் என்றும் வாதிட்டனர். இராஜாஜி, K. சந்தானம், T.S.S. ராஜன், விஜயராகவாச்சாரியார், மற்றும் பலர் வ.வே.சு. ஐயருக்கு ஆதரவு தெரிவித்தனர். குறுகிய காலத்தில் இத்தகைய பழமையான பழக்கங்களை அகற்றுவது கடினம் என்றும், இதற்கு அதிரடியான சமூக சீர்த்திருத்தங்கள் தேவை என்றும்

வாதிட்டனர். சீர்திருத்தங்கள் மூலமே இத்தகைய மனிதர்கள் அல்லது சமூகத்தை மாற்ற முடியும் என்றும் அதுவரை பிராமணர் அல்லாத தலைவர்கள் இதை பொறுத்துக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினர். தேசிய இயக்கத்தில் பங்கேற்கும் அனைத்து அமைப்புகளும் பாகுபாடு மற்றும் மதவாத உணர்வில்லாமல் இருக்க வேண்டும் என்பதில் ஒருமித்த கருத்தைக் கொண்டு வர S.ராமநாதன் உள்ளிட்ட பல பிராமணர் அல்லாத தலைவர்கள் எடுத்த முயற்சி எதிர்ப்பாளர்களால் நிறைவேறாமல் போனதாலும், மகாத்மா காந்தி மற்றும் இராஜாஜியால் முன்வைக்கப்பட்ட சமரசத்தீர்வு வேறுபாடு கொண்ட முகாம்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தத் தவறியதாலும், காங்கிரஸ் பிளவுபடும் நிலை ஏற்பட்டது. காங்கிரஸ் கட்சியின் பிராமணர் மற்றும் பிராமணர் அல்லாத தலைவர்களிடையே பிளவு ஏற்பட்டு, தொடர்ந்து காங்கிரஸ் கட்சியிலிருந்து பெரியார் வெளியேறுவதையும் தவிர்க்க இயலாமல் ஆனது.

10. S.சத்தியமூர்த்தி

"அவர் பிறவி சுதந்திரப் போராட்ட வீரர், ஸ்காட்லாந்தில் சொல்லப்படுவதுபோல போரை தனக்கான செயலாக கருதும் முன்னணிப் போராளி." இந்து நாளிதழ்


சத்தியமூர்த்தி கல்லூரி தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு அரசியலில் நுழைந்தார். 1919இல், மாண்டேகு செல்ம்ஸ்போர்டு சீர்த்திருத்தம் மற்றும் ரௌலட் சட்டத்தை எதிர்த்து இங்கிலாந்தின் கூட்டு நாடாளுமன்றக் குழுவில் இடம்பெற்றபோது அவரது அரசியல் வாழ்க்கை துவங்கியது. 1926இல் அவர் மீண்டும், ஆங்கிலேய மக்களுக்கு இந்திய நிலைப்பாட்டை எடுத்துரைப்பதற்காக இங்கிலாந்து அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு இருந்தபோது, அவர் தி இந்து நாளிதழின் லண்டன் நிருபராகவும் இருந்தார். மற்ற தேசபக்தர்கள் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் போலவே இவரும் பலமுறை சிறை சென்றுள்ளார். 1930இல் சென்னையில் பார்த்தசாரதி கோயிலில் தேசியக்கொடி ஏற்றியதற்காக அவர் கைது செய்யப்பட்டார். C.R.தாஸ் மற்றும் மோதிலால் நேரு ஆகியோருடன் இந்தியாவில் நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கான அடித்தளம் அமைத்த முன்னணி சுயராஜ்யவாதிகளில் அவரும் ஒருவர். 1937இல் சத்தியமூர்த்தியின் இடைவிடாத முயற்சி காரணமாக, சென்னை சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. சுதேசி இயக்கத்திலும் அவர் தீவிரமாக ஈடுபட்டார். 1940இல் தனிநபர் சத்தியாகிரகத்தில் பங்கேற்றதற்காக மீண்டும் கைது செய்யப்பட்டு எட்டு மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். பம்பாய் காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் பங்கேற்று சென்னை திரும்பிக் கொண்டிருந்தபோது, வழியில் அவர் கைது செய்யப்பட்டார். 1942இல் வெள்ளையனே வெளியேறு இயக்க போராட்டத்தின்போது இது நிகழ்ந்தது.



சத்தியமூர்த்தி தான் வாழ்ந்த காலத்தில், தமிழ்நாட்டின் முதல்வராக (1954–1963) இருந்த கு.காமராஜரின் வழிகாட்டியாகவும் விளங்கினார். செயல்திறன் வாய்ந்த, விசுவாசமான, தளர்ச்சி அடையாத தொண்டராக, நேர்த்தியான ஒருங்கிணைப்பாளராக காமராஜரை அவர்

கருதினார். இருவரும் ஒருவர்மீது ஒருவர் அன்பு கொண்டு நாளடைவில் அவர்களுக்கு இடையிலான பந்தம் நெருக்கமான வலுவான ஒன்றாக இருந்தது. மேலும், அவர்கள் பரஸ்பரம் தங்கள் பணிகளில் உதவும் திறன் கொண்டவர்களாக இருந்தனர். 1936இல் மாகாண காங்கிரஸ் கமிட்டி தலைவராக சத்தியமூர்த்தி தேர்வானபோது காமராஜர் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டார். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் தங்கள் பதவிகளை மாற்றிக்கொண்டனர். இவர்களின் ஈடுபாடு மற்றும் இடையில்லா முயற்சி காரணமாக, கட்சியின் நிலை வலுவடைந்தது. இந்தியா விடுதலை அடைந்ததும், காமராஜர் சத்தியமூர்த்தி இல்லத்திற்குச் சென்று அங்கு தேசியக்கொடி ஏற்றும் அளவுக்கு தனது வழிகாட்டிமீது ஈடுபாடு கொண்டிருந்தார். காமராஜர் தமிழ்நாடு முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, சத்தியமூர்த்தி இல்லத்திற்குச் சென்று அவரது படத்திற்கு மாலை அணிவித்து, திருமதி சத்தியமூர்த்தி அம்மாளிடம் ஆசி பெற்றார். மேலும், தமிழ்நாடு காங்கிரஸ் குழுவுக்கும், நாட்டின் விடுதலைக்காகவும் அவர் ஆற்றிய இணை யில்லாத பணியை அங்கீகரிக்கும் வகையில் தமிழ்நாடு காங்கிரஸ் குழு அலுவலகத்திற்கு சத்தியமூர்த்தி பவன் என பெயர் சூட்டினார்.

11. இராஜாஜி



இராஜாஜி எனப் பிரபலமாக அழைக்கப்படும் ராஜகோபாலச்சாரி, இளம் வயதில் தீவிர அரசியலில் நுழைந்தவர். மேற்கத்திய அறிஞர்களை வாசித்தது, சுவாமி விவேகானந்தர் மற்றும் காங்கிரசின் வளரும் தலைவர்களுடனான தொடர்பு போன்றவை அவருடைய இளம் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி, இந்திய சுதந்திரப் போராட்டத்தை நோக்கி செலுத்தியது. துவக்கத்தில் அவர் தீவிரவாதிகள் பக்கம் ஈர்க்கப்பட்டு, மிதவாதிகளின் சுதந்திரப் போராட்ட முறைகளை எதிர்த்தார். இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடுகளில் பங்கேற்றது மற்றும் C.விஜயராகவாச்சாரியார், வ.உ.சி, திலகர் போன்ற தலைவர்களுடனான தொடர்பு ஆகியவை சுதந்திரப் போராட்டம் தொடர்பான அவரது பார்வையில் மாற்றத்தை ஏற்படுத்தியது.

தேச விடுதலைக்கான வழிகளைத் தேடிய அதே நேரத்தில், இராஜாஜி ஏழை மக்கள் குறித்தும் சிந்தித்து அவர்கள் நிலை மேம்படவும் பாடுபட்டார். அவர் தன்னளவில் சகிப்புத்தன்மையைக் கொண்டிருந்தார். மேலும், இந்திய அரசியல் களத்திற்குள் மகாத்மா காந்தி நுழைவதற்குமுன் தீண்டாமை ஒழிப்பு தொடர்பாக தனிப்பட்ட கருத்துகளைக் கொண்டிருந்தார். தொடக்கத்தில், சேலம் நகரில் வழக்கறிஞர் தொழிலில் கவனம் செலுத்தினாலும், தேசிய அரசியலுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்ததோடு அதில் தன்னால் இயன்றளவு பங்களிக்கவும் செய்தார். பின்னர், மாறிவரும் அரசியல் சூழலுக்கு ஏற்பவும், தேச விடுதலைக்கான தன்னுடைய பொறுப்புகளுக்கு ஈடு கொடுக்கவும், தனது வீட்டை சென்னைக்கு மாற்றிக்கொண்டு, இந்திய விடுதலையில் முழுக்கவனம் செலுத்தத் துவங்கினார்.


தேச விடுதலையை அடைய தீவிரவாதக் கோட்பாடுகளை தீவிரமாக ஆதரித்து வந்த நிலையிலிருந்து அவரது சிந்தனை, காந்திய வழியை நோக்கி சீராக நகரத் துவங்கியது. தன் சொல், செயல், சிந்தனை என அனைத்திலும் காந்திய வாழ்க்கைப் பாதையைக் கடைபிடித்த மகாத்மா காந்தியின் தளபதிகளில் ஒருவராக இராஜாஜி விளங்கினார். மகாத்மா காந்தியின் உண்மை மற்றும் அகிம்சை கொள்கையைக் கடைபிடிப்பது அத்தனை எளிதல்ல. இருப்பினும், சென்னை மாகாணத்தில் உடனடியாக காந்தியக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டவர்களில் இராஜாஜி முதன்மையானவராகத் திகழ்ந்தார். மகாத்மா காந்தியால் மட்டுமே அரசியல் குழப்பங்களுக்கிடையில் இந்தியாவை வழிநடத்திச் சென்று, நாட்டை விடுதலை பெற வைக்க முடியும் என இராஜாஜி நம்பினார். அக்கால கட்டத்தில் மிதவாதிகளும் தேசியவாதிகளும் மகாத்மா காந்தியை கைவிட்டிருந்த நிலையில், மதராஸ் மாகாணத்தில் அவருக்கு விசுவாசமான தளபதிகளின் தேவை அதிகரித்திருந்தது. அனைத்து முன்னணி அரசியல் தலைவர்களும் அவருக்கு எதிராக இருந்தபோது இராஜாஜியை நாடியதன் மூலம், சென்னை மாகாண அரசியலில் மையப் பங்காற்றும் ஓர் தனித்துவமான வாய்ப்பு இராஜாஜிக்கு கிடைத்தது. காந்திய காலத்தின் முன்னணி தலைவர்களில் ஒருவராக அவர் விளங்கியதோடு, ஒவ்வொரு தருணத்திலும் அவரது பங்களிப்பு தனித்தன்மை வாய்ந்ததாகவும், முக்கியமானதாகவும் இருந்தது. 6 ஏப்ரல் 1919 அன்று, ரௌலட் சட்டத்திற்கு எதிரான அகில இந்திய முழு அடைப்புப் போராட்டத்திற்கான எண்ணம் அவரது வீட்டில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திலேயே உண்டானது என்பது தற்செயலாகும். மக்களிடையே உண்மையான தேசிய விழிப்புணர்வை உண்டாக்கிய, ஆங்கிலேய அரசுக்கு எதிரான முதல் பெரிய வெளிப்பாடாக அப்போராட்டம் அமைந்தது. அவர் கிலாபத் இயக்கத்திலும் ஈடுபட்டு இந்து, முஸ்லீம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டார். ஏனெனில், இந்திய சுதந்திரத்திற்கு இந்துமுஸ்லீம் ஒற்றுமை முக்கிய அம்சமாகக் கருதப்பட்டது. சென்னை மாகாணத்தின் அனைத்துகட்ட சுதந்திரப் போராட்டத்திலும் தீவிரப் பங்காற்றும் சுதந்திரப் போராட்ட வீரராக அவர் உருவெடுத்தார். சுதந்திரப் போராட்டத்தில் ஒத்துழையாமை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம் போன்றவற்றில் மற்ற எந்த தலைவரையும்விட இராஜாஜியுடைய அறிவார்ந்த ஆதரவு மகாத்மா காந்திக்கு அதிகம் இருந்தது.

தீவிர தேசியவாதியான அவர், ஒத்துழையாமை இயக்கத்திற்கு மகாத்மா காந்தி அழைப்பு விடுத்தபோது தமிழ்நாட்டிலிருந்து முதலில் அதற்கு பதிலளித்து தனது செல்வாக்குமிக்க வழக்கறிஞர் தொழிலை உதறியது அவரே. தமிழ்நாட்டிலிருந்து முதலில் கைது செய்யப்பட்ட சுதந்திரப் போராட்ட வீரரும் அவரே. வல்லபாய் படேல், ராஜேந்திர பிரசாத், இராஜாஜி, எம்.ஏ.அன்சாரி ஆகியோர் தலைமையில் இயங்கியவர்கள் 'மாறாதவர்கள்' சிந்தனைப் பள்ளியினர் என்று அறியப்பட்டது. 'மாறாதவர்கள்' சட்டமன்ற நுழைவை எதிர்த்தார்கள்; ஆக்கப்பூர்வமான வேலைகளில் கவனம் செலுத்துதல், புறக்கணிப்பு, ஒத்துழையாமையை தொடர்தல் மற்றும் இடைநிறுத்தப்பட்ட கீழ்ப்படியாமை திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கான அமைதியான தயாரிப்பு ஆகியவற்றை ஆதரித்தனர். அதே சமயம், சட்டமன்றங்களில் நுழைவதை ஆதரிப்பவர்கள் 'மாறியவர்கள்' அல்லது சுயராஜ்யவாதிகள் என்று அழைக்கப்பட்டனர். சிறையிலிருந்து விடுதலையான பிறகு, இராஜாஜி 'மாறாதவர்கள்' பிரிவிற்கு தலைமையேற்று சட்டசபைகளின் புறக்கணிப்பை வழிநடத்தினார். புறக்கணிப்பு ஒருபுறம் தொடர, அவர் உறுதியான ஒத்துழையாமைவாதியாகவும், தீவிர தேசியவாதியாகவும் செயல்பட்டார். இருப்பினும், பின்னர் சுயராஜ்ஜியவாதிகள் சட்டசபைக்குள் நுழைந்தபோது ஆக்கப்பூர்வமான திட்டங்களுக்கு தன்னை அவர் அர்ப்பணித்துக்கொண்டது தேசிய விழிப்புணர்விற்கு

வித்திட்டது. இராஜாஜியின் புகழ்பெற்ற வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகம் காந்தியின் தண்டி யாத்திரைக்கு நிகராக சென்னை மாகாணத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது. காந்தி–இர்வின் உடன்படிக்கையிலும், அவர் பங்கு வகித்தார். சென்னை மற்றும் திருச்செங்கோடு அந்நிய ஆடைகள் புறக்கணிப்பு போராட்டத்தில் அவரது புதுமையான வழிமுறைகள் வெளிப்பட்டன.

காந்தி 1940 அக்டோபரில் தனிநபர் சத்தியாகிரகம் துவங்கியபோது, சென்னை மாகாணத்தில் இராஜாஜி சத்தியாகிரகம் மேற்கொண்டு, சத்தியாகிரகியாக கடைசி முறை கைதானார். சிறையிலிருந்து வெளியே வந்தபின், இந்தியாவின் நெருக்கடியான அரசியல் சூழலை உணர்ந்து, கிரிப்ஸ் குழு ஏற்கப்பட ஆதரவு தெரிவித்தார். பிரிட்டனுடன் போர்க்கால உடன்பாடு எட்டப்படவும் தீவிரம் காட்டினார். இரண்டாம் வட்டமேசை மாநாட்டிற்குப் பின்னர் பிரிட்டன் பிரதமர் ராம்சே மெக்டோனால்ட் செப்டம்பர் 1932இல் 'வகுப்புவாத விருதுகள்' என்னும் பெயரில், தலித்துகள், சிறுபான்மையினர் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவு மக்களுக்கு தேர்தல்களில் தனித் தொகுதிகள் அறிவிக்கப்பட்டபோது, மகாத்மா காந்தி அதை எதிர்த்தார்; அதுகுறித்த முக்கியப் பேச்சு வார்த்தைகளில் மகாத்மா காந்தியின் பிரதிநிதியாக செயல்பட்டதோடு, பின்னர் பூனா ஒப்பந்தம் கொண்டு வருவதிலும் பங்காற்றினார். தலித்துகளின் ஆலய நுழைவுப் போராட்டங்களிலும் இராஜாஜி முக்கியப் பங்கு வகித்தார். மாகாண அளவிலும், தேசிய அளவிலும் தன் மனசாட்சிக்கு விரோதமான எந்தவொரு விவகாரத்திற்கும் உறுதியான நடவடிக்கை எடுக்க அவர் தவறியதே இல்லை

12. கு.காமராஜர்



ஜாலியன் வாலாபாக்கில் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டது காமராஜர் வாழ்க்கையில் ஓர் முக்கிய சம்பவமாக அமைந்தது. தேச விடுதலையை அடைய வேண்டியதன் முக்கியத்துவத்தை 16 வயதில் இச்சம்பவம் அவருக்கு உணர்த்தியது. காங்கிரஸ் கட்சியில் அவர் தொண்டராக இணைந்தார். 17 வயதில் கட்சி செயல்பாடுகளில் முழுமையாக ஈடுபட்டு, தனது சொந்த ஊரில் காங்கிரஸ் கூட்டங்களை ஏற்பாடு செய்வதில் கவனம் செலுத்தினார். பல நேரங்களில் விருதுநகரில், ஊரின் வசதி படைத்தவர்களும், அவரது சொந்த சாதியைச் சேர்ந்தவர்களும் ஆங்கிலேய ஆதரவாளர்களாகவும் அவருடைய தேச செயல்பாடுகளை எதிர்ப்பவர்களாகவும் இருந்தனர். அவர் துரோகி என முத்திரை குத்தப்பட்டு தாக்கப்பட்டார். இதனால் விருதுநகரை விட்டு வெளியேற நேர்ந்தாலும், திருமங்கலத்தில் மற்ற சமூக உறுப்பினர்களுடன் இணைந்து தேசியவாத செயல்பாடுகளில் ஈடுபட்டார்.

வைக்கம் சத்தியாகிரகத்திற்குப் பிறகு, காமராஜர் சுதந்திரத்திற்கான தேசிய இயக்கத்தில் மேலும் தீவிரமாக ஈடுபட்டார். வைக்கத்தில் சத்தியாகிரகிகள் பெற்ற மாபெரும் வெற்றி அவருக்கு புதிய திறப்பாக அமைந்தது. ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்திய ஆட்சி அடுத்தடுத்து மேற்கொண்ட ஒடுக்குமுறை நடவடிக்கைகள் அவருக்குள் ஏற்கனவே எரிந்துகொண்டிருந்த தேசியவாத உணர்வென்னும் தீக்கு மேலும் எண்ணெய் வார்த்தது போலானது. தேசியப் போராட்டத்திற்காக அவர் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்

கொண்டார். 1925இல் உள்ளூர் தொண்டரில் இருந்து பிராந்திய அளவிலான தொண்டராகும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. நாக்பூரில் ஆங்கிலேயர்கள் வசித்த பகுதிகளில் தெருக்களில் காங்கிரஸ் கொடியை ஏந்திச்செல்ல ஆங்கிலேய அரசு தடை விதித்தது. இதை காங்கிரஸ் கட்சி எதிர்த்து கொடி பேரணி நடத்த தீர்மானித்தது. இவ்வியக்கத்திற்கு ஆதரவாக இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து காங்கிரஸ் தொண்டர்கள் நாக்பூர் அனுப்பி வைக்கப்பட்டனர், காமராஜரும் அங்கு சென்றார்.

கத்தி, கோடாரி போன்ற ஆயுதங்களை இந்தியர்கள் கொண்டு செல்ல ஆங்கில அரசு தடை விதித்தது. இந்த அறிவிப்பும் இந்தியா முழுவதும் கடுமையாக எதிர்க்கப்பட்டது. சென்னையில் சத்தியாகிரகம் நடத்த தீர்மானிக்கப்பட்டது. 16 ஜூன் 1927 அன்று இயக்கம் தொடங்கியது. சத்தியாகிரகிகள் தெருக்களில் வாள்களை ஏந்தியபடி சென்று ஆயுதம் ஏந்தும் உரிமையை மக்களிடம் உணர்த்தினர். காமராஜர் மற்றும் அவரது நண்பர் விருதுநகர் K.S.முத்துசாமி இருவரும் இந்த வாள் போராட்டத்திற்கென்றே தயாரிக்கப்பட்ட வாள்களை சத்தியாகிரகிகளுக்கு வழங்கினர். 1927ஆம் ஆண்டு காமராஜர் அரசியல் வாழ்க்கையில் மற்றொரு வெற்றிகரமான ஆண்டாக அமைந்தது. துணை நிலை படைத்தலைவர் நீல் சிலை அகற்றப்பட்ட சம்பவமே அதற்குக் காரணம்.

1857 கிளர்ச்சியின்போது மிகக் கொடூரமாக நடந்து கொண்டவர் நீல். மதராஸ் மகாசபை மற்றும் சென்னை மாவட்ட காங்கிரஸ், இக்கொடுஞ்செயலை நினைவுபடுத்தும் நீல் சிலையை அகற்ற வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றின.

சென்னை காங்கிரஸ் கமிட்டி இப்பிரச்சனையை கையிலெடுத்து நீல் சிலையை அகற்றுவதற்கான ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தது. திருநெல்வேலியின் சோமையாஜுலு இதன் தலைவராக அறிவிக்கப்பட்டார். போராட்டத்தில் கலந்துகொண்ட பல தொண்டர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களுக்கு அபராதத்துடன் கூடிய சில வார சிறை போன்ற எளிய தண்டனை முதல் ஓராண்டு கடுங்காவல் தண்டனை வரை வழங்கப்பட்டது. சோமையாஜுலு மற்றும் குடியாத்தம் சுவாமிநாத முதலியார் போன்ற முன்னணி தலைவர்கள் கைது செய்யப்பட்ட நிலையில் 1927 செப்டம்பரில் காமராஜர் போராட்டத்திற்கு தலைமை ஏற்க தேர்வு செய்யப்பட்டார். இதற்காக காமராஜர், சென்னை ஸ்ரீனிவாச ஐயங்கார் இல்லத்தில் மகாத்மா காந்தியின் அனுமதி பெற்றார். இருப்பினும் நாடு தழுவிய அளவிலான சைமன் குழு புறக்கணிப்பு ஆர்பாட்டங்களால் இப்போராட்டம் கைவிடப்பட்டது.

மேலும், சென்னையில் அன்சாரி தலைமையில் இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது. காமாராஜர் இதற்கான ஆலோசனையில் பங்கேற்றார். இந்திய தேசிய காங்கிரஸ், முஸ்லீம் லீக், இந்து மகாஜன சபா, தாராளவாத கூட்டமைப்பு, போன்ற பல அமைப்புகள், சைமன் குழுவில் இந்தியர் இடம்பெறாததற்கு கண்டனம் தெரிவித்தன. 1927 டிசம்பரில் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் ஆண்டுக் கூட்டத்தில் குழுவினை புறக்கணிக்கத் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்கள் சைமன் குழுவிற்கு எதிர்ப்பு தெரிவித்து தங்கள் சட்டமன்றப் பதவியை ராஜினாமா செய்ய தீர்மானித்தனர். சைமன் குழு, 18 பிப்ரவரி 1929 அன்று சென்னை வர இருந்தது. முழுமையான புறக்கணிப்பு அறிவிக்கப்பட்டு, எங்கும் பதற்றம் நிலவியது.

அதே ஆண்டு சைமன் குழு மதுரை விஜயம் செய்தபோது, குழு உறுப்பினர்களுக்கு எதிராக கருப்புக்கொடி காட்டும் ஆர்ப்பாட்டத்தை தடுக்க காவலர்கள் விரிவான ஏற்பாடு செய்திருந்தனர். இருப்பினும், ஜார்ஜ் ஜோசப்பும், காமராஜரும், திருமலை நாயக்கர் மகாலில் ஆயிரக்கணக்கான தொண்டர்களை திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தினர். இச்சம்பவங்கள்

காமராஜரின் நிருவாகத்திறனை வெளிப்படுத்தின. 1930ஆம் ஆண்டு பிப்ரவரி 14 முதல் 16 வரை சபர்மதி ஆசிரமத்தில் கூடிய காங்கிரஸ் செயற்குழு, சட்டமறுப்பு இயக்கத்தை நடத்த மகாத்மா காந்திக்கு அங்கீகாரம் வழங்கியது. 12 மார்ச் 1930 அன்று மகாத்மா காந்தி வரலாற்று சிறப்புமிக்க தண்டி யாத்திரை மேற்கொண்டு, சட்டமறுப்பு இயக்கத்தை துவக்கி வைத்தார். மொத்த தேசமும் ஆதரவு தெரிவித்தது.

தமிழ்நாட்டில் மகாத்மா காந்தியின் நெருக்கமான தளபதியான இராஜாஜி, தஞ்சை மாவட்டத்தில் அமைந்திருந்த உப்பு உற்பத்தி பகுதியான வேதாரண்யத்திற்கு 1930 ஏப்ரலில் சத்தியாகிரகத்தை நடத்தினார். இருப்பினும் அவர் உப்பு சட்டம் 74ஆவது பிரிவின்கீழ் கைது செய்யப்பட்டார். இராஜாஜி மற்றும் பிற தலைவர்கள் உப்பு சத்தியாகிரகம் நடத்தியதற்காக கைது செய்யப்பட்டனர் என்றால், காமராஜர் இப்போராட்டதிற்கு தொண்டர்களை திரட்டியதற்காக கைது செய்யப்பட்டார். காமராஜர்மீது கீழ்க்கண்ட இரண்டு குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டன: (1) தொண்டர்களாக முன்வந்த 300 பேரை அவர் ஒன்று திரட்டினார். (2) உப்பு சட்டம் 74ஆவது பிரிவை மீறும் வகையில் வேதாரண்யத்திற்கு உப்பு தயாரிக்கப் பேரணியாக செல்லுமாறு அவர்களை தூண்டினார். விசாரணையின்போது காமராஜர் இக்குற்றச்சாட்டுகளை மறுக்கவில்லை. இதன் பயனாக, 9 ஜூன் 1930 அன்று அவருக்கு இரண்டாண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. முதலில் திருச்சி மத்திய சிறைக்கு அனுப்பி வைக்கப்பட்டவர் பின்னர் பெல்லாரி அலிபுரம் சிறைக்கு மாற்றப்பட்டார். பின்னர், நோய்வாய்ப்பட்டிருந்த தனது பாட்டி பார்வதி அம்மாளைப் பார்க்க பரோலில் வரவும் அவர் மறுத்துவிட்டார்.

காந்தி–இர்வின் உடன்படிக்கை, 4 மார்ச் 1931 அன்று கையெழுத்தானபோது காங்கிரஸ் தரப்பில் சட்ட மறுப்பு இயக்கம் தாற்காலிகமாக கைவிடப்பட வேண்டியிருந்தது. ஆங்கிலேய அரசு தரப்பில், இந்தியாவின் அரசியல் சூழ்நிலையை மேம்படுத்தும் வகையிலான அரசியல் சாசன மாற்றங்களை மேற்கொள்வதாக உறுதியளிக்கப்பட்டது. காந்தி–இர்வின் உடன்படிக்கை காரணமாக அனைத்து கைதிகளும் விடுதலை செய்யப்பட்டனர். 12 மார்ச் 1931 அன்று தண்டனைக் காலம் முடிவதற்குள் காமராஜர் விடுதலை செய்யப்பட்டார். இர்வினுக்குப்பின் இராஜப் பிரதிநிதியாகப் பதவியேற்ற வெலிங்டன் பிரபு, காங்கிரசின் சவாலை ஒடுக்க தீர்மானித்தார். இராஜப் பிரதிநிதியின் இந்த அணுகுமுறையால் மகாத்மா காந்தி மற்றும் காங்கிரஸ் செயற்குழுவிற்கு சட்ட மறுப்பு இயக்கத்தை புதுப்பிப்பதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. விருதுநகரில் காமராஜர் தலைமையில் மறியல், ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. தொண்டர்கள் கண்மூடித்தனமாக தாக்கப்பட்டனர். இந்த மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளை மீறி தொண்டர்கள் தினமும் விருதுநகரில் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். காமராஜர் தான் இதற்கு முக்கியக் காரணம் என்றறிந்த காவலர்கள் 10 ஜனவரி 1932 அன்று அவரை கைது செய்தனர்.

வேலூர் சிறையில் இருந்த ஜெய்தேவ் கபூர் மற்றும் கமல்நாத் திவாரி போன்ற புரட்சியாளர்களுடன் அவருக்கு இருந்த தொடர்பை வைத்து காவல்துறை பல சதி வழக்குகளில் அவரை சிக்க வைத்தது. 1933–1934 காலகட்டத்தில் காமராஜர் மாகாணங்களுக்கு இடையிலான சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டார். 'மதராஸ் சதி வழக்கு' என்று இவ்வழக்கு அழைக்கப்பட்டது. கோடை விடுமுறைக்காக ஊட்டி வந்தபோது சுதந்திரப் போராட்ட வீரர்கள்மீது ஒடுக்குமுறையை கட்டவிழ்த்துவிட்ட வங்காள ஆளுநர் ஜான் ஆண்டர்சனை கொலை செய்ய நண்பர் அருணாச்சலம் என்பவருடன் சதித் திட்டம் தீட்டியதாக காமராஜர்மீது குற்றம் சுமத்தப்பட்டது. அருணாச்சலத்திற்கு 2 துப்பாக்கிகள் வழங்கியதாக காமராஜர்மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. எனினும் காவல்துறை விசாரணையில் காமராஜரின் தொடர்பை மெய்ப்பிக்க முடியவில்லை.

ஆங்கிலேய அரசு, விருதுநகர் 'ஸ்ரீவில்லிபுத்தூர் காவல் நிலைய குண்டு வெடிப்பு வழக்கு', என்னும் வழக்கில் அவர்மீது மீண்டும் குற்றம் சாட்டியது. 21 செப்டம்பர் 1933 அன்று, விருதுநகர் காவல் நிலையம் மற்றும் தபால்நிலையத்தின்மீது குண்டுகள் வீசப்பட்டு வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் யாரும் காயமடையவில்லை. இந்த வழக்கில் K.S.முத்துசாமி, காமராஜர், மாரியப்பன், நாராயணசாமி நாயுடு ஆகியோர் 9 நவம்பர் 1933 அன்று கைது செய்யப்பட்டனர். வழக்கு விசாரணையில் உள்ளூர் காவல்துறை துணை ஆய்வாளர் அனந்தகிருஷ்ணன் சாட்சி அளித்தார். சிவகாசி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் பார்த்தசாரதி மற்றும் சென்னை குற்றப் புலனாய்வுத் துறையின் தோத்தாரி ஐயங்கார் ஆகியோர் இவ்வழக்கில் காமராஜரின் பங்கை மெய்ப்பிக்க முனைப்பு காட்டி, வெங்கடாசலம் என்பவரை அரசு சாட்சியாக மாறும்படி நிர்பந்தித்தனர்.

இவ்வழக்கு விசாரணையின்போது காவலர்கள் காமராஜர் மற்றும் அவருடைய நண்பர்கள், உறவினர்களையும் அடிக்கடி துன்புறுத்தினர். ஒரு சந்தர்ப்பத்தில், அவரது வீட்டில் சோதனை செய்ய விரும்பினர். அவரது தாய் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தாலும், பின்னர் அருகாமையில் உள்ளவர்கள் முன்னிலையில் சோதனை செய்ய அனுமதித்தார். சதி குற்றச்சாட்டை ஆங்கிலேய அரசால் மெய்ப்பிக்க முடியாததால் காமராஜர் சட்டத்தின் பிடியிலிருந்து விடுபட்டார். இல்லையெனில் அவர் காங்கிரஸ் குறிக்கோளுக்காக தொடர்ந்து போராடுவது சிக்கலாகி இருக்கும். காமராஜர் விடுவிக்கப்பட்டாலும், இவ்வழக்கை நடத்த தனது பரம்பரை சொத்தை விற்று அவர் பணம் செலவிட வேண்டியிருந்தது. விருதுநகரில் உள்ள தனது வீட்டை மட்டுமே அவரால் தக்க வைத்துக்கொள்ள முடிந்தது. 1940இல் லின்லித்கோ பிரபுவால் அறிவிக்கப்பட்ட ஆகஸ்ட் சலுகை தேசியவாதத் தலைவர்களுக்கு பெரும் பின்னடைவாக அமைந்தது. அரசு அமைப்பதில் இந்தியர்களின் தீவிர பங்கு இருக்க வேண்டும் என்னும் காங்கிரசின் கோரிக்கை இராஜப் பிரதிநிதியால் நிராகரிக்கப்பட்டது. போராட்ட காலம் நெருங்கியபோது, 15 செப்டம்பர் 1940 அன்று, அகில இந்திய காங்கிரஸ் குழு, இந்த நெருக்கடியை எதிர்கொள்வதற்குப் பொருத்தமான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள மகாத்மா காந்திக்கு அனுமதி அளித்தது. அதற்கேற்ப மகாத்மா காந்தி, தனிநபர் சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்த தீர்மானித்தார்.

தனிநபர் சத்தியாகிரகத்தின் புதுமையான திட்டத்தின்கீழ், மகாத்மா காந்தியால் தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு சத்தியாகிரகியும், சட்டத்தை மீறும் தனது எண்ணத்தை மாவட்ட நீதிபதியிடம் தெரிவிக்க வேண்டும். சத்தியாகிரகத்திற்கான, தேதி, இடம், நேரத்தை நீதிபதி அறிவிப்பார். போருக்கான நன்கொடை அல்லது பொருட்களை ஏன் வழங்கக் கூடாது என்பது குறித்து அவர் அங்கு கூடியிருப்பவர்களிடம் விளக்க வேண்டும். கைதாகி விடுதலையான பிறகு சத்தியாகிரகம் செய்தவர் அதைத் தொடர்ந்து செய்ய ஊக்குவிக்கப்படுகிறார். சென்னை மாகாணத்தில் சத்தியாகிரகத்தில் ஈடுபட்ட காங்கிரஸ் தொண்டர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. T.S.S.ராஜன், சத்தியமூர்த்தி, மற்றும் இராஜாஜி ஆகியோர் கைது செய்யப்பட்டனர். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் காமராஜர், மகாத்மா காந்தியின் அனுமதி பெறுவதற்காக வார்தா சென்றார். வார்தா செல்லும் வழியில், 20 டிசம்பர் 1940 அன்று குண்டூரில் அவர் கைது செய்யப்பட்டு, அவரிடமிருந்த சத்தியாகிரகிகள் பட்டியல் பறிமுதல் செய்யப்பட்டது.

காமராஜர் கைது செய்யப்பட்டபோது காவலர்களால் அதற்கான காரணத்தை தெரிவிக்க முடியவில்லை. இந்திய பாதுகாப்பு விதிகளின்கீழ் கைது செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டு, மற்ற சத்தியாகிரகிகள் மற்றும் இந்தியத் தலைவர்களுடன் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர், போருக்கு எதிராகப் பேசியதாகவும் மக்கள் போருக்கு நன்கொடை அளிப்பதை தடுக்கும் வகையில் செயல்பட்டதாகவும் அவர்மீது

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. போருக்கான நிதியை சேகரிப்பதற்காக சென்னை ஆளுநர் ஆர்த்தர் ஹோப் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார். இருப்பினும், ஆளுநர் செல்லவிருந்த பகுதிகளுக்கு எல்லாம் காமராஜர் சென்று மக்கள் நிதி அளிக்கக் கூடாது என்று வலியுறுத்தினார். இந்திய பாதுகாப்பு விதிகளின்கீழ் கைது செய்யப்பட இது முக்கிய காரணமாக குறிப்பிடப்பட்டது. காமராஜர் மூன்றாம் முறையாக சிறை வாழ்க்கையின் கொடுமைகளை அனுபவித்தார். அவர் வேலூர் சிறையிலிருந்து 3 நவம்பர் 1941 அன்று விடுதலை ஆனார். அவர் சிறையில் இருந்தபோதே, விருதுநகர் நகர சபை அவரை நகராட்சித் தலைவராக ஏகமனதாக தேர்வு செய்தது.

1942 ஏப்ரலில் கிரிப்ஸ் குழு தோல்விக்கு பிறகும் ஜூலை 6ஆம் தேதி வார்தாவில் காங்கிரஸ் செயற்குழு கூடியது. வெள்ளையர்கள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என்னும் வரலாற்று சிறப்புமிக்க தீர்மானம் ஜூலை 14ஆம் தேதி நிறைவேறியது. சுதந்திரத்திற்கான இந்தியர்களின் கோரிக்கையை ஏற்குமாறு உள்நாட்டு சமூகம் அளித்த அழுத்தம் வெற்றி பெறவில்லை. எனவே பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைக் குறித்து இறுதி முடிவு எடுக்க வேண்டியிருந்தது. ஜூலை 14 வார்தா கூட்ட தீர்மானத்தை 8 ஆகஸ்ட் 1942 அன்று நடந்த அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டியின் பம்பாய் அமர்வுக் கூட்டம் ஆதரித்தது. இத்தீர்மானம் பெரும் ஆதரவுடன் நிறைவேறி, மக்களை "செய் அல்லது செத்துமடி" என்னும் அறைகூவலோடு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடக் கோரியபோது, மகாத்மா காந்தி காமராஜரைப் (அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டி) பாராட்டினார். காமராஜர் தனது கடைசி மூச்சு வரை இதை கடைப்பிடித்தார்.

சுதந்திரப் போராட்டத்தில் முன்னணி பெண்கள்

1. வேலு நாச்சியார்



ஒரு வீரப் பெண்மணி, 5000 வீரர்கள் கொண்ட ஒரு படையும் அதன் தீரமிக்க பெண் தளபதியும் ஆங்கிலேயர்களுக்கு சிம்மசொப்பனமாக விளங்கினார். இந்த வரலாற்று நிகழ்வு, இந்தியாவின் முதல் பெண் போர் வீரரை அளித்ததோடு, இந்தியாவின் முதல் தற்கொலைப் படையை அறிமுகம் செய்த நிகழ்வாகவும் அறியப்படுகிறது. ஆற்காடு நவாபின் மகன் தலைமையிலான ஆங்கிலேயப் படை, காளையார்கோயில் போரில் வேலு நாச்சியாரின் கணவர் முத்து வடுகநாத தேவரைக் கொன்றது அவரது வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது. வேலு நாச்சியார் தனது மகள் வெள்ளச்சியுடன் சிவகங்கையை விட்டு தப்பிச் செல்ல நேர்ந்தது. தொலைவில் இருந்த

திண்டுகல்லை அடைந்தவர், அப்போதைய திண்டுக்கல் மன்னர் கோபால் நாயக்கர் பாதுகாப்பில் 8 ஆண்டுகளை கழித்தார். திண்டுக்கல்லில் தான் அவர் மைசூர் சுல்தான் ஹைதர் அலியை சந்தித்தார். வேலு நாச்சியாரின் உருது மொழி ஆளுமை மற்றும் அறிவுத்திறன் ஹைதர் அலியைக் கவர்ந்தது. 1780இல், கோபால் நாயக்கர் ஆதரவுடன் ஹைதர் அலி படைகளுடன் தனது கணவர் மரணத்திற்குப் பழி வாங்கவும், இழந்த ஆட்சியை மீட்கவும் வேலு நாச்சியார் தயாரானார். சிவகங்கை கோட்டையை ஆங்கிலேயர்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தாலும், வேலு நாச்சியார், தன் ராணுவப் படைத் தளபதி குயிலியுடன் ஓர் தற்கொலைப் படை திட்டத்தை தீட்டினார். இதன்படி, ஆங்கிலேயர்கள், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை வைத்திருந்த இடத்தை கண்டறிய வேண்டியிருந்தது. சிறந்த ஒற்றர்கள் மூலம் கோட்டையின் ஆயுதக் கிடங்கை கண்டறிந்து திட்டம் செயல் படுத்தப்பட்டது.

2. கேப்டன் லட்சுமி



கேப்டன் லட்சுமி சேகல் இரண்டாம் உலகப்போரின் இறுதியில், இந்திய ராணுவத்தின் ஜான்சி ராணி படைப்பிரிவின் தளபதியாகவும் சுபாஷ் சந்திர போஸின் சிங்கப்பூர் ஆசாத் ஹிந்த் அரசாங்கத்தில் அமைச்சராகவும் செயல்பட்டு புகழ் பெற்றவர் ஆவார். 1942இல் ஆங்கிலேயர்கள் சிங்கப்பூரை ஜப்பானியர்களிடம் ஒப்படைத்தபோது, இம்மோதலில் சிக்கிய போர்க் கைதிகளுக்கு உதவ அரும்பாடு பட்டார். அப்போது, இந்திய விடுதலைப் படையை அமைக்க உத்தேசித்திருந்த இந்தியப் போர் கைதிகளை சந்தித்தார்.

சுபாஷ் சந்திர போஸ், 2 ஜூலை 1943 அன்று சிங்கப்பூர் வந்தார். அடுத்த சில நாட்கள் பொதுக்கூட்டங்களில் ஜான்சி ராணி பிரிவு என்னும் பெயரில் பெண்கள் படைப்பிரிவை உருவாக்குவது பற்றிப் பேசினார். இப்படை இந்திய சுதந்திரத்திற்கான போரில் பங்கேற்று அப்போராட்டத்தை முழுமையாக்கும் என்று கூறினார். லட்சுமி உடனடியாக இப்படையில் சேர்ந்தார். ஆசியாவில் ராணுவத்தில் பெண்கள் பிரிவு உருவாக்கப்பட்டது இதுவே முதல் முறை. இந்த ராணுவம், இரண்டாம் உலகப் போரில் ஆங்கிலேயர்களுக்கு எதிராகவும் அச்சு அணி நாடுகளுக்கு ஆதரவாகவும் போராடியது.

லட்சுமி ராணுவ மற்றும் மருத்துவமனைகளில் தீவிரமாக செயல்பட்டார் அதன் பிறகு அவர், சுபாஷ் சந்திர போஸ் தலைமையிலான சுதந்திர இந்தியாவுக்கான தற்காலிக அரசாங்கத்தில் அமைச்சரானார். 4 மார்ச் 1946 அன்று லட்சுமி ஆங்கிலேயர்களால் பிடிக்கப்பட்டு சிங்கப்பூரிலிருந்து இந்தியா கொண்டுவரப்பட்டார். அப்போது அவருக்கு ஓர் நாயகிக்கான வரவேற்பு அளிக்கப்பட்டது. அவரை சிறையில் வைத்திருப்பது எதிர்மறை விளைவுகளையே உண்டாக்கும் என அறிந்த ஆங்கிலேயர்கள் அவரை விடுதலை செய்தனர்.

3. S.அம்புஜம்மாள்



சாரதா பெண்கள் சங்கத்தின் உறுப்பினராக 1929 முதல் 1936 வரை அவர் இருந்தார். சகோதரி சுப்புலட்சுமியுடன் இணைந்து பல செயல்பாடுகளில் ஈடுபட்டார். 1929இல் அவர் சென்னை சுதேசி பெண்கள் கூட்டமைப்பின் பொருளாளராக நியமிக்கப்பட்டார். காங்கிரசின் அரசியால்சாரா பிரிவான இக்கூட்டமைப்பு, மகாத்மா காந்தியின் சமூக மற்றும் பொருளாதாரத் திட்டங்களை செயல்படுத்தியது. அம்புஜம்மாள் இதில் இணைந்த பிறகு பல பெண் உறுப்பினர்கள் மகாத்மா காந்தியின் கோரிக்கையை ஏற்று தேசிய இயக்கத்திற்கு ஆதரவாக நகைகள் அளித்தனர். அவர் தீவிர சுதேசி ஆதரவாளராக விளங்கி, கதரை ஏற்றுக்கொண்டார். 1930இல் சட்ட மறுப்பு இயக்கத்தின்போது அரசியலில் நுழைந்தார். உப்பு சத்தியாகிரகம் செய்து கைதானார். 1932இல் காங்கிரசின் மூன்றாவது சர்வாதிகாரி என அழைக்கப்பட்டு, வெளிநாட்டு துணிகளை புறக்கணிக்கும் சத்தியாகிரத்தை முன்னின்று நடத்தினார். இதில் கைதாகி ஆறு மாதம் சிறையில் இருந்தார்.

4. அஞ்சலை அம்மாள்

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற முன்னணி விடுதலை வீரர்களில் அஞ் சலை அம்மாள் அவர்களும் ஒருவர். 1890இல் கடலூரில் உள்ள முதுநகரில் பிறந்தார். எளிய குடும்பத்தில் வளர்ந்தவர், ஐந்தாவது வரை படித்தார். அவரது கணவர் முருகப்பா பத்திரிகை முகவராக இருந்தார். மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தின்போது அரசியலில் நுழைந்தார் இவர். 1921இல் ஒத்துழையாமை இயக்கத்தில் தென்னகத்திலிருந்து பங்கேற்ற முதல் பெண்மணியாக விளங்கினார். தனது சொந்த வீடு மற்றும் நிலங்களை விற்று, இந்திய விடுதலைக்காக செலவிட்டார். 1927இல் நீல் சிலை அகற்றும் போராட்டத்தில் பங்கேற்றார். தனது 9 வயது மகள் அம்மாக்கண்ணுவையும் இப்போராட்டத்தில் பங்கேற்க வைத்தார். இருவரும் சிறை சென்றனர். சிறையில் தனது மகளை வளர்த்தார். அஞ்சலை அம்மாள் மற்றும் அம்மாக்கண்ணுவை மகாத்மா காந்தி சிறைக்குச் சென்று பார்த்தார். அம்மாக்கண்ணுவுக்கு அவர் லீலாவதி என பெயரிட்டு தன்னுடன் வார்தா ஆஸ்ரமத்திற்கு அழைத்துச் சென்றார். 1930இல் உப்பு சத்தியாகிரகத்தில் பங்கேற்றபோது அஞ்சலை அம்மாள் கடுமையாக காயமடைந்தார்.



அவர், 1931இல் அகில இந்திய பெண்கள் காங்கிரஸ் பொதுக்கூட்டத்திற்கு தலைமை வகித்தார். 1932இல் மற்றொரு போராட்டத்தில் பங்கேற்று வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். அப்போது அவர் கர்ப்பமாக இருந்ததால், குழந்தை பிறப்பிற்காக பிணையில் விடுதலையானார். இரண்டு வாரங்களில் அவருக்கு மகன் பிறந்தார். மகாத்மா காந்தி கடலூருக்கு வந்தபோது, அவர் அஞ்சலை அம்மாளை சந்திக்க ஆங்கிலேயர்கள் தடை விதித்தனர். எனினும், அஞ்சலை அம்மாள், பர்தா அணிந்து குதிரையில் சென்று மகாத்மா காந்தியை சந்தித்தார். இதனால் காந்தி அவரை 'தென்னிந்திய ஜான்சி ராணி' என அழைத்தார்.

சுதந்திரப் போராட்டத்தில் தேசியக் கவிஞர்கள்

1. சுப்பிரமணிய பாரதியார்



பாரதியின் அரசியல் இயக்கம் தேசப்பற்று பாடல்களை எழுதியதிலிருந்து துவங்குகிறது. 1908 முதல் 1918 வரை பாண்டிச்சேரியில் இருந்தபோது, அவர் பல கவிதைகளைப் படைத்தார். கீதையை தமிழில் மொழிபெயர்த்தார். பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு ஆகியவை இந்த காலகட்டத்தில் எழுதப்பட்டவை ஆகும். தேசியம் குறித்து எழுதப்பட்ட முதல் கவிதை நூலாக அவருடைய கவிதைகள் 1907இல் வெளியிடப்பட்டது. சுதேச கீதங்கள் என்னும் அக்கவிதை நூல் இலவசமாக வழங்கப்பட்டது. அது, மூன்று பாடல்களை நான்கு பக்கங்களில் கொண்டிருந்த ஓர் சிறிய நூலாகும். முதல் பாடலான 'வந்தே மாதரம்' சுதந்திரப் போரட்ட வீரர்களுக்கு எழுச்சியூட்டியது. இரண்டாவது பாடல் 'தாய் நாடு' பற்றியது. மூன்றாவது பாடல் 'பாரதம்' தொடர்பானது.

பாரதியின் தேசப்பற்று கவிதைகள் நேர்த்தியான நடையில் ஊக்கமளிக்கும் வகையில் அமைந்திருந்தன. சுவாரஸ்யமாக வாசிக்கக் கூடியதாக இருந்தன. சுதந்திரப் போராட்ட காலத்தில் கல்வியறிவு இல்லாத வெகுமக்கள் இடையே தேச உணர்வைத் தூண்டச் செய்யும் தேவை இருந்தது. பாரதியின் பாடல்கள் எளிதாகப் பாடக்கூடியவையாக இருந்தன. அவரது வரிகள் எளிமையாக இருந்தன, சுதந்திரப் போராட்ட வீரர்கள் அவற்றை மனப்பாடம்போல அறிந்திருந்தனர். படிக்க முடியாதவர்களிடம் அவற்றைப் பாடிக் காண்பித்தனர். பாரதி நாட்டு மக்களுக்கு இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெலாம் எதிர்த்து நின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
துச்சமாக எண்ணி நம்மைச் தூறுசெய்த போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே

உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்,

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.”

இவ்வரிகள் சுதந்திரப் போராட்ட வீரர்களின் மனதில் எழும் அச்சத்தை அகற்றியது.


2. நாமக்கல் கவிஞர் ராமலிங்கம்



நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை காந்திய வழி போராட்டத்தால் ஈர்க்கப்பட்டார். அந்த காலத்தில் சுதந்திரப் போராட்ட விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் நாடகம் முக்கியப் பங்கு வகித்தது. அவரது பாடல்கள் நாடக மேடைகளில் பாடப்பட்டன. தமிழன் இதயம், சங்கொலி, கவிதாஞ்சலி மற்றும் தமிழ்த் தேன் ஆகியவை அவரது முக்கிய படைப்புகள். அவரது பாடல்கள் அரசியல் நோக்கம் கொண்டவையாக, சந்த நயத்துடன் எளிதாகப் பாடும் வகையில் இருந்தன. தேசியக் கவிஞராக அவர் இன்றும் நினைவில் கொள்ளப்படுகிறார்.

3. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

தேசிக விநாயகம் பிள்ளை, 1876இல் தேரூரில் பிறந்தார். 1895இல் அவர் அழகம்மை ஆசிரிய விருத்தம் எழுதினார். கோட்டாரில் உள்ள பள்ளியில் ஆசிரியராகத் தன் பணியைத் துவங்கினார். அவரது வழிகாட்டுதலில் எண்ணற்ற மாணவர்கள் அரசியல் பயிற்சி பெற்றனர். குறுகிய காலத்திற்கு அவர் திருவனந்தபுரம் மகாராஜா பெண்கள் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். அப்போது அவர் தன் காந்திய வாழ்க்கையைத் துவக்கினார். தமிழன் இதழில் கவிதைகள் எழுதினார். அவரது கவிதைத் தொகுப்பு 220 பாடல்களைக் கொண்டிருந்தன. இவற்றில் ஏழு பாடல்கள் தேசியக்கொடி, கதர், காங்கிரஸ், வட்ட மேஜை மாநாடு, சுதந்திரம், குடியரசு ஆகியவை தொடர்பானவை. மகாத்மா காந்தி, கஸ்தூரிபாய், சரோஜினி நாயுடு, இராஜாஜி, வ.உ.சி ஆகியோரை பாராட்டியும் கவிதைகள் அமைந்திருந்தன.



அவரது கதர் கவிதை, மக்களை கதர் துணிகள் வாங்கவும், தொழிலாளர்களுக்கு உதவவும் தூண்டியது. கதர் துணியை நெய்பவர்கள் உழைப்பை இந்த கவிதை எடுத்துக் கூறியது. மற்றொரு பாடலில் 1932இல் லண்டனில் நடைபெற்ற இரண்டாவது வட்ட மேசை மாநாடு பற்றி எழுதினார். கவிமணி என்னும் பட்டம் பெற்றார். 26 செப்டம்பர் 1954 அன்று அவர் இயற்கை எய்தினார்.



4. பாரதிதாசன்

அவர் எளிய சொற்கள் கொண்டு கவிதைகள் எழுதி சக மாணவர்களைக் கவர்ந்தார். அவர் நன்றாகப் பாடுபவராகவும் இருந்தார், நாட்டுப்புறப் பாடல்களைப் பாடினார். ஒரு முறை திருமண விழாவில் பாரதியின் பாடல்களை பாடினார். பாரதியே அங்கு அமர்ந்து அதைக் கேட்டுக்கொண்டிருந்தார். அப்போதுதான் அவர் பாரதியை முதன்முதலில் சந்தித்தார். பாரதியின் தாக்கம் காரணமாக தேசப்பற்று கவிதைகள் எழுதினார். கதர் மற்றும் சுதேச பாடல்களை இயற்றினார்.

தேசியவாதம், கதர், மற்றும் தேசப்பற்று குறித்துப் பல பாடல்கள் எழுதினார். பாரதி, அரவிந்தர், வ.உ.சி ஆகிய தலைவர்கள் குறித்தும் எழுதினார். அவரது கவிதைகள் பல தேசிய இதழ்களில் வெளிவந்தன. பாரதி போல, ஆரம்ப நாட்களில் அவர் தேசியவாத விருப்பங்களுக்காக கடவுளிடம் வேண்டினார். இந்தியாவை சுதந்திர நாடாக ஆக்குமாறு முருகனிடம் வேண்டி கவிதை எழுதினார். இந்தியர்களின் பரிதாப நிலை குறித்து வருந்தி, அனைத்து தீமைகளையும் கடவுள் விரட்ட வேண்டும் எனக் கோரினார். ஆஷ் கொலை வழக்கில் தேடப்பட்ட மாடசாமிக்கு அடைக்கலம் கொடுத்தார். இதனால் நிறைய இன்னல்களை எதிர்கொண்டதாக பின்னர் தெரிவித்தார்.

5. திரு. வி.கலியாண சுந்தரம்

நவசக்தி மற்றும் தேசபக்தன் இதழ்களின் ஆசிரியரான திரு. வி.கலியாணசுந்தரம் தனது இலக்கியப் படைப்புகள் மூலம் மக்களிடையே தேசப்பற்றை வளர்த்தார். திலகர் ஒரு வழக்கிற்காக இங்கிலாந்து சென்றது தொடர்பாக அவர் முதலில் கவிதைகள் எழுதினார். 1919இல் மகாத்மா காந்தியை அரக்கோணத்தில் சந்தித்தார். ரௌலட் சட்டத்திற்கு எதிரான சத்தியாகிரகத்தில் தீவிர பங்காற்றினார். தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் ஆர்வம் காட்டினார். சமூக சீர்திருத்தம் தொடர்பான அவரது முயற்சிகளும் குறிப்பிடத்தக்கவை ஆகும். காங்கிரஸ் தலைவர்களுடன் அவருக்கு சில கருத்து வேறுபாடுகள் இருந்தன. உரிமை வேட்கை அல்லது நாட்டுப்பாடல் மற்றும் சுதந்திர நாமாவளி ஆகியவை அவரது முக்கிய கவிதை நூல்கள். அவரது முதல் தொகுதி தேசப்பற்று கவிதைகளாக அமைந்தன. சுதந்திரம், தாய்நாடு, மற்றும் தமிழ், தமிழ்நாடு குறித்தும் அவர் பாடினார். 1920, பஞ்சாப் படுகொலையின் இரண்டாவது நினைவு தினத்தில் பாரதத்தின் மோசமான நிலை குறித்து வருந்திப் பாடினார். ரௌலட் சட்டம் கொண்டுவரப்பட்டதன்



நோக்கத்திற்காக ஆட்சியாளர்களை சாடினார். தன் கவிதைகளில் பல நல் அம்சங்களைக் கொண்ட சுதந்திர இந்தியாவை காட்சிப்படுத்தினார். 1953இல் இயற்கை எய்தினார்.

6. சுத்தானந்த பாரதி



சுத்தானந்த பாரதி ஒரு தேசியக் கவிஞர். மதுரையில் ஒரு மிஷனரி பள்ளியில் அவர் ஆசிரியர் பயிற்சி பெற்றார். பயிற்சிக்குப்பின், தஞ்சை காட்டுப்புத்தூரில் ஓர் பள்ளியில் பணி நியமனம் கிடைத்தது. வேலூரில் சாரணர் இயக்கத்தின் பயிற்றுவிப்பாளராக பயிற்சி பெற்றார். பள்ளியில் பணிபுரிந்தபோது பல கவிதைகள் எழுதினார். இக்காலகட்டத்திலேயே அவருடைய முக்கிய படைப்பான பாரத மகாசக்தி காவியம் எழுதப்பட்டது. தமிழில் தொழில்நுட்ப வார்த்தைகளை உருவாக்க முயன்றார். தேவக்கோட்டையில் உள்ள குருகுல பள்ளியில் சில காலம் பணியாற்றினார். சேரன்மாதேவியில் வ.வே.சு. ஐயர் பள்ளியில் பணியாற்றினார். ஐயர் மறைவுக்குப்பின், தஞ்சை மாவட்டம் சென்று கிராமப்புற மறுவாழ்வில் ஈடுபட்டு, தேசியவாதம் தொடர்பாக எழுதி வந்தார்.

பாரத மகாசக்தி காவியம் ஆயிரம் பக்கங்கள் கொண்டது. இந்திய சரித்திரக் கும்மி என்னும் தொகுப்பையும் வெளியிட்டார். இந்திய வரலாற்றை குறித்து இந்நூலில் எழுதினார். கம்பெனி இந்தியா என்னும் கவிதைகளில் கிழக்கு இந்திய கம்பெனியின் ஆங்கிலேயர்கள் தங்கள் அதிகாரத்தை இந்தியாவில் எவ்வாறு நிலைநாட்டினர் என்பதை எழுதினார். இந்திய தேசிய காங்கிரஸ் பற்றிய பாடலில் காங்கிரஸ் எழுச்சியை விவரித்து தேசிய இயக்கத்திற்கான தலைவர்களின் பங்களிப்புகள் குறித்து விளக்கி இருக்கிறார். மற்றொரு பாடலில் மகாத்மா காந்தியைப் பாராட்டியவர், சுதந்திரத்திற்கான காந்திய வழிப் போராட்டம் வெற்றி பெறும் என நம்பிக்கை தெரிவித்தார். தமிழ் சமூகத்தின் தேசப்பற்று பற்றி அவரது சங்கநாதம் விவரித்தது.


இந்தியா.
சவிக்கிமைதோறும் வெளியாகும்.
இந்தியா.
சவிக்கிமைதோறும் வெளியாகும்.
சுதேசமித்திரன்.
The Swadesamitran.
[தினப்பதிப்பு.]
15th December, 1920

2

இந்திய தேசியவாதமும், சங்கத் தமிழ் இலக்கியமும்

டாக்டர் ராஜேஷ் வெங்கடசுப்பிரமணியன்
இணைப் பேராசிரியர்,
இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
பஞ்சாப்

ஐரோப்பிய காலனியாதிக்கத்திற்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டத்தில் பரந்த நோக்கில் கலாச்சாரத்தின் பங்கு குறித்து ஆய்வாளர்களும், செயற்பாட்டாளர்களும் ஆய்வு செய்து வருகின்றனர். ஆப்பிரிக்காவைப் பொருத்தவரை, காலனியாதிக்கத்திற்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் கலாச்சாரத்தின் பங்கை கோட்பாடாக்கிய முக்கிய சிந்தனையாளர் அமில்கர் கப்ரால் (1924–1973). ஏகாதிபத்திய ஆதிக்கம் கலாச்சார ஒடுக்குமுறையை உள்ளடக்கியது என்றால் தேசிய விடுதலை என்பது கலாச்சார செயல்பாடே என்று கப்ரால் கருதுகிறார். கலாச்சாரம் என்பது ஒரே மாதிரியானது அல்ல என்றும், காலனியாதிக்க சமூகத்தில் கலாச்சார பன்முகத்தன்மையை அங்கீகரிப்பது அவசியம் என்றும் குறிப்பிடுபவர், விடுதலைப் போராட்டங்களில் தேசிய கலாச்சாரத்திற்கான வரையறை மேட்டுக்குடி கலாச்சாரத்தின் நேர்மறை அம்சங்களை அடையாளம் காண்பதோடு, நன்கு வரையறுக்கப்பட்ட ஒவ்வொரு சமூக குழுக்களிலிருந்தும் நேர்மறை கலாச்சார அம்சங்களை கண்டறிவதும் ஆகும் என வாதிடுகிறார்.

”அரசியல் மட்டத்தைப் பொருத்தவரை சலுகைபெற்ற உயர்வகுப்பினர் விடுதலைப் போராட்டத்திற்கு அளிக்கும் நேர்மறை பங்களிப்பை குறைக்காமல், நாட்டில கலாச்சார அளவில் எத்தகைய பன்முகத்தன்மை இருந்தாலும் விடுதலை இயக்கம், கலாச்சார மட்டத்தில், தனது செயல்பாடுகளை வெகுமக்கள் கலாச்சாரத்தின் அடிப்படையிலேயே அமைத்துக்கொள்ள வேண்டும்” என்று அவர் சுட்டிக்காட்டுகிறார். தேச விடுதலைப் போராட்டத்தில் கோட்பாடுகளின் பங்கு குறித்து, இந்தியாவில் தேசியத்திற்கு எதிரான தேச விடுதலை போராட்டம் என்னும் சூழலில் கப்ரால் அவர்களின் கோட்பாட்டைப் பொருத்தி முழுமையாக ஆய்வு செய்யப்படவில்லை.

நவீன இந்திய வரலாற்றில் கலாச்சாரம் தொடர்பாக தெரிவிக்கப்படும் கருத்துகள் அனைத்தும் பழமையான சமஸ்கிருத நூல்கள் மற்றும் அவற்றின் மரபுகளின் தேசிய ஈடுபாட்டை சுற்றியே அமைந்துள்ளன. மறுபக்கத்தில், பிராந்திய மற்றும் வெகுமக்கள் கலாச்சாரம் தொடர்பான தேசியவாத விளக்கம் மற்றும் காலனியாதிக்க எதிர்ப்பில் அவை எந்த அளவு ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிப்பட்டுள்ளன என்பதை ஆய்வு செய்ய வேண்டும். காலனியாதிக்க சென்னை மாகாணத்தில் தமிழ் பேசும் மாவட்டங்களில் வசித்த தேசியவாதிகள் தமிழ் மொழியின் சங்க இலக்கியத்துடன் கொண்டிருந்த தொடர்பை ஆய்வு செய்வதற்கான முயற்சி இங்கு மேற்கொள்ளப்படுகிறது.

பம்பாயில் 1885இல் துவக்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ் தொடக்கம் முதலே சென்னை மாகாணத்தின் பல்வேறு பிரதிநிதிகளைக் கொண்டிருந்தது. தமிழ்நாட்டின் பல முக்கிய சுதந்திரப் போராட்ட வீரர்கள் தமிழ் அறிஞர்களாகவும் இருந்தனர். உ.வே. சாமிநாத ஐயரை தமிழ் இலக்கிய ஆய்வு மேற்கொண்டு அவற்றை பதிப்பிக்க ஊக்குவித்த சேலம் ராமசாமி முதலியார் ஓர் காங்கிரஸ் மிதவாதி ஆவார். அவர் இளங்கலை மற்றும் வழக்கறிஞர் பட்டம் பெற்ற பிறகு, சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞராகும்முன் மாவட்ட கீழமை நீதிமன்ற நீதிபதியாக இருந்தார். 1885இல் இங்கிலாந்தில் பொதுத் தேர்தல் நடைபெற்றபோது, தேர்தல் செயல்முறையைப் பார்வையிட சென்னை மாகாணத்திலிருந்து இங்கிலாந்துக்கு தேர்வு செய்யப்பட்டார். அவர் சென்னை மாநாகராட்சி உறுப்பினராகவும், சென்னை பல்கலைக்கழக செனட் உறுப்பினராகவும் பொறுப்பு வகித்திருக்கிறார். சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, பத்துப்பாட்டு, மற்றும் புறநானூறு போன்ற சங்க இலக்கியங்களை பதிப்பிக்க அவர் சாமிநாத ஐயருக்கு பொருள் மற்றும் அறிவுசார் ஆதரவை அளித்துள்ளார். சென்னை காஸ்மோபாலிடன் கிளப்பில் நடைபெற்ற தமிழ் சமண காவியமான சீவகசிந்தாமணி தொடர்பான நிகழ்ச்சியில் பங்கேற்று சாமிநாத ஐயரின் வெளியீடுகளைப் பாராட்டிப் பேசினார். ராமசாமி முதலியார் மறைவை ஒட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் எண்ணற்ற தமிழ் அறிஞர்கள் கலந்துகொண்டு அவரது நினைவாக கவிதைகள் வாசித்தனர். அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில், நீதிபதி முத்துசாமி ஐயர், காஸ்மோபாலிடன் கிளப்பில் சிறப்புக் கூட்டம் நடத்தினார்.

சுதந்திரப் போராட்ட வீரர்களின் பங்களிப்பு தமிழ் மொழியையும், இலக்கியத்தையும் செழுமைப்படுத்தியது மட்டுமல்லாமல் தேசியவாதத்திற்கும் உதவியது. தேசியவாதத் தலைவர்களின் விசுவாசம் இந்திய தேசம் மற்றும் தமிழ் பிரதேசம் என்கிற இரண்டு அம்சங்களைக் கொண்டிருந்தது.

தி இந்து மற்றும் சுதேசமித்ரன் நாளிதழ்களின் நிறுவனர் G.சுப்பிரமணிய ஐயர், (1851–1921), பிராந்திய மொழியில் தகவல் தொடர்பு கொள்வதன் அவசியத்தை

வலியுறுத்தினார். அறிவியல் உரையாடல்களில் தமிழ் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் 1883இல் பயனுள்ள அறிவை பரப்புவதற்கான கழகத்தை அவர் நிறுவினார். காங்கிரஸ் மற்றும் தேசிய இயக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் துண்டு மடிப்பேடுகளை அவர் தமிழில் வெளியிட்டார். வெகுமக்களுக்காக காங்கிரஸ் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்து கேள்வி பதில் பாணியில் மடிப்பேடுகளை வெளியிட்டார்.



சுதேசமித்ரன் நாளிதழ், தமிழ் மொழி மற்றும் இலக்கியம் தொடர்பான கட்டுரைகளை வெளியிட்டது. மதுரை தமிழ் சங்கச் செயல்பாடுகள் குறித்து விளம்பரம் செய்து, தேச உணர்வுடன், தமிழ்மொழி மற்றும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகப் பாடுபட்ட தனிநபர்கள் மற்றும் அமைப்புகளையும் நாளிதழ் பாராட்டியது. ஆங்கிலேய அரசு, தமிழ் அகராதியை உருவாக்கும் பொறுப்பை G.U.போப்பிடம் வழங்கி ரூ.30,000 நிதி அளித்தபோது, உள்நாட்டு தமிழ் அறிஞர்களை கவனத்தில் கொள்ளாமல் வெளிநாட்டவர் ஒருவரை தேர்வு செய்ததற்காக சுதேசமித்ரன் அரசை கடுமையாக விமர்சனம் செய்தது. காலனியாதிக்க அரசு இந்தியர்கள்மீது காட்டிய பாரபட்ச அணுகுமுறையை தொடர்ந்து சுட்டிக்காட்டி கண்டனம் செய்தது. தமிழ் இலக்கியப் படைப்புகளின் விளம்பரங்கள், விமர்சனங்கள் ஆகியவை நாளிதழில் தொடர்ந்து வெளியாயின. சங்க இலக்கிய வெளியீடுகள் தமிழ் பேசும் மாவட்டங்களில் உள்ள தேசியவாதிகளிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. சங்க இலக்கியங்களில் இடம்பெறும் நாயகத் தன்மை மற்றும் காதல் போன்ற கருப்பொருள்கள் அவர்களை ஈர்த்தது. சுப்பிரமணிய பாரதியார் நடத்திய இந்தியா வார இதழ், திருக்குறளை மேற்கோள்காட்டி, திருக்குறள் காட்டும் பாதையிலிருந்து விலகி ஆட்சி செய்வதாக காலனித்துவ அரசை விமர்சிக்க பாரதி மேற்கோள் காட்டிய திருக்குறளை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும். "மகத்தான தமிழ்ப் புலவர் திருவள்ளுவர்" இவ்வாறு கூறுகிறார்: அரசனின் கடமைகள் நான்கு வகையானது:

1) தனது வருவாய் ஆதாரங்களை அதிகரிப்பது,

2) அதன் மூலம் செல்வ வளம் பெறுவது,

3) பெற்ற செல்வத்தை பாதுகாப்பது மற்றும்,

4) அதனை தன் குடிமக்களிடையே சமமாகப் பகிர்ந்து கொள்வது".

அரசனின் கடமையை ஆங்கில அரசு எந்த அளவு நிறைவேற்றுகிறது என்பதை ஒருவர் தெரிந்து கொள்ள வேண்டும். செல்வத்தை மற்றவர்களிடமிருந்து காப்பது என வரும்போது நம் அரசு மிக பலவீனமாக இருக்கிறது. கொள்ளையர்கள் திருடிச் செல்வதற்கு



பதிலாக, அரசே அழைத்து அப்பணத்தை கொடுக்கும் போல உள்ளது. அண்மை ஐக்காலால் தேடல் வேட்டை மற்றும் இதுவரை பெஷாவரில் எண்ணற்ற கொள்ளைகளை நிகழ்த்தியுள்ள அப்ரீதிகளை நடத்தும் முறை ஆகியவை இதை சரியாக உணர்த்துகின்றன.

அதோடு சொந்த நாட்டில் எந்த வேலைக்கும் தகுதி இல்லாத பலர் இங்கு அழைத்து வரப்பட்டு அதிக ஊதியம் அளிக்கப்படுகிறது. இங்கு தகுதி வாய்ந்தவர்கள் இருக்கின்றனர். ஆனால் அரசு அவர்களை கண்டு கொள்வதில்லை. அதில் சிலருக்கு உயர் பதவிகள் வழங்கப்பட்டாலும்கூட, அதே ஊதியம் வழங்கப்படுவதில்லை மற்றும் வெளிநாட்டவர்போல மதிப்புடன் நடத்தப்படுவதில்லை. மேலும், இங்கிலாந்திலிருந்து வரும் இளைஞர்களுக்கு பெரிய மற்றும் முக்கியப் பொறுப்பிலான பதவிகளை அரசு வழங்குகிறது. ஆனால் இந்தியர்களிடம் இதே பொறுப்புகளை நம்பிக்கையுடன் ஒப்படைப்பதில்லை.

இப்படி வெள்ளையர்கள் வெளிப்படையாகவும், இரகசியமாகவும் நாட்டிலிருந்து அவர்களுக்குத் தேவையான பணத்தை எடுத்துச் செல்கின்றனர். இவை போதாது என்பது போல, நாட்டின் வளத்தைப் பாதுகாக்கும் பொறுப்பில் உள்ள காவலர்கள் விசாரணை என வரும்போது தனது எஜமானர்களை மிஞ்சி விடுகின்றனர். எங்கு கொள்ளை நடைபெற்றாலும் அவர்கள் ஒரு மாத காலம் அமைதியாக இருந்துவிட்டு பின்னர் பொறுமையாக தங்களுக்கு லஞ்சம் தர மறுத்தவர்கள்மீது பழி தீர்த்துக்கொள்கின்றனர்.

வரிப்பணத்தை மக்களுடன் பகிர்ந்து கொள்ளும் கடமையைப் பொறுத்தவரை அரசு ஒருபோதும் அதை செய்வதில்லை. அது எப்போதும் தனது குடிமக்கள்மீது நம்பிக்கையின்றி, அவர்களுக்காக செலவிடத் தேவையில்லை என்கிற எண்ணத்துடனே இருக்கிறது. "பொதுமக்களுக்காக கட்டப்பட்டுள்ள சில சொகுசு விடுதிகள் கூட, உண்மையில் வெள்ளையர்கள் நலனுக்கானவை தான்."

தமிழ் பேசும் பகுதிகளில் தேசியவாதிகள் மத்தியில் மிகவும் போற்றப்படும் நூலாக திருக்குறள் விளங்கியது. வ.உ.சிதம்பரம் பிள்ளை, வ.வே.சு.ஐயர், சி.ராஜாகோபாலாச்சாரி போன்ற தலைவர்கள் பெரிய அளவிலான வாசகர்களுக்காக திருக்குறளை, பதிப்பிப்பது, மொழிபெயர்ப்பது உள்ளிட்ட பணிகளில் ஈடுபட்டனர். தமிழ் இலக்கியத்துடனான அவர்கள் உறவு தேசிய உணர்வை அடிப்படையாகக் கொண்டிருந்தது. தமிழ்நாட்டின் சுதேசி இயக்க நாயகனான வ.உ.சி (1872–1936), ஓர் தீவிரவாத தேசியவாதியும் ஆவார். சுதேசி நீராவி கப்பல் கம்பெனியை துவக்கிய அவர் பத்திரிகைகளின் ஆசிரியராகவும்



செந்தமிழ் இலக்கியங்களைப் பதிப்பிப்பதிலும் கணிசமான நேரத்தைச் செலவிட்டார்.

தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்திற்கு இளம்பூரணர் உரையின் ஓலைச்சுவடி பிரதி தமிழறிஞர் S.வையாபுரி பிள்ளையிடம் இருப்பதாக 1913இல் அறிந்தவுடன், வ.உ.சி. அவரைத் தொடர்பு கொண்டார். S.வையாபுரி பிள்ளையுடன் இணைந்து, வ.உ.சி, தொல்காப்பியத்திற்கான இளம்பூரணர் உரையை வெளியிட்டார். செவ்விலக்கியங்களை மக்களிடம் கொண்டு செல்வதில் ஆர்வம் காட்டிய அவர், சங்கப்புலவர் இளம்பூரணரின் தொல்காப்பிய உரையின் எளிமையை நன்கு புரிந்துகொண்டார்.

சங்க இலக்கியம் மற்றும் இலக்கணத்தை ஜனநாயகப்படுத்த வேண்டும் என்று அவர் விழைந்ததற்கு வெகுமக்கள் சார்ந்த இந்திய தேசிய இயக்கத்தில் அவருக்கிருந்த ஈடுபாடே காரணம். 1917இல், மணக்குடவர் உரையுடன் திருக்குறளின் முதல் பகுதியான அறத்துப்பாலை வெளியிட்டார்.

திருக்குறளுக்கான மணக்குடவர் உரையின் ஓலைச்சுவடிகளை தேடிக்கொண்டிருந்தபோது அதன் ஒரு பிரதி உ.வே.சாமிதாத ஐயரிடம் இருப்பதாக அறிந்தார். அதனை அனுப்பி வைக்குமாறு அவருக்கு வ.உ.சி கடிதம் எழுதினார். இது அவருக்கு பயனுள்ள ஆதாரமாக அமைந்தது. திருக்குறள் பதிப்பிற்கான முன்னுரையிலும் சிதம்பரம் பிள்ளையின் ஜனநாயகமயமாக்கும் விருப்பத்தைக் காணலாம். எல்லோரும் திருக்குறளை படிக்க வேண்டும், மற்றவர் தாக்கம் இல்லாமல் அதை சுயேச்சையான ஆய்வுக்குள்ளாக்க வேண்டும் என அவர் அதில் கேட்டுக்கொள்கிறார். சிதம்பரம் பிள்ளை தான் இறப்பதற்கு ஓராண்டுக்கு முன், திருக்குறள் அறத்துப்பால் நூலை தனது உரையுடன் பதிப்பித்தார். தூத்துக்குடியில் இருந்தபோது அதை நிறைவு செய்ததாக முன்னுரையில் குறிப்பிட்டிருந்தார். இளம்பூரணர் உரை கொண்ட தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரம் தொடர்பான அவரது ஆய்வு 1928இல் வெளியானது. இலக்கண நூலிற்கான தன் முன்னுரையில், ஆரிய மொழிகளில் காணப்படாத, தமிழ் மொழியின் தனித்தன்மையையும், இலக்கண





மரபுகளையும் சிதம்பரம் பிள்ளை சுட்டிக்காட்டுகிறார். தொல்காப்பியத்தை எழுதிய ஆசிரியர், ஆரிய சொற்கள், வழக்கங்கள், கோட்பாடுகளைப் புகுத்தியிருந்தாலும், இதனை தமிழ் மொழியின் நேர்மையான படைப்பாகக் கருதலாம் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

இலக்கணம், இலக்கிய பாரம்பரியத்தில் அவர் கண்டறிந்த தமிழ் மொழியின் தனித்தன்மை, சிதம்பரம் பிள்ளையை பிராமணரல்லாத திராவிட தேசிய முகாமில் இணையச் செய்யவில்லை. தமிழ்நாட்டின் மற்ற தேசியவாதத் தலைவர்கள் போலவே இந்திய தேசியம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டின் மீதும் அவரது விசுவாசம் அமைந்திருந்தது.

இதேபோல, காங்கிரசின் தீவிரவாதப் பிரிவைச் சேர்ந்த வ.வே.சு.ஐயர் திருக்குறள் ஆய்வில் ஈடுபட்டிருந்தார். 1915இல், திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்பை The Kural or the Maxims of Tiruvalluvar என்னும் தலைப்பில் அவர் வெளியிட்டார். முதல் உலகப் போருக்குப் பிறகு பாண்டிச்சேரியில் தஞ் சமடைந்தபோது அவர் திருக்குறள் ஆய்வு மற்றும் மொழிபெயர்ப்பைத் துவக்கினார். அவர், 1 நவம்பர் 1914 அன்று அப்பணியைத் துவங்கி, 1 மார்ச் 1915 அன்று, பாண்டிச்சேரியில் இன்னமும் அகதியாக இருந்த நிலையில் நிறைவு செய்தார். இம்மொழிபெயர்ப்பை மேற்கொள்வதன் நோக்கம், திருவள்ளுவரின் மகத்தான படைப்பு குறித்த ஞானத்தை இயன்றவரை உலகெங்கும் பரவச் செய்வது மட்டுமல்ல, தமிழ் தவிர பிறமொழி பேசும் நம் நாட்டினரும் இதை தங்கள் மொழியில் மீண்டும் மொழிபெயர்ப்பு செய்ய வேண்டும் என்பதுமே ஆகும்.



இதன்மூலம், உலகம் முழுவதற்கும், அனைத்து காலத்திற்குமான உரையை அளித்த மகத்தான தார்மீக ஆசிரியரின் வார்த்தைகள், இப்போதாவது ஏழைகளுக்கு, அவரது நாட்டு மக்களில் எளிமையிலும் எளிமையானவர்களை சென்றடைந்து, மேலும் அவர்தம் இதயங்களில் மேன்மையான, கண்ணியமான, நெறிமிக்க வாழ்க்கைக்கான விதை விதைக்கப்பட வேண்டும் என்பதே எனது நோக்கம் என்று மொழிபெயர்ப்பின் முன்னுரையில் வ.வே.சு.ஐயர் குறிப்பிடுகிறார். மேற்சொல்லப்பட்ட வரிகளில் உள்ளதுபோல, வ.உ.சி.யின் ஆக்கங்களில் காணப்படும் ஜனநாயகமயமாக்கும் கோரிக்கையை ஐயரின் ஆக்கங்களிலும் காணலாம். வ.உ.சியும், வ.வே.சு.ஐயரும் தமிழ் கலாச்சாரத்தின்

தனித்தன்மையான அம்சங்களைக் கண்டு கொண்டாலும் அவர்கள் ஒருபோதும் பிரிவினையை நாடியதில்லை. அவர்களுடைய எழுத்துகளில் இந்திய தேசத்திற்கான விசுவாசத்துடன், தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் மீதான விசுவாசத்தையும் காணலாம். நவீன தமிழ் இலக்கியத்திற்கு அடித்தளம் அமைத்த காங்கிரசின் தீவிரவாத தேசியவாதியும் ஆவேசமான தமிழ்க் கவிஞருமான சுப்பிரமணிய பாரதியார் (1882–1921), புறநானூறு போன்ற தமிழ் இலக்கியங்களில் வரும் நாயக அம்சங்களால் அவர் எழுச்சி பெற்றார்.


அரிய தமிழ் இலக்கியங்களைக் கண்டறிந்து பதிப்பிப்பதற்காக அவர் உ.வே.சாமிநாத ஐயரை பாராட்டியுள்ளார். பாரதியார் தனது கவிதைகள் மூலம் சமூக கருத்துக்களைத் தெரிவித்து, காலனியாதிக்க அரசின் சுரண்டல்களை தொடர்ந்து விமர்சித்திருக்கிறார்.

ஒரு கவிதையில் 1917இல் ரஷ்யாவில் நடைபெற்ற போல்ஷேவிக் புரட்சியைப் போற்றிப் பாடி, ஜார் மன்னனின் வீழ்ச்சியை ஒரு சுவர் நொறுங்குவதாக வர்ணித்துள்ளார். அவரது இதழியல் எழுத்துக்கள் சமகால வரலாறு மற்றும் உலக அரசியல் பற்றிய அவரது பரந்த புரிதலை வெளிப்படுத்துகின்றன. காங்கிரசின் மற்ற தமிழ் அறிஞர்கள் போலவே பாரதியாரும் தமிழின் தனித்தன்மையைப் போற்றியுள்ளார். ஒரு கவிதையில், "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்", என்று எழுதியுள்ளார். எனினும், தமிழின் தனித்தன்மையை அவர் வலியுறுத்தியது, 'பாரத தேசம்' என்று அவர் குறிப்பிடும் இந்த நாட்டின் மீதான ஈடுபாட்டிற்கும், விசுவாசத்திற்கும் எவ்விதத்திலும் தடையாக இல்லை. வ.வே.சு.ஐயர் மற்றும் வ.உ.சிதம்பரம் பிள்ளைபோல் அல்லாமல் பாரதி காலனித்துவ அரசை விமர்சிக்க திருக்குறளை பயன்படுத்துகிறார்.

இந்தியா இதழில் வெளியான, 'அரசு எனும் பண்டைய தமிழ் கருத்தாக்கம்' என்னும் கட்டுரையிலும் காலனியாதிக்க அரசை கடுமையாக விமர்சிக்கிறார். 'நாடு' என்னும் அதிகாரத்தில் வரும்,

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு."

என்னும் குறளை மேற்கோள்காட்டி, நீங்காத பசித்துன்பமும், தீராத நோய்களும், தாக்கும் பகைவர்களும் இல்லாமல், வலிமையோடும், வளமோடும் விளங்குவதே, நல்ல நாடாகும், அவ்வாறு நாட்டை வழிநடத்தும் அரசே நல்ல அரசாகும் என்று திருவள்ளுவர் குறிப்பிடும் அரசுக்கு நேர் எதிரான அரசாக ஆங்கிலேய அரசு இருப்பதாக பாரதியார் விவரிக்கிறார்.



ஆங்கில காலனியாதிக்க ஆட்சி, நாட்டின் மக்களை காலரா, பிளேக் போன்ற தொற்றுநோய் பாதிப்புகளைப்போல் பாதித்திருப்பதாக அவர் வாதிடுகிறார். மேலும், நாடு முழுவதும் காணப்படும் பரவலான



பசி மற்றும் வறுமைக்குக் காரணமான பஞ்சம் ஆங்கிலேய ஒட்டுண்ணி அரசின் சுரண்டல் தன்மையால் உண்டானது என்கிறார். ஆங்கிலேய அரசு, தனது தகுதியற்ற ஆட்சி காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு எதிரிகளை உருவாக்கிக் கொண்டுள்ளது என்றும் பாரதியார் எழுதுகிறார்.

சுப்பிரமணிய பாரதியார் தமிழ் இலக்கியத்திலிருந்து பெறும் ஊக்கம் திருக்குறளுடன் நிற்கவில்லை. 1907இல் செந்தமிழ் இதழில் வெளியான மு.ராகவ ஐயங்காரின் 'வீரத் தாய்மார்கள்' கட்டுரையைப் பாராட்டி பாரதி எழுதியுள்ளார். வீரத் தாய்மார்கள் கட்டுரையில் ராகவ ஐயங்கார், சங்க இலக்கியத்தின் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூற்றில் இருந்து பாடல்களை மேற்கோள்காட்டி பண்டைய தமிழ்நாட்டில் தாய்மார்களின் வீரத்தை உணர்த்தியுள்ளார்.

வீரத் தாய்மார்கள், போர்களில் ஈடுபட்டு, வீரத்தை வெளிப்படுத்தி, தமிழ் மக்களை காத்த வீர ஆண்மகன்களை பெற்றெடுத்தனர் என்று குறிப்பிடுகிறார். இந்தியா இதழ் ராகவ ஐயங்காரின் கட்டுரையை அடையாளம் காட்டியதோடு, அந்த அறிஞரையும் பாராட்டியது. இந்த கட்டுரையில் காணப்படும் சுதேசி உணர்வைப் பாராட்டி பாரதி, ராகவ ஐயங்காருக்கு பின்வருமாறு கடிதம் எழுதினார்: செந்தமிழ் இதழில் வெளியான உங்களின் 'வீரத் தாய்மார்கள்' கட்டுரையைப் படித்து மிகவும் மகிழ்ந்த நிலையில், என் மகிழ்ச்சியை தெரிவித்து கடிதம் எழுத தீர்மானித்தேன்.

நான் உங்கள் புலமையைப் பாராட்டி எழுத வரவில்லை. உலகம் அதை நன்கறியும். உங்கள் கள்ளமில்லா இதயத்தில் கொழுந்துவிட்டு எரியத் துவங்கியுள்ள சுதேசி நெருப்பிற்கு தலைவணங்க விரும்புகிறேன். காலச் சக்கரத்தை உங்கள் கட்டுரை இறுதியில் குறிப்பிட்டுள்ளீர்கள். காலச் சக்கரம் சுழன்று கொண்டே இருக்கிறது. 'பாரதம்' என்னும் தாழ்வான நிலையிலிருந்து, 'மகத்தான பாரதம்' பிறப்பதற்கான காலம் வந்துவிட்டது. உங்கள் இதயத்தில் உண்டாகியுள்ள தீ, இப்போது குன்றிய நிலைக்கு சரிந்திருக்கும் இந்த நாட்டின் குடிமக்களுக்கு மகத்தான பாரதத்தை வழிகாட்டும் ஒளியாக அமைகிறது. இத்தீயை வணங்குகிறேன். இத்தீ நாட்டை சூழட்டும். ஓம்!

இந்திய தேசியப் போராட்டத்தில் தமிழ்மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கு ஆதரவாக நின்றார். தமிழ் போன்ற இந்திய மொழிகளுக்கு பதிலாக ஆங்கிலத்தை முன்னிறுத்திய இந்திய அறிவுஜீவிகளையும் பாரதியார் கடுமையாக விமர்சிக்கிறார். தேசத்தின்மீது உண்மையான பெருமிதம் கொண்டவர்கள் தாங்கள் வரித்துக்கொண்ட மொழி மற்றும் கலாச்சாரத்தின் ஆன்மாவை அறிந்துகொள்ள முற்பட்டு, அவற்றின் மறுமலர்ச்சி, மேம்பாடு, தூய்மை மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என பாலபாரதம் இதழில் அவர் எழுதுகிறார். வங்காளம், மகாராஷ்டிரா, மற்றும் ஆந்திராவில் தலைவர்கள் தங்கள் மொழி

வளர்ச்சிக்கு உதவியதை சுட்டிக்காட்டுபவர், தமிழ் மொழிக்கு பாதகமான வகையில் உள்ள தமிழ் மக்களின் ஆங்கில மோகத்தை கடுமையாக விமர்சிக்கிறார்.

கீழ்க்கண்ட வரிகளில் தமிழ் மொழியின் தொன்மையை உணர்த்துகிறார்:

"20 நூற்றாண்டுகளாக, வடமொழி அல்லது உலகின் எந்த ஒரு மொழியின் மேன்மையுடன் ஒப்பிடக்கூடிய வகையில் தமிழ் இலக்கியமும், சிந்தனையும் மிகவும் மேம்பட்டிருந்தது. கம்பன் போன்ற ஒரு கவிஞரும், மனிதநேயத்தின் ஆசிரியரான வள்ளுவரும் தங்கள் எண்ணங்கள், கனவுகள், மற்றும் இதயத்தின் ஒலிகளுக்கு ஏற்ற வாகனமாக தமிழை கருதினர்". அதன்பிறகு, தேசத்தின் இலக்கியம் மற்றும் பண்பாட்டின் வளர்ச்சிக்கு உதவுமாறு கல்வி கற்ற நாட்டு மக்களை பாரதியார் கேட்டுக்கொள்கிறார். மக்களை ஆங்கில மொழி மோகம் பிடித்தாட்டும் நிலையில், தமிழ் மொழி, இலக்கியத்தின் செழுமைக்காக தொடர்ந்து பாடுபடும் உ.வே.சாமிநாத ஐயரை அவர் பாராட்டுகிறார்.



3

தமிழ் நாட்டில் பழங்குடியின சுதந்திரப் போராட்ட வீரர்கள்: ஓர் ஆய்வு செய்யப்படாத வரலாறு

டாக்டர் வேலாயுதம் சரவணன் மற்றும் S.வீரமணி
ஜவஹர்லால் நேரு ஆய்வு மையம், புதுதில்லி. &
மேலாண்மை ஆய்வுத் துறை, ஜாமியா மில்லியா இஸ்லாமியா, புது தில்லி

1. அடிப்படைக் கருத்து

'சுதந்திரப் போராட்ட வீரர்' என்பதன் பொருள் என்ன? என்னும் கேள்வியிலிருந்து நாம் துவங்குவோம். ஓர் சுதந்திரப் போராட்ட வீரர் என்பவர், ஒடுக்குமுறையைப் பிரயோகிக்கும் ஓர் முறைகேடான அரசை எதிர்த்துப் போராடுபவர் என்று பொருள் கொள்ளலாம். இந்தியச் சூழலில், காலனியாதிக்கத்தை எதிர்த்துப் போரிட்டவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்று கருதப்படுகின்றனர். அவர்கள் பழங்குடியைச் சேர்ந்தவர்கள் எனில் பழங்குடி சுதந்திரப் போராட்ட வீரர்கள் என பிரத்யேகமாகக் குறிப்பிடலாம். காலனியாதிக்கத்திற்கு முந்தைய காலத்தில் நிகழ்ந்த ஒரு சில பழங்குடி கிளர்ச்சிகள் கவனிக்கப்படாமல் போயிருக்கலாம். ஏனெனில் அக்காலகட்டத்தில் வெளித்தலையீடு மிகவும் குறைவாக இருந்தது. ஒப்பீட்டு அளவில் வன வளங்கள் அபரிமிதமாக இருந்ததால் அரசுக்கு எதிரான வன்முறையான எதிர்வினைகள் குறைவாகவும், தீவிரம் குறைந்ததாகவும் இருந்திருக்க வேண்டும் (சிங், 2004:46).

"காலனியாதிக்கத்திற்கு முந்தைய நீண்ட காலத்தில், அரசு, விவசாயிகள், மேய்ச்சல்காரர்கள் ஆகியோருக்கும் வனங்களில் வசிப்பவர்களுக்கும் இடையே மோதல்கள் இருந்தாலும், காலனியாதிக்க காலத்தில் குறிப்பாக 19ஆம் நூற்றாண்டில், காடுகள் வர்த்தக நோக்கில் சுரண்டப்படுவது துவங்கியபோது தான், காடுகள் சார்ந்த போராட்டங்கள், எழுச்சிகள் மற்றும் இயக்கங்கள் பெரிய அளவில் நிகழ்ந்தன" என்று சிங் சரியாக சுட்டிக்காட்டுகிறார் (சிங், 2004:47). காலனியாதிக்க காலத்தில் பல பழங்குடி எழுச்சிகள் நடைபெற்றன. 1778 முதல் 1947 வரை இந்தியாவில் 80 முக்கிய பழங்குடி கிளர்ச்சி நடைபெற்றதாக ராகவய்யா குறிப்பிடுகிறார். (ராகவய்யா, 1971:261–266). இருப்பினும், பல கிளர்ச்சிகள் பதிவு செய்யப்படவில்லை. இப்போதைய தமிழ்நாட்டு மற்றும் முந்தைய மதராஸ் மாகாணத்தில், சேலம் மாவட்டத்தில் உள்ள கொல்லி மலையில் 18ஆம் நூறாண்டின் பின்பகுதியில் நடைபெற்ற பழங்குடி கிளர்ச்சி இதில் ஒன்று (சரவணன், 1999:67–81). எப்படிப் பார்த்தாலும் இக்கிளர்ச்சிகள் அனைத்தும் அதிக வருவாய் கோரிக்கைக்கு எதிரான போராட்டங்களாகவும் அதே சமயம் தங்களது அரசியல், நிர்வாக, மற்றும் கலாச்சார அடையாளத்தையும், தற்சார்பு பொருளாராதாரத்தையும் தக்க வைத்துக்கொள்வதை அடித்தளமாகக் கொண்டும் அமைந்துள்ளன (ராகவய்யா, 1979:14).

காலனியாதிக்க பழங்குடி இயக்கங்கள், கிளர்ச்சிகளை மூன்று கட்டமாகப் பிரிக்கலாம். 1857 வரை, கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியில், இந்த இயக்கங்களின் நோக்கம் ஒரு சில சலுகைகளைப் பெறுவதாக மட்டுமே இருந்ததாக ஸ்ரீவத்சவா கருதுகிறார். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இப்போராட்டங்கள், நில வருவாய் முறை, குடிமை மற்றும் குற்ற விதிமுறைகள், பரவலான பஞ்சத்திற்கு மத்தியில் உண்டான அதிகார வெறுப்பு ஆகியவற்றுக்கு எதிரானதாகவே இருந்தன. 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் இந்த இயக்கங்களின் இலக்கு, கந்துவட்டிக்காரர்கள், வர்த்தகர்கள், மற்றும் அரசு அதிகாரிகளுக்கு எதிரானதாக இருந்தது (ஸ்ரீவத்சவா, 1986:5). ஆரம்பகால பழங்குடி கிளர்ச்சிகள், 19ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் நடைபெற்ற பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர்கள் அல்லது பின்னர் 1880களில் உண்டான தேசிய இயக்கத்தைப்போல ஆங்கில ஆட்சியிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்பதாக அமையவில்லை (சரவணன், 1999:78). எதிரில் நிற்பவர்கள் இந்திய ஆட்சியாளர்களானாலும் காலனியாதிக்க சக்தியானாலும், பழங்குடி மக்களின் போராட்டம், பாதிப்புக்குள்ளாகும் தங்களது தனித்துவமான அடையாளத்தையும், ஆண்டாண்டு கால பாரம்பரியங்களையும், பூர்வகுடி வாழ்க்கை முறையையும் காப்பதற்கான ஒன்றாகவே இருந்தது.

இந்தியச் சூழலில், காலனியாதிக்க அரசு (1792–1947), நூற்றைம்பது ஆண்டுகளுக்கும் மேலாக சுரண்டல் மற்றும் அடக்குமுறையை மேற்கொள்ளும் அரசாகவே இருந்தது. இது இந்தியத் துணைக் கண்டத்தின் பிரக்ஞையிலும் பரப்பிலும் பல்வேறு காலகட்டங்கள், பல்வேறு இடங்கள், பார்வைகள் மற்றும் பலவகை பரிமாணங்களிலிருந்து தூண்டுதலை உண்டாக்கியது. 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 19ஆம் நூற்றாண்டின் இறுதி வரை (1947), காலனி ஆதிக்கத்திற்கு எதிரான மக்கள் வெறுப்பு போராட்டங்கள், கிளர்ச்சிகள், மற்றும் புரட்சியாக அடையாளப்படுத்தப்பட்டன அல்லது கருதப்பட்டன. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை அல்லது 1885இல் இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவப்படும் வரை, இந்திய துணைக் கண்டத்தில் தேசிய அளவிலான சுதந்திரப் போராட்ட இயக்கம் இல்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும், 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் துவங்கி, 19ஆம் நூற்றாண்டின் துவக்கம் வரை நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிகழ்ந்த ஆர்ப்பாட்டங்கள், கிளர்ச்சிகள், போராட்டங்கள், ஆகியவை வெளிப்படையானவை என்பதை மறுக்க முடியாது.

வரலாற்று ரீதியாக, பழங்குடியின மக்களும், தங்கள் பாரம்பரிய உரிமைகளை உறுதிபடுத்திக் கொள்ளவும், சமூக பொருளாதார மற்றும் கலாச்சார அமைப்புகளை தக்க வைத்துக்கொள்ளவும் ஆட்சியாளர்களுக்கு எதிராக போராடிக் கொண்டிருந்தனர். அத்துடன், தங்கள்மீது திணிக்கப்பட்ட சுரண்டல் தன்மை கொண்ட அமைப்புகளால், குறிப்பாக தங்கள் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்கான அதிகாரம் பெற்ற காலனியாதிக்க விதியால் மிகவும் அல்லல் பட்டுக்கொண்டிருந்தனர். பிரதேசம் சார்ந்து அதன் இயல்பிலும் வழிமுறையிலும் மாற்றங்கள் இருந்தாலும், இந்த எதிர்ப்பு எந்த ஒரு குறிப்பிட்ட பகுதிக்கும் மட்டுமே உரியதல்ல.

இந்திய துணைக் கண்டத்தில், சென்னை மாகாணத்தின் அங்கமாக இருந்த தற்போதைய தமிழ்நாடு, காலனியாதிக்க நிர்வாகத்திற்கு எதிராகப் போராடிய முன்னோடி குழுவாக அமைந்தது. அதில் ஜமீந்தார்கள் போன்ற மேட்டுக்குடிகள் மற்றும் குறுநில ஆட்சியாளர்கள் மட்டும் பங்கேற்கவில்லை, பழங்குடியின மக்களும், குறிப்பாக 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதாவது, பொதுவாக தமிழ் மக்கள் மட்டுமல்ல, குறிப்பாக பழங்குடி மக்கள் இந்திய துணைக் கண்டத்தின் காலனியாதிக்க ஆட்சிக்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தை முன்னின்று நடத்தியதில் கவனத்தை ஈர்க்கின்றனர். உதாரணமாக, 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக வீரமாகப் போராடிய, பெரிய மருது, சின்ன மருது, வீரபாண்டிய கட்டபொம்மன் போன்ற புரட்சிகர பிராந்திய தலைவர்கள் வரலாற்றின் பக்கங்களில் நன்கறியப்பட்டவர்கள். இந்திய துணைக்கண்டம் தழுவிய விரிவான பிராந்திய பார்வைக்கான சார்பில்லா சீராய்வுக்கு இத்தகைய மகத்தான முயற்சிகள் நீடிக்க வேண்டும். இது உண்மையிலிருந்து விலகாமல் முற்றிலும் வரலாற்று சான்றுகளின் அடிப்படையில் அமைய வேண்டும்,



எந்த நிலையிலும் எந்தவொரு கோட்பாடுகளும் பாரம்பரியங்களையும் சாராது எவ்வித தத்துவத்தின் தாக்கமும் இல்லாமல் அமைய வேண்டும்.

தென்னிந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பழங்குடியின மக்கள்தொகையின் அடர்த்தி குறைவாகவே இருந்தது. மனித சஞ்சாரமும் அதன் அடர்த்தியும் மலைப்பகுதிகளில் குறைவாகவே இருந்தன. உதாரணமாக சங்க காலத்தில் (கிமு 3 முதல் கிபி 5 வரை), பல சங்கப்பாடல்களின் கருப்பொருளாகப் பாடப்பட்ட கொல்லி மலையில், அக்காலம் முதலே மக்கள் தொகை அடர்த்தி மிகவும் குறைவாகவே இருந்தது. பத்தாம் நூற்றாண்டில் இது 500 ஆக இருந்தது (ராஜனன், 1992:131–132). காலனியாதிக்க காலத்தில்கூட, மலைப்பகுதிகளில் மக்கள் தொகையில் பெரிய முன்னேற்றம் ஏற்படவில்லை. சமவெளியுடன் ஒப்பிடும்போது, இது எப்போதும் குறைவாகவே இருந்தது. உதாரணமாக, சென்னை மாகாணத்தைச் சேர்ந்த சேலம் மாவட்டத்தில் 18ஆம் நூற்றாண்டின் இறுதியில்கூட பழங்குடி மக்கள்தொகை சதுர மைலுக்கு 174 பேர் என்றே இருந்தது. இச்சூழலில், காலனியாதிக்க கால தமிழ்நாட்டில் பழங்குடி சுதந்திரப் போராட்ட வீரர்களின் தோற்றத்தை அளிக்க இந்த அத்தியாயம் முயற்சிக்கிறது. சுதந்திரப் போராட்டத்தில் பழங்குடி மக்களின் பங்கு மற்றும் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி துவங்கி, 20ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதி வரை தமிழ்நாட்டின் பழங்குடி மக்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஆற்றிய பங்கு மற்றும் அவர்கள் ஆங்கிலேயர்களை எவ்வாறு எதிர்த்தனர் என்பதை விவரிப்பதே இந்த அத்தியாயத்தின் முக்கிய நோக்கம்.

இந்த அத்தியாயம் ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது பகுதி தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு பழங்குடிகள் பற்றிய சுருக்கமான அறிமுகத்தை அளிக்கிறது. மூன்றாவது பகுதி காலனியாதிக்கத்திற்கு முந்தைய காலத்தில் (1792), பல்வேறு பழங்குடியினரின் சமூக, பொருளாதார நிலையை அலசுகிறது. நான்காவது பகுதி, காலனியாதிக்க தலையீடு, தமிழ்நாட்டின் பல்வேறு மலைப்பகுதிகளில் சட்ட வழிமுறைகள் வாயிலான போராட்டங்கள் மற்றும் சவால்கள் மூலம் எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டன (1792–1947) என்பதை ஆய்வு செய்கிறது. கடைசிப் பகுதி, முடிவுரையாக அமைகின்றது.

2. தமிழ்நாட்டின் பல்வேறு பழங்குடியினர்

தமிழ்நாட்டில் 36 பழங்குடியின சமூகங்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பரவி உள்ளன. அதே சமயம், ஒவ்வொரு பழங்குடியினரும் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் மட்டுமே வசிக்கின்றனர். பழங்குடியின மக்கள் பட்டியல் வருமாறு: அதியன், ஆராநாடன், இரவல்லன், இருளர், காடர், கம்மாரா, கனிகாரன்/கனிகர், கனியன்/கன்யன், காட்டுநாயக்கன், கொச்சு வேலன், கோண்டா கப்பு, கோண்டாரெட்டி, கோராகா, கோட்டா குடியா/மேலகுடி, குரிச்சன், குரும்பர், குருமன், மகா மலாசர், மலை ஆரயன், மலை பண்டாரம், மலை வேடன், மலை குறவன், மலாசர் மலையாளி, மலேயகண்டி, மன்னன், முடுகர்/முதுவன், முத்துவன், பல்லேயன், பள்ளியன், பள்ளியர், பனியர், சோளகர், தோடர், உருலயர்.

3. தமிழ்நாட்டின் பல்வேறு பழங்குடியினரின் சமூக, பொருளாதார நிலை (1792 வரை)

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் 36 பழங்குடியின சமூகங்கள் வாழ்கின்றனர். ஒவ்வொரு பழங்குடியினரும் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் மட்டுமே வசிக்கின்றனர் (அட்டவணை 1). சில மாவட்டங்களில் மட்டும் வசிக்கும், அவர்களுடைய தொழில்களும்,

பயிரிடுபவர்கள்/மாற்றுப் பயிரிடுபவர்கள், மேய்ப்பர்கள், வேட்டையாடுபவர்கள், பறவை பிடிப்பவர்கள், நாடோடிகள், தொழிலாளர்கள், காவல்காரர்கள், கூடை பின்னுபவர்கள், துணி வெளுப்பவர்கள், ஜோதிடர்கள், பொற்கொல்லர்கள், தச்சர்கள், கொத்தனார்கள், முடிதிருத்துபவர்கள் என பலவிதமாக அமைகின்றன. அதாவது, தமிழ்நாட்டுப் பழங்குடியினர் காடுகளை மட்டுமே சார்ந்திராமல், பலவிதமான பொருளாதாரம் சார்ந்த பணிகளில் ஈடுபடுகின்றனர். (அட்டவணை 1). அவர்களின் பொருளாதாரப் பணிகள் வேறுபட்டிருப்பதோடு, அவர்களுடைய மொழியும் பொதுவானது அல்ல, குழுவுக்கு குழு அது வேறுபடுகிறது. ஒரு சில குழுக்கள் தங்களுக்கான வட்டார வழக்குகளையும் கொண்டுள்ளனர். பெரும்பாலான குழுக்கள் தமிழ் பேசுகின்றனர். பல குழுக்கள், கன்னடம், தமிழ், தெலுங்கு, துளு, உருது கலந்து பேசுகின்றனர். (அட்டவணை 1). பரவலாக கருதப்படுவதுபோல, பழங்குடியினர் என்பவர்கள் காடுகளை மட்டுமே சார்ந்திருப்பவர்கள் அல்ல, பல்வேறு பொருளாதார தொழில்களில் ஈடுபட்டு, பல மொழிகள் பேசுபவர்கள். சுருக்கமாக சொல்வது என்றால், இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் எட்கர் தர்ஸ்டன், ரங்காச்சாரி விவரித்ததுபோல, பல்வேறு பழங்குடியினர் பல்வேறு பகுதிகளில் தங்கி, பல்வேறு தொழில்களில் ஈடுபடுபவர்கள்.

அட்டவணை 1:

தமிழ்நாட்டில் பழங்குடியினர் வசிப்பிடம், தொழில் மற்றும் மொழிகள்

வ. எண்	பழங்குடியினரின் பெயர்	வசிப்பிடம்	தொழில்	மொழி
1	அதியன்	கேரளாவின் கண்ணூர் மாவட்டம் மற்றும் கர்நாடகாவில் குடகு மானந்தவாடி தாலுக்கின் (கேரளா) திரிசிலேரி மற்றும் வேமம் கிராமங்கள். மேலும், தமிழ்நாடு திருநெல்வேலி மாவட்டத்திலும் அடியேன் சமூகம் காணப்படுகிறது	அடிமை	ஆதியபாஷா
2	ஆராநாடன்	மலப்புரம் மாவட்டத்தின் ஏர்நாடு தாலுகா மற்றும் மலபார் மாவட்டத்தின் ஏர்நாடு தாலுகா	வேட்டை	தமிழ்
3	இரவல்லன்	கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி மற்றும் உடுமலைப்பேட்டை தாலுகாக்கள்		தமிழ்/ மலையாளம்
4	இருளர்	சென்னை, தென் ஆற்காடு, சேலம், வட ஆற்காடு அம்பேத்கர், தருமபுரி, திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர்	உழவு	தமிழ்/இருளா

வ. எண்	பழங்குடியினரின் பெயர்	வசிப்பிடம்	தொழில்	மொழி
5	காடர்	ஆனைமலை, கோயம்புத்தூர்	நாடோடிகள்	கடா, தமிழ் மற்றும் மலையாளம்
6	கம்மாரா	கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் கிழக்கு மற்றும் மேற்கு கோதாவரி மாவட்டம்	கொல்லன், பொற்கொல்லன், பித்தளை வேலை செய்பவன், கொத்தனார்	
7	கனிகாரன் / கனிகர்	கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம்	மாற்று சாகுபடி	மலையாளம்/ தமிழ்
8	கனியன் / கன்யன்	கன்னியாகுமரி மாவட்டம்	ஜோதிடர்	மலையாளம்/ தமிழ்
9	காட்டுநாயக்கன்	நீலகிரி, நீலம்பூர் மற்றும் வயநாடு மலைகள்	பறவை பிடித்தல்	கன்னடம், தமிழ் மற்றும் மலையாளம்
10	கொச்சு வேலன்	பத்தனம்திட்டா வட்டம், கோட்டயம் மற்றும் இடுக்கி மாவட்டம்	வேட்டை	மலையாளம்
11	கோண்டா கப்பு	விசாகப்பட்டினம்	உழவு	தெலுங்கு
12	கோண்டா ரெட்டி	கோதாவரி	மாற்று சாகுபடி	தெலுங்கு
13	கோரகா	தென் கனரா	கூடை நெய்தல்	கொரகா, துளு அல்லது கன்னடம்
14	கோட்டா	நீலகிரி	சேவை வழங்கும் சமூகம்	கோட்டா மற்றும் தமிழ்
15	குடியா/மேலகுடி	மைசூர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகள்	அடிமை	துளு
16	குரிச்சன்	தர்மபுரி மாவட்டம்	வேட்டை	கன்னடம், தமிழ், தெலுங்கு மற்றும் உருது
17	குரும்பர்	நீலகிரி மாவட்டம்	ஆடு மேய்த்தல்	
18	குருமன்	தர்மபுரி மாவட்டம்	மரம் வெட்டுதல்	கன்னடம் / தமிழ்
19	மகா மலாசர்	பொள்ளாச்சி மற்றும் உடுமலைப்பேட்டை வட்டம்	உழவு	மலையாளம்

வ. எண்	பழங்குடியினரின் பெயர்	வசிப்பிடம்	தொழில்	மொழி
20	மலை ஆரயன்	மீனாச்சி மற்றும் செங்கனாசரி தாலுகாக்கள், கேரளாவின் கோட்டயம் மாவட்டம்	காவலர்	மலையாளம்
21	மலை பண்டாரம்	கேரளா		தமிழ் / மலையாளம்
22	மலை வேடன்	வட ஆற்காடு	வேட்டை	மலையாளம் / தமிழ்
23	மலை குறவன்	கன்னியாகுமரி மாவட்டம்		மலையாளம் / தமிழ், குறவன், மலையாளம்
24	மலாசர்	பொள்ளாச்சி வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்	உழவு / தொழிலாளர்கள்	தமிழ் / மலையாளம்
25	மலையாளி	வட ஆற்காடு, தென் ஆர்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் தருமபுரி	உழவு	தமிழ்
26	மலேயகண்டி	தமிழ்நாடு முழுவதும்		
27	மன்னன்	கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள்	சலவைத் தொழில் / சிகை திருத்தம்	தமிழ்
28	முடுகர் / முதுவன்	கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை மற்றும் அட்டப்பாடி பகுதியை சேர்ந்த மாதேஸ்வரன் சிகரம்	உழவு	மலையாளம், கன்னடம் மற்றும் துளு
29	முத்துவன்	இடுக்கி மாவட்டம், கேரளா மற்றும் அதை ஒட்டிய தமிழ்நாட்டைச் சேர்ந்த மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்கள் இணையும் பகுதி		தமிழ் மற்றும் மலையாளம்
30	பல்லேயன்	பழனி மலை		தமிழ்
31	பள்ளியன்	திண்டுக்கல் மாவட்டம் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை	உழவு	
32	பள்ளியர்	மதுரை, திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்டங்கள்		தமிழ்
33	பனியர்	தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா	அடிமை	தமிழ் மற்றும் மலையாளம்
34	சோளகர்	மேற்கு தொடர்ச்சி மலைகள்	உழவு / வேட்டை	கன்னடம்

வ. எண்	பழங்குடியினரின் பெயர்	வசிப்பிடம்	தொழில்	மொழி
35	தோடர்	நீலகிரி	ஆயர்	தோடர் வட்டார மொழி வழக்கு
36	உருலயர்	ஈரோடு மாவட்டம்	உழவு	தமிழ் மற்றும் கன்னடம்

ஆதாரங்கள் : எட்கர், தாஸ்டன் மற்றும் கே.ரங்காச்சாரி, தென்னிந்தியாவில் சாதி மற்றும் பழங்குடியினர், ஏழு தொகுதிகள், சென்னை, காஸ்மோ பதிப்பகம், 1909 மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தமிழ்நாடு – (tn.gov.in)

4. காலனியாதிக்கம் மற்றும் பழங்குடியினப் போராட்டம் (1792-1947)

பல நூற்றாண்டுகளாக பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தோடு ஒருங்கிணைந்த பகுதியாக இருந்த காடுகள் உள்ளிட்ட இயற்கை வளங்களைக் கட்டுப்படுத்தத் தொடங்கியது முதலே காலனியாதிக்க சுரண்டலும், வர்த்தக முயற்சிகளும் தொடங்கின. காலனியாதிக்க அரசு, இயற்கை வளங்களைக் கட்டுப்படுத்த முயற்சித்ததோடு நிறுத்தாமல், சென்னை மாகாணத்தில், குறிப்பாக தற்போதைய தமிழ்நாட்டுப் பகுதிகளில் உள்ள ஒவ்வொரு பழங்குடியினப் பிரிவினராலும் பின்பற்றப்படும் தனித்துவமான பாரம்பரிய, நிர்வாக, நீதியியல், கலாச்சார வழக்கங்களையும் கேள்விக்குள்ளாக்கியது. இருப்பினும், முன்னர் குறிப்பிட்டபடி, இந்திய துணைக்கண்டத்தின் உண்மையான சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்னும் பெருமைக்குரியவர்கள் பழங்குடியினரே என்ற போதிலும், ஐரோப்பியக் கல்வி பெற்ற இந்தியர்களால் அப்பெருமை தட்டிப் பறிக்கப்பட்டது. ஆந்திரா முதல் குஜராத் வரை மற்றும் இந்திய துணைக்கண்டத்தின் மற்ற பகுதிகளில் உள்ள பொது ஆவணங்களிலும் காணலாம். ஆச்சர்யம் அளிக்கும் வகையில், இந்திய சுதந்திரப் போராட்ட வரலாறு, 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தே சொல்லப்படுவதால், 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பழங்குடியினர் போன்ற விளிம்புநிலை மக்கள், மற்றும் பிறரது குரல்கள் கவனம் பெறவில்லை. அதாவது, இந்திய சுதந்திரப் போராட்ட வரலாறு என்பது அதன் ஒரு பகுதியின் விவரிப்பு மட்டுமே தவிர, இந்திய துணைக் கண்டம் கண்ட பரந்துபட்ட கிளர்ச்சிகள் மற்றும் போராட்டங்களின் முழுமையான பிரதிபலிப்பு அல்ல. இதை வேறு விதமாகச் சொல்வது என்றால், இந்திய சுதந்திர இயக்கம் என்பது, முதலாளித்துவ மற்றும் பிரபுத்துவ மேட்டுக்குடியினரின குரலாகும். அவர்கள் குரல் பதிவு செய்யப்பட்டதே தவிர, இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் விளிம்பு நிலை மக்களின் பங்களிப்புகள் பெரும்பாலும் பதிவாகவில்லை. எனவே, பழங்குடியின மக்கள் போன்ற விளிம்பு நிலை மக்களின் குரல்கள், இந்திய துணைக்கண்டத்தின் சுதந்திரப் போராட்ட வீரர்களாக பொதுவெளியில் பிரதிபலிக்கும் வகையில், உடனடியாக பதிவுகளில் சேர்க்கப்பட்டு, சரி செய்யப்பட வேண்டும். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் காலனியாதிக்க அரசு, ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நிர்வகித்து வந்த பல மலைப்பகுதிகளை முறையற்று கையாண்டது; இது சென்னை மாகாண பழங்குடியினப் பகுதிகளில் பல்வேறு இயக்கங்கள் மற்றும் கிளர்ச்சிகளுக்கு வித்திட்டது. சுதந்திரப் போராட்டத்தில் விளிம்பு நிலை மக்களின் குரல்களை பதிவு செய்யும் தமிழ்நாடு அரசின் முயற்சி பாராட்டுக்குரியது. தாமதமானதாக இருந்தாலும், உளப்பூர்வமான மன்னிப்புக் கோரலுடன், 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் மத்தியப்

பகுதி வரை ஆங்கிலேய நிர்வாகத்திற்கு எதிராக நடைபெற்ற முக்கிய பழங்குடியினப் போராட்டங்களை நாம் அலசி ஆராயலாம்.

அ) பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி

கொல்லி மலை என குறிப்பிடப்படும் மலை தமிழகத்தின் மத்திய பகுதியில், நாமக்கல் மற்றும் திருச்சி ஆகிய இரண்டு மாவட்டங்களில் பரவியுள்ள மலைத்தொடராகும். 1,300 மீட்டர் உயரம் கொண்ட இம்மலைத்தொடர், 280 சதுர கிலோ மீட்டரில் பரவியுள்ளது. இங்குள்ள பழங்குடியினர் மலையாளிகள் என அழைக்கப்படுகின்றனர்.

தமிழ்நாட்டில், காலனியாதிக்க அரசுக்கு எதிரான முதல் போராட்டம் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், கொல்லி மலை மலையாளி பழங்குடியினரால் நடத்தப்பட்டது. அர்த்த விஞ்ஞானா (சரவணன் 1999) என்னும் இதழில் வெளிவந்த "18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சென்னை மாகாணத்தின் சேலம் மற்றும் பாரமகால் மாவட்டங்கள் சார்ந்து இந்தியாவில் நடைபெற்ற பழங்குடியின கிளர்ச்சிகள்" என்னும் கட்டுரையே காலனியாதிக்கத்தின் தொடக்க காலத்தில் நடைபெற்ற அதிகம் ஆராயப்படாத இப்பழங்குடியின எதிர்ப்பு குறித்து முதலில் ஆய்வு செய்தது என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். தமிழ்நாட்டின் கொல்லிமலை மற்றும் சென்னை மாகாணத்தின் மற்ற பகுதிகளில் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிகழ்ந்த பழங்குடியின கிளர்ச்சிகளுக்கான காரணங்களை சுருக்கமாகப் பார்ப்பது இப்பிரச்சனையை புரிந்து கொள்ள உதவும். 1797இல் படைத்தலைவர் அலெக்சாண்டர் ரீட் அவர்களின் கணக்கெடுப்பும், தீர்வும் அறிமுகப்படுத்தப்படும் முன்பு வரை, பழங்குடியினர் கொல்லிமலையில் உள்ள கோம்பை கிராமங்களை நிர்வகித்து வந்தனர். இந்த கணக்கெடுப்பின்போது, கோம்பை கிராமங்களுக்கு அளிக்கப்படவேண்டிய வருவாய், அதாவது சமவெளிகளில் உள்ள மற்ற கிராமங்கள் போலவே மலைச்சரிவில் அமைந்துள்ள கிராமங்களின் வருவாயும் மலையாளி குழுத் தலைவருடன் ஆலோசிக்கப்படாமலே தன்னிச்சையாக தீர்க்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது. இது, கோம்பை கிராமங்கள் மீதான தங்கள் கட்டுப்பாட்டை விட்டுக்கொடுக்க விரும்பாத மலையாளி பழங்குடியினரின் கடும் எதிர்ப்புக்கு உள்ளானது. அதிகாரிகளிடம் ஆரம்பகட்ட முறையிடல்களுக்குப் பிறகும், எந்தப் பலனும் கிடைக்காததால், பழங்குடியினர் வரி செலுத்த மறுத்ததோடு, தீர்வுக் கூட்டங்களையும் புறக்கணித்தனர். இறுதியில் அரசு இக்கிளர்ச்சியை நசுக்கி, தனது கட்டுப்பாட்டின்கீழ் மலைப்பகுதியைக் கொண்டு வந்தது (சரவணன், 1999). கோம்பை கிராமங்கள் பழங்குடிகளின் சமூக பொருளாதார வாழ்வில் முக்கிய அங்கமாக இருந்ததோடு, தங்களின் பெருமிதமாகவும் அடையாளமாகவும் திகழ்ந்தவை பறிக்கப்பட்டதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இருப்பினும், இக்கிளர்ச்சி காலனியாதிக்க அரசால் நசுக்கப்பட்டது. சுதந்திரப் போராட்ட வரலாற்றில் குறிப்பாக தமிழ்நாட்டின் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் இக்கிளர்ச்சி முன்னோடியான ஒன்றாக அமைகிறது.

ஆ) பத்தொன்பதாம் நூற்றாண்டு

பத்தொன்பதாம் நூற்றாண்டில், வயநாட்டைச் சேர்ந்த குறிச்சியர், குறும்பர் போன்ற பழங்குடிகளும் சேலம் மாவட்டத்தின் சேர்வராயன் மலைகள், கல்வராயன் மலைகளைச் சேர்ந்த பழங்குடிகளும் காலனியாதிக்கத்தை எதிர்த்து கிளர்ச்சி செய்தனர்.

1) வயநாடு

குறிச்சன் மற்றும் குறும்பர்கள் கேரளாவின் வயநாட்டில் பெருமளவு வசித்தாலும், தமிழ்நாட்டின் தர்மபுரி மற்றும் நீலகிரி மாவட்டங்களிலும் உள்ளனர். குறிச்சர்கள் வேட்டையாடுதலை தொழிலாகக் கொண்டவர்கள். குறும்பர்கள் மேய்ப்பர்கள். ஒரு நூற்றாண்டுக்கு முன்னர், அரிப்பன் மற்றும் வேடன் என்னும் வேடர் ஆட்சியாளர்களை எதிர்த்துப் போரிட கோட்டயம் மன்னரால் குறிச்சர்கள் வயநாட்டிற்கு அழைத்து வரப்பட்டு, பின்னர் அங்கேயே விவசாயிகளாக குடியமர்த்தப்பட்டனர். எனினும் 1812இல், தங்களின் பாரம்பரிய நிலங்களை இழந்தது மற்றும் தங்களுடைய உள்விவகாரங்களில் நிகழ்ந்த தலையீடுகள் காரணமாக கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிரான அவர்களுடைய கிளர்ச்சி, தோல்வியில் முடிந்தது. வயநாட்டில் உள்ள மற்றொரு பழங்குடியினமான குறும்பர்களும் இதை ஆதரித்தனர். குறிச்சன்கள் மற்றும் குறும்பர்கள் சந்திப்பிற்கு கம்பெனி எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து போராட்டம் வெடித்தது. வயநாட்டின் சுல்தான் பத்தேரி மற்றும் மனத்தவாடியில் உள்ள கம்பெனிகளின் இராணுவ தளங்கள்மீது வில்அம்பு கொண்டு தாக்கினர். எனினும், நிர்வாகம் இக்கிளர்ச்சியை நசுக்கியது.

2) சேர்வராயன் மலைகள்

தமிழ்நாட்டின் சேலம் மாவட்டத்தில் 1600 மீட்டர் உயரத்தில், 400 கிமீ சதுர பரப்பில் சேர்வராயன் மலைகள் அமைந்துள்ளன. இங்கு வசிக்கும் பழங்குடியினர் மலையாளிகள் என அழைக்கப்படுகின்றனர்.

19ஆம் நூற்றாண்டின் மூன்றாம் பத்தாண்டில் இங்கு காபி தோட்டங்கள் அமைக்கப்பட்டு, 10,000 ஏக்கருக்கும் மேலான பரப்பளவில் காடுகள் அழிக்கப்பட்டு காபி பயிரிடப்பட்டு, காலனி நிருவாகத்தால் அந்நிலங்கள் காபி சாகுபடியின்கீழ் கொண்டுவரப்பட்டது. அப்பாவி பழங்குடியினர் நிலங்களை அவர்கள் அனுமதியில்லாமல் எடுத்துக்கொண்ட காலனியாதிக்க சக்திகள், இந்த கையகப்படுத்தலுக்கான எதிர்ப்புக் குரல்களையும் கடுமையாக நசுக்கியது. அவர்கள் குரல்கள் நசுக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், இந்த எதிர்ப்பு காலனியாதிக்க ஆவணங்களில் பதிவு செய்யப்படாத கடுமையான அநீதியும் நிகழ்ந்தது.

"காலனியம் மற்றும் காபி தோட்டங்கள்: 19ஆம் நூற்றாண்டில் சென்னை மாகாணத்தில் சுற்றுச்சூழல் மற்றும் பழங்குடியினர் சீரழிவு" என்னும் தலைப்பில் இந்தியன் எகனாமிக் அண்ட் சோஷியல் ரெவ்யூ இதழில் (சரவணன் 2004) வெளியான கட்டுரையே, காலனியாதிக்கத்தின் ஆரம்பகாலத்தில் வெளியுலகிற்கு அதிகம் தெரியாமல் நிகழ்ந்த இந்தப் பழங்குடியின எதிர்ப்பை முதலில் பதிவு செய்தது என்பதை இங்கு மீண்டும் குறிப்பிட வேண்டும். 19ஆம் நூற்றாண்டில், காலனியாதிக்க அரசு நிலத்தை கையகப்படுத்தி மலையாளிகளை அந்நியமாக்கி, பழங்குடியின தலைமைப் பொறுப்பை, குரு தன்மையை அகற்றியது. உதாரணமாக, 1822–1823இல், நிலவரியை வசூலிப்பதற்காக, சேர்வராயன் மலைப்பகுதியின் பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் 'முச்சிலிகா' என்னும் எழுதப்பட்ட பத்திரப் பரிமாற்றத்தை அரசு செய்துகொண்டது. ஒவ்வொரு நாடும் ஒன்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டது. ஒவ்வொரு நாட்டின் பழங்குடியினத் தலைவரும் நிர்ணயிக்கப்பட்ட தொகையை அளிக்க ஒப்புக்கொண்டார். (BOR, 1769, 23 Sep. 1841, pp.12127–129) மலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆண்டு வருவாய் தீர்வுத்தொகை இது 38.63 சதவீதமாக இருந்தது, நிரந்தரத் தீர்வின்கீழ் ஒப்புக்கொள்ளப்பட்டதைவிடக் குறைவாகும். (BOR, Vol. 1769, 23 செப்டம்பர் 1841, P.12093). 1822–1823 மற்றும் 1839–1840 ஆண்டுகளுக்கு இடையே ஆண்டு தீர்வு பாக்கி ரூ.4,831–12–0 ஆக இருந்தது,

இது மொத்த தொகையில் 8.4 சதவீதமாகும். 1833–1834 மற்றும் 1839–1840 காலத்தில் பாக்கி எதுவும் இல்லை. சேர்வராயன் மலைப்பகுதியில் நில வரி நிவாரணம், 1822–1823 மற்றும் 1834–1835 ஆண்டுகளுக்கு இடையே அளிக்கப்பட்டது. சராசரி நிவாரணம் ரூ.301–0–2 ஆக இருந்தது.



இந்த நிவாரணம் ஆங்கிலேய காப்பி தோட்ட உரிமையாளர்களுக்கும் மற்றும் பழங்குடி அல்லாதவர்க்கும் பெரும்பாலும் வழங்கப்பட்டது. 1822–1823 மற்றும் 1834–1835, இடையே, மொத்த நிலுவைத்தொகை ஆண்டுக்கு 32.62 சதவீதமாக இருந்தது, இதற்கு ஆங்கிலேய காப்பி தோட்ட உரிமையாளர்களே முக்கிய காரணம். சேலம் முன்னாள் ஆட்சியர் காக்பர்ன் (1820–1829), ரூ.1,913–10–0 (51.77 சதவீதம்) செலுத்தினார் மற்றும் பிறர் ரூ.122–8–0 செலுத்தினர். பழங்குடியினர் ரூ.122–13–0 மட்டும் தான் செலுத்தினர். (BOR, Vol. 1769, 23 Sep. 1841, pp.12082–89). குடியேறிய ஆங்கிலேயர்கள் பழங்குடியின தலைவருக்கு வாடகை செலுத்தவில்லை. வரிசெலுத்தத் தவறிய ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு மாறாக, பழங்குடியினத் தலைவர்கள் சரியான காலத்தில் வரி செலுத்த வேண்டும் என காலனியாதிக்க அரசு நிர்பந்தித்தது. இறுதியில், பழங்குடியினத் தலைவர்களின் பாரம்பரிய மற்றும் மரபான உரிமைகள் ஆங்கில அரசால் பறிக்கப்பட்டது. கொல்லிமலையில் உள்ளவர்களைப்போல பழங்குடியினர் கிளர்ச்சியில் ஈடுபடாவிட்டாலும், விளிம்பு நிலை மக்களின் எதிர்ப்பு நிலவியபடியே இருந்தது மேலும் அவர்களின் அதிருப்தி குரல்கள் வெவ்வேறு வடிவங்களில் எதிரொலித்துக்கொண்டே இருந்தன.

3) கல்வராயன் மலைகள்

தமிழ்நாட்டில் சேலம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் கல்வராயன் மலைகள் பரவியுள்ளன. இம்மலைகளின் 4000 மீட்டர் உயரம் மற்றும் 1095 சதுர கிமீ பரப்பு கொண்டவை. இங்கு வசிக்கும் பழங்குடியினர் மலையாளிகள் என்று அழைக்கப்படுகின்றனர். மலையாளி பழங்குடியினத்தலைவர் கல்வராயன் மலைகளை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.

"காலனித்துவ வர்த்தக வனக் கொள்கை மற்றும் சென்னை மாகாணத்தில் உள்ள பழங்குடியின தனியார் காடுகள்: 1792–1881", என்னும் தலைப்பில் இந்தியன் எகனாமிக் அண்ட் சோஷியல் ரெவ்யூ இதழில் வெளியான கட்டுரை (சரவணன் 2003), 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காலனியாதிக்க நிருவாகத்தை எதிர்த்து மலையாளிகளின் பழங்குடியினத் தலைவர் போராடியதையும், இதை அரசு நசுக்கியதையும் விவரிக்கிறது. உதாரணமாக, சின்ன கல்வராயன் மலைத்தலைவர் (ஜாகிர்தார்), அரசு முன்வைத்த நிரந்தர குத்தகையை ஏற்கத் தயங்கியவர், நீண்ட காலம் அரசு அதிகாரிகளை சந்திக்காமல் தவிர்த்து வந்தார். (BP, Nos.172–74, 22 Nov. 1872). இருப்பினும் அவர் நீதிபதி உத்தரவின்படி கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்ட நிலையில் குத்தகையில் கையெழுத்திட கட்டாயப்படுத்தப்பட்டார். (BP, No. 1015, 3 மார்ச் 1877). இது கிளர்ச்சி அல்லாமல் வேறு என்ன? ஆம்! தமிழ்நாட்டுப் பழங்குடிகளின் சுதந்திரப் போராட்டத்திற்கான முன்னோடி உதாரணங்களில் ஒன்றாக இது விளங்குகிறது. தனிப்பட்ட முறையில் ஆயுதம் ஏந்தவில்லை என்றாலும், பழங்குடியினத் தலைவரின் எதிர்ப்புக்குரல் ஒட்டுமொத்த பழங்குடியின சமூகத்தின் நாடியை வெளிப்படுத்துகிறது.


4) இருபதாம் நூற்றாண்டின் துவக்கம்

காலனியாதிக்கத் தலையீட்டிற்குப் பிறகும்கூட, வருவாய் பழங்குடியினத் தலைவரிடமே செலுத்தப்பட்டது. அவர் மக்களிடமிருந்து வசூலித்து அரசுக்கு செலுத்தினார். 1829 முதல் 1854 வரை ஏதேனும் ஒரு காரணத்திற்காக ஆங்கிலேய நிருவாகம் ஒவ்வொரு மலையையும் நேரடி மேலாண்மையின்கீழ் கொண்டு வரப்பட்டபோது, இந்த அதிகாரமும் பறிக்கப்பட்டது. (சரவணன்,[a]). 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில், மலைப்பகுதிகளில் நில அளவை மற்றும் வரித் தீர்வை அறிமுகம் செய்யப்பட்டபோது, பெருமளவிலான நிலப்பரப்பு இதன்கீழ் கொண்டு வரப்பட்டு, நில உரிமையின் அடிப்படையில் தீர்வை அமைந்தது. உதாரணமாக, சென்னை மாகாணத்தின் சேலம் மாவட்டத்தில் 16,855.12 ஏக்கர் அல்லது 65.82 சதவீத நிலம் (வருவாய் கணக்கிற்கு மேல்) அளவையில் கண்டறியப்பட்டது. வரி விதிப்பு 16 சதவீதம் உயர்த்தப்பட்ட நிலையில், அளவையின்கீழ் வந்த நிலம் 66 சதவீதம் அதிகரித்தது. (சரவணன், 2006, பா.ப. 63–85). இதன் விளைவாக பழங்குடியினர், தீர்வைக்குப் பிறகு அதே அளவு நிலத்திற்கு அதிக வரி செலுத்த வேண்டியிருந்தது. நில ஆய்வு மற்றும் தீர்வை காரணமாக வரி செலுத்துவது அதிகரித்தது. (சரவணன், 1994). 1936இல் நில வரி இதன்கீழ் மீண்டும் உயர்த்தப்பட்டது. மலைப்பகுதிகளின் உள்கட்டமைப்பு வசதிகள் விரிவாக்கத்திற்காக முதலீடு செய்யப்பட்ட செலவை திருப்பி எடுப்பதற்காக இவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எனினும், இந்த காலகட்டத்தில், மலைப்பகுதிகளில் கண்ணுக்குத் தெரிந்து எவ்வித மேம்பாடும் செய்யப்படவில்லை. (சரவணன், 1994). மாறாக, பழங்குடியினரின் எதிர்ப்பை மழுங்கடிப்பதற்கான காலனியாதிக்க தலையீடு, பாரம்பரிய பழங்குடியின நிருவாக எந்திரத்தை சீர்குலைத்ததையே காண முடிந்தது.

இதனிடையே 1946இல், மசூலிப்பட்டினத்தின், தட்சின பாரத ஆதிவாசிகள் சேவா சங்கத்தின் கி.வி. சோமசுந்தரம், அரசு கொள்கைகள் மற்றும் வளர்ச்சி திட்டங்களை வகுக்க, பூர்வகுடி பழங்குடியின விசாரணைக் குழுவை அமைக்க வேண்டும் (GO.No.2222 [Mis], Public [Political], 17 October 1946, p.3). என அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார். இதையடுத்து, வெண்ணெலகந்தி ராகவையா தலைமையில் ஒரு குழு அரசால் அமைக்கப்பட்டது. இந்தக் குழு பழங்குடிப் பகுதிகளை ஆய்வு செய்த பிறகு, பழங்குடி பொருளாதாரம், பழக்க வழக்கங்கள், வழிபாட்டு முறை, திருமணம், விதிகள் ஆகியவை குறித்த விரிவான அறிக்கையை தாக்கல் செய்தது. (GO. No.2516 [Mis], பொது [அரசியல்], 19 நவம்பர் 1946, pp.77–79). இருப்பினும், காலனியாதிக்க அரசு தனது வழக்கமான உத்தியின் அடிப்படையில் எந்த குறிப்பிட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை.

முடிவுரை

இந்திய துணைக்கண்டத்தில் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போரிடுவதில் தமிழர்கள் முன்னோடியாக விளங்கினர். மேலும் முக்கியமாக, தமிழ்நாடு பழங்குடியினர், 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து ஆங்கிலேயர்களுக்கு எதிராக நின்றதில் முன்னோடியாக விளங்குகின்றனர் மற்றும் அவர்கள் தங்கள் உரிமைகள் மற்றும் சலுகைகளுக்காக போராடினர் என்றாலும், ஆங்கிலேயர்களுக்கு எதிராக முதலில் குரல் கொடுத்தவர்களாக திகழ்கின்றனர். எனவே காலனியாதிக்கத்தின் துவக்கம் முதல் தமிழர்கள் / திராவிடர்கள் காலனியாதிக்க அரசை எதிர்த்து குரல் கொடுத்தனர். தமிழர்கள் மட்டுமல்ல பழங்குடியினரும் சுதந்திரப் போராட்ட ஜோதியை உயர்த்திப் பிடித்தனர் என்பதை நாம் போற்ற வேண்டும். இருப்பினும், தேசிய நோக்கிலிருந்து அணுகும்போது இதை தீவிரப்படுத்துவது விடுபட்டுப் போகிறது. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முன்னோடிகளாக, தமிழர்கள், குறிப்பாக பழங்குடியினரின் தனித்த போராட்டத்தை இது எவ்விதத்திலும் குறைக்கவில்லை. இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் இது மறுக்க முடியாத உண்மையாக இருக்கிறது. இந்த முன்னோடிகளுக்கு வீர வணக்கம்.



4

தமிழ் நாட்டில் விவசாயிகள் எழுச்சி (1920-1947)

டாக்டர் கே.ரமேஷ்குமார்,
இணைப் பேராசிரியர்,
இராஜாளையம் இராஜீஸ் கல்லூரி

விவசாயிகள் எழுச்சி, ஆங்கிலேய அடக்குமுறைக்கும் மிராசுதார்களுக்கும் எதிரான சமூக இயக்கத்தின் ஓர் அங்கமாகும். ஆங்கிலேய ஆட்சி, விவசாயிகளை சுரண்டிய நிலப்பிரபுக்கள் மற்றும் கந்துவட்டிக்காரர்களை ஆதரித்தது, வேளாண் மக்களை மிகவும் பாதித்தது. அவர்கள், வறுமை, பஞ்சம், வறட்சி, மற்றும் அதிக வரிக்காக ஆங்கிலேய அரசை எதிர்த்து கிளர்ச்சி செய்தனர். அரசோ அல்லது நில உரிமையாளர்களோ விவசாயிகள் நல்லவிதமாக வாழ்க்கை நடத்த வேண்டும் என நினைக்கவில்லை. நில உரிமைகள் மாறியது மற்றும் நிலத்தில் அதிகம் பேர் உரிமை கொண்டாடியது, விவசாயிகளின் கடன் சுமையை அதிகரித்தது. விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். காலனியாதிக்க காலத்தில், விவசாயிகள், பொதுவாக இந்தியாவிலும், குறிப்பாக தமிழ்நாட்டிலும் புரட்சிகர இயக்கத்தில் இணைந்தனர். கம்யூனிஸ்ட்கள் மற்றும் சோஷியலிஸ்ட்கள் இதில் அதிகம் இருந்தனர். அரசு மற்றும் நில உரிமையாளர்களின் அடக்குமுறை மற்றும் தமிழ்நாட்டில் விவசாயிகள் அமைப்பின் நிலை ஆகியவற்றை இந்தக் கட்டுரை ஆய்வு செய்கிறது.

விவசாயிகளும் பஞ்சமும்

நில உரிமையாளர்கள் மற்றும் கந்துவட்டிக்காரர்கள் ஒடுக்கப்பட்ட விவசாயிகள்மீது திணித்த மோசமான வறுமை, கீழ்மை, மற்றும் அடக்குமுறை காரணமாக, இந்தியாவின் பல்வேறு பகுதிகளில், விவசாயிகள் சங்கம் அமைக்கப்பட வழி வகுத்தது. வங்காளத்தில் ஆங்கிலேயர்களின் அடக்குமுறை மற்றும் கொள்ளைக்கு எதிராக வெளிநாட்டு அடக்குமுறைக்கு எதிரான முதல் விவசாய எழுச்சி நடைபெற்றது.

1770 வங்காள பெரும் பஞ்சத்தின்போது, மொத்த மக்கள் தொகையில் 35 சதவீதம் பேர் மற்றும் விவசாய மக்களில் 50 சதவீதம் பேர் பசி பட்டினியால் மாண்டனர். 1784, 1787, மற்றும் 1790களில் தொடர்ந்து ஏற்பட்ட பஞ்சங்கள், நில உரிமையாளர்கள், கந்துவட்டிக்காரகள், மற்றும் ஆங்கிலேய அரசுக்கு எதிராக விவசாயிகளை பொங்கியெழ வைத்தது.

சகிக்க முடியாத அளவில்லாத வரி

1770 முதல் 1790 வரை, விவசாயிகள் சென்னை மாகாணத்தில் அரிதாகவே முழு விளைச்சல் கண்டனர். தீவிர பஞ்சம் விவசாயிகளின் நிலையை மிகவும் மோசமாக்கியது. ஆனால், இதை மீறி விவசாயிகள் பொருத்துக்கொள்ள முடியாத வரித் தீர்வைகளால் தாக்குதலுக்கு உள்ளாயினர். இதன் காரணமாக பல விவசாயிகள் வறுமையில் தள்ளப்பட்டனர். குத்தகைதாரர்கள் அதிக வரியால் அவதிப்பட்டனர். அதிக வரி, விவசாயிகளை மிகவும் பாதித்ததோடு, விவசாய மேம்பாட்டிற்கான ஊக்கத்தையும் பாழாக்கியது.

1802ல், பொதுவாக சென்னை மாகாண விவசாயிகள், குறிப்பாக வட மற்றும் தென் ஆற்காடு மாவட்ட விவசாயிகள் கம்பெனியின் வரிக் கொள்கையை எதிர்த்து கிளர்ச்சி செய்தனர். மேலும், பாரமகால் அருகே உள்ள தேன்கனிக்கோட்டை மற்றும் ஓட்டூர் ஆகிய கிராமங்களின் 1500 விவசாயிகள், மிகையான வரி வசூல் செய்ததற்காக வட ஆற்காடு ஆட்சியர் காக்பர்னை எதிர்த்துப் போராடினர்.

மறுபக்கத்தில், சென்னை மாகாண ஆளுநர், வட ஆற்காட்டிற்கு படைகளை அனுப்பி, போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்கினார். கலகத்திற்கு முந்தைய காலத்தில், சென்னையில் செய்யப்பட்ட வரி மதிப்பீடு, நிகர விளைச்சலில் 4/5 ஆக இருந்தது. சென்னை மாகாணத்தில் வரி வருவாய், வங்காளம் மற்றும் பம்பாயைவிட அதிகமாக இருந்தது.

அதிக நிலவரி மதிப்பீட்டிற்கு எதிரான விவசாயிகளின் கோரிக்கை

1810இல், தேன்கனிக்கோட்டையைச் சேர்ந்த விவசாயிகள் அதிக நில வரி மதிப்பீடு மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளின் மோசமான நடத்தையை எதித்து கிளர்ச்சி செய்தனர். மேலும், அவர்கள் குறிப்பிட்ட கோரிக்கைகளை தீவிரமாக முன்வைத்தனர். அவர்கள் கோரிக்கைகள் வருமாறு:

1. 1209 (1810 கி.பி.) ஜமாபந்தியின்போது (பண்ணை, கிராமம், அல்லது மாவட்டத்தில் ஆண்டு வருவாய் கணக்கு தீர்வு) பயிரடப்படாத நிலங்களுக்காக வசூலிக்கபட்ட வரி திரும்ப வழங்கப்பட வேண்டும்.

2. தக்காவி கடன்கள் பெற்ற ஆனால் அவற்றை விவசாயிகளுக்கு வழங்காத

கிராம அதிகாரிகளுக்கு தண்டனை.

3. நிர்ணயிக்கப்பட்ட தீர்வைக்கு அதிகமாக வசூலிக்கப்பட்ட பணத்தை திரும்ப வழங்குவது.

4. பயிரிடப்பட்ட இடங்களில் மட்டுமே வருவாய் நிலுவைகள் வசூலிக்கப்பட வேண்டும்.

5. சதுப்பு நிலப்பகுதிகளில் பயிரிடப்பட்ட உலர் தானியங்களுக்கு முழு தீர்வை வசூலிக்கப்படக்கூடாது.

உயர்ந்த மற்றும் சமத்துவமற்ற வருவாய் மதிப்பீட்டிற்கு எதிராக விவசாயிகள்

இந்தவகைப் போராட்டங்களை நடத்திய விவசாயிகள் மிகை நில வரி விதிப்பை ரத்து செய்யக் கோரினர். இதன் விளைவாக, சென்னையில் இருந்த வருவாய் வாரியம், விவசாயிகளின் பிரச்சனை குறித்து ஆய்வு செய்யுமாறு ஆட்சியருக்கு உத்தரவிட்டது. இருப்பினும் நிர்வாகத்தில் இருந்தவர்கள் விவசாயிகளிடம் கருணை இல்லாமல் நடந்து கொண்டனர். தங்கள் முறையீடு கவனிக்கப்படாத நிலையில், விவசாயிகள் உடனடியாக மொத்தமாக வேறு இடத்திற்கு குடிபெயர தீர்மானித்தனர்.

1819இல், தஞ்சை மாவட்ட ஆட்சியர் தாக்கரே, அதிகமான மற்றும் சமமில்லாத வரி விதிப்பால் விவசாயிகளின் பரிதாப நிலையை சுட்டிக்காட்டியுள்ளார். 1803இல், திருநெல்வேலியில் வரி அல்லது வாடகையை ரொக்கமாக செலுத்தும் முறை அறிமுகம் செய்யப்பட்டது, விவசாயிகள் நிலையை மேலும் மோசமாக்கியது.

இது தொடர்பாக, வரியை ரொக்கமாக வசூலிக்குமாறு மாவட்டங்களை வருவாய்த்துறை நெருக்கடி செய்தது. தஞ்சை, செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், வட ஆற்காடு மாவட்டங்கள் இந்த முறையை பின்பற்ற வலியுறுத்தப்பட்டது.

சென்னை மாகாண விவசாயிகள் குறிப்பாக, தஞ்சை விவசாயிகள் இந்த ரொக்க முறையை எதிர்த்தனர். 1807 முதல் 1810 வரை தஞ்சையில் நெல் விலை வெகுவாக சரிந்தது. இருப்பினும், விவசாயிகளிடமிருந்து வரி வசூலிக்க அரசு கடுமையான முறையில் நடந்து கொண்டது. 1816ஆம் ஆண்டின் வருவாய் ஆவணங்கள், நெல் விலை வெகுவாக சரிந்த நிலையில், ரொக்க வரி வசூல் அறிமுகத்தை 150 கிராம விவசாயிகள் எதிர்த்ததாக தெரிவிக்கின்றன.

பஞ்சம் மற்றும் சித்தரவதை

1822இல், சென்னை ஆளுநர் தாமஸ் மன்ரோ, வரி விதிப்பை குறைத்து உத்தரவிட்டார். இருப்பினும் இந்த நடவடிக்கை விவசாயிகள் நிலையை மேம்படுத்த அதிகம் உதவவில்லை. தாமஸ் மன்ரோ, 100 ரூபாயில், மொத்த உற்பத்தியில் அரசின் வரி மதிப்பீடு ரூ.45–12–0 என்றும், பயிரிடும் செலவு ரூ.40 என்றும் அமைந்து, விவசாயிகளுக்கு ரூ.14–4–0 என்னும் குறைவான லாபம் கிடைப்பதாகக் கணக்கிட்டார். இந்த லாபம் என்பது, மோசமான விளைச்சல் காலத்தில் மட்டும் அல்லாது நல்ல விளைச்சல் காலத்திலும் நஷ்டமாக மாறியது. 24 ஆண்டுகளில், 1799, 1804–1807, 1811–1812, மற்றும் 1824இல் என நான்கு முறை பஞ்சம் உண்டாகி, சென்னை மாகாண விவசாயிகளை சீரழித்தது.

சீரற்ற பருவ மழையால் அறுவடை பொய்த்தது பஞ்சத்திற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக இருந்தது. எனினும் விவசாயிகளின் இன்னல்கள் குறித்து அரசு சிறிதும் கவலைப்படவில்லை.

1832இல், தஞ்சை மாவட்டத்தில் மழை சரியாக இல்லாததால் 392 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. இதன் விளைவாக, பயிர்களின் விளைச்சல் அடிப்படையில் வரி விதிப்பு அமைய வேண்டும் என விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர். ஆனால், அரசு அவர்களின் கோரிக்கையை நிராகரித்து, அறுவடையை நிறுத்துமாறு ஆணையிட்டது. 1845இல், தென்னார்க்காடு ஆட்சியர் அதிகமான மற்றும் சமமில்லாத வரி விதிப்பால், மூன்றில் இரண்டு பங்கு நிலம் வீணாக இருப்பதாகத் தெரிவித்தார்.

1854இல் செங்கல்பட்டு ஆட்சியர் இந்த மாவட்டத்தில் நில வருவாய் மிகையாகவும், சீரற்றும் இருப்பதாக தெரிவித்தார். செங்கல்பட்டு விவசாயிகள், வரிச்சுமையை சமாளிக்க முடியாமல், பாசன கால்வாய் அமைக்கப்படாதது, கிஸ்தி மற்றும் உப்பு வரி பாக்கி மீதான 12 சதவீத வட்டி குறித்தும் அரசிடம் மனு அளித்தனர். வரி செலுத்தத் தவறிய ஏழை விவசாயிகள்மீது வருவாய்த்துறை அதிகாரிகள் நடத்திய சித்தரவதை கொடுமையாக இருந்தது.

1854இல், தலைமை ஆளுநர் இடையிலான குழு, சென்னை மாகாண அரசிடம், சித்திரவதை தொடர்பான வழக்குகளுக்காக விசாரணைக் குழு அமைக்க உத்தரவிட்டது. சித்திரவதையின் உதாரணங்கள் பின்வருமாறு:

"ஒருவரை வெய்யிலில் நிறுத்தி வைப்பது; உணவு சாப்பிடவும் இயற்கை உபாதைக்கும் அனுப்ப மறுப்பது, பசு மாடுகள் மேய்ச்சலுக்கு அனுப்பவிடாமல் தொழுவத்தில் அடைத்து வைப்பது, வரி செலுத்தாதவர் பின்னால் ஒரு அலுவல் உதவியாளரை பின்தொடரச் செய்து அவரது தினக்கூலியைப் பிடுங்குவது, தொடையில் கிள்ளுவது, அறைவது, கையால் அல்லது சவுக்கால் விளாசுவது, காதுகளைத் திருகுவது, தலைமுடியைக் கழுதை அல்லது எருமையின் வாலுடன் சேர்த்துப் பிணைப்பது மற்றும் எலும்பு மாலை அல்லது பிற இழிவான பொருட்களை கழுத்தில் அணிவிப்பது".

ஏழை மற்றும் நடுத்தர நில உரிமையாளர்கள் இத்தகைய சித்திரவதைக்கு உள்ளானார்கள். சித்திரவதை குழுவின் பரிந்துரைப்படி, வருவாய்த்துறை, காவல்துறை மற்றும் நீதித்துறை பிரிக்கப்பட்டு, எந்தக் குடிமகன் மீதும் எந்தவித சட்ட நடவடிக்கையும் நீதிமன்றம் மூலமே மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டு, வருவாய் அல்லது காவல் வழக்குகளில் சித்திரவதை செய்யும் அரசு ஊழியர் பணிநீக்கம் செய்யப்படவும் வழி செய்யப்பட்டது.

நீதிமன்றங்களின் செயல்முறை விவசாயிகளுக்கு எந்த பாதுகாப்பையும் அளிக்கவில்லை. நேர்மையில்லாத வழக்கறிஞர்கள், நீதிமன்ற ஊழியர்களின் கைகோர்ப்பு மற்றும் நியமிக்கப்பட்ட நீதிபதிகளின் கண்டிப்பின்மை போன்றவை ஏழை விவசாயிகள் நிலத்தை இழக்க வைத்தன.

1857–1858இல், சென்னை மாகாண வருவாய் வரி வசூல், ரூ.361.811 இலட்சமாக இருந்தது. 1865–1866இல், ஏழு ஆண்டுகளுக்கு பின், வருவாய் வரி வசூல், ரூ.429.97 இலட்சமாக உயர்ந்தது. இந்த காலத்தில் கொடும் பஞ்சத்தால் 60 இலட்சம் பேர் மாண்டனர். மேலும், 1867–1868இல், வருவாய் வசூல், ரூ.423.97 இலட்சமாக உயர்ந்தது.

1875–1876இல், எட்டு ஆண்டுகள் கழித்து மாகாணத்தில் பஞ்சத்தால் 40 இலட்சம் பேர் மாண்டனர். நில வரி உயர்வு காரணமாக, சென்னை மாகாணத்தின் பல பகுதிகளில் விவசாயிகள் அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தினர்.

விவசாயிகளுக்காக குரல் கொடுத்த சென்னை மகாஜன சபை

1886இல் சென்னை மகாஜன சபை, விவசாயிகளின் நிலையை மேம்படுத்த வேண்டும் என்று டஃபரின் பிரபுவை வலியுறுத்தியது. அதிக வரி விதிப்பு காரணமாக விவசாயிகள் மீள முடியாத சுமைக்கு ஆளாவதையும் சுட்டிக்காட்டியது. உப்பு விலை உயர்வு மற்றும் கால்நடை அத்துமீறல் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட அதிக அபராதம் போன்றவை விவசாயிகள் நிலையை மேலும் மோசமாக்கியது. இருப்பினும் இந்தக் கோரிக்கையை அரசு பொருட்படுத்தவில்லை.

பஞ்சமும், வரி வசூல் கொடுமையும்

1876–1878ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சம் பொதுவாக இந்தியப் பொருளாதாரத்தையும், குறிப்பாக சென்னை மாகாணத்தையும் மோசமாக பாதித்தது. இந்த சீர்குலைவான சூழலின்போது, சென்னை மாகாணத்தில் 160 இலட்சம் பேர் வசித்த 74,000 சதுர மைல் பரப்பு பாதிக்கப்பட்டது.

இந்தப் பஞ்சம் நூற்றாண்டின் கொடிய பஞ்சமாக விளங்கியது. இந்தப் பஞ்சம் காரணமாக, விவசாய வகுப்பினரின் முன்னேற்றம் குறிப்பாக, விவசாயிகளில் கீழ்மட்டத்தில் இருந்தவர்களின் முன்னேற்றம் மிகுந்த பின்னடைவை சந்தித்தது. நிலமில்லாத விவசாயிகள் வேலையிழந்தனர். மேலும், குத்தகைதாரர்களால் நில உரிமையாளர்களுக்கு வாடகை செலுத்த முடியவில்லை. உணவு தானியங்கள் விலையும் பல மடங்கு உயர்ந்தது. தானிய சேமிப்பு இல்லாத ஏழை விவசாயிகள் ஓட்டாண்டி ஆயினர். எனினும், பெரிய விவசாயிகள் மற்றும் தானிய வியாபாரிகள் இதனால் பாதிக்கப்படவில்லை. அவர்கள் தானியங்களை பதுக்கியது, விலை உயர வழி செய்தது. அரசு மறுபக்கத்தில், விவசாயிகளிடமிருந்து வரி பாக்கியை வசூலிக்க மோசமாக நடந்து கொண்டது.

வரிசெலுத்தாதவர்களின் சொத்துக்களை வருவாய் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். கோவை மாவட்டத்தில், 1882–1883இல் ரூ.6.3 கோடி அளவிலான நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சென்னை மாகாணத்தில் 1891–1892இல் ரூ.15.66 கோடி அளவிலான பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டன. விளிம்பு நிலை விவசாயிகள் கடன் வலையில் விழுந்தனர். 80 சதவிகித வட்டித் தொழில் பெரிய நில உரிமையாளர்கள் வசம் இருந்தது.

கடனுக்கான வட்டி பல்வேறு மாவட்டங்களில் மாறுபட்டிருந்தது. ரூ.100 முதல் ரூ.500க்கு 12 சதவிகித வட்டி வழக்கமாக இருந்தது. ரூ.500 முதல் ரூ.1,000க்கு 9 முதல் 12 சதவிகிதம் வட்டி அமைந்தது. ஆயிரம் ரூபாய்க்கு மேல் போனால், வட்டி 9இல் இருந்து 6 ஆக குறைந்தது. கடன் தொகை அதிகரித்தால் வட்டி கணிசமாக குறைந்தது. கடன் ரூ.100க்கும் குறைவாக இருந்தால், வட்டி 12 முதல் 18 சதவிகிதமாக இருந்தது. மாறாக, விவசாயிகள் சிறிய தொகைக்கும் 25 முதல் 50 சதவிகிதம் வட்டிக்கு கடன் வாங்குவது வழக்கமாக இருந்தது.

கர்சன் பிரபு ஆளுநராக இருந்த போது, ஜமீந்தார்களின் கொடுமையிலிருந்து விவசாயிகளை பாதுகாக்கும் வகையிலான நில சீர்திருத்தக் கொள்கையை கொண்டுவர

வேண்டியிருந்தது. இந்திய தேசிய காங்கிரசின் முன்னாள் தலைவர் ரமேஷ் சந்திர தத், குத்தகைதாரர்களுக்கு மேலும் பாதுகாப்பு கோரி அரசை எதிர்த்துப் போராடினார். மாறாக, சென்னை மாகாணத்தில் 1908–1909இல் ரூ.637.01 இலட்சமாக இருந்த நில வருவாய் 1917–1918இல் ரூ.708.17 இலட்சமாக உயர்ந்தது. சென்னை மாகாண விவசாயிகள் 11 சதவிகித நில வரி உயர்வை கடுமையாக எதிர்த்தனர்.

விவசாயிகள் போராட்டமும், ஒத்துழையாமை இயக்கமும்

1920இல் ஒத்துழையாமை இயக்கத்தின்போது, விவசாயிகள் ஓரளவு அரசியல் விழிப்புணர்வு பெற்றிருந்தனர். நில வரி செலுத்த வேண்டாம் என காங்கிரஸ் எழுப்பிய கோஷம் தாக்கத்தை ஏற்படுத்தியது. விவசாயிகள் சுதந்திரத்திற்கான அரசியல் போராட்டத்தை அதிக நிலவரிக்கு எதிரான போராட்டமாக புரிந்து கொண்டனர் என்று சொல்லலாம். அவர்களில் பலர் சுதந்திர இயக்கத்தை ஆதரித்தனர், அதில் பங்கேற்றனர்.

இந்திய விவசாயிகளின் ஒரு பிரிவினர் அரசியல் இயக்கப் போராட்டத்தில் பங்கேற்பது அதுவே முதல்முறையாக இருந்தது. சென்னை மாகாண விவசாயிகளும் ஒத்துழையாமை இயக்கத்தின்கீழ் அணி திரண்டனர். விவசாயிகள் அரசுக்கு வரி செலுத்த மறுத்தனர். ஆனால், அரசு இந்த இழப்பை ஈடு செய்ய மேலும் புதிய வரிகளை விதித்தது. இது தொடர்பாக, அரசு, வாடகைமீட்பு திருத்த சட்டத்தை சிறப்பு சட்டமாக 1922இல் இயற்றியது. இதன்படி, விவசாயிகள் அபராதத்துடன் நிலவரி கட்ட வேண்டும் அல்லது அவர்கள் நிலம் பறிமுதல் செய்யப்படும். மாகாணத்தில் வரி செலுத்த மறுத்த நூற்றுக்கணக்கானோர் அரசால் கைது செய்யப்பட்டனர்.

1922 ஆகஸ்ட்டில், சென்னை மாகாண அரசு, தஞ்சை மற்றும் திருச்சி மாவட்டங்களில் உலர்நிலப் பகுதிகளில் 18 சதவிகிதமும் மற்றும் ஈரநிலப் பகுதிகளில் 25 சதவீதமும் நில வரியை உயர்த்தியது. இந்தப் புதிய விகிதம் மாற்றப்படவில்லையெனில் ஒத்துழையாமை இயக்கம் நடத்தப்போவதாக விவசாயிகள் மற்றும் மிராசுதார்கள் எச்சரித்தனர். இதன் விளைவாக, 1924 ஆகஸ்ட்டில் அரசு வரியைக் குறைத்தது.

பொருளாதார தேக்கநிலையின்போது நில உரிமையாளர்களின் செயல்பாடு

1930இல் சென்னை மாகாணத்தில், பொருளாதார தேக்கநிலை பொதுவாக நில உரிமையாளர்கள் மற்றும் குறிப்பாக விவசாயிகளின் நிலையை மோசமாக்கியது. விவசாயப் பொருட்களின் விலையை குறைத்தது. நில உரிமையாளர்களால் பொருட்களை லாபத்திற்கு விற்க முடியவில்லை. குத்தகைதாரர்கள் மற்றும் ஏழை விவசாயிகளுக்கு கடனாக வழங்கவும் அவர்களிடம் எதுவும் இல்லை. 1901 முதல் 1931 வரை, விவசாயத்தைச் சார்ந்திருந்த தனிநபர்களின் எண்ணிக்கை 1,000 பேருக்கு 512 பேர் என்னும் நிலை யிலிருந்து 390ஆக குறைந்தது. எல்லாவற்றுக்கும் மேல், தேக்கநிலை விவசாயத்துறையை மோசமாக பாதித்தது.

விவசாயிகள் மற்றும் சட்ட மறுப்பு இயக்கம்

சட்ட மறுப்பு இயக்கத்திற்குப் பிறகு, விவசாயிகள் வர்க்கம் சுயேட்சை அமைப்பாக உருவானது. 1930களில் விவசாயிகள் இயக்கம் வேகம் பெற்றது. 1932இல், திருச்சியின் உடையார்பாளையத்து ஜமீந்தார்களின் குத்தகைதாரர்கள் கீழ்க்கண்ட கோரிக்கைகளுடன் அரசுக்கு நெருக்கடி அளித்தனர்:

1. ஜமீந்தார்கள் விவசாயிகள் நலவாழ்வை கவனித்துக்கொள்ள வேண்டும் மற்றும் வரி வசூலை, ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.27,000ஆக குறைக்க வேண்டும்.

2. நில அளவீடு செய்து வாடகை நிர்ணயிக்க வேண்டும்.

3. நிலத்தை வகைப்படுத்தி, பயிரடப்படாத நிலத்திற்கு வரி வசூலிக்கக் கூடாது. கீரைகள், வேர்கள் மற்றும் சிறிய பயிர்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும்.

4. குளங்கள் மற்றும் பிற நீர்நிலைகளைத் தூர்வார வேண்டும்.

5. பயிர் விளைச்சல் பொய்த்தல் வரித்தள்ளுபடி வேண்டும்.

சென்னை மாகாண அரசு இந்த கோரிக்கைகளை பொருட்படுத்தகூட இல்லை. 1930–1933 சட்ட மறுப்பு இயக்கம் விவசாயிகளை மேலும் விழிப்புணர்வு பெற வைத்தது. கூடுதல் வரிச்சுமை ஏழை விவசாயிகளை மிகவும் பாதித்தது. சென்னையில் கிராமப்புற கடன் தொடர்பான ஆய்வுப்படி, 1934–1935இல், ஒரு ரூபாய் முதல் 100 ரூபாய் வரை வரி செலுத்துபவர்கள் 100 ரூபாய்க்கு மேல் வரி செலுத்துபவர்களைவிட அதிகம் இன்னலுக்கு உள்ளானார்கள்.

ஒரு ரூபாய் முதல் 100 ரூபாய் வரை வரி செலுத்திய விவசாயிகள் செலுத்தப்பட்ட வரியான ரூ.100 அல்லது அதற்கும் குறைவானதில் 29 ரூபாய் கடனுக்கு உள்ளானார்கள். மாறாக, ரூ.100க்கு மேல் வரி செலுத்தியவர்கள் ரூ.8 அளவுக்கு மட்டுமே கடனுக்கு உள்ளானார்கள். எல்லாவற்றுக்கும் மேல், 1930இல் சென்னை வங்கிச்சேவை விசாரணைக்குழு அளித்த கணக்கின்படி, சென்னை மாகாணத்தின் மொத்த விவசாயக்கடன் 1,500,000,000 ஆகும். அதாவது, 1939இல், கடன் 2,719,000,000 ஆக உயர்ந்தது. இது பத்தாண்டில் 100 சதவிகித உயர்வாகும்.

விவசாயிகள் தினம் மற்றும் வரிகொடா பிரச்சாரம்

1934இல், தஞ்சை மாவட்டத்தின் ஷியாலி தாலுக்காவைச் சேர்ந்த மிராசுதார்கள் அரசுக்கான கிஸ்தியை நிறுத்தி வைத்தனர். ஆனால் அரசு வரி செலுத்தாதவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. சிவகங்கை ஜமீனின் மங்கலம் கிராமத்தில், 1934 மே மாதம் வரி செலுத்தாத விவசாயிகள் காவலர்களால் தாக்கப்பட்டனர். துப்பாக்கிச்சூட்டில் ஒரு விவசாயி கொல்லப்பட்டார், இருவர் காயமடைந்தனர். சேலம் மாவட்ட விவசாயிகளும் அதிக கிஸ்தியை எதிர்த்துப் போராடினர்.

அகில இந்திய விவசாயிகள் சபை (1935)

1935 மார்ச் 17ஆம் தேதி, அவர்கள் விவசாயிகள் தினத்தை அனுசரித்து, வரி செலுத்தாமல் இருக்கும் பிரச்சாரத்தை மேற்கொண்டனர்.

1935 ஏப்ரலில், தென்னிந்திய விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் கூட்டமைப்பு, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா விவசாயிகளை ஒன்று திரட்ட தீர்மானித்தனர். முதல் அகில இந்திய விவசாயிகள் காங்கிரஸ், 1935 லக்னோவில் நடைபெற்ற போது, நாட்டின் முதன்மை விவசாயிகள் அமைப்பாக காங்கிரஸ் உருவாக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. இந்த காங்கிரசுக்கு நேரு தனது ஆதரவை தெரிவித்தார். இந்திய விவசாயிகள் மத்தியில் அகில இந்திய விவசாயிகள் சபை பெரிய அளவில் பிரச்சாரம் மற்றும் விழிப்புணர்வை மேற்கொண்டது. இந்திய தேசிய காங்கிரசிடம் இருந்து கூட்டு

அங்கீகாரத்தை இந்த அமைப்பு கோரியது. ஆனால் காங்கிரஸ் இந்த கோரிக்கையை ஏற்கவில்லை.

நிலப்பிரபுக்கள் இல்லாத விவசாயத் தொழிலாளர்களை உருவாக்குதல் (1939)

1930களில், ஹரிஜன தொழிலாளர்களின் கீழ்படியாத தன்மை குறித்து சென்னை அரசுக்கு நிறைய புகார்கள் வந்தன. மேலும், தஞ்சையில் உள்ள சாதி சங்கங்கள், பண்ணையாட்களுக்கு ஆதரவாக இருந்தன. இதன் காரணமாக, விவசாயத் தொழிலாளர்கள் நிலவுடமைக்கு எதிராக தங்கள் வலுவை காண்பிக்கத் தீர்மானித்தனர். இதையடுத்து, சுயேட்சையான விவசாயத் தொழிலாளர்கள் சங்கம், 1939இல் ஏற்படுத்தப்பட்டது. பெரிய அளவிலான இயக்கத்தை முன்னெடுக்க காத்திருந்த தீவிரமான ஹரிஜனங்களை இந்த சங்கம் கொண்டிருந்தது.

1940இல், திருச்சி லால்குடி குத்தகைதாரர்கள். நீதிக்கட்சி ஆதரவுடன் பிராமண நில உரிமையாளர்களுக்கு எதிராகப் போராட ஊக்கம் பெற்றனர். இருப்பினும், M.K.குப்தா போன்ற முக்கியத் தலைவர்கள் கைது செய்யப்பட்டதால், இந்தப் போராட்டம் பாதியில் முடிவுக்கு வந்தது.

தமிழ்நாடு விவசாய சங்க உருவாக்கம் (1943)

இடதுசாரிகள், குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாட்டில் விவசாயிகளை இயக்கமாக திரட்டுவதில் முக்கியப் பங்கு வகித்தது. 1942 இறுதியில், மன்னார்குடியின் தென்பறையில், விவசாய சபை அமைக்கப்பட கம்யூனிஸ்ட் கட்சி காரணமாக இருந்தது. தஞ்சையை இதற்கான அடித்தளமாகத் தேர்வு செய்தது. தொடர்ந்து, சேலம் மாவட்டத்தின் காவிரிப்பட்டினத்தில் உள்ள ராமாபுரம் போன்ற பகுதிகளில் விவசாய சபைகள் அமைக்கப்பட்டன. பிராந்திய அளவிலான விவசாய சங்கங்கள் உருவாக்கப்பட்ட நிலையில், 14 ஜூன் 1943 அன்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் உருவாக்கப்பட்டது.

கம்யூனிஸ்ட் கட்சியால் வழிநடத்தப்பட்ட குத்தகைப் பயிர் செய்பவர்கள் மற்றும் சிறிய விவசாயிகள் ஆகியோர் விவசாயிகள் இயக்கத்தில் முக்கிய மாற்றத்தைக் கொண்டு வந்தனர். மன்னார்குடி தாலுகாவில் தென்பறை கிராமத்தில் முதல் விவசாயப் போராட்டம் நடைபெற்றது. உத்ரபதி மடத்தை எதிர்த்து நடைபெற்ற இந்த போராட்டத்தில், 20 சதவிகித பங்கிற்குப் பதிலாக மூன்றில் ஒரு பங்கு கோரினர். ஆனால், மடத்தின் நிருவாகம் இதற்கு செவி சாய்க்காததால், இரு தரப்பிற்கும் இடையே மோதல் உண்டானது. மடத்திற்கு தெரிவிக்காமல் விவசாயிகள் நெல் அறுவடை செய்து தங்கள் பங்கை எடுத்துக்கொண்டனர். இதனிடையே மாவட்ட ஆட்சியர் தலையிட்டு, ஓரளவு பங்கை உயர்த்தித் தர வைத்தார்.

வாரக் கூலியை உயத்திக் கேட்டு போராட்டம்

சேலம் மாவட்டத்தின் இராமாபுரம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளின் குத்தகைதாரர்கள் அதிக வாரம் கேட்டு நில உரிமையாளர்களை எதிர்த்து கிளர்ச்சி செய்தனர். இராமநாதபுரத்தின் காட்டனூரிலும் இவ்வாறு போராட்டம் நடைபெற்றது. இந்த சூழலின் தீவிரத்தை உணர்ந்து வருவாய் அதிகாரிகள் தற்காலிகமாக பிரச்சினையை தீர்த்தனர். இருப்பினும், விவசாயிகளைப் பழிவாங்க, மிராசுதார்கள், ஜமீந்தார்கள், மற்றும் இமாம்தார்கள் பெரிய அளவிலான நிலத்தை தரிசாக விட்டனர். ஆலம்பட்டி மற்றும் தென்பறை கிராமங்களில் 1,000 ஏக்கர் நிலம் தரிசாக விடப்பட்டது.

கலப்பல் ஒப்பந்தம் (1944)

தஞ்சை மாவட்டத்தில் உள்ள கலப்பல் கிராமம், கம்யூனிச இயக்க ஆதரவு பெற்ற விவசாயிகள் சங்கத்தின் வலுவான தளமாக விளங்கியது. சங்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான K.குப்புசாமி, பிராமண மற்றும் பிராமணர் அல்லாத மிராசுதார்களின் கொடுமைகளுக்கு எதிராக ஹரிஜனப் பண்ணையாட்களைக் கொண்டு போராட்டம் நடத்தினார். பண்ணையாட்கள் அல்லது படியாள்கள் என அழைக்கப்பட்டவர்கள் பெரும்பாலும், நில உரிமையாளர்களிடமிருந்து அதிக வட்டிக்கு கடன் வாங்கிய நிலமற்ற தொழிலாளர்களாக இருந்தனர்.

இவர்களுக்கு கடனை அடைக்கும் வழி இல்லாததால், தங்கள் எஜமானர்கள் நிலத்தில் கட்டாயமாக வேலை செய்தாக வேண்டிய நிலை இருந்தது. பண்ணையாட்கள் சிறிய தவறுகள் செய்தால், வேலைக்கு தாமதமாக வந்தால், அல்லது தாமதம் செய்தால், உடல்நலக்குறைவு ஏற்பட்டால், மிராசுதார்கள் கருணையில்லாமல் தண்டித்தனர். இந்தப் பண்ணையாட்கள் மரத்தில் அல்லது கம்பத்தில் கட்டி வைக்கப்பட்டு, சவுக்கால் அடிக்கப்பட்டனர். சில நேரங்களில் மாட்டுச்சாண கரைசலை குடிக்க வைக்கப்பட்டனர்.

1943இல், தஞ்சை மாவட்ட விவசாயிகள் சங்கம் இந்த பிரச்சினையை மிராசுதார்களிடம் கொண்டு சென்று, பண்ணையாட்கள் நடத்தப்படும் விதத்திற்கு கண்டனம் தெரிவித்தது. மேலும், இந்த பிரச்சினையில் உடனடியாக தலையிட்டு இந்த கொடிய பழக்கத்திற்கு முடிவு கட்ட வேண்டும் என்று சென்னை மாகாண அரசுக்கு வேண்டுகோள் வைத்தது.

மிராசுதார்கள் எதிர்ப்பு பற்றி கவலைப்படாமல் விவசாயிகள் பல போராட்டங்களை நடத்தி, 1944ஆம் ஆண்டு மே மாதம் விவசாயிகள் மற்றும் நில உரிமையாளர்கள் பிரதி நிதிகளை பேச்சு வார்த்தை நடத்த வைத்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட வைத்தனர். கலப்பல் K.குப்புசாமி, சேரங்குளம் R.அமிர்தலிங்கம், மற்றும் வாலிஓடை. D.ராஜகோபால் ஆகியோர் விவசாயிகள் சங்கம் சார்பில் பேசினர். மறுபக்கத்தில், திருக்களூர் மடத்தின் மிராசுதார் வடபாதிமங்களத்தின் V.S.தியாகராஜ முதலியார், கருவாக்குடி நாயுடு ஆகியோர் நில உரிமையாளர்களின் பிரதிநிதிகளாக இருந்தனர். தஞ்சை கலப்பலில், உதவி காவல்துறை கண்காணிப்பாளர் மகாதேவன் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன் விவரங்கள் வருமாறு:

1. தொழிலாளர்களுக்கு கசையடி கொடுப்பது மற்றும் மாட்டுச்சாணத்தை குடிக்க வைப்பது போன்ற செயல்கள் நிறுத்தப்பட வேண்டும்;

2. பண்ணையாளின் கூலி, நாள் ஒன்றுக்கு இரண்டு படி நெல் என நிர்ணயிக்கப்பட வேண்டும்;

3. அறுவடையின்போது, ஒவ்வொரு களத்திலிருந்தும் சிறிதளவு நெல் வழங்க வேண்டும் மற்றும் தினமும் நான்கு படி நெல் வழங்க வேண்டும்.

4. குத்தகைதாரர்கள் நிலத்தின் அருகே தாங்கள் விரும்பும் இடத்தில் கதிர்களை அடித்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

கலப்பல் ஒப்பந்தம், கொத்தடிமைத் தொழிலாளர்களின் கொடுமையான தண்டனைகளுக்கு தடை விதித்தது. தொழிலாளர்களின் தினக்கூலியை இரண்டு படி நெல் என தீர்மானித்தது. அறுவடையின் போது, ஒவ்வொரு களத்திற்கும் 3 படி அரிசி

மற்றும் தினமும் நான்கு படி என தீர்மானிக்கப்பட்டது. மேலும், குத்தகைதாரர்கள் தங்கள் விருப்பம் போல கதிரடிக்கும் இடத்தை தேர்வு செய்து கொள்ளலாம் என்பது ஆயிரக்கணக்கான குத்தகைதாரர்களால் வரவேற்கப்பட்டது. இது பணியை விரைவாக்கும் எனக் கருதப்பட்டது. இதற்கு முன்னர் குத்தகைதாரர்கள் நில உரிமையாளர்களின் இடத்தில் மட்டும் தான் கதிரடிக்க வேண்டும். கலப்பல் ஒப்பந்தம் கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது. ஆனால் தஞ்சை மாவட்ட நில உரிமையாளர்கள் இதற்கு சற்றும் அசைந்து கொடுக்கவில்லை.

மன்னார்குடி ஒப்பந்தம் (டிசம்பர் 1944)

தஞ்சை மாவட்டத்தின் தாலுகா தலைமையகமான மன்னார்குடி, விவசாய இயக்கங்களின் தளமாக இருந்தது. இந்தத் தாலுகாதான் தமிழ்நாட்டில், கம்யூனிஸ்ட் கட்சியின் அழைப்பை ஏற்று குத்தகைதாரர்கள் மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கான அமைப்பை முதலில் உண்டாக்கியது. இந்த தாலுகாவின் ஹரிஜன பண்ணையாட்கள் அதிக அளவில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தில் சேர்ந்து மிராசுதார்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்தினர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தலைவர் மணலி C.கந்தசாமி தந்த அழுத்தம் காரணமாக இரண்டாவது ஒப்பந்தம் 1944 டிசம்பரில் கையெழுத்தானது. தஞ்சை ஆட்சியர் இஸ்மாயில் கான் மற்றும் காவல் கண்காணிப்பாளர் வரதன் முன்னிலையில், மன்னார்குடி ஒப்பந்தம் கையெழுத்தானது. ஒப்பந்த விவரங்கள் வருமாறு:

1. பண்ணையாள்களின் தினக்கூலி, இரண்டு படி நெல்லுக்கு பதிலாக மூன்று படியாக இருக்கும்.
2. அறுவடையின் போது பண்ணையாட்களுக்கு அவர்கள் உழுத நிலத்திற்கேற்ப ஏழில் ஒரு பங்கு காலவடி அளிக்கப்படும்.
3. கூலி அளவு வழக்கமான நிர்ணயிக்கப்பட்ட அளவில் அமைந்திருக்கும்.
4. வாடகை பெற்றுக்கொண்ட பிறகு நில உரிமையாளர்கள் கதிரடிக்கும் இடத்திலேயே ரசீது வழங்க வேண்டும்.

மன்னார்குடி ஒப்பந்தம் தொழிலாளர்கள் நிலையை மேம்படுத்தியது. கலப்பல் ஒப்பந்தத்துடன் ஒப்பிடும்போது, தொழிலாளர்களின் தினக்கூலி ஒரு மரக்கால் நெல்லாக உயர்த்தப்பட்டது. அறுவடைக் காலத்தில், நெல்லின் ஏழில் ஒரு பகுதி பிணைக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது. நில உரிமையாளர்கள் வாடகை பெற்றதும், கதிரடிக்கும் தளத்திலேயே ரசீது கொடுக்க ஒப்புக்கொண்டனர்.

மன்னார்குடி ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த, நில உரிமையாளர்கள் பெருமளவு ஒத்துழைக்கவில்லை. பண்ணையுடன் பிணைக்கப்பட்ட தொழிலாளர்களின் தினக்கூலி உயர்வு நில உரிமையாளர்களின் கருணையைப் பொறுத்தே வழங்கப்பட்டது. வழக்கமான அளவுகளில் இருக்க வேண்டிய கூலியை தொழிலாளர்கள் அரிதாகவே பெற்றனர். மேலும், நில உரிமையாளர்கள் கதிரடிக்கும் தளத்தில் ரசீது கொடுக்கத் தயங்கினர். ஒரு சிலர் மட்டும் ரசீது வழங்கினர்.

முடிவுரை

1944இல் கலப்பல் குப்பு, தஞ்சை மாவட்டம் மன்னார்குடியைச் சுற்றியுள்ள கிராமங்களில் போராட்டம் நடத்தினார். விவசாயிகள், மிராசுதார்களுக்கு எதிராக வாரக்கூலியை உயர்த்தக்கோரியும், கொடுமையான தண்டனைகளை ரத்து செய்யக்கோரியும் போராட்டம் நடத்தினர். இராமநாதபுரம் மாவட்டம் வத்திராயிருப்பு, திருநெல்வேலியின் களக்காடு, மற்றும் சுற்றியுள்ள பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் அதிக கூலி மற்றும் அதிக வாரக்கூலி கேட்டு போராட்டம் நடத்தினர். பகிர்வுப் பயிர் செய்தவர்கள் 50 சதவீத விளைச்சலை வாரமாக கேட்டனர். தஞ்சை மாவட்டத்தின் அதிவெட்டி, மதுக்கூர், பாப்பநாடு, மதுரை மாவட்டத்தின் கன்னிவாடி, போடிநாயக்கனூர், மற்றும் நெய்க்காரப்பட்டி, இராமநாதபுரத்தின் திருப்பத்தூர், மானாமதுரை ஆகிய ஜமீன் பகுதிகளில், விவசாயிகள் ஜமீன்களுக்கு எதிராக ஒருங்கிணைந்து போராடினர்.

1945இல், ஏகாபத்திய அரசு அனைத்து விவசாயிகள் சபைகளுக்கும் தடை விதித்தது. தமிழ் நாட்டிலும், இந்திய பாதுகாப்பு விதிகள் பிரிவு 56இன்கீழ் தடை விதிக்கப்பட்டது. இருப்பினும், அரசின் அடக்குமுறை நீண்ட காலம் நீடிக்கவில்லை. தடையை மீறி, நாடு முழுவதும் 1946இல் பரவலான போராட்டங்கள் நடைபெற்றன. அதே ஆண்டு, தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம், மாயவரம், கும்பகோணம் தாலுக்காக்களில், வழக்கமான 33.5 சதவிகிதம் வாரத்திற்கு பதிலாக 50 சதவீதம் கேட்டு விவசாயிகள் போராடினர். இதையடுத்து, மிராசுதார்கள் மற்றும் விவசாயிகள் இடையே மோதல் வெடித்தது. இது தொடர்பாக மிராசுதாரின் இரண்டு வேலையாட்கள் கொல்லப்பட்டனர். இதனால் மன்னார்குடி தாலுக்காவில் கம்யூனிஸ்ட் மற்றும் விவசாயிகள் இயக்கங்களுக்கு தடை விதிக்கப்பட்டது. இதனிடையே, இருதரப்பின் பதற்றத்தைக் குறைக்க அரசு தற்காலிக தீர்வை வழங்கியது. ஆனால் மிராசுதார்கள் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்கவில்லை. இதன் விளைவாக, தமிழ் நாட்டில் 1947 முதல் அரசுக்கும், நில உரிமையாளர்களுக்கும் எதிராக தொடர்ச்சியான விவசாயப் போரட்டங்கள் நடைபெற்றன.



5

தேசியவாதமும் தமிழ் நாட்டின் உழைக்கும் வர்க்கமும்

பேராசிரியர் V.கிருஷ்ணா அனந்த்,
வரலாற்றுத் துறை
சிக்கிம் பல்கலைக்கழகம்

மேற்கு ஐரோப்பாவில் பொதுமக்களுக்கும் ஆள்பவர்களின் படைகளுக்கும் இடையில் 1830இல் தொடங்கிப் பல பத்தாண்டுகள் நடைபெற்ற கலகங்கள் எல்லாம் அடிக்கடி வன்முறையில் முடிந்தன. அரசாங்கத்திற்கு எதிராக நடத்தப்பட்ட இவ்வகையான கலகங்களுக்கெல்லாம் ஒரு பொதுவான போக்காக, ஆலைத் தொழிலாளர்கள், வேலையின்றி சுற்றித்திரியும் மக்கள் ஆகியோர் புழுவைப்போல நடத்தப்பட்டது காரணமாக இருந்தது. ஆட்சியாளர்களுக்கு எதிரான இக்கலகங்களில் ஈடுபட்டவர்களுக்குக் குறிப்பிடத்தக்க காரணங்களும், அதை எதிர்த்துப் போராடுவதற்கான மன உறுதியும் இருந்தாலும் சரியான வழிமுறைகளோ தெளிவான குறிக்கோளோ அவர்களிடம் இருக்கவில்லை. இத்தகைய சூழலில், இந்நிலைமைகள் குறித்து சிலபல குறிப்புகள் எழுதி வைத்திருந்த கார்ல் மார்க்ஸை தலைவர்கள் சிலர் இப்போராட்டங்களுக்கான அறிக்கை ஒன்றைத் தயார் செய்து தருமாறு அணுகினர். இளைஞரான மார்க்ஸும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இப்பணியை ஏற்றுக் கொண்டார். அதன் அடிப்படையில் தன் நண்பரான ஃப்ரெடரிக் எங்கெல்ஸுடன் சேர்ந்து பிப்ரவரி 1848இல் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை மார்க்ஸ் வெளியிட்டார்.

அன்று தொடங்கி, மார்க்ஸும், எங்கெல்ஸும் எழுதிய இந்த அறிக்கையானது (அவர்கள் மிகவும் அதிகமாகவே எழுதியிருந்தார்கள்) ஒரு கவிதை அல்லது உரைநடையாக பாசாங்கை வெளிப்படுத்தியதில்லை. மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஓர் அச்சுறுத்தலால், கம்யூனிசம் என்ற அச்சுறுத்தலால் ஆட்டிப்படைக்கப்பட வேண்டும் என்பது திட்டவட்டமானது; அதனால் கம்யூனிஸ்ட்கள் மொத்த உலகத்தின் முகத்தின் நேரே தங்கள் பார்வைகளை, நோக்கங்களை, தங்கள் இயல்புகளை, கம்யூனிசம் என்ற அச்சுறுத்தலின் தொடக்கக்கதையை அந்தக் கட்சியின் அறிக்கையின் மூலம் வெளிப்படையாக அறிவிக்கவேண்டியது அவசியமாயிற்று. இந்த நோக்கத்தில் தான் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட்கள் லண்டனில் கூடி இந்த அறிக்கையை ஆங்கிலம், ஃபிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலிய மொழி, ஃப்ளெமிஷ், டேனிஷ் ஆகிய மொழிகளில் வெளியிடுவதற்கான தீர்மானத்தை வரையறுத்தார்கள். இந்த அறிக்கை உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது; அந்த நூற்றாண்டின் இறுதியில் அந்நாடுகளைப் பிற்காலத்தில் பாதிக்கப்போகின்ற நாடு, நாட்டுப்பற்று என்ற எல்லைகளுக்குள் கம்யூனிஸ்ட்கள் அப்போதைய நிலையில் தம்மை உட்படுத்திக்கொள்ளவில்லை. வேறுவிதமாகச் சொன்னால் இந்தியாவும், ஆசியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா போன்ற பல பகுதிகளிலும் நாடு, நாட்டுப்பற்று என்ற எண்ணம் உதயமாகி இருக்கவில்லை.

“இன்றைய சமூகவரலாறுகள் எல்லாம் வர்க்கப் போராட்டத்தின் வரலாறுகளே. பூர்ஷ்வாக்களின் தனித்துவமான சகாப்தமாக இருக்கும் இன்றைய சகாப்தம் எங்களது சகாப்தம்: அது வர்க்க முரண்பாடுகளை எல்லாம் எளிமைப்படுத்திக் காட்டுகிறது. இன்று ஒட்டுமொத்த சமூகமும் ஒன்றுக்கொன்று விரோதமான இரண்டு முகாம்களாக, மேலும் எதிரெதிராகத் திரண்டிருக்கும் பூர்ஷ்வாக்கள் தொழிலாளர்கள் என்ற இருபெரும் வர்க்கங்களாகப் பிளவுண்டு வருகின்றன”, என்று உரத்த குரலில் இந்த அறிக்கை அறைகூவல் விடுத்தது. இந்த அறிக்கை 1857ஆம் ஆண்டு நடந்த புரட்சிக்கு ஒரு பத்தாண்டுக்கும் குறைவான காலத்திலும் 1806இல் நடந்த வேலூர் புரட்சியை அடுத்த ஐந்து ஆண்டுகளிலும் தான் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது என்பதை வலியுறுத்துவது தான் இந்தக் கட்டுரையின் நோக்கமும், அக்கறையும் ஆகும்.

இதனிடையே மார்க்ஸ், 1853இல் தொடங்கி நியூயார்க் டெய்லி ட்ரிப்யூன் என்ற பத்திரிக்கைக்கான தமது கட்டுரைகளில் இந்தியாவைக் குறித்த அவருடைய புரிதல்களை எழுதியிருக்கிறார். 25 ஜூன் 1853 இதழில் மார்க்ஸ் கருதுவதாவது:

“இந்திய சமூகத்தின் கட்டமைப்பு முழுவதையும் அதனை மறுநிர்மாணம் செய்வதற்கான எந்த அறிகுறியும் தென்படாவண்ணம் பிரிட்டிஷ் அரசாங்கம் உடைத்தெறிந்துவிட்டது. புது உலகம் எதையும் பெறாமல் தங்கள் தொன்மையான உலகத்தை இழந்துவிட்டது ஒரு வகையான மனச்சோர்வை உண்டாக்கிவிட்டதால் இன்றைய இந்துக்களின் நிலைமை பரிதாபமானதாக மாறுவதற்கு இது காரணமாகிவிட்டது. ஆங்கிலேயர்களால் ஆளப்படும் இந்துஸ்தானம் தனது பழைய வரலாற்றிலிருந்து முழுமையாகப் பிரிக்கப்பட்டு விட்டது”.

அடுத்ததாக 8 ஆகஸ்ட் 1853 அன்று வெளிவந்த அதே பத்திரிகையில் அவர் இந்தியாவில், இங்கிலாந்து நிறைவேற்ற வேண்டிய இரட்டைப் பணிகளைப் பற்றி எழுதும் போதும் இந்தியாவைப் பற்றிய இதே மாதிரியான புரிதல்தான் மார்க்ஸிடம் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. “ஒன்று அழித்தொழிப்பது, மற்றது புதிதாக உண்டாக்குவது. பழமையான ஆசிய முறை சமூகத்தை அழித்தொழிப்பது, மேற்குலகப் பொருள்முதல்வாத சமூகத்திற்கான அடித்தளத்தைக் கட்டியமைப்பது” என்று அவர் அதைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அதோடு அதே வெளியீட்டில் பின்வருமாறு கூறுகிறார்:

"ஆலைத் தொழிலாளர்களால் மாற்றியமைக்கப்பட்ட புதிய பிரிட்டிஷ் ஆளும் வர்க்கம் புதிய சமூகக் கூறுகளைத் தாமே துய்க்கும் வரை அல்லது ஆங்கிலேயர்களால் பூட்டப்பட்டிருக்கும் நுகத்தடியை இந்துக்களே ஒட்டுமொத்தமாகத் தூக்கியெறியும் வலிமை பெறும் வரை அவர்களிடையே சிதறிக் கிடக்கும் புதிய சமூகக் கூறுகளின் பயன்களை இந்தியர்கள் அறுவடை செய்து கொண்டுவிட முடியாது".

மார்க்ஸ், ஏகாதிபத்தியம் அல்லது காலனியாதிக்கம் போன்ற சொற்களை இவ்வெளியீடுகளில் பயன்படுத்தவில்லை என்றாலும், இந்த வெளியீட்டில் உள்ள கட்டுரையில், அவரது முன்னுணர்வு வெளிப்படாமல் போகவில்லை. ஏகாதிபத்தியம் காலனியாதிக்கம் போன்றவை பற்றிய புரிதல்களும் அதனால் காலனியாதிக்கத்திற்கு உட்பட்ட சமூகங்களில் ஏற்பட்ட விளைவுகளைப் பற்றிய ஆய்வுகளும் நடைபெறுவதற்கு 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலம்வரை காத்திருக்கவேண்டியிருந்தது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். இந்தியச் சமூகம்தான் புத்துயிர் பெறுவதற்கு அவசியமான ஆங்கிலேய அரசின் நுகத்தடியைத் தூக்கியெறியச் சக்தியற்றதாக இருந்தது என்பதை மார்க்ஸ் மிகவும் முன்னதாக, 1853ஆம் ஆண்டிலேயே உரக்கப் பேசிவிட்டார் என்பது தான் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய செய்தியாகும். 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே பிரிட்டிஷ் ஆட்சிக்கும் ஆட்சியாளர்களுக்கும் எதிராகத் தன்னெழுச்சியாக எழுந்த போராட்டங்களான சோட்டா நாகபுரி பழங்குடி இன மக்களின் கோல் கிளர்ச்சியில் தொடங்கி பல்வேறு கிளர்ச்சிகளை இந்தியா சந்தித்திருக்கிறது என்பதை வலியுறுத்த வேண்டியதும் அவசியம்.

இங்கே மார்க்ஸையும் அவரது எழுத்துக்களையும் கேள்விக்குட்படுத்துவது நமது நோக்கம் இல்லையென்றாலும் சுருக்கமாகவாவது அக்காலத்திய குறிப்பிடத்தக்க அம்சமான உலகளாவிய கிளர்ச்சிகளை 1880களில் தொடங்கி, கிட்டத்தட்ட அச்சமயத்தில் மார்க்ஸ் தனது பணிகளை முடித்துவிட்டு 1883இல் இறந்து போகிறார். தோண்டியெடுத்து ஆராய்வது பயனுள்ளதாக இருக்கும். இதை பெனெடிக்ட் ஆண்டெர்சன் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

1815 தொடங்கி 1894 வரையிலான எட்டு பத்தாண்டுக் காலங்களிலும் பெரும்பாலான உலக நாடுகள் ஆழ்ந்த பழமைவாத அமைதியில் ஆழ்ந்திருந்தன. ஐரோப்பா, தொழில்துறை, விஞ்ஞானம், மற்றும் பொருளாதாரம் ஆகிய துறைகளில் மிகப்பெருமளவில் முன்னேற்றம் கண்டிருந்ததன் காரணமாக இந்தியாவில் ஏற்பட்ட கிளர்ச்சிகள் தவிர்த்து ஏகாதிபத்தியமானது, ஆசியா, ஆப்பிரிக்கா, ஓசியானியா ஆகிய பகுதிகளில் வலுவான ஆயுதந்தாங்கிய எதிர்ப்புகள் இல்லாமலேயே முன்னேறிச்செல்ல முடிந்தது. மூலதனமும் வேகமாகவும், தடைகள் ஏதும் இல்லாமலும் நாடுகளையும், ஏகாதிபத்திய எல்லைகளையும் கடந்து செல்ல முடிந்தது.

ஆனால் 1880ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே முதல் உலகப் போர் என்னும் பெரும் நிலநடுக்கத்திற்கு முந்தைய அதிர்வுகள் புலப்படத் தொடங்கிவிட்டன. இரண்டாம் அலெக்ஸாண்டர் என்ற சார் மன்னர் 1881இல் புரட்சியாளர்கள் எனத் தம்மைத்தாமே அழைத்துக் கொண்டவர்களால் குண்டுவீசிக் கொல்லப்பட்டார். அதைத்தொடர்ந்து, அடுத்த இருபத்தைந்து ஆண்டுகள் மக்களது விருப்பத்தின் பேரில் தொடர்ந்து, ஃபிரெஞ்சு அதிபர், இத்தாலிய அரசர், பட்டத்திற்குரிய வாரிசான ஆஸ்திரிய இளவரசி, போர்த்துக்கீசிய அரசரும் அவரது வாரிசும், ஸ்பெயின் நாட்டுப் பிரதமர், இரண்டு அமெரிக்க அதிபர்கள், கிரேக்க நாட்டு அரசர், செர்பிய அரசர், ரஷ்யா, அயர்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த செல்வாக்குமிக்க பழமைவாத அரசியல் தலைவர்கள்

கொல்லப்பட்டார்கள்; உண்மையில், இன்னும் ஏராளமான அரசியல் ரீதியிலான தாக்குதல் முயற்சிகள் தோற்றும் போயின. மிகவும் வியக்கத்தக்க இத்தொடக்ககால கொலைகள் எல்லாம் அராஜகவாதிகளால் நிகழ்த்தப்பட்டிருந்தாலும் தேசியவாதிகளும் தாங்கள் விழித்துக் கொண்டபின் இத்தகைய செயல்பாடுகளைத் தொடர்ந்தார்கள். இதன் விளைவாக மக்களுக்கு எதிரான மிகக்கடுமையான தீவிரவாத எதிர்ப்புச் சட்டங்கள் உருவாக்கப்பட்டு, விசாரணையில்லாமல் பலருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. ஆனால் ஆரம்பகால அரசியல் கொலைகளை நிகழ்த்தித் தற்கொலைப் படையினராகத் திகழ்ந்தவர்கள், உலக அரங்கில் உள்ள பத்திரிகை நிறுவனங்கள், செய்தித்தாள்கள், சமய முற்போக்காளர்கள், தொழிலாளர் வர்க்கத்தினர், மற்றும் உழவர் கட்சிகள் ஆகியோருக்காகவே தாம் இவ்வாறு செயல்படுகிறோம் என்பதை அறிந்தே இருந்தார்கள்.

இந்தியாவிலும் அதே காலகட்டத்தில் அதே மாதிரியான உணர்வுகள் நிலவியிருந்ததை ஆண்டர்சன் குறிப்பிடவில்லை என்றாலும், காலனிய அதிகார வர்க்கத்தினருக்கு எதிரான இத்தகு போக்கு இந்தியாவிலும் தென்படத் தொடங்கியது. இத்தகைய அரசியல் கொலைகள் செய்தவர்கள் (இதைப் போலவே தோற்றுப்போன அரசியல் ரீதியிலான தாக்குதல்கள் பற்றிய ஆய்வுகள் நடத்தப்பட்டு அதில் ஈடுபட்டவர்களைப் புரட்சிகரத் தீவிரவாதிகள் என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டார்கள். 1857இல் காலனிய ஆதிக்கம் போராளிகளை அடக்கிய விதத்தின் விளைவாக அதே சமயத்தில் தொடங்கி இந்தியாவெங்கும் இதே மாதிரியான நிகழ்வுகள் நடந்தேறின.

இவ்வாறான நிகழ்ச்சிகளை எல்லாம் விவரிப்பதன் நோக்கம் இந்தியாவில் 19ஆம் மற்றும் 20ஆம் நூற்றாண்டுகளில் நடந்த வரலாற்று நிகழ்வுகள் எல்லாம் தனியானவை என்று நிறுவுவதற்கு அல்ல, மாறாக மேற்கு ஐரோப்பாவில் 18ஆம் நூற்றாண்டின் இடையில் ஏற்பட்ட தொழில்துறை முதலாளித்துவ உலகமயமாதலின் ஒரு பகுதியின் விளைவாக உலகெங்கிலும் நடந்த சிக்கலான நிகழ்வுகளோடு ஒன்றிணைந்த இன்னும் சொல்லப்போனால் பின்னிப் பிணைந்தவை என்பதை அடிக்கோடிட்டுக் காட்ட வேண்டும் என்பதே ஆகும். இதே பொருளில் தான் அப்போதைய மதராஸ் மாகாணத்தில் விடுதலைப் போராட்டத்திற்கான நிகழ்வுகளை, காலனியாதிக்கம் இந்தியாவில் கொண்டுவந்த பொருளாதார மாற்றங்களால் ஏற்பட்ட பொருளியல் மாற்றங்களின் தாக்கத்தின் காரணமாக எல்லா இடங்களிலிருந்தும் பெருக்கெடுத்து வந்த கருத்தாக்கங்களின் அடிப்படையில் பார்க்க வேண்டியது அவசியமாகிறது.

காலனியாதிக்கச் சூழலில் தமிழகத்தில் தொழில்துறையின் தோற்றமும் வளர்ச்சியும்

தொழில்துறை சமூகத்தில் ஏற்படும் மோதல்கள் பெரும்பாலும் பிறப்பாலோ அல்லது விருப்பமின்றியோ பங்கேற்கும் மனிதர்களுக்கிடையிலான பயனுள்ள உறவுகளால்தான் வடிவமைக்கப்படுகின்றன. இது ஒட்டுமொத்த வர்க்க முரண்பாடுகளை விளக்கப் போதுமானதாக இருந்தாலும் தனித்தன்மைகளைப் பற்றிக் குறிப்பிடுவது பயனுள்ளதாக இருக்கும். சூழ்நிலைகளின் அடிப்படையில், வரலாற்றைப் பொதுமைப்படுத்துதலில் பலியாகிவிடும் நிகழ்வுகளுக்கு இடையில் குறிப்பிட்ட பகுதியில் ஏற்பட்ட தொழில்துறை வளர்ச்சியைப் பற்றிய விவரங்கள் மிகவும் முக்கியமானதாகும். இந்த மாகாணத்தின் பல்வேறு தொழிற்சாலைகளிலும் பல்வேறு பகுதிகளிலும் பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்ப்பதன் மூலம் இதனை அறியலாம்.

மதராஸ் மாகாணத்தில் ஏற்பட்ட தொழில்துறை வளர்ச்சி காலனியச் சூழலில் இந்தியாவில் ஏற்பட்ட பொதுவான போக்கிலிருந்து பெரிய அளவில் மாறுபட்டிருக்கவில்லை.

பணியில் அமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையை வைத்துப் பார்க்கும்போது இந்த மாகாணம் வங்காளம், மும்பையை அடுத்து மூன்றாவது இடத்திலும் காலனியாதிக்க இந்தியாவின் மொத்தத் தொழிலாளர் எண்ணிக்கையில் 10 சதவீதத்தை உள்ளடக்கியதாகவும் இருந்தது. தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மதராஸ் மாகாணத்தில் இருந்த பெரிய தொழிற்சாலைகளைப் பின்வரும் வரிசையின் அடிப்படையில் காணலாம்:

1. ஜவுளித்துறை (பருத்தி நூற்பாலைகள், நெசவு, மற்றும் சணல் உள்ளிட்ட) மொத்த தொழிலாளர்களில் 38 சதவிகிதத்தினரைப் பணியமர்த்தியிருந்தது.

2. உணவு, மதுபானம், புகையிலை (சர்க்கரை ஆலைகள், ஆனால் முக்கியமாக நெல் வேக வைத்து அரிசி அரைக்கும் ஆலைகள், மற்றும் புகையிலை பதப்படுத்துதல்) தொழிலாளர் எண்ணிக்கையில் 24 சதவிகிதத்தினரைப் பணியமர்த்தியிருந்தது.

3. பருத்தியிலிருந்து கொட்டை நீக்கி அடுக்குதல் (பருவகாலத் தொழில்) 12 சதவிகிதத் தொழிலாளர்களை பணியமர்த்தியிருந்தது.

4. பொறியியல் துறை (முக்கியமாகத் தொடர்வண்டித் தொழிற்சாலைகள்) 10 சதவிகிதத்தினரை பணியமர்த்தியிருந்தது.

5. மரம், கல், கண்ணாடி தொடர்பான தொழிற்சாலைகள் (பெரிய அளவில் ஓடுகள் தயாரிக்கும் எண்ணற்ற தொழிலகங்கள்) 5 சதவிகிதத்தினரை பணியமர்த்தியிருந்தது.

ஜவுளி உற்பத்தி ஆலைகள் மதராஸ், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், மலபார், சேலம், விசாகப்பட்டினம், கிழக்குக் கோதாவரி ஆகிய இடங்களில் எல்லாம் பரவியிருந்தன. விசாகப்பட்டினத்திலும் கிழக்குக் கோதாவரியிலும் இருந்த ஆலைகளில் சணல் உற்பத்தி நடந்துகொண்டிருந்த பொழுது மற்ற இடங்களில் எல்லாம் பருத்தி நூற்பாலைகளும் நெசவாலைகளும் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன. சென்னையில் 3 ஆலைகள், மதுரையில் 2 ஆலைகள், திருநெல்வேலியில் ஓர் ஆலையும் இருந்தபோது, கோயம்புத்தூரில் மட்டும் 9 பெரிய ஜவுளி உற்பத்தி ஆலைகள் இருந்தன. கோயம்புத்தூர் தவிர மற்ற நகரங்கள் பருத்திநூல் உற்பத்தியிலும் துணி நெசவிலும் ஈடுபட்டிருந்தபோது கோயம்புத்தூரில் நூற்பு வேலை மட்டுமே பிரதானமாக நடந்ததால் பருத்தி நூல் உற்பத்திக்கு மட்டுமேயான இடமாக அது இருந்தது. பொறியியல் துறை சார்ந்த ஆலைகள் வட ஆற்காடு, செங்கல்பட்டு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சென்னை ஆகிய இடங்களில் அதிகம் இருந்தன. சென்னையைத் தவிர மற்ற இடங்களான, செங்கல்பட்டு (பெரம்பூர் பணிமனை, மதராஸ் மற்றும் தெற்கு மராத்தா இரயில்வே (M&SMR)க்கு சொந்தமானது), திருச்சிராப்பள்ளி (பொன்மலை பணிமனை தென்னிந்திய இரயில்வே (SIR)க்கு சொந்தமானது) போன்ற இடங்களில் இருந்த பொறியியல் தொழிற்சாலைகள் இரண்டு இரயில்வே நிறுவனங்களுக்கு அருகில் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. உணவு, மதுபானம், புகையிலை தொழிற்சாலைகள் மாகாணம் முழுவதும் பரவியிருந்தாலும் வடக்கு கோதாவரி, கிழக்கு கோதாவரி, கிருஷ்ணா, தெற்குக்கரை, குண்டூர், கோயம்புத்தூர், மலபார், விசாகப்பட்டினம் போன்ற இடங்களில் அதிகப் பணியாட்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். பருவநிலைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டிருந்த கொட்டை நீக்கப்பட்ட பருத்தியை அடுக்கி வைக்கும் ஆலைகள் கோயம்புத்தூர், பெல்லாரி, குண்டூர், கர்நூல், இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை, கிருஷ்ணா மற்றும் அனந்தபுரி போன்ற இடங்களில் பரவியிருந்தன. தொழில்துறை வளர்ச்சி மாகாணம் முழுவதும் அங்குமிங்குமாகப் பல இடங்களில் சிதறுண்டு இருந்தாலும்

மதராஸ், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை போன்ற நகரங்கள் அதிக எண்ணிக்கையிலான ஆலைத் தொழிலாளர்களைக் கொண்ட இடங்களாக வளர்ந்து வந்தன.

பணிச்சூழலில் நமது பார்வையில் ஊதியம் மிகவும் முக்கியமானதொரு காரணியாகப்படுகிறது. பணமதிப்பாலும் உண்மையான ஊதியம் என்ற அடிப்படையிலும் இரண்டு உலகப் போர்களுக்கு இடையில் ஊதியம் உயர்ந்து வந்திருப்பதற்கான சான்றுகள் இருக்கின்றன. ஆனால் முதல் உலகப் போருக்குப்பின் உடனடியாக ஊதியங்கள் குறைந்துபோயின. 1918க்குப் பிந்தைய ஆண்டுகளில் குறைந்தது 1937 தொழிலாளர் என்கிற அளவுக்கு பெருமளவு ஆட்குறைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தொழிலாளர் எண்ணிக்கை போர்க்காலங்களைவிட அதிகம் குறைந்ததோடு ஊதியமும் இந்தச் சமயத்தில் சுருங்கிவிட்டது. இந்த நிலை 1930களுக்கு இடையில் மாறினாலும் இங்கே கவனிக்க வேண்டியது என்னவென்றால் பணமதிப்பாலும் உண்மையான ஊதியம் என்ற அளவிலும் 1935ஐத் தாண்டிய அடுத்த பத்தாண்டுகளில் இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணப்பட்டது. பொதுவான இந்த இரண்டு நிலைமைகளுமே மதராஸ் மாகாணத்திலும் காணப்பட்டன.

இதுவரை பார்த்தவரையில் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமை திருப்திகரமானதாக இருக்கவில்லை. 1946க்குப் பின்னால் ஆலைத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை மிகவும் மோசமாகவே இருந்தது. ஏறத்தாழ மதராஸ் மாகாணத்தில் உள்ள மொத்தத் தொழிலாளர்களிலேயே அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர்களைக் கொண்ட மதராஸ் நகரத்தில் இருந்த 10 சதவிகிதம் ஆலைத் தொழிலாளர்கள் பற்றி ஆராய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட தொழிலாளர் ஆய்வுக்குழு தனது அறிக்கையில்:

“மதராஸ் மாநகராட்சி தனது பராமரிப்புத் துறையில் உள்ள தொழிலாளர்களில் 35 சதவிகிதத்தினருக்கு மட்டுமே குடியிருப்புகளை வழங்கியுள்ளது. அக்குடியிருப்புகள் பலவும் கூரை அல்லது ஓடுகள் வேயப்பட்ட, களிமண் அல்லது செங்கற்களால் கட்டப்பட்டவை. பல குடியிருப்புகளில் ஆண், பெண்களுக்குத் தனித்தனிக் குடிநீர்க் குழாய் வசதிகளை மாநகராட்சி ஏற்படுத்தித் தரவில்லை... தொழிலாளர்கள் தங்களுக்கான குடிசைகளை தாமாகவே ஏற்படுத்திக்கொண்ட பல இடங்களிலும் சுகாதார வசதிகள் ஏற்படுத்தித் தரப்படாததால் அவை அழுக்கும் குப்பையும் நிறைந்து மிகவும் கேவலமான நிலையில் இருந்தன”.

நகராட்சியின் நிலைமை இவ்வாறு இருந்ததென்றால் தனியார் துறைப் பணியாளர்களின் நிலைமை மிகச் சிறிய அளவிலேயே மாறுபட்டிருந்தது. ரெஜி குழு அறிக்கை: “மதராஸில் உள்ள பக்கிங்ஹாம் மற்றும் கர்னாடிக் ஆலை தனது பணியாட்களில் 10 சதவிகிதம் பேருக்கு மட்டுமே என்கிற குறைந்த அளவில் சுகாதார வசதியுடனான குடியிருப்புகளை வழங்கியுள்ளது. மற்ற தனியார் ஆலைகள் இத்தகைய வசதிகளைச் செய்து தந்ததற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. இவ்விரண்டு வகைகளிலும் (மாநகராட்சியிலும், ஆலைகளிலும்) இக்குடியிருப்புகளுக்காகப் பெயரளவிலான வாடகை வசூல் செய்யப்பட்டது”.

1938களின் தொடக்கத்தில் பெரும்பாலும் ஒரே ஒரு அறையை மட்டுமே கொண்டிருந்த இக்குடியிருப்புகளைப் பற்றி விவரித்த மதராஸ் தொழிற்சாலை இயக்குநர்: “அறைகள் பெரும்பாலும் காற்றோட்டம் இல்லாமலிருந்தன, சில வீடுகளின் வாசல்களோ மிகவும் தாழ்வாக உள்ளே போகும்போது ஒருவர் கிட்டத்தட்ட தம்மை இரண்டாக மடித்துக்

கொண்டபடிதான் நுழையும்படியாக இருந்தன. அறைகளில் சிறிதளவே வெளிச்சம் இருந்ததால் பகல் நேரத்தில் கூட விளக்கு வெளிச்சம் கொண்டுதான் பொருள்களைப் பார்க்க முடியும். தெருவை விடக் கீழாக வீடுகள் இருந்ததால் மழை நீர் உள்ளே புகுந்து தரை சொதசொதப்பாகி யாரும் வசிக்க இயலாததாகிவிடும் குளிப்பதும், துவைப்பதும் தெருக்களிலோ, சந்துகளிலோ தான் நடந்தன".

இத்தகைய குறைந்த வசதிகளோடு கூடிய வீடுகளில் வசிக்கும் சலுகைகள் கூட மிகக் குறைந்த எண்ணிக்கையிலான தொழிலாளர்களுக்கே கிடைத்தன, மற்றவர்கள் எல்லாம் பெரும்பாலும் கூவம் நதிக்கரை ஓரத்தில் உள்ள சேரிகளில் களிமண் சுவர்களாலோ, தடுக்குகளாலோ பனை ஓலைகளாலோ பழைய தகரங்களாலோ வேயப்பட்ட கூரைகள் உள்ள குடிசைகளில்தான் வசித்தனர். இந்தக் குடிசைகள் பற்றி இந்த அறிக்கை "காற்று புகாதவை, வெளிச்சம் புகாதவை, ஆனால் எப்படியேனும் தண்ணீர் புகுவதைத் தடுக்க இயலாதவை. அக்குடியிருப்புகளில் குடிநீர் வசதியோ, கழிப்பறை வசதிகளோ இல்லாததால் குடியிருப்பவர்கள் பொதுக்கழிப்பறைகளையும் பொதுக்குழாய்களையும் பயன்படுத்தினர். இந்தச் சேரிகள் எல்லாம் குப்பைமேடுகளாக சொதசொதப்பாக சுகாதாரமற்றவையாக இருந்தன" என்று கூறுகிறது.

மற்ற முக்கியத் தொழில் நகரங்களான மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகியவற்றைப் பொருத்தவரையில் கிடைக்கும் சிறிதளவேயான தகவல்களை வைத்துப் பார்க்கும்போது வேறுவகை மாதிரிகளை அங்கு பார்க்க முடிந்தது. A&F ஹார்வி தொழிற்சாலையில் ஒரு வீட்டு வசதிக் கூட்டுறவு சங்கம் 1938இல் நிறுவப்பட்டது. அச்சங்கம் 600 வீடுகளைக் கட்டியது; 'ஹார்விபட்டி' என்று அழைக்கப்பட்ட அக்குடியிருப்பில் தொழிலாளர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டன."அவை தரமான பொருட்களால் கட்டப்பட்டவை; ஓடுகள் வேயப்பட்டும் சிமெண்ட் தரைகளோடும் கட்டப்பட்டவை". இதற்கான செலவு 8 இலட்ச ரூபாயை வட்டியில்லாத முன்தொகையாக ஆலையே வழங்கியது. தொழிலாளர்கள் வீட்டிற்கான 600 ரூபாயை 4 ரூபாய் மட்டும் மாதத்தவணையாக கொடுத்த பின்பு இந்த வீட்டைத் தங்களது உடைமையாக்கிக் கொள்ளலாம். இந்த வசதி சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கப்பட்டது. தொழிலாளி திருமணமானவராக இருக்க வேண்டும்; குடும்பத்தில் இருப்பவர்களில் குறைந்தது இரண்டு பேராவது ஆலையில் பணியாற்ற வேண்டும்; ஆலையில் ஐந்து வருடங்களாவது பணியாற்றி முடித்திருக்க வேண்டும்.

இவை தொழிலாளர்களின் தேவைக்குக் குறைவானதாகவே இருந்தாலும் மதராஸ் மாகாணத்திலேயே தனித்தன்மை வாய்ந்த அமைப்பாக இது இருந்தது. இதை வைத்து மதராஸை விட மதுரை நெரிசல் குறைந்த நகரமாக இருந்தது என்று பொருளில்லை. எடுத்துக்காட்டாக மதுரையில் இருந்த மீனாட்சி மில்லின் "ஆலைத் தொழிலாளர்கள் குடிசைகளிலோ அல்லது வாடகை வீடுகளிலோ மில்லுக்கு அருகிலேயே குடியிருந்தனர். இங்கிருந்த நிலைமைகள் மிகமிக அசுத்தமாகவும் சுகாதரமற்றவையாகவும் இருந்தன."

கோயம்புத்தூரில் இருந்த வீடுகளின் நிலைமை மேலும் வருந்தத்தக்கனவாகவே இருந்தன. மாகாண மந்திரிசபை நிறுவப்பட்ட பிறகு 1937இல் அமைக்கப்பட்ட விசாரணைக் குழு இந்த நகரத்தில் இருந்த வீடுகளைப் பற்றிய தனது அறிக்கையில் பின்வருமாறு கூறுகிறது:

"கோயம்புத்தூரில் குடியமர்த்தப்பட்ட சில தொழிலாளர்களின் வீடுகள் அமைந்திருக்கும் சில இடங்களுக்கு நான் போனேன். அங்கிருந்த நிலைமைகள் அசுத்தமாகவும்

சுகாதாரமற்றவையாகவும் இருந்தன. தொழிலாளர்கள் பற்றிய ராயல் குழு 1931இல் வழங்கிய அறிக்கை இன்றைக்கும் பொருந்துவதாகவே இருக்கிறது. ஆனாலும் மக்கள் தொகைப் பெருக்கத்தால் நிலைமை மேலும் தீவிரமாக மோசமடைந்து இருக்கிறது".

பருத்தித் தொழில் வளர்ச்சி கோயம்புத்தூரில் ஒப்பீட்டளவில் பிந்தைய காலத்தில் தான் ஏற்பட்டது என்றாலும் தொழிலாளர்களின் வீட்டு வசதி பற்றி முதலாளிகள் அக்கறை கொள்ளாததன் காரணமாக மற்ற தொழில் வளர்ச்சியுள்ள இடங்களைப் போலவே இங்கும் குடிசைப் பகுதிகள் பெருகின. அரசாங்க நிறுவனங்களும், தனியார் தொழிற்சாலை நிருவாகமும் தொழிலாளர்களின் குடியிருப்பு வசதியைப்பற்றி அக்கறை காட்டாமல் புறக்கணித்தார்கள் என்பது தான் வருந்தத்தக்க உண்மை. அரசாங்க நிறுவனங்களும், தனியார் ஆலைகளும் தாங்கள் ஏற்படுத்திக் கொடுத்த "வீடுகளுக்காக குடும்பத்தின் மொத்த செலவில் 10.77 சதவிகிதத்தை வாடகையாகப் பெற்றுக்கொண்டன. 1937–1938இல் ஊதியங்கள் உயர்ந்ததால் வாடகைகளும் உயர்த்தப்பட்டன." குடிசைப் பகுதிகளைப் பொருத்தவரையில் தொழிலாளர்கள், கடன் வாங்கிய பணத்தில் வாடகை நிலத்தில் குடிசைகளைத் தாங்களே கட்டிக்கொண்டார்கள். நிலத்தின் உரிமையாளர்களில் பலர் தொழிற்சாலைகளில் மேற்பார்வையாளர்களாகவும் இருந்ததால் அவர்கள் தங்கள் விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் வாடகை வசூலித்ததால் அங்கும் நிலைமை மிகவும் மோசமாகவே இருந்தது.

இங்கே குறிப்பிடப்பட வேண்டிய செய்தி என்னவென்றால் தமிழகத்தில் ஏற்பட்ட தொழில்துறை வளர்ச்சியால் தொழிலாளர் குடியிருப்புகள் ஆங்காங்கே உருவாகித் தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கை அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. இவ்வாறாக, இங்கு ஓர் உழைக்கும் வர்க்கம் உருவாகியது; அவ்வர்க்கத்தினர் 1918 முதல், தமக்குள்ளாகவும், தொழிற்சங்கத் தலைவர்களோடும், முக்கியமாகக் கம்யூனிஸ்ட்களுடன், கலந்து பழகும் வாய்ப்பைப் பெற்றனர். தாம் பெற்ற அனுபவங்களை அவர்கள் தமக்குள் பகிர்ந்து கொண்டதால் அது அவர்களுடைய உணர்வுகளில் பாதிப்பை ஏற்படுத்தியது. இத்தகைய வளர்ச்சிப் போக்கில் தொழிற்சாலைகளில் நிலவிய நிலைமைகளும் அதில் பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட சிக்கல்களால் உண்டான முரண்களும் சேர்ந்து ஒருபுறம், தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையிலான மோதல்களும் மற்றொருபுறம், காலனியாதிக்க சக்திகளுடனான மோதல்களும் தோன்றக் காரணமாயின.

தொழிற்துறை வளர்ச்சிப் போக்குகளும், மோதல் போக்குகள் உருவாதலும்

அதிகப்படியான தொழிலாளர்களை உள்ளடக்கிய ஜவுளித் துறைத் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட நிகழ்வுகளின் போக்கு குறித்த விரிவான ஆராய்ச்சியோடு இந்தப் பகுதி தொடங்குகிறது. இந்தக் கட்டுரையின் நோக்கத்தின்படி 1939ஆம் ஆண்டில் இந்தியாவில் இருந்த அத்தனை நூற்பாலைகளிலும் ஏற்பட்ட நெருக்கடிகளின் காரணமாக ஏராளமான தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்; இது காலனியாதிக்க சூழலில் தொழிற்சாலைகள் பெருகுவதோடு தொடர்புடைய இயல்பாக இருந்தது. உற்பத்திச் செலவுகள் கூடி விட்டமை (கச்சாப் பருத்தியின் விலை உயர்வு காரணமாக இந்தியாவிலிருந்தும், இறக்குமதி மூலமாகவும்) என்பது பொதுவான சூழலாக இருந்தது; ஜப்பானிய நூல் ஏராளமாக இறக்குமதி செய்யப்பட்டுக் குவிக்கப்பட்டாலும் அதனோடு ஏற்பட்ட போட்டியின் காரணமாகவும் சந்தையில் நிலவிய தேக்க நிலைமைகளும் சேர்ந்து உற்பத்தி குறைவதற்குக் காரணமாயிற்று. இத்தகைய வேலை நீக்கங்கள் தொடக்கத்தில் பம்பாயிலும் அகமதாபாத்திலும் தொடங்கி முறையே 30,000க்கும், 12,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஜூலை 1939இல் பணி நீக்கம் செய்யப்பட்டனர்; கோயம்புத்தூரில் 13 ஆலைகளில் ஆகஸ்ட் 1939இல் இரவு நேரப்பணி இல்லாமல் ஆக்கப்பட்டது.

இந்திய ஜவுளித் துறையில் மந்தம் ஏற்பட்டதற்கு முக்கியக் காரணம் அதிகப்படியான உற்பத்தி, வெளிநாட்டு உற்பத்தியாளர்களால் அங்கு உற்பத்தி செய்யப்பட்டு இங்கு கொண்டுவந்து குவிக்கப்பட்டவை மற்றும் இங்கிருக்கும் மக்களின் வாங்கும் திறன் மிகவும் குறைவாக இருந்ததுமே ஆகும். ''சந்தையில் இருந்த மொத்தத் துணிகளின் (அல்லது துணி உற்பத்திக்காகக் கிடைக்கும் நூலின் அளவு) அளவைப் பற்றிய தகவல்களின் அடிப்படையில் நடத்தப்பட்ட ஆரம்பகட்ட ஆய்வுகளின்படி, 1938–1939இல் முடிவடையும் மூன்றாண்டுகளில் தனிநபருக்குத் தேவையான ஆடைக் கணக்குகளின்படி (ஒரு நபருக்கு 15.9 கஜம் என்ற கணக்கீட்டின்படி மொத்த மக்கள் தொகையான 365 மில்லியன்கள்) 669 மில்லியன் கஜம் துணி அல்லது அதற்கு இணையான அளவு நூல், பருத்தித் துணிப் பொருட்கள் ஜவுளிப்பொருட்கள் அதிகப்படியாக இருந்ததாகவும் அதேசமயம் இந்தோ ஜப்பானிய, இந்தோ–பிரிட்டன் வணிக ஒப்பந்தத்தின்படி இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயமும் இந்திய அரசுக்கு இருந்தது. இந்த இறக்குமதி உள்நாட்டுச் சந்தையின் அளவு உயர்வதைத் தடுத்தது, உள்நாட்டுப் பயன்பாட்டுக்கான துணி மட்டுமே இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டிருந்தால் இங்கேயே உற்பத்தியாகும் துணி இந்த நாட்டு மக்களின் நுகர்வுத் தேவைக்கு சற்றுக் குறைவாகவே இருந்திருக்குமாதலால் இந்தச் சந்தை விரிவடைந்திருக்கும்.

இத்தகைய நெருக்கடிகளையும், அதற்கான காரணங்களையும் பற்றிய பொதுவான விளக்கங்களின் பின்னணியில் மதராஸ் மாகாணத்தில், குறிப்பாகக் கோயம்புத்தூரில் நூல் உற்பத்திச் சூழலில் தொழில்துறையில் ஏற்பட்ட தனித்துவமான சிக்கல்களைப் பார்க்க வேண்டும். இங்கிலாந்திலிருந்தும் ஜப்பானிலிருந்தும் வணிக ஒப்பந்தத்தின்படி கட்டாயமாக இறக்குமதி செய்தாக வேண்டிய பருத்தித் துணிகளால் கோயம்புத்தூரில் உற்பத்தி செய்யப்பட்ட நூலின் தேவை உள்நாட்டு நுகர்வைவிட மிகவும் அதிகமாக இருந்தது. இதைக் குறித்த தகவல்களின்படி நூலின் உற்பத்தியானது ஜவுளி ஆலைகளில் ஓரளவு துணி நெசவு உற்பத்தியைப் பெருக்கிய பின்பும் மிகவும் சமமற்ற நிலையில் இருந்ததால் இம்மாகாணத்தில் நூல் கையிருப்பு மிகவும் அதிகமாக இருந்தது. கைத்தறித் துறை ஓரளவுக்கு இந்த நூலை உற்பத்திக்குப் பயன்படுத்திக் கொண்டபோதும்கூட இந்த நெருக்கடியைத் தீர்க்கும் அளவுக்கு அது போதுமானதாக இருக்கவில்லை. இங்கிருந்த கைத்தறித் துறையில் அத்தகைய அதீதமான வளர்ச்சி ஏற்பட்டதற்கான சான்றுகள் எதுவும் இல்லை.

இதனால் அறியப்படுவது என்னவென்றால் இந்தியத் தொழில்துறை வளர்ச்சிக் கட்டமைப்புக்குள்ளேயே 1939இல் ஏற்பட்ட ஜவுளித் துறை நெருக்கடிகளுக்கான காரணங்களும் இருந்தாலும் அதன் வெளிப்பாடாகத் தொழிலாளர்களை அதிக அளவில் வேலை நீக்கம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்த மாகாணத்தில் உள்ள பருத்தி நூல் உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலையில் ஏற்பட்ட மோதல் போக்குக்குக் காலனிய ஆதிக்கத்தையே அடிப்படைக் காரணமாக ஒருவர் சுட்டிக்காட்ட முடியும். இந்தப் புரிதலின் அடிப்படையில் தொழிற்துறையில் உலகப் போர்களின் தாக்கம் பற்றிப் பொதுவாகவும் அக்காலத்திய வாழ்க்கை நிலைமைகள் பற்றிக் குறிப்பாகவும் இங்கு விவாதிக்கக்கூடும். காலனிய ஆதிக்க இயல்பில் எழுந்த தொழில்துறை வளர்ச்சியின் உள்ளார்ந்த தன்மையாக நெருக்கடிகள் இருந்தாலும் இரண்டாம் உலகப்போர் தொடங்கியபோது இந்த நெருக்கடி உச்சநிலையை எட்டியது.

செப்டம்பர் 1939இல் உலகப் போர் தொடங்கியபோது இந்தியத் தொழில்துறைக்கு வேறு மாதிரியான பணி வழங்கப்பட்டது. நாள்தோறும் பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்களின்

எண்ணிக்கை இந்தக் காலகட்டத்தில் மொத்தத்தில் அதிகரிக்கவே செய்தாலும் மறுபக்கம் உள்நாட்டுத் தொழிலாளர்கள் அனைவரது வாழ்க்கைத்தரமும் திடீரென்று சரிந்து போயிற்று; இம்மாகாணத்தில் 1939–1940க்கிடையில் 17 சதவிகிதம் தொழிலாளர் எண்ணிக்கை அதிகரித்தது. ஜவுளித் துறையில் 9 சதவிகிதம் தொழிலாளர் எண்ணிக்கை அதிகரித்தது. இவ்வாறாக இவ்வுலகப் போரானது பெருமளவு வேலை நீக்கம் என்ற நெருக்கடியிலிருந்து தொழிற்சாலைகள் தப்பிக்க உதவியது. இந்த நிலையிலும்கூட விலை ஏற்றத்தாலும் அதற்கு ஈடு கொடுக்க முடியாத ஊதியத்தாலும் வாழ்க்கைத்தர சரிவு என வேறொரு வகையில் இந்த நெருக்கடி வெளிப்பட்டது. தொழிலாளர்களின் எண்ணிக்கையும், அவர்களது ஊதியமும் உயர்ந்தால்கூட உண்மையான ஊதியம் குறைந்துபோயிற்று. இதனோடு போர்க்கால உணவுத் தட்டுப்பாடும் சேர்ந்து, உழைக்கும் வர்க்கத்தை மிகவும் பாதித்தது. வாழ்க்கைத்தரம் தாழ்ந்து போனது. முதலுக்கும் தொழிலுக்குமான உறவையும் அதைப் போலவே தொழிலாளர்களுக்கும் காலனிய அரசுக்குமான உறவையும் தீர்மானிக்கும் முக்கிய காரணியாக மாறியது.

தமிழ்நாட்டில் தொழிலாளர் இயக்கங்களின் தொடக்க காலக் கிளர்ச்சிகள்

இந்தியாவிலேயே முதன்முதலாக மதராஸில்தான் தொழிற்சங்கம் தோற்றுவிக்கப்பட்டது என்பதைக் குறிப்பிடுவது இக்கட்டுரையின் நோக்கத்தின் அடிப்படையில் முக்கியமானதாகும். பல வகைகளில் இறையியலாளர்கள், நல்ல சமானியர்கள் போன்ற உதவும் குணம் கொண்டவர்கள் மற்றும் இவர்களை ஒத்த சிலரின் தாக்கமே 1918இல் மதராஸ் தொழிலாளர் கூட்டமைப்பு தோற்றுவிக்கப்பட காரணமாயிற்று. தொடக்கால இந்தியக் கம்யூனிஸ்ட்களில் ஒருவரான சிங்காரவேலு செட்டியார் இந்தக் கூட்டமைப்பைத் தொடங்கியவர்களில் (ஏப்ரல் 1918) ஒருவராக இருந்தாலும் அதன் பிந்தைய ஆண்டுகளில் அதன் வழிகாட்டியாக விளங்கினார் என்பது மறுக்க முடியாத உண்மை. சென்னைக் கடற்கரையில் (தற்போது உயர்நீதிமன்றக் கட்டடம் அமைந்திருக்கும் இடத்திற்கு அருகில்) மே தினக் கூட்டத்தைச் சிங்காரவேலு செட்டியார் தான் முதன்முதலில் 1 மே 1923 அன்று கூட்டினார். இந்துஸ்தான் விவசாயத் தொழிலாளர் கட்சி இந்தக் கூட்டத்தின்போதே தொடங்கப்பட்டது; இந்த அமைப்பும் 1924இல் தொடங்கப்பட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் முக்கிய அங்கம் வகித்தது. அதே சிங்காரவேலு செட்டியார் தான் இந்தியாவுக்கே மே தினத்தை அறிமுகம் செய்தவர் என்பதும் பொருத்தப்பாடுள்ள உண்மை. மதராஸ் தொழிலாளர் யூனியனைத் தொடங்கிய மற்றவர்களைப் போலல்லாமல் மார்க்ஸின் கருத்துக்களால் (இந்தக் கட்டுரையில் முன்பே சுருக்கமாக விவாதிக்கப்பட்டிருந்த) ஈர்க்கப்பட்டவராக அவர் இருந்தார். அதன் காரணமாக அவர் கைது செய்யப்பட்டு, 1924 கான்பூர் சதி வழக்கில் விசாரணைக் குற்றவாளியாக அவர் சேர்க்கப்பட்டார். வழக்கு மே 1923இல் தொடங்கியது. இதற்கு முன்னதாக நடந்த 1921 பெஷாவர் சதி வழக்கில் பலரும் கைது செய்யப்பட்டு இந்தியக் குற்றவியல் சட்டம் 124–A பிரிவின்கீழ் குற்றம் சாட்டப்பட்டனர். இந்தியா முழுவதும் அவ்வகையில் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான 13 பேரில் சிங்காரவேலு செட்டியாரும் ஒருவர். பின்னர் இப்பட்டியலில் இருப்பவரின் எண்ணிக்கை 8 ஆகக் குறைந்தது. சிங்காரவேலர் மதராஸிலிருந்து 6 மார்ச் 1924 அன்று கைது செய்யப்பட்டு விசாரணைக்கு அனுப்பப்பட்டார். சிங்காரவேலரின் கைதும், காலனிய அரசின் மற்ற பல அடக்குமுறை நடவடிக்கைகளும் 1924க்குப் பிறகான இரண்டாண்டுகளுக்கு இங்கு அமைதி நிலவக் காரணமாயிற்று. இதனிடையே, காலனியச் சூழலில், இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் தொழிற்சாலைகளின் வளர்ச்சி வெளிப்படையாக தெரிந்தாலும், 1920களின் இடையில் ஏற்பட்ட உலகளாவிய நெருக்கடிகளின் அழுத்தத்தை இந்தப் பகுதியும் உணரத் தொடங்கியது.

மாபெரும் தேச விடுதலைப் போராட்டச் சூழலில் நடந்த இந்தப் போராட்டங்கள் சைமன் குழு 1928இல் இந்தியாவிற்கு வருகை புரிந்ததை எதிர்த்து நடந்த ஆர்ப்பாட்டத்திலும் எதிரொலித்தது. மேற்குலக நாடுகளின் பொருளாதார நெருக்கடிகள் காலனியாதிக்க இந்தியாவிலும் தமிழகத்திலும்கூட தமது பாதிப்பைக் காட்டத் தொடங்கின அதனுடைய வெளிப்பாடு இந்தியாவெங்கும் இருந்த இரயில்வே நிறுவனங்களில் உணரப்பட்டது; தமிழகத்தில் மிகப்பெரிய பணிமனைகளை உடைய பொன்மலையிலும் (திருச்சிராப்பள்ளி) பெரம்பூரிலும் (மதராஸ்) வைத்திருந்த இரண்டு இரயில்வே நிறுவனங்களான தென்னிந்திய ரயில்வேயும் (SIR), தென்மராட்டா இரயில்வேயும் (M&SMR) தொழிலாளர்களை குறைப்பது, தொழிலாளர்களைப் பணிநீக்கம் செய்வது, பணியில் இருக்கும் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வை நிறுத்திவைப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கின.

1928 ஜூன் மாதம் 28ஆம் தேதி கம்யூனிஸ்ட் கட்சி சார்புடைய தொழிலாளர்களால் வழிநடத்தப்பட்ட தென்னிந்திய இரயில்வே தொழிலாளர் சங்கம் (SIRLU) பணி நீக்க உத்தரவு தொடர்பான சுற்றறிக்கையை ரத்து செய்யும்படியும், ஊதிய உயர்வை உடனடியாக வழங்கும்படியும் கோரிக்கைகளை வைத்தது. ஆனால் நிருவாகமோ தனது பணி நீக்க உத்தரவில் உறுதியாக இருந்ததால் 29 ஜூன் 1928 அன்று தொடங்கிய தொழிலாளர்களின் உள்ளிருப்புப் போராட்டத்தை நிருவாகம் சந்திக்க நேர்ந்தது. நாகப்பட்டினம், போத்தனூர், பொன்மலை, திருச்சிராப்பள்ளி போன்ற இடங்களில் பணிபுரிந்த 8,000 தொழிலாளர்களை நிருவாகம் பணி நீக்கம் செய்ததோடு கதவடைப்பும் செய்தது. காலனிய அரசின் அடக்குமுறைகளும் தொழிலாளர்கள்மீது அன்றே ஏவிவிடப்பட்டன. இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தின்போது திருச்சிராப்பள்ளியில் நடந்த கடையடைப்புப் போராட்டம் குறிப்பிடத்தக்கதாகும் 6 ஜூலை 1928 அன்று போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு ஆதரவாக எல்லாக் கடைகளும் மூடப்பட்டன, எல்லா வர்த்தக மையங்களும் மூடப்பட்டன. 3,000 பேர் கொண்ட மிகப்பெரிய ஊர்வலம் ஒன்றும் அன்றைய தினம் நடைபெற்றது. அதற்குப்பின் கிட்டத்தட்ட 106 தொழிலாளர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டு இரண்டு முதல் ஆறு மாதம் வரையான சிறைத்தண்டனையும் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இங்கிலாந்து நாட்டில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து காலனிய இந்திய தொழிற்சங்கங்களோடு இடைவிடாத தொடர்பிலிருந்த பலரில் அக்கட்சியின் முக்கிய உறுப்பினரான S.S.ஜோவாலாவுடன் தென்னிந்திய ரயில்வே (SIR) தொழிற்சங்கத்தின் தலைவர்கள் பலர் தொடர்பில் இருந்தனர் என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. இதற்கிடையில், இப்போராட்டத்தின்போது கம்யூனிஸ்ட்களுக்கும் கம்யூனிஸ்ட் அல்லாதவர்களுக்கும் இடையில் பிளவு ஏற்படத் தொடங்கியது. இதைப் பற்றிப் பேசுவது இக்கட்டுரையின் நோக்கமல்ல என்றாலும் கம்யூனிஸ்ட்டுகள் பத்தாண்டுகளுக்குள்ளாகவே ஊதியங்களுக்கான போராட்டங்களிலும் பணிச்சூழல் பற்றிய போராட்டங்களிலும் (1920களில் தொழிலாளர் இயக்கங்களில் இது முக்கிய விஷயமாக இருந்தது) காலனிய அரசை எதிர்ப்பதில் இயற்கையாகவே இணைந்து கொண்டனர் என்பது இங்கு வலியுறுத்திக் கூறப்படவேண்டிய ஒன்றாகும். தொழிலாளர்களின் புரட்சி காலனிய அரசால் (தொழில்துறையினர் சார்பாக) அடக்கப்பட்டதும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் இண்டர்நேஷனல் (COMINTERN) நடத்திய ஏழாவது காங்கிரஸ் மாநாட்டில் ஐக்கிய முன்னணியோடு சேர்ந்து எடுத்த ஒப்பந்தத்தின் காரணமாகவும் இவ்வாறு ஏற்பட்டது.

தமிழ்நாட்டில் 1934 முதல் 1946 வரை தொழிற்சங்கங்களும் இந்திய தேசிய இயக்கங்களும்

1920களின் போராட்ட அலைகள் 1929களில் தொடங்கி, பின்னர் படிப்படியாகக் குறையத் தொடங்கி 1935இல் அதன் வேகம் மிகவும் குறைந்து போயிற்று. கம்யூனிஸ்ட்களின்மீது போடப்பட்ட வழக்குகளும் அனைத்திந்தியத் தொழிற்சங்கக் கூட்டமைப்பில் 1929 முதல் ஏற்பட்ட பிளவும் இத்தகு நிலைமைக்கு முக்கியக் காரணங்களாயின. இந்தக் காலகட்டத்தில் தொழிலாளர்கள் ஒப்பீட்டளவில் அமைதியாக இருந்தாலும் முன்னதாகத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தங்களுக்கு காரணமான அமெரிக்க வால்ஸ்டிரீட் பங்குச் சந்தை வீழ்ச்சி ஏற்படுத்திய தாக்கம் போன்றவை இந்தியத் தொழிலாளர் வர்க்கத்திடையே தொடர்ந்து பாதிப்புகளை ஏற்படுத்தியபடியேதான் இருந்தன. 1937ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் தொழில்துறை மீட்சியடைந்ததைத் தொடர்ந்து வேலைநிறுத்தப் போராட்டங்களும் தீவிரமடையத் தொடங்கின. 1937ஆம் ஆண்டு வாக்கில் வேலைநிறுத்தப் போராட்டங்களின் எண்ணிக்கையும் அதன் காரணமாக மனித வேலையிழப்பு நாட்களின் எண்ணிக்கையும் வேகமாக அதிகரிப்பதைக் காண முடியும்; நாட்டிற்கு விடுதலை கிடைக்கும் வரை 1943 மற்றும் 1945 ஆண்டுகள் நீங்கலாக இதேநிலைதான் நீடித்தது.

ஏஜடியுசியின் அன்றைய பொதுச் செயலாளரான மணிபென் கேராவின் கூற்றுப்படி

“ஒரு புதிய விழிப்புணர்ச்சி அலை நாடு முழுவதும் பரவியது. ஒவ்வொரு இடத்திலிருந்தும் தொழிலாளர்கள் வரிந்து கட்டிக் கொண்டு வந்தார்கள் அவர்கள் தங்கள் தன்னம்பிக்கையை மீட்டெடுத்து முதலாளிகளின் ஒவ்வொரு அடக்குமுறையையும் எதிர்த்து நின்று தாங்கள் சில ஆண்டுகளுக்கு முன்னால் இழந்து விட்ட உரிமைகள் எல்லாவற்றையும் மீட்டெடுக்கவும் தயாராகிவிட்டார்கள்.

அதற்கும் மேலாக இதே காலத்தில் தொழிற்சங்கங்களில் காணப்பட்ட பிளவுகளும் மறையத் தொடங்கின. அகில இந்திய தொழிற்சங்க காங்கிரசிலிருந்து (AITUC) 1932இல் பிரிந்து சென்ற சிவப்பு தொழிற்சங்கக் காங்கிரஸ் (The Red Trade Union Congress) 1935இல் மீண்டும் அதனுடன் இணைந்து கொண்டது. அதைப் போலவே NTUF–ம் INTUCயுடன் 1940இல் இணைந்து கொண்டது. இவற்றுடன், இதே காலகட்டத்தில், 1931ஆம் ஆண்டு கராச்சித் தீர்மானம், இந்திய சட்டம் 1935இன்படி மாகாண சபைத் தேர்தல்கள், 1936இல் நேரு காங்கிரஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது போன்ற தீவிரவாத நிலைப்பாட்டை இந்திய தேசிய காங்கிரஸும் எட்டியிருந்தது. கராச்சி தீர்மானத்தின் ஒரு பகுதியை இங்கு கொடுப்பது அவசியமாகிறது:

“தொழிலாளர்களுக்கு நல்ல வாழ்க்கைத்தரம், முறையான பணி நேரம், நாட்டின் பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப தொழிலாளர் பணி நிலைகளையும் சர்வதேசத் தரத்திற்கு நிகராக இருக்கும்படி உறுதிப்படுத்துதல், முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் ஏற்படும் தகராறுகளைத் தீர்த்து வைக்கத் தேவையான கட்டமைப்பை ஏற்படுத்துதல், வயதுமுதிர்வு, நோய்த்தாக்குதல், வேலையின்மை, போன்றவற்றால் ஏற்படும் பொருளாதார நிலைமைகளைப் பாதுகாத்து சீர்செய்தல், தொழிலாளர்கள் சங்கம் அமைத்துக் கொள்ளவும் தங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் போராடும் உரிமைகளைப் பெற்றுத் தருதல் ஆகியவை தொழிலாளர்களுக்கான காங்கிரஸின் கொள்கையாகும்” என்று அத்தீர்மானம் குறிப்பிட்டது.

1930களின் நடுவில் தொழிலாளர்களின் பிரச்சினைகள் காங்கிரஸின் கவனத்தை ஈர்த்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்க விஷயமாகும். இதன் விளைவாக ஆறு தொழிலாளர் தொகுதிகளிலும் காங்கிரஸ் வேட்பாளர்களே வெற்றி பெற்றார்கள். தொழிற்சங்க இயக்கங்களின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய ஆய்வில் இத்தகைய ஒட்டுமொத்தப் பின்னணியையும் அறிந்து கொள்வது அவசியமாகிறது. 1937இல் நாடு முழுவதிலும் 6,50,000 தொழிலாளர்கள் கலந்துகொண்ட 179 போராட்டங்களில் மதராஸ் மாகாணத்தில் மட்டும் 61 போராட்டங்கள் நடந்தன; அவற்றில் 60,980 தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். அதாவது 1937இல் நடந்த போராட்டங்களில் நாடு முழுவதும் கலந்து கொண்ட தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையில் பத்து சதவிகிதத்தினர் மதராஸ் மாகாணத்தினர். மதராஸ் மாகாண அரசு இதனைப் பற்றி:

"இந்த ஆண்டு அதிக அளவில் வேலை நிறுத்தப் போராட்டங்கள் நடந்ததாகக் கிடைத்த அறிக்கை அரசாங்கத்தைப் பெருமளவு கவலைக்குள்ளாக்கி இருக்கிறது. முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான தவறான புரிதல்களும் அதனால் ஏற்படும் மோதல்களும் என பல காரணங்கள் இருந்தாலும், ஊதியமும் பணிச்சூழலும்தான் மிகவும் முக்கியமான காரணங்களாக இருக்கின்றன".

இவ்விதமாக இம்மாகாணத்தில் நடந்த 107 போராட்டங்களில் 60 போராட்டங்கள் ஜவுளி உற்பத்தித் தொழிற்சாலைகளில் நடந்தன; மனித வேலை நாட்கள் இழப்பு கணக்கெடுப்புப்படி 94 சதவிகித வேலை நாட்கள் இழப்பு இத்தொழிற்சாலைகளில் இருந்தன. அதாவது ஜவுளி உற்பத்தி நகரங்களான மதராஸ், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நகரங்கள் தொழிலாளர் வர்க்கத்தினரின் பெரும் போராட்டக் களங்களாயின. கூடுதல் தகவலாக, இப்போராட்டங்களின் போது ஒரே சமயத்தில் அதிக மனித வேலை நாட்கள் இழப்பு நேரிட்டது. தொழிலாளர்களின் வேலை நீக்கம், தற்காலிகப் பணிநீக்கம் போன்றவற்றிற்கு எதிரான போராட்டங்கள் 50 சதவிகித மனித வேலை நாட்கள் இழப்புக்குக் காரணமாக அமைந்தன. 1938–1939ஆம் ஆண்டுகளில் தொழிலாளர்கள் பெரும்பாலும் தற்காலிகப் பணிநீக்கம், முழுமையான பணிநீக்கம் ஆகியவற்றை எதிர்த்துப் போராடினார்கள் என்பது தெளிவு. காங்கிரஸ் தலைமையில் அமைந்த மதராஸ் மாகாண அரசாங்கம் (C. இராஜகோபாலாச்சாரி அதன் முதலமைச்சர்) இத்தகையப் போராட்டங்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கியது என்பதையும் இங்கு குறிப்பிடுவது அவசியம். முந்தைய ஏகாதிபத்திய ஆட்சியாளர்களைப்போலவே அதே அளவு தீவிரத்துடன் இருந்த இந்த அரசின் ஒடுக்குமுறையையும் தொழிலாளர் போராட்டங்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. குற்றப்பிரிவுச் சட்டத்திருத்தத்தில் இருந்த பயங்கரமான சட்டங்கள் கம்யூனிஸ்ட் தொழிற்சங்கத்தினரை ஒடுக்குவதற்கு அடிக்கடி பயன்படுத்தப்பட்டது. தடியடிகளும், குற்றப்பிரிவுச் சட்டம் 144 Cr.P.C படி தடை உத்தரவுகளும், ஒவ்வொரு போராட்டத்திற்கும் எதிராகப் பயன்படுத்தப்பட்டன. காங்கிரஸ் அமைச்சரவை ஆட்சியில் இருந்த காலத்தில் தொழிலாளர் வர்க்கத்தினரின் எதிர்பார்ப்பு பொய்த்துப் போயிற்று.

இரண்டாம் உலகப்போரின் போதும், காங்கிரஸ் அமைச்சரவை செப்டம்பர் 1939இல் பதவியைத் துறந்தபோதும், தொழிலாளர் உலகம் புதிய சவால்களைச் சந்திக்க நேர்ந்தது. போரின் உடனடியான தாக்கமான விலைவாசி உயர்வு தொழிலாளர்களைப் பாதித்தது. விலைவாசி உயர்வை ஈடுகட்டுவதற்குத் தேவையான அளவு ஊதியம் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. இந்திய அரசாங்கத்தின் உள்துறை அமைச்சகம் இங்கு நிலவிய அரசியல் சூழல் பற்றி பிப்ரவரி 1940இல் வெளியிட்ட ஆய்வு அறிக்கையில் இவ்வாறு கூறுகிறது:

"தொழிலாளர் உலகத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வும், தொழிற்சாலைகள் வளர்ச்சிப் பாதையில் செல்வதைக் காட்டும் அடையாளங்களும் ஊதிய உயர்வுக்கான கோரிக்கைகள் எழக் காரணமாகிவிட்டன; தங்களது அரசியல் நோக்கங்களுக்காக அங்கும் இங்குமாக சில சக்திகள் எழுச்சிக்குத் தயாராகி வருகின்றன, ஒருங்கமைந்த வேலை நிறுத்தத்திற்கான அச்சுறுத்தல்கள் உருவாகின".

மதராஸ் மாகாணத்திலும் வேலை நிறுத்தங்கள் தொடர்ந்து அதிகரித்தன, மேலும் இந்நிலை உலகப்போர் நடைபெற்ற காலம் முழுவதும் நீடித்தது. போருக்கு முந்தைய காலத்தைப் போலவே இச்சமயத்திலும் பெருமளவு போராட்ட அலை ஜவுளித் துறையில் தான் இருந்தது. 68 போராட்டங்கள், அதாவது மொத்த வேலைநிறுத்தத்தில் 29 சதவிகிதம் போராட்டங்களும் மொத்தத்தில் 75 சதவிகிதம் மனித வேலை நாட்கள் இழப்பும் ஏற்படும் விதத்தில் போராட்ட அலை இருந்தது. 1943இல் தொடங்கி இப்போராட்டங்கள் குறையத் தொடங்கியபோதும் உணவு, மதுபானம், புகையிலை, மற்றும் பிற தொழில்களில் ஈடுபட்டிருந்த அமைப்புசாராத் தொழிலாளர்கள் இப்போராட்ட அலையில் முன்னணி வகித்தார்கள். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் இந்த அமைப்பினர் 1943 முதல் 1945 வரை நடைபெற்ற 162 போராட்டங்களில் 134 போராட்டங்களில் பங்கேற்றார்கள். இக்காலகட்டத்தில் கிட்டத்தட்ட 77 சதவிகித மனித வேலை நாட்கள் இழப்பு ஏற்பட்டது. வரலாற்றிலேயே முதன்முறையாக, உள்ளாட்சி நிருவாகத்தால் பணியமர்த்தப்பட்டிருந்த தூய்மைப் பணியாளர்களும் வேலைநிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.

இப்படியாக மதராஸைச் சார்ந்த தொழிலாளர் வர்க்கம் இந்தியாவில் வாழும் தங்களுக்கு இணையான மற்ற தொழிலாளர்களைப் போலவே போர்க்காலத் தாக்கங்களை எதிர்த்து வேலைநிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டனர் என்று உறுதியாகச் சொல்லலாம்; 1935இல் தொடங்கிய இப்போராட்ட அலை தொடர்ந்து தீவிரமடைந்து, போர்க்காலங்களில் இத்தகைய போராட்டங்கள் மேலும் தீவிரமாக மற்ற துறைகளிலும் பரவியது.

போராட்ட அலைகளின் தன்மை குறித்துப் பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன: இந்தப் போராட்டங்கள் எல்லாம் போரினால் உண்டாகிய பொருளாதாரப் பாதிப்பின் வெளிப்பாடான விலைவாசி உயர்வை ஈடுகட்ட முயலாத ஊதியக் குறைபாடுகளால்தான் நடந்தன. ஆனால் தொடக்க காலத்தில் தற்காலிகப் பணிநீக்கம், பணிநீக்கம் போன்ற காரணங்களின் அடிப்படையிலேயே இப்போராட்டங்கள் அனைத்தும் நடைபெற்றன. இக்காலகட்டத்தில் நடந்த 59 சதவிகித வேலை நிறுத்தங்கள் ஊதிய உயர்வு, பஞ்சப்படி போன்றவற்றிற்காக நடைபெற்றன. (அன்றைய கணக்கீட்டின்படி 71 சதவிகித மனித வேலை நாட்கள் இழப்பு ஏற்பட்டது) வேலை நீக்கம், தற்காலிகப் பணிநீக்கம் ஆகியவற்றிற்காக 15 சதவிகித வேலை நிறுத்தங்கள் (14 சதவிகித மனித வேலை நாட்கள் இழப்பு) ஏற்பட்டன.

இரண்டாம் உலகப் போர் முடிவடையும் தருவாயில் காலனிய ஆட்சியாளர்கள் முன்னெப்போதையும்விட வலுவிழந்து போயிருந்ததும், தேசிய உணர்வெழுச்சியும், தொழிலாளர் வர்க்கத்தைப் பலவகையாகப் பாதித்தது. உலகப் போரின் காரணமாக ஏற்பட்ட தொழில் வளர்ச்சி குன்றிப்போய் தொழிலாளர் பணிநீக்கம் அந்தக் காலகட்டத்தின் நியதியாகிவிட்டது. முன்னர் நடந்தது போலவே இச்சமயத்திலும் இவ்வெதிர்ப்பு ஜவுளித்துறை தொழிற்சாலைகளிலேயே முதன்முதலில் வெளிப்பட்டது. இக்காலகட்டத்தில் நடந்த வேலை நிறுத்தங்களால் 75 சதவிகித மனித வேலை நாட்கள் இழப்பு ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து பொறியியல் துறை சார்ந்த தொழிற்சாலைகளில் 17 இலட்சம் வேலை நாட்கள் அல்லது 6 சதவிகிதம் மனித வேலை நாட்கள் இழப்பு ஏற்பட்டது.

இக்காலகட்டத்தில் ஏற்பட்ட எண்ணற்ற வேலை நிறுத்தப் போராட்டங்களில் வீரமிக்க போராட்டங்களான மதராஸ் மாநாகராட்சியின் துப்புரவுத் தொழிலாளர் போராட்டம், தென்னிந்திய இரயில்வே ஊழியர் போராட்டம், கோயம்புத்தூர் ஜவுளி உற்பத்தித் தொழிற்சாலைத் தொழிலாளர் போராட்டம், மதராஸில் இருந்த பக்கிங்ஹாம் கர்னாடிக் ஆலைத் தொழிலாளர் போராட்டங்கள் போன்றவை முக்கியமானவை ஆகும். இதில் முதல் மூன்று போராட்டங்களும் 1946ஆம் ஆண்டு ஆகஸ்ட் மற்றும் நவம்பர் மாதங்களிலும் B&C ஆலையின் போராட்டம் மார்ச் மற்றும் ஜூன் 1947 வரையிலும் என நீண்ட காலத்திற்கு நீடித்தது. இப்போராட்டங்கள் அனைத்தும் 9 அமைச்சர்களுடன் T.பிரகாசம் தலைமையிலான அமைச்சரவை மதராஸ் மாகாண ஆட்சிப் பொறுப்பேற்ற பின்புதான் நடைபெற்றன என்பது இச்சமயத்தில் குறிப்பிடப்படவேண்டிய சுவாரசியமான செய்தியாகும்.

கம்யூனிஸ்ட்களால் வழிநடத்தப்பட்ட தென்னிந்திய இரயில்வே தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் மதராஸ் மாகாணத்தின் தொழிற்சங்க இயக்க வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாகும். இந்தப் போராட்டம் 1946ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24ஆம் தேதி எல்லா இடங்களிலும் தொடங்கியிருந்தாலும் அனைத்திந்திய இரயில்வே தொழிலாளர்களின் கூட்டமைப்பு (All India Railway men's Federation, AIRF) "இரயில்வே தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் குறித்து ஓட்டெடுப்பு நடத்தியபோது வேலை நிறுத்தத்திற்கு மிகப் பெரும்பான்மையினரின் ஆதரவு இருப்பது வெளிப்பட்ட நிலையில்" அனைத்திந்தியப் பொது வேலைநிறுத்தம் செய்வதாக முடிவெடுத்தவுடன் அதனுடன் இச்சங்கமும் சேர்ந்து முன்தாயாரிப்புகளில் ஈடுபட்டது. 1946ஆம் ஆண்டு ஜூன் 27ஆம் தேதி தொடங்குவதாகத் தீர்மானிக்கப்பட்ட இந்த வேலைநிறுத்தம் எப்படியோ அனைத்திந்திய இரயில்வே தொழிலாளர்களின் கூட்டமைப்பால் தொடங்கப்படும் முன்பே விலக்கிக் கொள்ளப்பட, இதனோடு இணைந்து M&SMR மற்றும் S.I.R. தொழிலாளர்களின் கூட்டமைப்பும் தங்கள் வேலைநிறுத்த அழைப்பை விலக்கிக்கொண்டன. S.I.R. மட்டும் அதிகாரிகளை ஐயப்பாட்டில் சிக்கவைத்துக் கடைசி நேரத்தில்தான் தனது வேலைநிறுத்தப் போராட்ட அழைப்பை விலக்கிக்கொண்டது. ஆனால், வேலைநிறுத்தத்தைக் கைவிடுவதாக AIRF செய்த அறிவிப்பு, அதன் பொதுக்குழுவினரால் முழுமனதாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதற்கான மறுப்பு பொதுக்குழுவில் இருந்த கம்யூனிஸ்ட்களிடமிருந்து எழுந்தது. குறிப்பாக SIRLU தலைவரான M.கல்யாணசுந்தரம், G.I.P, BB&C இரயில்வே, B&A இரயில்வே, மற்றும் N.W இரயில்வே ஆகிய தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்து அளித்த கூட்டறிக்கை கூறியதாவது:

"இந்தப் போராட்டம் இன்னும் ஓயவில்லை. இது தற்காலிகமாகவே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மூன்று இலட்சம் பேரின் வேலை நீக்கம் மற்றும் ஊதியத் திருத்தம் குறித்து எழுப்பப்பட்ட கேள்விகள் இன்னும் பதிலளிக்கப் வைக்கப்படவில்லை. தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், பத்து இலட்சம் தொழிலாளர்கள் போராடத் தயாராக இருக்கிறார்கள் என்பதை முதலாளிகளின் குழுமமும், அரசாங்கமும் உணர்ந்து கொள்ளும்போது தான் இப்போராட்ட முடிவு அவர்களுக்குச் சாதகமாக அமையும். ஆகவே, வரவிருக்கும் ஆறு மாதங்களைத் தம்மைப் பலப்படுத்திக் கொள்வதற்கும் வேலைநிறுத்தம் பற்றி அஞ்சிக்கொண்டிருக்கும் தலைவர்களைத் தனிமைப்படுத்தவும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தொழிலாளர்களுக்கு அழைப்பு விடுக்கிறோம்.

இந்த 'ஆறு மாத கால' அவகாசத்தை S.I.R. நிருவாகம் தனது எதிர் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்திக்கொண்டு பொன்மலைப் பணிமனையில் பணியாற்றும் தொழிற்சங்கத்தின் செயல்பாட்டாளர்களான தனிநபர்களுக்கு தற்காலிகப் பணிநீக்க உத்தரவை

வழங்கியது. இதற்குப் பதிலளிக்கும் விதமாகப் பொன்மலைப் பணிமனைத் தொழிலாளர்கள 23 ஜூலை 1946 அன்று உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தார்கள். இதற்கு எதிராக S.I.R.இன் பொதுமேலாளர் 29 ஜூலை 1946 அன்று பின்வரும் ஓர் அறிக்கையை அனுப்பினார்: "1946 ஆகஸ்ட் முதல் தேதியான வியாழக்கிழமையிலிருந்து தொடங்கும் நாட்களில் எந்தத் தொழிலாளர் எல்லாம் இங்கு உண்மையில் பணியில் இருந்தார்களோ அவர்கள் மட்டுமே பணிமனைக்குள் அனுமதிக்கப்படுவார்கள். பணிமனையின் வாசலில் இத்தகைய தொழிலாளர்களை அடையாளம் காண்பதற்காகப் பணிமனை தொடர்பான மேற்பார்வையாளர் 31 ஜூலை 1946 அன்று நுழைவுச்சீட்டினைத் தொழிலாளர்களுக்கு வழங்குவார்." SIRLU தொழிற்சங்கத்தின் தலைமை, நிருவாகத்தின் இப்போக்கைக் கண்டித்ததோடு 2 ஆகஸ்டு 1946 அன்று பணிமனை வாசலில் அமைதியான முறையில் மறியல் போராட்டத்தை நடத்தியது. "அப்போது பணிக்கு வந்தவர்கள் கிட்டத்தட்ட 100 பேர் தான் இருப்பார்கள். அவர்களில் பெரும்பாலோர் மேற்பார்வையாளர்கள், (Foremen) மதிப்பீட்டாளர் (chargemen) ஒரு சில ஆங்கிலோ இந்தியத் தொழிலாளர்கள் மட்டுமே ஆவர், பொன்மலையில் இருந்த பணிமனைகளும் அலுவலகங்கள் யாவும் அனைத்து நடைமுறைப் பணிகளுக்காகவும் மூடப்பட்டன." இந்தச் சமயத்தில் SIRLU நிருவாகத்திடம் 1 ஆகஸ்ட் 1946 அன்று வேலைநிறுத்த அறிவிப்பினை வழங்கியது.

பொது வேலைநிறுத்தம் 24 ஆகஸ்ட் 1946 அன்று நள்ளிரவில் தொடங்கியது. தடுப்பு நடவடிக்கையாகவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவும் SIR நிர்வாகம் அனைத்துத் தொடர்வண்டிச் சேவைகளையும் முதல் நாள் மாலையிலிருந்தே இரத்து செய்தது. வேலைநிறுத்தம் தொடர்ந்து கொண்டிருந்தது. ஆகஸ்டு இறுதி வரை இரயில்வே நிருவாகம் சில பயணிகள் இரயில்களை மட்டுமே விட முடிந்தது, மொத்த இரயில் வண்டிச் சேவையையும் பகல் வேளைகளில் மட்டுமே வழங்க முடிந்தது. 50 வேலைநிறுத்த நாட்கள் முழுவதும் நீடித்த இதே நிலைமை தொழிற்சங்கம் 23 செப்டம்பர் 1946இல் வேலைநிறுத்தத்தைத் திரும்பப் பெறுவதாக அறிவிக்கும் வரை நீடித்தது. இயல்பான இரயில் வண்டிச் சேவை 24 செப்டம்பர் 1946 அன்று காலை முதல் மீண்டும் தொடங்கியது.

பொன்மலை இரயில்வே குடியிருப்புப் பகுதி S.I.R.இன் வேலைநிறுத்தம் காரணமாக பலத்த அடக்குமுறையைச் சந்தித்தது. 5 செப்டம்பர் 1946இல் அந்த அடக்குமுறையின் உச்சகட்டமாகத் தொழிற்சங்கத் தலைமை அலுவலகத்தில் கூடி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள்மீது போலீஸ் துப்பாக்கிச்சூடு நடத்தியது. அதில் ஐந்து பேர் கொல்லப்பட்டார்கள்; தொழிற்சங்கத் தலைவர்கள் உட்பட எண்ணற்றோர் படுகாயமடைந்தார்கள். போலீஸின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானவர்கள், தியாகராஜன், கிருஷ்ணமூர்த்தி, தங்கவேலு, ராமச்சந்திரன், மற்றும் ராஜூ ஆவர்.

தென்னிந்திய இரயில்வேயில் நடந்த இந்தப் பொது வேலைநிறுத்தத்தின் போது 50 பெண்கள் உட்பட 1,500 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். துப்பாக்கிச் சூட்டிற்கு 5 பேர் பலியாயினர். துப்பாக்கி முனைத் தாக்குதலாலும் தடியடிகளாலும் நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயமடைந்தார்கள். மலபார் சிறப்புப் போலீஸ் படை தென்னிந்திய இரயில்வே தொழிற்சங்கக் கட்டடத்தைக் கைப்பற்றியது. அங்கிருந்த தட்டு முட்டுச்சாமான்கள், ஒலிப்பெருக்கி போன்றவை உடைக்கப்பட்டன. இத்தகைய அழிவு வேலைகளால் ரூ.50,000 வரை இழப்பு ஏற்பட்டது.

முடிவுரை

முந்தைய பகுதிகளில் விரிவாகப் பேசப்பட்ட செய்திகள் மதராஸ் மாகாணத்தில் கம்யூனிஸக் கருத்துக்களின் தாக்கம் தொழிலாளர் மத்தியில் தொடர்ந்து வளர்ந்து வந்ததையும் 1918லிருந்து தொடங்கிய தீவிரமான போராட்டங்களும் உலகப் போர்க்காலங்களில் அதன் உச்ச நிலையை எட்டியதையும் வெளிப்படுத்துகின்றன. போர் நடந்த காலத்திற்கு முன்பு வரை மதராஸ் மாகாணத்தில் பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களோடு ஒப்பிடுகையில் கம்யூனிசத் தாக்கம் மிகவும் குறைவாகவே இருந்தது. போருக்குப் பிந்தைய ஆண்டுகளில் இந்நிலை வெகுவாக மாறியது. கம்யூனிஸ்ட்கள் மதராஸ் மாகாணத்தின் தொழிலாளர் தொகுதியில் இரண்டு வேட்பாளர்களை நிறுத்தினார்கள்; அவை குண்டூர் பொதுத் தொழிலாளர் தொகுதியும் இரயில்வே தொழிற்சங்கத் தொகுதியும் ஆகும். இரண்டிலும் அவர்களே வென்றார்கள். கம்யூனிஸ்ட் வேட்பாளரும் SIRLUவின் பொதுச்செயலாளருமான K.ஆனந்தன் நம்பியார், S.I.R., மதராஸ் மற்றும் தெற்கு மராட்டா இரயில்வே போன்றவற்றிலிருந்த பழமைவாதத் தொழிற்சங்கத்தின் உள்ளூர் தலைவராகிய ஆதிகேசவலு என்பவரைத் தோற்கடித்தார். இது அன்றைய போக்கில் ஒரு பகுதி மட்டுமே, முக்கியமாகப் பார்க்க வேண்டியது என்னவென்றால் அச்சமயத்தில் AITUC முற்போக்குப் பாதையை தீர்மானகரமாக முன்னெடுத்ததுதான். 1947இல் கல்கத்தாவில் நடந்த கூட்டத்தில் தனது முக்கிய நோக்கங்களாக AITUC முன்மொழிந்த முக்கியத் தீர்மானமே இதற்குச் சான்றாகும். அதன்படி:

அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (AITUC), சோஷலிசத்தையே தனது கோட்பாடு என்று வலியுறுத்துகிறது. தொழிலாளர் இயக்கங்களின் குறிக்கோள் பொதுவுடைமை அரசை நிறுவுவதற்காகப் பணியாற்றுவதே. அதேசமயம் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து நாடு விடுதலை பெறுவதே உடனடியான நோக்கம் என்பதையும் AITUC உணர்ந்தே இருக்கிறது. இந்த உடனடி நோக்கத்தை அங்கீகரித்தும் ஆட்சி மாற்றம் நடைபெறும்போது காலத்திற்கேற்ற அரசமைப்புச் சட்டம் தேவை என்பதையும் உணர்ந்த AITUC மக்களின் ஆதரவைப் பெற்ற ஜனநாயக அரசமைப்புச் சட்டம் ஒன்றை வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கி அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் அமைப்பு நிர்ணய சபை மூலம் அந்த அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிகிறது. AITUC பிரிட்டிஷ் ஏகாதிபத்தியச் சார்புடைய தன்னலவாதிகளின் வாக்குறுதிகளின் மீது நம்பிக்கை வைக்காமல் ஜனநாயக முறையிலான அரசமைப்புச் சட்டத்திற்காகப் போராட வேண்டுமென்று தொழிலாளர் வர்க்கத்தினருக்கு அழைப்பு விடுக்கிறது.

இறுதியாக, தமிழகத்தின் தொழிற்சங்க இயக்கங்களும் இந்தியாவின் மற்ற பகுதிகளைப் போலவே தன்னெழுச்சியாக வளர்ந்து ஏகாதிபத்தியத்திற்கு எதிராகத் திரண்டன. உண்மையில், நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு தொழிலாளர் வர்க்கம் நல்கிய பங்களிப்பானது இந்திய தேசிய காங்கிரஸின் பல்வேறு போராட்ட நடவடிக்கைகளுக்கு இணையான முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.



6

சுதந்திரப் போராட்டமும் தமிழ் நாட்டின் வெள்ளித்திரையும்

டாக்டர் தியோடர் பாஸ்கரன்,
எழுத்தாளர்
பெங்களூரு

ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான பழமை வாய்ந்த ஒரு சமுதாயத்தில், முற்றிலும் புதிதான ஓர் கலை தோன்றுகிறது. அதிலும், அது முழுவதும் தொழில்நுட்பம் சார்ந்த ஓர் நிகழ்த்துக் கலை ஆகும். சலனப் படங்களின் கலை மிக வேகமாக வளர்ந்தது. அது மக்களைக் கவர்ந்தது. அறிமுகமான சில ஆண்டுகளிலேயே, அது மக்களின் மிக விருப்பமான ஓர் பொழுதுபோக்காக பரிணமித்தது. தமிழ்நாட்டில் சினிமாவின் வருகையும் இந்திய சுதந்திரப் போராட்டமும் ஒரே சமயத்தில் துவங்கியது. இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பத்தாண்டு காந்தி தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பியதையும் (1915) இந்திய சுதந்திர இயக்கத்தை அவர் தலைமை தாங்கி நடத்தியதையும் கண்டது. அதே காலகட்டத்தில்தான் தமிழ் சினிமாவும் (1912) தொடங்கி, 1930 வரை தொடர்ந்து விரிவடைந்தது. அப்போது 124 அடியிலான முழுநீளத் திரைப்படங்கள் பெரும்பாலும் மதராசிலேயே உருவாக்கப்பட்டன.



ஓர் காட்சி ஊடகமாக, அரசியல் பிரச்சாரங்களை பரப்ப சினிமா பயன்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டின் சினிமா, அதன் இயக்குநர்கள் மற்றும் திரைக் கலைஞர்களை தேசியத் தலைவர்கள் பலர் அங்கீகரிக்காவிட்டாலும் அது சுதந்திரப் போராட்டத்திற்கு பல வகையில் உதவியது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். அமிர்தசரஸ் அருகில் உள்ள ஜாலியன் வாலாபாக்கில் ஆங்கிலேய அரசு நிகழ்த்திய பஞ்சாப் படுகொலை, 'தென்னாட்டு கம்பெனி' நாடகக் கலைஞர்களின் மனதில் ஆழமான அதிர்வை ஏற்படுத்தியது. அவர்கள் தங்கள் நாடகங்களில் ஆங்கிலேய எதிர்ப்பை வெளிப்படுத்தத் துவங்கினர். இவர்களைப் போன்ற பல நடிகர்கள் தங்கள் அரசியலுடனே திரை வெளிக்குள் நுழைந்தனர். இவ்வாறே திரையுலகிலும் அரசியல் பிரச்சாரம் தொடங்கியது.

மகாத்மா காந்தி 1942இல், சினிமாவை குறித்த தன் கருத்தில், "தீமை அதன் உரிமையை நிலைநாட்டி விட்டது", என்று குறிப்பிட்டார். அப்போதைய மதராஸ் மாகாணத்தின் முதலமைச்சரான இராஜாஜி, சினிமாவை "ஓர் ஒழிக்கப்பட வேண்டிய தீமை" என்று கருதினார். பெரியார், சினிமா பயனற்றது என்று தெரிவித்திருந்தார். படித்த மக்கள், சினிமாவை சாதாரண மக்களின் பொழுதுபோக்கிற்காக வழங்கி வந்தனர். தமிழ்நாட்டின் எழுத்தாளர்கள், வழக்கம்போல சினிமாவின் வருகையையும் கவனத்தில் கொள்ளவில்லை. லெனின் 1922இல், "கலைகளில் மிக முக்கியமான ஒன்றான சினிமா நமக்கானது" என்னும் ஓர் வரலாற்று சிறப்புமிக்க அறிக்கையை வெளியிட்டார். ரஷ்யாவுடன், ஜெர்மனி, ஃபிரான்ஸ், மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகளில் இக்கலை வடிவத்தின் முக்கியத்துவம் புரிந்து கொள்ளப்பட்டது. அரசாங்கங்களும், எழுத்தாளர்களும், கல்வியாளர்களும் சினிமா துளிர்க்கத் தொடங்கிய கட்டத்திலிருந்தே அதன்மீது ஆர்வம் காட்டினார்கள். ஆயினும், இந்தியாவில் சினிமா ஓர் மாறுபட்ட உருவாக்க கட்டத்தை கொண்டிருந்தது.

தேசிய காங்கிரஸ், தமிழ் சினிமாவின் அனைத்து அம்சங்களையும் தனது அரசியல் நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொண்டது. தேசிய நோக்கத்தை நிலைநிறுத்த சினிமாவே சிறந்த கலை வடிவம் என்று அவர்கள் நம்பினார்கள். காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி, அனைத்து கலைஞர்களையும் கட்சிக்குள் கொண்டு வந்து அவர்களை ஆதரித்தார். அவரும் ஓர் கலைஞர் ஆவார். அவர் தொழில்முறை நாடகக் குழுக்களுடன் ஈடுபட்டு, அரசியலுக்கும் நிகழ்த்துக் கலைகளுக்கும் இடையில் ஓர் பாலம் அமைத்தார். சத்தியமூர்த்தி அவர்களின் உத்வேகம் காரணமாக பல கலைஞர்கள் தேசிய இயக்கத்தை நேரடியாக ஆதரித்தனர். இவ்வாறே, திரையுலகிற்கும் அரசியலுக்கும் இடையிலான உறவு 1930களிலேயே தொடங்கியது.

திரைக் கொட்டகைகளின் தோற்றம்

தொடக்கத்தில் திரைப்படங்கள், வாடகை கட்டடங்களிலும், கொட்டகைகளிலும் திரையிடப்பட்டன. மதராசின் முதல் திரையரங்கம் 1900இல் துவங்கப்பட்டது. அதைத்தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் பல திரையரங்கங்கள் வந்தன. 1927இல் தாராபுரம் போன்ற சிறிய தாலுகாக்களிலும் திரையரங்கங்கள் திறக்கப்பட்டன. தமிழ் சமூகத்தில், திரைக் கொட்டகைகள் (டூரிங் டாக்கீஸ்) ஓர் சமூகப் புரட்சியைத் தொடங்கின என்றே கூறலாம். சாதி மற்றும் வகுப்பு வேறுபாடின்றி மக்கள் ஒன்று கூடும் ஓர் இடமாக அது இருந்தது. அது அரசியல் பிரச்சாரத்திற்கான ஓர் வாய்ப்பாகவும் அமைந்தது. இயங்கும் படங்களின் காலம் தொட்டு, திரைப்படங்கள் அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன.

திரைப்படங்களில் அரசியல் பிரச்சாரம்

நடராஜ முதலியார் 1916இல் தன்னுடைய கீசகவதம், மௌனப் படத்தின் மூலம் தமிழ் சினிமாவை தொடங்கி வைத்தார். அந்நிய நிறுவனங்கள் மேற்கத்திய சினிமாவை அதிக அளவில் இறக்குமதி செய்து திரையிட்ட ஒரு காலகட்டத்தில், அவர் தன்னுடைய நிறுவனத்திற்கு '**இந்தியா பிலிம்ஸ்**' என்று பெயரிட்டது அவருடைய தேசபக்தி உணர்வின் ஓர் அடையாளமாகும்.

முன்பே குறிப்பிட்டதுபோல, தமிழ் திரையுலகின் இந்திய தேசிய பிரச்சாரம் மௌனப் படங்களின் (1916–1930) சகாப்தத்திலேயே தொடங்கிவிட்டது. தென்னிந்தியாவின் முதல் சமகாலத் திரைப்படமான தர்மபத்தினி திரு. A.நாராயணன் அவர்களால் இயக்கப்பட்டது. அத்திரைப்படம், குடும்ப வாழ்க்கையின்மீது மது ஏற்படுத்தும் அழிவு விளைவுகளை குறித்துப் பேசியது. இதனைத் தொடர்ந்து சில திரைப்படங்கள் மது நுகர்விற்கு எதிரான கள்ளுண்ணாமை பிரச்சாரத்தை மேற்கொண்டன. இயக்குநர் நாராயணன் தனது திரைப்படங்களில் இந்திய சுதந்திரப் போராட்டத்தை ஆதரிக்கும் கருத்தியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார். ராஜா சாண்டோ அவர்கள் இயக்கிய நந்தனார் (1930) கள்ளுண்ணாமையை வலியுறுத்தியது. இத்தகைய கருத்துக்கள் தேசிய இயக்கத்தில் நேர்மறையான ஓர் இடத்தைப் பெற்றிருந்தன.

திரைப்படத் தணிக்கை

தேசிய இலட்சியத்தையும், விழிப்புணர்வையும் பரப்புவதற்கான வாய்ப்பை திரைப்படங்கள் வழங்குவதாக உணர்ந்த ஆங்கிலேய அரசு 1918இல் திரைப்பட தணிக்கையை நடைமுறைக்கு கொண்டு வந்தது. இந்தியாவில் திரைப்படத் தணிக்கை தொடக்கத்தில் காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. அப்போது தணிக்கை துறைக்கு திரைப்படங்களை திரையிட்டு காட்ட வேண்டியது கட்டாயமான ஒன்றாக இருக்கவில்லை. காவல்துறை கண்காணிப்பாளர்கள், அவ்வப்போது திரையிடல்களின்போது மக்களுடன் திரைப்படங்களைக் கண்டனர். அவற்றில் ஆட்சேபனைக்குரிய காட்சிகள் இருந்தால் மட்டுமே அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். பக்த விதுரர் என்னும் திரைப்படத்தில் விதுரராக நடித்தவர் காந்தி குல்லா அணிந்து வந்த காரணத்திற்காக அத்திரைப்படம் மதுரையில் தடை செய்யப்பட்டது. ஆங்கிலேய அரசை மோசமான வகையில் சித்தரிக்கும் காட்சிகள், ஆங்கிலேயர்களின் நெருங்கிய கூட்டாளிகளாக இருந்த சமஸ்தான ஆட்சியாளர்களை களங்கப்படுத்தும் விதமான காட்சிகள், இடதுசாரி சித்தாந்தங்களை உள்நுழைப்பது மற்றும் மத உணர்வுகளை புண்படுத்துவது போன்ற தேசப்பற்றை தூண்டக்கூடிய வகையிலான கூறுகள் உள்ளனவா என்று மேற்பார்வையாளர்கள் திரைப்படங்களில் கவனமாகத் தேடினர்.

பேசும் படங்களின் வருகை

ஒலி அறிமுகமான பின்னர் சினிமா மக்களிடையே மிகுந்த பிரபலமடைந்தது. பாடல்கள் நிறைந்த திரைப்படங்கள் வெளிவந்தன. அந்நாட்களின் சமூக அரசியல் சூழலை பாடல்கள் விரிவாக ஆய்வு செய்தன. மதுரகவி பாஸ்கரதாஸ் போன்றவர்களால் எழுதப்பட்ட பிரபல பாடல்களைப் பின்பற்றி இப்பாடல்கள் எழுதப்பட்டன. மக்களிடையே தேசத்தை குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதற்காக இவ்வகை திரைப்பாடல்கள் பயன்படுத்தப்பட்டன. தமிழின் முதல் பேசும் படமான காளிதாஸ் புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் மகாத்மா காந்தி அவர்களின் புகழ்பாடும் "காந்தியின் கை ராட்டினமே" என்னும் பாடல் அத்திரைப்படத்தில் இடம்பெற்றது.

திரைப் பிரச்சாரத்தின் முறைகளும் செயல்பாடுகளும்

தமிழ் சினிமா, அரசியலில் மக்களின் பங்கை பிரதிபலிக்கத் தொடங்கியது. அதற்கு, தீவிரமான அரசியல் சூழல், கலைஞர்கள் நிலையான பொருளாதாரத் தளத்துடன் இணைந்திருந்தது, மற்றும் சுதந்திர இயக்கங்களை ஆதரித்த ஓர் இயக்குநர்கள் குழு ஆகியவற்றுக்கு நாம் நன்றி கூற வேண்டும். நாடு முழுவதிலும் உள்ள புகழ்பெற்ற கவிஞர்களால் இயற்றப்பட்ட பாடல்களை ஒற்றிய திரைப்பாடல்கள் அமைக்கப்பட்டன

சாதி மதங்கள் அனந்தம் உண்டாயினும்
தாயின் விலங்கை தகர்த்தெறிய
ஒருமனதோடு எழுவோமே
பாரதமாதா பரிபூரண சுதந்திரம் எய்துவாளே



அநாதைப் பெண் (1938)

புராண கருத்துக்களை திரைப்படங்களாக்கிய சில காலத்திற்குப்பின், 1935 முதல் பேசும் படங்கள் சமகால பிரச்சினைகளை கையில் எடுத்தன. மதராசின் விபச்சார விடுதிகளுக்கு சென்ற காரணத்தால் தன்னுடைய உடல்நலத்தையும், செல்வத்தையும் இழந்த ஓர் இளைஞனின் அவலங்களை தம்பாச்சாரி என்னும் திரைப்படம் காட்சிப்படுத்தியது. அதனைத் தொடர்ந்து, மேனகா (1935) என்னும் சமூக நாடகம் திரைப்படமாக வெளியானது. ஆதிதிராவிடர் சமூகத்தின் முன்னேற்றம் மற்றும் கள்ளுண்ணாமை ஆகியவற்றை வலியுறுத்திய திரைப்படம் என்கிற வகையில் அது தேசியவாத இயக்கத்திற்கு வேகத்தை அளித்தது. சமூகத்தில் பெண்களின் நிலை உயர வேண்டும் என்னும் வாதத்துடன் பாரதியின் ஒரு பாடலும் திரைப்படத்தில் இடம் பெற்றிருந்தது. பாரதியின் பாடல்களை காங்கிரஸ் தொடர்ந்து பயன்படுத்தி வந்ததை நாம் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

பதிபக்தி போன்ற கம்பெனி நாடகங்களில் கள்ளுண்ணாமையே முக்கிய அம்சமாக இருந்தது. அவ்வகையிலேயே இந்நாடகம் மிகுந்த புகழ்பெற்றது. இந்நாடகத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சதிலீலாவதி மற்றும் பதிபக்தி போன்ற திரைப்படங்கள் பரவலான வரவேற்பைப் பெற்றன. வசதியான குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, பின்னர் மதுவுக்கு அடிமையான ஓர் இளைஞனை குறித்து இத்திரைப்படம் பேசியது. அவன் தன்னை மட்டுமல்லாது தன் குடும்பத்தையும் துயரத்தில் தள்ளுகிறான். இறுதியில், அவன் இலங்கையில் உள்ள தேயிலைத் தோட்டத்திற்கு வேலைக்கு செல்ல, அவன் மனைவி ராட்டினத்தில் ஆடை தயாரிக்கிறார். ஆங்காங்கே தேசிய சின்னங்களை அறிமுகப்படுத்தியதோடு அல்லாமல் இத்திரைப்படம் சுதந்திரப் போராட்ட இயக்கத்தை போற்றும் பாடல்களையும் கொண்டிருந்தது. மேலும், இலங்கை தேயிலை தோட்டங்களில் பணிபுரியும் தமிழ் தொழிலாளர்களின் அவல நிலையையும் திரைப்படம் எடுத்துக்காட்டியது. சமூகத் தொண்டு (1930) என்றும் அழைக்கப்பட்ட சந்தியா மோகன் என்னும் திரைப்படம் சந்திரசேகர் என்னும் இளைஞன் தன்னுடைய அரசுப் பணியை இராஜினாமா செய்துவிட்டு, தன் சொந்த கிராமத்திற்குத் திரும்பச் சென்று ஓர் ஆசிரமத்தைக் கட்டி ஊரக வளர்ச்சிக்காக பணிபுரிவதை சித்தரித்தது. ஒத்துழையாமை இயக்க காலத்தில் அரசுப் பணிகளை கைவிடுமாறு மகாத்மா காந்தி விடுத்த அழைப்பை இத்திரைப்படம் நேரடியாக சுட்டிக்காட்டியது. இத்திரைப்படம் மகாத்மா காந்தியின் கிராமப் பொருளாதார வளர்ச்சியை குறிப்பிட்டதோடு மட்டுமல்லாமல் பாரத மாதாவை புகழும் ஓர் பாடலையும் கொண்டிருந்தது. புராணத் திரைப்படங்களிலும் கூட தேசியவாத சின்னங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இவை, திரைப்படங்களுக்கும் திரைப்பட அமைப்புகளுக்கும் பொருத்தமின்றி அந்நியமாகவும், செயற்கையாகவும் இருந்தாலும் இப்போக்கு தொடர்ந்தது. நவீன சாரங்கதாரா (1936) என்னும் திரைப்படத்தில், அரசன் நரேந்திரனின் கொடுங்கோன்மைக்கு எதிராகப் பொங்கியெழுந்த அஸ்தினாபுர மக்கள் காந்தி குல்லாக்கள் அணிந்திருப்பது போன்ற காட்சி இடம்பெற்றிருந்தது.

பாடல்கள்

திரைப்படத் துறையில் தேசபக்தி போராட்டங்கள் செயல்படத் தொடங்கிய காலம் முதல், அதில் பங்கெடுத்த பாஸ்கரதாஸ், M.S.பாலசுந்தரம் போன்ற பாடலாசிரியர்கள் உயர்ந்த இடத்தை அடைந்தார்கள். சினிமா தணிக்கை அப்போது மாகாண அரசிடமே இருந்தது. பத்திரிகை, மேடை, மற்றும் பெரிய திரை ஆகியவை முழுமையாக பரிசோதிக்கப்பட்டன. ஆயினும் தேசிய கருத்துக்கள் திரையிலும், திரைக்கு வெளியிலும் பாடல்கள் மூலம் பரப்பப்பட்டன. கிராமஃபோன் இசைத்தட்டுகள், இக்கருத்துக்கள் மக்களை சென்றடைய உதவின. தேசபக்திப் பாடல்கள் பின்னர் இசைத்தட்டுகளில் வெளியிடப்பட்டபோது,

அது தேசிய இயக்கத்திற்கு மேலும் வலு சேர்த்தது. உதாரணமாக, மாத்ருபூமி (1939) திரைப்படத்தில் வரும் நமது ஜென்ம பூமி, நம் ஜென்ம பூமி என்ற பாடல் இவ்வாறு பிரபலமான பாடல்களில் ஒன்று. ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மலிவான விலை குறைவான இசைத்தட்டுகள், சாதி மற்றும் வர்க்க குறிப்பான்களைக் கடந்து இசையை அனைவருக்குமானதாக ஆக்கியது. அரசியல் நிகழ்வுகளிலும், பொதுக் கூட்டங்களிலும் அந்த இசை இசைக்கப்படுவதை தடுப்பது இயலாத ஒன்றாக ஆனது. பள்ளிகளிலும், இரயிலில் பிச்சை எடுப்பவர்களும் அப்பாடல்களை ஒன்றுபோலவே பாடினார்கள். நாட்டுப்புறப் பாடல்கள் ஒற்றைப் பாடல்களாக, தொடக்கத்தில் 'ஒதியன்' நிறுவனத்தாலும் பின்னர் 'சரஸ்வதி' நிறுவனத்தாலும் வெளியிடப்பட்டன.

கலைஞர்களின் அரசியல் ஈடுபாடு இரண்டு வகைகளில் இருந்தது, ஒன்று திரையில் தேசப்பற்றை பரப்புவது மற்றொன்று நேரடியாக அரசியலில் செயல்படுவது. சத்தியமூர்த்தி இரண்டாம் வகையிலான உறவை ஏற்படுத்திக்கொண்டார். அவர் அனைத்து நடிகர்களையும் காங்கிரஸ் கட்சிக்குள் கொண்டு வந்து அவர்களை ஆதரிக்கவும் செய்தார். அவர், கௌஹாத்தி காங்கிரஸ் பொதுக்கூட்டத்திற்கு நடிகர் நாகையாவையும் பிரதிநிதிகளில் ஒருவராக அனுப்பினார். தமிழ் சினிமாவின் அனைத்து பரிமாணங்களையும் அரசியலுக்கு பயன்படுத்திக்கொண்ட முதல் கட்சி காங்கிரஸ் கட்சியே ஆகும். தமிழ்நாடு அரசியலில் தீவிரமாக ஈடுபட்டிருந்த சத்தியமூர்த்தி நிகழ்த்துக் கலைகளின் சிறந்த புரவலராகவும் இருந்தார். நடனம் மற்றும் நாடகம் போன்ற கலை வடிவங்கள் அரசியலுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். பேசும் படங்களின் வருகைக்குப் பிறகு, தேசியவாத கருத்துக்களை கடத்துவதற்கு அவ்வூடகம் எத்தனை திறன் மிகுந்தது என்பதை சத்தியமூர்த்தி உணர்ந்தார். அடுத்த 30 வருடங்களில் சினிமா தன்னை ஓர் சக்தி வாய்ந்த ஊடகமாக தானே நிறுவிக்கொள்ளும் என்று அவர் நம்பினார்; மேலும், சமகால சமூக அரசியல் பிரச்சினைகளை சித்தரிக்க இவ்வடிவிலான பொழுதுபோக்கை தீவிரமாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் எண்ணினார்.

திரைத்துறையில் சக்தி வாய்ந்த ஒரு நபராக சத்தியமூர்த்தி இருந்தார். தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையின் முதல் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவ்வமைப்பின் விதிகளை அவரே எழுதினார். படித்த மேல்வர்க்கத்தினர் சினிமாவை ஓர் பண்பாடற்ற ஊடகமாகப் பார்த்த ஒரு காலகட்டத்தில், சினிமாவிற்கான அவருடைய ஆதரவு அத்துறையின்மீது புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சியது. சினிமாவின் பங்கை வலியுறுத்தி தமிழிலும், ஆங்கிலத்திலும் அவர் தொடர்ந்து எழுதினார். சினிமாவை குற்றமற்ற வகையில் அணுகுமாறு மற்ற தலைவர்களை அவர் வலியுறுத்தினார். நந்தனார் (1935) என்னும் திரைப்படம் மூலம் இசைக்கலைஞர் மகாராஜபுரம் விஸ்வநாதனுக்கு ஓர் திருப்புமுனையை அவர் ஏற்படுத்தினார். அத்திரைப்படத்தில் K.P.சுந்தராம்பாள் அவர்களும் நடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.



20 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் திரையுலகில் தலைசிறந்த ஒருவராகத் திகழ்ந்த கலைவாணர் N.S.கிருஷ்ணன் ஒத்துழையாமை இயக்கத்தில் ஆழமாக ஈடுபட்டிருந்தார். மகாத்மா காந்தியின் உப்பு சத்தியாகிரக

வரலாற்றை ஆவணப்படுத்த எண்ணிய அவர் அதை ஓர் வில்லுப்பாட்டு கதையாக மாற்றி பல்வேறு நாடகங்களிலும் தனி நிகழ்வுகளிலும் அறிமுகப்படுத்தினார்.



நேரடியாக அரசியலில் ஈடுபட்ட கலைஞர்களில் K.P.சுந்தராம்பாள் வரலாற்றில் கண்டிப்பாக குறிப்பிடப்படவேண்டிய ஒருவர் ஆவார். மேடைகளிலும் திரையிலும் நடித்த அவர் தேசப்பற்று பாடல்கள் கொண்ட இசைத் தட்டுக்களை வெளியிட்டார். காங்கிரஸ் கட்சிக்காக 1937 தேர்தல்களில் அவர் தீவிர பிரச்சாரம் செய்தார். மேடைகளில் சத்தியமூர்த்தி அவர்களின் உரைக்குப் பின்பு அவருடைய பாடல்கள் இடம் பெறும். "ஓட்டுடையோரெல்லாம் கேட்டிடுவீர்" என்னும் அவருடைய பாடல் தேர்தல் பொதுக்கூட்ட சமயங்களில் மிகப் பிரபலமானதாக இருந்தது. அத்தேர்தலில் காங்கிரஸ் பெரும் வெற்றி பெற்றது. ஒட்டுமொத்த 215 தொகுதிகளில், 159 தொகுதிகளை காங்கிரஸ் வென்றது.

இந்த காலகட்டத்தில்தான் K.P. சுந்தராம்பாள் திரைத்துறையில் தன் உச்ச நட்சத்திர அந்தஸ்தை அடைந்தார். நந்தனார் மற்றும் மணிமேகலை போன்ற படங்களில் நடித்ததற்காக அவர் மிகுந்த புகழ்பெற்றார். அவ்வையார் மறக்க முடியாத திரைப்படம் ஆகும். இத்திரைப்படம் ஓர் இசைப் படமாகும். இதில் தமிழ்க்கவி அவ்வையாரின் பல பாடல்கள் இடம் பெற்றிருந்தன. சுந்தராம்பாள், ஓர் உறுப்பினராக சட்டசபைக்கு சென்ற இந்தியாவின் முதல் திரைக் கலைஞர் ஆவார்; மேலும், 1958இல் மேலவை உறுப்பினராகவும் அவர் பதவி வகித்தார். தமிழ்நாட்டில் திரைக் கலைஞர்கள் சட்டப்பேரவைக்குள் நுழைவது இன்றுவரை ஓர் மரபாகவே தொடர்கிறது.

இன்பசாகரன் என்னும் வெற்றிகரமான நாடகம் மகாத்மா காந்தியுடன் சுதேசி இயக்கத்தில் பணியாற்றிய கோவை அய்யாமுத்து அவர்களால் எழுதப்பட்டது. இந்நாடகம் பாண்டிய மன்னன் இலங்கையைத் தாக்கியபோது அங்கு வெளிப்படுத்தப்பட்ட எதிர்ப்பின் ஓர் உருவகமாகும். இந்நாடகத்தை அதே பெயரில் இயக்குனர் K.சுப்பிரமணியம் திரைப்படமாக எடுத்தார். இருப்பினும், படப்பிடிப்பு நிலையத்தில் நிகழ்ந்த தீ விபத்தில் படச் சுருள்கள் எரிந்து சாம்பலாகி விட்டன.

மதராஸ் மாகாணத்தில் காங்கிரஸ் ஆட்சி

மதராஸ் மாகாணத்தில் 1937 தேர்தலுக்குப் பின்னர் இராஜாஜி தலைமையிலான அரசு பொறுப்பேற்றபோது தணிக்கை விதிகள் தளர்த்தப்பட்டன. புதிய அரசின்கீழ், தணிக்கை குழு மறுசீரமைக்கப்பட்டது. இதற்கு முன்பு தணிக்கையை தவிர்ப்பதற்காக ரகசிய தந்திரங்களை கையாண்ட இயக்குனர்கள் பலரும், இப்புதிய சுதந்திரத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள விரும்பினர். வாலிபர் சங்கம் (1938), ஹரிஜனப் பெண் (1938), ஆனந்தாஸ்ரமம் (1939), மற்றும் தேசபக்தி (1939) போன்ற நேரடி பிரச்சாரப் படங்கள் வெளியிடப்பட்டன. மாமன்னன் அலெக்சாண்டரின் படையெடுப்பையும், அதற்கு

இங்கிருந்த மன்னர்கள் வெளிப்படுத்திய எதிர்ப்பையும் உருவகப்படுத்தி மாத்ருபூமி (1939) திரைப்படம் வெளியானது. இத்தகைய திரைப்படங்கள் வெளிப்படையான ஒன்றாக அமைந்திருந்தன. அவ்வாறான திரைப்படங்களில் தியாகபூமி ஓர் முக்கிய இடத்தை பெறுகிறது. அத்திரைப்படத்தின் ஒரு பிரதி பூனா தேசிய திரைப்பட ஆவணக் காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது.

தியாகபூமி

கும்பகோணத்தில் ஓர் பழமைவாத பிராமண குடும்பத்தில் 1904இல் பிறந்த K.சுப்பிரமணியம் என்னும் தேசியவாதியால் இத்திரைப்படம் உருவாக்கப்பட்டது. வழக்கறிஞர் பணிக்காக படித்துவந்த சுப்பிரமணியம், 1928இல் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு மதராஸ் அசோசியேட் பிலிம்ஸ் என்னும் நிறுவனத்தில் சேர்ந்தார். பின்னர் அவர் மதராஸ் யுனைட்டெட் ஆர்டிஸ்ட் கார்ப்பரேஷன் என்னும் நிறுவனத்தை தொடங்கி பல திரைப்படங்களை உருவாக்கினார். அவருடைய அனைத்து திரைப்படங்களும், பாலமோகினி (1936) உட்பட, அர்ச்சகர்களை விமர்சனம் செய்தன. அவர் காங்கிரஸ் கட்சியில் இணைந்த பின்னர் அவருடைய திரைப்படங்களில் தேசப்பற்றின் தாக்கம் அதிகம் இருந்தது. அவருடைய சக இயக்குனர்களும் கேட்கத் துணியாத ஒரு காலகட்டத்தில், மத்திய வர்க்க மக்களின் நம்பிக்கைகளை அவர் கேள்விக்குட்படுத்தினார். அவருடைய மறக்க முடியாத திரைப்படமான தியாகபூமி படத்தின் கதைக்களம் தஞ்சாவூர் அருகில் உள்ள நெடுங்கரை என்னும் ஒரு கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்தது. ஏழை அர்ச்சகர் சாம்பு சாஸ்திரி, அவருடைய மகள் சாவித்திரி, மற்றும் தலித் பண்ணை ஊழியர் நல்லான் போன்றோர் அதில் முக்கிய கதாபாத்திரங்கள் ஆவர். தாய்மையடைந்த சாவித்திரி, தன்னுடைய திருமண வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக வயிற்றில் குழந்தையை சுமந்தபடி தன் தந்தையைக் காண வரும்போது, கிராமத்தில் தலித்துக்களை ஆதரித்த காரணத்தால் மற்ற பிராமணர்கள் அளித்த தொல்லைகளைப் பொறுக்க முடியாமல் அவர் கிராமத்தை விட்டு வெளியேறியதை அறிகிறார். அவரைத் தேடி மதராஸ் வந்தடைந்த சாவித்திரி தனக்கு பிறந்த குழந்தையை தற்செயலாக தனது தந்தையின் வீட்டிற்கு வெளியில் அவர் அறியாமல் கிடத்திவிட்டு சென்று விடுகிறார். சில ஆண்டுகளுக்குப் பின்னர், தன் அத்தையின் சொத்துக்கள் கிடைக்கப்பெற்றதால் செல்வந்தராகித் திரும்பிய சாவித்திரி, சாம்பு குடிசைப் பகுதிகளில் உள்ள தலித் மக்களின் முன்னேற்றத்திற்காக போராடுவது குறித்து அறிந்து கொள்கிறார். சாவித்திரியின் சொத்துக்களையும், செல்வத்தையும் அடைவதற்காக அவரோடு வாழ விரும்புவதாக அவருடைய கணவர் அவர்மீது வழக்கு தொடுக்கிறார். நீதிமன்றம் கணவருக்கு சாதகமான தீர்ப்பை வழங்குகிறது. எனினும், சாவித்திரி சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் ஈடுபட்டு சிறை செல்கிறார்.



'தமிழகத்தின் காந்தி' என்று அழைக்கப்பட்ட சாம்பு சாஸ்திரி, தான் சென்ற இடமெல்லாம் சுதந்திர உணர்வைப் பரப்பினார். அவர் தலைமையில்

நடத்தப்பட்ட பேரணிகளில் தலித் மக்களும், பிராமண மக்களும் கைகோர்த்து நடைபோட்டனர். குடிசைப் பகுதிகளில் வாழ்க்கை மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பிரச்சாரத்தை அவர் தொடங்குகிறார். மதுக்கடைகள் சூறையாடப்படுகின்றன. சாலைகள் தூய்மைப்படுத்தப்படுகின்றன. ஒரு காட்சியில் ஏராளமான மக்கள் கைராட்டினத்தில் துணி நெய்வது மகாத்மா காந்தியின் செயல்பாடுகளைக் குறிப்பிட்டது. மற்றொரு காட்சியில், காந்தியைப்போல ஓர் உயரமான மேடையில் அமர்ந்து சாம்பு சாஸ்திரி கைராட்டினத்தில் நூல் நூற்பது போன்றும் அவரைச் சுற்றி அமர்ந்திருந்த குடிசைவாழ் மக்களும் அவ்வாறே செய்வது போன்றும் அமைக்கப்பட்டிருந்தது. படப்பிடிப்பு கருவி சாஸ்திரியை நோக்கி நகர்ந்தபோது, திரையில் மகாத்மா காந்தி குறித்த செய்திப் படங்கள் இடம்பெறத் துவங்குகின்றன. இத்திரைப்படத்தின் சாதிக்கு எதிரான நிலைப்பாடு மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. சாம்பு சாஸ்திரியாக பாபநாசம் சிவன் நடித்திருந்தார், கல்கி கிருஷ்ணமூர்த்தி இதன் கதையை எழுதியிருந்தார். தியாகபூமி திரைப்படம் அது வெளியான காலகட்டத்தில் தடை செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மதராஸ் மாகாணத்தில் இராஜாஜி தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கம் ஆட்சி செய்த சமயத்தில், திரைப்படம் வெளியான ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு 1944இல், போர்க்கால தணிக்கையின்போதே தியாகபூமியுடன் மேலும் ஐந்து திரைப்படங்களும் தடை செய்யப்பட்டன. இந்திய சுதந்திரம் நெருங்கியவுடன், 1945இல் தணிக்கை முழுவதுமாக தளர்த்தப்பட்டது.

அருட்தொண்டர்களும் தேசியமும்

இதே காலகட்டத்தில் அருட்தொண்டர்களின் வாழ்க்கை குறித்த பல படங்கள் உருவாக்கப்பட்டன. இவ்வகை திரைப்படங்கள் சினிமா என்னும் தளத்தின்மீது மரியாதையை ஏற்படுத்தியதோடு தேசிய விடுதலை இயக்கத்திற்கான ஆதாரமாகவும் இருந்தன. சமூக மாற்றத்திற்காக தலைவர்கள் முன்னெடுத்த விஷயங்களும், அருட்தொண்டர்கள் கொண்டு வந்த சீர்திருத்தங்களும் ஒன்றோடு ஒன்று கைகோர்ப்பதை சுட்டிக்காட்டி, திரைப்படங்கள் தேசியத் தலைவர்களை அருட்தொண்டர்களுக்கு இணையாக சித்தரித்தன. இதன் பலனாக, சீர்திருத்த இயக்கம் மதங்களின் ஒப்புதலைப் பெற்றது. ஜோதி இராமலிங்க சுவாமிகள் (1939) என்னும் திரைப்படம் சாதிக்கு எதிரான வள்ளலாரின் நிலைப்பாட்டைக் குறித்துப் பேசியது. வள்ளலார் பதினோராம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் வாழ்ந்தவர் ஆவார்.

பக்த ராமதாஸ் (1935) என்னும் திரைப்படம் காந்திய சிந்தனையான மத நல்லிணக்கத்தைப் போற்றும் விதமாக, ஹைதராபாத் நவாப் ராமர் கோவில் கட்டுவதற்கு நிலம் அளிப்பதாக சித்தரிக்கிறது. லட்சுமி அல்லது ஹரிஜனப் பெண் (1937) என்னும் திரைப்படம், தீண்டாமை குறித்தும் தலித்துக்களின் கிறிஸ்தவ மதமாற்றம் குறித்தும் பேசியது.

பழமையான சங்க இலக்கியங்களையும், சீர்திருத்தவாத நாடக ஆசிரியர்களின் கதைகளையும் அடிப்படையாகக்கொண்டு எடுக்கப்பட்ட திரைப்படங்களில் நந்தனார் (1939) மிக முக்கியமான ஒன்றாகும். காந்திய சமூக முன்னேற்ற சிந்தனைகளில் ஒரு பேசுபொருளாகும் முன்னரே, கோபாலகிருஷ்ண பாரதி தீண்டாமைக்கு தன் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினார். கதையை இசையின் மூலம் விவரிக்கும் உத்தியை பயன்படுத்திய இத்திரைப்படம் ஓர் இசைப்படமாக வெளிவந்தது. கோபாலகிருஷ்ண பாரதி இத்திரைப்படத்தில் பிரதான கதாபாத்திரமாக கதையை நகர்த்திச் சென்றார். M.M.தண்டபாணி தேசிகரின் பாடல்கள் இத்திரைப்படத்தின் தீவிரத் தன்மையை அதிகரித்தது.

அதிரடித் திரைப்படங்கள் என்கிற ஒரு வகை மட்டுமே மௌனப்படங்கள் முதல் பேசும் படங்கள் வரை தொடர்ந்து நீடித்த ஒன்றாகும். இவ்வகையிலான திரைப்படங்களிலும், தேசிய இயக்கத்தைப் போற்றும் வகையிலான ஒரு பாடல் அல்லது காட்சி இடம்பெறும்படி உறுதி செய்யப்பட்டது. பம்பாய் மெயில் (1939) என்னும் திரைப்படம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் மூவர்ணக் கொடியை கையில் ஏந்தி நடை போடுவது போலான ஒரு காட்சியுடன் தொடங்கியது. மாயாமாயவன் (1938) திரைப்படத்தில் மகாத்மா காந்தியைப் புகழும் ஒரு பாடல் இடம் பெற்றிருந்தது.



ஆவணப் படங்கள் மற்றும் பிரச்சாரம்

தேசிய இயக்கத்தின் பொதுப் பிரிவை ஒருங்கிணைக்கும் ஓர் முயற்சியாக, பல தயாரிப்பாளர்கள் காங்கிரஸ் நிகழ்வுகளை குறும்படங்களாக உருவாக்கி அவற்றை முழு நீளத் திரைப்படங்களோடு திரையிட்டார்கள். மௌனப் படங்களின் காலத்தில் தொடங்கிய ஆவணப்பட அலை, பேசும் படங்களின் காலத்தில் மக்களை சென்றடையும் வேகம் மற்றும் அவை ஏற்படுத்திய தாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் முழு வீச்சில் வளர்ச்சி அடைந்தது. மக்களிடையே திரையிடப்பட்ட தேசிய இயக்கம் தொடர்பான காட்சிகள், தலைவர்களின் பேச்சுக்கள், மற்றும் காங்கிரஸ் பொதுக்கூட்ட காட்சிகள் போன்றவையே தேசிய இயக்கமாக மாறின. அக்காலகட்டத்தின் முன்னோடி இயக்குநர்களில் ஒருவரான A.நாராயணன் 1937 தேர்தல்களில் காங்கிரஸ் வேட்பாளர் சத்தியமூர்த்தியை ஆதரித்து ஓர் பிரச்சார காணொளியை உருவாக்கினார். அந்தக் குறும்படத்தில் சத்தியமூர்த்தியும் ஃபூலாபாய் தேசாய் அவர்களும் ஒன்றாக இணைந்து பிரச்சாரம் செய்த காட்சிகள் இடம் பெற்றிருந்தன.

அவ்வாறான முயற்சிகளில் A.K.செட்டியார் அவர்களால் 1940இல் உருவாக்கப்பட்ட 'மகாத்மா காந்தி' திரைப்படம், விதிவிலக்கான ஒன்றாகும். செட்டியார் மதராசில் வசித்து வந்த ஓர் எழுத்தாளரும், தேசியவாதியும் ஆவார். P.V.பதி அவர்களை தொழில்நுட்ப இயக்குனராக தன்னுடன் இணைத்துக்கொண்டு மகாத்மா காந்தி குறித்த சிறு காட்சிகளை ஒன்றிணைத்து ஓர் நான்கு மணிநேர ஆவணப்படமாக அதை தயாரித்தார். இதன் உருவாக்கத்திற்கு காங்கிரஸ் தலைவர்கள் செட்டியாருக்கு நல்ல ஒத்துழைப்பை அளித்தனர். குருசாமி இத்திரைப்படத்திற்கு திரைக்கதை எழுதினார் நாவலாசிரியர் V.M.கோதைநாயகி அம்மாள் நடிகர் செருக்களத்தூர் சாமா மற்றும் தேசிய இயக்கத்தின் தலைவர் K.கணேசன் ஆகியோர் பின்னணி குரல் கலைஞர்களாக பணியாற்றினார்கள். D.K.பட்டம்மாள் மற்றும் சூரியகுமாரி பின்னணி பாடல்களைப் பாடினர். செட்டியார், செய்தி நிறுவனங்களிடமிருந்து மகாத்மா காந்தி குறித்த சில படக் காட்சிகளை படச்சுருள் வடிவில் விலை கொடுத்து வாங்கவும் செய்தார். சில காட்சிகளை V.V.பதியின் தொழில்நுட்ப உதவியுடன் படமாக்கினார். அவற்றில், இராட்டினத்தில் நேரு நூல் நூற்கும் அரிய காட்சியும் ஒன்றாகும். அதேபோல் திருப்பூர் நெய்க்காரன்பட்டியில் நூற்றுக்கணக்கான பெண்கள் ஒரே சமயத்தில் நூல் நூற்கும் காட்சி மற்றொன்றாகும். இக்காட்சிகள் அனைத்தும் வெட்டி, ஒட்டி, திருத்தப்பட்டு ஓர் ஆவணப்படமாக அவரால் வெளியிடப்பட்டது.

கடுமையான தணிக்கைக்குப் பின்னும் செட்டியாரின் திரைப்படம் வெட்டுகள் ஏதுமின்றி திரையிடப்பட்டது. இத்தகைய அரிய தமிழ்த் திரைப்படம் தொலைந்து போனது ஒரு மாபெரும் இழப்பாகும். இப்படத்தை உருவாக்க செட்டியார் விலை கொடுத்து வாங்கிய செய்திச் சுருள்கள் இன்றும் காணக் கிடைக்கின்றன. மதுரை காந்தி அருங்காட்சியகத்தில் அவற்றை என்னால் காண முடிந்தது. செட்டியாரால் உருவாக்கப்பட்ட அந்த மகாத்மா காந்தி என்னும் நான்கு மணிநேர ஆவணப்படத்திற்கான தேடல் இன்றும் தொடர்கிறது.

இரண்டாம் உலகப் போர்

இரண்டாம் உலகப்போரில் இந்தியா பங்கேற்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து 1939இல் மதராஸ் மாகாணத்தின் காங்கிரஸ் அமைச்சரவை இராஜினாமா செய்தது. இதன் காரணமாக, பத்திரிகை, திரைப்படம், மற்றும் நாடகம் போன்ற ஊடகங்கள் மீதான தணிக்கை கடுமையானதாக மாறியது. தேச நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட திரைப்படங்களுக்கு இது ஓர் முற்றுப்புள்ளி வைத்தது. ஆங்கிலேய அரசாங்கம் திரைத்துறையை கடுமையாக நெரித்தது. தயாரிப்பாளர்கள் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருள்களை நம்பியிருக்க வேண்டிய நிலை உருவானது. போர்க்கால விதிகள் காரணமாக கச்சா படச்சுருள்களின் இறக்குமதி கடினமானதாக மாறியது; இது திரைப்படங்களின் தயாரிப்பை பாதித்தது. போர்க்கால மின் நிறுத்தங்கள், பெட்ரோல் போன்ற எரிபொருட்கள் மீதான கட்டுப்பாடுகள், மற்றும் அச்சமுண்டாக்கும் வதந்திகள் காரணமாக திரைப்படத் தயாரிப்பு செயல்பாடுகள் நிறுத்தப்பட்டன. ஜப்பானுடன் ஏற்பட்ட அரசியல் முரண்பாடுகள், பர்மாவின் தமிழ் சினிமா சந்தைக்கு மூடுவிழா நடத்த வித்திட்டது. இதே நிலை மேலும் சில கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்டது. 1940ஆம் ஆண்டு 36 திரைப்படங்களை தயாரித்த தமிழ் சினிமா உலகம், 1943இல் வெறும் 15 திரைப்படங்களை மட்டுமே தயாரித்தது.


போர்க்கால கச்சா படச்சுருள்களின் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் முயற்சியாக ஆங்கிலேய அரசு, ஒரு திரைப்படம் 11,000 அடிகளை தாண்டக்கூடாது என்னும் விதியை விதித்தது. போரை ஆதரிக்கும் திரைப்படங்களை எடுக்கும் பட்சத்தில் படச்சுருள்களை எளிதாகப் பெற முடிந்தது. அவ்வாறே பர்மா ராணி போன்ற திரைப்படங்கள் வெளியிடப்பட்டன. முரண்பாடாக, தேசியவாத திரைப்படங்களை இயக்கிய இயக்குனர்களே போரை ஆதரிக்கும் திரைப்படங்களையும் உருவாக்கினர்.

சத்தியமூர்த்தியின் மறைவு

1943இல் சத்தியமூர்த்தியின் மறைவுக்குப் பின்னர், தமிழ் திரைத்துறை ஓர் அரசியல் தலைமையுடனான தனது உறவை இழந்தது. தேச விடுதலைக்குப் பின்னர், படித்த வர்க்கத்திற்கும் சினிமாவிற்கும் இடையில் ஏற்பட்டிருக்கக்கூடிய ஓர் ஆக்கப்பூர்வமான உறவும் இல்லாமல் ஆனது.

1947க்குப் பின்னர் எடுக்கப்பட்ட தமிழ் திரைப்படங்கள் 1930 மற்றும் 1940களில் உருவாக்கப்பட்ட தேசியவாத திரைப்படங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டு திகழ்ந்தன. நாம் இருவர் மற்றும் தாய்நாடு போன்ற சில திரைப்படங்கள் தேசியவாதத்தை ஊக்கப்படுத்தின. தேசபக்தி, திரையில் ஓர் எளிதில் விற்பனையாகக்கூடிய பண்டமாக மாறியது.




Canada
California
India
Caribbean
East Africa
Natal
Mauritius
S.E. Asia
Unfree/contract labour
Free migration
Flows of free and unfree labour to the same destination



7

இந்தியாவுடன் இணைதல்: புலம்பெயர் தமிழர்களும் இந்திய சுதந்திரப் போராட்டமும்

டாக்டர் S.N.நாகேஸ்வர ராவ்,
முன்னாள் தலைவர்,
வரலாற்று ஆய்வுகள் ஆராய்ச்சித்துறை
சர் தியாகராய கல்லூரி, சென்னை.

இந்தியர்கள் உலகெங்கும் பரவி வாழ்ந்து வருகின்றனர். இது நீண்ட மற்றும் நீடித்த புலம்பெயர் பாரம்பரியத்தின் ஓர் விளைவாகும். வெளிநாடுகளில் உள்ள 1.8 கோடி இந்திய மக்களுடன் கணக்கிடும்போது, உலகின் புலம்பெயர்ந்த மக்களில் இந்தியர்கள் தான் பெரும்பான்மையானவர்கள். இருநூறுக்கும் மேற்பட்ட நாடுகளில் தங்கள் இருப்பை உருவாக்கியிருப்பதன் மூலம், புலம்பெயர்ந்த இந்தியர்களின் புவியியல் பரவல் தனிச்சிறப்புமிக்கதாக மாறியுள்ளது. அவர்கள் தங்கள் பங்களிப்பை பல்வேறு துறைகளில் அளித்த வண்ணம் இருக்கிறார்கள், மேலும் அதன் தாக்கமும் வளர்ந்தவண்ணம் இருக்கிறது. 2021இல் வெளியிடப்பட்ட இந்தியப் புலம்பெயர் அரசாங்கத் தலைவர்கள் பட்டியல், 15க்கும் மேற்பட்ட நாடுகளில் 200க்கும் மேற்பட்ட இந்திய வம்சாவழியைச் சேர்ந்தவர்கள் தலைவர் பதவிகளை வகிப்பதாகவும், அதில் 60க்கும் மேற்பட்டோர் அமைச்சரவையில் இடம் பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கிறது.

அத்தகைய அரசியல் களத்தில் சில காலம் முன்பு நுழைந்தவர் K.S. சுனக். அவர் இங்கிலாந்தின் முதல் மாற்று நிறப் பிரதமர்; கடந்த 200 ஆண்டுகளில் மிக இளையவரும் ஆவார். இதுபோன்ற வெற்றிக் கதைகளுக்குப் பின்னே இங்கு இந்தியாவிலிருந்து செல்வோரின் குடியேற்றம் குறித்த நெடிய வரலாறு ஒன்று உள்ளது. தொடக்கத்தில், அதன் அளவும், பரப்பும் குறிப்பிடத் தகுந்ததாக இல்லை. மாநிலங்கள் குடியேற்ற நடைமுறைகளை கட்டமைப்பதில் மிகச்சிறு பங்கையே ஆற்றின. ஆனால், இதற்குக் காரணம் அவற்றின் இயலாமை அல்ல, மாநிலங்கள் அதன் தேவையை உணராமல் இருந்ததே ஆகும்.

ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்பு அதில் மாற்றம் ஏற்பட்டது. இந்தியாவில் ஆங்கிலேய காலனித்துவ ஆட்சிக்குப் பின்பு, அதன் அளவில் ஓர் எழுச்சியும் உத்வேகமும் உண்டானது. அன்றைய புதிய சர்வதேசப் பொருளாதார ஒழுங்குடன் இந்தியா ஒன்றிணைக்கப்பட்டதால் பல்வேறு வளங்களுக்கான முதன்மையான ஆதார காலனித்துவ நாடாக மாறியது. உழைப்புத் தொழிலாளர் என்பது அவ்வாதாரங்களில் பலவற்றில் ஒன்றாக மட்டுமே இருந்தது. பெரும் இந்திய மக்கள்தொகையின் மூலம் கிடைக்கும் பலனை அறுவடை செய்ய பிரிட்டன் தயாராக இருந்தது. மற்றவர்கள், அதாவது டச்சு மற்றும் ஃபிரெஞ்சு நாட்டவரும் ஆங்கிலேயரிடமிருந்து வெகு தொலைவில் இல்லை. பிரிட்டன் மற்றும் ஐரோப்பாவில் நிகழ்ந்த பல்வேறு வரலாற்று அரசியல் நிகழ்வுகள் காலனி நாடுகள் மீது ஓர் எதிர்பாராத தொடர் பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தின. எட்டியன் பலிபார் அவர்கள் குறிப்பிட்டதுபோல "ஒரு வகையில் ஒவ்வொரு நவீன தேசமும் காலனித்துவத்தின் ஓர் விலைபொருளே". ஓர் ஆதிக்க சக்தியாக, பிரிட்டன், இந்தியாவில் அப்போதிருந்த அமைப்புகளையும், முறைமைகளையும் நாட்டின் தேவைகளுக்கு உதவும் வகையில் முழுமையாக மாற்றியமைத்து இந்தியாவை முன்னோக்கி செலுத்தியது.

பல்வேறு காலனிகளில் தோட்டப் பொருளாதாரத்தை நிறுவியதும், 1833இல் அடிமைத் தொழிலாளர் முறையை ஒழித்ததும் தொழிலாளர்களுக்கான பெரும் தேவையை உருவாக்கியது; முக்கியமாக, உழைப்பு மிகுதியாகத் தேவைப்படும் தோட்டப் பணிகளுக்கு. காலனித்துவ பிராந்தியங்கள் விரிவாக்கப்பட்டபோது உள்ளூரில் கிடைத்த உழைப்பாளர் சக்தி போதுமானதாக இல்லாத நிலையில் சீனர்களோடு இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்தோரும் முதன்மையான உழைப்பு ஆதாரங்களாக மாறினர்.

கட்டுரையின் முதன்மையான நோக்கம், இந்திய விடுதலைப் போராட்டத்தில் இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்களின் பங்களிப்பை உலகிற்கு அறிமுகப்படுத்துவதேயாகும். புலம்பெயர்ந்தோர் குறித்த கருத்தின் மீதான சுருக்கமான வாதத்துடன் இக்கட்டுரை தொடங்குகிறது. கட்டுரையின் முதல் பகுதி பல்வேறு பிரிவுகளின்கீழ் இந்தியப் புலம்பெயர்வு குறித்து விவரிக்கிறது. இரண்டாம் பகுதி தமிழ்ப் புலம்பெயர்வின் அளவு மற்றும் திசையை சுருக்கமாக அளிக்கிறது. மூன்றாம் பகுதியில், இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு வலிமை சேர்த்த பல்வேறு வகையான சக்திகள், காரணிகள், மற்றும் ஆளுமைகளை ஆய்வு செய்து அவற்றின் மூலம் இந்திய விடுதலைக்கு தமிழ் புலம்பெயர்ந்தோர் ஆற்றிய பங்கை விளக்குகிறது. மூன்றாம் பகுதியில் முடிவுகள் உள்ளன. நேரம் மற்றும் பக்கங்கள் ஆகியவற்றில் இருந்த கட்டுப்பாடுகள் காரணமாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட கருப்பொருளின் வரம்பு மற்றும் ஆலோசிக்கப்பட்ட ஆதாரங்கள் ஆகியவை ஓர் எடுத்துக்காட்டு போன்றவையே, விரிவானவையல்ல.

புலம்பெயர்ந்தோரின் வரையறை குறித்த ஓர் உரையாடல்

புலம்பெயர்ந்தோரைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லான டயஸ்போரா எனும் சொல், பண்டைய கிரேக்க சொல்லான 'டயா ஸ்பெய்ரோ', என்ற சொல்லிலிருந்து வந்தது. அது

'மேலே விதைத்தல்' என்கிற பொருளில், முதலில் யூத புலம்பெயர்ந்தோரைக் குறித்தது. காலப்போக்கில் அது ஓர் பயணிக்கும் பதமாக மாறி பல்வேறு பொருளை அச்சொல் பெற்றது. புலம்பெயர் சமூகம் என்பது ஒரே இடத்தில் உருவாகி பல்வேறு பகுதிகளுக்கு சிதறிச் சென்றவர்களை உறுப்பினர்களாகக் கொண்டது. அவர்கள் தங்களின் உண்மையான அல்லது உருவகித்துக் கொண்ட தாயகத்துடன் ஓர் நிலையான உறவை தக்க வைத்திருப்பதோடு, முக்கியமாக தங்கள் குழுவின் அடையாளம் குறித்த சுய விழிப்புணர்வோடு இருப்பார்கள். புலம்பெயர் சமூகங்கள் இனக்குழுவின் ஓர் பகுதியாக உணர்வுப் பூர்வமாக இணைந்திருப்பார்கள். இந்த உணர்வு நிலையே சிதறிக் கிடக்கும் மக்களை தாயகத்தோடு மட்டுமல்லாமல் மற்ற ஒவ்வொருவரோடும் பிணைக்கிறது. இதை மேலும் எளிதாக விளக்க வேண்டுமானால் குடிபெயர்ந்த அனைவரும் புலம்பெயர் சமூகத்தின் ஒரு பகுதி அல்ல, இருப்பினும் புலம்பெயர்ந்தோர் அனைவரும் குடிபெயர்ந்தோரே. ஓர் புலம்பெயர் சமூகத்தின் உறுப்பினராக உள்ள நிலை என்பது ஒரு விவகாரத்தில், தேசிய மற்றும் சர்வதேச அளவில் ஆதரவு திரட்டும் திறனை வழங்கும் அதிகாரத்தை சாத்தியமாக்குவதைக் குறிக்கிறது.

இந்தியப் புலம்பெயர்வு: வகைகள், எண்ணிக்கைகள், இயல்பு மற்றும் பண்புகள்

காலனித்துவ ஆட்சியின்கீழ் இருவகையான இந்தியப் புலம்பெயர்வு நிகழ்ந்தது. ஒன்று ஒப்பந்தமுறை மற்றொன்று இலவச அல்லது பயணிகள் புலம்பெயர்வு. ஒப்பந்தமுறை, 'கூலி வணிகம்' என்று அழைக்கப்பட்டது. 'ஊதியம்' என்னும் பொருளில் அமைந்த 'கூலி' என்னும் தமிழ்ச் சொல்லிலிருந்து இப்பெயர் பெறப்பட்டது. காலப்போக்கில் இச்சொல், சமூகத்தில் தாழ்வான நிலையை குறிக்கும் ஓர் இழிவான பொருளைப் பெற்றது.

பேச்சு வழக்கில் 'கிர்மிட்' என்று அழைக்கப்பட்ட ஒப்பந்த அல்லது கூலிப் புலம்பெயர்வு ஒப்பந்த முறையை உள்ளடக்கியது. இதில் புலம்பெயர் தொழிலாளர்கள் தாங்கள் பிறந்த ஊர் அல்லது சொந்த ஊரில் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார்கள். இந்த ஒப்பந்தங்கள், காலம் மற்றும் வேலையின் விதிமுறைகளோடு அந்தத் தொழிலாளி எந்த தோட்டத்தில் வேலை செய்யப் போகிறார் என்பதையும் குறிப்பிடும். தொழிலாளிகள் ஒவ்வொருவரின் பயணச் செலவும் அவர்களை வேலைக்கு அமர்த்தும் முதலாளிகளால் ஏற்றுக்கொள்ளப்படுவதால், அவர்களால் வேலை விதிமுறைகளை மாற்ற முடியாது. மேலும் அவர்கள் தங்கள் விருப்பத்தின்பேரில் ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியாது. முதல்முறையாக இந்தியாவிலிருந்து புலம்பெயர்தல் முறைப்படுத்தப்பட்ட, வணிகமயமாக்கப்பட்ட, மற்றும் விரிவான அரசாங்க ஒழுங்குமுறைக்கு உட்படுத்தப்பட்ட ஒன்றாக மாறியது. இந்த ஒப்பந்த முறையின்கீழ் தொழிலாளர்கள் தொழில் சார்ந்து நகரவும், வேறு பிராந்தியங்களுக்கு நகரவும் அனுமதி மறுக்கப்பட்டதால் அவர்கள் அவரவர் பணிபுரிந்த எஸ்டேட்டுகள் மற்றும் தோட்டங்களிலேயே நிரந்தரமாக பிணைக்கப்பட்டவர்கள் ஆனார்கள். ஹியுக் டிங்க்கர் இதை ஓர் 'புதிய அடிமை முறை' என்று வகைப்படுத்துகிறார்.

ஒப்பந்த தொழிலாளர்களைக் கொண்ட முதல் கப்பல் 1834இல் மொரீஷியஸ் நாட்டுக்கு புறப்பட்டபோது இந்த முறை செயல்பாட்டுக்கு வந்தது. மொரிஷியஸ் நாட்டில் வாழ்ந்த V. அண்ணாசாமி மற்றும் R. திருமெளடி என்கிற இரு தோட்ட அதிபர்கள் இந்தியாவிலிருந்து தொழிலாளர்களை இறக்குமதி செய்யும் யோசனையைத் தூண்டினார்கள். அந்த வகையில் அவர்கள் இருவருமே இந்தியத் தொழிலாளர்களின் முதல் இறக்குமதியாளர்கள் ஆவர். கல்கத்தாவில் இருந்து புறப்பட்ட முதல் கப்பலான 'அட்லஸ்', 2 நவம்பர் 1834 அன்று மொரீஷியஸ் கரைகளில் இந்திய ஒப்பந்தத் தொழிலாளர்களை கொண்டு சேர்த்தது.

செயின்ட் லூயி நகரின் ஆப்பராவாசி மலைக்கணவாயில் இந்தியத் தொழிலாளர்களின் வருகை நினைவுச் சின்னமாக ஆக்கப்பட்டுள்ளது.

அட்டவணை1:

கொல்கத்தா, மும்பை மற்றும் மதராசிலிருந்து 1843ல் மொரீஷியஸ் நாட்டுக்குச் சென்ற புலம்பெயர் தொழிலாளிகளின் எண்ணிக்கை

மாநிலம்	எண்ணிக்கை	சதவிகிதம்
கல்கத்தா	16179	56.41
மதராஸ்	11000	38.36
பாம்பே	1500	05.23

ஆதாரம்: ஸ்டுபடி தாஸ் தாரன்த் சந்திரசேகர் பாஸூ கோஷ், சர்க்கரை நாடுகளுக்கு இந்தியர்கள் குடியேற்றம் : **கல்கத்தா துறைமுகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு, இந்திய வரலாற்று ஆராய்ச்சிக்குழுவின் தனி கட்டுரை, பிரைமஸ் புக்ஸ், புது டெல்லி, 2017, பக்கம்–6.**

ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் மொரீஷியஸ் அடைந்த வெற்றி, அதை ஆங்கிலேய சாம்ராஜ்யத்தின் தோட்டக் காலனித்துவ நாடுகளில் மிக முக்கியமான ஒன்றாக உருவெடுக்கச் செய்தது. படிப்படியாக பின்வரும் காலனித்துவ நாடுகளுக்கு அதிகாரப்பூர்வமான அனுமதி அளிக்கப்பட்டது: 1844 – ஜமைக்கா, ட்ரினிடாட், பிரிட்டிஷ் கயானா; 1856 – சான்டா லூசியா; 1856 – கிரானாடா. 1870களில், செஷல்ஸ், டச்சு காலனிகளான சுரிநாம், ஃபிஜி, ரியூனியன், ஹோன்டுராஸ், மார்ட்டினிக் மற்றும் ஃபிரெஞ்ச் கயானா ஆகிய நாடுகளுக்கு இத்தொழிலாளர்கள் கொண்டு செல்லப்பட்டனர்.

ஒப்பந்த முறை முடிவுக்கு வந்த சமயம் ஆங்கிலேய காலனித்துவ நாடுகளில் ஆயிரக்கணக்கான இந்தியத் தொழிலாளர்கள் குடியேறி இருந்தனர்.

கங்காணி மற்றும் மேஸ்திரி முறை

ஒப்பந்த முறையோடு, தொழிலாளர்களை பணிக்கு அமர்த்துவோர் கங்காணி மற்றும் மேஸ்திரி என வேறு இரு முறைகளையும் பின்பற்றினர். இரண்டு சொற்களும் 'முதல் மனிதன்', 'தலை மனிதன்' அல்லது மேற்பார்வையாளன் என்ற பொருளிலான 'கங்காணி' என்கிற சொல்லில் இருந்தும், மேலும் 'மேற்பார்வையாளர்' என்ற பொருளிலான 'மேஸ்திரி' என்கிற சொல்லிலிருந்தும் பெறப்பட்டவை ஆகும். மலேயாவில் கங்காணி முறை பின்பற்றப்பட்டது. இம்முறை 19ஆம் நூற்றாண்டின் முதல்பாதியின் தொடக்கத்தில் தொடங்கி, 1938இல் அது ஒழிக்கப்படும் வரை தொடர்ந்தது. பர்மாவில் மேஸ்திரி முறை பின்பற்றப்பட்டு, அது 19ஆம் நூற்றாண்டின் பின்பகுதியில் தொடங்கியது. ஒப்பந்தக் கூலித்தொழிலாளர் முறைக்கு மாறாக, இம்முறைகளில் தொழிலாளர்கள் சட்டப்படி சுதந்திரமானவர்கள். மேலும், ஒப்பந்தம் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட சேவைக் காலம் என்பதும் இதில் இல்லை. எனினும் இரண்டு முறைகளிலும் அவற்றுக்கே உரிய விநோதத் தன்மைகள் மட்டுமல்லாது ஒத்த அம்சங்களும் இருந்தன. இரண்டு முறைகளுமே இடைத்தரகர் தொடர்புகளை பயன்படுத்தின; மேலும் அவை காலனித்துவ நாடுகளின் தோட்டங்களுக்கு பணியமர்த்தப்படும் தொழிலாளர்களுக்கு கடன் முறையை அறிமுகம் செய்தன. மெட்ராஸ் துறைமுகத்திலிருந்து பெரும் சதவிகிதத்திலான தமிழ் தொழிலாளர்கள் கப்பலேறினார்கள்.

1856–1861 காலகட்டத்தில், சென்னையிலிருந்து 29.6 சதவிகித மக்கள் புறப்பட்டனர். 1861–1871 காலகட்டத்தில் 31.3 சதவிகிதமாக அது உயர்ந்தது. அடுத்த பத்து ஆண்டுகளில் இந்த சதவிகிதம் ஓர் வீழ்ச்சியைக் கண்டது. ஆனால் மீண்டும் அது 1907 மற்றும் 1916 ஆகிய வருடங்களில் 31.3 சதவிகிதமாக மீண்டும் உயர்ந்தது. 1940–1942 காலகட்டத்தில் கங்காணி மற்றும் மேஸ்திரி முறைகளின்கீழ் ஏறக்குறைய 17 இலட்சம் இந்தியர்கள் சிங்கப்பூர் உள்ளிட்ட மலேய நாடுகளில் பணிபுரிய அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும் பர்மா நாட்டுக்கு 16 இலட்சம் மக்களும், சிலோன் நாட்டுக்கு ஏறத்தாழ 10 இலட்சம் மக்களும் அனுப்பப்பட்டனர். இதில் பெரும்பாலானவர்கள் ஆற்காடு, மெட்ராஸ், செங்கல்பட்டு, கோயம்புத்தூர், மதுரை, நீலகிரி, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களிலிருந்து வந்தவர்கள். பணிக்குச் செல்லும் வயதுவந்தோரின் இந்த தொலைதூர புலம்பெயர்வு, தற்காலிக மற்றும் பருவகாலம் சார்ந்த பல்வேறு காரணிகளால் தூண்டப்பட்டது. சந்தேகமில்லாமல், நிலமின்மை, ஏழ்மை, வேலைவாய்ப்பின்மை, மோசமான பருவகால சூழல்கள், இயற்கை பேரழிவுகள் மற்றும் முக்கியமான வணிக வழிகளும், துறைமுகங்களும் அருகில் இருந்தமை ஆகியவையே இப்புலப்பெயர்விற்கான தூண்டுகோலாக இருந்திருக்கின்றன.

அட்டவணை 2:

இந்திய ஒப்பந்தத் தொழிலாளர்களை இறக்குமதி செய்த முக்கிய காலனிய நாடுகள்


நாடு	எண்ணிக்கை	சதவிகிதம்
மொரீஷியஸ்	1834–1900	453063
பிரிட்டிஷ் கயானா	1838–1916	238909
மலாயா	1844–1910	250000
ட்ரினிடாட்	1845–1916	143939
ஜமைக்கா	1845–1913	36412
கிரனடா	1856–1885	3200
செயின்ட் லூசியா	1858–1895	4350
நட்டால்	1860–1911	152184
செயிண்ட் கிட்ஸ்	1860–1861	337
செயின்ட் வின்சென்ட்ஸ்	1860–1880	2472
ரியூனியன்	1861–1883	26507
சுரிநாம்	1873–1916	34304
ஃபிஜி	1879–1916	60965
கிழக்கு ஆப்பிரிக்கா	1896–1921	39282
செஷல்ஸ்	1904–1916	6315

ஆதாரம்: பிரிஜ்வி. லால் – ஒப்பந்த அமைப்பு. புலம்பெயர்ந்த இந்தியர்களின் கலைக்களஞ்சியம், பிரிஜ்வி லால், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகம், புது டெல்லி, பக்கம்–46.

இலவச அல்லது பயணிப் புலப்பெயர்வு

தங்களது சொந்த செலவில் சாதாரண குடியேற்ற விதிகளின்கீழ் நாட்டிற்குள் பிரவேசித்தவர்கள், 'பயணி இந்தியர்கள்' எனப்பட்டனர். வணிகம் செய்யவும் அல்லது வணிகப் பணிகள் செய்யவும் அவர்கள் வந்தார்கள். புதிய வாய்ப்புக்களை உணர்ந்து பல புதிய சமூகங்களும் உள் நுழைந்தார்கள். அவர்கள் இந்தியாவின் பல்வேறு சாதிகள், மதங்கள், மற்றும் பிரதேசங்களில் இருந்து வந்தார்கள். போராக்கள், மேமோன்கள், சூலியாக்கள், மரைக்காயர்கள், மற்றும் தமிழ்நாட்டிலிருந்து வந்த செட்டியார்கள் ஆகியோர் இந்தியப் புலம்பெயர்வு சமூகத்தின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாக மாறினர். தென்கிழக்கு ஆசியாவில், 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை செட்டியார்கள் மிக முக்கியமான சமூகமாக திகழ்ந்தார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து 1830களில் நாட்டுக்கோட்டை செட்டியார்கள் மலேயா, பர்மா மற்றும் ஸ்ட்ரெய்ட்ஸ் குடியேற்றங்களுக்கும், அதன்பின் சயாம், ஜாவா, இந்தோசீனா மற்றும் வடக்கு சுமத்ரா ஆகிய நாடுகளுக்கு அலை அலையாகக் குடியேறினார்கள். வணிகம் மற்றும் நிதித் துறைகளில் அவர்கள் பிரதான பதவிகளை வகித்தார்கள். அவர்களின் பொருளாதார செல்வாக்கு எத்தகையது என்றால், சீன சுரங்க அதிபர்கள், ஐரோப்பிய தோட்ட முதலாளிகள், சில சமயங்களில் மலேய ராஜ குடும்பத்திற்கும் கூட கடன் வழங்குபவர்களாக இருந்தார்கள். பர்மாவின் ஆளுநராக இருந்த சர் ஹார்கோர்ட் பட்லர் 1927இல் குறிப்பிடுகிறார்: "கடந்த 25 முதல் 30 ஆண்டுகளில் பர்மா அடைந்திருக்கும் அற்புதமான முன்னேற்றத்தை, செட்டியார் வங்கி முறையின் உதவியின்றி கண்டிப்பாக அடைந்திருக்கவே முடியாது". இப்படி, தெளிவாக பொருளாதாரம் சார்ந்த இந்தியப் புலம்பெயர் சமூகம் தங்கள் பலத்துக்கு கூடுதலாக பணத்தையும் சேர்த்தனர். இந்திய சுதந்திரப் போராட்டம் என்னும் திட்டத்துக்கு அவர்கள் ஒன்றிணைந்து ஓர் உந்துசக்தியாகத் திகழ்ந்தனர். கீழ்வரும் வரைபடம் கண்டங்களுக்கு இடையே இந்திய புலம் பெயர் சமூகம் எவ்வாறு பரவி இருந்தது என்பதை வரைகலையில் விளக்குகிறது.

வரைபடம் 1: 1947க்கு முன்பு இந்தியாவிலிருந்து குடியேறியவர்களின் பரவல்



ஆதாரம்: ஜூடித் எம். பிரௌன், உலக தென் ஆசியர்கள் : நவீன கால புலம் பெயர்ந்தோரைப் பற்றிய அறிமுகம், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம், நியூயார்க், 2006P-XII


தமிழர் புலப்பெயர்வு:

புலம்பெயர்தலில் தமிழர்கள் நெடிய பாரம்பரியம் கொண்டவர்கள். "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு", என்பது 12ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற அறிஞரான ஔவையின் வாக்கு. தமிழர்களுக்கு தங்களின் சக்தி மற்றும் பலத்தை அதிகரித்துக் கொள்வதற்கான முதன்மையான வழியாக புலம்பெயர்தல் இருந்தது. ஆயினும் அவர்கள் அங்கு புலம்பெயர்ந்தவர்களாக அல்லாமல் வெளிநாட்டவர்களாகவே இருந்தார்கள். அவர்கள் தங்களின் இயக்கத்தை நிலையற்ற ஒன்றாக வைத்திருந்ததால், அது பின்னர் சுற்றோட்டமான ஒன்றாகவும் ஆனது. தமிழ்நாட்டின் நிலவியல் நிலை மட்டுமல்லாது, கோரமண்டல் கடற்கரையோரத்தில் அடுத்தடுத்து துறைமுகங்களும் நிறுவப்பட்டதால் அவர்களுக்கு அத்தகைய கடல்வழி எளிதாக சாத்தியமானது. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை தமிழர்களின் புலம்பெயர்வு சிறிய அளவிலும், அங்கொன்றும் இங்கொன்றுமாகவே இருந்தது.

காலனித்துவ கட்டாயங்கள் மற்றும் அளவு, திசையிலான மாற்றங்கள்

தமிழ்நாடு, புலம்பெயர் சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ள ஒரு மாநிலம். கில்லியன் குறிப்பிட்டதைப்போல, "வட இந்தியாவில் புலம்பெயர்தலுக்கு மிகப்பெரும் மக்கள் எதிர்ப்பு இருந்தது. இதனால் பணிகளுக்கு ஆள் எடுப்பது சிரமமாக இருந்தது. ஆனால் மதராசில் புலம்பெயர்தலுக்கு குறைவான எதிர்ப்பே இருந்தது. மதராசிலிருந்து புலம்பெயர்ந்தோர் சில தனித்தன்மையான அம்சங்களைக் கொண்டிருந்தனர். ஒப்பீட்டளவில் சிறிய பகுதிகளிலிருந்து அவர்கள் பணிக்கு எடுக்கப்பட்டார்கள். மேலும், பணியமர்த்தும் மாவட்டங்கள் மதராசுக்கு மிக அருகில் இருந்தன. இதனால் கல்கத்தாவிலிருந்து பணியமர்த்துவோரைவிட மதராசிலிருந்து பணியமர்த்துவோரைக் கட்டுப்படுத்துவது எளிதாக இருந்தது. மற்ற பகுதிகளிலிருந்து வந்த மக்களைவிட, மதராஸ் மக்கள் நல்ல கல்வியறிவு கொண்டவர்களாக கருதப்பட்டார்கள். மதராஸ் மாகாணத்தின் சொந்த மக்கள் பொதுவாக கடல் கடந்து செல்வதற்கு எதிரான எண்ணம் கொண்டவர்களாக இருக்கவில்லை. உள்நாட்டு மாவட்டங்களில் இருந்ததுபோல புலம்பெயர்தலுக்கு எதிரான உணர்வும் அத்தனை ஆழமானதாக இருக்கவில்லை.

வரைபடம் 2: தென்கிழக்கு ஆசியாவிற்கு புலம்பெயர்ந்த தென்னிந்தியத் தொழிலாளர்கள்



ஆதாரம்: ஜூடித் எம். பிரௌன், உலக தென் ஆசியர்கள் : நவீன கால புலம் பெயர்ந்தோரைப் பற்றிய அறிமுகம், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம், நியூயார்க், 2006P-XII

தமிழர் புலப்பெயர்வின் அளவை கணக்கிடுவது ஓர் கடினமான பணி. குறிப்பாக, தேசியத் தரவுகளில் இருந்து நம்முடைய தகவல்களை சலித்தெடுப்பது. மாகாணத்தின் முக்கியமான ஒன்றாக கருதப்படும் மெட்ராஸிலிருந்து கப்பலேறியவர்கள் குறித்த தகவல்கள் புலப்பெயர்வின் அளவிற்கு ஓர் அளவுகோலாகும். பின்வரும் வரைபடத்தில், புலம்பெயர்ந்த தமிழர்கள் எந்தெந்த மாவட்டத்திலிருந்து வந்தார்கள், எந்தத் துறைமுகம் வழியாக வெளியேறினார்கள் என்றும் அவர்களின் குடியேற்றப் பாதைகளும் விவரிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 3:

இந்திய ஒப்பந்த தொழிலாளர்கள் கப்பல் ஏறிய துறைமுகங்கள், கல்கத்தா மற்றும் மதராஸ் 1856–1916

ஆண்டு	கல்கத்தா எண்ணிக்கை	%	மதராஸ் எண்ணிக்கை	%
1856–1861	14,533	66.5	6479	29.6
1861–1870	1,22,241	67.5	56,356	31.1
1870–1879	1,42,793	78.4	19,104	10.5
1880–1889	97,975	76.0	21,653	16.8
1891–1900	106,700	63.3	28,550	16.9
1907–1916	66,839	62.3	32,369	30.2

ஆதாரம்: பிரிஜ்வி லால் – ஒப்பந்த அமைப்பு, புலம்பெயர்ந்த இந்தியர்களின் கலைக்களஞ்சியம், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகம், புது டெல்லி, பக்கம்–51.

புலப்பெயர்வை பிராந்தியக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, சிலோன், மலேயா, மற்றும் பர்மா ஆகிய நாடுகளுக்கு மிக அதிக எண்ணிக்கையிலானோர் இந்தியாவிலிருந்து குடியேறி இருக்கிறார்கள். அட்டவணை 4 இதைக் காட்டுகிறது.

1913ஆம் ஆண்டு மட்டும் 1,17,783 பேர் ஸ்ட்ரெய்ட்ஸ் குடியிருப்புகளுக்கு சென்றிருக்கிறார்கள்; 1,90,059 பேர் சிலோனுக்கும், 1,30,725 பேர் பர்மாவுக்கும் சென்றிருக்கிறார்கள். இதில் மிகப் பெரும்பான்மையானோர் தொழிலாளர்கள் ஆவர். இந்தியாவின் மற்ற மாகாணங்களோடு ஒப்பிடும்போது சிலோன் மற்றும் ஸ்ட்ரெய்ட்ஸ் குடியிருப்புகளுக்கு அனுப்பப்பட்ட ஏறக்குறைய அனைத்து விவசாயத் தொழிலாளர்களும் இந்த மாகாணத்திலிருந்தே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஒப்பந்த முறையின் இறுதியில் 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட இந்தியர்கள் உலகின் பல்வேறு பகுதிகளுக்கு குடியேறி இருந்தார்கள்.

அட்டவணை 4:

சிலோன், பர்மா, மற்றும் மலேயாவில் குடியேறிய தமிழ் மக்களின் தொகை 1871–1946 (எண்ணிக்கை ஆயிரங்களில்)

காலனி	1871	1881	1891	1901	1911	1921	1931	1946
சிலோன்	203.3	320.2	313.3	497.9	563.8	635.7	854.8	816.2
மலேயா	27.5	36.3	62.7	98.0	220.4	387.5	514.8	461.0
பர்மா	–	35.1	71.4	99.6	125.7	152.3	184.1	90.0
மொத்தம்	**230.8**	**391.6**	**447.4**	**695.5**	**909.9**	**1175.5**	**1553.7**	**1367.2**

ஆதாரம்: கிறிஸ்டோப்ஃ இசட், குல்மோட்டோ – தமிழ் இடம்பெயர்வு சுழற்சி, 1830–1950, பொருளாதாரம் மற்றும் அரசியல் வார இதழ், ஜனவரி 16–23, 1993, பக்கம்–112.



படம் 1: மொரீஷியஸில் வாழ்ந்த தமிழ் ஒப்பந்தத் தொழிலாளர்கள்

தமிழ் புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் இந்திய விடுதலைப் போராட்டம்:

புலம்பெயர் வரலாறுகள், புலப்பெயர்வை தொடங்கும் இடத்திற்கும், சென்றுசேரும் இடத்திற்கும் இடையிலான ஓர் நேர்கோட்டுப் பயணமாக காண்பதில்லை. தொடர் இயக்கத்தில் இருக்கும் மக்கள், தங்களுடைய பூர்வீக நிலங்களுடன் குடும்பம் சார்ந்து, பொருளாதாரம் சார்ந்து அல்லது அரசியல் சார்ந்து ஏற்படுத்திக்கொள்ளும் ஆழமான மற்றும் அழுத்தமான பிணைப்புகளாகவே பார்க்கப்படுகிறது. ஆடம் மெக்கோவன் குறிப்பிடுகிறார்,

"மனித இயக்கத்தின் மீதான புலம்பெயர் சமூகப் பார்வையின் அடிநாதம் என்பது உலகளாவிய தொடர்புகளுக்காக எடுத்துக்கொள்ளும் கவனம், வலைப்பின்னல்கள், செயல்பாடுகள், மற்றும் அவற்றுக்கான பாலம் அமைக்கும் உணர்வு. இன்னும் பல". இத்தகைய சூழலில் தான் மீள்குடியேற்றம் முக்கியத்துவம் பெறுகிறது. மீள்குடியேறியவர்கள், ஒரே சமயத்தில் ஓர் உத்வேகமாகவும், தடையாகவுமே இருக்கலாம். அவர்கள் தங்கள் அனுபவங்கள் மூலமாகவும், தங்களது சம்பாத்தியங்கள் மற்றும், மாற்றப்பட்ட சமூக நடத்தை ஆகியவற்றின் மூலமாகவும் இந்தியாவுடனான தங்களுடைய தொடர்பை தொடர்ந்து புதுப்பித்துக் கொள்கிறார்கள். மிக முக்கியமாக, அவர்கள் புதிய தொடர்புகளை உருவாக்குவதோடு பழையனவற்றுக்கு புத்துயிர் ஊட்டுகிறார்கள். பெருந்திரள் சமூகங்களின் இடையில் உள்ள செழுமை, வறுமை, பாகுபாடு, பிரிவினை, விலக்கி வைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய கலாச்சாரத்திற்குப் பழகியதன் பின்விளைவாக தேச உணர்வு தீவிரமடைந்தது. பெரும் எண்ணிக்கையிலான புலம்பெயர் மக்கள் ஒவ்வொரு வருடமும் காலனித்துவ நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு திரும்பியதாக புள்ளி விவரங்கள் சொல்கின்றன.

மலேயா மற்றும் பர்மாவுக்கு இங்கிருந்து சென்ற மற்றும் அங்கிருந்து வந்த தென்னிந்திய தொழிலாளர்களின் வருகைகள் மற்றும் புறப்பாடுகள் குறித்த விரிவான

பட்டியலை அடப்பா சத்யநாராயணா வழங்குகிறார். 1894இல் 15,016 தொழிலாளர்கள் மலேயாவை சென்றடைந்தார்கள்; மேலும் 14,012 தொழிலாளர்கள் அங்கிருந்து நாடு திரும்பினார்கள். பத்து வருடங்கள் கழித்து 1904இல், 28,249 தொழிலாளர்கள் அங்கு சென்றார்கள், 21,173 பேர் வெளியேறினார்கள். பத்தாண்டுகளில் இந்த எண்ணிக்கை கணிசமாக உயர்ந்தது. அங்கு சென்றவர்களின் எண்ணிக்கை 49,028 எனவும், திரும்பியவர்களின் எண்ணிக்கை 59,038 ஆகவும் இருந்தது. 1921லும் இதேபோல் அங்கு சென்றவர்கள் குறைவாகவும் திரும்பி வந்தவர்கள் அதிகமாகவும் இருந்தது. பர்மா நாட்டின் வகையிலும், இதே முறையிலான மீள்குடியேற்றம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

பத்திரிகைகள்

பத்திரிகை ஊடகத்தின் சக்தி மதிப்பிட முடியாதது. புலம்பெயர் சமூகத்தின் சூழலில், அது அச்சமூகத்தின் பிரிவுகளை இணைப்பதோடு அவற்றின் பொதுத்தன்மைகளை முன்னிலைப்படுத்தவும் செய்கிறது. இந்தியக் கருத்து (Indian Opinion) இதழைத் தொடங்கியபோது மகாத்மா காந்தி இது குறித்த தன் பார்வையை இவ்வாறு பதிவு செய்திருக்கிறார்: உள்நாட்டு வலிமையை முதன்மையாக நம்பியிருக்கும் ஒரு போராட்டத்தை, ஓர் செய்தித்தாள் இல்லாமல் முழுமையாக நடத்திச் செல்ல முடியாது என்று நான் நம்புகிறேன். என்னுடைய அனுபவத்தில், இந்தியக் கருத்து இதழ் இல்லாமல் நாங்கள் உள்ளூர் இந்திய சமூகத்திற்கு போராட்டம் குறித்த தகவல்களை சேர்த்திருக்க முடியாது. அதேசமயம், தென்னாப்பிரிக்க நிகழ்வுகளின் போக்கை இதேபோல் எளிதாகவும் வெற்றிகரமாகவும் இங்கு அறிந்திருக்க முடியாது. எங்களின் போராட்டத்தில் இவ்விதழ் ஓர் உபயோகமான மற்றும் வலிமையான ஆயுதமாகவே இருந்தது என்று கூறலாம்.

மதராசை சேர்ந்த பத்திரிகையாளரான P.S.ஐயர் 1898இல் தொடங்கிய இந்திய உலகம் என்னும் செய்தித்தாள் தான் இம்முயற்சிக்கான முன்னுதாரணமாக விளங்கியது. ஆனால் அப்பத்திரிகை குறைந்த காலமே செயல்பட்டது. 1901இல் அவர் காலனிய இந்திய செய்திகள் (Colonial Indian News) என்னும் பத்திரிகையைத் தொடங்கினார், அது 1903 வரை அவ்வப்போது வெளிவந்தது, பின்னர் அதே வருடம் அதுவும் நிறுத்தப்பட்டது. இத்தகைய முயற்சிகள் தோல்வியடைந்தபின், மகாத்மா காந்தி, இந்தியக் கருத்து இதழை ஓர் ஆங்கில வார இதழாக 4 ஜூன், 1903 அன்று தொடங்கினார். பின்னர் அதே காலகட்டத்தில், அதன் தமிழ், குஜராத்தி, மற்றும் இந்தி பதிப்புகளும் வெளிவரத் தொடங்கின. டர்பன் நகரில் ஒரு சிறு தொழிலதிபராகவும் விவேகபானு என்னும் தமிழ் வார இதழின் பதிப்பாளராகவும் இருந்த விருதாச்சலம் பிள்ளை மற்றும் S.M.பிள்ளை, G.R.நாயுடு போன்ற அறிஞர்கள் இந்தியக் கருத்து வாராந்திரியின் தமிழ் பதிப்பிற்கு முதுகெலும்பாக இருந்தனர்.

தென்னாப்பிரிக்க வெள்ளை ஆட்சியின் இன சகிப்பின்மைக்கு எதிராக இந்தியர்களின் உணர்வுகளை திறம்பட வெளிப்படுத்த வேண்டிய தேவை அதிகரித்ததன் எதிரொலியாகவே இந்தியக் கருத்து வார இதழ் தொடங்கப்பட்டது. இது பல்வேறு வகையில் பிரிந்து கிடந்த இந்தியர்களிடையே ஓர் தேசிய அடையாளத்தை உருவாக்க முயன்றது. அது ஒரு தலையங்கத்தில் துணிவுடன் இவ்வாறு அறிவித்தது: "நாங்கள் தமிழர்கள் அல்லது கல்கத்தா ஆட்கள் மற்றும் முகமதியர்கள், இந்துக்கள், பிராமணர்கள், அல்லது பணியாட்களாக இல்லை, இருக்கவும் மாட்டோம்; ஆனால் எளிமையாக சொல்வதானால், பிரித்தானிய இந்தியர்களாக மட்டுமே இருப்போம்". இந்தியக் கருத்து இல்லாமல் போயிருந்தால் சத்தியாகிரகம்கூட சாத்தியமாகி இருக்காது என்று மகாத்மா காந்தி அழுத்தமாகக் கூறினார்.

P.S.ஐயர் ஆப்பிரிக்கன் கிரானிக்கல் (African Chronicle) என்னும் செய்தித்தாளை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கொண்டு வந்தார். அது சமூகத்தின் அடிநிலைப் பிரிவில் இருக்கும் சுதந்திர மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தது. அந்நாளிதழ், 1908 ஜூலை முதல், ஒப்பந்தத் தொழிலாளர்கள்மீது விதிக்கப்பட்ட 'மூன்று பவுண்டு வரி' குறித்த செய்திகளை முன்னிலைப்படுத்தியது; மேலும் அதை ஒழிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தது.

மலேயா மற்றும் தமிழ் பத்திரிகைகள்:

மலேயா ஒரு குறுகிய காலத்துக்கு தமிழ் செய்தித்தாள்களை பதிப்பித்தது. அங்கேயே பிறந்து சிங்கப்பூரில் வாழ்ந்து வந்த இந்திய இஸ்லாமியர்கள் 19ஆம் நூற்றாண்டில் அவற்றில் ஓர் முக்கிய பங்காற்றினர். எனினும், நரசிம்ம அய்யங்காரை ஆசிரியராகக் கொண்டு 1921இல் வெளியிடப்பட்ட தமிழகம் என்னும் இதழ், ஓர் புதிய தொடக்கமாக அமைந்தது. அது தேசிய உணர்வுகளை வெளிப்படுத்தியது, மலேயாவின் இரப்பர் தோட்டங்களுக்கு பணி செய்ய வர வேண்டாம் என இந்தியர்களை எச்சரித்தது. நரசிம்ம ஐயங்கார் 1924இல், தமிழகம் இதழிலிருந்து வெளியேறி தமிழ் நேசன் என்ற புதிய பத்திரிகையைத் தொடங்கினார். அதன் முதல் பதிப்பு 10 செப்டம்பர் 1924 அன்று வெளியானது; அது மலேயத் தமிழர்களின் வலிமையான குரலாக இருந்தது. மார்ச் 1929 முதல் அது வாரம் இருமுறை வெளிவந்தது; ஜனவரி 1934 முதல் வாரம் மூன்று முறை வெளியானது; 20 பிப்ரவரி 1937 முதல் அப்பத்திரிகை ஒரு நாளேடாக மாறியது வாசகர்களிடையே அதன் புகழ் அதிகரித்ததைக் குறிக்கிறது. நரசிம்ம அய்யங்காருக்கு 27 பிப்ரவரி 1928 அன்று காந்தி அனுப்பிய செய்தியில், "தங்களின் நாளேடு சமூக மற்றும் ஒழுக்க சீர்திருத்தங்களுக்கு துணை நிற்கும் என்று நம்புகிறேன். மேலும், புலம்பெயர்ந்தோர் எந்த நாட்டிற்கு குடியேறினாலும், அந்நாட்டில் நம் இந்தியப் பண்பாட்டை சிறந்த வகையில் பின்பற்றி, எடுத்துக்காட்டாக நடந்து கொள்ள வேண்டியது அவர்களின் கடமை என்பதையும் கதர் உடுத்தப் பழகிக் கொள்ளும் வகையிலாவது தங்கள் தாயகத்துடனான பந்தத்தை தொடர்வார்கள் எனவும் நம்புகிறேன் என்று தெரிவித்தார். எட்டு வருடங்களுக்குப்பின் 3 நவம்பர் 1936 அன்று தமிழ் நேசன் நாளிதழின் மூலம் நேரு மலேயாவில் வாழும் அனைத்து இந்தியர்களுக்கும் மற்றொரு செய்தியை அனுப்பினார். தென்னிந்தியாவிலிருந்து குடியேறிய தமிழர்கள் குறித்தும் அவர்தம் கடினமான வாழ்க்கை குறித்தும் எழுதும்போது, இந்தியாவுடன் தொடர்பில் இருக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். மேலும், ஓர் சுதந்திர இந்தியாவுக்காக நாம் உழைக்க வேண்டும் என்றும் கூறினார். "நாம் இந்தியாவில் வாழ்ந்தாலும் வெளிநாட்டில் வாழ்ந்தாலும், கீழ்படிதலின் நிழலுக்குள் நம்மை சமர்பித்துக் கொள்ள வேண்டும், காரணம் அதனால் ஏற்படும் பொருளாதாரப் பின்விளைவுகள் நாம் எங்கு சென்றாலும் நம்மைப் பின் தொடரும்," என்றார்.

G.சாரங்கபாணி அவர்களால் 1929இல் முன்னேற்றம் என்கிற மற்றொரு தமிழ் நாளிதழ் தொடங்கப்பட்டது. பின்னர் அவர் சீர்திருத்தம் மற்றும் 1935இல் தமிழ்முரசு ஆகிய இதழ்களிலும் பணி செய்தார். இப்பத்திரிகைகள் மலேயாவில் வாழும் தமிழர்களுக்கு இடையிலான சமூக சீர்திருத்தங்கள் மற்றும் கலாச்சார அடையாளங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தியதால், அதுவே 1929இல் பெரியார் அங்கு செல்ல வித்திட்டது. அவருடைய வருகை மலேயத் தமிழர்களின் மனநிலையில் ஓர் நிரந்தர தாக்கத்தை ஏற்படுத்தியது. தமிழ்ச் சமூகம் தங்களுக்குள் சுய பரிசோதனை செய்து கொள்ள ஓர் தொடக்கமாக அமைந்தது.



படம் 2: **கோலாலம்பூரில் நிகழ்ந்த ஓர் சுயமரியாதைத் திருமணம்** TRA, TM, **05/02/1940.**




படம் 3: **மலாக்காவில் ராமசாமி நாயக்கருக்கு நடத்தப்பட்ட பிறந்தநாள் கொண்டாட்டங்கள்** TRA, TM, **29/12/1939**

ராஷ் பிகாரி போஸ் அவர்களால் தொடங்கப்பட்ட சுதந்திர இந்திய கூட்டமைப்பினால் வெளியிடப்பட்ட முதல் பத்திரிகை சுதந்திர இந்தியா ஆகும். அது சிங்கப்பூரில், யுவபாரதம் மற்றும் சுதந்திரோதயம் என்னும் இரு வார இதழ்களை வெளியிட்டது. சுதந்திரோதயம் 14 செப்டம்பர் 1942 அன்று முதன்முதலில் வெளியிடப்பட்டது, அதன் பின் 9 மார்ச் 1943 அன்று யுவபாரதம் வெளியானது. ஆயினும் அதற்கு அடுத்த ஆண்டே அவற்றின் பதிப்பு நின்று போனது. பத்திரிகைகளின் பெயர்களே அவற்றின் தாயக நோக்கத்தை கூறுகின்றன.

நகர்ப்புற மலேய மற்றும் சிங்கப்பூர் தமிழ் பத்திரிகைகள் இந்திய அரசியல் உலகை குறித்த தூண்டுதலை எழுப்பின. 1930களில் சிங்கப்பூர், பினாங்கு, மற்றும் கோலாலம்பூரிலிருந்து அச்சிடப்பட்ட அனைத்து தமிழ் பத்திரிகைகளும் அதன் ஒவ்வொரு பதிப்பிலும் மகாத்மா காந்தி குறித்த செய்திகளை முதலிலும் பின்னர் நிழற்படங்களையும் வெளியிட்டன. அவருடைய பயணங்களையும், அவருடைய பேச்சுக்களையும், அவருடைய செயல்பாடுகளையும், மற்றும் அவருடைய பேச்சுவார்த்தைகளையும் அச்சிட்டன. இவற்றுக்கு இணையாக பினாங்கை தலைமையிடமாகக் கொண்ட டெக்காநெக்கன் என்னும் தமிழ்

இஸ்லாமிய பத்திரிகை, அனைத்திந்திய முஸ்லிம் லீக் குறித்த செய்திகளோடு, மகாத்மா காந்தியின் செயல்பாடுகளையும் முழுமையாகப் பின்தொடர்ந்து விரிவான செய்திகளாக வெளியிட்டது. சென்னையிலிருந்து பதிப்பிக்கப்பட்ட, புலம்பெயர் தமிழ் சமூகத்தின் பிரச்சினைகளில் பிரத்தியேகமாக கவனம் செலுத்தி, அவற்றை குறித்த செய்திகளை வெளியிட்ட ஓர் செய்தித்தாளின் பங்களிப்பை குறித்து இங்கு கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டும். தி இன்டியன் இம்மிக்ரன்ட் (The Indian Immigrant) ஓர் மாத இதழாக வெளிவந்து பிரித்தானிய காலனிகள் மற்றும் அந்நிய நாடுகளில் உள்ள இந்தியர்களின் நிலை மற்றும் செயல்பாடுகள் குறித்து பதிவு செய்தது. மேலும் அது சாம்ராஜ்யத்திற்குள் இருக்கும் பிரித்தானிய குடிகளுக்கு இடையிலான சம உரிமைகளையும் வலியுறுத்தியது. ஆகஸ்ட் 1914இல் G.A.நடேசன் அவர்களால் முதன்முதலில் அது வெளியிடப்பட்டது. காலனிய நாடுகளில் இருந்த நிறப் பாகுபாடு, இந்தியத் தொழிலாளர்களுக்கும் தோட்ட முதலாளிகளுக்கும் இடையிலான உறவு, மீள்குடியேற்றம் ஆகிய பிரச்சினைகள் குறித்தும், இந்தியாவிலும், வெளிநாட்டிலும் முக்கிய தலைவர்கள் ஆற்றிய உரைகள் குறித்த செய்திகளையும் வெளியிட்டது. ஒரு சிறிய இடைவேளைக்குப்பின் 1941இல் இப்பத்திரிகை தி கலோனியல் ரிவியூ (The Colonial Review) என்ற புதிய பெயரில் புத்துயிர்ப்பு பெற்றது. ஆயினும் அதன் நோக்கங்கள் அப்படியே இருந்தன, T.K.சுவாமிநாதன் அதன் ஆசிரியராக இருந்தார்.



THE INDIAN EMIGRANT

Vol. I. AUGUST, 1914. No. 1.

The "Indian Emigrant."

A Monthly Record of the Status and Doings of Indians in British Colonies and Foreign Countries and an Advocate of Equal Rights of British Citizenship within the Empire.

OUR AIMS AND OBJECTS.

The aims and objects we profess to set before ourselves throughout these columns will be, to put before the Indian public a succinct and clear account of the relations now existing between the Indians at home and abroad and to bring about a closer and more intimate acquaintance with each other, thus arousing feelings of sympathy of Indians for their countrymen outside India.

At the present day, the economic forces here at work drive out the Indian population, the labouring classes in particular, to various places beyond the seas, and these people, allured by the glowing descriptions of the comparative abundance they would enjoy in distant lands, leave their homes and sail to foreign countries with the fond hope of winning a decent livelihood; but they, being mistaken in that hope, do themselves and the country to which they belong an economic injury through their weak, spasmodic or ignorant competition with the employing classes, especially with the planting communities of Ceylon, Federated Malay States, Fiji, Philippines and other places. Although labour is supposed to be free to these parts, the evils arising from the methods of its recruitment are too obvious and glaring to admit of any contradiction. We have personally come across with such cases and they will duly be reported in the columns of this journal. Our aims in such instances will be to bring to light such cases of gross cruelty, ill-treatment or injustice and by an organised work deal with them as they deserve and thus do away with such evils.

We do not believe that by mere journalistic work alone, any success or good result can be achieved except it be accompanied by organisations to take up practical work in that line. Steps have now been taken by the Government and the people, though late, to put a stop to the system of "Indentured Labour" and what splendid success might we not have expected if this had been undertaken some years earlier and would

படம் 4: தி இன்டியன் எமிக்ரன்ட், காலனிகள் மற்றும் அந்நிய நாடுகளில் குடியேறிய இந்தியர்களின் நிலை மற்றும் செயல்பாடுகள் குறித்த மாதாந்திர பதிவு

அமைப்புகள்/சங்கங்களின் பங்கு

சங்கங்களின் மூலம் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த அரசியல் செயல்பாடுகள், பிரதிநிதித்துவம் மற்றும் தகவல் தொடர்புக்கான முதன்மை வழியாக மாறியது. தங்களின் எல்லா இலக்குகளையும் அவர்களால் அடைய முடியாவிட்டாலும் இந்தியப் புலம்பெயர் சமூகம் தொடர்ந்து இயங்குவதற்கு முக்கியக் கருவியாக விளங்கினார்கள். மற்றெல்லா அமைப்புகளிலும், தென்னாப்பிரிக்காவின் 'நட்டால் இந்திய காங்கிரஸ்' (NIC), அதில் ஒப்புயர்வற்ற இடத்தைப் பிடித்தது. மகாத்மா காந்தி மற்றும் அவரது கூட்டாளிகளால், நட்டால் நகரில் வாழ்ந்த இந்தியர்களுக்கு எதிரான பாகுபாட்டை எதிர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட நட்டால் இந்திய காங்கிரஸ் 1894இல் செயல்பாட்டுக்கு வந்தது. நட்டால் இந்திய காங்கிரஸ் தான் முதலில் தொடங்கப்பட்டது; அதைத் தொடர்ந்து 'ட்ரான்ஸ்வால் இந்திய காங்கிரஸ்' (TIC) மற்றும் 'கேப் இந்திய காங்கிரஸ்' (CIC) ஆகியவையும் தொடங்கப்பட்டன. பின்னர், இவை மூன்றும் இணைந்து 1919இல் 'தென்னாப்பிரிக்க இந்திய காங்கிரஸ்' (SAIC) உருவானது.



படம் 5: மகாத்மா காந்தி அவர்களால் 22 ஆகஸ்ட் 1894 அன்று தொடங்கப்பட்ட நட்டால் இந்திய காங்கிரஸ்.

மகாத்மா காந்தி அவர்களின் கூற்றுப்படி, ஒரே மாதத்திற்குள் 300 இந்துக்கள், இஸ்லாமியர்கள், பார்சிகள், மற்றும் கிறிஸ்தவர்கள் அதில் உறுப்பினர்கள் ஆனார்கள். ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டன, மேலும் நட்டால் முழுவதிலும் இருந்த இந்தியர்கள் தொடர்பு கொள்ளப்பட்டார்கள். நட்டால் இந்திய காங்கிரஸ் மாதம் ஒருமுறை கூடி, அப்போதைய தினநிகழ்வுகள், கணக்கு வழக்குகள் மற்ற விஷயங்களை விவாதித்தது. காங்கிரஸ் தனது திட்டங்களின் ஒரு பகுதியாக சுய முன்னேற்றத்தையும் வைத்திருந்தது. நட்டால் இந்திய காங்கிரஸ் தொடக்க காலத்தில், அதாவது 1908 மற்றும் 1913 ஆகிய ஆண்டுகளில் மகாத்மா காந்திக்காக ஒருங்கிணைத்த பிரச்சாரங்கள்

அவ்வமைப்பால் முன்னெடுக்கப்பட்ட இரண்டு மிக முக்கியமான பிரச்சாரங்களாகும். இப்பிரச்சாரங்களின்போது இந்திய சமூகத்தின் பெரும் பகுதி போர்க்களம் மிக்க போராட்டங்களில் தாங்களும் பங்கேற்க வேண்டும் என்கிற விருப்பத்தை வெளிப்படுத்தினர்.

மலேயா

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், மலேயாவில் வாழ்ந்து வந்த இந்திய தொழில் வல்லுனர்கள், அரசு ஊழியர்கள், மற்றும் வணிகர்கள் ஆகியோர் சிறிய சங்கங்களை உருவாக்கினர். அவற்றில் முதன்முதலாக 1906இல் 'தைப்பிங் இந்தியர்கள் சங்கம்' நிறுவப்பட்டது; விரைவில் அதைத் தொடர்ந்து 1909இல் 'செலாங்கோர் இந்தியர்கள் சங்கம்' தொடங்கப்பட்டது. 1920களுக்குள், தீபகற்பமெங்கும் இந்திய சங்கங்கள் பெருகின. மிகப்பெரியதும் மிகுந்த செயல்பாடுகள் கொண்டதுமான சங்கம் 1923இல் சிங்கப்பூரில் உருவாக்கப்பட்டது. ஸ்ட்ரெய்ட்ஸ் குடியிருப்புகள் மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட மலாய் மாநிலங்களின் சட்டசபைகளில் இந்தியர்களின் பிரதிநிதித்துவத்தை உயர்த்த வேண்டும் என்பதே ஆங்கிலம் பேசும் நகர்ப்புற மேல்வர்க்கத்தினரை மிக அதிகம் கொண்ட இந்திய சங்கத்தின் மிக முக்கியமான நோக்கமாக இருந்தது.

இத்தகைய கூட்டமைப்புகள் ஒரு புறம் செயல்பட, குறிப்பாக தமிழ் மக்கள், வணிக சங்கங்கள், மற்றும் உள்ளூர் தொடர்புகள் அதிகம் உடைய அமைப்புகள் ஆகியவற்றை நோக்கி சீர்திருத்த அமைப்புகள் இயக்கப்பட்டன. ரயில் துறையில் வேலை செய்த அரைதிறன் தொழிலாளர்களின் உறுதியான ஆதரவோடு, மிக வெளிப்படையாக, அரசியல் அமைப்புகளும் உருவாகின. இவை 1924இல் மலேயாவின் முதல் வேலை நிறுத்தம் தமிழ் தொழிலாளர்களால் நடத்தப்பட வித்திட்டது.

நகர்ப்புற மலேயாவின் சங்க வாழ்க்கை மலர்ச்சியின் மிக முக்கியமான பின்விளைவுகளில் ஒன்றாக, புலம்பெயர் சமூக உருவாக்கம் ஓர் விவாதப் பொருளாகவும், அரசியல் திட்டமாகவும் இருந்தது. கோலாலம்பூரின் புறநகரான செந்துல் என்னும் இடத்திலிருந்து மூன்று இரயில்துறை பணியாளர்களால் எழுதப்பட்ட கடிதத்திலிருந்து இத்தகைய பிணைச் சூழல் உருவானது. 1924இல் எழுதப்பட்ட அக்கடிதத்தில்: "எங்கள் தாய் நாட்டிலிருந்து பல நூறு மைல்களுக்கு அப்பால் ஓர் அந்நிய நாட்டில் பல்வேறு இனங்கள் மற்றும் பல்வேறு கலாச்சாரத்துக்கு இடையில் நாங்கள் வாழ்கின்றோம். மெதுவாக ஆனால் நிச்சயமாக எங்கள் நன்னெறிப் பயிற்சியை இழந்து கொண்டிருக்கின்றோம்". அவர்கள், கடல் கடந்து வெளிநாடுகளில் வாழும் இந்தியத் தொழிலாளர்களின் மனச்சோர்வு குறித்து கவலை தெரிவித்த இந்திய சீர்திருத்தவாதிகளின் அதே மொழியை நேரடியாக எதிரொலித்தார்கள். கடிதத்தை எழுதியவர்கள், இந்திய குடிமக்களை தங்களுக்கு பொருள் ரீதியாக அல்லாமல் தார்மீக ரீதியாக உதவுமாறு வேண்டினர். காங்கிரசின் புகழ்பெற்ற குடிமகன்களை அந்த நாட்டுக்கு அடிக்கடி வருகை தருமாறு அவர்கள் கேட்டுக்கொண்டனர். சீர்திருத்தவாதிகள் மற்றும் தேசியவாதிகளின் கவலைக்கு வலுவூட்டும் வகையில், வெளிநாட்டில் வாழும் இந்தியத் தொழிலாளர்களின் நிலை இந்தியாவின் கண்ணியத்தை உலகிற்கு பிரதிபலித்தது. அத்தமிழ் இரயில்துறை தொழிலாளர்கள் எழுதினார்கள்: "ஐரோப்பியர்களுக்கு மட்டுமல்ல சீன, மலாய, யூராசிய மற்றும் ஒரு குறிப்பிட்ட பிரிவு சிலோன் தமிழர்களுக்கும் கூட, இந்தியர்கள் என்போர் (குறிப்பாக இந்திய தமிழர்கள்) இந்தியா எனும் கூலிகளின் தேசத்திலிருந்து வந்தவர்கள் என்பதைத் தவிர வேறில்லை என்கிற உண்மையில்தான் எங்களின் மிகப்பெரும் அவமானம் பொதிந்துள்ளது".

G.சாரங்கபாணி அவர்களால் 1932இல் 'தமிழர் சீர்திருத்த சங்கம்' நிறுவப்பட்டது. அவ்வமைப்பு பழைய நம்பிக்கைகளை வேரறுத்தல், சாதிய முறையின் மீதான

அணுகுமுறையை மாற்றியமைத்தல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் மற்றும் தீமைகளுக்கு முடிவு கட்டுதல் ஆகியவற்றை இலக்காகக்கொண்டு செயல்பட்டது. 'நாட்டுக்கோட்டை செட்டியார் வர்த்தக சபை' மற்றும் 'பினாங்கு இந்திய முஸ்லீம் சபை' போன்ற வணிக சங்கங்களும் செயல்பட்டன. வெளிநாடுகளில் வாழும் இந்திய மக்களை ஒருங்கிணைப்பதற்காக ராஷ் பிகாரி போஸ் இந்திய சுதந்திர கூட்டமைப்பை நிறுவினார். இவ்வமைப்பு தென்கிழக்கு ஆசியாவில் காலனித்துவ ஆட்சிக்கு எதிராகப் போராட இந்தியர்களை ஒருங்கிணைப்பதில் முனைப்பாக செயல்பட்டது.

இந்தியப் புலம்பெயர் சமூகம் மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ்

சர்வதேச புலப்பெயர்வும், தகவல் மற்றும் சரக்குகளின் நாடுகடந்த பிரவாகமும் தேசியவாத உரையாடலோடு நெருக்கமாகப் பிணைக்கப்பட்ட ஒன்றாகும். புலம்பெயர்தலில் வியாபித்திருக்கும் இடைவிடாத தீவிர செயல்பாடு, தாய்நாட்டிற்கும், புலம்பெயர்ந்தோருக்கும் இடையே தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கும். இது குறிப்பாக, பீட்டர் வான் டெர் வியர் குறிப்பிட்டதுபோல, காலனித்துவ சூழலில் இவ்வாறு நடக்கிறது. காலனித்துவமும் தேசியவாதமும் ஒன்றோடு ஒன்று கைகோத்துச் செல்லும் என்று அவர் உறுதிபடக் கூறுகிறார். காலனித்துவத்துக்கு எதிரான போராட்டத்தை தலைமை ஏற்று நடத்திய இந்திய தேசிய காங்கிரஸ், வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களின் பிரச்சினைகளை பேசுவதில் ஓர் முக்கியப் பங்கு வகித்தது. 1926இல் நடைபெற்ற கௌஹாத்தி காங்கிரஸ் மாநாட்டில் சீனிவாசா ஐயங்கார் தனது தலைமை உரையில் இவ்வாறு அறிவிக்கிறார்: "இந்தியாவுக்கான சுயராஜ்ஜியம், கடல் கடந்து வாழும் நம் உற்றார் உறவினரின் துணிச்சல் மற்றும் தளராத மனநிலையின் துணையைப் பொருத்தே அமையும்". காங்கிரஸ் தலைவர்களின் தொடர் வருகைகளின் மூலம் அதன் அக்கறை தெளிவாக விளங்கியது. மகாத்மா காந்தியின் நெருங்கிய தோழரான C.F.ஆண்ட்ரூஸ் 1916இல் சவுத் ஆப்பிரிக்கா மற்றும் ஃபிஜி காலனிகளுக்கு வருகை புரிந்தார். ஹிருதயநாத் குன்ஸ்ரு 1923இல் ஃபிஜி சென்றார். சரோஜினி நாயுடு 1923இல் கென்ய நாட்டுக்கு தூது சென்றார். V.S.ஸ்ரீனிவாச சாஸ்திரி ஃபிஜி மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு 1930களில் சென்றார். நேரு 1936 மற்றும் 1939இல் மலேயா, சிலோன், மற்றும் பர்மா ஆகிய நாடுகளுக்குச் சென்றார்.

மற்றொரு தலைவர்கள் குழு புலம்பெயர் தமிழர்களின் குறிப்பிட்ட சில பிரிவுகளில் ஏற்பட்ட அடையாளம் மற்றும் சமூக நிலை குறித்த பிரச்சினைகளில் கவனம் செலுத்தியது. மலேயாவுக்கு 1926இல் பெரியார் மேற்கொண்ட பயணம் பெரும் தாக்கம் மிகுந்த ஒன்றாக இருந்தது. வெளிநாடுகளில் வாழும் தன் ஆயிரக்கணக்கான சகோதரர்களை முகத்துக்கு முகம் கண்டு அவர்களது உள் மனவோட்டங்களை அவர் வாசித்தறிந்தார். மலேய தமிழ்ச் சமூகத்துடன் அவர் நிகழ்த்திய உரையாடல்களும், செயல்பாடுகளும் ஓர் அற்புத தாக்கத்தை உண்டாக்கியதோடு, ஓர் நிரந்தர மரபை ஏற்படுத்திச் சென்றது.

சிவகங்கையில் 1893இல் பிறந்த கருமுத்து தியாகராஜன் ஓர் தேசியவாதி, ஒரு தொழிலதிபர், ஒரு பத்திரிகையாளர், மற்றும் ஓர் கல்வியாளரும் ஆவார். வெளிநாடுவாழ் தமிழர்கள் மீதான ஆழ்ந்த அக்கறையுடன் தனது சுய ஆர்வத்தில் சிலோனில் உள்ள தோட்டங்களுக்கு பயணங்கள் மேற்கொண்டு, அங்கு தோட்டத் தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும், அவர்கள் படும் துன்பங்களையும் வெளிச்சத்துக்கு கொண்டு வந்தார். அவருடைய முயற்சிகளின் விளைவாக, கப்பலை விட்டு இறங்கும் முனைகளில் புலம்பெயர் மக்களுக்கு முத்திரை குத்துவது மற்றும் அனுபவம் மிகுந்த தமிழ் தொழிலாளர்களுக்கு அதிக பனிச்சுமையை அளிப்பது எனும் இரு கடுமையான சிரமங்களுக்கு தீர்வு ஏற்பட்டது.

தலைவர்களின் பங்கு

வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு ஆதரவாக காலனித்துவ அதிகாரிகளின் மனசாட்சியை தட்டி எழுப்பிய தலைவர்களில், மகாத்மா காந்தி முதன்மையானவராக இருந்தார். அவருடைய முன்னெடுப்புகளும், தொடர் முயற்சிகளும் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்தவர்களுக்கு நேர்மறை விளைவுகளை ஏற்படுத்தியதோடு, மற்றவர்கள் அதை பின்பற்றும்படியான ஓர் முன்னுதாரணமாகவும் திகழ்ந்தது. தென்னாப்பிரிக்காவில் அவர் சொற்ப காலம் மட்டுமே வசித்தாலும், நட்டால் இந்திய காங்கிரசின் நிறுவனர் என்கிற வகையில், பிரதிநிதித்துவமும் அணிதிரட்டும் திறனும் கொண்ட ஓர் தலைவராக அவருடைய பணி இன்றளவும் ஓர் அளவுகோலாக உள்ளது. காலனித்துவ அதிகாரிகளை தாங்களாகவே கையாளும் நிலையை அடையும் முன்பு வரை சமூகத் தலைவர்கள் மகாத்மா காந்தியிடமிருந்து உத்வேகம் பெறவும் அவருக்குத் தங்கள் ஆதரவை நல்கவும் செய்தனர். தென்னாப்பிரிக்காவின் அதிகாரப்பூர்வ முக்கியப்புள்ளிகள் பட்டியலில் பல இந்தியப் பெயர்கள் இருந்தன, அதிலும் குறிப்பாக தமிழ் பெயர்கள் பிரதானமாக இருந்தன. அதில் குறிப்பிடத் தகுந்தவர்கள் பலர் இருந்தாலும் இடமின்மை காரணமாக இங்கு சில ஆளுமைகளைக் குறித்த விவரங்கள் மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது.



படம் 6: தம்பி நாயுடு (1875–1933)

தம்பி நாயுடு (1875-1933)

மகாத்மா காந்தியுடன் இணைந்து தொடக்கம் முதலே பணியாற்றியவர்களில் முதன்மையானவர் கோவிந்தசுவாமி கிருஷ்ணசுவாமி தம்பி நாயுடு ஆவார். அவர் 1906 முதல் 1914 வரை மகாத்மா காந்தியுடன் இணைந்து பணியாற்றினார். அவருடைய பெற்றோர் தமிழ்நாட்டின் மத்தூரிலிருந்து மொரீஷியஸ் நாட்டிற்கு ஒப்பந்தத் தொழிலாளர்களாக குடியேறியவர்கள். அக்குடும்பம் பின்னர் தென்னாப்பிரிக்காவிற்கு மீள்குடியேறி, அங்கு செழித்து வளர்ந்து அரசியலிலும் ஓர் முக்கியப் பங்கை ஆற்றியது. தம்பி நாயுடுவும் அவரது மனைவி வீரம்மாளும் மகாத்மா காந்தியின் சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டனர். ஜூலை 1907இல், பதிவு அலுவலகங்கள் முன்பு மறியல் செய்தவர்களில் தம்பி நாயுடு தான் முதலில் கைது செய்யப்பட்டார். அவருக்கு 14 நாட்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அதே வருடம் டிசம்பர் 28 அன்று, பதிவு செய்துகொள்ள மறுத்த குற்றத்துக்காக அவர்

ட்ரான்ஸ்வால் நகரத்தை விட்டு வெளியேற்றப்பட்டார். ஆணைகளுக்கு அவர் பணிய மறுத்தபோது, 10 ஜனவரி 1908 அன்று மகாத்மா காந்தியுடன் சேர்த்து அவரும் கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டார்.

மகாத்மா காந்தி அவருடைய செயல்பாடுகள் குறித்து மிகப் பெருமையாக எழுதினார். "அவர் இதுவரை ஒரு முறை கூட இந்தியாவுக்கு சென்றதில்லை எனினும் தாய் நாட்டின்மீது அவர் கொண்டுள்ள நேசம் எல்லைகளற்றது. தேசபக்தி அவருடைய ஒவ்வொரு நரம்பிலும் ஓடியது, அவருடைய உறுதி அவரின் முகத்தில் ஒளிரும். மிக வலிமையாக கட்டமைக்கப்பட்ட அவர் அயராத ஆற்றலை உடையவராகவும் இருந்தார். சமூகத்தின் நன்மைக்காக தன் எல்லாவற்றையும் தியாகம் செய்வதற்கு தயாராக இருப்பதில் அவரைப்போல் வேறு ஒருவர் இருக்க முடியாது". மேலும் மகாத்மா காந்தி கூறினார்: "தென்னாப்பிரிக்க சத்தியாகிரக வரலாற்றில், தம்பி நாயுடு அவர்களின் பெயர், முன்களப் பணியாளர்களின் வரிசையில் முதலாவதாக என்றென்றைக்கும் இருக்கும்".



படம்7: டாக்டர் கங்காதுரா மொஹம்ப்ரி (மான்ட்டி) நாயக்கர் (1910–1978)

டாக்டர் கங்காதுரா மொஹம்ப்ரி நாயக்கர் (1910-1978)

டாக்டர் கங்காதுரா மொஹம்ப்ரி நாயக்கர் (மான்ட்டி நாயக்கர் என்று பிரபலமாக அறியப்பட்டவர்), செல்வவளம் மிக்க தொழிலதிபரான பாப்பையா கங்காதுர நாயக்கர் மற்றும் அவரது மனைவி தனலட்சுமி பிள்ளை ஆகியோரின் தலைமகனாகப் பிறந்தவர். மான்ட்டியின் தாத்தா இந்தியாவிலிருந்து தென்னாப்பிரிக்காவுக்கு ஒப்பந்தத் தொழிலாளராகக் குடியேறியவர். எடின்பர்க் நகரில் மருத்துவராகத் தேர்ச்சி பெற்ற அவர் தென்னாப்பிரிக்காவுக்கு திரும்பி மருத்துவத் தொழிலை தொடங்கி பின்னர் அதன் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

அவர் 1940இல் 'சுதந்திர வாசகர் குழு' என்னும் பல் இன அமைப்பில் சேர்ந்தார். அங்குதான் அவர் தீவிர முற்போக்கு கருத்துக்களை அறியப் பெற்றார். இக்குழுவே அவருடைய பிற்கால அரசியல் திசைக்கான அடித்தளத்தை பெரிய அளவில் அமைத்தது. நாயக்கரின் தீவிர அரசியல் ஈடுபாடு அவர் 1941இல் இந்திய தொழிற்சங்க இயக்கத்தில் பங்கெடுத்தபோது தொடங்கியது. அவர், 1941ற்கும் 1945ற்கும் இடையில், பல வேலை

நிறுத்தப் போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். தாங்கள் நில உரிமை பெறுவதற்கு எதிராக 1943இல் பெக்கிங் சட்டத்தின் (ட்ரான்ஸ்வால் மற்றும் நட்டால் நகரங்களில் நிலம் விற்கவும் குடியேறவும் தடைவிதிக்கும் சட்டம் 1943) மூலம் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டபோது, இந்தியர்களின் எதிர்ப்பு போராட்டத்தில் அவரும் பங்கெடுத்தார். அடுத்தடுத்து அச்சட்டத்தில் மாற்றங்கள் செய்வதாக அரசாங்கம் ஒப்புக் கொண்டாலும் அது நாயக்கரை திருப்திப்படுத்தவில்லை. 1944இல் பிரிவினை எதிர்ப்பு சபையின் துணை நிறுவனராகவும், அதன் முதல் தலைவராகவும் அவர் இருந்தார்; மேலும் மிதவாத தலைமைக்கு எதிர்ப்பு அதிகரித்தபோது அதிலும் அவர் பங்கேற்றார்.

நாயக்கர் 1945க்குள் தன்னுடைய முழுமையான சமத்துவம் என்னும் திட்டத்திற்கு இந்தியர்களின் பெரும் ஆதரவைத் திரட்டி இருந்தார். அக்டோபர் 1945இல் நட்டால் இந்திய காங்கிரஸின் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1963 வரை அவரே அதன் தலைமை பொறுப்பில் நீடித்தார். 'கெட்டோ (Ghetto) சட்டம்' என்றழைக்கப்பட்ட அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு சட்டங்களுக்கு எதிராக நட்டால் இந்திய மிதஎதிர்ப்பு பிரச்சாரத்தில் 1946 முதல் அவர் தீவிரமாகப் பங்கெடுத்தார். கெட்டோ (Ghetto) சட்டம் (ஆசிய நில உரிமை மற்றும் இந்திய பிரதிநிதித்துவம் விதி எண்:28, 1946, ஒருபுறம் நட்டால் நகரின் குறிப்பிட்ட சில பகுதிகளில் இந்தியர்கள் நிலம் வாங்குவதையும் குடியேறுவதையும் தடை செய்தது; மறுபுறம், வெள்ளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் இந்தியர்களுக்கு அரசியல் பிரதிநிதித்துவம் அளிப்பதாகக் கூறி கடுமையான விளைவுகளை மென்மையாக்க முயற்சி செய்தது. பிரச்சாரத்தின்போது, அவருடைய செயல்பாடுகள் பலமுறை அவரது கைது மற்றும் சிறைத் தண்டனைக்கு வித்திட்டது. வெள்ளையர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தை அவர் ஆக்கிரமித்தார் என்ற காரணத்துக்காக 1947இல் அவர் ஆறு மாத சிறைத் தண்டனை அனுபவித்தார். மீண்டும் 1948இல் ஓர் எதிர்ப்பு குழுவிற்குத் தலைமை தாங்கி ஓக்ஸ்ரஸ்ட் என்னும் இடத்திலிருந்து ட்ரான்ஸ்வாலுக்குள் நுழைய முயன்றபோது அவருக்கு ஆறு மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. டாக்டர் நாயக்கர், 1948லேயே, ஓர் 'ஐக்கிய ஜனநாயக முன்னணி' வேண்டும் என்று கேட்டார். 1978இல், மரணிக்கும் வரை தன்னுடைய பொது வாழ்க்கையை அவர் தொடர்ந்தார்.



படம் 8: **கேப்டன் லட்சுமி சேகல்** (1914–2012)

கேப்டன் லட்சுமி சேகல் (1914-2012)

இந்திய விடுதலைக்காக அயராது பாடுபட்ட கேப்டன் லட்சுமி சேகல் மதராஸ் மாகாணத்தில் ஓர் தீவிர அரசியல் செயல்பாடு உடைய செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தார். மருத்துவம் பயின்ற அவர் சிங்கப்பூரில் குடியேறுவதற்கு முன்பு மதராசில் தன் மருத்துவத்

தொழிலைச் செய்து வந்தார். ஆங்கிலேய அதிகாரிகள், மருத்துவர்களை கட்டாய ராணுவ சேவையில் ஈடுபடுத்த திட்டமிடுவதாக ஓர் வதந்தி இருந்த காரணத்தினாலேயே அவர் சிங்கப்பூர் சென்றார். சிங்கப்பூரில் மருத்துவ சேவையில் மட்டுமல்லாது சமூக சேவையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். ராஷ் பிகாரி போஸ் நிறுவிய இந்திய சுதந்திரக் கூட்டமைப்பில் தொடக்க காலத்திலேயே சேர்ந்தவர்களில் இவரும் ஒருவர். சுபாஷ் சந்திர போஸின் வருகையும் இந்திய தேசியப் படையின் மறுசீரமைப்பும் தென்னிந்தியாவின் ஒட்டுமொத்த இந்திய சமூகத்திற்கும் புதிய சக்தியை அளித்தது. போஸ் அவர்களின் தலைமையினால் ஈர்க்கப்பட்டு அவர் இந்திய தேசியப் படையில் சேர்ந்தார்; அவருக்கு ஜான்சி ராணி படை என்றழைக்கப்பட்ட பெண்களுக்கான காலாட்படைப் பிரிவை தலைமை தாங்கும் பொறுப்பு அளிக்கப்பட்டது. மூன்று மாதம் கடுமையான பயிற்சிக்குப்பின், அப்படை சிறு குழுக்களாக இம்பால் செல்லும் வழியில் பர்மாவுக்குள் நுழைந்தது. ஆயினும், ஆங்கிலேய இராணுவம் தனது பிரதேசத்தை வெற்றிகரமாக பாதுகாத்துக் கொண்டது. அப்படைப்பிரிவு, பலத்த உயிர் சேதத்துடன் பின்வாங்க வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டது. இருப்பினும், அவர்கள் மத்திய பர்மாவில் மீண்டும் ஒன்றிணைந்து கொரில்லா தந்திரங்களை பின்பற்றி ஆங்கிலேய இராணுவத்தை தாக்கினார்கள். அதன் பின்னர் அப்படைப்பிரிவு கலைக்கப்பட்டது. தலைமையின்மீது முழுமையான நம்பிக்கை கொண்டு ஜான்சிராணி படைப்பிரிவின் உறுப்பினர்கள் அனைவரும் நேதாஜி அவர்களுக்கு இரத்தத்தால் கையெழுத்திடப்பட்ட விண்ணப்பம் ஒன்றை அனுப்பினர். அதில், "நாங்கள் போர்க்களத்தில் உயிரை விடத் தயாராக இருக்கிறோம், நாங்கள் திரும்பிச் செல்ல விரும்பவில்லை", என்று எழுதியிருந்தனர். லட்சுமி இந்தியாவுக்குத் திரும்பி தன்னுடைய மருத்துவத் தொழில் மற்றும் சமூக சேவையைத் தொடர்ந்தார், பின்னர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மார்க்சிஸ்ட் பிரிவில் (சிபிஐ(எம்)) சேர்ந்தார்.



படம் 9: ஜானகி ஆதி நாகப்பன் (1925–2014)

ஜானகி ஆதி நாகப்பன் (1925-2014)

ஜானகி ஆதி நாகப்பன் மலேசிய இந்திய காங்கிரஸின் நிறுவன உறுப்பினரும், மலேசிய (அப்போது மலேயா) விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்த ஆரம்பகாலப் பெண்களில் ஒருவரும் ஆவார். அவர் 25 பிப்ரவரி 1925 அன்று கோலாலம்பூரில்

பிறந்தார். மலேசியாவின் செல்வந்த தமிழ் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர் ஜானகி. இந்திய சுதந்திரப் போராட்டத்திற்காக தங்களால் இயன்ற எதையும் அளிக்குமாறு சுபாஷ் சந்திர போஸ் இந்தியர்களுக்கு விடுத்த கோரிக்கை குறித்து கேள்விப்பட்டபோது அவருக்கு 16 வயது மட்டுமே. உடனடியாக தன்னுடைய தங்க காதணிகளைக் கழட்டி நன்கொடையாக அளித்தார். இந்திய தேசியப் படையின், ஜான்சி ராணி படைப்பிரிவில் சேர வேண்டும் என்று உறுதி பூண்டிருந்தார். அவருடைய குடும்பத்தில் கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது, குறிப்பாக அவரது தந்தை அதற்கு மறுப்பு தெரிவித்தார். ஆனால் ஜானகியின் தொடர் வற்புறுத்தலுக்குப்பின் இறுதியாக அவரது தந்தையும் ஒப்புக்கொண்டார்.

தன் 17 வயதில் இந்திய தேசியப் படையில் சேர்ந்து, அதன் ஒரே பெண்கள் பிரிவான, ஜான்சி ராணி படைப்பிரிவின் கேப்டனாகவும் இரண்டாம் நிலை தளபதியாகவும் உயர்ந்தார். இரண்டாம் உலகப் போரின்போது இந்திய-பர்மா எல்லையில் ஆங்கிலேயருக்கு எதிராக அவர் சண்டையிட்டார். போருக்குப் பின்னர், ஜான் திவி அவர்களுக்கு, இந்திய தேசிய காங்கிரசை முன்மாதிரியாகக்கொண்டு உருவாக்கப்பட்ட மலேய இந்திய காங்கிரசை நிறுவ ஜானகி உதவி புரிந்தார். அக்கட்சியின் முதல் தலைவராக திவி இருந்தார். தன் வாழ்நாளின் இறுதி காலத்திலும் ஜானகி அரசியல் செயல்பாடுகளில் ஈடுபட்டார். அவருடைய சமூக நலப் பணிகள் மற்றும் இந்திய தேசியப் படையில் அவர் ஆற்றிய சேவை ஆகியவற்றுக்காக 2000ஆவது ஆண்டில் அவருக்கு இந்திய குடியரசுத் தலைவரின் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.



படம் 10: **தில்லையாடி வள்ளியம்மை (1898–1914)**

தில்லையாடி வள்ளியம்மை (1898-1914)

வள்ளியம்மையின் பெற்றோர் தென்னாப்பிரிக்காவுக்கு முதல் தலைமுறையாகக் குடியேறியவர்கள். அவருடைய தந்தை பாண்டிச்சேரியை சேர்ந்தவர் மற்றும் தாய் தஞ்சாவூர் மாவட்டத்தின் தில்லையாடியைச் சேர்ந்தவர். தீவிர அரசியல் செயல்பாடுகள் உடைய அவரின் பெற்றோர், அங்கு ஒத்துழையாமை இயக்கத்திலும் பங்கெடுத்தனர். ஒரு சிறுமியாக, அத்தகைய அரசியல் கூட்டங்களுக்கும், ஊர்வலங்களுக்கும் வள்ளியம்மை தன் தந்தையுடன் அவ்வப்போது சென்று கலந்து கொள்வார். தென்னாப்பிரிக்காவுக்கு வெளியில் நடந்த அனைத்து திருமணங்களும் இனி செல்லாது என்று 'தேவாலய

சட்டம்' என்று அழைக்கப்பட்ட சட்டத்தின் மூலம் தென்னாப்பிரிக்கா அறிவித்தபோது மகாத்மா காந்தி அவர்களால் வள்ளியம்மை போராட்ட அரசியலில் களமிறக்கப்பட்டார். ஆயிரக்கணக்கான திருமணங்கள் ரத்து செய்யப்பட்டன சட்டத்தின் பார்வையில், வள்ளியம்மை ஓர் முறைகேடாகப் பிறந்த குழந்தையாக ஆக்கப்பட்டார். அச்சட்டத்திற்கு எதிராக, 23 அக்டோபர் 1913 அன்று, அவரின் குடும்பம் வாழ்ந்துவந்த ஜோகன்னஸ்பர்க் நகரிலிருந்து ஓர் பேரணி புறப்பட்டது; வள்ளியம்மை தன் தாய் மங்களத்தம்மாளுடன் அதில் கலந்து கொண்டார். பெண்கள் மாரிட்ஸ்பர்க் வழியாக அணிவகுத்து சென்றபோது சிறு சிறு தொகுதிகளாக அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இறுதியில், ஓக்ரஸ்ட் என்னும் இடத்தில் வள்ளியம்மையும் அவரது தாயாரும் கைது செய்யப்பட்டு கஸ்தூரிபா மகாத்மா காந்தி வைக்கப்பட்டிருந்த அதே மாரிட்ஸ்பர்க் சிறையில் அடைக்கப்பட்டார்கள். சிறையில் வள்ளியம்மை சுகவீனமடைந்தார். மகாத்மா காந்தி அவரை சிறைக்கு சென்று பார்த்தார். காந்தி அவருடைய மோசமான நிலையைக் கண்டு, பிப்ரவரி 1914இல் வள்ளியம்மையின் தண்டனை காலத்திற்கு முன்பே விடுதலை செய்யும்படி படைத் தளபதி ஸ்மட்ஸ்சுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இருப்பினும், 22 பிப்ரவரி 1914 அன்று, விடுதலை பெற்ற சில நாட்களிலேயே, வள்ளியம்மை தன் 16 வயதில் உயிர் நீத்தார். தென்னாப்பிரிக்காவில் சமத்துவத்துக்காக நடத்தப்பட்ட போராட்டத்தின் எந்த ஒரு கட்டத்திலும் தன் நிலையிலிருந்து மாறாமல் தொடர்ந்து போராடியதற்காக அவரை மகாத்மா காந்தி பாராட்டினார். அந்த வயதில் அவர் ஓர் மாபெரும் ஆளுமையாக மாறினார். தமிழ் புலம்பெயர் தேசியவாத வரலாற்றின் பக்கங்கள் அக்குழந்தைத் தியாகியின் நினைவுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

சுதந்திரப் போராட்டத்தில் மக்கள் திரளின் பங்கேற்பு

இத்தொகுப்பில் தலைவர்கள் குறித்து மட்டுமே பேசுவது என்பது, ஏற்கெனவே விளிம்பு நிலையில் உள்ள தமிழ் புலம்பெயர் சமூகத்தின் சில பிரிவினரை மேலும் விளிம்பு நிலைக்குத் தள்ளுவது போன்றதாகும். உண்மையில் அவர்கள்தான் இயக்கத்தின் நரம்புகளாக இருந்தனர்; தாங்கள் இருந்த மிகக் கொடிய சூழலைக் குறித்து சிறிதும் கவலைப்படாமல் தங்களால் இயன்ற ஆதரவை பொருட்களாகவும், உடல் உழைப்பாகவும் அளித்தனர். தலைவர்களின் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்ட அவர்கள் அத்தலைவர்களின் உறுதியான குரல்களுக்கு உடனடியாக செவிமடுத்தனர். தென்னாப்பிரிக்காவில், இனவெறி மக்களை ஒன்றிணைக்கும் ஓர் சக்தியாக மாறியது. ஒப்பந்தத் தொழிலாளர்கள், கூலிகள், அலுவலக ஊழியர்கள், மற்றும் செழுமையான தொழில்துறை பிரிவுகளைச் சேர்ந்த வணிகர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் என பல்வேறு குழுக்களாகப் பிரிந்து கிடந்தவர்களை 'பாகுபாடு' என்னும் ஓர் குடையின்கீழ் அது ஒன்றிணைத்தது. இந்தியச் சமூகம் இவ்வாறு ஓர் குழுவாக இணைந்து நின்றது காந்திய சத்தியாகிரகத்துக்கு வழிவகுத்தது. இந்திய தேசியப் படையின் முன்னாள் வீரரான V.சாமி பின்வருமாறு கூறுகிறார்: தென்கிழக்கு ஆசியாவில் நேதாஜி போஸின் வருகை, இந்தியா விரைவில் விடுதலை பெற்று விடும் என்று நம்பத் தொடங்கிய அனைத்து இந்தியர்களுக்கு இடையிலும் ஓர் புதிய உணர்வைத் தூண்டியிருக்கிறது. நேதாஜியின் அழைப்பு அனைத்து இந்தியர்களை சென்றடைந்தது. அவருடைய அழைப்பிற்கு மக்கள் ஓர் பிரம்மாண்டமான ஒத்துழைப்பை நல்கினார்கள். ஜான்சி ராணி படைப்பிரிவில் இருந்த ஜானகி ஆதி நாகப்பன் சொல்கிறார்: 'போரில் பசி, தாகம், சோர்வு, குண்டுவீச்சு, காயம், மற்றும் மரணம் ஆகியவையே எங்களின் நிலையான தோழமைகளாக இருக்கும் என்பதை எங்கள் பெண்கள் அறிந்திருந்தார்கள். அவர்கள் சுதந்திர இந்தியா என்னும் கனவினால் உத்வேகம் பெற்றவர்களாக இருந்தார்கள்". போர் வருடங்கள், இந்தியர் எனும் அடையாள உணர்வை உண்டாக்கியது. ஒரு நோக்கத்திற்காக

உண்டான இந்த ஒற்றுமை உணர்வு, இந்தியர்களுக்கிடையே இருந்த மொழி, பிரதேசம், சாதி, மற்றும் மத வேற்றுமைகளைக் கடந்து நின்றது.


தியாகத்தின் திருவுருவமாகத் திகழ்ந்த ஓர் தமிழ் குடும்பம் தேசத்திற்கு ஆற்றிய சேவை குறித்து திருமதி அன்னி பெசன்ட் அம்மையார் அவர்களே விவரிக்கின்றார். அவர் தன் புதிய இந்தியாவில் எழுதுகிறார்: இந்தியா வழியாக இங்கிலாந்துக்கு செல்லவிருந்த முன்தினம் மாலை மகாத்மா காந்தி அவர்களுக்கு அதுவரை வழங்கப்பட்டதிலேயே மிக வசீகரமான பரிசு ஒன்று கிடைத்தது. அப்பரிசு, திரு மற்றும் திருமதி C.K.T.நாயுடு அவர்களின் நான்கு மகன்களே ஆகும். ஏற்கனவே மகாத்மா காந்தி இந்தியப் பணியாளர் சங்கத்தில் சேர எண்ணியிருந்ததால், அப்பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளும் அதேபோன்ற பணிகளை செய்து தாய் நாட்டின் சேவைக்காகவே வளர்க்கப்படட்டும் என்று விரும்பினார்கள். திரு மற்றும் திருமதி நாயுடு இருவரும் மூத்த அறவழிப் போராளிகள் என்பதும், தேவைப்படும்போதெல்லாம் அல்லது அவர்களால் இயன்ற போதெல்லாம் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறைக்குச் சென்றவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்திய நாட்டிற்காகத் தங்களின் நான்கு பிள்ளைகளைப் பிரியவும் தயாராக இருக்கும் அவர்களின் மூலம் தென்னாபிரிக்காவில் வாழும் நம் நாட்டவர் இந்தியாமீது கொண்டிருக்கும் அன்பை உணர்ந்து கொள்ளலாம். அச்சமயம் காந்தி குறிப்பிட்டார்: "அவர்கள் அளித்த பரிசு, நாட்டுக்காக எவர் ஒருவர் அளித்த பரிசைக் காட்டிலும் விலைமதிப்பற்றது".

முடிவுரை

இல்லங்களை நோக்கித்தான் இதயங்கள் இருக்கும் என்றால் இந்தியப் புலப்பெயர்வு என்பது பெரும்பாலானோருக்கு தற்காலிகமானதே, நிரந்தரமானதல்ல. தூரம், தாய்நாட்டின் மீதான அவர்களின் அக்கறையையும் தொடர்பையும் குறைத்துவிடவில்லை. அன்றாட நடவடிக்கைகளில் மூழ்கி இருக்கும் போதும் இந்தியா அவர்களின் முக்கியமான மேற்கோள் குறிப்பாக எல்லா காலத்திலும் இருந்தது. அந்நிய நாடுகளில், இந்திய விடுதலையைத் தவிர வேறெதுவும் தங்களுடைய மரியாதையை உறுதி செய்ய முடியாது என்பதை அவர்கள் உணர்ந்தே இருந்தார்கள். பின்வரும் கடர் எதிர்ப்புப் பிரச்சாரப் பாடலும் அதே வருத்தத்தை தெரிவிப்பதில் வியப்பொன்றுமில்லை: மொத்த உலகமும் நம்மை கருப்புத் திருடர்கள் என்று அழைக்கிறது, மொத்த உலகமும் நம்மை கூலி என்று அழைக்கிறது. உண்மையில், அவர்களது ஆசைகளும் செயல்பாடுகளும் அடையாளங்களை விஞ்சி நிற்கின்றன. ஓர் கௌரவக் குறியீட்டு மூலதனமாக இருந்த வெளிநாடுவாழ் இந்தியர்கள், அந்நிலையைக் கடந்து இந்திய சுதந்திரப் போராட்டத்தில் முக்கியப் பங்கு வகித்தனர். தங்களுக்குப் பணி அளித்த காலனித்துவ நாடுகளின் பாகுபாடு, பாதகமான சூழ்நிலை, மற்றும் விளிம்பு நிலைக்கு தள்ளப்படுதல் ஆகியவை அவர்களின் ஈடுபாட்டைத் தடுக்கவில்லை. மாறாக, விடுதலைப் போராட்டத்திற்கு தாங்களும் பங்களிக்க வேண்டும் என்கிற உறுதியை மேலும் வலுப்படுத்திக் கொண்டார்கள். இந்தியப் புலம்பெயர் சமூகத்தினர் தங்களின் நோக்கத்தை தொடர பல்வேறு வழிமுறைகளை பின்பற்றினார்கள். இந்தியக் குடியேற்ற சூழலில், பெயர்களிலும் எண்ணிக்கையிலும், தமிழர்களே ஆதிக்கம் செலுத்தினர். அது ஓர் பெருமைக்குரிய விஷயமாக இல்லாவிட்டாலும், காலனித்துவ குடியேற்றம் ஓர் 'கூலி வர்த்தகமாகவே' பொதுவாகக் கருதப்படுகிறது என்பதை ஒருவர் அறிந்து கொள்ளலாம். மேலும் காலனித்துவ அதிகாரிகளாலும் அம்முறை குறித்து ஆராய்ச்சி செய்யும்

அறிஞர்களாலும் அச்சொல்லே அதிகம் பயன்படுத்தப்படுகிறது. மேலும் 'கங்காணி' மற்றும் 'மேஸ்திரி' ஆகிய இரு சொற்களும் தமிழ் மொழியிலிருந்து பெறப்பட்டு புலம்பெயர் அகராதியின் ஒருங்கிணைந்த பகுதியாக மாறியிருக்கிறது. பெயரால் மட்டுமல்ல எண்ணிக்கையாலும் புலம்பெயர் தமிழ் மக்கள் காலனிகளில் மட்டுமல்லாமல் தமிழ்நாட்டிலும் காலனித்துவ பொருளாதாரத்தை மாற்றி இருக்கிறார்கள். செட்டியார் சமூகத்தின் பங்கும் பங்களிப்புகளும் நன்கு ஆவணப்படுத்தப்பட்ட ஒன்று. அதே சமயத்தில் புலம்பெயர் தமிழர்கள் தங்கள் தாய்நாட்டுடனான கலாச்சாரப் பாலங்களையும் கட்டமைத்தார்கள், பெரியாரின் மலேயப் பயணத்தைப்போல; இதுவே, "ஓர் இந்தியனை இந்தியாவிலிருந்து பிரித்து வெளியே கொண்டு செல்லலாம், ஆனால் ஓர் இந்தியனிடமிருந்து இந்தியாவைப் பிரித்தெடுக்க முடியாது", என்னும் சொல் வழக்கிற்கு சான்றாக அமைந்தது. ஆனால் இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு புலம்பெயர் தமிழ் சமூகம் தான் ஓர் ஆக்கபூர்வமான பங்களிப்பை செய்தது.

நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் புலம்பெயர் தமிழ் சமூகம் ஆற்றிய பங்கை மிகைப்படுத்தவே முடியாது. அதன் அளவும், இட அமைப்பும் முக்கிய காலனிகளில் தமிழர்களுக்கு பெரும் பங்கை உறுதிப்படுத்தியது; குறிப்பாக அணிதிரட்டலில் அதன் அளவு நன்றாக வெளிப்பட்டது. போராட்டம் வலுவடைந்தபோது அவர்களின் முக்கிய மற்றும் அழுத்தமான முயற்சிகள் பல மடங்கு மேம்பட்டது. வயது, வர்க்கம், பாலினம் ஆகிய பிரச்சினைகளுக்கு அப்பாற்பட்டு, புலம்பெயர் தமிழ் சமூகம், தங்களின் மற்றும் தங்கள் தாய்நாட்டின் வாழ்க்கையில் முட்டுக்கட்டை ஏற்படுத்தும் தேசிய மற்றும் சர்வதேச நிகழ்வுகளுக்கு எப்போதும் ஆயத்த நிலையில் இருந்து எதிர்வினை ஆற்றினர். புகழ்பெற்ற தலைவர்களால் வழிநடத்தப்பட்ட பெருந்திரள் மக்கள் சிறைவாசத்தை விரும்பி ஏற்றுக் கொண்டனர், சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்தனர், மேலும் தங்கள் உயிரையும் கொடுத்தனர். பத்திரிகைகளும், பல்வேறு அமைப்புகளும், சங்கங்களும் முக்கியப் பிரச்சனைகளை முன்னிலைப்படுத்தி மக்களை அணி திரட்டின. இந்திய தேசியப் படையின் வரலாறு தென்கிழக்கு ஆசியாவின் புலம்பெயர் தமிழ் சமூகத்தின் பங்கேற்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. விடுதலைப் போராட்டத்தில் மற்றவர்களுக்கு உத்வேகம் அளிக்கக்கூடிய வகையிலான தமிழர்களின் பங்கெடுப்பைப் பாராட்டி தலைவர்கள் புகழுரைகளைப் பொழிந்தார்கள். இந்திய புலம்பெயர் சமூகத்தின் புகழ்பெற்ற அனுபவம் மிக்க மூத்தவரான மகாத்மா காந்தி உறுதிபடக் கூறினார், "நம்மை ஆளும் பேராற்றல், மற்றெல்லா இந்தியர்களிலும் மதராசிகளைத் தான் இப்பெரும் பணியை செய்து முடிக்க தேர்ந்தெடுத்துள்ளது. அவர்கள் பொது ஆபத்து எதுவென்று உணர்ந்திருந்தார்கள் மேலும் இந்தியர்களாக தங்களுடைய ஊழ் எது என்பதையும் உணர்ந்தே இருந்தார்கள். அவர்கள் மட்டுமே தங்களின் ஆன்ம சக்திகளுக்கு எதிரான சீர சக்திகளுடன் பொருந்திப் போனார்கள்".


READ
STRICTED

8

அரசியல் உரைகள் மற்றும் தேசியவாதங்களின் கதைகள்:

காலனித்துவ தமிழ் நாட்டில் தடைசெய்யப்பட்ட புத்தகங்கள்

ஆர்.முகமது ஹாசன்,
உதவிப் பேராசிரியர்
சி.அப்துல் ஹக்கீம் கல்லூரி
இராணிப்பேட்டை

இந்திய துணைக்கண்டத்தில் காலனித்துவத்துக்கு எதிரான போராட்டங்கள் காலனித்துவம் தொடங்கிய காலத்திலேயே தொடங்கின. பாளையக்காரர்கள் என்றழைக்கப்பட்ட நில உரிமையாளர்களின் போராட்டங்கள், சேலம் பகுதி மலைவாழ் பழங்குடியினரின் பதிலடிகள், பிரிட்டனின் காலனித்துவ விரிவாக்கத்திற்கு ஹைதர் அலி காட்டிய வீரமிக்க எதிர்ப்பு, மற்றும் 1806இல் திப்பு மற்றும் வேலூர் சிப்பாய் கலகம் ஆகியவற்றை இந்திய துணைக்கண்டத்தின் தெற்குப் பகுதிகள் காலனித்துவத்தின் ஆரம்ப காலத்திலேயே கண்டன. மேற்குறிப்பிடப்பட்ட காலனித்துவத்திற்கு எதிரான போராட்டங்கள் ஆங்காங்கே தனித்தனியாக நிகழ்ந்த நிகழ்வுகள் அல்ல, அவை ஒன்றோடொன்று தொடர்புடையவை.

கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து நேரடிக் கட்டுப்பாட்டை ஆங்கிலேயர்கள் தாங்களே எடுத்துக் கொண்டபோது, இந்திய எதிர்ப்பு முறையில் ஓர் மாற்றம் வந்தது. அதற்காக 1857 சிப்பாய் கலகத்தின் பின்விளைவுகளுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும். மேற்குலகில் கல்வி பெற்ற, பெரும்பாலும் உயர் சாதியிலிருந்து வந்த ஆண்கள் இந்தியர்களை அரசாங்கத்திற்குள் சேர்த்துக் கொள்ளுமாறு ஆங்கிலேயர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தொடங்கினர். அதன்பின், தீவிரவாத கட்டத்தைத் தொடர்ந்து காந்திய கட்டம் வந்தது. ஆங்கிலேயருக்கு எதிரான ஆயுதப் போராட்டங்களில் பலர் நம்பிக்கை கொண்டிருந்தனர்,

'மலபார் கலகம்' என்றழைக்கப்பட்ட 'மாப்பிள்ளா கிளர்ச்சி' போன்று ஆங்காங்கே கிளர்ச்சி இயக்கங்கள் தோன்றின. மாப்பிள்ளா கிளர்ச்சி, காலனித்துவத்துக்கு எதிராக மட்டுமல்லாமல் நிலப் பிரபுத்துவத்துக்கு எதிரானதாகவும், ஹிந்துஸ்தான் குடியரசு படை மற்றும் இந்திய தேசியப் படை ஆகியவற்றுக்கு எதிராகவும் நடைபெற்றது.

டேவிட் அர்னால்ட், மதராசில் வெள்ளையனே வெளியேறு: இடைவெளியா அல்லது அந்திமமா? என்கிற தன் கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார் "வெள்ளையனே வெளியேறு இயக்கம் சுதந்திரத்தை நமக்கருகில் கொண்டுவருவதோடு, காங்கிரஸிலும்" இயக்கத்திலும் உள்ள முரண்பாடுகளையும், பதட்டங்களையும் கூட வெளிக்கொணர்கிறது.

இதுபோன்ற மேற்குலக கல்விபெற்ற உயர்வர்க்கத்தினரின் முதன்மையான பங்களிப்புக்களில் ஒன்றாக அறிவுசார் நோக்கத்துடனான எழுத்துக்கள் இருந்தன. பிரிட்டனின் இந்தியா மீதான பொருளாதாரச் சுரண்டலை அவர்கள் அம்பலப்படுத்தியபோது, பொதுவான இந்திய அரசியல் சூழலிலும், குறிப்பாக காலனித்துவத்துக்கு எதிரான இயக்க சூழலிலும் அதற்கு சாதாரண எதிர்வினையே இருந்தது. காலனித்துவத்துக்கு எதிரான வரலாறுகளைக் குறித்த களத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்புகள் தவிர்க்க முடியாதவை.

நாட்டின் மற்ற பகுதிகளில் இருந்ததைப் போலவே, தேசியத்தை மக்களுக்குள் புகுத்துவதில் முக்கியப் பங்காற்றிய பல செய்தித்தாள்களும், பத்திரிகைகளும், புத்தகங்களும் தமிழ்நாட்டிலும் வெளிவந்தன. அது, இந்தியத் துணைக் கண்டத்தில் மக்களிடையே புதிதான ஒன்றாக இருந்தது".

பதிலடியாக, காலனித்துவ அரசு இவ்வெழுத்துக்களையும், தேசிய உணர்வையும் கட்டுப்படுத்த பல்வேறு அடக்குமுறைகளை மேற்கொண்டது. இக்கட்டுரை, காலனித்துவ ஆட்சிக் காலத்தில், தமிழ்நாட்டில் வெளிவந்து தடை செய்யப்பட்ட தமிழ் மற்றும் ஆங்கில நூல்களை அதன் தேசிய உணர்வு, அதன் காலனித்துவ எதிர்ப்பு வாதங்கள் மற்றும் அதற்குப்பின் உள்ள அரசியல் ஆகியவற்றுக்காக ஆய்ந்து பதிவு செய்யும் ஓர் முயற்சியாகும். பாரதி மற்றும் ராஜகோபாலச்சாரி ஆகியோரின் படைப்புகள் காலனித்துவ ஆட்சியால் தடை செய்யப்பட்டது குறித்து கல்விப் புலத்தில் நன்கறியப்பட்டுள்ளதால், அறியப்படாத அல்லது குறைவாக அறியப்பட்ட ஆளுமைகளின் படைப்புகளில் இக்கட்டுரை கவனம் செலுத்துகிறது.

காலனித்துவ ஆட்சியின்போது தடை செய்யப்பட்ட நூல்கள் தமிழ்நாட்டின் காலனித்துவ எதிர்ப்பு வரலாற்றுச் சித்திரத்தை கட்டமைக்க முயன்றன. அந்நூல்கள், காலனித்துவத்துக்கு எதிரான கட்டபொம்மனின் போராட்டம், 1857 சிப்பாய் கலகம், மாப்பிள்ளா அல்லது மலபார் கலகம் ஆகியவற்றை வரலாற்று ஆவணமாக்கவும், மேலும்

கிளர்ச்சியாளர்கள் மற்றும் காந்தியவாதிகள் ஆகியோரின் சமகால போராட்டங்களை தமிழில் ஆவணப்படுத்தவும் முயற்சி செய்தன. அவை கட்டுரை வடிவில் மட்டுமல்லாமல் கவிதைகளாகவும் இருந்தன. இயக்கங்கள் மற்றும் கிளர்ச்சிகள் குறித்த பொதுவான விவரங்கள் தவிர்த்து, அந்நூல்கள் தனிப்பட்ட தலைவர்களையும் அவர்தம் வீரதீரச் செயல்களையும் மையப்படுத்தி இருந்தன. மகாத்மா காந்தி, பகத்சிங், சுபாஷ் சந்திர போஸ், ஜவஹர்லால் நேரு, மோதிலால் நேரு, பால கங்காதர திலகர், மற்றும் லாலா லஜபதிராய் போன்ற தலைவர்களின் போராட்டங்கள் குறித்து தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தின.

கட்டபொம்மன்

கட்டபொம்மு என்னும் நூல் 1790களில் காலனித்துவ ஆட்சியில் கட்டபொம்மன் நடத்திய போராட்டங்களைக் குறித்து விவரிக்கிறது. T.M.சுப்பிரமணியம் அவர்களால் எழுதப்பட்ட அந்நூல், மதராஸ் ஜார்ஜ்டவுனில் அமைந்த நவயுகப் பிரசுராலயம் பதிப்பகத்தால் 1940இல் பதிப்பிக்கப்பட்டது. அதே வருடம், அந்நூல் ஆங்கிலேயரால் தடை செய்யப்பட்டது. அந்நூல் 21 அத்தியாயங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அதில், பாளையக்காரர் முறையின் வரலாறு, 18ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் கருநாடக பிரதேசங்களில் நிலவிய அரசியல் சூழல்கள், கிழக்கிந்திய கம்பெனிக்கு கட்டபொம்மன் வரி கொடுக்க மறுத்தது, காலனித்துவ ஆட்சிக்கு எதிரான அவருடைய போராட்டம், அதைத் தொடர்ந்து அவரது கைது மற்றும் தூக்கிலிடப்படுதல், இவற்றோடு ஊமைத்துரை என்று அழைக்கப்பட்ட அவரது சகோதரர் துரைசிங்கத்தின் தூக்குத் தண்டனை ஆகியவற்றைக் குறித்து ஆசிரியர் விரிவாக விவாதித்திருக்கிறார்.

இந்நூலை கட்டபொம்மனின் உண்மையான வரலாற்றைப் பதிவு செய்ய வேண்டும் என்ற நோக்கத்திலேயே தான் எழுதியிருப்பதாக நூலாசிரியர் கூறுகிறார்; மேலும் அவர், நம்மிடையே நிலவும் கட்டபொம்மன் கதையின் 'பிரபலமான' பதிப்பை தான் தவிர்த்து விட்டதாகவும், ஏனெனில் அவை உண்மையான வரலாற்றுப் பதிவுகள் அல்ல என்றும் அவர் சொல்கிறார்.

மலபார் புரட்சி

மலபார் புரட்சி என்னும் தமிழ் நூல், மலபார் விவசாயக் கிளர்ச்சி என்ற பெயரில் சௌமியேந்திரநாத் தாகூர் ஆங்கிலத்தில் 1937இல் எழுதிய நூலாகும். பின்னர், A.இளங்கோவன் என்பவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு 1940இல் மதராஸ், தெற்கு கூவம் சாலையில் அமைந்துள்ள லோகசக்தி அலுவலகத்தால் பிரசுரிக்கப்பட்டது.

மலபார் புரட்சி என்பது, நிலப் பிரபுத்துவ முறை மற்றும் காலனித்துவ முறை ஆகியவற்றுக்கு எதிரான ஓர் உழவர் கிளர்ச்சி என்று அந்நூல் கூறுகிறது. ஒருபுறம், முதலாளித்துவம், காலனித்துவம், மற்றும் நிலப் பிரபுத்துவம் ஆகியவற்றை விமர்சிக்கும் அந்நூல் மறுபுறம், கம்யூனிச ரஷ்யாவின் பொருளாதார முறையை புகழ்ந்துரைக்கிறது.

இந்தியர்கள் மகிழ்ச்சியான மற்றும் அமைதியான ஓர் வாழ்க்கையை வாழ்வதற்கான வழியில் முதலாளித்துவமும் ஆங்கிலேய ஏகாதிபத்தியமும் ஓர் தடையாக இருப்பதாக அந்நூலின் ஆசிரியர் கூறுகிறார். மேலும், பொதுவுடைமைப் புரட்சி ஒன்று மட்டுமே அவற்றை விரட்டி புதிய சகாப்தத்துக்கான அடித்தளத்தை அமைக்க முடியும் என்று கருதுகிறார்.

நூலின் ஆசிரியர் மலபார் புரட்சியினால் அதிகம் கவர்ந்திழுக்கப்பட்டிருக்கிறார் என்பது

தெரிகிறது. மேலும், மலபார் கிளர்ச்சி குறித்து முறையான வரலாறு எதுவும் இதுவரை எழுதப்படவில்லை என்றும், அதிகாரப்பூர்வ பதிப்பு மட்டுமே கிடைப்பதாகவும், அதிலும் அக்கிளர்ச்சி ஓர் 'வகுப்புவாத தாக்குதல்' என்றே சித்தரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகிறார். அரசின் கூற்றை அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வ தரவுகளைக்கொண்டே இந்நூல் மறுக்கிறது. முதலாவதாக, அரசாங்கம் வழங்கும் அதிகாரப்பூர்வ தகவலின்படி கலவரக்காரர்களால் கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை 500 முதல் 600 வரை என்றும் கிளர்ச்சி பல மாதங்களுக்கு நீடித்தது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் கிளர்ச்சி நடந்த இடமான தெற்கு மலபாரில் அச்சமயத்தில் இந்து மக்கள் தொகை நான்கு இலட்சமாக இருந்தது. மேலும் அரசாங்கத் தரவுகளின்படி, அங்கு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் இருந்த இஸ்லாமியர்கள் ஒன்று அரசு அதிகாரிகளாக அல்லது இராணுவ ஆதரவாளர்களாக இருந்திருக்கிறார்கள்.

இரண்டாவதாக, கிளர்ச்சியின்போது அசுத்தப்படுத்தப்பட்ட கோவில்களின் எண்ணிக்கை (9 சதவிகிதம்), தொடப்படாத, தொந்தரவு செய்யப்படாத கோவில்களின் எண்ணிக்கையைவிடக் குறைவு. மூன்றாவதாக, 1920இல் மஞ்சேரியில் நடந்த மலபார் மாவட்ட அரசியல் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட இரண்டு தீர்மானங்களில் ஒன்று ஒத்துழையாமை இயக்கத்திற்கான ஆதரவு, மற்றொன்று குத்தகை சீர்திருத்தம் குறித்தானது. இது அப்பகுதியில், குத்தகை மற்றும் உழவர் தொடர்பான மற்ற பிரச்சினைகளில் நிலவிய பதட்டத்தின் அளவைக் குறிப்பிடுகிறது.

"மாப்பிள்ளா கிளர்ச்சியாளர்கள் வகுப்புவாத அடிப்படையில் எப்போதும் இந்துக்களை தாக்கவோ, கொள்ளையடிக்கவோ செய்ததில்லை," என்று அப்போதைய குத்தகை இயக்கத்தின் தலைவரான நாராயண மேனன் கூறியதாக தாகூர் தன் நூலில் தெரிவிக்கிறார். சிலர் இந்து வீடுகளை கொள்ளையடிப்பதில் ஈடுபட்டது போன்ற தவறான சில சம்பவங்கள் நடைபெற்றபோது அது கிளர்ச்சித் தலைவர்களின் பார்வைக்கு கொண்டுவரப்பட்டு, அவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட்டனர். சில சமயங்களில், குற்றம் செய்தவர்களின் கைகளை வெட்டி எறிவது என்ற அளவிற்கு தண்டனை இருந்தது; மேலும், கொள்ளையடிக்கப்பட்டவை உடனடியாக அதற்குரியவர்களிடம் திருப்பி அளிக்கப்பட்டன.

இந்நூல், முக்கியமான தகவல்களை தரவுகளுடன் அளித்ததோடு, மலபார் கலகம் வகுப்புவாதத்தின் அடிப்படையிலானது அல்ல நிலப்பிரபுத்துவ (ஜமீன்தாரி) முறைக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான ஒன்றே என்று ஆக்கப்பூர்வமான வாதத்தை முன்வைத்தது. இந்நூல் குறித்த அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்த அரசு அதிகாரி, நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாளர் ஆங்காங்கே இடைச் செருகலாக தன் சொந்த கருத்துக்களை சேர்த்து சில பத்திகளை மூலப் பதிப்பிலிருந்து மாற்றி மொழியாக்கம் செய்திருப்பதாக தன் அறிக்கையில் கூறியிருக்கிறார். நூலின் ஆங்கிலம் மற்றும் தமிழ் பதிப்புகள் இரண்டுமே ஆங்கிலேய அரசால் தடை செய்யப்பட்டது.

மிதவாதப் பார்வை

தமிழ்நாட்டின் முதல் பெண் பத்திரிகையாளரான V.பாலாம்பாள் அவர்களின் இராஜ்ய சேவையும் இந்தியரும் என்னும் நூல் ஓர் முக்கியமான படைப்பாகும். அது 1917இல் அவரால் தமிழில் எழுதப்பட்டு மதராசின் ஸ்ரீனிவாச வரதாச்சாரி அச்சகத்தால் பிரசுரிக்கப்பட்டது. அந்நூல் பல்வேறு அரசுத் துறைகள் குறித்த முக்கிய விவரங்களையும்,

வேலைவாய்ப்பு குறித்த செய்திகளையும் வழங்கியது. மேலும், ஆட்களை பணிக்கு எடுத்தல், சம்பளங்கள், பதவி உயர்வுகள் மற்றும் பலவற்றின் அடிப்படையில் இந்தியப் பணியாளர்களுக்கும், சக ஐரோப்பியப் பணியாளர்களுக்கும் இடையில், காட்டப்படும் பாகுபாடுகள் குறித்த செய்திகளையும் இந்நூல் கொண்டிருந்தது.

தன் நூலில், பாலாம்பாள் அரசுக்கு பல பரிந்துரைகளை செய்வதோடு, தன் வாதத்திற்கு வலுவூட்ட பல்வேறு அதிகாரப்பூர்வ தகவல்களையும் அளித்து, அரசுப் பணிகளில் இருக்கும் இந்தியர்கள் வேற்றுமையுடன் நடத்தப்படுவதை உடனடியாக சரி செய்யுமாறு அரசைக் கேட்கிறார்.

சுரேந்திரநாத் பானர்ஜி மற்றும் தாதாபாய் நௌரோஜி போன்ற மிதவாதத் தலைவர்கள் வலியுறுத்தியதுபோல, அவரும் அரசுப் பணிகளில் இந்தியர்களுக்கு அதிகப் பங்கை அளிக்க வேண்டும், குறிப்பாக அதிகாரிகள் அந்தஸ்தில் அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறார். தன் வாதம் ஒன்றில், பெரும்பான்மையான ஆணையர்கள், அரசு குடிமைப் பணி ஆர்வலர்களுக்கான வயது வரம்பை 22–24 என்பதிலிருந்து, 17–19 ஆக குறைக்குமாறு அரசுக்கு பரிந்துரை செய்தது குறித்து அதிருப்தி தெரிவிக்கிறார்.

வயது வரம்பு 17–19 என்கிற விதி, 1878 முதல் 1891ஆம் வருடம் வரை இருந்த காரணத்தால் வெறும் 2 சதவிகிதம் இந்தியர்களே இந்திய குடிமைப்பணித் தேர்வுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று நூலில் அவர் குறிப்பிட்டிருக்கிறார். மேலும், 1892 முதல் 1912 வரையிலான காலகட்டத்தில் வயதுவரம்பு 22–24 என்று இருந்தபோது 4 சதவிகிதம் இந்தியர்களே தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்றும் குறிப்பிடுகிறார். ஆகவே, ஆணையர்களின் பரிந்துரைகளை ஏற்று மீண்டும் பழையபடி வயது வரம்பை குறைத்தால் அது இந்தியர்களின் வேலைவாய்ப்புகளைப் பாதிக்கும், எனவே அவ்வாறு செய்யக்கூடாது என்று அரசுக்கு வேண்டுகோள் விடுக்கிறார்.

மேலும் இதேபோல் மத்திய மற்றும் மாகாணங்களின் கல்வித்துறை, காவல்துறை, மருத்துவத்துறை, சுகாதாரத்துறை, கணக்கெடுப்புத்துறை, சிறை நிருவாகங்கள் துறை, சுரங்கத்துறை, நாணய உற்பத்தித் துறை, தபால் மற்றும் தந்தித் துறை, நுண்ணுயிரிகள் ஆராய்ச்சித் துறை, வனத்துறை மற்றும் பல துறைகளில் உள்ள பணிகளில் காணப்படும் முரண்பாடுகளைக் குறித்து தீவிர ஆய்வு மேற்கொண்டிருக்கிறார்.

அவர் பிரிட்டனின் மற்ற காலனி நாடுகளில் நிலவும் சம்பளங்கள் மற்றும் ஆட்சேர்ப்பு குறித்து ஆய்வு செய்து, அவற்றை இந்தியாவுடன் ஒப்பிட்டிருக்கிறார். மேலும், மதராஸ் மாகாணத்தின் தரவுகளையும் மற்ற இந்திய மாகாணங்களோடு ஒப்பிட்டிருக்கிறார். கீழ்நிலைப் பணிகள் இந்தியர்களுக்காக ஒதுக்கப்பட்டபோது, மற்ற உயர்நிலைப் பணிகள் பிரதானமாக ஆங்கிலேயரால் ஆக்கிரமிக்கப்படுகிறது என்று அவர் விமர்சிக்கிறார்.

அவர் ஓர் மிதவாதியும், தாதாபாய் நௌரோஜி அவர்களின் பெரிய அபிமானியும் ஆவார். ஒரு முறை, நௌரோஜியின் வாழ்க்கை வரலாற்றை தான் தமிழில் எழுத விரும்புவதாக விருப்பம் தெரிவித்திருந்தார், அது நடந்ததா என்பது தெரியவில்லை. தன் நூலில் சில பக்கங்களை நௌரோஜிக்காக அர்ப்பணித்து, அதில் அவருடைய பங்களிப்புகளைக் குறித்து புகழுரை அளித்திருக்கிறார்.

Poverty and un-British Rule in India என்ற பெயரில் ஆங்கிலத்தில் நௌரோஜி எழுதிய நூலின் முக்கியத்துவத்தைக் குறித்து பாலாம்பாள் தன் நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

1902இல் பதிப்பிக்கப்பட்ட அந்நூல், ஒவ்வொரு வருடமும் இந்தியாவிலிருந்து பிரிட்டனுக்கு 20 கோடி ரூபாய் அளவில் நமது பொருளாதாரம் எடுத்துச் செல்லப்படுவது குறித்து அம்பலப்படுத்தியது; அச்சமயத்தில், சம்பளங்கள் மற்ற நடவடிக்கைகளுக்கான செலவுகள் என்கிற பெயரில் இச்சுரண்டல் நடைபெற்றது.

காங்கிரஸ் கட்சி, மிதவாதிகள் தீவிரவாதிகள் என்று இரு பிரிவாக பிளவுபட்டது குறித்து பாலாம்பாள் தனது அதிருப்தியை வெளிப்படுத்துகிறார். நௌரோஜியின் முயற்சிகளுக்குப் பின்னும் காங்கிரஸ் பிளவுபட மிதவாதிகளே காரணம் என்று குற்றம் சாட்டுகிறார். தீவிரவாதிகள் குறித்த மிதவாதிகளின் பார்வை பற்றிய புரிதலை இந்நூல் அளிக்கிறது. குறிப்பாக, மாகாணத்தின் இப்பகுதியில், இந்தியர்களை அரசுப் பணிகளில் சேர்த்துக் கொள்ளவும், அவர்களுடைய குறைகளை நிவர்த்தி செய்யவும் மிதவாதிகள் எடுத்த முயற்சிகள் மற்றும் பேச்சு வார்த்தைகள் குறித்து இந்நூல் பதிவு செய்கிறது.

தீவிரவாதத் தலைவர்கள்

லாலா லஜபதி ராயின் வாழ்க்கை வரலாறும், அவருடைய மொழிபெயர்க்கப்பட்ட கட்டுரைகளும் சேர்க்கப்பட்டு, லாலா லஜபதி ராய் அவர்கள் சரித்திரமும், கட்டுரைகளும் என்கிற பெயரில் தமிழில் ஓர் குறுநூலாக மதுரை விவேகபானு பதிப்பகத்தால் 1907இல் பதிப்பிக்கப்பட்டது. லஜபதி ராயின் கட்டுரைகள் ஏற்கனவே மொழிபெயர்க்கப்பட்டு சுதேசமித்ரன் நாளிதழில் வெளியிடப்பட்டிருந்தன.

அந்நூல் குறிப்பாக அவருடைய ஆரம்பகால வாழ்க்கை, கல்வி, மற்றும் அரசியல் நிலைப்பாடு குறித்தே பேசியது. அவருடைய துணிவையும், பேச்சாற்றலையும் பாராட்டியது. நில உச்சவரம்பு சட்டத் திருத்த மசோதா மற்றும் குடியுரிமைச் சட்டம் ஆகியவற்றைக் குறித்து அவர் எழுதிய கட்டுரைகளும், மிதவாதிகள் குறித்த அவருடைய விமர்சனமும் அந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்திய தேசிய காங்கிரஸின் ஆண்டு கூட்டம் 1917இல் கொல்கத்தாவில் நடைபெற்றபோது அங்கு பாலகங்காதர திலகர் ஆற்றிய உரை தமிழில் நமது கோரிக்கை என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டு, மதராசின் சன்ஸ் ஆப் இந்தியா நிறுவனத்தால் 1918இல் பதிப்பிக்கப்பட்டது.

புரட்சியாளர்கள்

பகத் சிங் குறித்த நூலான சர்தார் பகத் சிங், C.S.வேணு அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. அதன் பதிப்பாளர் யார் என்று அறியப்படவில்லை. ஆனால் அது பதிப்பிக்கப்பட்ட இடம் வேப்பேரி, சென்னை, மற்றும் பதிப்பிக்கப்பட்ட ஆண்டு 1931 ஆகும். ஆங்கிலத்தில் Jatin Das: The Martyr in English, தமிழில் உண்ணாவிரதத்தால் உயிர் நீத்த ஜத்தின் தாஸ் ஆகியவை C.S.வேணுவின் மற்ற படைப்புகள் ஆகும். ஐம்பது பக்கங்கள் கொண்ட அந்நூல், பகத் சிங்கின் வாழ்க்கை வரலாற்று குறுநூல் ஆகும். அந்நூல், 'குழந்தைப் பருவமும் ஆரம்பகால தாக்கங்களும்', 'தாரையின் முழக்கம்', 'விசாரணையும் தண்டனையும்', 'அறைகூவல் விடப்பட்ட அரசாணை', 'தியாகம்', மற்றும் 'அடிப்படைகள்' என ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

பகத் சிங்கின் தொடக்ககால வாழ்க்கை குறித்தும், ஜாலியன்வாலாபாக் படுகொலை சம்பவமும் அதன் பின்விளைவுகளும் அவருடைய வாழ்க்கையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதையும் ஆசிரியர் நூலில் விவரிக்கிறார். தங்கள் மகன் இயல்பான

வாழ்க்கைப் பாதையிலிருந்து விலகிச் செல்வதை உணர்ந்து கொண்ட பகத்சிங்கின் தந்தை கிஷன் சிங், தீவிரவாதப் போக்கு தலைவரான லாலா லஜபதி ராயை சந்தித்து அதுகுறித்து ஆலோசனை செய்தார்; இந்நிகழ்வுக்குப் பின்னரே, ராய் சைமன் குழு கிளர்ச்சியின்போது போலீஸ் தடியடியில் கொல்லப்பட்டார்.

லஜபதி ராயின் அறிவுரைப்படி, கிஷன் சிங் தன் மகன் நேசித்து வந்த பெண்ணை அவருக்குத் திருமணம் செய்து வைக்க முடிவு செய்தார். ஆனால் பகத் சிங்கிற்கு வேறு எண்ணம் இருந்தது; ஆகையால் தந்தை முன்வைத்த விஷயத்தை மறுத்து விட்டார். அடுத்த அத்தியாயத்தில், பகத்சிங்கும், பதுக்கேஷ்வர் தத் அவர்களும் நாடாளுமன்றத்தை வெடிவைத்து தகர்க்க முயன்ற நிகழ்வைக் குறித்து C.S.வேணு விரிவாக விவரிக்கிறார்.

பகத் சிங் உறுப்பினராக இருந்த அமைப்பான, இந்துஸ்தான் குடியரசுப் படையின் புரட்சியாளர்கள், ஃபிரெஞ்சு புரட்சி தத்துவவாதிகளால் ஈர்க்கப்பட்டவர்களாக இருந்தனர். நாடாளுமன்றத்தில் அவர்கள் பயன்படுத்திய குறைந்த தீவிரம் கொண்ட குண்டு எவரையும் குறி வைக்கவில்லை; மேலும் அவர்கள் எறிந்த துண்டுப் பிரசுரங்களில், ஃபிரெஞ்சு அரசின்மை கோட்பாட்டாளரும், தியாகியுமான வில்லன்ட் அவர்களின் பின்வரும் மேற்கோள் அச்சிடப்பட்டிருந்தது:

"காது கேளாதோரை கேட்கச் செய்ய, உரத்து சத்தமிட வேண்டும்"

அதன்பின், அவருடைய தோழர்களோடு அவரும் கைது செய்யப்பட்டு, மற்ற அரசியல் கைதிகளைப்போலவே, சிறை அதிகாரிகளால் மிக மோசமான கொடுமைகளுக்கும், இழிவான நடவடிக்கைகளுக்கும் உள்ளாக்கப்பட்டார். பம்பாயிலிருந்து வெளிவந்த யங் லிபரேட்டர் என்கிற பத்திரிகை, "ஆசனவாயில் விரலை நெம்புதல் மற்றும் பிட்டத்தில் தொடர்ந்து உதைத்தல்," என்று பகத்சிங்கிற்கு நேர்ந்தவற்றை குறித்து எழுதியிருந்ததாக ஆசிரியர் கூறுகிறார்.

பகத்சிங்கும் மற்றவர்களும் அரசியல் கைதிகள் இழிவாக நடத்தப்படுவதைக் கண்டித்து உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கினார்கள். உலகில் அதற்குமுன் ஐரிஷ் தேசியவாதி ஒருவர் 98 நாட்கள் இருந்ததே மிக நீண்ட உண்ணாவிரதப் போராட்டம்; அதைக் கடந்து அந்த உண்ணாவிரதப் போராட்டம் 116 நாட்களுக்கு நீடித்தது. அது பகத்சிங் மற்றும் தோழர்களின் உடலை பலவீனமாக்கியது என்கிறார் ஆசிரியர்.இறுதியாக, இந்திய தேசிய காங்கிரஸ் தலையிட்டு, தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி, அப்பிரச்சினையை அரசிடம் கொண்டு செல்வதாக உறுதியளித்தது.

தீர்மானத்துக்குப்பின், கிஷன் சிங் சிறைக்குச் சென்று பகத்சிங்கை சந்தித்தார். தொடக்கத்தில், அவரை சந்திக்கத் தயங்கிய கிஷன் சிங், பின்னர் அங்கு சென்றபோது அச்சந்திப்பு இரண்டு மணி நேரத்துக்கும்மேல் நீடித்தது. கிஷன் சிங்கின் இடைவிடாத வற்புறுத்தலுக்குப்பின், பகத்சிங் உண்ணாவிரதத்தை தற்காலிகமாக கைவிட ஒப்புக்கொண்டார், என்று சொல்கிறார் C.S.வேணு.

பின்னர் அந்நூல், பகத்சிங்குடன் அவரது சகாக்களான சுக்தேவும் ராஜகுருவும் தூக்கிலிடப்பட்ட சம்பவத்துக்கு முன்பும், பின்பும் நடந்த நிகழ்வுகள் குறித்து விரிவாக விவரிக்கிறது. அம்மூன்று தியாகிகளின் மறைவுக்குப் பிறகு, பஞ்சாப், கராச்சி, லாகூரில் எண்ணிலடங்கா போராட்டங்களும், பேரணிகளும் நடத்தப்பட்டு, போராட்டக்காரர்கள்

அவ்விடங்களில் "பகத்சிங் வாழ்க, காந்தி ஒழிக," என்றும் முழக்கமிட்டதாக ஆசிரியர் கூறுகிறார்.

இறுதியாக, பகத்சிங் 10 வயதேயான தன் இளம் சகோதரனுக்கு, "உன் துணிவை இழந்து விடாதே" என்று அறிவுரை கூறி எழுதிய கடைசி கடிதத்துடன் நூலை முடிக்கிறார். ஆசிரியர், பகத்சிங் மீது மிகுந்த மதிப்பு கொண்டிருக்கிறார், ஆயினும் அவருடைய முறையை ஏற்க மறுக்கிறார். வன்முறை வழிகளை விட காந்திய முறையிலான அகிம்சா வழிப் போராட்டமே திறன் உடையதாகவும், பயனுள்ளதாகவும் இருக்கும் என்று அவர் கூறுகிறார்.

செய்யுள் வடிவில், சர்தார் பகத்சிங் தேசிய சங்கீர்த்தனம் என்று தமிழில் மற்றொரு நூல் எழுதப்பட்டுள்ளது. V.R.ஏழுமலை பிள்ளை என்பவரால் 1931இல் மதராஸ் வால்டாக்ஸ் சாலையில் இருந்த ஸ்ரீ தம்பிரான் அச்சகத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. நூலின் ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை என்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நூலின் தலைப்பு பகத்சிங் என்று இருந்தாலும் "வந்தே மாதரம், மகாத்மா காந்திக்கு ஜே" என்ற வாசகங்களுடனே நூல் தொடங்கப்பட்டுள்ளது. 19 பக்கங்கள் மட்டுமே கொண்ட இக்குறும்பதிப்பு, பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம் மற்றும் அறுசீர் ஆசிரிய விருத்தம் என்கிற வடிவில் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் சைமன் குழுவிற்கு ஆதரவளிப்பதற்காக நீதிக்கட்சியை குற்றம் சாட்டுகிறார்.

நீதிக்கட்சி ஆங்கிலேயருடன் இணைந்து சதி செய்து சைமன் குழுவைக் கொண்டு வந்ததாகவும் காவல்துறையின் ஆணவப் போக்கின் காரணமாகவே லாலா லஜபதி ராயின் மரணம் நிகழ்ந்ததாகவும், இச்சம்பவம் பகத்சிங்கை கோபமூட்டி, நாடாளுமன்றத்தின்மீது குண்டெறிய வித்திட்டதாகவும் ஆசிரியர் கூறுகிறார்.

அச்செய்யுள், பகத்சிங் மற்றும் சகாக்கள் தூக்கிலிடப்பட்டதற்காக துக்கம் தெரிவிக்கிறது. மேலும், மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கம், அந்நியத் துணிகளை நிராகரித்தல், மற்றும் சட்ட மறுப்பு இயக்கம் போன்ற மகாத்மா காந்தியின் போராட்டங்களை புகழ்கிறது. ஆசிரியர் தன் செய்யுளில் ஆங்கிலேயரை இராவணனாகவும் மகாத்மா காந்தி மற்றும் சகாக்களை இராம, இலட்சுமணன் மற்றும் தேவர்களாகவும் சித்தரித்துள்ளார்.

ஆசிரியர், காந்தியவழி அறப்போராட்டங்களில் மக்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுத்தும், பாரத மாதாவை புகழ்ந்தும் செய்யுளை முடிக்கிறார். C.S.வேணு அவர்களைப்போல இந்நூலாசிரியரும் மகாத்மா காந்தியை வெகுவாகப் புகழ்ந்துள்ளார். நூலாசிரியர் நீதிக்கட்சி மற்றும் அதன் அரசியலின் தீவிர விமர்சகராகவும் மகாத்மா காந்தி மற்றும் காங்கிரஸின் தீவிர ஆதரவாளராகவும் உள்ளார்.

பகத் சிங் குறித்த மற்றொரு நூலான தேசப்பதி கீதங்கள் R.P.S.மணி என்பவரால் 1931இல் மதராசில் பிரசுரிக்கப்பட்டது. இதுவும் முந்தையது போன்றே, ஓர் செய்யுள் வடிவிலான 19பக்க குறும்பதிப்பு. தமிழில் பகத்சிங் குறித்த மற்ற நூல்கள்: சர்தார் பகத்சிங்; மன்னார்குடி கணபதி அச்சகத்தால் பிரசுரிக்கப்பட்ட இந்நூலின் ஆசிரியர் யாரென்று தெரியவில்லை; லாகூர் பகத் சிங் தூக்கு தண்டனை, பகத் சிங் கொலைச் சிண்டு, பகதூர் பகத்சிங் அல்லது தேசாபிமான திலகம் தூக்குமாலை, பகதூர் பகத்சிங் தேசாபிமான திலகம்.

தடை செய்யப்பட்ட பகத்சிங் குறித்த படைப்புகள் மற்றும் பகத்சிங் எழுதிய படைப்புகள் தவிர்த்து நாகப்பட்டினம் அருகே ஓர் சம்பவம் நடந்தது; பகத்சிங் மற்றும் அவருடைய சகாக்களின் நிழற்படங்களை சொர்க்கத்திற்கு எடுத்துச் செல்வதாக சிலர் ஏந்திச் செல்ல, அவை சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டு அரசிடம் ஒப்படைக்கப்பட்டது.

சுபாஷ் சந்திர போஸ் குறித்து எழுதப்பட்ட பாபு சுபாஷ் சந்திர போஸ் என்னும் நூல் T.S.சொக்கலிங்கம் என்பவரால் மதராசில் உள்ள லட்சுமி அச்சகத்தில் 1933இல் அச்சிடப்பட்டு, பின்னர் அரசால் கைப்பற்றப்பட்டது. 1933இல் சுபாஷ் சந்திர போஸ் இலண்டன் அரசியல் மாநாட்டில் நிகழ்த்திய உரையின் நகலும் கைப்பற்றப்பட்டது. இரண்டு படைப்புகளும், அவர் ஆயுதப் போராட்டம் தொடங்குவதற்கு முன்பே எழுதப்பட்டவையாகும்.

மகாத்மா காந்தி மற்றும் அவருடைய கூட்டாளிகள்

மகாத்மா காந்தி குறித்து எழுதப்பட்டதும், மகாத்மா காந்தியால் எழுதப்பட்டதும் என மிகப்பெரும் எண்ணிக்கையிலான படைப்புகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. காந்தி குறித்த படைப்புகளில், செய்யுள் அல்லது பாடல் நடையில் எழுதப்பட்டவையே அதிகம் இருந்தன. அப்படியான படைப்புகளில் N.K.A.அப்துல் ரகுமான் சாஹிப் அவர்கள் எழுதிய காந்தி பாட்டு என்னும் நூல், நாகை சரவண முதலியார் என்பவரால் சென்னை, திருவொற்றியூர், கலைமகள் பதிப்பகத்தில் 1929இல் பதிப்பிக்கப்பட்டது. இது 10 பக்கமே கொண்ட சிறிய படைப்பு.

ஒற்றுமையை வலியுறுத்தி தன் நூலைத் தொடங்கியிருக்கும் ஆசிரியர், அகிம்சை, அந்நிய பொருட்களை நிராகரித்தல், மற்றும் மதுபானத் தடை போன்றவற்றுக்கு மகாத்மா காந்தி அளிக்கும் முக்கியத்துவத்திற்காக அவரைப் பாராட்டுகிறார். நூலாசிரியர் ஆங்கிலேயரை கம்சனாகவும் மகாத்மா காந்தியை கிருஷ்ணனாகவும் சித்தரித்திருக்கிறார். இப்பாடலின் மூலம், மகாத்மா காந்தியைக் கைது செய்து ஆறு வருடங்கள் சிறையில் வைத்ததற்காக ஆங்கிலேயரை கண்டனம் செய்கிறார்.

மௌலானா முஹம்மது அலி மற்றும் சௌகத் அலி ஆகியோரின் பங்களிப்புகளுக்காக அவர்களையும் பாராட்டியிருக்கிறார். தன்னாட்சியை அடைய காந்தியின் சேவகர்கள் தங்கள் காதி உடைகளை ஆயுதமாக ஏந்தி கைது செய்யப்படுவதற்கும் ஆயத்தமாக இருக்கிறார்கள், என்று ஆசிரியர் தன் கடைசி சரணத்தில் கூறுகிறார்.

மகாத்மா காந்தியின் விருப்பம் நிறைவேறுக என்னும் தலைப்பிலான மற்றொரு சிறிய நூல் E.S.சிவராமலிங்கம் பிள்ளை அவர்களால் அம்பாசமுத்திரம் ஸ்ரீ ராமகிருஷ்ணா அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. நூலின் ஆசிரியர் பெயர் மற்றும் பதிப்பிக்கப்பட்ட ஆண்டு ஆகியவை குறித்த விவரங்கள் நூலில் இல்லை. இந்நூல் அரசால் தடை செய்யப்பட்டது.

மகாத்மா காந்தி அரெஸ்ட்டு பாட்டு (மகாத்மா காந்தியின் கைது குறித்த பாடல்கள்) மற்றும் V.நடராஜப் பிள்ளை எழுதிய மகாத்மா காந்தி கீர்த்தனாம்ருதம் (மகாத்மா காந்தி மீதான பாடல்கள்) ஆகியவை தடை செய்யப்பட்ட காந்தி குறித்த மற்ற தமிழ் படைப்புகள் ஆகும்.

மகாத்மா காந்தி எழுதிய ஹிந்த் ஸ்வராஜ் அல்லது இந்தியன் ஹோம் ரூல்ஸ் என்னும் நூல் மதராஸ் நடேசன் & கோ நிறுவனத்தால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, பின்னர் அரசால் கைப்பற்றப்பட்டது. மனோரஞ்சனி அச்சகத்தால் 1932இல் பதிப்பிக்கப்பட்ட மோதிலால் நேரு குறித்த பண்டிட் மோதிலால் நேரு கீதம் மற்றும் பண்டிட் ஜவஹர்லால் நேரு சுயராஜ்ய திலகம் என்னும் ஜவஹர்லால் நேரு குறித்த நூலும் அதே ஆண்டில் அச்சிடப்பட்டது.

இரண்டு நூல்களின் ஆசிரியர் மற்றும் பதிப்பாளர் யார் என்பது தெரியவில்லை. இவை தவிர காந்தியவழி போராட்டங்கள் குறித்து ஏராளமான நூல்கள் தமிழில் பதிப்பிக்கப்பட்டன, அவை ஒத்துழையாமை, உப்பு சத்தியாகிரகம், காங்கிரஸ் தொண்டர் மறியல் பாட்டு, மற்றும் பலவாகும்.

முடிவுரை

மேற்குறிப்பிடப்பட்ட படைப்புகள் தகவல்களுக்கான பெரும் ஆதாரங்களாக இருந்தன. மேலும், தடை செய்யப்பட்ட மற்றும் தடை செய்யப்படாத, சில நூல்கள் அப்போதைய அரசியல் சூழ்நிலைகளை தெளிவாக ஆய்வு செய்தன.

குறிப்பாக, பாலாம்பாள் அவர்களின் படைப்பு தரவுகளைக் குறித்து மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. அவர் தனக்கு கிடைத்த தரவுகளை ஆய்வு செய்து காலனித்துவ பணிகள் குறித்த ஓர் தெளிவான பார்வையை அளித்திக்கிறார். சௌமியேந்திரநாத் தாகூரின் படைப்பு முக்கியமான ஒன்று. மலபார் கலகத்தில் வகுப்புவாத நோக்கம் இருந்ததாகக் கூறும் அதிகாரப்பூர்வ பதிப்பை புறக்கணிக்கும் அவர், விரிவான தகவல்கள் மற்றும் ஆய்வுகளுடன் தன் தரப்பு வாதத்தை ஆதாரப்பூர்வமாக முன்வைக்கிறார்.

கலகம் குறித்த அவருடைய மார்க்சிய விளக்கம் நம்பத் தகுந்தவை ஆகும். காந்திய சித்தாந்தவாதியான C.S.வேணு, பகத்சிங் மற்றும் தாஸ் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளை படைத்திருக்கிறார். ஒரு காந்தியராக, காந்தியின் இயலாமைகள் குறித்து பரிந்து பேசினாலும், அப்போதைய பஞ்சாப் மாகாணத்தில் நிலவிய காந்திக்கு எதிரான மக்கள் மனநிலையை அவர் நேர்மையாக ஆவணப்படுத்தியிருக்கிறார்.

கட்டபொம்மு குறித்த T.M.சுப்பிரமணியம் அவர்களின் படைப்பு வெறும் பாஞ்சாலங்குறிச்சி போரைப் பற்றிய உரையாடலாக இல்லாமல், அக்காலகட்டத்தின் வரலாற்றுப் பின்னணியையும் அது குறித்து தற்போது கிடைக்கும் அரசியல் தகவல்களையும் அளித்திருக்கிறார். வரலாற்று உணர்வு கொண்ட ஆசிரியர், வரலாற்று ஆதாரங்கள் இல்லாத தகவல்களை தான் நூலில் சேர்க்கவில்லை என்று கூறுகிறார். மற்ற ஆசிரியர்கள் சமகால நிகழ்வுகளையும், சற்று முன்காலத்து நிகழ்வுகள் குறித்தும் விவரித்தபோது, இவர் 140 வருடங்களுக்கு முன்பு நடந்த நிகழ்வுகளை வரலாற்றுப்படுத்த தேர்ந்தெடுத்திருக்கிறார்.

பெரும்பாலான படைப்புகளில் காந்தியின் பெயர் இடம் பிடித்துள்ளது. அவருக்கு அடுத்த இடத்தில் பகத்சிங் உள்ளார். செய்யுள் படைப்புகள் மிகைப்படுத்தப்பட்டவையாக இருந்தாலும் அவை வரலாற்றுத் தகவல்களை அளிக்கின்றன.

மற்றொருபுறம், காலனித்துவ ஆட்சி கருத்து வேற்றுமையான குரல்களை ஒடுக்க எடுத்த நடவடிக்கைகள் குறித்து இவற்றின் மூலம் நமக்கு தெரிய வருகிறது. வெலஸ்லி பிரபு 1799இல் அச்சு இயந்திரங்களுக்கு முன்தணிக்கை முறையைக் கொண்டு வந்தார். 1857க்குப் பிறகு ஆங்கிலேயர்கள் நேரடி அரசியல் கட்டுப்பாட்டை எடுத்துக்கொண்டபோது சட்டங்கள் தீவிரமாக்கப்பட்டன.

பத்திரிகைகள் மற்றும் நூல்கள் பதிவு சட்டம் 1867, வட்டார பத்திரிகை சட்டம் 1878 மற்றும் பத்திரிகை சட்டம் 1910 ஆகியவை சட்டத்தை மேலும் இறுக்கமாக்கி பத்திரிகை சுதந்திரத்தின் மீதான அதிகாரத்துவ கட்டுப்பாட்டை அதிகரித்தது. இக்கட்டுரையில் விவாதிக்கப்பட்ட பறிமுதல் செய்யப்பட்ட நூல்கள் அனைத்தும், இந்திய அரசின் நூல்கள் பதிவு சட்டம் 1867இன்கீழ் மதராஸ் அரசால் கைப்பற்றப்பட்டவை ஆகும்.

கடுமையான அரசியல் அழுத்தம் மற்றும் தணிக்கை முறைக்கு மத்தியில் எழுத்தாளர்கள் தங்களின் கருத்துவேற்றுமைக் குரல்களை பதிவு செய்ததோடு, தங்கள் செயலுக்கான பின்விளைவுகளையும் துணிச்சலுடன் எதிர்கொண்டிருக்கின்றனர். அவர்கள் மக்களிடையே தேச உணர்வையும், தேசியவாதிகளுக்கான ஓர் அரசியல் மேடையையும் உருவாக்க முயன்றிருக்கிறார்கள்.



9

ஆங்கிலேய ஆட்சியின்கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பொதுவுடைமை சிந்தனை:

காலனித்துவ தமிழ்நாட்டில் பொதுவுடைமைவாதிகளின் எழுத்துக்களுக்கான முக்கிய மேடை (1925-1945)

டாக்டர் வி.வெங்கட்ராமன்,
முன்னாள் முதல்வர்
இராஜபாளையம் இராஜீஸ் கல்லூரி

பொதுவுடைமை சித்தாந்தம் என்னும் கருத்தியல் மதராஸ் மாகாண மக்களுக்கு ஒன்றும் புதிதானதல்ல. அக்டோபர் புரட்சி 1917இல் ரஷ்யாவில் நடப்பதற்கும் முன்பே, சுப்பிரமணிய பாரதி தன் கவிதைகளில் இக்கருத்தியல் குறித்து வெளிப்படுத்தி இருக்கிறார்; விளாதிமிர் லெனின் அவர்களால் வலியுறுத்தப்பட்ட அதே கருத்தியல். "தனியொரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்", "முப்பது கோடி ஜனங்களின் சங்கம் முழுமைக்கும் பொதுவுடைமை, ஒப்பில்லாத சமயம் உலகத்திற்குப் புதுமை" என்று பாரதி கூறுகிறார்.

தமிழ் பொதுவுடைமை நாளிதழான ஜனசக்தி, தமிழ்நாட்டின் மக்கள்மீது பாரதி கொண்டிருந்த அன்பு மற்றும் மதிப்பை வெளிப்படுத்திய மேற்குறிப்பிடப்பட்ட அக்கவிதையின் சாராம்சத்தை 16 செப்டம்பர் 1939 அன்று வெளியான இதழில் மறுபதிப்பு செய்திருந்தது. "புதியதோர் உலகம் என்னும் கனவு மெய்ப்பட்டது", என்று ரஷ்யப் புரட்சியினை மகிழ்ந்து வரவேற்று 'புதிய ருஷ்யா' என்னும் கவிதையில் பின்வருமாறு பாடுகின்றார், "குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு, மேன்மையுறக் குடிமை நீதி, கடியொன்றெழுந்தது பார் குடியரசென்று."

தன் கவிதைகள் மற்றும் எழுத்துக்கள் வழியாக ஓர் மாபெரும் மாற்றம் குறித்து பாரதி கண்ட கனவினை இவ்வுலகம் புரிந்து கொள்ளவும் ஏற்கவும் செய்யவில்லை என்று ஜனசக்தி மேலும் கூறுகிறது. ரஷ்யாவின் அக்டோபர் மற்றும் நவம்பர் (1917) புரட்சிக்குப் பின்னர், பாரதியின் எழுத்துக்களில் மார்க்சிய சித்தாந்தம் அதிகரித்தது. அதுமுதல் இக்குடியரசின் மக்களை மனக்காட்சியில் நிறுத்தி மார்க்சிய சித்தாந்தத்தைக் குறித்து அவர்களை மேலும் தெரிந்து கொள்ளுமாறு தூண்டுகிறார்.

பொதுவுடைமை இலக்கியத்தின் ஆரம்பகால எழுத்துகள்

ரஷ்யாவில் தொடங்கப்பட்ட 'தி சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கம்' தன் கொள்கைகளை இந்தியா உட்பட உலகம் முழுவதும் பரப்ப முடிவு செய்தது. M.N.ராய், S.A.டாங்கே, மற்றும் சிங்காரவேலு ஆகியோர் இந்தியாவில் பொதுவுடைமையை பரப்பிய முன்னோடிகள் ஆவர். சோவியத் ஒன்றியத்தால் வழங்கப்பட்ட பொதுவுடைமை இலக்கிய எழுத்துக்கள் 1922 முதல் பிரித்தானிய இந்தியாவின் அனைத்து பகுதிகளுக்கும், புழக்கத்திற்கு அனுப்பப்பட்டன. S.A.டாங்கே அவர்களை ஆசிரியராகக் கொண்டு, பம்பாயிலிருந்து வெளியான மாதமிருமுறை இதழான தி சோசியலிஸ்ட், பொதுவுடைமை சிந்தனைகளை இந்தியாவுக்குள் இறக்குமதி செய்ய வழிவகை செய்த இந்தியாவின் முதல் தலைமுறை பொதுவுடைமைப் பத்திரிகையாகும். டாங்கே அவர்களே இந்தியாவில் பொதுவுடைமையை இயக்கும் ஆன்மாவாக இருந்திருக்கிறார்; மேலும் ஆஷ்லி வழங்கும் பட்டியலில், இந்தியா முழுவதும் அதை ஒருங்கிணைப்பவராக அவரை முன்னிறுத்துகிறது. தி சோசியலிஸ்ட் இதழில் எழுதி வருபவர்கள் என்கிற வகையில் மதராஸ். கல்கத்தா மற்றும் லாகூர் ஆகிய மாகாணங்களின் பொதுவுடைமைத் தலைவர்கள் யார் என்பது மதராஸ் அரசிற்குத் தெரியும்.

M.N.ராய் அவர்களை ஆசிரியராகக் கொண்ட தி வேன்காட் என்னும் பொதுவுடைமைப் பத்திரிகை ஜூன் 1922இல் இந்தியாவுக்குள் இறக்குமதி செய்யப்பட்டது. ஒவ்வொரு பதினைந்து நாளுக்கும் 100 பிரதிகள் இந்தியாவுக்கு அனுப்பப்பட, அவற்றில் பாதிக்கும்மேல் தபால் நிலையங்களில் இடைமறிக்கப்படும். ஓர் கணிசமான எண்ணிக்கை அதைக் கடந்து வெளியே அனுப்பப்பட்டது என்பதில் ஐயமில்லை. அதன் உள்ளடக்கம், தங்களின் முக்கிய கட்டுரைகளில் பொதுவுடைமைத் தொனியை ஏற்றுக்கொண்ட சில இந்திய பத்திரிகைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. தி வேன்காட் பத்திரிகையிலிருந்து பல கட்டுரைகள் கொல்கத்தாவின் அமிரித் பஜார் பத்திரிகையில் வெளியிடப்பட்டதை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். பொதுவாக, ரஷ்யாவின் போல்ஷெவிக் கட்சிக்கு ஆதரவான கட்டுரைகள், தி இண்டிபெண்டன்ட் மற்றும் தி கிலாபத் புல்லட்டின் இதழ்களில் வெளிவந்தன. மேலும், தி டெமாக்ரட், சர்வன்ட், மற்றும் வர்த்தமான் ஆகிய பத்திரிகைகளில் அடிக்கடியும், மற்ற இந்திய மாகாணப் பத்திரிகைகளில் அவ்வப்போதும் பிரசுரிக்கப்பட்டன.

M.N.ராய் மற்றும் சிலரால் ரஷ்யாவிலிருந்து அனுப்பப்பட்டு பத்திரிகைகள் மற்றும் பொதுவுடைமை இலக்கியங்கள் வழியாக எளிதாகப் பரவி வரும் பொதுவுடைமை கருத்தியல்களை தடை செய்ய இந்திய அரசாங்கம் திட்டமிட்டது. M.N.ராய் அவர்களால் எழுதப்பட்ட மூன்று பொதுவுடைமை கையேடுகளான மாற்றத்தை நோக்கி இந்தியா, இந்தியாவின் பிரச்சினையும் அதன் தீர்வும், நமக்கு என்ன தேவை ஆகியவை இந்திய பத்திரிகைச் சட்டம், 1910 பிரிவு 12(1)இன்கீழ் மூன்று முக்கிய மாகாணங்களிலும் ஏப்ரல் 1922 அன்று தடை செய்யப்பட்டது.

இப்பத்திரிகைகள் மற்றும் பொதுவுடைமை இலக்கியப் பிரச்சாரக் கையேடுகளோடு, பொதுவுடைமை இயக்கத்தால் ஒருங்கிணைக்கப்பட்ட தொழிலாளர் அமைப்புகளுக்கு M.N.ராய் அவர்களால் எழுதப்பட்ட பெரும் எண்ணிகையிலான கடிதங்களும் உடன் அனுப்பப்பட்டன. தொழிலாளர் போராட்டக்காரர்கள், அரசியல் போராட்டக்காரர்கள், தொழிற்சங்கவாதிகள் மற்றும் முன்னாள் அரசியல் கைதிகள் ஆகியோருக்கு தன் கருத்துக்களை கடிதங்களாக அனுப்பியதோடு, M.N.ராய் மாஸ்கோவிலிருந்து தான் வடிவமைத்த பொதுவுடைமைத் திட்டங்களையும் பரிந்துரை செய்தார். ராய் அவர்களின் ஓர் முக்கியமான கடிதப் போக்குவரத்து இடைமறிக்கப்பட்டபோது, அதில் அவர், "இந்தியாவில் ஒரு பொதுவுடைமைக் கட்சி தொடங்கப்பட வேண்டும் என்றும், அதன் பெயர் எவரையும் 'புண்படுத்தாத வகையில்' இருக்க வேண்டும், ஏனெனில் ஏற்கெனவே அங்குள்ள பல புரட்சிகர இயக்கங்கள் இதனால் பயந்து விடக்கூடாது", என்றும் M.N.ராய் அதில் எழுதியிருந்தார். அதன் காரணமாகவே 'மக்கள் கட்சி' என்னும் பெயரை அவர் பரிந்துரைத்திருந்தார். கயா காங்கிரஸ் அமர்வில், ஓர் 'சட்டப்பூர்வ கட்சிக்கான' மையக் கருவை நிறுவும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று M.N.ராய் விரும்பியதோடு, அங்கு தான் உருவாக்கிய ஓர் புரட்சிக்கான முன்வரைவையும் அறிமுகம் செய்ய எண்ணினார்.

பொதுவுடைமை நடவடிக்கைகள் நேரடியாக ராய் அவர்களை தொடர்புபடுத்தும் வகையில் இல்லாவிட்டாலும் சந்தேகமின்றி, அவை அவருடைய நேரடி இயக்கத்தில் தான் நடைபெற்றன. கடந்த காலத்தில் அவ்வாறு நடந்திருக்காவிட்டால் அவை கவனிக்கத் தகுந்ததாக இருந்திருக்காது. தர்ட் சர்வதேச கம்யூனிஸ்ட் என்கிற அமைப்பால் பதிப்பிக்கப்பட்ட தி இன்டர்நேஷனல் பிரஸ் கரஸ்பாண்டன்ஸ் என்கிற பத்திரிகை மாஸ்கோவிலிருந்து பெரும் எண்ணிக்கையில், மே 1922இல் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டது. அதன் பல்வேறு பிரதிகள் இந்தியாவின் பல தபால் நிலையங்களில் இடைமறிக்கப்பட்டாலும், சில பிரதிகள் இந்திய பொதுவுடைமை ஆதரவாளர்களின் கைகளில் கொண்டு சேர்க்கப்பட்டது. 'சிவப்பு' தொழிற்சங்க அமைப்புகளும் இந்தியாவின் பல்வேறு தொழிற்சங்கங்களின் அலுவலகப் பணியாளர்களுக்கு தனிப்பட்ட கடிதங்களையும், பொதுவுடைமை இலக்கியங்களையும் அனுப்பி வைத்தன. இவற்றோடு, கம்யூனிஸ்ட், கம்யூனிஸ்ட் ரிவ்யூ, ஓர்க்கர்ஸ் ட்ரெட்நாட்", போன்ற இதழ்களின் சில வழிமாறிய பிரதிகள் மற்றும் பல்வேறு 'சிவப்பு' தொழிலாளர் பதிப்பகங்களின் இதழ்களும் அக்காலகட்டத்தில் வெளிச்சத்துக்கு வந்தன. இவ்வாறு பல்வேறு 'சிவப்பு' சார்ந்த இலக்கியங்கள், பரவலான அளவில் இந்தியாவின் எல்லா மாகாணங்களிலும் புதிதாகப் பதிவு செய்துகொண்ட பொதுவுடைமைத் தொண்டர்களிடையே புழக்கத்திற்கு அனுப்பப்பட்டன.

இவ்வாறான பொதுவுடைமைப் பதிப்பகங்களோடு, மற்ற பல்வேறு பதிப்பகங்களும் இந்தியாவில் பொதுவுடைமை சித்தாந்தத்தை ஆதரிக்கும் கருத்தியலோடு வெளிவந்தன. ஆத்ம சக்தி, தூமகேது, தேசர் பணி," போன்ற பிராந்திய மொழி பத்திரிகைகள் பெரும்பாலும் வங்கத்தின் முன்னாள் புரட்சியாளர்களால் நடத்தப்பட்டன. S.A.டாங்கே

அவர்களின் தி சோசியலிஸ்ட், கிருஷ்ணா ராவ் (சில்வியா பாங்க்ஹர்ஸ்ட்டுடன் இவர் தொடர்பிலிருந்தார்) அவர்களை ஆசிரியராகக் கொண்டு மாதமிருமுறை மதராசிலிருந்து வெளிவந்த தி நவ யுகா, லாகூரிலிருந்து வெளிவந்த தி இன்குலாப் ஆகியவை இந்தியாவில் அச்சிடப்பட்ட முக்கியமான தொடக்ககால பொதுவுடைமைப் பத்திரிகைகள் ஆகும். தூமகேது பத்திரிகையின்மீது அரசுக்கு எதிராக செயல்பட்டதாக தேசத் துரோக வழக்கு தொடரப்பட்டபோது அதன் ஆசிரியர் மன்னிப்பு கோரினார். அவர் கைது செய்யப்பட்டபோது அவருக்கு பதிலாக தற்காலிகமாக நியமிக்கப்பட்ட ஆசிரியரும் ஓர் முன்னாள் புரட்சியாளர் ஆவார். மேலும், ஆங்கிலேய அரசாங்கத்தால் 1923-1924 காலகட்டத்தில் பல்வேறு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதும், அப்பத்திரிகையின் தொனியில் எவ்வித மேம்பாடும் இல்லாமல் பழையபடியே தொடர்ந்தது. அதற்குப் பின்பான ஆண்டுகளில் பத்திரிகையின் விற்பனை வேகமாக வளர்ந்து, 1930களில் பொதுவுடைமை இயக்கத்தின் ஓர் வழிகாட்டியாகவே அப்பத்திரிகை மாறியது.

நளினி காந்தா ஐயர் என்பவரால் எழுதப்பட்ட தி அவாய்லண்ட் என்னும் பொதுவுடைமை துண்டறிக்கை 1922இல் மதராசில் தென்பட்டது. காவல்துறை நளினியை கைது செய்தபோது அவர் ஒரு காவலரை சுட முயன்றார். துண்டறிக்கையில், காலனி நாடுகளில் ஆங்கிலேய அரசாங்கம் நடத்தும் அராஜகங்கள் குறித்த கதைகள் மற்றும் தொழிற்சங்கங்கள் குறித்த விவரங்களும் இடம்பெற்றிருந்தன. ஆகவே அப்போதைய அரசாங்கம், பிரிவு 99A, 1898 என்னும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்கீழ் மே 1922இல் வழக்கு தொடர்ந்தது.

டாக்டர் மணிலால், ஓர் குறிப்பிடத்தக்க பொதுவுடைமைத் தலைவர். ஃபிஜி நாட்டில் நடந்த தொழிலாளர் பிரச்சினைகளில் பங்காற்றினார் என்பதற்காக 1920இல் அந்நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார். பின்னர், ரஷ்ய போல்ஷெவிக் கட்சிக்கு ஆதரவான பேச்சுக்களுக்காக நியூசிலாந்து நாட்டிலிருந்தும் வெளியேற்றப்பட, அதன்பின் சிலோனிலும் அவர் தங்க அனுமதி மறுக்கப்பட்டு இறுதியாக இந்தியா வந்தார். அவர் S.A.டாங்கேவின் தி சோசியலிஸ்ட் இதழுக்குத் தொடர்ந்து பங்களிப்பவராக இருந்தார். மேலும், ஓர் பகிரங்கமான பொதுவுடைமைவாதியாக வாழ்ந்த அவர், 1924 மற்றும் 1928 காலகட்டத்தில் மதராஸ் மாகாணத்தில் தொழிற்சங்கத்தை நிறுவினார். மலபார் பிரதேசத்தின் தொழிலாளர் சங்கங்களுக்கு தொடர் ஊக்கமளிப்பவராக அவர் இருந்தார். அவருடைய எழுத்துக்கள், தொழிலாளர் பிரச்சினைகள், தொழிற்சங்க இயக்கங்கள் மற்றும் பொதுவுடைமை அமைப்புகள் ஆகியவற்றை ஆதரிக்கும் வடிவிலேயே இருந்தன. மதராசின் குற்றப் புலனாய்வுத் துறை (CID), அவருடைய நடவடிக்கைகளையும், பொதுவுடைமை பத்திரிகைகளில் வெளிவரும் அவருடைய எழுத்துக்களையும் தொடர்ந்து கண்காணித்து வந்தது. S.A.டாங்கே மற்றும் மதராசின் சிங்காரவேலு ஆகியோருக்கு M.N.ராய் எழுதிய கடிதங்களே தி சோசியலிஸ்ட் பத்திரிகையின் பிரதான பத்திகளாக இருந்தன. தி சர்வதேச கம்யூனிஸ்ட் இதழில் 1924 முதல் 1928 வரை வெளிவந்த பல்வேறு கட்டுரைகள் இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டன. இந்திய பொதுவுடைமைத் தலைவர்கள் மாஸ்கோவுக்கு செய்த பயணங்கள் மற்றும் மதராஸ் மாகாணத்தில் பொதுவுடைமை இயக்க வளர்ச்சிக்கான அவர்களின் பங்களிப்புகள் குறித்த செய்திகளே இப்பத்திரிகையின் பிரதான பத்திகளை ஆக்கிரமித்திருந்தன.

சர்வதேச கம்யூனிஸ்ட் மற்றும் அதன் வெளியீடுகள்

இந்திய அரசாங்கம் 22 ஏப்ரல் 1922 அன்று தனது வணிகத்துறை மூலம் ஓர் அறிவிப்பை வெளியிட்டது. அந்த அறிவிப்பு எண்.2026இன்படி, சர்வதேச கம்யூனிஸ்ட்

சர்வதேச அமைப்பால் வழங்கப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட எந்தவொரு பத்திரிகைப் பிரதியும் பிரித்தானிய இந்தியாவுக்குள் நுழைய அனுமதிக்கப்படாது; மேலும், சோவியத் குடியரசின் ஆதரவு பெற்ற சர்வதேச கம்யூனிஸ்ட் அமைப்புடன் தொடர்புடைய அல்லது அவர்களோடு ஒருங்கிணைந்த எந்த ஒரு அமைப்பின் பிரதிகளும் நாட்டுக்குள் நுழையக்கூடாது என்கிற விதி அமல்படுத்தப்பட்டது. அவ்வெளியீடுகள், கடல் சுங்கச் சட்டம் 1878, பிரிவு 19இன்கீழ் கொண்டுவரப்பட்டு தடை செய்யப்பட்டன.

மேற்குறிப்பிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில் இந்திய அரசின் நிதித் துறை 22 அக்டோபர் 1927 தேதியிட்ட, அறிவிப்பு எண்.105 (சுங்கம்) என்கிற மற்றொரு அறிவிப்பை வெளியிட்டது. அந்த அறிவிப்பு, லண்டன் சர்வதேச கம்யூனிஸ்ட் அமைப்பால் வழங்கப்பட்டு, பிரித்தானிய இந்தியாவின் பம்பாய், மதராஸ், மற்றும் கல்கத்தா துறைமுகங்கள் வழியாக இந்தியாவுக்குள் இறக்குமதி செய்யப்படும் வெளியீடுகளை பறிமுதல் செய்யுமாறு சுங்க அதிகாரிகளுக்கு ஆணையிட்டது.

மதராஸ் அரசு 1925இல், இந்த அறிக்கை பொதுவான ஒன்றாக இருக்கிறது, ஓர் குறிப்பிட்ட பிரதி கம்யூனிஸ்ட் கட்சியால் வெளியிடப்பட்டது அல்லது அதனோடு தொடர்புடையது என்பதை பார்த்தவுடன் தெரிந்துகொள்ள இயலாது; ஆகவே, இந்த ஆணை கவனக்குறைவாக புறக்கணிக்கப்பட வாய்ப்புள்ளதாக சுட்டிக்காட்டியது.

அதன் பின்னர், சர்வதேச கம்யூனிஸ்ட் அமைப்பால் வெளியிடப்பட்ட நாளிதழ்கள் மற்றும் பத்திரிகைகளின் பட்டியல் ஒன்று உள்ளூர் அரசுகளுக்கு அனுப்பப்பட்டது; மேலும் அப்பட்டியலில் புதிதாக சேர்க்கப்பட்டவை குறித்த விவரங்கள் அவ்வப்போது அனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்திய உளவுத்துறை இயக்குனரால், சர்வதேச கம்யூனிஸ்ட், இங்கிலாந்து அமைப்புடன் இணைக்கப்பட்ட ஓர் அமைப்பால் வெளியிடப்பட்ட பின்வரும் பொதுவுடைமை இலக்கியப் படைப்புகள் கைப்பற்றப்பட்டன.

1. தொழிலாளர்களின் வாழ்க்கை (அதற்குமுன், தொழிலாளர் வார இதழ் என்ற பெயரில் லண்டனில் வெளிவந்தது)

2. பணிபுரியும் பெண்கள் (லண்டனிலிருந்து வெளிவந்த பொதுவுடைமைப் பிரசுரம்)

மேற்குறிப்பிடப்பட்ட படைப்புகளின் தன்மை கண்டிப்பாக பொதுவுடைமை சார்ந்ததேயாகும். இவ்வகையாக, லண்டனிலிருந்து வரும் பொதுவுடைமை இலக்கியங்களின் இறக்குமதிக்கு எதிராக, கடல் சுங்க சட்டம் 1878, பிரிவு 1907இன்கீழ், நடவடிக்கை எடுக்குமாறு சுங்க அதிகாரிகளுக்கு இந்திய அரசாங்கம் அறிவுறுத்தியது. அவ்வாறே, மதராஸ் துறைமுகத்தின் சுங்க அதிகாரிகள் 26 நவம்பர் 1927 அன்று மேற்குறிப்பிடப்பட்ட பொதுவுடைமை இலக்கியங்களைப் பறிமுதல் செய்தார்கள்.

பொது கம்யூனிஸ்ட் அறிவிப்பு, 1932

இந்திய அரசாங்கத்தின் நிதித்துறை மூலமாக, 28.05.1927 தேதியிடப்பட்ட அறிவிப்பு எண்.28இன்கீழ், ரஷ்யாவின் சர்வதேச கம்யூனிஸ்ட் அமைப்பால் அல்லது அமைப்பின் சார்பாக வெளியிடப்பட்ட எந்தவொரு பத்திரிகை அல்லது ஆவணமும் இந்தியாவுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டது. இதன் மூலமும், இந்திய கடல் சுங்க சட்டம் 1878இன் அடிப்படையிலும், பெருமளவிலான பொதுவுடைமை வெளியீடுகள் கைப்பற்றப்பட்டன அல்லது தடை செய்யப்பட்டன. மாஸ்கோவிலிருந்து இந்திய மாகாணங்களுக்கு

அனுப்பப்படும் இதுபோலான பொதுவுடைமை வெளியீடுகளைத் தடை செய்யுமாறு, மே 1927லிருந்து செப்டம்பர் 1932 வரை, பம்பாய், கல்கத்தா, மற்றும் மதராஸ் மாகாணங்களின் சுங்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மதராஸ் மாகாணத்தில் 1927 முதல் 1931 வரையில் அத்தகைய பொதுவுடைமை இலக்கிய பறிமுதல்கள் மிக அரிதாகவே நடைபெற்றன. ஆயினும் 1932இல், குறிப்பாக, மார்ச் முதல் ஆகஸ்ட் வரை மதராஸ் மாகாண பொதுவுடைமை இயக்கங்களால் மாஸ்கோவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொதுவுடைமை இலக்கியங்கள் தடையின்றி எளிதாகப் பாய்ந்தன. பம்பாய், கல்கத்தா ஆகிய இரு மாகாணங்களிலும் புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், மற்றும் கார்ல் மார்க்ஸ், லெனின், மற்றும் பலரின் நிழற்படங்கள் ஆகியவற்றின் இறக்குமதியை சுங்க அதிகாரிகளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

இதனால் எரிச்சலடைந்த இந்திய அரசு, இந்தியாவின் முக்கிய நகரங்களில் பொதுவுடைமை இயக்கம் மற்றும் பொதுவுடைமை இலக்கியங்களின் எளிதான பரவலை தடுத்து நிறுத்த அரசியல் இலக்கியங்களின் இறக்குமதிக்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தது. இதன்மூலம் அக்கருத்தியலின் இந்திய ஆதரவாளர்களுக்கான புதியதொரு பொதுவுடைமை கட்சி உருவாவதற்கான வாய்ப்பையும் தவிர்க்க நினைத்தது. இந்திய அரசின் தலைமைச் செயலாளர் அறிவுரைப்படி, இராஜப் பிரதிநிதி வெலிங்டன் பிரபு, நிதித்துறையின் 28.05.1927 தேதியிட்ட அறிவிப்பு எண்.28இல் திருத்தம் செய்ய முடிவு செய்தார்.

இந்திய அரசாங்கம் 10 செப்டம்பர் 1932 அன்று, பொது கம்யூனிஸ்ட் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு, பிரித்தானிய இந்தியத் துறைமுகங்கள் வழியாக கொண்டு வரப்படும் பின்வருவனவற்றை பிரித்தானிய இந்தியாவுக்குள் அனுமதிக்க தடை விதித்து மத்திய நிதித்துறையின் கீழுள்ள மத்திய வருவாய்த்துறை மற்றும் சுங்கத்துறை அதிகாரிகளுக்கு ஆணையிட்டது:

1. **சர்வதேச கம்யூனிஸ்ட் அமைப்பால் வெளியிடப்பட்ட அல்லது வழங்கப்பட்ட எந்த ஆவணமும்**
2. **சர்வதேச கம்யூனிஸ்ட் அமைப்புடன் ஒன்றிணைந்த அல்லது தொடர்பிலுள்ள அல்லது அதனால் கட்டுப்படுத்தப்படும் எந்த நிறுவனத்தின் ஆவணமும்**
3. **அவ்வாறான நிறுவன அலுவலகங்களில் வைத்திருக்கப்பட்ட எந்தவொரு ஆவணமும்**
4. **அவ்வாறான ஆவணங்களில் இருந்த தகவல்களை மறுபதிப்பு செய்யப்பட்ட எந்தவொரு ஆவணமும்.**

இந்திய அரசின் இணைச் செயலாளரான கி.பி. லாயிட் அந்த அறிக்கையை பம்பாயின் அனைத்து சுங்க வசூல் அதிகாரிகளுக்கும், உப்பு வருவாய் அதிகாரிகளுக்கும் அனுப்பி எவ்வித தாமதமும் இன்றி உடனடியாக ரஷ்யா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அவ்வாறான இலக்கியங்கள்மீது கடல் சுங்க சட்டம் 1878, பிரிவு 19இன்கீழ் நடவடிக்கை எடுக்குமாறு ஆணையிட்டார். இந்த அறிக்கை, 28.05.1927 தேதியிட்ட அறிக்கை எண்.28ஐ நிறுத்தி வெளியிடப்பட்டது. இராஜப் பிரதிநிதி வெலிங்டன் பிரபு, பொது கம்யூனிஸ்ட் அறிக்கை வெளியிடப்பட்டது குறித்து இந்தியாவின் தலைமைச் செயலாளருக்கு 20 செப்டம்பர் 1932 அன்று தந்தி மூலம் தகவல் அனுப்பினார். அந்த அறிக்கை செயல்பாட்டுக்கு வந்தபின், கண்காணிப்பு கடுமையாக்கப்பட்டு,

பிரித்தானிய இந்திய மாகாணங்களில் இறக்குமதி செய்யப்பட்ட பெருமளவிலான பொதுவுடைமை இலக்கியங்கள் சுங்க அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டன.

பின்வரும் பொதுவுடைமை வெளியீடுகளான:

1. **தி சர்வதேச கம்யூனிஸ்ட்**
2. **இன்டர்நேஷனல் பிரெஸ் கரஸ்பாண்டன்ஸ்**
3. **தி லேபர் மன்த்லி**

ஆகியவை லண்டன், இங்கிலாந்திலிருந்து செயல்படும் 'பொது செய்தி சேவை' நிறுவனத்தால் வெளியிடப்பட்டவை. சுங்க அதிகாரிகள், மேற்குறிப்பிடப்பட்ட பத்திரிகைகளை 4 ஜூன் 1937 அன்று கடல் சுங்க சட்டம் 1878 பிரிவு19இன்கீழ் தடை செய்தார்கள். மேற்கண்ட பத்திரிகைகள் மதராஸ் துறைமுகம் வழியாக மதராஸ் மாகாணங்களுக்குள் இறக்குமதி செய்யப்படுவதற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு, மாகாண அரசை உள்துறை அமைச்சகம் அறிவுறுத்தியது. மதராஸ் மாகாண அரசு உடனடியாக சுங்க அதிகாரிகளுக்கு ஆணையிட்டு நடவடிக்கைகள் எடுத்தது.

மற்றொரு அறிவிப்பில் மதராஸ் அரசு பொதுவுடைமை சிந்தனைகளை மறு உருவாக்கம் செய்து வெளிவந்த பின்வரும் பொதுவுடைமை வெளியீடுகளை தடை செய்தது.

1. **வேர்ல்ட் ரெவல்யூஷன் தி ரைஸ் அண்ட் ஃபால் ஆஃப் சர்வதேச கம்யூனிஸ்ட் 1917-1936, C.L.R.ஜேம்ஸ் அவர்களால் எழுதப்பட்ட இந்நூல் மார்ட்டின் செக்கர் மற்றும் வார்பர்க், லண்டன் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.**
2. **தி சர்வதேச கம்யூனிஸ்ட், மாடர்ன் புக்ஸ் லிமிடெட், லண்டன் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.**
3. **இன்டர்நேஷனல் பிரெஸ் கரஸ்பாண்டன்ஸ், வார இதழாக எச்.ஆர்.ஜி. ஜெஃபர்சன், லண்டன் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.**
4. **தி லேபர் மன்த்லி. R. பால்மே தத் ஆசிரியராக இருந்த இந்த சர்வதேச தொழிலாளர் மாத இதழ், ட்ரினிட்டி டிரஸ்ட் ப்ரோப்ரைட்டர்ஸ், லண்டன் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.**

பிரித்தானிய இந்திய அரசு, அனைத்து மாகாண அரசுகளையும் இவ்வாறு லண்டனிலிருந்து வெளியிடப்பட்ட பொதுவுடைமை சார்ந்த வெளியீடுகளை தடுக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு வலியுறுத்தியும், மாகாண அரசுகளின் தலைமைச் செயலாளர்களுக்கு அவ்வாறான இலக்கிய இறக்குமதியை தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த தகவல்களை தெரிவிக்கவும் வலியுறுத்தியது.

இந்திய தபால் அலுவலக சட்டம் மற்றும் பொதுவுடைமை இலக்கியம்

இந்திய தபால் மற்றும் தந்தி துறையின் தலைமை இயக்குனர் C.J.W.லில்லி, புது டெல்லியிலிருந்து லண்டன் இந்திய அலுவலகத்தின் P & J துறை செயலாளரான A.டிப்தின் என்பவருக்கு ஓர் துறை ரீதியான கடிதம் ஒன்றை எழுதினார். D.O. Letter No.41-43-38 என்கிற அக்கடிதம், ஏற்றுமதியாளர்கள் M/s. ஜான் கிளார்க், 12 லுட்கேட் ஸ்கொயர், லுட்கேட் ஹில், லண்டன் என்கிற முகவரியிலிருந்து M.V.P.,லவுண்டோ

நெகோசியான்தே தி ரூபா, நோவா கோவா என்னும் முகவரிக்கு 60 தபால் கட்டுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது இடைமறித்தலின்போது தெரியவந்ததாக தெரிவித்தது. அக்கட்டுகளில் மொத்தமாக 200 பொதுவுடைமைப் புத்தகங்கள் இருந்தன, அவற்றில் வெகு சில விதிவிலக்குகள் தவிர்த்து மற்றவை ஆட்சேபனைக்குரியதாக மட்டுமல்லாமல் தடை செய்யக்கூடியதுமாக இருந்தன. அக்கட்டுகள் செல்ல வேண்டிய இடம் பிரித்தானிய இந்தியாவிற்கு வெளியே அமைந்திருந்த காரணத்தால், இந்திய தபால் அலுவலக சட்டம் பிரிவு 25இன்கீழ், அவர்களால் அவற்றை நிறுத்தி வைக்க இயலாமல் உலகளாவிய தபால் கூடுகை 1934இன் கீழான நிபந்தனை 46(3)இன்படி லண்டன் பிரித்தானிய தபால் அலுவலகத்திற்கு திருப்பியனுப்பினார்கள்.

பிரித்தானிய இந்தியாவில் இல்லாத ஓர் முகவரிக்கு பொதுவுடைமை இலக்கியங்களை அனுப்பும் இப்புதிய முறை, குறிப்பாக கோவாவிலிருந்து பம்பாய் மற்றும் மதராஸ் மாகாணங்களுக்கு, இடைமறிக்கப்படும் அபாயமில்லாமல் பிரித்தானிய இந்தியாவில் பொதுவுடைமைப் பிரச்சாரத்தை அறிமுகப்படுத்துவதற்காக வேண்டுமென்றே கையாளப்பட்டது என்று தபால் துறை அதிகாரிகள் நினைத்தார்கள். தலைமை அதிகாரி, பொதுவுடைமை பிரச்சாரம் இவ்வழியில் இந்தியாவுக்குள் நுழைவதை தவிர்க்க வேண்டுமென்று பொதுவாக நிலவும் விருப்பமின்மையுடன், லண்டன் ஏற்றுமதியாளர்கள் திருவாளர் ஜான் கிளார்க்மீது நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினார். லண்டனில் அமைந்துள்ள பொதுவுடைமை நிறுவனத்தால் அனுப்பப்பட்ட பின்வரும் படைப்புகள் திருப்பியனுப்பப்பட்டன.

வ. எண்	தலைப்பு	நூலாசிரியர்	பதிப்பாளர்	பிரதிகள்
1	ஆண்ட்டி–டூரிங்	ஃபிரெட்ரிக் எங்கல்ஸ்	லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், லண்டன்	7
2	ஏப்ரல் கான்ஃபரன்ஸ்	விளாடிமிர் லெனின்	மார்ட்டின் லாரன்ஸ் லிமிடெட், லண்டன்	3
3	பயாலஜி அண்ட் மார்க்சிசம்	மால்சென்ட் ப்ரிசென்ட்	லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், லண்டன்	1
4	சார்ல்ஸ் டிக்கன்ஸ்	ஜி.கி.ஜாக்சன்	லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், லண்டன்	2
5	சிவில் வார் இன் ஃபிரான்ஸ்	கார்ல் மார்க்ஸ்	லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், லண்டன்	1
6	சிவில் வார் இன் யு.எஸ். எஸ்.ஆர்	ஜோசஃப் ஸ்டாலின்	லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், லண்டன்	3
7	சிவில் வார் இன் யு.எஸ்.ஏ.	கார்ல் மார்க்ஸ் – எங்கல்ஸ்	லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், லண்டன்	2

வ. எண்	தலைப்பு	நூலாசிரியர்	பதிப்பாளர்	பிரதிகள்
8	க்ளாஸ் ஸ்ட்ரகில் இன் ஃபிரான்ஸ்	கார்ல் மார்க்ஸ்	லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், லண்டன்	2
9	கமிங் ஸ்ட்ரகில் ஃபார் பவர்	ஜெ.ஸ்ட்ராச்சி	லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், லண்டன்	4
10	கரஸ்பாண்டன்ஸ் ஆஃப் மார்க்ஸ் அண்ட் எங்கல்ஸ்	யி.ஸ்ட்ராச்சி	லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், லண்டன்	1
11	கிரிட்டிக் ஆஃப் த கோத்தா புரோகிராம்	கார்ல் மார்க்ஸ்	–	1
12	டயலெக்டிக்ஸ்: தி லாஜிக் ஆஃப் மார்க்சிசம்	T.A.ஜாக்சன்	–	2
13	டிக்டேட்டர்ஷிப் ஆஃப் த புரோல்டேரியட் (ரீடிங்ஸ் இன் லெனினிசம் எண்.3)			2
14	டிமிட்டிராஃப்ஸ் லெட்டர்ஸ் ஃப்ரம் ப்ரிசன்	குரெல்லாவால் முடிக்கப்பட்டது	–	2
15	ஃபாசிசம் அண்ட் சோசியல் ரெவல்யூசன்	R.P.தத்	–	2
16	ஃபண்டமெண்டல் பிராப்ளம்ஸ் ஆஃப் மார்க்சிசம்	G.ப்லெக்கநோவ்	–	2
17	ஜெர்மன் ஐடியாலஜி I & lll	கார்ல் மார்க்ஸ்	–	3
18	ஜெர்மனி: ரெவல்யூஷன் அண்ட் கவுன்ட்டர் ரெவல்யூசன்	ஃபிரெட்ரிக் ஏங்கல்ஸ்	லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், லண்டன்	1
19	எ ஹேண்ட்புக் ஆஃப் மார்க்சிசம்	எடிட்டட் பை E.பர்ன்ஸ்	விக்டர் கோலான்ஸ் லிமிடெட், லண்டன்	3
20	ஹிஸ்டரி ஆஃப் அனார்கிசம் இன் ரஷ்யா	E.யரோஸ்லோவ் ஸ்கி	லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், லண்டன்	9
21	ஹவுசிங் க்வெஸ்டின்	ஃபிரெட்ரிக் எங்கல்ஸ்	–	7
22	ஹங்கர் அண்ட் வொர்க்	J.குசென்ஸ்கி	–	3
23	இம்பீரியலிசம் தி ஹையஸ்ட் ஸ்டேஜஸ் ஆஃப் கேப்பிட்டலிசம்	விளாடிமிர் லெனின்	மார்ட்டின் லாரன்ஸ் லிமிடெட், லண்டன்	3

வ. எண்	தலைப்பு	நூலாசிரியர்	பதிப்பாளர்	பிரதிகள்
24	லெஃப்ட் விங் கம்யூனிசம்	விளாடிமிர் லெனின்	–	3
25	லெனின்: வால்யும் XIII		–	1
26	லெனின் ஆன் பிரிட்டன்		லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், லண்டன்	2
27	லெனின் ஆன் ரிலிஜியன்		–	3
28	லெட்டர்ஸ் ஃப்ரம் அஃபார்	விளாடிமிர் லெனின்	–	3
29	லெட்டர்ஸ் டு குகெல்மன்	கார்ல் மார்க்ஸ்	–	2
30	லுட்விக் ஃபூர்பாக்	ஃபிரெட்ரிக் எங்கல்ஸ்	–	2
31	மார்க்ஸ் அண்ட் த ட்ரேட் யூனியன்ஸ்	A.லோசோவ்ஸ்கி	–	2
32	மார்க்ஸ்–ஏங்கல்ஸ் மார்க்சிசம்	V.I.லெனின்	–	7
33	மார்க்சிசம் அன்ட் தி நேஷனல் அன்ட் கலோனியல் க்வெஸ்டின்	J.ஸ்டாலின்	–	6
34	தி நேச்சர் ஆஃப் கேப்பிட்டலிஸ்ட் கிரைசிஸ்	J.ஸ்ட்ராச்சி	விக்டர் கோலான்ஸ் லிமிடெட், லண்டன்	1
35	நியூ ஃபேஷன்ஸ் இன் வேஜ் தியரி	J.குசென்ஸ்கி	லாரன்ஸ் – விஷார்ட் லிமிடெட், லண்டன்	3
36	நியூ ரைட்டிங் (ஓல்ட் சீரிஸ்), எண்.2–5	எடிட்டட் பை J.லேமன்	–	4
37	தி நாவல் அண்ட் தி பீப்பிள்	ரால்ஃப் ஃபாக்ஸ்	லாரன்ஸ் – விஷார்ட் லிமிடெட், லண்டன்	3
38	அக்டோபர் ரெவல்யூஷன்	J.ஸ்டாலின்	–	2
39	ஆன் கேப்பிட்டல், யெஸ்சேஸ் அன்ட் ரெவ்யூஸ்	ஃபிரெட்ரிக் ஏங்கல்ஸ்	லாரன்ஸ் – விஷார்ட் லிமிடெட், லண்டன்	1
40	ஆன் தி ஈவ் ஆஃப் அக்டோபர்	V.I.லெனின்	மார்ட்டின் லாரன்ஸ் லிமிடெட், லண்டன்	3
41	தி பாரிஸ் கம்யூன்	V.I.லெனின்	லாரன்ஸ் – விஷார்ட் லிமிடெட், லண்டன்	3
42	தி பீப்பிள்ஸ் ஃப்ரண்ட் இன் தி யுனைடெட் ஸ்டேட்ஸ்	எர்ல் ப்ரௌடர்	–	4
43	பொலிட்டிக்கல் எக்கானமி	கி.லியோன்ட்டியெவ்	–	1
44	பாவர்ட்டி ஆஃப் ஃபிலாசஃபி	கார்ல் மார்க்ஸ்	–	1

வ. எண்	தலைப்பு	நூலாசிரியர்	பதிப்பாளர்	பிரதிகள்
45	ப்ரோலெட்டேரியன் ரெவல்யூஷன் அன்ட் ரெனிகேட் கண்டாஸ்கி	V.I.லெனின்	மார்ட்டின் லாரன்ஸ் லிமிடெட், லண்டன்	3
46	ரெட் ஸ்டார் ஓவர் சைனா	E.ஸ்நோ	விக்டர் கோலான்ஸ் லிமிடெட், லண்டன்	1
47	ரிப்போர்ட் ஆஃப் கோர்ட் ப்ரோசீடிங்க்ஸ் ஆஃப் ஆன்ட்டி சோசியலிஸ்ட் பிளாக் ஆஃப் ரைட்ஸ் அண்ட் ட்ராட்ஸ்கியைட்ஸ்		லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், லண்டன்	4
48	தி ரெவல்யூசன் ஆஃப் 1905	V.I.லெனின்	–	3
49	ரஷ்யன் ரெவல்யூஷன்	லெனின் & ஸ்டாலின்	–	5
50	செலெக்டெட் வொர்க்ஸ் ஆஃப் லெனின்			தொகுதி-I 1
				தொகுதி-II 5
				தொகுதி-III 1
				தொகுதி-IV 5
				தொகுதி-V 3
				தொகுதி-VI 1
				தொகுதி-VII 1
				தொகுதி-VIII1
				தொகுதி-IX 1
				தொகுதி-X 7
51	ஷார்ட் ஹிஸ்டரி ஆஃப் தி ரஷ்யன் ரெவல்யூசன்	R.பேஜ் அர்நாட்	லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், லண்டன்	தொகுதி-I 6 தொகுதி-II 6
52	சோசியலிசம் அண்ட் வார்	V.I.லெனின்	–	3
53	சன் ஆப் தி பீப்பிள்	மௌரிஸ் தோரெஸ்	–	2
54	சோவியத் பாலிசி அண்ட் இட்ஸ் க்ரிடிக்ஸ்	J.R.கேம்ப்பெல்	விக்டர் கோலான்ஸ் லிமிடெட், லண்டன்	3
55	ஸ்டேட் அண்ட் ரெவல்யூஷன்	V.I.லெனின்	மார்ட்டின் லாரன்ஸ் லிமிடெட், லண்டன்	3
56	ஸ்ட்ராட்டஜி ஆஃப் டேக்டிக்ஸ் (ரீடிங்ஸ் இன் லெனினிசம் எண்.4)		லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், லண்டன்	3

வ. எண்	தலைப்பு	நூலாசிரியர்	பதிப்பாளர்	பிரதிகள்
57	தி டாஸ்க் ஆஃப் தி ப்ரோலெட்டேரியன் இன் அவர் ரெவல்யூசன்	V.I.லெனின்	லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், லண்டன்	3
58	டீச்சிங்ஸ் ஆஃப் கார்ல் மார்க்ஸ்	V.I.லெனின்	மார்ட்டின் லாரன்ஸ் லிமிடெட், லண்டன்	3
59	எ டெக்ஸ்ட் புக் ஆஃப் மார்க்சிஸ்ட் ஃபிலாசபி	எடிட்டட் பை ஜான் லூயிஸ்	லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், லண்டன்	3
60	தி தியரி அண்ட் ப்ராக்டிஸ் ஆஃப் சோசியலிசம்	J.ஸ்ட்ராட்ச்சி	–	2
61	தியரி ஆஃப் ப்ரோலேட்டேரியன் ரெவல்யூசன் (ரீடிங்ஸ் இன் லெனினிசம் எண்.2)	–		2
62	தி திரெட்டனிங் கெடஸ்டிராஃப் அண்ட் ஹொவ் டு அவாய்ட் இட்	V.I.லெனின்	மார்ட்டின் லாரன்ஸ் லிமிடெட், லண்டன்	3
63	ட்டூ டேக்டிக்ஸ் ஆஃப் சோசியல் டெமாக்ரடிக் எவல்யூசன்	V.I.லெனின்	–	3
64	தி யுனைட்டட் ஃப்ரண்ட்	G.டிமிட்ராஃப்	லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், லண்டன்	
65	வார் அண்ட் தி செகண்ட் இன்டர்நேஷனல்	V.I.லெனின்	மார்ட்டின் லாரன்ஸ் லிமிடெட், லண்டன்	3
66	வாட் ஆர் வி ட்டு டூ?	J.ஸ்ட்ராட்ச்சி	லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், லண்டன்	1
67	வாட் இஸ் லெனினிசம்? (ரீடிங்ஸ் இன் லெனினிசம்)			2
68	வாட் இஸ் ட்டு பி டன்?	V.I.லெனின்	லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், லண்டன்	3
69	வில் போல்ஷெவிக்ஸ் மெயின்டெயின் பவர்?	V.I.லெனின்	லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், லண்டன்	3
70	வேர்ல்ட் பாலிடிக்ஸ் 1918–1936	R.P.தத்	விக்டர் கோலான்ஸ் லிமிடெட், லண்டன்	1

ரஷ்யப் புரட்சி 1905

ரஷ்ய விப்ளவமு 1905 (Russian Revolution, 1905) என்கிற தெலுங்கு நூல் விஸ்வ சாகித்திய மாலா என்பவரால் எழுதப்பட்டு ராஜமுந்திரி ஸ்ரீனிவாசா அச்சகத்தால் வெளியிடப்பட்டது. பிரித்தானிய இந்தியாவுக்குள் நுழைய ஏற்கெனவே தலைமை ஆளுநரால் சபையில் தடை செய்யப்பட்ட ஆங்கில நூலின் தெலுங்கு மொழியாக்கம் இந்நூல். தெலுங்கு நூலில் உள்ள பத்திகள் ஆயுதக் கிளர்ச்சி மற்றும் வன்முறை உள்ளிட்ட பல்வேறு குற்றங்களை தூண்டக்கூடிய வகையிலான எழுத்துக்களில் வெளிப்படையாக பதிப்பிக்கப்பட்டு இருப்பதாக மதராஸ் அரசு கருதியது. எனவே மதராஸ் மாகாண ஆளுநர் அந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளவை பிரிவு 16 குற்றவியல் சட்ட திருத்த சட்டம், 1932 (Act XXIII of 1932)இன்கீழ் உள்ள பிரிவு 4 விளக்குகின்ற தன்மையுடையதாய் இருப்பதால், இந்திய பத்திரிகை சட்டம் (அவசரகால அதிகாரம்) 1931 (XXIII of 1931), பிரிவு19இன்கீழ் அந்நூல் தடை செய்யப்படுவதாக அறிவித்தார்.

அந்நூலில் இருந்த இரு கட்டுரைகள் புரட்சி காலத்துக்கு முன்பும் பின்பும் எழுதப்பட்டுள்ளது. ஏற்கெனவே முழுமையான விடுதலைக்கான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் இந்தியர்கள் கற்றுக்கொள்ளத் தகுதியான விஷயங்களை அளிக்கக்கூடியதாக அவ்வகையான நூல்கள் கண்டிப்பாக இருக்கும் என்று மதராஸ் அரசு நினைத்தது. லெனின், அவருக்கே உரிய தனித்துவமான உணர்ச்சிமிக்க பாணியில், முழுமையான சுதந்திரத்தை அடைய மக்கள் புரட்சி இயக்கத்துக்கான நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட போராளிகளின் குழுவை ஒருங்கிணைக்க வேண்டியது பொதுவாக எந்த ஒரு நாட்டிற்குமான முன்தேவையாகும் என்றவாறு மேலும் எழுதுகிறார்: "சுதந்திரத்திற்கான முக்கிய துணையாக ஆயுதப் படைகளே இருக்கும். தொழிலாளர் வர்க்கம் உடனடியாக ஆயுதங்களை ஏந்த வேண்டும். தொழிலாளர்கள், வேலை நிறுத்தங்கள் மற்றும் கிளர்ச்சி ஆகியவற்றை செய்யத் தயாராக இருந்தால்தான் அவர்கள் போராட ஆயத்த நிலையில் இருக்கிறார்கள் என்பதை காட்ட முடியும். இதனால் இராணுவத்திற்கு (அரசாங்கத்துக்கு) ஓர் குழப்பம் ஏற்படும், இராணுவ வீரர்கள் (அரசாங்கம்) இத்தனை நாளாக நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதை உணர்வார்கள். உடனடியாக அந்த பேயாட்சி அரசுக்கு எதிராகத் திரும்புவார்கள்; எவருக்காக நிராயுதபாணியான தொழிலாளர்களையும், பெண்களையும், குழந்தைகளையும் இவ்வளவு நாட்களாக துன்புறுத்திக் கொண்டிருந்தார்களோ அதே கொடூர பேய்களுக்கு எதிராகத் திரும்பி, மக்களின் பக்கம் இணைவார்கள். தற்போதைய பீட்டர்ஸ்பர்க் கிளர்ச்சியின் விளைவு எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும், ஒன்று மட்டும் நிச்சயம், அது ஓர் சிறந்த ஒழுங்குடன்கூடிய சக்திவாய்ந்த புரட்சிக்கு வித்திடும். நாட்டில் உள்ள பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த புரட்சியாளர்களின் உடனடிக் கடமை தொழிலாளர்களையும், மக்களையும், மற்ற சக்திகளையும் அணிதிரட்டி அவர்களுக்கு ஆயுதமளித்து, உரிய பயிற்சிகளும் அளித்து, அவர்களை படைகளாக ஒழுங்கமைக்க வேண்டும். இப்பணியில், நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒருமனதாக நம் பொது எதிரியான ஜார் அரசுக்கு ஓர் பெருத்த அடியை அளிக்க வேண்டும். அத்தகையதோர் சூழலில், உழைக்கும் வர்க்கம் அதன் இலட்சியங்களை மறந்து விடக்கூடாது. தற்போதைய உலகின் சுரண்டல் முறையை சுத்தமாகத் துடைத்தெரிய வேண்டும் என்னும் இறுதி நோக்கத்தை மனதில் இறுத்தி, உழைக்கும் வர்க்கம் சமூக ஜனநாயக கட்சியுடன் ஒன்றிணைந்து, அதே சமயம் போராட்டத்தின்போது தன் தனித்துவத்தையும் இழக்காமல், அனைத்து மக்களின் பொது எதிரியான ஜார் படைகளை எதிர்க்கவும், நம்மை ஒடுக்கும் எதிரியின் கோட்டைகளையும், சிறைச்சாலைகளையும் தூள் தூளாக்கவும் நாமனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். உலகம் முழுவதிலும் இருக்கும் தொழிலாளர்களின் பார்வை ரஷ்ய தொழிலாளர் வர்க்கத்தின்மீது திரும்பியிருக்கிறது. பேரரசன் ஜாரை

ஒழிக்கும் பணியை நம் தொழிலாளர்கள் மிகுந்த துணிவுடன் தொடங்கி விட்டார்கள். இது உலக வரலாற்றில் மாற்றத்திற்கான ஒரு மைல்கல். இப்புரட்சி (1905) மற்ற நாடுகளில் உள்ள மற்ற தேசங்களின் பணியை எளிதாக்கும். புரட்சி வாழ்க! புரட்சிகர உழைப்பாளர் வர்க்கம் வாழ்க!"

மேலும் அந்நூல், 30 அக்டோபர் 1905இல் வெளியான "டெம்ப்ஸ்" என்னும் ஃபிரெஞ்சு பத்திரிகையில் வெளியான ஜாரின் அரசியல் அறிக்கை குறித்து லெனின் தெரிவித்த பின்வரும் கருத்துக்களைத் தாங்கிய கட்டுரையை மறுபதிப்பு செய்திருந்தது: ஓ பூஷ்வா அன்பர்களே! இத்தோடு முடிந்து விடவில்லை. ஜார் மன்னனை அடிபணியச் செய்த அச்சத்தின் சக்தியை தொழிலாளர்கள் மறந்து விடக்கூடாது. வலிமையைப் பயன்படுத்தியதால் மட்டுமே, அவர்களுடைய அமைப்பின் சக்தியால், அவர்களின் ஒற்றுமையின் சக்தியால், அவர்தம் சுய துணிவு மற்றும் தைரியத்தினால் மட்டுமே சுதந்திரத்தின் நிழல் என்றழைக்கப்படும் "அரசியல் அறிக்கை" என்னும் சிறு துண்டுக் காகிதத்தை ஜார் மன்னனின் கையிலிருந்து பெற முடிந்தது. அதிகார சக்தியால் மட்டுமே அவர்களால் உண்மையான சுதந்திரத்தைப் பறிக்க இயலும். தொழிலாளர்கள் இந்த விஷயத்தையும் மறக்கக்கூடாது. புரட்சியின் உரிமைகளைப் பாதுகாக்க தொழிலாளர் போராளிகள் குழுவை நாம் உருவாக்கியாக வேண்டும். அனைத்து கைதிகளையும் விடுவிக்க நாம் கிளர்ச்சியை தொடர வேண்டும். நம் செயல்பாட்டின் வழிமுறைகள் விரிவான நோக்கம் கொண்டதாக இருக்க வேண்டும். வேலை நிறுத்தம் நாடு முழுவதற்குமாக பரவியபோது புரட்சியாளத் தொழிலாளர்கள் இராணுவத்தை நடுநிலையாக்க சரியான திட்டம் தீட்டினார்கள், அவ்விதமே அவர்களை முடக்கினார்கள். இப்போது செய்யப்பட வேண்டியதெல்லாம் இராணுவ வீரர்களை மக்களின் பக்கம் திருப்புவது. அனைத்து விதமான கலவரங்களும் தூண்டப்பட வேண்டும். அவர்கள் தங்கள் கலவரங்களுக்காக போராடச் செய்வதன் மூலம் சுதந்திரத்துக்கான போராட்டத்தை வலுப்படுத்த வேண்டும். நகர்ப்புற தொழிலாளர்களுடன் ஒன்றிணைந்து, அவர்களின் பக்கம் நின்று தொடர்ந்து போராடும் வகையில் பிரம்மாண்டமான முறையில் கலவர இயக்கம் நடத்தப்பட வேண்டும். இந்த சதிகார அரசை அழித்து உண்மையான முழுமையான சுதந்திரம் அடையப்படும்வரை தொடர்ந்து புரட்சிகரமாக செயல்பட வேண்டும். இது மட்டுமே தற்போது சமூக குடியரசு கட்சியின் முன் இருக்கும் முக்கியப் பணி.

தெலுங்கு நூல் மேலும், ஒப்பீட்டளவில், ஆயுதப் போராட்டம் மற்றும் வேலை நிறுத்தங்களின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் குறித்து லெனின் எழுதியவற்றை குறிப்பிடுகிறது. அது லெனினை பின்வருமாறு மேற்கோள் காட்டுகிறது: "போராட்டத்தில் வெற்றி அடைய அமைதியான வேலை நிறுத்தம் மட்டுமே போதாது, பயமின்றி இரக்கமின்றி மக்கள் ஆயுதம் தாங்கிய போராட்டத்தை மேற்கொள்ள வேண்டும். இதை நாம் மக்களுக்கு சொல்ல வேண்டும். வெறும் வேலை நிறுத்தம் மட்டுமே போதுமானதல்ல என்பதை தெளிவாகவும் வெளிப்படையாகவும் ஒப்புக்கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது. ஆயுதப் போராட்டத்தின் தேவை குறித்து மக்களிடையே ஓர் பிரம்மாண்டமான பிரச்சாரத்தை நடத்த வேண்டும். எவ்வித சந்தேகத்திற்கும் ஒளிவு மறைவிற்கும் இடம் கொடாது, ஏமாற்று வார்த்தைகளால் பிரச்சினையை திசை திருப்பாது, நாம் கடக்க வேண்டிய நிலைகள் இன்னும் இருக்கின்றன என்பதை தெளிவுபடுத்தி நம் பிரச்சாரத்தை முன்னெடுக்க வேண்டும். பெரிய அளவில் குண்டுகள் உற்பத்தி செய்யும் முறைகள் தொழிலாளர் படைகளுக்கு கற்பிக்கப்பட வேண்டும். கட்சியின் தொழிலாளர் படைகளில் உள்ள இராணுவ திறன் கொண்டோர் வெடி மருந்துகள், வெடி பொருட்கள், தானியங்கித் துப்பாக்கிகள், போன்றவற்றை விநியோகிப்பதில் உதவி செய்ய வேண்டும். தாங்கள் ஓர் இரக்கமற்ற ஆயுதப் போராட்டத்தை மேற்கொண்டாக வேண்டும் என்கிற உண்மையை

மக்கள் உணர வேண்டும். அவர்கள் மரணத்துக்கு அஞ்சக் கூடாது. இவ்வகையில் நாம் வெற்றி பெறுவது நிச்சயம். நாம் எதிரியை மிகக் கடுமையாக எதிர்க்க வேண்டும். தற்காப்பு அல்ல, எதிரியை எதிர்கொள்வது மட்டுமே நம் ஒரே நோக்கமாக இருக்க வேண்டும். நம் எதிரியை இரக்கமின்றி அழிப்பது மட்டுமே நம் ஒரே கடமை.'' இவ்வாறான வேண்டுகோள்களை தன் நாட்டு மக்களிடம் வைத்தபின் ரஷ்யாவின் ஜார் அரசுக்கு எதிரான முக்கியப் புரட்சியை லெனின் திட்டமிட்டார்.

இத்தெலுங்கு நூல் பதிக்கப்பட்டதன் நோக்கத்தை அறிந்து மதராஸ் மாகாண அரசு 11 ஏப்ரல் 1933 அன்று, பிரிவு4(1) இந்திய பத்திரிகை சட்டம் (அவசரகால அதிகாரம்) 1931ஆல் திருத்தப்பட்ட குற்றவியல் திருத்த சட்டம், 1931 (Act XXIII of 1931)இன்கீழ் உள்ள பிரிவு16இன்கீழ் அந்நூல் பறிமுதல் செய்யப்படுவதாக அறிவித்தது.

மதராஸ் மாகாண அரசு, 10 ஆகஸ்ட் 1938 அன்று மதராஸின் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியால் பதிப்பிக்கப்பட்டு சுற்றில் விடப்பட்ட இந்தியாவில் அராஜக ஆட்சி: கம்யூனிஸ்டுகளின் குறிக்கோள் என்ற தலைப்பிலான பொதுவுடைமை துண்டுப் பிரசுரங்களைக் குறித்து ஓர் அதிகாரப்பூர்வமான அறிவிப்பை வெளியிட்டது. அவ்வறிவிப்பு கூறுவது: இவை, பொதுவுடைமைக் கட்சி நாட்டிற்குள் அறிமுகப்படுத்த எண்ணியுள்ள கோளாறுகள் மற்றும் குழப்பங்கள் குறித்தும், மேலும் அக்கட்சி நடத்த உறுதி பூண்டுள்ள களியாட்டங்கள் குறித்தும் தெளிவு படுத்துகிறது. இந்தியாவின் பாரம்பரியத்திற்கும், கலாச்சாரத்திற்கும் முற்றிலும் எதிரான சித்தாந்தங்களையும், வழிமுறைகளையும் கொண்ட ஓர் இயக்கத்தில் பொதுமக்கள் தங்களை அறியாமல் ஈடுபடுத்திக்கொள்ளக்கூடிய சூழலை தவிர்த்து, கவனமாக இருப்பதற்காக இத்தகைய நோக்கங்களை அம்பலப்படுத்த வேண்டியது தங்களின் கடமை என அரசு எண்ணுகிறது.

அந்த அறிவிப்பு மேலும் கூறுவது: ''அதில் ஒரு துண்டுப் பிரசுரம் தேசிய முதலாளித்துவ வர்க்கம் மற்றும் தேசிய காங்கிரஸின் அடிப்படை பிரச்சினைகளை விவாதிக்கிறது. ஏகாதிபத்திய, முதலாளித்துவ வர்க்கத்தின் சர்வாதிகார சக்தியை ஒப்பிடும்போது தேசிய காங்கிரசை ஓர் அரசியலமைப்பு இயக்கமாக மட்டுமே விவரிக்கிறது; மேலும், மக்களை அரசியல் அறியாமையில் வைத்திருந்து, தேசிய முதலாளித்துவ வர்க்கத்தால் முன்மொழியப்படும் அரசியலமைப்பு சபை ஏகாதிபத்தியத்திலிருந்து சுதந்திரம் பெற்றதாக அர்த்தமாகாது ஆனால், இந்திய மக்களை கூட்டாக இணைந்து சுரண்ட ஏகாதிபத்திய, முதலாளித்துவ வர்க்கத்திற்கும் தேசிய முதலாளித்துவ வர்க்கத்திற்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட கூட்டணி மற்றும் சமரசத்தின் உச்ச வடிவமும் ஆகும்.'' பொதுவுடைமை துண்டுப் பிரசுரம் காங்கிரஸ் கட்சியை தேசிய முதலாளித்துவ வர்க்கம் என்று விமர்சிப்பதோடு ஆளும் காங்கிரஸ் விடுதலை அடைய வேண்டும் என்கிற தன் முக்கிய நோக்கத்தை கைவிட்டுவிட்டதாகவும் அதன் ஆட்சியை ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தோடும் ஒப்பிடுகிறது.

காங்கிரஸ் மக்கள் போராட்டத்தில் கலந்து கொள்ளாமல், சுதந்திரம் பெறுவதற்கான வேலைகளைச் செய்யாமல், மக்களை ஆள மட்டுமே செய்கிறது என்று அத்துண்டுப் பிரசுரம் காங்கிரசை மேலும் விமர்சிக்கிறது. அது கூறுகிறது ''அது இரட்டைப் போக்கை எடுத்துள்ளது. ஒன்று, சீர்திருத்தவாதம் மற்றும் அரசியலமைப்புவாதம் சார்ந்தது. மற்றொன்று, உறுதியான புரட்சிகர தேசியவாதம் மற்றும் வெகுஜன நடவடிக்கை சார்ந்தது. உழைக்கும் மக்களின் புரட்சிகர முன்னணி படை இந்திய பொதுவுடைமை கட்சி வர்க்கப் போராட்டத்தை உருவாக்கி, 'புரட்சிகர தேசிய வேலை நிறுத்தத்தை' அறிவிக்கும்.''

புரட்சிகர தேசிய வேலைநிறுத்தம் மட்டுமே இந்தியர்களுக்கு உள்ள ஒரே தீர்வு என்று அறிவித்து துண்டுப் பிரசுரம் வேலை நிறுத்தத்தை பின்வருமாறு விவரிக்கிறது:

"புரட்சிகர வேலைநிறுத்தம்: தொழிலாளர்கள் தங்கள் கருவிகளை கீழே போட்டு விடலாம்; அறிவு ஜீவிகள் தங்கள் மேசையை விட்டு வெளியேறலாம்; மாணவர்கள் வீதிக்கு வரலாம்; விவசாயிகள் வரிகள் மற்றும் வாடகைகளை கொடுக்க மறுக்கலாம்; இரயில்கள் ஸ்தம்பிக்கலாம்; தொழிற்சாலைகள் ஆலைகள் மற்றும் மின் நிலையங்கள் மூடப்படலாம்; இராணுவம் மற்றும் ஆயுதப் படைகள் தடுமாறி தள்ளாடலாம்; இராணுவம் மற்றும் ஆயுத சக்திகளின் பெரும் பகுதி வீரர்கள், புரட்சிகர வீரர்கள் குழவினரால் வென்றெடுக்கப்பட்டு, அவர்கள் தேசியப் போராட்டத்தின் பக்கம் இழுக்கப்படலாம். இதுபோலான பந்தங்கள், தங்களின் வேலை நிறுத்தம் செய்யும் சகோதரர்களோடு சகோதரத்துவம் பாராட்டலாம்; தங்களின் சொந்த ஏகாதிபத்திய அதிகாரமிக்க தளபதிகளை நிராயுதபாணிகளாக்கி, புரட்சிகர மக்களின் பாதுகாப்புப் படையுடன் இணைந்து புரட்சிகரப் போராளிகள் குழுக்களை உருவாக்கலாம்."

அது மேலும் கூறுகிறது, "தேசிய வேலைநிறுத்தம் தேசிய புரட்சியாக வளரலாம். இதுவரை அமைதியாகவும் தற்காப்பை பின்பற்றியும் இருந்து வரும் புரட்சிகர மக்கள் போராளிகள் படை, தங்களால் இயன்றவரை மக்களுக்கு ஆயுதம் அளிக்கக் கடமைப்பட்டுள்ளது என்கிற ஏகாதிபத்திய இராணுவக்காரர்களின் பெருமைமிகு சவாலை ஏற்றுக்கொள்ள வேண்டும். போராளிக் குழுக்கள் உள்ளூர் ஆயுதக் களஞ்சியங்களையும், காவல் நிலையங்களையும் கைப்பற்ற வேண்டும்; இதுவரை இல்லாத மிகப்பெரும் மிக வலிமையான போராளிக்குழுவை அணிதிரட்ட வேண்டும் இறுதியாக, உள்ளூர், மாவட்ட, மாகாண, மற்றும் தேசிய இராணுவ குழுக்களைத் தூக்கியெறிந்து புரட்சிகர தேசிய முன்னணியுடன் தொடர்புடைய குழுக்களின்கீழ் செயல்பட்டு அதன் மூலம் உழைப்பாளிகளின் முன்னணி படையின் ஓர் புரட்சிகர யுத்தத்திற்கு வித்திட வேண்டும்."

சோவியத் குடியரசுகளின் ஒன்றியத்துடன் மிக நெருக்கமான உறவைக் கொண்டிருக்கும் ஓர் சோவியத் குடியரசை நிறுவுவதே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதான நோக்கம் என்று அத்துண்டுப் பிரசுரம் மேலும் விவரிக்கிறது: "அத்தகையதோர் நிலை எழுந்திருக்கும் சூழலில், அகிம்சை முறைப் போராட்டங்களுக்கு இடமிருக்காது". நாங்கள் ஏன் அகிம்சை என்னும் நம்பிக்கையை எதிர்க்கிறோம்? என்று தலைப்பிடப்பட்ட மற்றொரு துண்டுப் பிரசுரத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, புரட்சிகர சித்தாந்தத்தை முதன்மை காரணியாகக் கொண்டு செயல்படுவதன் மூலம் இந்நாட்டிலிருந்து அகிம்சையை நீக்கி, தமிழகத்தை ஊக்குவிக்க விரும்புவதாக பிரசுரிக்கப்பட்டிருந்தது. அத்துண்டுப் பிரசுரம், கம்யூனிஸ்ட் கட்சியை ஓர் சட்டவிரோத இயக்கமாகக் கருதும் உத்தரவை பிறப்பித்த மதராஸ் மாகாண முதன்மந்திரி C.ராஜகோபாலச்சாரியின் மதராஸ் மாகாண காங்கிரஸ் அரசை மிகக் கடுமையாக விமர்சித்தது.

காரல் மார்க்ஸின் மூலதனம்

மூலதனம் (Das Capital) அல்லது அதைப் போன்ற செவ்வியல் மார்க்சிச படைப்புகளில் ஒன்றான மார்க்ஸ் மற்றும் எங்கல்ஸ் இணைந்து எழுதிய பொதுவுடைமை அறிக்கை (Communist Manifesto) போன்றவை உலகம் முழுவதும் கல்விசார் ஆர்வம்மிக்க படைப்புகளாகும். ஆனால், பொது கம்யூனிஸ்ட் அறிவிப்பு 1932இன்படி, பொதுவுடைமை அமைப்புகளால் வெளியிடப்பட்ட அல்லது முன்னணி பொதுவுடைமைவாதிகளால் தொகுக்கப்பட்ட அவற்றின் சில பதிப்புகள் ஆட்சேபனைக்குரியதாக கருதப்பட்டது. இந்த அறிவிப்பின் அடிப்படையில் பம்பாய், மதராஸ், மற்றும் கல்கத்தா சுங்க அதிகாரிகள் அத்தகைய பதிப்புகளை பிரித்தானிய இந்தியாவுக்குள் நுழைய முடியாத வண்ணம் பொதுத்தடை விதித்தனர்.

ரஷ்யாவின் மாஸ்கோவிலிருந்து வந்த மூலதனம் நூலின் கல்விசார் முக்கியத்துவத்தை உணர்ந்த இந்தியா ஹவுஸ், லண்டன் அலுவலகம், அந்நூல் மாஸ்கோவிலிருந்து நேரடியாக வருவதற்கான தடையை நீக்கியது. இதனிடையே, லண்டனை தலைமையிடமாகக் கொண்ட தாமஸ் நெல்சன் & சன்ஸ் லிமிடெட் என்னும் நிறுவனம் மூலதனம் நூலின் இங்கிலாந்து பதிப்பை பிரித்தானிய இந்தியாவுக்குள் 1936 முதல் இறக்குமதி செய்து வந்தது. பம்பாய் சுங்க அதிகாரிகள் 7 செப்டம்பர் 1938 அன்று, திருவாளர் தாராப்பூர்வாலா ஆஃப் பாம்பே என்னும் நிறுவனம் பம்பாய் துறைமுகம் வழியாக தருவித்திருந்த மார்க்ஸின் பெரும் எண்ணிக்கையிலான மூலதனம் நூலை பறிமுதல் செய்தனர். பின்னர் அந்நிறுவனம் இழப்பை சந்திக்கக் கூடாது என்று மீண்டும் அவர்களுக்கே திருப்பி அனுப்பினார்கள். அதன்பின் தாராப்பூர்வாலா நிறுவனம், ஆங்கிலேய கம்யூனிஸ்ட் தலைவரான ஜான் ஸ்ட்ராச்சியின் முன்னுரையுடன் கூடிய மூலதனம் நூலின் சுருக்கப்பட்ட பதிப்பின் ஐந்து பிரதிகளை பம்பாய் சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்துவிட்டதாக தாமஸ் நெல்சன் & சன்ஸ் நிறுவனத்துக்கு தகவல் அனுப்பியது. அதுவரையில் அந்நூலின் மற்ற பதிப்புகள் இந்தியாவில் விற்பனைக்கு கிடைத்து வந்தன; மேலும் உள்ளபடியே, கடந்த சில ஆண்டுகளில் பறிமுதல் செய்யப்பட்ட அதே பதிப்பின் பல பிரதிகள் இந்திய வாடிக்கையாளர்களுக்கு விற்கப்பட்டுள்ளன. நெல்சன் & சன்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குனரான S.B.வாட்சன், 7 செப்டம்பர் 1938 அன்று லண்டன் இந்திய அலுவலகத்தின் வெளியீடு மற்றும் நீதித்துறையின் செயலாளருக்கு தங்கள் வெளியீட்டுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து விளக்கம் அளிக்குமாறு கடிதம் ஒன்றை எழுதினார். அதனோடு, குறிப்பாக, மூலதனம் நூலின் இப்பதிப்பு தடை செய்யப்பட்டுள்ளதா, அப்படியானால் எதற்காக என்ற விவரத்தையும் அளிக்குமாறு அதிகாரிகளிடம் வேண்டுகோள் வைத்தார். அதுவரை அந்நூல் மாணவர்களுக்கான நூல் என்றெண்ணி எவ்விதத் தடையுமின்றி நாடு முழுவதும் புழக்கத்தில் விடப்பட்டிருந்தது.

S.B.வாட்சன் மேலும் எழுதுகிறார், "பிரித்தானிய இந்தியாவுக்குள் இறக்குமதி செய்யப்படும் நூல்களின் தணிக்கை முறை குறித்து எங்களுக்கு தெரிவிக்கப்பட்டால் நாங்கள் மிகுந்த கடமைப்பட்டவர்களாக இருப்போம். உதாரணமாக, தணிக்கை அதிகாரியின் பெயர், எந்த விதிகளின்படி தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டது மற்றும் அதன் பின்பான நடைமுறைகள் குறித்து பாதிப்பாளர்களுக்கு என்ன தகவல் அனுப்பப்பட்டது போன்றவை."

இங்கிலாந்து மற்றும் அயர்லாந்து பதிப்பாளர்கள் சங்கத்தின் செயலர், லண்டன் இந்திய அலுவலகத்தின் இந்திய துணை தலைமைச் செயலாளருக்கு 20 செப்டம்பர் 1938 அன்று ஓர் அலுவல்பூர்வமான கடிதத்தை அனுப்பினார். அதில், தங்கள் சங்கத்தின் உறுப்பினரான நெல்சன் & சன்ஸ் லிமிடெட், லண்டன் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட காரல் மார்க்ஸின் மூலதனம் நூல் தடை செய்யப்பட்டதற்கான காரணத்தை தெரிவிக்குமாறு வேண்டுகோள் விடுத்து பின்வருமாறு எழுதினார்: "குறிப்பிடப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஏற்பாட்டின்கீழ், குறிப்பிட்ட சில நூல்கள் இந்தியாவுக்குள் நுழைவது தடை செய்யப்பட்டுள்ளதாக இதுவரை தெரிவிக்கப்பட்டு வந்தது, ஆனால் இந்த மார்க்சின் மூலதனம் நூல் குறித்து இதுவரை எங்களுக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை."

இந்திய அரசாங்கத்தின் துணைச் செயலாளரான J.G. சிம்ஸ் 23 நவம்பர் 1938 தேதியில், லண்டன் இந்திய அலுவலகத்தின் இந்திய துணை தலைமைச் செயலாளருக்கு ஓர் ரகசிய கடிதம் எழுதினார். அதில், காரல் மார்க்ஸின் மூலதனம் நூலின் தடை தொடர்பான அரசின் நிலை குறித்து குறிப்பிட்டிருந்தார். இக்கடிதத்தில், காரல் மார்க்ஸின் மூலதனம் நூல்மீது எவ்வித தடையும் இல்லை; அதேபோல், G.D.H. கோல்

அவர்களின் முன்னுரையுடன் J.M. டென்ட் அவர்களால் வெளியிடப்பட்ட "எவ்ரி மேன்ஸ் லைப்ரரி" என்னும் நூலில் வெளியானது போன்று எந்தவொரு பதிப்புக்கும் விதிவிலக்கு அளிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும் அக்கடிதத்தில், கம்யூனிஸ்ட் அலுவலகங்களால் வெளியிடப்பட்ட அல்லது முன்னணி கம்யூனிஸ்டுகளால் தொகுக்கப்பட்ட மற்றும் இந்தியாவில் பொதுவுடைமையின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் எண்ணத்தில் எழுதப்பட்ட கருத்துக்கள் மற்றும் முன்னுரைகளைக் கொண்ட நூல்கள் ஆட்சேபனைக்குரியதாக கருதப்பட்டு அவை 10 செப்டம்பர் 1932 தேதியிட்ட நிதித்துறை (மத்திய வருவாய்) பொது அறிவிப்பு எண்.61இன்கீழ் இந்தியாவிற்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவிக்கிறார். இறுதியாக, நெல்சன் நிறுவனத்தால் பதிப்பிக்கப்பட்ட மார்க்ஸின் மூலதனம் நூல் பம்பாயின் தாராப்பூர்வாலா நிறுவனத்தால் தருவிக்கப்பட்டு மும்பை சுங்க அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டாலும், பின்னர் பறிமுதல் செய்யப்பட்ட ஐந்து பிரதிகளும் மீண்டும் லண்டன் பதிப்பாளர் அலுவலகத்துக்கு திருப்பி அனுப்பப்பட்டது என்று அக்கடிதம் தெரிவித்தது.

லெனின் சுயசரிதை பறிமுதல்

லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், லண்டன் நிறுவனம் 28 ஏப்ரல் 1945 அன்று மதராஸ், மவுண்ட்ரோடில் அமைந்துள்ள ஹிக்கின்பாதம்ஸ் நிறுவனத்துக்கு அனுப்பிய லெனினின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் தொகுதி 1 மற்றும் 2 என்னும் நூல்களின் 28 பிரதிகள் பிரிவு19இன்கீழ் மதராஸ் துறைமுகத்தில் பறிமுதல் செய்யப்பட்டதாக உள்துறை மற்றும் உளவுத்துறைக்கு சுங்க அதிகாரிகள் தகவல் அனுப்பினார்கள்.

மேற்சொல்லப்பட்ட தலைப்புகளிலான நூல்கள் அதற்கு முன்புவரை, எந்த ஒரு குறிப்பிட்ட அறிவிப்பின்படியும் இந்திய அரசால் தடை செய்யப்படவில்லை. பொது அறிவிப்பின்கீழ், மதராஸ் மாகாண அரசு அதிகாரிகளுடன் ஆலோசித்து மதராஸ் சுங்க அதிகாரிகள் தாங்களே இவ்வாறு செயல்படுகிறார்கள் என்றே அனுமானிக்க வேண்டி இருக்கிறது. லண்டன், லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட லெனினின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் நூலின் முதல் தொகுதி ரஷ்ய மொழியில் இருந்தது. மதராஸ் ஹிக்கின்பாதம்ஸ் நிறுவனத்தால், அந்நூல் 58 பிரதிகள் (1944 பதிப்பு) மற்றும் அதனுடன் அதே லாரன்ஸ் & விஷார்ட் நிறுவனத்தால் பதிப்பிக்கப்பட்ட லெனினின் மனைவி N.குரூப்ஸ்கயா எழுதிய லெனின் நினைவு குறிப்புகள் என்னும் நூல் 10 பிரதிகளும் இறக்குமதி செய்யப்பட்டன. முதல் நூல், கடல் சுங்க சட்டம் பிரிவு 19இன்கீழ் தடை செய்யப்பட்டு அதன் பிரதிகள் அதே சட்டத்தின் பிரிவு167(8)இன்கீழ் பறிமுதல் செய்யப்பட்டது. மத்திய புலனாய்வுத் துறையின் (CID) மதராஸ் சிறப்பு பிரிவு காவல் கண்காணிப்பாளர் இரண்டாம் நூல் தொடர்பாக ஓர் குறிப்பை அனுப்பினார். அவர் அனுப்பிய 26 மே 1945 தேதியிட்ட கடிதம் எண்.3379/சி தெரிவித்த அறிவுரையின் பேரில் இப்புத்தகங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. பறிமுதல் ஆணைகளுக்கு எதிராக இறக்குமதியாளர்கள் தங்களின் தீர்வு முகவரான திருவாளர். ஸ்பென்சர்–கோ லிமிடெட், மெட்ராஸ் நிறுவனத்தின் மூலம் லெனின் படைப்புகளை வந்த இடத்திற்கே திருப்பியனுப்ப அனுமதி கோரி விண்ணப்பித்தார்கள். மதராசின் இறக்குமதியாளர் மற்றும் தீர்வு முகவர் இருவரின் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு காவல்துறைக்கு ஆணையிடப்பட்டது.

இரண்டாவது நூலான லெனினின் நினைவுக் குறிப்புகள் தொடர்பான விவகாரம் வேறுவிதமானது. அந்நூலின் உள்ளடக்கம், ரஷ்யாவின் கம்யூனிஸ்ட் இயக்கங்களில் லெனினின் ஈடுபாடுகள் குறித்ததாகும். நூலின் ஆசிரியர் V.க்ருப்ஸ்கயா, சோவியத் ரஷ்ய அரசாங்கத்தின் முன்னாள் தலைவரான விளாதிமிர் லெனின் அவர்களின் மனைவி

ஆவார். மேலும் அவர், கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு மற்றும் சோவியத் யூனியன் குடியரசின் உச்ச நிருவாக சபை உறுப்பினராகவும் பதவி வகித்தவராவார். சர்வதேச கம்யூனிஸ்ட் அல்லது அதனுடன் இணைந்த அமைப்புகளில் பதவி வகிப்பவர்களால் வெளியிடப்படும் அல்லது அந்த அலுவலகங்களிலிருந்து வெளிவரும் அனைத்து விதமான ஆவணங்களும், இந்திய நிதித்துறை (மத்திய வருவாய்) எண்.61 மற்றும் சுங்கத்துறை 10.09.1932 தேதியிட்ட, இந்திய அரசால் வெளியிடப்பட்ட பொது கம்யூனிஸ்ட் அறிக்கையின்படி தடை செய்யப்பட்டுள்ளன. ஆகவே இந்நூலும் மேற்சொல்லப்பட்ட அறிவிப்பின்படி பிரித்தானிய இந்தியாவுக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டது. இந்திய அரசின் நிதித்துறை (மத்திய வருவாய்) 21 ஜனவரி 1943 தேதியிலான அறிவிப்பு எண்.3, முந்தைய பொது கம்யூனிஸ்ட் அறிவிப்பை பின்னுக்குத் தள்ளி புதியதாக அறிவிக்கப்பட்டது. மேலும் உளவுத்துறை இயக்குநர் ஏற்கெனவே பொது கம்யூனிஸ்ட் அறிவிப்பின்படி ஆட்சேபனைக்குரியதாக கருதப்பட்ட வெளியீடுகளை புதிய அறிவிப்பின்படி தொடர்ந்து நிறுத்தி வைக்குமாறு அறிவுறுத்தினார்.

இறுதியாக, இந்திய அரசாங்கத்தின் துணைச் செயலர், மதராஸ் சுங்க வசூல் அதிகாரிக்கு அனுப்பிய D.A.No.515/cus/I/45/ என்னும் கடிதத்தில், புத்தகக் கட்டுகளைக் கொண்ட சரக்கை விடுவித்து லண்டனிலிருந்து சரக்கை அனுப்பியவர்களிடமே திருப்பி அனுப்புமாறு அறிவுறுத்தினார்.

பொது கம்யூனிஸ்ட் அறிவிப்பிற்கான மாற்று

இந்திய அரசாங்கத்தின் துணைச் செயலரான F.G.க்ராக்வெல், இந்திய அரசுக்கு 29.08.1945 தேதியில் எழுதிய இரகசிய அதிவிரைவுக் கடிதத்தில், இந்தியாவுக்குள் இறக்குமதி செய்யப்படும் ஆட்சேபனைக்குரிய கம்யூனிஸ்ட் இலக்கியங்களை நிறுத்தி வைப்பதற்கான பொது கம்யூனிஸ்ட் அறிவிப்பு 1932 மாற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தார். 21.01.1943 தேதியிட்ட அறிவிப்பு எண்.3இன்கீழ் கம்யூனிஸ்ட் இலக்கியங்களை நிறுத்தி வைக்கும் முறையை கைவிட அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகவும், எதிர்காலத்தில் இந்தியாவுக்குள் நுழைய முயற்சிக்கும் அவ்வாறான நூலை தடுத்து நிறுத்த கடல் சுங்க சட்டத்தின் குறிப்பிட்ட அறிவிப்பின்கீழ் செய்யப்படும் என்றும் தெரிவித்தார். மேலும் இந்த விதிவிலக்கு, நிதித்துறை (மத்திய வருவாய்) 12 பிப்ரவரி 1944 தேதியிட்ட அறிவிப்பு எண் 5ற்கு எதிரான குற்றத்துக்குரிய நூல்களுக்கு மட்டுமே பொருந்தும், மற்றபடி காலாட்படை அல்லது கொரில்லா உத்திகள், நாச வேலை அல்லது வெடிப்பொருட்கள் மற்றும் இராணுவ ஆயுதங்களை பயன்படுத்துதல் போன்ற அதிகாரப்பூர்வ விஷயங்களுக்குப் பொருந்தாது என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிவிப்பு தரும் பொதுவான அதிகாரங்களைக்கொண்டு இவ்வரையறைக்குட்பட்ட பொதுவுடைமை இலக்கியங்களை தடுத்து நிறுத்துவதை அவர்கள் தொடர்ந்து செய்ய வேண்டும் என்பது குறித்து இந்திய அரசாங்கம் மேலும் தெளிவுபடுத்தியது; அதே சமயம், இதுபோலான உள்ளடக்கங்களைக் கொண்ட ஒவ்வொரு புத்தகத்தையும் இப்புதிய அறிவிப்பின்கீழ் தடுத்து நிறுத்தலாம் என்றும் கூறியது. இவ்வாறு பொதுவுடைமை இலக்கியங்களுக்கு எதிரான நடவடிக்கையை சூழலுக்குத் தக்கவாறு எடுக்கலாம் என்று அனைத்து உள்ளூர் அரசு அதிகாரிகளுக்கும் தகவல் அனுப்பப்பட்டது.



10

காலனித்துவ மதராசில் கல்வி, வேலையின்மை மற்றும் சுதந்திரப் போராட்டம்

கௌதம் சந்திரா,
பேராசிரியர்
பாபா சாகேப் பீம்ராவ் அம்பேத்கர் பல்கலைக்கழகம்
பீகார்

முன்னுரை

ஆங்கிலேய காலனித்துவம், மதராஸ் மாகாணத்தின் விவசாயக் கொள்கை, நிருவாகம், மற்றும் கல்வி ஆகியவற்றில் புதிய நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி மற்றும் 19ஆம் நூற்றாண்டின் தொடக்ககாலப் போக்கை, மாற்றத்தை நோக்கி துரிதப்படுத்தியது. "மெக்காலே நிமிடம்" என்னும் தீர்மானம் 1835இல் சட்டமாக இயற்றப்பட்ட பின்பும், 1857இல் மதராஸ் பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட பின்பும், இந்திய கல்வி முறை அதிவேகமான விகிதத்தில் உயர்நிலை மற்றும் பல்கலைக்கழக பட்டதாரிகளை உருவாக்கத் தொடங்கியது. அது, மருத்துவம், பொறியியல், சட்டம், கணக்கியல், கல்வியியல் மற்றும் மற்ற துறைகளில் வேலை வாய்ப்புகளையும் தொழில்களையும் உருவாக்க வித்திட்டது. மாறும் கல்வி கட்டமைப்பு, வேலைக்கு விண்ணப்பிக்கும் ஒருவரின் சாதி நியமனத்துக்கான அளவுகோலாக இல்லாமல் கல்வித் தகுதி, தேர்வு மற்றும் போட்டிகளில் அவருடைய செயல்திறன் எவ்வாறு இருந்தது என்பதை அடிப்படையாகக்கொண்டு அமையும் நிலையை உறுதி செய்தது.

மொத்தத்தில், பரிந்துரைக்கப்பட்ட கல்வியின் தரம் மற்றும் போட்டியில் வெற்றிகரமான செயல்திறனை வெளிப்படுத்துதல் ஆகியவையே அரசுப் பணிகளுக்குள் நுழைவதற்கான முதல் படியாக அமைந்தன. அதேசமயம், அரசாங்கத்தின் அளவும் வாய்ப்பும் ஒருபுறம் மிக வேகமாக அதிகரிக்க, மற்றொருபுறம் படித்த வர்க்கத்தினரின் பரவல் மேலும் குறிப்பிடத்தகுந்த அளவில் அதிகரித்திருந்தது. அதன்பின், ஒரு படித்த மனிதன் வேலை பெறுவதும், அரசாங்க ஊழியராக நல்ல பணம் ஈட்டுவதும், சுலபமான ஒன்றாக இருக்கவில்லை. 1930களில் படித்த வர்க்கத்திடையே வேலையின்மை ஓர் முக்கிய பிரச்சினையாக மாற, இதனை விசாரிக்க மதராஸ் வேலையின்மை குழு ஒன்று அமைக்கப்பட்டது. வளர்ந்து வந்த இப்பொருளாதார மற்றும் கல்வி பிரச்சினைகள் உள்நாட்டு அறிவுஜீவிகளின் அரசியல் நடத்தைகளில் மாற்றத்தை ஏற்படுத்தியது, மேலும் அது மதராசின் சுதந்திரப் போராட்டத்திலும் ஓர் முக்கியப் பங்காற்றியது.

வரலாற்று வரைவியலும்கூட, படித்த வர்க்கத்தின் பிரச்சினைகளான வேலையின்மை, போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுதல் போன்ற பல்வேறு சவால்களின்மீது தன் கவனத்தை திருப்பவில்லை. தொடர்ந்து இச்சிக்கல்கள் எப்படி உருவானது, மேலும் அவை அம்மாகாண தேசியவாதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியை எவ்வாறு பாதித்தது என்பவற்றிற்கு வரலாற்றுப் படைப்புகள் முக்கியத்துவம் அளிக்கவில்லை. படித்த சமூகத்தினர் குறித்த ஆய்வுகள் புறக்கணிக்கப்பட்ட இந்தப் பின்னணியில், இந்தியாவின் குறிப்பிடத்தக்க பொருளாதார வரலாற்று ஆசிரியரான தர்ம குமார் சேவைகள் துறையை "ஓர் மறக்கப்பட்ட துறை" என்று சரியாக அழைக்கிறார். இந்தக் கண்ணோட்டத்தில், படித்த வர்க்கத்தின் தோற்றம், அவர்களின் சவால்கள், வேலைவாய்ப்பின்மை பிரச்சினை மற்றும் மதராஸ் மாகாணத்தின் சுதந்திரப் போராட்டத்தில் அவர்களுடைய பங்கு ஆகியவற்றை பகுப்பாய்வு செய்ய இக்கட்டுரை முயற்சிக்கிறது.

கல்வியின் வளர்ச்சி

ஆங்கிலேயருக்கு முன்பான மதராசில் கல்வியின் நிலை அவநம்பிக்கைக்குரியதாக இருந்ததில்லை. ஆங்கிலேய ஆட்சி தொடங்குவதற்கு வெகுகாலம் முன்பே உள்நாட்டு கல்வி முறை, இந்தியாவின் மற்ற சில பகுதிகளைப்போலவே, இப்பிராந்தியத்திலும் எங்கெங்கும் பரவியிருந்தது. இந்து மடங்கள், தொடக்கநிலை மற்றும் இடைநிலைப் பள்ளிகள், சட்டம், தர்க்கம், வானவியல், வேதங்கள், மற்றும் தமிழ் இலக்கியங்களை பயிற்றுவித்த கல்லூரிகள் ஆகியவை இருந்தன. தாமஸ் மன்றோ ஆளுநராக இருந்த சமயம், 1822இல் நடத்தப்பட்ட ஓர் ஆய்வு, மாகாணத்தில் 12,498 உள்நாட்டு பள்ளிகள் இருப்பதாக தெரிவித்தது. இச்சூழ்நிலைகளுக்கு இடையே கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியின்கீழ், இந்தியாவில் கல்வி முதலில் புறக்கணிக்கப்பட்டது. 19ஆம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகள் வரை இந்தியாவில் கல்வியின் நிலையை ஆராய்ந்தறிந்து உறுதி செய்வதில் அரசு ஆர்வம் காட்டவில்லை. சாசன சட்டம் 1813க்குப் பின், ஆங்கிலேய ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் வாழ்வோரின் இலக்கியம் மற்றும் அறிவியல்களின் அறிவை மேம்படுத்துவதற்காக ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்ட பின்பே, ஓர் மாகாண கல்வி முறை அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து, 1835இல், ஆங்கில வழியிலான மேற்கத்திய கல்வியைப் பரப்ப வேண்டும் என்கிற மெக்காலே பிரபுவின் தீவிர வேண்டுகோள்களுக்கு அரசு இணங்கிய பின்னர், அரசாங்கத்தால் பராமரிக்கப்படும் கல்வி நிறுவனங்களில் வட்டார மொழிகளை பயிற்றுவிக்கும் மொழியாக பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அதற்கு மதராஸ் மாகாண அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

காலனித்துவ மதராஸின் உயர்கல்விக்கான முதல் கோரிக்கை, 11 நவம்பர் 1839 அன்று நடந்த பொதுக்கூட்டத்தில், 70,000 பூர்வக்குடி மக்களால் கையெழுத்திடப்பட்டு மதராஸ் ஆளுநர் பிரபு ஜான் எல்ஃபின்ஸ்டோன் அவர்களிடம் அளிக்கப்பட்டது.

பிரபு, நாங்கள் இந்த மாகாணத்தின் மக்கள். பல ஆயிரம் தலைமுறைகளாக இந்நிலத்தின் வாரிசுகள். நாட்டின் மிகப் பழமையான பூர்வக்குடியிலிருந்து வரும் இந்திய ஆங்கிலேய அதிகாரத்தின் குடிமக்கள் நாங்கள். ஆனால், எங்களுக்கான கல்லூரி நிறுவனங்கள் எங்கிருக்கின்றன? இரு சகோதர மாகாணங்களை (வங்காளம் மற்றும் பம்பாய்) அலங்கரிப்பது போன்று, இந்தப் பெருந்தன்மைமிக்க குடிகளுக்காக அவை எங்கு நிறுவப்பட்டுள்ளன? எங்களுக்காக, எங்களை நினைவுகூறும் அருளாளர் எவரும் இருந்ததே இல்லை.

அக்கூட்டம் மக்களின் உரிமைகளைப் புரிந்து கொள்வதற்கான ஓர் தொடக்கம் என்றே விவரிக்கப்பட்டது. மக்களின் வேண்டுகோளை ஆளுநர் சாதகமான முறையில் பெற்றுக்கொண்டதோடு, 12 டிசம்பர் 1839 தேதியிலான தன் கல்வி குறிப்பாணையில் ஓர் மத்திய கல்லூரிசார் நிறுவனத்தை நிறுவுவதற்கான ஓர் திட்டத்தை உருவாக்கினார். அவருடைய அத்திட்டத்தின் பலனாக, 14 ஏப்ரல் 1841 அன்று மதராஸின் டிமான்டி ஹவுஸ் என்னுமிடத்தில் ஓர் உயர்நிலைப்பள்ளியும், பின்னர் ஏப்ரல் 1853இல் ஓர் கல்லூரியும் துவங்கப்பட்டது. அக்கல்லூரி 1855இல் பிரெசிடென்சி கல்லூரி என்று பெயரிடப்பட்டது. சார்ல்ஸ் வுட் அறிக்கை, 1854இல் மதராசில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவ முன்மொழிந்த போது, பிரெசிடென்சி கல்லூரி வளாகமே அப்பல்கலைக்கழகத்தின் முதல் இருப்பிடமாக சில காலம் இருந்தது.

மதராஸ் பல்கலைக்கழகம் 5 செப்டம்பர் 1857 அன்று இந்திய சட்டமன்ற மேலவையின் சட்டத்தால் ஒருங்கிணைக்கப்பட்டது. இந்நிறுவனம், அதன் சகோதர நிறுவனங்களான கல்கத்தா மற்றும் பம்பாய் பல்கலைக்கழகங்களைப் போலவே லண்டன் பல்கலைக்கழகத்தை முன்மாதிரியாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டது. அப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருந்த கல்லூரிகள் மாகாணம் முழுவதும் பரவியிருந்தன. அதே காலகட்டத்தில், குடிமைப் பொறியியல் கல்லூரி, மதராஸ் மருத்துவக் கல்லூரி, மற்றும் பிரெசிடென்சி கல்லூரியில் சட்ட வகுப்புகள் ஆகியவை நிறுவப்பட்டதன் மூலம் முறைப்படியான அறிவியல், தொழில்நுட்ப, மற்றும் மருத்துவக் கல்வியை வழங்குவதற்கான முயற்சி தொடங்கப்பட்டது. இவ்வளர்ச்சிகளுக்குப்பின், மதராஸ் இந்தியாவின் மிகச்சிறந்த கல்வி பெற்ற நகரமாக மாறியது. ஒவ்வொரு நான்கு பேரில் ஒருவர் எழுத்தறிவு பெற்றவர் என்கிற நிலையை எட்டியதோடு பல்கலைக்கழக நுழைவுத் தேர்வுக்கு அதிகமான விண்ணப்பதாரர்களை (அட்டவணை 1) உருவாக்கும் ஓர் நகரமாக உருவெடுத்தது. மதராஸ் பல்கலைக்கழகம் 1857 மற்றும் 1884க்கு இடையிலான காலத்தில் பல்வேறு படிப்புகளில் 800க்கும் மேற்பட்ட பட்டங்களை வழங்கியது. பொது அறிவுறுத்தல் அறிக்கை 1872-1873, அறிவை நாடிச் செல்வதில் தமிழர்கள் மிகத் தீவிரமான ஆர்வம் கொண்டவர்களாக இருப்பதாக குறிப்பிட்டது. நிலவுடமை வர்க்கம் தங்கள் பிள்ளைகளை பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் அனுப்புவதில் மிகுந்த ஆர்வம் காட்டியது (அட்டவணை 2). கம்மாளர்கள் (கைவினைஞர்கள்), வெள்ளாளர்கள் (விவசாயிகள்), மற்றும் மற்ற ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த படித்த இளைஞர்களும் பள்ளி செல்ல தொடங்கினார்கள். உயர் மற்றும் தொழில்முறை படிப்புகளில் பிராமணர்களே ஆதிக்கம் செலுத்தினார்கள், ஆயினும் பிராமணரல்லாத வகுப்பின் இருப்பும் வளரத் துவங்கியது (அட்டவணை 3 மற்றும் 4). இத்தகைய வளர்ச்சிகளே, இம்மாகாணத்தில் ஓர் படித்த வர்க்கம் உருவாக வித்திட்டது.

தொழில்வாழ்க்கை, போட்டி, மற்றும் வேலையின்மை

படித்த சமூகத்தின் நம்பிக்கைகளும், பயங்களும், அரசின் குடிமைப் பணிகளில் வேலை பெறுவதற்கான வாய்ப்பை சுற்றியே குடிகொண்டிருந்தன. "தன்னை தகுதியுடையவனாக ஆக்கிக் கொள்வது அல்லது ஒரு தகப்பனாக தன் மகனை அரசுப் பணி அல்லது வேறு கற்றறிந்த தொழில்முறைப் பணிகளுக்கான பயிற்சியை அளிப்பது என்பதைத் தவிர ஒருவனால் வேறு என்ன செய்ய முடியும்?" என்று ஒரு பத்திரிகை இது குறித்து புலம்பியிருந்தது. கேரளா பத்திரிகா என்னும் மலையாள பிராந்திய மொழி பத்திரிகை, படித்த ஆண்கள் அரசு பணியின்மீது பைத்தியமாக உள்ளார்கள் வணிகம், விவசாயம், மற்றும் பல தொழில்களை செய்வதை அறவே வெறுக்கிறார்கள் என்று தன் அவதானத்தில் தெரிவிக்கிறது.

ஓர் அரசு ஊழியனாக ஆக வேண்டுமென்றால் கல்வித் தகுதி மற்றும் போட்டித் தேர்வுகளில் வெற்றிகரமான செயல்திறனை வெளிப்படுத்த வேண்டும் என்பதே வகுக்கப்பட்டுள்ள அளவுகோல். சாசனச் சட்டம் 1853க்குப் பிறகு, பரிந்துரைகள் மூலமாக பணிகளுக்கு ஆளெடுக்கும் பழைய முறைக்கு பதிலாக, அரசுப் பணிகளுக்கான நியமனம் திறந்த போட்டியாக மாறத் தொடங்கியது. போட்டியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, ட்ரவேல்யன் தன்னுடைய காம்பட்டிஷன் வாலா இதழில், "போட்டியின் சந்தேகத்திற்கு இடமில்லாத நன்மைகளுக்கு நாம் நம் கண்களை மூடிக்கொள்ளக் கூடாது. திறந்த போட்டியின் மூலம் ஏன் மக்களை நியமனம் செய்யக்கூடாது?" உதவியாளருக்கு மேலான மாகாணத்தின் அனைத்துமட்ட அரசுப் பணி நியமனங்களுக்கும் மார்ச் 1858இல் ஓர் தேர்வுத் திட்டம் அறிவிக்கப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில், கிராம அதிகாரிகள் பதவி (கர்ணம்) முதல் காவலர்கள், எழுத்தர்கள் வரை அனைத்து பணிகளுக்கும் போட்டித் தேர்வுகள் பரிந்துரைக்கப்பட்டன. இவ்வாறாக மாறிவரும் சூழலில், அரசுப் பணி நியமனங்களுக்கு சாதி ஓர் அளவுகோலாக அதன்பின் இருக்கவில்லை. இருப்பினும், போட்டி என்கிற யோசனை சில சமூகக் குழுக்களால் எதிர்க்கப்பட்டது.

இஸ்லாமிய சிறுபான்மையினரும், ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த மக்களும், ஆதிக்க சமூகங்கள் மட்டுமே போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற முடியும் என்று எண்ணத் தொடங்கினார்கள். முகமதியன் அப்சர்வர் என்னும் ஆங்கில வார இதழ், "அரசு வேலைகளுக்குத் திறந்த போட்டி மட்டுமே ஒரே தேர்வு முறை என்று வலியுறுத்துவது, முகமதியர்களை மக்கள் பணியிலிருந்து முற்றிலுமாக விலக்குவதாகும்," என்று குறிப்பிட்டது.

விரிதாந்த பத்ரிகா, தன்னுடைய 11 ஜனவரி 1894 தேதியிட்ட பதிப்பில், மதராசில் நடத்தப்பட்ட பறையர்கள் (ஒடுக்கப்பட்ட சமூக மக்கள்) மாநாட்டில், இந்தியாவில் இந்திய அரசுப் பணிகளுக்காக தேர்வு நடத்தப்படுவது உவப்பானதாக இல்லை, அது பெரும்பான்மை மக்களின் நன்மைகளுக்கு பாதகமானதாக அமையும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக தெரிவித்தது. அதைத் தொடர்ந்து, மதராசிலிருந்து வெளியான பறையன் என்னும் தமிழ் வார இதழின் 22 செப்டம்பர் 1894 தேதியன்று வெளியிடப்பட்ட பிரசுரத்தில், "இந்தியாவில் அரசுப் பணிகளுக்கு தேர்வுகள் நடத்தப்பட்டால், அதில் பிராமணர்கள் மட்டுமே வெற்றியை நிரூபித்து உயர் பொறுப்புக்களை ஆக்கிரமிப்பார்கள், என்று குறிப்பிட்டிருந்தது" இத்தகைய விவாதங்கள் மற்றும் எதிர்ப்புகளுக்கு இடையில், பரிந்துரைக்கப்பட்ட கல்வித்தரம் மற்றும் போட்டியில் வெற்றிகரமான செயல்திறன்



ஆகியவை அரசு பணிகளுக்குள் நுழைவதற்கான முதல் படியாக இருந்தன. அதேசமயம் அரசாங்கத்தின் அளவும் வாய்ப்பும் ஒருபுறம் மிக வேகமாக அதிகரிக்க மற்றொருபுறம் படித்த வர்க்கத்தினரின் பரவல் மேலும் குறிப்பிடத்தகுந்த அளவில் அதிகரித்திருந்தது. அதன்பின், ஒரு படித்த மனிதன் வேலை பெறுவதும், அரசாங்க ஊழியராக நல்ல பணம் ஈட்டுவதும், சுலபமான ஒன்றாக இருக்கவில்லை. வேலைவாய்ப்பின்மை அதிகரித்து வந்த சூழலில், மதராஸ் வேலைவாய்ப்பின்மை குழு ஒன்று தொழிலாளர் ஆணையர் G.F.பேடிசன் தலைமையில் 1926இல் அமைக்கப்பட்டது. படித்த மத்திய வர்க்கத்தினரிடையே கடும் வேலையின்மை நிலவுவதாக அக்குழு அறிக்கை சமர்ப்பித்தது.

மேட்டூர் நீர்ப்பாசனத் திட்டத்தின் கண்காணிப்பு பொறியாளர், மாதம் ரூபாய் 35 சம்பளத்திலான கணக்கர் பதவிக்கு பத்திரிகைகளில் விளம்பரம் அளித்தபோது, அப்பொறுப்புக்கு 666 விண்ணப்பங்கள் வந்து சேர்ந்தன. விண்ணப்பித்திருந்தவர்களில் 30 பேர் பட்டதாரிகள், 61 பேர் இடைநிலைக் கல்வி பெற்றவர்கள், 194 பேர் எஸ்.எஸ்.எல்.சி. என்னும் மேல்நிலைக் கல்வியை முடித்தவர்கள் மற்றும் 381 பேர் பல்கலைக்கழக கல்விக்கு தகுதியற்றவர்களாக அறிவிக்கப்பட்டவர்கள். படித்த நபர்களில், சராசரியாக 3 சதவிகிதத்தினர்கள் மட்டுமே பணியில் இருந்தார்கள். உண்மையில், பி.ஏ. முடித்த மாணவர்கள்கூட இரயில் இயந்திரத்தில் கரி அள்ளிப் போடும் பணியிலும், ரயில் நிலைய உணவகங்களில் உணவு பரிமாறவும் நியமிக்கப்பட்டார்கள். படித்த வர்க்கத்தினரின் தொழில்வாழ்க்கையின்மீது சூழ்ந்த கருமேகங்களின் அறிகுறிகளாக இவை இருந்தன. 1930களின் பொருளியல் வீழ்ச்சியின் போதான ஆட்குறைப்பு அவர்களை மேலும் பாதிப்புகளுக்கு உள்ளாக்கியது.

வேலையின்மை அச்சுறுத்தல் தொழில் முறை பட்டதாரிகளையும் பாதித்தது. மதராஸ் சட்டக் கல்லூரியின் முதல்வர் ஆர்தர் டேவிஸ், ஓர் இளைஞன் பி.ஏ. பட்டம் பெற்ற பின்பும்

ஒரு வழக்கறிஞர் ஆக இரண்டு ஆண்டுகள் மிகக் கடுமையாக படிக்க வேண்டிய நிலை இருந்தது, என்று இப்பிரச்சினை குறித்து கூறுகிறார். மதராஸ் பல்கலைக்கழகத்தின் 40 சதவிகித பட்டதாரிகள் ஒவ்வொரு வருடமும் சட்டக் கல்லூரியில் சேர்ந்தார்கள். அதில் 20 சதவிகித பட்டதாரிகள், தங்களுக்கு செய்ய வேலை ஏதும் இல்லாத காரணத்தால் சட்டக் கல்லூரியில் சேர்வதாகக் கூறினர். 30 சதவிகித பேர் அரசுப் பணியை விரும்பினர். 40 சதவிகித பேர் வழக்கறிஞர்களாக தொழில் செய்தனர். ஒரு சட்டக் கல்லூரி மாணவன் தன் முதல்வரிடம் கூறுகிறார்:

எனக்கு சட்டம் பயில அவ்வளவு விருப்பமில்லை. நான் பாடம் கற்பிக்கும் கல்வியியல் கல்வி பயிலவே விரும்புகிறேன். ஆனால் என்னால் ஓர் ஆசிரியர் பணியை பெற முடியாது. மற்றொரு வருடம் வீணாவதை தவிர்க்கவே நான் சட்டக் கல்லூரியில் சேர்ந்தேன்.

இதன் பின்னர், மாகாணத்தின் மாவட்டங்களிலிருந்தும், மதராஸ் நகரத்திலிருந்தும் உயர்நீதிமன்ற எழுத்தர் பணிக்கு விண்ணப்பிக்க வந்த 500 வழக்கறிஞர்களால் தலைமை நீதிமன்ற வளாகமே நிரம்பி வழிந்தது. அரசுப் பணிகளில், மருத்துவப் பட்டம் பெற்ற ஆண்களுக்கான சராசரி காலிப் பணியிடங்கள் வெறும் 15 மட்டுமே இருந்தன. மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையில் இளநிலை மற்றும் முதுநிலை பட்டம் பெற்றவர்களும்கூட வேலைவாய்ப்பின்றி மதராஸ் பொது மருத்துவமனையில் ஊதியமில்லாத சோதனைக்கால பணியாளர்களாக பணிபுரிந்தனர் என்று ஏ.இ.எல்.எம். கல்லூரியின் மூத்த விரிவுரையாளரான ஆர்தர் பால் கூறுகிறார்.

சட்டம் மற்றும் மருத்துவத் தொழில்களைப்போல் அல்லாமல், பொறியியல் பட்டதாரிகள் தங்கள் வேலைவாய்ப்பிற்கு அரசாங்கத்தையே முழுவதுமாக நம்பியிருந்தனர். 1921 முதல் 1926 வரையிலான காலகட்டத்தில் நிறுவனங்களிலிருந்து வெளியேறிய பொறி யியலாளர்களின் எண்ணிக்கை 547, அதில் 115 பேர் மட்டுமே பொதுப்பணித்துறையில் வேலை நியமனம் பெற்றனர்.

வரலாற்றில் முதல்முறையாக, 1931 மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது, படித்த வேலையற்றோர் குறித்த புள்ளி விவரங்களை சேகரிக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. கணக்கெடுப்பின்படி, மதராஸ் மாகாணத்தில் மட்டுமான வேலையற்றோர் எண்ணிக்கை 2,463 ஆக இருந்தது. இருப்பினும் சேகரிக்கப்பட்ட தரவுகள் முழுமையானதாக இல்லை; ஏனெனில், மக்களிடம் பல படிவங்கள் அளிக்கப்பட்டு அவற்றைப் பூர்த்தி செய்து தருமாறு கேட்கப்பட்டபோது, அவற்றில் சில படிவங்கள் மட்டுமே கணக்கெடுப்பாளர்களிடம் திரும்பி வந்தன. இருப்பினும், அத்தகவல்கள் சில முக்கியமான விஷயங்களை வெளிப்படுத்தின.

பிராமணர்கள் மற்றும் பிராமணரல்லாத இந்துக்களின் சமமான ஆதிக்கம் குறிப்பிடத் தகுந்ததாக இருந்தது. வேலையின்றி இருந்த 2,463 பேரில் 1,171 பேர் பிராமணர்கள், 1,095 பேர்கள் பிராமணரல்லாதோர், 76 இஸ்லாமியர்கள், 13 ஆங்கிலோ-இந்தியர்கள், 9 ஒடுக்கப்பட்ட வகுப்பினர், மற்றும் 99 பேர் மற்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள். பகுதிவாரியான பகிர்வை நோக்கும்போது, வேலையற்றோரின் எண்ணிக்கை பரவலாக உள்ளது; ஆனால் குறிப்பாக, மதராஸ் (109 பிராமணர்கள், 141 பேர் பிராமணரல்லாதோர்) மற்றும் தஞ்சாவூர் (214 பிராமணர்கள், 110 பிராமணரல்லாதோர்) பகுதிகளில் படித்த வேலையற்றோர் பெரும்பான்மையாக இருந்தனர். தொழிற்சாலைகளின்மை, விவசாயத்தை சார்ந்திருக்கும் சூழல், இனப் பாகுபாடு, ஆட்குறைப்பு நடவடிக்கைகள், மற்றும் பொருளியல் வீழ்ச்சி ஆகியவை வேலையின்மைக்கான முக்கியக் காரணங்களாக கருதப்பட்டது.

அட்டவணை: 1

பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு எழுதிய மாணவர்கள் எண்ணிக்கை (1864-1885)

மாகாணம்	தேர்வு முடிவுகள்		மாணவர்களின் மொத்த எண்ணிக்கை
	வெற்றி பெற்றோர்	தோல்வியடைந்தோர்	
வங்காளம்	16,639	21,151	37,790
பம்பாய்	7,196	15,209	22,405
சென்னை	18,390	36,356	54,746

ஆதாரம்: அனில் சீல், இந்திய தேசியவாதத்தின் தோற்றம்: 19ஆம் நூற்றாண்டிற்குப் பிந்தைய ஆண்டுகளில் போட்டி மற்றும் கூட்டணி கேம்பிரிட்ஜ், 1968, பக்கம்-18.

அட்டவணை: 2

மாணவர்களின் குடும்ப பின்னணி

ஆண்டு	பெற்றோர் தொழில் அடிப்படையில் தேர்வெழுதிய மாணவர்களின் சதவிகிதம்					
	அதிகாரிகள்	சிறு அதிகாரிகள்	வணிகர்கள்	நிலச்சுவாந்தார்கள்	கைவினைஞர்கள்	தொழிலாளர்கள்
1895–1896	33.8	5.1	5.6	46.9	0.4	0.1
1916–1917	35.2	7.6	7.7	42.0	0.3	0.1
1926–1927	31.4	11.5	9.2	39.6	0.7	0.9

ஆதாரம்: பேக்கர், தென்னிந்திய அரசியல், பக்கம்-48.

அட்டவணை: 3

சமூகவாரியாக கல்வி பெற்ற மாணவர் விகிதம்

		1910–1911	1920–1921	1930–1931
கலைக் கல்லூரிகள்	மொத்த மாணவர் எண்ணிக்கை	3,741	7,580	12,419
	பிராமணர் %	8.5	64.2	50.5
	பிராமணரல்லாதோர் %	20.1	21.9	33.3
	இஸ்லாமியர் %	1.6	1.8	3.4
	கிறிஸ்தவர் %	9.9	10.8	11.2

தொழில்முறை கல்லூரிகள்	மொத்த மாணவர் எண்ணிக்கை	890	1,784	1,966
	பிராமணர் %	67.2	69.6	47.8
	பிராமணரல்லாதோர் %	18.5	19.5	33.7
	இஸ்லாமியர் %	1.0	1.9	3.8
	கிறிஸ்தவர் %	8.1	7.6	12.5
மேல்நிலைப் பள்ளிகள்	மொத்த மாணவர் எண்ணிக்கை	152,413	161,796	198,074
	பிராமணர் %	34.3	37.8	29.5
	பிராமணரல்லாதோர் %	42.4	45.1	48.0
	இஸ்லாமியர் %	5.5	5.1	6.0
	கிறிஸ்தவர் %	13.8	10.8	12.3
தொடக்கப் பள்ளிகள்	மொத்த மாணவர் எண்ணிக்கை	922,911	1,492,666	2,638,108
	பிராமணர் %	9.0	7.6	5.8
	பிராமணரல்லாதோர் %	72.9	64.5	63.5
	இஸ்லாமியர் %	9.7	10.0	10.6
	கிறிஸ்தவர் %	7.6	7.6	7.2

ஆதாரம்: ஐபிட் பக்கம்-46.

அட்டவணை: 4

மதராஸ் பல்கலைக்கழக தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற பல்வேறு சமூக மாணவர்கள்

பட்டதாரிகளின் கல்விப் பிரிவு	பிராமணர்	பிராமணரல்லாதோர்	கிறிஸ்தவர்	இஸ்லாமியர்
இளங்கலை கலை	14,478	4,852	2,146	293
முதுகலை கலை	669	122	85	8
கல்வியியல் உரிமம்	1,960	291	387	19
இளங்கலை சட்டம்	4,803	1,115	253	47
மருத்துவம்	422	291	164	13
பொறியியல்	216	31	29	1

ஆதாரம்: வேலைவாய்ப்பின்மைக்கான குழுவின் அறிக்கை, 1926-1927, சாட்சிகள், தொகுதி-III, மெட்ராஸ், 1927, பக்கம்-739.

வேலைக்கான போராட்டம் மற்றும் தேசியவாதத்தின் தோற்றம்

படித்த வர்க்கத்தின் வேலையின்மை மற்றும் அது சார்ந்த பிரச்சினைகள் அப்பிராந்தியத்தின் தீவிர பொருளாதார நெருக்கடியை மேலும் விரைவுபடுத்தியது, இது அரசாங்கம் மற்றும் உள்நாட்டு அறிவுஜீவிகளின் அரசியல் நடத்தைகளில் மாற்றத்தை ஏற்படுத்தியது. மாகாணத்தின் மிக தொடக்ககால நவீன அரசியல் அமைப்புகளில் ஒன்றான 'மதராஸ் மக்கள் சபை' காசுலு லட்சுமிநரசு செட்டி, P. சோமசுந்தரம் செட்டியார் மற்றும் சிலரால் ஜூலை 1852இல் நிறுவப்பட்டது.

இவர்கள், நாட்டின் நிருவாகத்தில் உள்ளூர் மக்களின் சரியான பங்கு குறித்த கேள்விகளை எழுப்பியதோடு, தங்களின் பல்வேறு குறைகளையும் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் முன்வைத்தனர். இதனைத் தொடர்ந்து, 'மதராஸ் மகாஜன சபா' என்னும் மற்றொரு சங்கம், மதராஸ் பல்கலைக்கழகத்தின் ஓர் பட்டதாரியும், திருவல்லிக்கேணி மக்கள் பள்ளியின் தலைமை ஆசிரியரும் மற்றும் தி ஹிந்து நாளிதழின் நிறுவனருமான G.சுப்பிரமணிய ஐயர், மதராஸ் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் P. ஆனந்த சார்லு மற்றும் சிலரால் தொடங்கப்பட்டு, உள்நாட்டு அறிவுஜீவிகளின் எண்ணங்களைக் கடத்தும் வாகனமாக அது மாறியது.

இச்சங்கங்கள் வழியாக வளர்ந்துவரும் படித்த வர்க்கத்தின் விருப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டன. மதராஸ் மகாஜன சபா, இந்திய அரசுப் பணிகளில் மண்ணின் மக்கள் தவிர்க்கப்படுவது, அரசுப் பணித் தேர்வுகளுக்கான வயதை உயர்த்தியது, மற்றும் தேர்வை இந்தியா மற்றும் இங்கிலாந்து என இருநாட்டிலும் ஒரே சமயத்தில் நடத்துவது ஆகியவற்றை கண்டித்து ஓர் விரிவான மேல்முறையீட்டை 4 நவம்பர் 1884 அன்று சமர்ப்பித்தது. அதே காலகட்டத்தில், இந்திய தேசிய காங்கிரஸின் மூன்றாவது அமர்வு சென்னையில் நடந்தது; இதில் கலந்துகொண்ட மதராஸின் முக்கிய தலைவர்களான T. மாதவராவ், S. சுப்பிரமணிய ஐயர், மற்றும் P.சுந்தரம் செட்டி ஆகியோர் உள்ளூர் தொழிற்சாலைகளுக்கு புத்துயிர் அளிப்பதற்கான அவசியம், தொழில்நுட்பக் கல்வியை அறிமுகப்படுத்துவது மற்றும் உயர்நிலைப் பதவிகளை இந்தியர்களுக்கு எளிதாக கிடைக்கச் செய்வது போன்றவற்றின் தேவையை வலியுறுத்தி தொடர் தீர்மானங்களைக் கொண்டு வந்தனர். தங்கள் பிரச்சினைகளை விவாதிக்க பல்வேறு மாணவர் அமைப்புகளும் உருவாக்கப்பட்டன.

மக்கள் கேள்விகளை வாசித்தல் மற்றும் விவாதித்தல் ஆகியவற்றை ஊக்குவிக்க 1886இல் 'மாணவர் இலக்கிய சங்கம்' கோயம்புத்தூரில் உருவாக்கப்பட்டது. ஓர் 'மருத்துவ மாணவர்கள் சங்கம்' 4 டிசம்பர் 1885 அன்று தொடங்கப்பட்டது. அதில் உடனடியாக 52 மாணவர்கள் தங்களை உறுப்பினர்களாக பதிவு செய்து கொண்டு மாணவர் இதழ் என்னும் பத்திரிகையை வெளியிட்டனர்.

இச்சங்கங்களின் தோற்றம் மற்றும் படித்த வர்க்கத்தின் வேலைவாய்ப்பு குறித்தான தொடர் கேள்வியெழுப்புதல் ஆகியவற்றினால் சில வருடங்களுக்குப்பின், ஆங்கிலவழிக் கல்வியை ஊக்குவிக்க வேண்டும் என்னும் தங்கள் முடிவு "ஓர் கடுமையான அரசியல் தப்புக் கணக்கு கதையாகி விட்டதோ" என்னும் எண்ணத்தை ஏகாதிபத்திய வட்டத்தில் மேலோங்க செய்தது.

பணிகளை இந்திய மயமாக்குவது மற்றும் இந்தியர்களுக்கான வேலை வாய்ப்புகள் குறித்த தொடர் கோரிக்கைகள் ஆகியவை சுதேசி இயக்கத்தின்போது புதிய உயரத்தைத் தொட்டு, 1905 வங்கப் பிரிவினைக்குப் பின்னர் மேலும் தீவிரமடைந்தது. பிரிவினைக்கு எதிரான போராட்டம், மாகாணத்தின் மாணவர் சமூகத்திடமிருந்து எதிர்வினையைத் தூண்டியது. கோயம்புத்தூர் மாணவர் இலக்கிய சங்கம் தவிர்த்து, 1903இல் சேலத்தில் புதியதாக அமைக்கப்பட்ட 'படித்த வர்க்கத்தின் ஹிந்து இளைஞர்கள் சங்கம்', 1907இல் உருவாக்கப்பட்ட 'நெல்லூர் முன்னேற்றக் கழகம்' ஆகியவை சுதேசி இயக்கத்தை ஊக்குவித்து, வேலை கிடைப்பதில் உள்ள சிரமங்களையும், வேலை யின்மை பிரச்சினைகளையும் எழுப்பின. G. சுப்பிரமணிய ஐயர் தலைமையில், மதராஸ் கடற்கரையில் நடந்த கூட்டத்தில் மூன்றாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மதராஸ் மாநகரின் மூர் மார்க்கெட் பகுதியில் மாணவர்கள் தினமும் கூட்டங்களை நடத்தினார்கள். அதில் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்ட மாணவர்கள், ஐரோப்பிய வழிப்போக்கர்களை கண்ட போதெல்லாம் "வந்தே மாதரம்" என்று கூச்சலிட்டார்கள். பிபின் சந்திர பால் விசாகப்பட்டினத்திலிருந்து மதராசுக்கு பயணித்தபோது அவருடன் பயணித்தார்கள். இந்திய தேசிய காங்கிரஸின் 1909 லாகூர் அமர்வு, தொண்டர்களாக கலந்து கொண்ட மாணவர்களுக்கு நன்றி தெரிவித்தது.

படித்த வர்க்கத்தின் தேசிய செயல்பாடுகளுக்கு எதிரான அரசின் பொதுவான அணுகுமுறை விரோதமான ஒன்றாகவே இருந்தது. 2 ஆகஸ்ட் 1907 அன்று நடந்த மதராஸ் பல்கலைக்கழகத்தின் சிறப்பு மேலவை கூட்டம், அரசு கல்லூரிகள் மற்றும் விடுதிகளில் உள்ள மாணவர்களின் தவறான நடத்தைகளுக்கு, பல்கலைக்கழகத் தேர்வுக்கு அனுமதி மறுத்தல் மற்றும் உதவித் தொகையைப் பறித்தல் போன்ற தண்டனைகளை அளிக்கத் தீர்மானித்தது.

பிபின் சந்திர பால் அவர்களின் 19 ஏப்ரல் 1907 ராஜமுந்திரி பயணத்தின்போது, பொதுக்கூட்டத்தில் அவருக்கு முன்பாக உரையாற்றிய ஹரி சர்வோத்தம ராவ் M.A எந்தவொரு அரசு அல்லது அரசு உதவிபெறும் பள்ளி, அல்லது கல்லூரியிலும் ஆசிரியராகப் பணிபுரிய முடியாதவாறு தடை செய்யப்பட்டார். மற்றொரு மாணவரான இராமச்சந்திர ராவ் தன்னுடைய B.A. பட்டத்துக்கான தேர்வை எழுதவும், எந்தவொரு அரசு அல்லது அரசு உதவிபெறும் கல்லூரியில் மறுநுழைவு பெறவும் தடை செய்யப்பட்டார்.

அன்னி பெசன்ட் அம்மையார் தலைமையிலான தன்னாட்சி இயக்க காலத்தின்போது சுயராஜ்ஜியத்தை (தன்னாட்சியை) அடையும் வரை நம்மை துன்புறுத்திக் கொண்டிருக்கும் இன்னல்களான மக்கள் திரளின் ஏழ்மை, வேலையின்மை, தொழிற்சாலைகளின் சிதைவு, மற்றும் பல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவே முடியாது என்று அறிவிக்கப்பட்டது. அப்போதிருந்த கல்வி முறையை பிற்போக்கான, பழமைவாத முறை என்று சாடிய அன்னி பெசன்ட் அம்மையார், பல்வேறு காரணங்களுக்கிடையே மாணவர்கள் மோசமாக நடத்தப்பட்ட சம்பவமே தன்னை அரசியலுக்குள் இழுத்தது என்று புதிய இந்தியா இதழில் எழுதினார்.

மதராஸ் மாநகரின் 3,000 மாணவர்கள் அடங்கிய மாணவ சமூகத்தின் நலன்களுக்காக அன்னி பெசன்ட் அம்மையார் 1914இல் 'இந்திய இளைஞர்கள் சங்கத்தை' நிறுவினார். மதராஸ் நகரத்தில் தன்னாட்சி கருத்துக்களை பரப்புவதற்கான

மையமாக இச்சங்கம் செயல்பட்டது. வெற்றி பெறாத மாணவர்கள் தன்னாட்சி கூட்டமைப்பில் பங்கெடுத்தனர்; மேலும் அவர்கள் அக்கூட்டமைப்பின் நிருவாக எதிர்ப்பு நிலைப்பாட்டால் ஈர்க்கப்பட்டவர்களாக இருந்தனர். இடைநிலை மற்றும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுகளில் 2,800 இளைஞர்கள் தோல்வி அடைந்ததற்கு எதிரான போராட்டத்தில் மாபெரும் கூட்டத்திற்கிடையே ஆற்றிய உரையில், அன்னி பெசன்ட் அம்மையார் அரசாங்கம் மற்றும் பல்கலைக்கழகத்தை வன்மையாகக் கண்டித்தார்.

அரசாங்கம் ஓர் ஆணையின் மூலம் மாணவர்கள் பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்வதை தடை செய்தது. மதராஸ் கிறிஸ்தவக் கல்லூரி மற்றும் பிரெசிடென்சி கல்லூரியில், அக்கல்லூரி முதல்வர்களால் சில கருத்துக்கள் நீக்கப்பட்ட பத்திரிகைகளை மட்டுமே மாணவர்கள் வாசிக்க அனுமதிக்கப்பட்டனர். ஒத்துழையாமை இயக்கத்திற்குப் பின்பும், மதராஸ் மாகாணத்தில் நீதிக்கட்சி ஆட்சியமைத்த பின்பும், படித்தவர், அவர்தம் பிரச்சினைகள், மற்றும் சுதந்திரப் போராட்டத்தில் அவர்களின் பங்கேற்பு ஆகியவை புதிய உச்சத்தை அடைந்தன.

படித்த வர்க்கம், வேலையின்மை மற்றும் சுதந்திரப் போராட்டம்

நாடெங்கும் வெடித்த ஒத்துழையாமை இயக்கப் போராட்டங்களும், 1920களில் மகாத்மா காந்தி அனைத்திந்திய களத்திற்குள் நுழைந்ததும், மதராஸ் பிரதேச காங்கிரசிற்கு அதன் புதிய நோக்கங்கள், கொள்கைகள் மற்றும் தலைவர்களை வழங்கியது. C.ராஜகோபாலச்சாரியுடன், டாக்டர் P.வரதராஜுலு நாயுடு, வங்கி அதிகாரி T.ஆதிநாராயண செட்டி, ஈரோடு நகராட்சியின் முன்னாள் தலைவர் V.ராமசாமி நாயக்கர், மற்றும் கட்டுரையாளர் T.V.கல்யாணசுந்தரம் முதலியார் ஆகியோர் இணைந்து புதியதாக நிறுவப்பட்ட தமிழ்நாடு பிரதேச காங்கிரஸின் கட்டுப்பாட்டை தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டார்கள். ஒத்துழையாமை பிரச்சாரங்களை நடத்த அவர்கள் ஒன்று கூடினார்கள்.

ஒத்துழையாமை இயக்க காலகட்டத்தில், செப்டம்பர் 1920இல் நடந்த கல்கத்தா காங்கிரஸ் சிறப்பு அமர்வு மற்றும் டிசம்பர் 1920 நாக்பூர் அமர்வு இரண்டும், இந்தியர்கள் அரசுப் பணிகள் மற்றும் ஆங்கிலேய கல்வி நிலையங்களிலிருந்து படிப்படியாக வெளியேற வேண்டும், நீதிமன்றங்களை புறக்கணிக்க வேண்டும், மேலும் இராணுவ, அலுவலக, மற்றும் தொழிலாளர் வர்க்கம் அவர்களது பங்குக்கு தாங்களே முன்வந்து அப்பணிகளில் சேர மறுக்க வேண்டும் என்கிற கோரிக்கைகளை மக்களிடம் வைத்தது. அதே காலகட்டத்தில் படித்த வர்க்கம் தங்களுக்கான அமைப்புகளை நிறுவி பல்வேறு அரசியல் நடவடிக்கைகளில் பங்கெடுத்தன.

மதராசில் மகாத்மா காந்தியுடனான ஆலோசனைக்குப் பின்பு, S.ராமநாதன், V.ராகவாச்சாரி, K.சந்தானம், P.கோவிந்த மேனன், மற்றும் பலர் இணைந்து 1919இல் ஓர் இளைஞர் கூட்டமைப்பை உருவாக்கினர். அக்கூட்டமைப்பு, அந்நிய பொருட்கள் மற்றும் ஆங்கிலேய நிறுவனங்களை புறக்கணித்தல் என்னும் காந்தியவழி போராட்டத்தை ஆதரித்தது. பச்சையப்பா கல்லூரி, மதராஸ் கிறிஸ்தவக் கல்லூரி, மற்ற நிறுவனங்களின் மாணவர்கள், C.ராஜகோபாலச்சாரியை சந்தித்து ஒத்துழையாமை இயக்கத்திற்கு தங்கள் ஆதரவை தெரிவித்தனர்.

கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 1919-1920இல் 52,482ஆக இருந்தது, 1921-1922 கல்வியாண்டில் 45,933 மாணவர்களாகவும்; மேல்நிலைப் பள்ளிகளில்

12,81,810 மாணவர்களிலிருந்து 12,39,524 மாணவர்களாகவும் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதனிடையே 92 தேசிய கல்வி நிறுவனங்கள் நிறுவப்பட்டு, அவற்றில் 5,072 பேர் பதிவு செய்து கொண்டார்கள்.

26 ஜனவரி 1921இல் வெளியான குவாமி அறிக்கை இஸ்லாமியப் பிள்ளைகள் B.A. மற்றும் M.A. பட்டங்கள் பெற்று வழக்கறிஞர்களாகவும், பெருவழக்கறிஞர்களாகவும் மாறுவது விரும்பத்தகாத செயலாகப் பார்க்கப்பட்டது என்று தெரிவித்தது. சென்னை துறைமுக நிருவாகத்தில் எழுத்தராகவும், கிலாபத் இயக்கப் பணியாளருமாக பணிபுரிந்த காசி அப்துல் ரகுமான், இஸ்லாமிய சிப்பாய்கள் மற்றும் காவல் அதிகாரிகளை தங்கள் அரசுப் பணிகளை விட்டு வெளிவரத் தூண்டும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார். படித்த வர்க்கம் ஒத்துழையாமை இயக்கத்தை ஆதரித்தது.

கொடி அணி வகுப்புகள் மற்றும் புறக்கணிப்பு போராட்ட நிகழ்வுகள் ஆகியவற்றை நடத்துவதற்கென இந்திய தேசிய காங்கிரஸ், மாதம் 30 ரூபாய் சம்பளத்தில், வேலைவாய்ப்பற்ற ஆண்கள் மற்றும் மாணவர்களைக் கொண்ட ஓர் தொண்டர் குழாமை உருவாக்கியது. மசூலிப்பட்டினம் கொடுகுபேட்டையில் வசித்து வந்த M.பார்த்தசாரதி தன்னுடைய சாட்சியத்தில் மதராஸ் வேலையின்மை குழுவிற்கு எழுதுகிறார்:

ஒரு சமயம், மிகப்பெரும் மற்றும் இணையற்ற வெற்றியைப் பெற்ற ஒத்துழையாமை இயக்கத்தின் நிலையற்ற வாழ்க்கை, அதன் தொடக்கம் முதல் இறுதி அத்தியாயம் வரை, தவறாக வழிநடத்தப்பட்ட மாணவர்கள், படித்த வேலையற்ற உயர்வர்க்கத்தவர், வழக்குகளற்ற வழக்குரைஞர்கள், உரக்க குரலெழுப்பிய கிளர்ச்சியாளர்கள், தங்கள் ஊதியங்களை உயர்த்துமாறு முடிவில்லா தொடர் போராட்டங்களை மேற்கொண்ட அரசிதழில் இடம்பெற்ற மற்றும் அரசிதழில் இடம்பெறா அதிகாரிகள் ஆகியோரின் கைகளில் தான் இருந்தது. இவையெல்லாம் ஒரு கணம், வேலையின்மை பிரச்சினையை எங்கள் கண்முன் கொண்டு வந்து நிறுத்தியது.

தன்னாட்சி இயக்கத்திற்கும் ஒத்துழையாமை இயக்கத்திற்கும் இடையிலான காலகட்டத்தில் நெசவு அதிபர் P.T.செட்டி, டாக்டர் T.M.நாயர் மற்றும் பீத்தாபுரம், இராமநாதபுரம், பொப்பிலி, காளஹஸ்தி அரசர்கள் ஆகியோரால் நீதிக்கட்சி மதராஸ் மாகாணத்தின் அரசியல் இயக்கங்கள் மற்றும் அரசுப் பணிகளில் உள்ள பிராமண ஆதிக்கத்தை எதிர்ப்பதற்காக தொடங்கப்பட்டது.

இரட்டையாட்சி முறை என்னும் புதிய அரசியலமைப்பின்கீழ், கட்சி அதன் முதல் அமைச்சரவையை 1921இல் அமைத்தது. சில மாதங்கள் தவிர்த்து, இரட்டையாட்சி முறையின் மொத்த காலத்திற்கும் அமைச்சரவையின் கட்டுப்பாட்டை கட்சி தக்க வைத்துக் கொண்டது. மதராஸ் சட்டசபையில் 25 ஆகஸ்ட் 1925 அன்று நடந்த ஓர் விவாதத்தின்போது வேலையின்மை குறித்த கேள்வி எழுப்பப்பட, அதை ஆமோதித்த நீதிக்கட்சி, பிராமணர்கள், பிராமணரல்லாதோர், மற்ற இந்துக்கள், மற்றும் இஸ்லாமியர்கள் என அனைத்து சமூகங்களும் வேலையின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஒப்புக்கொண்டது.

இருபதாம் நூற்றாண்டின், மூன்றாம் பத்தாண்டின் மத்திம காலத்தில், வேலையின்மை, படித்த சமூகத்தின் மிக முக்கியமான பிரச்சினையாக அரசியல் வட்டங்களில் விவாதங்களுக்கு உள்ளானது. மாகாணத்தின் பூர்வகுடி உறுப்பினர்கள்



வேலையின்மை பிரச்சினையை குறித்து மதராஸ் சட்டசபை மற்றும் ஏகாதிபத்திய சபையில் கேள்விகளை எழுப்பினர். 25 ஆகஸ்ட் 1925 அன்று சட்டசபையில் R. வீரய்யன் கூறுகிறார்:

இந்நாட்டில் தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது காரணம், வேலையின்மை என்னும் கேள்வி உச்சத்தில் நிற்கிறது. வேலையற்றோர்க்கு நாம் வேலை தராமல் இருப்பது எத்தகைய ஆபத்து என்பது தெரியவில்லையா. பழங்காலத்தில் மன்னர்கள் வேலையற்ற மக்களுக்கு வேலை அளிப்பார்கள். தற்போது, அது அரசின் கடமை. அரசு, தானே முன்வந்து இப்பிரச்சினையை தீர்க்க வேண்டும்.

சபையின் மற்றொரு உறுப்பினரான C.கோபால மேனன் கூறுகிறார், "விரக்தியின் விளிம்பில் இருக்கும் இளைஞர்கள், கிளர்ச்சி அரசியலில் இறங்கவும்கூட பரவலாக நாடு முழுவதிலும் ஒன்றுபோல் தயாராக இருக்கிறார்கள்." மேலும், சட்டமன்ற உறுப்பினர்கள், மதராஸ் ஆட்குறைப்பு குழு (1922-1923) அமைக்கப்பட்டதை எதிர்த்தார்கள். அரசாங்கம் ஒருபுறம் ஆட்குறைப்பை மேற்கொள்கிறது மற்றொருபுறம் அதிக ஊதியம் கேட்டு ஆர்ப்பரித்து வரும் ஆங்கிலேய அதிகாரிகளின் குறைகளை நிவர்த்தி செய்ய ராஜாங்கக் குழுவை அமைக்கிறது, என்று அரசின் இரட்டை நிலைப்பாட்டை சுட்டிக்காட்டும் விதமாக உள்ளூர் நாளிதழான யுவபாரதம் செய்தி வெளியிட்டது.

ஆட்குறைப்பு நடவடிக்கைகளுக்கு இடையே, இராமநாதபுரம் ஆட்சியர் S.V.இராமமூர்த்தி 30 ஜூலை 1926 அன்று மதுரை கிறிஸ்தவ இளைஞர்கள் சங்கத்தில் 'வேலையின்மை' குறித்து ஓர் உரை நிகழ்த்தினார். 1930களின் பெரும் பொருளியல்

வீழ்ச்சி காலத்தின்போது, படித்தவர்களின் வேலையின்மை பிரச்சினைக்கான தீர்வு, சுதந்திரம் பெறுவதோடு தொடர்புபடுத்தப்பட்டது. A.ரங்கசாமி ஐயங்கார் வேலையின்மை குறித்து ஏகாதிபத்திய அவையில் கூறுகிறார்:

வேலையின்மை ஓர் முக்கிய மற்றும் நிரந்தர பிரச்சினை. நாம் சுயராஜ்யம் அடையாத வரை. இந்த நாடு ஆதிக்கத்தின்கீழ் இருக்கும் வரை. இப்பிரச்சினைக்கு, உண்மையான மற்றும் நிலையானத் தீர்வு என்பதே இருக்காது.

இந்திய தேசிய காங்கிரசின் 1927 மதராஸ் அமர்வின்போது, படித்த வேலையற்றவர்க்கான மாநாடு ஒன்று நடத்தப்பட்டு, பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாணவர்களும், படித்த வேலையற்றோரும் தேசிய அரசியலின்பால் ஈர்க்கப்பட்டார்கள். இந்திய அரசு மதராஸ் மாகாண தலைமைச் செயலருக்கு 24 ஜூன் 1929 அன்று எழுதிய கடிதத்தில், தேசியத் தலைவர்கள் இளைஞர் இயக்கங்களை ஆதரிப்பதாகவும்; மேலும், படித்த மத்திய வர்க்க, குறிப்பாக, படித்த வேலையற்ற இளைஞர்களின் ஆதரவைப் பெறுவதில் தன்னார்வ அமைப்புகள் வெற்றிகரமாக செயல்படுவதாகவும் தெரிவித்தது. இதனிடையே, 1930இல் சட்ட மறுப்பு இயக்கம் தொடங்கப்பட்டபின் அரசியல் நடவடிக்கைகள் வேகம் பெற்றன.

காவிரி டெல்டாவின் தெற்குப் பகுதியில் அமைந்த வேதாரண்யம் என்னுமிடத்தில் C. ராஜகோபாலச்சாரி தலைமையிலான உப்பு சத்தியாகிரகத்தின்போதே, மாகாணத்தின் சட்ட மறுப்பு இயக்கமும் தொடங்கிவிட்டது. மாணவர்கள் மற்றும் இளம் களப்பணியாளர்களின் இலட்சியவாதத்தைப் பயன்படுத்தி, ஒருங்கிணைத்து தங்களது வலிமையைக் காட்டுவதில் முன்னெப்போதையும்விட மிகத் தேர்ந்த ஓர் அமைப்பாக மாறியிருப்பதை மாகாண காங்கிரஸ் நிரூபித்தது.

1929-1930 காலகட்டத்தில், 23 மாணவர்கள் பிரெசிடென்சி மற்றும் பச்சையப்பா கல்லூரியிலிருந்து வெளியேறி, சட்ட மறுப்பு இயக்கத்தில் பங்கேற்றார்கள்.மதராஸ் சட்டக் கல்லூரி மற்றும் அனந்தபூர் கல்லூரியின் மாணவர்களோடு, மங்களூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, மற்றும் திருவல்லிக்கேணி என மாகாணத்தின் பல்வேறு பகுதி மாணவர்களும் கொடி அணிவகுப்பு, ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தம், மற்றும் பல்வேறு போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். மதுரை, மலபார், கிஸ்த்னா, மற்றும் பல்வேறு பகுதிகளில் பல இளைஞர் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டன. மாணவர்கள் மற்றும் தொண்டர்களின் பங்கேற்பு இவ்வியக்கத்தை தனித்து காட்டியது.

அரசியல் இயக்கங்களில், ஊதியமளிக்கப்பட்ட வேலையற்ற தொண்டர்களின் பங்கை அரசு உணர்ந்து கொண்டது. காங்கிரஸ், 1931 மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது, தன்னால் இயன்ற அளவு தொண்டர்களை பணிக்கு அமர்த்தி ஊதியம் தந்தது; இல்லாவிட்டால் அவர்கள் வேலையற்றவர்களாகவே இருந்திருப்பார்கள் என்று அப்போதைய மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையர் குறிப்பிடுகிறார். ஆயினும், "நாங்கள் வேலை வேட்டைக்காரர்கள் அல்ல, சுதந்திரப் போராட்டக்காரர்கள்," என்று மாணவர்கள் தெளிவுபடுத்தினர்.

அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினரான H.D. ராஜா, இளைஞர்களின் அறிவார்ந்த தலைமையின்கீழ் மக்களை ஒருங்கிணைப்பது சுதந்திரத்தை அடைய இன்றியமையாததாக இருக்கும் என்று தன் கருத்தைக் கூறுகிறார். இன்குலாப்

ஜிந்தாபாத் என்று தலைப்பிடப்பட்ட ஒரு பிரபலமான துண்டறிக்கையில், படித்த வர்க்கத்தினரை அவர் கேட்கிறார்:

கோடிக்கணக்கானோர் பட்டினியில் வாடவும், உங்கள் தாய்நாடு அடிமைத்தளையில் சிக்குண்டு கிடக்கவும், நீங்கள் பெறும் வெற்றுப் பட்டங்களாலும் உங்கள் குழம்புச் சட்டிகளாலும் என்ன பயன்? இந்தியா இறந்தால் வாழ்வது யார்? இந்தியா வாழ்ந்தால் இறப்பது யார்?

மேலும் காங்கிரஸ் தனது 1931 கராச்சி அமர்வில் அடிப்படை உரிமைகள் மற்றும் பொருளாதார திட்டங்களுக்கான தீர்மானத்தை நிறைவேற்றியது. முதுமை, நோய், மற்றும் வேலையின்மை ஆகியவற்றினால் ஏற்படக்கூடிய பொருளாதாரப் பின்விளைவுகளுக்கு எதிராக அரசு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று அத்தீர்மானம் கூறியது. இதே விவகாரம் 1936இல், கட்சியின் அரசியல் அறிக்கையிலும் இடம்பெற்றது. வேலூரில் 6 டிசம்பர் 1936 அன்று நடைபெற்ற தமிழ்நாடு அரசியல் மாநாட்டின் 38ஆவது அமர்வில் வேதரத்தினம் பிள்ளை தன்னுடைய தலைமை உரையில், அதிகரித்து வரும் வேலை யின்மை மற்றும் இந்தியா மேலும் வறுமை நிலைக்கு தள்ளப்பட்டிருப்பது ஆகியவற்றைக் குறிப்பிட்டு அரசை விமர்சனம் செய்தார்.

வேலையின்மை, 1937 மாகாணத் தேர்தலில் ஓர் முக்கிய பிரச்சினையாக உருவெடுத்தது. வறுமை மற்றும் வேலையின்மைக்கு எதிராக பிரச்சாரம் மேற்கொண்ட ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு மதராஸ் மக்கள் நன்றி தெரிவித்தனர். இறுதியில், ராஜகோபாலச்சாரி தலைமையில் காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைத்தது. இரண்டாம் உலகப் போருக்கு மத்தியில், 1942இல் வெள்ளையனே வெளியேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், தன்னிச்சையாக உருவான இவ்வியக்கத்தில் படித்த வர்க்கம் தீவிரமாகப் பங்கெடுத்தது.

V.இராமசாமி மற்றும் A.L.நடராஜனால் எழுதப்பட்ட காந்தி மலர் மாணவருக்கு என்னும் தமிழ் நூல், படித்த வர்க்கம் அவர்களுடைய விவகாரங்கள், மற்றும் பிரச்சினைகள் குறித்த மகாத்மா காந்தியின் பார்வையை அளித்த வகையில் பெரும் தாக்கத்தை அது ஏற்படுத்தியது. மகாத்மா காந்தி மற்றும் தேசியத் தலைவர்களின் கைது, படித்த சமூகத்தை மேலும் கிளர்ந்தெழச் செய்தது. பிரெசிடென்சி கல்லூரியின் முதல்வர் H.C. பேப்வர்த், கல்லூரியில் மாணவர்களின் வேலை நிறுத்தம் குறித்து ஆலோசித்தார். மதராஸ் மருத்துவக் கல்லூரியின் மாணவர்கள் தங்கள் விடுதிகளை காலி செய்தனர்.

காங்கிரஸ் சோஷலிசவாதிகளால் முன்னெடுக்கப்பட்ட வன்முறை வழிகள் மாகாண நகரங்களில் பெரும் விகிதத்தை எட்டியது. ஈரோடு துணை ஆட்சியரின் அலுவலகம், கொசப்பேட்டை நகராட்சிப் பள்ளி, மற்றும் மதராஸ் மற்றும் திருச்சிராப்பள்ளியின் தபால் பெட்டிகள் ஆகியவை தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

காவல்துறையின் அடக்குமுறையில், 11 ஆகஸ்ட் 1942 அன்று மதுரையில் பல மாணவர்கள் மரணமடைந்தார்கள். வெள்ளையனே வெளியேறு இயக்கத்துக்குப்பின், நேரு தலைமையிலான தேசிய திட்டக் குழுவின் துணைக்குழுக்கள் பரிந்துரைத்த அறிக்கைகள் வெளியிடப்பட்டன.

அவை, படித்த வர்க்கத்தின் பிரச்சினைகளை, குறிப்பாக, வேலை வாய்ப்பின்மையை சரி செய்வதாக உறுதியளித்தன. அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், N.கோபாலசுவாமி அய்யங்கார், மற்றும் T.T.கிருஷ்ணமாச்சாரி போன்ற கற்றறிந்தவர்கள் இந்திய அரசியலமைப்பை கட்டமைப்பதில் பங்கெடுத்தனர். இவ்வழிகளில், படித்த வர்க்கம் சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றது.

முடிவுரை

இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தியது; அப்போது தான், நூற்றாண்டுகால சமூக, பொருளாதார உறவுகளும் நிறுவனங்களும் மாற்றமடைந்தன. மதராஸ் பல்கலைக்கழகம் மற்றும் சட்டம், மருத்துவம், பொறியியல், கல்விகளுக்கான தொழில்முறை கல்வி நிறுவனங்களும் நிறுவப்பட்ட பின்பும், 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முறையான கல்வி வளர்ச்சி தொடங்கிய பின்னரே, "மதராஸ், கல்விச்சாலைகளின் சுகங்களை அனுபவிக்கத் துவங்கியது."

புதியதாக உருவான படித்த வர்க்கம், அரசுத் துறைகளில் பணிகளைப்பெற போட்டித் தேர்வுகளில் கலந்து கொண்டது. இருப்பினும், அவர்கள் வேலையின்மை பிரச்சினையை தொடர்ந்து சந்திக்க வேண்டியிருந்தது.

அதுவே, 1927 மதராஸ் வேலையின்மை குழுவின் அறிக்கையிலும் பிரதிபலித்தது. இதனைத் தொடர்ந்து, படித்த வர்க்கத்தினரின் பிரச்சினைகளான, போட்டித் தேர்வுகளுக்கு அதிகரிக்கும் கவனம், வேலைக்கான போராட்டம், ஆட்குறைப்பு மற்றும் வேலையின்மை ஆகியவை சுதந்திரப் போராட்டத்தின் ஒரு பகுதியாக மாறியது.

ஆங்கிலேய அரசு, படித்த வர்க்கத்தினரின் கோரிக்கைகளையும், தேசியப் போராட்டத்தில் அவர்கள் பங்கெடுப்பதையும் எதிர்க்க முயற்சி செய்தது. இந்தியாவின் வறுமை அதன் அரசாங்கத்தின் வறுமையோடு பொருந்திப் போனது.

மதராஸ் மாகாண ஆளுநர் லார்ட் பென்ட்லான்ட், 1917இல், அரசு செயலரான எட்வின் மான்டெகுவிடம் கூறினார், "நாம் அவர்களோடு (இந்தியர்கள்) விளையாட வேண்டும், பொறுமையுடன்கூடிய அரசியல் உரையாடலை நிகழ்த்த வேண்டும், தொழில் வளர்ச்சி, கல்வி மற்றும் சமூக சீர்திருத்தம் ஆகியவை குறித்து அவர்களோடு விவாதிக்க வேண்டும்; ஆனால் அவற்றையெல்லாம் செய்வதற்கான அவசியம் ஏதுமில்லை." காலனித்துவ சக்தியின் நிரந்தர அக்கறையின்மை, படித்த வர்க்கத்தினரை சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாக பங்கேற்கத் தூண்டியது.

அதுவரை மதராஸ் மாகாணத்தின் அரசியல் என்பது, மதராஸ் மகாஜன சபா, அன்னி பெசன்ட் அம்மையார் தலைமையிலான தன்னாட்சி இயக்கம், நீதிக்கட்சியின் கோரிக்கைகள், மற்றும் இந்திய தேசிய காங்கிரஸின் துணை இயக்கங்கள் போன்றவற்றை சுற்றியே இருந்த சூழலில், 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கிய தேசியவாதம் மற்றும் வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றிற்குப்பின் படித்த வர்க்கத்தின் தீவிரப் பங்கெடுப்பைக் கண்டது.

படித்த வர்க்கத்தினரிடையே நிலவும் வேலையின்மை மற்றும் பணிகளை இந்தியமயமாக்கல் போன்ற பிரச்சினைகளை தேசியவாதத் தலைவர்கள் சட்டமன்றம், அரசியல் இயக்கம், தேர்தல் அறிக்கை போன்றவற்றில் எழுப்பி மக்களிடையே அதுகுறித்த கருத்தை உருவாக்க முயன்றனர். அதேசமயம், படித்த வர்க்கத்தினர், தாங்கள் வேலை வேட்டையாடுபவர்கள் அல்ல சுதந்திரப் போராட்டக்காரர்கள் என்பதையும் தெளிவுபடுத்தினார்கள்.



11

மாணவர் இயக்கங்களும் சுதந்திரப் போராட்டமும் – 1

டாக்டர் சிந்தியா ஜோட்
உதவிப் பேராசிரியர்
ஸ்டெல்லா மேரி கல்லூரி
சென்னை

மனதின் சுதந்திரமே உண்மையான சுதந்திரம். ஒருவரின் மனம் சுதந்திரமாக இல்லாவிட்டால், அவர் சங்கிலிகளால் பிணைக்கப்படாமல் இருந்தாலும் அவரை சுதந்திரமான மனிதராகக் கருத முடியாது. ஒருவரின் மனம் சுதந்திரமாக இல்லாவிட்டால், அவர் சிறையில் இல்லாவிட்டாலும் கைதியே. அவர் சுதந்திர மனிதர் அல்ல. ஒருவர் உயிரோடு இருந்தும் அவருடைய மனம் சுதந்திரமாக இல்லாவிட்டால் அவர் பிணத்துக்கு சமம். மனதின் சுதந்திரமே ஒருவரின் இருத்தலுக்கு சாட்சியமாகும்.

– அம்பேத்கர்

இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்கள், ஆங்கிலேயரின் அடிமைத் தளைகளிலிருந்து நாட்டை விடுவித்து சுதந்திரத்தை அடைய கடும் போராட்டங்களை சந்தித்தார்கள். 75 வருடங்கள் கடந்துவிட்டது; அவ்வரலாற்று சிறப்புமிக்க 15 ஆகஸ்ட் 1947, இந்தியா சுதந்திரம் அடைந்த அந்நாள், இந்தியர்களுக்கு தனிச்சிறப்பு வாய்ந்த ஓர் நாளாக மாறி விட்டது. பல்வேறு மக்கள் பல்வேறு காரணங்களுக்காக ஆங்கிலேயரை குறிவைத்து பலதரப்பட்ட நடவடிக்கைகள், இயக்கங்கள் மற்றும் போராட்டங்களை நடத்தியதன் உச்சமே சுதந்திரப் போராட்டமானது.

மிகநீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த இச்சுதந்திரம், பல சுதந்திரப் போராட்ட வீரர்களின் கூட்டு முயற்சியினால் வெற்றிகரமாக அடையப்பட்டது. சுதந்திரத்துக்கான போராட்டம், தேசம் முழுவதும் பல்வேறு பரிமாணங்களில் நடைபெற்றது. இந்திய சுதந்திரத்தை அடைய பலர் தங்கள் உடமைகளையும், உயிர்களையும் தியாகம் செய்தனர்.

இந்த வெகுமக்கள் இயக்கம் நாட்டின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் அனைத்து வயது மக்களையும் கொண்டதாக இருந்தது. தேசப்பற்றுமிக்க அவர்கள் ஆங்கிலேயரை தங்களின் ஒரே பொது எதிரியாக கருதிப் போராடினர். தேசத்தின் நலனுக்காக தங்களையே ஒப்புக்கொடுத்த தேசப்பற்றாளர்கள் மற்றும் தலைவர்களின் அயராத போராட்டத்தின் விளைவாகவே நம்மால் சுதந்திரத்தை அடைய முடிந்தது.

இந்திய தேசியவாதம்

ஆங்கிலேயர்கள் இந்தியர்களை நடத்திய விதம், நிகழ்த்திய பொருளாதாரச் சுரண்டல்கள், மற்றும் இந்தியாவின் பல்வேறு உள்நாட்டு விவகாரங்களில் செய்த குறுக்கீடுகள் ஆகியவையே இந்திய தேசியவாதத்தைத் தூண்டியது. அப்போதைய மதராஸ் மாகாணம் சுதந்திரப் போராட்டத்தில் முக்கியப் பங்காற்றியது. சுதந்திரத்தை அடைய, அறியப்பட்ட மற்றும் அறியப்படாத பல நாயகர்களும் தீவிரமான போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர்.

ஒட்டுமொத்தமாக, மதராஸ் மாகாணம் பல்வேறு அம்சங்களில் முன்னோடியாக இருந்தது. முகலாய ஆட்சியின் வீழ்ச்சி இந்தியாவை பல சமஸ்தானங்களாக சிதறடித்தது. முகலாய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்கு ஆங்கிலேயரும் ஒரு வகையில் முக்கியக் காரணம் என்று ஆய்வுகள் கூறுகின்றன. ஆங்கிலேயர், இம்மண்ணின் ஆட்சியாளர்கள் சிலரை எதிர்த்தும், மற்ற சிலரை ஆதரித்தும், சூழ்ச்சிகள் செய்தும் தங்கள் ஆட்சியை தக்கவைத்துக் கொண்டனர். அவர்கள் ஓர் அசைக்க முடியாத சாம்ராஜ்யத்தைக் கட்டமைத்தனர், அது மேலும் வலிமையாக வளர்ந்தபடியே இருந்தது. பல்வேறு துறைகளில் நடைபெற்ற சுரண்டல்கள் இந்தியர்களைக் கடும் அதிருப்திக்கு உள்ளாக்கியது.

ஆங்கிலேயர் தங்கள் நலன்களுக்கு மட்டுமே முன்னுரிமை அளித்தனர், இந்தியாவை வெறும் ஓர் சந்தையாக மட்டுமே கருதினர், என்பதை படித்த இந்தியர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். இவை, இந்திய விடுதலைக்காக போராட வேண்டும் என்கிற எண்ணத்தை அவர்களிடையே ஊக்குவித்தது. தமிழ்நாட்டின் புவியியல் முன்பு ஆந்திரா, கருநாடகா, கேரளா மற்றும் மதராஸ் ஆகியவற்றை உள்ளடக்கியதாகப் பரந்து இருந்தது. ஆங்கிலேய ஆட்சியில் அவை மொத்தமாக மதராஸ் மாகாணம் என்றழைக்கப்பட்டது, சுதந்திரத்திற்குபின் மொழிவாரியாக பிரிக்கப்பட்டு மதராஸ் மாநிலம் என்றழைக்கப்பட்டது. பின்னர், 1969இல் மதராஸ் மாநிலம் 'தமிழ்நாடு' என்று மறுபெயரிடப்பட்டது. மேலும்,

அதன் தலைநகரான மதராஸ் 1996இல் 'சென்னை' என்று மறுபெயரிடப்பட்டது. சுதந்திரப் போராட்டத்தில் தமிழ்நாடு மாணவர்களின் பங்கு, மதராஸ் மாகாணத்தின் மாணவர் அமைப்புகள், பள்ளிகள், மற்றும் கல்லூரி மாணவர்களின் பல்வேறு தேசப்பற்று மிக்க நடவடிக்கைகளால் அமைந்ததாகும். சுதந்திரப் போராட்டத்தில் மாணவர்களின் பங்கு குறித்து பேசுவதற்குமுன், அவர்கள் இருந்த இக்கட்டான நிலையை தெளிவாக புரிந்துகொள்ள அப்போதைய தமிழ்நாட்டின் கல்விச்சூழலை நாம் ஆய்வு செய்ய வேண்டும்.

கல்வியின் நிலை

பெண் கல்வியில் மதராஸ் மாகாணத்தின் நிலையை ஒட்டுமொத்த தேசத்தில் நிலவரத்தோடு ஒப்பிடும்போது அது நமக்கு சாதகமான முடிவுகளை அளிக்கின்றது. கல்வி கற்பதற்கான தேவையின் அதிகரிப்பும், அது சார்ந்து கல்வி மற்றும் நிருவாகத்தில் ஏற்பட்ட வளர்ச்சிகளும் குறிப்பிடத் தகுந்த அளவில் இருந்தன.

கல்வி மற்றும் தொழில் சார்ந்து திறமைமிக்க நபர்களுக்கான தேவை பெருமளவில் எழுந்தபோது விவசாயிகள் மற்றும் தொழில் பிரிவு மக்களிடையிலிருந்து உற்சாகமிக்க இளைஞர்களை ஆங்கில கல்வி நிறுவனங்கள்பால் ஈர்க்கும் வேலையை பெரும் அரசியல் அமைப்பு, தானே செய்ய வேண்டியிருந்தது.

கல்விக்கான செலவுகள் மிக அதிகமாக இருந்தது; அதே சமயம், 1931 வாக்கில் பள்ளிகளில் அதிக மாணவர் சேர்க்கை காணப்பட்டது. மதராஸ் மாகாணத்தில் 21.1% ஆண்கள் தாய்மொழி அல்லது வட்டார மொழிகளில் கல்வி கற்பதாகவும், 2.2% பேர் ஆங்கில வழியில் கல்வி கற்பதாகவும் அறியப்பட்டது. பள்ளிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் உயர்வர்க்க செல்வந்தர் பின்னணியிலிருந்து வந்தவர்களாகவே இருந்தார்கள். மதராஸ் தவிர்த்து, பள்ளிகளும், கல்லூரிகளும் கும்பகோணம் மற்றும் தஞ்சாவூரிலேயே அதிகம் இருந்தன. மாணவர்கள் பின்னர், நிருவாகம் மற்றும் சட்டம் ஆகியவற்றில் தங்கள் மேற்படிப்பைத் தொடர்ந்தனர். கல்விக்கான செலவுகளை ஈடுகட்ட புதிய வரிகள் விதிக்கப்பட்டன, ஏற்கனவே இருந்த வரிகள் உயர்த்தப்பட்டன. அவ்வாறு, பெறப்பட்ட நிதியிலிருந்து புதிய கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகள் கட்டமைக்கப்பட்டன.

விடுதலைப் போராட்டம்

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சுதந்திரத்திற்கான போராட்டம் மிகத் தீவிரமான நிலையை எட்டியது. போராட்டம் மிகக் கடுமையான ஒன்றாகவும் தேசத்தின் அனைத்து பிரிவு மக்களும் அதில் பங்கெடுத்த காரணத்தாலும் 1947இல் இறுதியாக நாடு சுதந்திரம் பெற்றது. தேசியம் மற்றும் தேசப்பற்று ஆகியவற்றின் அடிப்படையில் ஒன்றிணைந்து நின்ற இந்தியர்களுக்கு மத்தியில் ஆங்கிலேய காலனி ஆதிக்கத்திற்கு எதிரான மனநிலையே முக்கிய தூண்டுகோலாக அமைந்தது.

நாட்டின் பல்வேறு இடங்களில் நடந்த கிளர்ச்சிகள், ஆங்கிலேயருக்கு எதிரான இந்திய மக்களின் வெறுப்பையும், எதிர்ப்பையும் வெளிப்படுத்தியது. ஆங்கிலேய ஆட்சி, இந்தியாவின் மதம், சமூகம், பண்பாடு, போன்றவற்றில் ஏற்படுத்திய தாக்கம், கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்தி பொருளாதாரத்தையும் பலவகையில் பாதித்தது. ஆங்கிலேய எதிர்ப்பை இலக்காக வைத்து தொடங்கப்பட்ட சிறிய மற்றும் பெரிய மக்கள் இயக்கங்கள், அவர்களை அவசர அலட்சிய விதிகள் இயற்றுவதை நோக்கி விரட்டிய காரணத்தால் இந்தியாவின் சூழ்நிலை மேலும் மோசமடைந்தது.

இதனால், தனிநபர்கள், சாதாரண மக்களின் சிறு மற்றும் பெருங்குழுக்கள், விவசாயிகள், சிறு வணிகர்கள், வங்கியாளர்கள், சிறு ஆட்சியாளர்கள், மற்றும் படித்தவர்கள் என அனைத்து வகை மக்களும் பாதிக்கப்பட்டனர். ஆகவே, இவ்வனைத்து இந்தியர்களின் ஒரே பொது எதிரியாக ஆங்கிலேயர் விளங்கினர்.

பொது எதிரி

பல்வேறு சமூக குழுக்கள், மேற்கத்திய கல்வி பெற்ற உயர்வர்க்கத்தினர், செல்வந்த மற்றும் தொழில் வர்க்கத்தினர், பாதிக்கப்பட்ட படிப்பறிவற்ற விவசாயிகள், இளைஞர்கள், குறிப்பாக ஆங்கிலேயரால் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் என சமூகத்தின் பல்வேறு பின்னணிகளிலிருந்து மக்கள் அனைவரும் ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடி நாட்டை அவர்களின் தளைகளிலிருந்து விடுவித்து சுதந்திரம் பெற வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தார்கள்.

இந்த அத்தியாயம், சுதந்திரப் போராட்டத்தில் மாணவர்களின் பங்கை முக்கியமான சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகளின் அடிப்படையில் விவரிக்கிறது. எதிர்மறை அம்சங்களுக்கு எதிரான ஓர் வலிமையான சக்தியாக மாணவர் அமைப்புகளை எப்போதும் குறிப்பிடலாம். தவறான மற்றும் அநீதியான அனைத்தையும் அவர்கள் எப்போதும் ஆட்சேபிக்கவும் எதிர்க்கவும் செய்தார்கள். பல்வேறு போராட்டங்கள், பேரணிகள், பிரச்சாரங்கள், ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்கள், ஆகியவற்றில் பெரும் எண்ணிக்கையில் மாணவர்கள் பங்கேற்றது அவர்களின் தேசப்பற்றை மட்டுமல்ல ஒற்றுமையையும் எடுத்துக்காட்டியது. ஒட்டுமொத்தமாக, மாணவர்களின் பங்களிப்புகளை அங்கீகரிக்கும் பொருட்டு மதராஸ் மாகாண மாணவர்களின் பங்களிப்புடன் நாட்டின் வடபகுதி மாணவர் பங்களிப்புகள் குறித்தும் சுருக்கமாக விவாதிக்கப்பட்டுள்ளது.

தேசிய மற்றும் பிரதேசம் சார்ந்து மாணவர்களின் பங்களிப்புகள்

தேச இயக்கங்களில் மாணவர்களின் பங்கேற்பு சார்ந்து இந்தியா மிக நீண்ட வரலாறு கொண்டிருக்கிறது. சில நிகழ்வுகள் குறித்த பின்வரும் விவரங்கள் விடுதலைப் போராட்டத்தில் மாணவர்களின் பங்கை தெளிவாக விளக்கும். பெருந்திரளான மாணவர் பங்கேற்பு மற்றும் மாணவர் இயக்கங்களின் அடித்தளம் ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தொடங்குகிறது. வங்காள இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவும் ஓர் சீர்திருத்தவாதியாகவும் விளங்கிய ஐரோப்பிய ஆசிரியரான ஹென்றி விவியன் டெரோசியோ அவர்களால் 1828இல் மாணவர் சங்கம் தொடங்கப்பட்டபோதே மாணவர் பங்கேற்பு வரலாறு தொடங்கி விட்டது.

சுதந்திர சிந்தனை கொண்ட ஹென்றியின் மாணவர்களும், அவருடைய கொள்கைகளை பின்பற்றுபவர்களும் ஒன்றிணைந்து 'இளம் இந்திய குழுவை' உருவாக்கினார்கள். இக்குழு 19ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த வங்க மறுமலர்ச்சியில் ஓர் முக்கியப் பங்கை ஆற்றியது. நாடு முழுவதும் சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்த மற்ற பல்வேறு ஆற்றல்மிக்க இளைஞர் மற்றும் மாணவர் குழுக்களும் உள்ளன.

மதராஸ் மாகாணத்தில் உள்ள மதராஸ் மருத்துவக் கல்லூரி 1875 காலத்திலேயே மாணவிகளை அனுமதித்த ஓர் முன்னோடியான ஆங்கிலேய இந்திய மருத்துவ நிறுவனம் ஆகும். ஆங்கிலேயரின் இந்த முன்னெடுப்பால் பயனடைந்த இளம் விதவைகள், பின்னர் மகாத்மா காந்தி அவர்களால் ஈர்க்கப்பட்டு விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

தேசப்பற்றுமிக்க மற்றும் ஆர்வம்மிக்க பெண் மாணவர்களைத் தவிர்த்து மற்ற பெண் மாணவர்களின் அதிகபட்ச பங்கேற்பை ஈர்ப்பதற்காக அவர்களுக்குத் தேவையான புத்தகங்கள், கரும்பலகைகள், மற்றும் கட்டணச் சலுகைகள் ஆகியவற்றோடு பால், உணவு, மற்றும் சீருடைகளும் இலவசமாக அளிக்கப்பட்டன.

1882இல் கும்பகோணம் கல்லூரியின் மொத்த மாணவர் எண்ணிக்கை 267ஆகவும், மதராஸ் பிரெசிடென்சி கல்லூரியின் மாணவர் எண்ணிக்கை 241ஆகவும் இருந்தது. 1910 வாக்கில் கும்பகோணம் கல்லூரியின் மாணவர் எண்ணிக்கை 123 ஆகக் குறைந்து மதராஸ் பிரெசிடென்சி கல்லூரியின் மாணவர் எண்ணிக்கை 532 ஆக உயர்ந்தது.

ஓர் உண்மையான நோக்கத்திற்காக மதராஸ் மாகாணத்தில் பின்பற்றப்பட்ட அதிகாரப் பரவலாக்க கொள்கையின் விளைவாகவே இது நடந்ததாக ஒப்புக்கொள்ளப்பட்டது. சேலத்தில் நிறுவப்பட்ட தேசியப் பள்ளிகள், ஓர் உள்ளூர் இலக்கிய சங்கத்தால் ஏற்கனவே நடத்தி வரப்பட்ட பள்ளிகளுக்கு மறுபெயர் சூட்டப்பட்டு உருவாக்கப்பட்டவை ஆகும். எல்லோரா தேசியப் பள்ளி என்னும் மற்றொரு பள்ளி, ஓர் முக்கிய வணிகரின் உள்ளூர் கல்வி அறக்கட்டளை அளித்த நிதியால் நிறுவப்பட்டதாகும்.

லார்ட் கர்சன் 1905இல் வங்கப் பிரிவினையை நடத்தியபோது மாணவர் பங்கேற்பு அதில் உச்ச அளவில் இருந்தது. அப்போது நடந்த போராட்டங்களில் மிகப்பெரும் அளவில் பங்கேற்ற மாணவர்கள், காங்கிரஸ் லாகூர் அமர்வில் ஏற்பட்ட பிளவிற்குப் பின்னர் கூட்டம் கூட்டமாக இந்திய தேசிய காங்கிரஸில் இணைந்தார்கள்.

தமிழ்நாட்டு மாணவர்களின் சுதந்திரப் போராட்ட பங்கேற்பைக் குறித்து கூறும்போது அவர்களின் தியாகம், அர்ப்பணிப்பு, மற்றும் ஈடுபாடு ஆகியவற்றை முன்னிலைப்படுத்த வேண்டும். நாடு முழுவதும் இளம் மாணவர்களை ஊக்கப்படுத்துவதில் தேசியத் தலைவர்கள் முக்கியப் பங்காற்றினர். பிபின் சந்திர பால், இளைஞர்களிடையே மிகப் பிரபலமானவராகவும், ஓர் எழுச்சிமிக்க தலைவராகவும் கருதப்பட்டார்.

சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்க முன்வரும் இளைஞர்களை ஊக்குவிக்க வேண்டும் என்னும் பொருட்டே அவர் ஓர் மதராஸ் பயணத்தை திட்டமிட்டார். அவருடைய வருகை 1907ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 மற்றும் 29 தேதிகளுக்கு இடையில் திட்டமிடப்பட்டது. இந்நிகழ்வு பல அமைப்புகளின் மாணவர் பிரிவுகளை பெரிதும் ஈர்த்த காரணத்தால் கடலூர், தஞ்சாவூர், கும்பகோணம், மதுரை, மற்றும் சேலம் போன்ற நகரங்களில் சில முக்கிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.பிபின் சந்திர பாலை அவருக்குரிய மரியாதையுடன் வரவேற்கத் தேவையான ஏற்பாடுகளை அவர்கள் செய்தனர். விழுப்புரத்தில் சில மாணவர்கள் பிபின் சந்திர பால் அவர்களின் தமிழ்நாடு வருகைக்கான செலவுகளுக்காக ரூ.100 நிதி வசூலித்தனர்.

இதனிடையே, மதராஸ் நகரத்தின் சூழல் வேறாக இருந்தது. பிபின் சந்திர பால் அவர்களின் வரவேற்பு மற்றும் அவர் உரை நிகழ்த்தவிருக்கும் பொதுக்கூட்டம் ஆகியவற்றுக்கான செலவுகளுக்காக சுப்ரமணிய ஐயர் தலைமையிலான மதராஸ் கல்லூரி மாணவர்கள் 250 ரூபாயை நிதியாக வசூலித்திருந்தனர்.

மாணவர்கள் தாங்களாக முன்வந்து இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் பால் அவர்களின் வரவேற்பு குறித்த பெரியவர்களின் விவாதங்களில் மாணவர்கள் அனுமதிக்கப்படவில்லை. 200 முதல் 300 மாணவர்கள் இதற்கான பிரச்சாரக் கூட்டங்களில் பங்கேற்றனர். பிபின் சந்திர பால் அவர்களை வரவேற்க தேசப்பற்றுமிக்க மாணவர்கள், 27 ஏப்ரல் 1907 அன்று மதராஸின்

பேசின் பிரிட்ஜ் இரயில் நிலையத்தில் கூடினர்; ஆனால் அவர் அன்று வர இயலாமல், 30 மே அன்று தான் வந்தார்.

மதராஸ் மெயில் பத்திரிகை 13 மே 1907 அன்று ஓர் சுற்றறிக்கையை அச்சிட்டு நகரத்தின் இளைஞர்களையும், மாணவர்களையும் 30 மே அன்று நிகழ்வில் பங்கெடுக்குமாறு கோரியது. குறிக்கப்பட்ட அந்நாளில் அதே பேசின் பிரிட்ஜ் இரயில் நிலையத்தில் 400க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒன்று கூடி "வந்தே மாதரம்" என்று முழங்கி தங்கள் தேசப்பற்றை வெளிப்படுத்தினார்கள்.

பால் அவர்கள் செல்லவிருந்த கைவண்டியை இழுத்துச்செல்ல ஆர்வமிக்க மாணவர்கள் தாங்களே விரும்பி போட்டி போட்டு முன்வந்தார்கள். இது பால் மாணவர்களிடையே ஏற்படுத்தியிருந்த தாக்கத்தை தெளிவாக உணர்த்தியது. மதராஸ் மாணவர்கள் சிறு உரையுடன் அவரை மிகுந்த மரியாதையோடு வரவேற்றனர். பெரும் மாணவர் பங்கேற்பினால் அது 4,000 பேர் கொண்ட மிகப்பெரும் பேரணியாக மாறியது. இந்த ஊர்வலம் வட சென்னையின் தம்பு செட்டி தெருவில் தொடங்கி தீவிரமடைந்து பின்னர் முக்கியப் பகுதிகளுக்கு நகர்ந்தது. போலீசார் அவ்விடத்திற்கு விரைந்து வந்து மாணவர் கூட்டத்தைக் கலைந்து செல்லுமாறு கூறினர்.

தேசப்பற்று மிக்க மாணவர்கள் அதற்கு மறுப்பு தெரிவித்தபோது ஆங்கிலேய அதிகாரிகள் மற்றும் அரசின் கடுமையும், காட்டுமிராண்டித்தனமும் வெளிப்பட்டது. பள்ளிகள் மற்றும் கல்லூரிகளை சேர்ந்த இளைஞர்களும் மாணவர்களும், குறிப்பாக மதராஸ் மாகாணத்தைச் சேர்ந்த, புகழ்பெற்ற மற்றும் சிறிய தேசியத் தலைவர்கள், பிரதேசத் தலைவர்கள், மற்றும் வீடுகளில் உள்ள பெரியவர்களால், மிகவும் ஊக்குவிக்கப்பட்டார்கள். சுற்றறிக்கைகள் மூலம் மாணவர்கள் ஒருங்கிணைக்கப்பட்டார்கள், மேலும் அவர்கள் ஆங்கிலேயருக்கு எதிரான நம்பிக்கைக்குரிய போராட்டங்களில் தாங்களே முன்வந்து தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

பிரெசிடென்சி கல்லூரி மாணவர்கள் மிகத் தீவிரமானவர்களாக கருதப்பட்டார்கள். தங்களின் சுயமரியாதை, பெருமிதம், மற்றும் தங்களின் இனம் மற்றும் தேசத்தை அவமதிக்கும் விதமான கடுமையான கருத்துக்களை ஐரோப்பிய பேராசிரியர்கள் தெரிவிப்பதாக மாணவர்கள் புகார் அளித்தார்கள். இதன் விளைவாகவே பெரும் மாணவர் கிளர்ச்சி தொடங்கியது. மதராஸ் வெஸ்லி மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் ஆசிரியர்களால் தாக்கப்பட்டதாகவும், ராஜா தபஸ் கல்லூரி மாணவர்களிடையே பேராசிரியர்கள் வசைமொழியைப் பயன்படுத்திய காரணத்தாலேயே தாங்கள் பேரணி நடத்துவதாகவும் மாணவர்கள் தெரிவித்தனர். இந்நிகழ்வுகள் காரணமாக இந்திய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மற்றும் பெரியோரின் அணுகுமுறையில் பெரிய அளவில் மாற்றம் நிகழ்ந்தது.

ஆங்கிலேய அரசுக்கு எதிராக அரசுக் கல்லூரி மாணவர்களை தூண்டியதற்காகவும், போருக்கு எதிரான முழக்கங்களை எழுப்பியதற்காகவும் உத்தமபாளையத்தைச் சேர்ந்த இஸ்லாமிய மாணவர் சங்கத்தின் தலைவரான K.C. முகமது இஸ்மாயில் என்ற மாணவரும் அச்சங்கத்தின் துணைத்தலைவராக இருந்த மதுரை மாவட்ட காங்கிரசை சேர்ந்த மற்றொரு இளம் மாணவரும், கடுமையாக தண்டிக்கப்பட்டனர். அவர்கள் இருவரும் கிளர்ச்சியாளர்கள் என்று முத்திரை குத்தப்பட்டு, அலிப்பூர் சிறையில் பல மாதங்கள் அடைக்கப்பட்டனர். இச்சம்பவங்கள் தவிர்த்து, கிலாபத் இயக்கம் மாணவர்களிடையே பெரும் எழுச்சியை உண்டாக்கி பல மாணவர்கள் சிறைப்படுத்தப்பட வித்திட்டது.

13 ஏப்ரல் 1919 அன்று நடந்த ஜாலியன்வாலாபாக் படுகொலை நிகழ்வுக்குப்பின் பல முக்கிய இந்திய தலைவர்கள் 19 ஏப்ரல் 1919 அன்று கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அந்நிகழ்வு 15 ஏப்ரல் அன்று ராணுவ சட்டப் பிரகடனத்திற்கும் வித்திட்டது. பின்னர், ஐரோப்பாவின் துருக்கி நாட்டில் நடந்த நிகழ்வுகள், 14 நவம்பர் 1919 அன்று கிலாபத் இயக்கம் தொடங்கப்படக் காரணமாக இருந்தது. இவ்வியக்கத்தில் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் பங்கேற்றனர்.

லாகூரில் உள்ள ராஜா எட்வர்ட் மருத்துவக் கல்லூரியில் 1920இல் இந்திய மற்றும் ஆங்கிலேய மாணவர்களுக்கு இடையில் காட்டப்பட்ட கல்விசார் பாகுபாடுகள் காரணமாக மாணவர்கள் வேலை நிறுத்தங்கள் மற்றும் ஆர்பாட்டங்கள் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஆங்கிலேயரால் கீழ்த்தரமாக நடத்தப்பட்ட மாணவர் அமைப்பைச் சேர்ந்த மாணவர்கள் மிகுந்த கோபமடைந்து மூர்க்கத்தனமாக நடந்து கொண்டனர்.

இதற்கு மாறாக, நம் மாகாணத்தில், ஆங்கிலேயருடன் ஓர் உரையாடலை ஏற்படுத்தும் பொருட்டு மதராஸ் சட்டசபையின் உறுப்பினரான சர் ஆர்தர் ஹோவ்லாக் அவர்களை மகாராஜா கல்லூரியின் ஆண்டு விழாவை தலைமையேற்று நடத்த சில மாணவர்கள் அழைப்பு விடுத்தனர். மாணவர்களை ஈர்க்கும்படியான அவருடைய தலைமை உரை மாணவர்தம் தேர்வு சரியானதே என்பதை மெய்ப்பித்தது. சட்ட மறுப்பு இயக்கத்திற்காக மேற்கத்திய கல்வியை வழங்கும் பள்ளி மற்றும் கல்லூரிகளைப் புறக்கணிக்குமாறு நாடு முழுவதிலும் உள்ள இளம் மாணவர்களுக்கு மகாத்மா காந்தி அழைப்பு விடுத்தபோது தேசப்பற்றுமிக்க மாணவர்கள் உடனடியாக அதற்கு செவி சாய்த்தார்கள். சில மணி நேரங்களிலேயே பள்ளிகளும், கல்லூரிகளும் காலியிடங்களாக மாறின; பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் சட்ட மறுப்பு இயக்க போராட்டங்களில் அணி திரண்டார்கள்.

நாக்பூரில் 1920இல் நடந்த முதல் அனைத்திந்திய மாணவர்கள் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய லாலா லஜபதிராய் தன் உணர்ச்சிகரமான உரையின் மூலம் இளைஞர்களிடையே தேசியவாதம் என்னும் தீயைப் பற்ற வைத்தார். பெரும்பாலான மாணவர்களுக்கு தேசியத் தலைவர்களாக உருவெடுத்த நாயகர்களே வழிகாட்டிகளாகவும் இருந்தார்கள். சுபாஷ் சந்திர போஸ் இந்தியாவில் மட்டுமல்லாது வெளிநாட்டில் உள்ள இந்தியர்களுக்கும் உத்வேகத்தின் மிகப்பெரும் ஆதாரமாகத் திகழ்ந்தார்.

1920இல் தொடங்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கமே இந்தியாவின் முதல் பெரும் மக்கள் இயக்கமாக இருந்தது, இதில் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் பங்கேற்றனர். அனைத்திந்திய கிலாபத் கமிட்டி, 19 மார்ச் 1920ஐ இரண்டாவது கிலாபத் நாளாக அனுசரிக்க திட்டமிட்டது. பொதுமக்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நகரத்தின் முக்கியமான இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. இது தொடர்பாக இளம் மாணவர்களால் திருவல்லிக்கேணியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் பேரணி, இந்துமுஸ்லிம் சகோதரர்களின் ஒற்றுமையையும் அவர்களுடைய ஒன்றிணைந்த முயற்சிகளையும் தெளிவாக வெளிச்சம் போட்டுக் காண்பித்தது.

சட்டக் கல்லூரிகள் மற்றும் கலைக் கல்லூரிகளைச் சேர்ந்த பல திறமையான மாணவர்கள், இஸ்லாமிய மாணவர்களின் கிலாபத் மாநாட்டை ஒருங்கிணைப்பதில் முக்கிய பங்காற்றினார்கள். இதற்கு, மதராஸின் பல்வேறு சட்டக் கல்லூரிகளில் மாணவர்களிடையே

உரை நிகழ்த்திய ராஜகோபாலச்சாரி, கஸ்தூரி ரங்கன், மகாதேவ், மற்றும் உசேன் ஆகியோருடைய தலைமையே முக்கியக் காரணம். இத்தகைய தலைவர்களால் எழுச்சி பெற்ற தேசப்பற்றுமிக்க மாணவர்கள் பலர் 1920இல் போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, செயின்ட் ஜோசப் கல்லூரியின் மாணவர்களை திருச்சிராப்பள்ளியில் புதியதாகத் தொடங்கப்பட்ட தேசியக் கல்லூரியில் இணையுமாறு வேண்டுகோளும் விடுத்தனர். மாணவர்கள் பலர் தங்கள் தேசப்பற்றை வெளிப்படுத்தும் விதமாக மூவர்ணக் கொடிகளை கைகளில் ஏந்திய வண்ணம் நகரம் முழுவதும் பேரணியாக சென்றார்கள், ஆங்காங்கே கூட்டங்கள் நடத்தி தேசபக்தி பாடல்களைப் பாடினார்கள்.

டிசம்பர் 1920இல் வெளியிடப்பட்ட குவாமி அறிக்கை, ஹைதராபாத் நிஜாம் அவர்களின் ஆணைப்படி ஒத்துழையாமை இயக்கத்தில் மாணவர்களின் பங்கேற்பு அங்கீகரிக்கப்படுவதாகத் தெரிவித்தது.

பிரெசிடென்சி கல்லூரியின் விளையாட்டரங்கைச் சேர்ந்த மதராஸ் டென்னிஸ் கழகத்தின் 13 வயது சிறுவனான சின்ன கண்ணன், சட்ட மறுப்பு இயக்கத்தில் தீவிரமாகப் பங்கேற்ற காரணத்திற்காக மே 1930இல் சுட்டுக் கொல்லப்பட்டார். ஒத்துழையாமை இயக்க காலத்தின்போது பலர் தங்களின் பட்டங்களைத் துறந்தார்கள், அரசு அலுவலகப் பணிகளை ராஜினாமா செய்தார்கள், அதிகாரப்பூர்வ கூட்டங்களைப் புறக்கணித்தார்கள்; மாணவர்கள், பள்ளி மற்றும் கல்லூரிகளை விட்டு வெளியேறினார்கள்.

கும்பகோணத்தைச் சேர்ந்த 10 வயது சிறுவனான கோபால், அவரது நகரத்தின் காந்தி பூங்காவில் நிகழ்ந்த வெள்ளையனே வெளியேறு பொதுக்கூட்டத்தில் ஆர்வமுடன் பங்கேற்றபோது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார். பள்ளிகளைப் புறக்கணித்து தேசிய இயக்கங்களில் பங்கேற்ற இளம் மாணவர்கள் எவ்வாறு இரக்கமின்றி கொல்லப்பட்டார்கள் என்பதற்கு இச்சம்பவங்களே சாட்சியம் அளிக்கின்றன. இவை அம்மாணவர்களின் வீரத்தையும், ஆங்கிலேய அரசின் கொடுமைகளையும் படம் பிடித்துக் காட்டுகின்றன.

பள்ளிகளையும், கல்லூரிகளையும் புறக்கணித்த மாணவர்கள் அந்நிய பொருட்களை புறக்கணிக்கும் சுதேசி இயக்கத்திலும் அணி அணியாகப் பங்கேற்றனர். இந்திய நாட்டின் வட பகுதிகளில் பகத்சிங், குதிராம் போஸ் போன்ற தேசப்பற்றாளர்களும் தெற்கில் சுப்பிரமணிய பாரதி, சுப்பிரமணிய சிவா போன்ற தேசபக்தர்களும், தேசம் முழுவதிலும் உள்ள மாணவர் கூட்டத்திற்கிடையே பெரும் தாக்கத்தையும், ஊக்கத்தையும், உற்சாகத்தையும், ஏற்படுத்தினார்கள்.

ஜவஹர்லால் நேரு தன் இளமைக் காலத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்களை தன்பால் ஈர்த்தார். பால கங்காதரத் திலகர், மகாத்மா காந்தி, மற்றும் முகமது அலி ஜின்னா போன்ற முக்கிய தேசத் தலைவர்கள் நடத்திய பேரணிகள், மாணவர்கள் தேச இயக்கங்களில் பங்கேற்பதற்கு பெரும் தூண்டுகோலாக அமைந்தன.

வட மற்றும் தென்னிந்திய மாணவர்கள் தேச இயக்கங்களில் பங்கேற்றதைத் தவிர்த்து, பல இஸ்லாமிய மாணவர்கள் ஜனவரி 1936இல் நாடு முழுவதும் பயணம் செய்தார்கள். பஞ்சாப், சிந்து, பலுசிஸ்தான், வடமேற்கு எல்லை மாகாணம், தில்லியின் மத்திய மாகாணங்கள், மதராஸ், ஒரிசா, ஒன்றிணைந்த மாகாணம், மற்றும் பெங்களூரு போன்ற பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த அம்மாணவர்கள், இஸ்லாமிய மாணவர்களை ஒன்றிணைக்கவும், வட மற்றும் தென்னிந்திய மாணவர்களிடையே தேச உணர்வை தூண்டுவதற்காகவும், அவர்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி ஓர்

அமைப்பை உருவாக்க வேண்டும் என்னும் குறிக்கோளுடன் அவர்கள் நாடு முழுவதும் பயணித்தனர். மோதிலால் நேரு அவர்களின் தலைமையில் 2 ஆகஸ்ட் 1936 அன்று தொடங்கப்பட்ட அனைத்திந்திய மாணவர் கூட்டமைப்பு 'காங்கிரசின் குழந்தை' என்று அழைக்கப்பட்டது.

இந்த அரசியல் அமைப்பு 1938இல் இரண்டாகப் பிளவுபட்டு ஒரு பிரிவு அனைத்திந்திய இளைஞர் காங்கிரஸ் என்றும் மற்றொரு பிரிவு அனைத்திந்திய இளைஞர் கூட்டமைப்பு என்றும் அழைக்கப்பட்டது. இவ்வமைப்பில் நாடு முழுவதிலிருந்தும் பல மாணவர்கள் சேர்ந்தனர். அனைத்திந்திய இஸ்லாமிய மாணவர் கூட்டமைப்பு தொடங்கப்பட்டபோது, மதராஸ் மாகாணத்தைச் சேர்ந்த பல இஸ்லாமிய மாணவர்கள் அதில் தீவிரமாகப் பங்கெடுத்தனர்.

மாணவர்கள் பலர், பொது சொத்துகளை நாசம் செய்வது, தபால் சேவைகளை சிதைப்பது, காவல் நிலையங்களைத்தாக்குவது, வங்கி மற்றும் மற்ற சேவைகளுக்கு இடையூறு ஏற்படுத்துவது போன்ற வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இந்த காலகட்டத்தில் தான் சுதந்திரத்துக்கான தேசியப் போராட்டங்களில் தீவிரமாக பங்கேடுக்குமாறு மதராஸ் மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களை அன்னி பெசன்ட் அம்மையார் ஊக்குவித்தார்.

அதேசமயம் அப்போதைய மதராஸ் ஆளுநரான லார்ட் பெண்ட்லேன்ட், மாணவர்கள் முழு அடைப்புப் போராட்டம் போன்ற பல்வேறு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடை செய்யும் விதமாக கடுமையான ஆணைகளை வெளியிட்டார். ஒத்துழையாமை இயக்கத்தின் காரணமாக ஆங்கிலேயப் பள்ளி, கல்லூரிகளை மாணவர்கள் புறக்கணித்ததால் மதராஸ் மாகாணத்தின் பல கல்வி நிறுவனங்கள் மிக நீண்ட காலத்திற்கு மாணவர் வருகையின்றி இருந்தன. இதற்கு எதிர்வினையாக, நீண்ட காலமாக பள்ளி, கல்லூரிக்கு வராத மாணவர்கள் அக்கல்வி நிறுவனங்களிலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என்னும் கடுமையான எச்சரிக்கையை ஆங்கிலேய அரசாங்கம் வெளியிட்டது.

ஆர்ப்பாட்டங்கள் மற்றும் முழு அடைப்புகளில் பங்கேற்ற மாணவர்களை பல்வேறு விதமான கொடுமைகளுக்கு ஆங்கிலேய அரசு உள்ளாக்கியது, அது பல மாணவர்களின் உயிரை பலி வாங்கும் எல்லை வரை சென்றது. கோயம்புத்தூரின் உடையார்பாளையத்தைச் சேர்ந்த K.பெருமாள் என்னும் 19 வயது மாணவர், ஆங்கிலேய அரசுக்கு எதிராக நடைபெற்ற வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் முக்கியப் பங்காற்றிய காரணத்தால் 12 செப்டம்பர் 1942 அன்று காவல்துறையால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இராமநாதபுரம் மாவட்டத்தின் தேவகோட்டையைச் சேர்ந்த 18 வயது மாணவரான M.கிருஷ்ணன், 1942இல் மாபெரும் இந்திய இயக்கத்தில் பங்கேற்றார். தேவகோட்டையில் துடிப்பான மக்கள் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த அவரை, காவல்துறை 17 ஆகஸ்ட் 1942 அன்று சுட்டுக் கொன்றது. சட்டக் கல்லூரிகள் மற்றும் பல்வேறு பள்ளி, கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் அப்போது நடைபெற்ற சட்டசபைத் தேர்தலை புறக்கணித்தனர். பலர் அவர்களுக்கு அளிக்கப்பட்ட கௌரவ பட்டங்களையும் ஆங்கிலேய பொருட்களையும் ஒப்படைத்தனர்.

ஒத்துழையாமை இயக்கத்தின் இத்தகைய முக்கிய நடவடிக்கைகளுக்கு பெரும் ஆதரவு கிடைத்தது. மகாத்மா காந்தி, 9 ஆகஸ்ட் 1942 அன்று கைது செய்யப்பட்டபோது மதராஸ் மாகாண மக்கள் பெரும் கோபமடைந்தனர். இங்கு ஆங்கிலேய அரசுக்கு எதிராக இந்துக்களும், இஸ்லாமியர்களும் ஒன்றிணைந்து போராட்டங்களில் ஈடுபட்டனர்.

தேசபக்திமிக்க மாணவர்களுக்கும் காவல்துறைக்கும் இடையே நேரடி மோதல்கள் நடைபெற்றன. ஆர்ப்பாட்டங்களில் தீவிரமாக பங்கெடுத்த மாணவர்கள்மீது தடியடி நடத்தப்பட்டது. எது நடந்தாலும் தங்கள் போராட்டங்களை கைவிடாமல் தொடர வேண்டும் என்பதில் மாணவர்கள் தீர்மானமாக இருந்தனர்.

மதுரை அமெரிக்க கல்லூரியை சேர்ந்த இஸ்லாமிய மாணவர்கள் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்றனர். இவர்கள் மற்ற கல்லூரி மாணவர்களையும் இயக்கத்தில் பங்கேற்க ஊக்குவித்தனர். போராட்டங்களை தலைமை தாங்கி நடத்தியவர்களில் ஒருவரான திண்டுக்கல்லைச் சேர்ந்த அப்துல் சத்தார் சாஹிப் என்னும் இளம் மாணவர் போருக்கு எதிராகப் பிரச்சாரங்கள் செய்தார் என்ற காரணத்திற்காக ஒன்பது மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டபோது அந்த மாணவர் இயக்கம் சிதைக்கப்பட்டது. தேசப்பற்றுமிக்க அந்த இளைஞர் காங்கிரஸ் கட்சியின் மதச்சார்பற்ற சமதர்மவாத மாணவர் அமைப்பின் தீவிர உறுப்பினராகவும் இருந்தார்.

1945ஆம் ஆண்டு நவம்பர் 6ஆம் தேதி மாணவர் போராட்டத்தில் பெருமாளும், அவரது சில நண்பர்களும் கலந்துகொண்டிருந்தபோது மதுரையைச் சேர்ந்த பெருமாள்பிள்ளை காவல் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார். இவ்வகையான போராட்ட நடவடிக்கைகளுக்கு இடையே, மதராஸ் மாணவர் கூட்டமைப்பு சார்பாக 1946இல் மதராசில் கிரெசன்ட் மருத்துவமனை நிறுவப்பட்டது போன்ற முக்கிய சமூக நடவடிக்கைகளும் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டன. இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளிக்கும் பொருட்டு இந்நிறுவனம் தொடங்கப்பட்டது. இவை தவிர்த்து மதராஸ் முழுவதும் மாணவர்கள் மாபெரும் அளவில் பேரணிகளையும், ஊர்வலங்களையும் ஒருங்கிணைத்தார்கள். ஒருபுறம் பெரும்பாலான மாணவர்கள் இவ்வாறான அறவழிப் போராட்டங்களில் ஈடுபட்டபோது, சில மாணவர்கள் ஆங்கிலேய நிருவாக இயந்திரத்தை முடக்கும் விதமாக, வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டனர். இரயில் தண்டவாளங்களை வெட்டுவது மற்றும் முக்கியமான இடங்களில் மரங்களை வெட்டி சாய்த்து இரயில் பாதைகளை அடைப்பது போன்ற செயல்களில் வெற்றிகரமாக ஈடுபட்டனர்.

அன்னி பெசன்ட் அம்மையாரால் ஈர்க்கப்பட்ட மதராஸ் மாகாணத்தின் பல மாணவர்கள் அவரை தங்களின் இலட்சியவாதத் தலைவராகக் கருதினர். பெசென்ட் அம்மையாரின் இந்த கவர்ந்திழுக்கும் தன்மையை அவதானித்த மதராஸ் அரசு, மாணவர்கள் எவ்விதமான ஆர்ப்பாட்டங்களிலும், போராட்டங்களிலும் பங்கெடுக்க முடியாதபடி தடை ஆணைகள் பிறப்பித்ததன் மூலம் அன்னி பெசன்ட் அம்மையார் அவர்களுக்கு மாணவர் ஆதரவு கிடைக்காமல் செய்தது. பால கங்காதர திலகர் மற்றும் அன்னி பெசன்ட் அம்மையார் ஆகியோர் ஆற்றிய உரைகள் மாணவர்களின் அரசியல் ஈடுபாட்டை அதிகரித்தது, மேலும் தன்னாட்சி இயக்கம் அவர்களிடையே மிகுந்த புகழ்பெற்றது. இதற்கு பதிலடியாக அரசு, அரசியல் பொதுக் கூட்டங்களில் மாணவர்கள் பங்கேற்பதைத் தடை செய்தது. திலகர் உடனடியாக இதை கண்டனம் செய்தார். "சுதந்திரப் போராட்டத்தில் மாணவர்கள் ஆற்றும் பங்கை குறித்து அறிந்த அரசு மிகவும் நம்பிக்கையற்ற சூழலில் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவது தெளிவாகத் தெரிகிறது; இருப்பினும், மாணவர்கள் தங்களின் தேசபக்தியையும், ஆர்வத்தையும் தொடர்ந்து தயங்காமல் வெளிப்படுத்துகிறார்கள்" என்று இது குறித்து திலகர் கூறினார். தொடர்ந்து எதிர்ப்பில் ஈடுபட்டால் மாணவர்கள் தங்கள் கல்வியை கைவிட வேண்டிய சூழல் ஏற்படும் என்று ஆங்கிலேய அரசு மாணவர்களை மிரட்டியது.

முடிவுரை

மகாத்மா காந்தி அவர்களின் தூண்டுதலின் பேரில் நடத்தப்பட்ட பல்வேறு தேசிய இயக்கங்கள் மற்றும் ரௌலட் சட்டம், உப்பு சட்டம், ஜாலியன்வாலாபாக் படுகொலை போன்றவற்றிற்கு எதிராக நடத்தப்பட்ட பிரச்சாரங்கள், பேரணிகள், சத்தியாகிரகங்கள், மற்றும் ஒத்துழையாமை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம், அந்நிய பொருட்களைப் புறக்கணித்து சுதேசிப் பொருட்களைப் பயன்படுத்த வேண்டும் போன்ற இயக்கங்களை மாணவர்கள் முழுமையாக ஆதரித்தனர். இவற்றில் மாணவர்கள் ஆற்றிய பங்கும், அவர்கள் ஏற்படுத்திய தாக்கமும் பெரும் அங்கீகாரத்தையும், பாராட்டுகளையும் பெற்றது. சுதந்திரத்திற்குப் பின்பும் பல அரசியல் கட்சிகள், மாணவர் பிரிவுகளை தொடங்கி அவர்களுக்கு முக்கிய பொறுப்புகளை வழங்கின. இவை பல தனிநபர்களையும், தனித்த மாணவர்களையும், சிறு குழுக்களையும் அரசியல் சமூக இயக்கங்களில் பங்கேற்கும் ஆர்வத்தை உண்டாக்கி மேலும் சமூகத்தில் நம்மிடையே வாழும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு உதவும் எண்ணத்தை அவர்களிடையே விதைத்தது. இவ்வாறாக, சுதந்திர இயக்கங்களில் மாணவர்களின் பங்கேற்புகளால் ஊக்கம் பெற்ற இந்திய தேசம், சுதந்திரத்திற்கு பின்பும் அந்நினைவுகளில் செழித்து வளர்ந்தது. ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வது மிகச் சவாலாக இருந்த காலகட்டத்தில், தமிழ்நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் மாணவர்கள் ஆற்றிய பங்கு அவர்களின் தேசப்பற்றை வெளிப்படுத்தியது. நாட்டின் சுதந்திரத்தை அடைய இவர்கள் மேற்கொண்ட இன்றியமையா போராட்டம், வயது வெறும் எண் மட்டுமே தேச உணர்வே முக்கியமானது என்பதை மெய்ப்பித்தது.



12

மாணவர் இயக்கங்கள் மற்றும் சுதந்திரப் போராட்டம் - 2

டாக்டர் எபி ஜேம்ஸ்
உதவிப் பேராசிரியர்
இராஜாளையம் இராஜீஸ் கல்லூரி

காங்கிரசின் செயல்திட்டம் தொடர்பாக இந்திய இளைஞர்களுக்கு ஜவஹர்லால் நேரு முன்வைத்த கோரிக்கை காரணமாக கட்சியின் மூத்த தலைவர்களுக்கும், இளைஞர் காங்கிரஸ் தலைவர்களுக்கும் இடையே தீவிர மோதல் உண்டானது. மதராஸ் மாகாணத்தின் இளைஞர் காங்கிரஸ் தன்னார்வலர்கள் தங்களை புதிய நடவடிக்கைகளுக்கு தயார்படுத்திக் கொண்டனர். சைமன் குழுவிற்கு எதிராக மதராசில் புதிய இளைஞர் இயக்கம் உருவானது. மதராஸ் இளைஞர் காங்கிரஸ், கருத்தியல் ரீதியிலான மோதலில் காங்கிர சிலிருந்து விலகி, தனது இளைஞர் காங்கிரஸ் மாநாட்டை தனித்து நடத்தியது. ஸ்ரீனிவாச அய்யங்கார் தலைமையில் 20 ஜனவரி 1929 அன்று அவர்கள் மதராஸ் இளைஞர் கூட்டமைப்பு மாநாட்டை நடத்தினார்கள். இந்த அரசியல் விவகாரத்தையும், தங்களோடு உடன்படாமல் இளைஞர் காங்கிரசாரிடம் தனிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்திய எதிரியான சீனிவாச ஐயங்காரையும் நசுக்க எண்ணிய அதிகாரப்பூர்வ காங்கிரஸ், சைமன் குழு ஆதரவுடன் ஐக்கிய இளைஞர் மாநாட்டை நடத்தியது.

லாகூர் சதி வழக்கில் பங்கேற்ற கல்கத்தா ஜத்தீந்திரநாத் தாசின் மரணம் மாணவர்களிடையே கோபத்தை உண்டாக்கியது, அது ஒரு வகையில் இளைஞர் இயக்கம் மேலும் வலுப்பட காரணமாக அமைந்தது. 1929ஆம் ஆண்டில் தான் தேசம் முழுவதும் பல மாணவர் மற்றும் இளைஞர் அமைப்புகள் உருவாக்கப்பட்டன. ஜவகர்லால் நேரு மற்றும் சுபாஷ் சந்திர போஸ் ஆகியோரின் பணிகளை ஆதரிக்கும் விதமாக பல இளைஞர் காங்கிரஸ் மாநாடுகள் நாட்டின் பல பிரதேசங்களில் நடைபெற்றன.

சைமன் புறக்கணிப்பு பிரச்சாரக் குழு

இத்தகைய முக்கியமான காலகட்டத்தில் மதராஸ் இளைஞர் காங்கிரஸ் தலைவர்கள் சைமன் எதிர்ப்பு பிரச்சாரத்தை தமிழ்நாட்டில் துவங்கினர். சைமன் புறக்கணிப்பு பிரச்சாரக் குழு காங்கிரஸ் கட்சியின் சுயராஜ்யப் பிரிவின் தயாரிப்பாகும். மதராஸ் சுயராஜ்யக் கட்சியின் முக்கியத் தலைவரான S. சத்தியமூர்த்தி அக்குழுவுக்கு தலைமை வகித்தார். அக்குழுவின் முக்கிய நோக்கம், பத்திரிகைகள், போராட்டங்கள், ஊர்வலங்கள் மற்றும் அரசியல் இலக்கிய வெளியீடுகள் மூலம் ஓர் தீவிர பிரச்சாரத்தை முன்னெடுப்பதாகும்.

அவர்கள், பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் மாணவர்களை இலக்காகக்கொண்டு செயல்பட்டனர். மாணவர்கள் பள்ளி, கல்லூரிகளுக்கு செல்வதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டனர். சைமன் புறக்கணிப்புக் குழு 22 டிசம்பர் 1928 அன்று ஓர் துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டது. அதில், சைமன் குழு பம்பாயில் வந்திறங்கியதைக் குறிக்கும் நாளான 3 பிப்ரவரி 1929 அன்று ஓர் முழுமையான பொது வேலைநிறுத்தத்தை அனுசரிக்குமாறு மதராஸ் நகர கல்லூரிகளின் மாணவர்களுக்கு கோரிக்கை வைத்தது. அப்பிரசுரம் மேலும் பின்வருவனவற்றை தெரிவித்தது, "ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டின் மாணவர்கள்தான் தேசப்பற்றை பரப்புவதிலும் மக்களின் பிறப்புரிமையை நிலை நிறுத்துவதிலும் மக்களிடையே தேசப்பற்றை பரப்பும் நோக்கில் பெரும் போராட்டங்களை தலைமை தாங்கி நடத்துவதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறார்கள்."

அத்தகைய பொறுப்பை கையில் எடுக்க முடிவு செய்த மதராசின் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் முழு அடைப்பு அன்று தங்களது பள்ளி கல்லூரிகளுக்குச் செல்லாமல், மதராஸ் நகரம் முழுவதும் ஒருங்கிணைக்கப்பட்ட சைமன் புறக்கணிப்பு குழு ஊர்வலங்கள் மற்றும் போராட்டங்களில் உற்சாகமாகக் கலந்து கொண்டார்கள். பிராட்வேயில் அமைந்திருந்த, மதராஸ் ஹாரிசன் – கம்பெனி என்னும் உணவகத்தை 3 பிப்ரவரி 1929 அன்று ஒரு கலவரக் கும்பல் சூறையாடியது. ஐந்து மாணவர்களை உடனடியாக கைது செய்து மதராஸ் காவல்துறை, கலவரத்தை கட்டுக்குள் கொண்டு வந்தது. பின்னர் அவர்கள் கைது செய்தவர்களை விடுவிக்குமாறு உயர் நீதிமன்றம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். தொண்டர்களின் கோபத்தை அறிந்த மதராஸ் காவல்துறை துப்பாக்கிச்சூடு நடத்தியதில் ஒருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். பல குழப்பங்களுடன் நடந்து முடிந்த அவ்வூர்வலத்தில் அன்று 26 பேர் கைது செய்யப்பட்டார்கள். மதராஸ் காங்கிரஸ் கமிட்டி பத்திரிகைகள் மூலம் இளைஞர்களுக்கு வைத்த கோரிக்கையில், பல்வேறு புறக்கணிப்புப் போராட்டங்களில் கலந்துகொள்ள தொண்டர்கள் தங்களை தயார்படுத்திக் கொள்ளுமாறு கூறியது. தெருப்பிரச்சார வேலைகள் அனைத்தும் மாணவர்கள் மற்றும் சாதாரண தொண்டர்களால் முன்னெடுக்கப்படும் என்று அறிவித்தது. சைமன் புறக்கணிப்புக் குழுவின் உறுப்பினர்கள், மகாத்மா காந்தி பரிந்துரைத்த கதர் உடைகளையே அணிந்தனர்.

இந்துஸ்தான் சேவாதள இயக்கம்

சைமன் புறக்கணிப்பு பிரச்சாரக் குழுவின் பணிகளைத் தவிர்த்து அதுபோன்ற மற்ற காங்கிரஸ் செயல்பாடுகளை முன்னெடுக்க இந்துஸ்தான் சேவாதள இயக்கங்களை தத்தமது பகுதிகளில் தொடங்குமாறு, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தமிழ் இளைஞர்களுக்கு வேண்டுகோள் வைத்தது. மதராஸ் மாகாணத்தின் பெரும்பான்மையான இளைஞர்கள், மகாத்மா காந்தி மற்றும் மற்ற தலைவர்களின் அழைப்பை உடனடியாக செவிமடுத்து தங்கள் பகுதிகளில் சேவாதளத்தைத் தொடங்கினார்கள். காங்கிரஸ் கட்சியின் இளைஞர் பிரிவாக, இந்துஸ்தான் சேவாதள இயக்கம் மதராஸ் மாகாணம் முழுவதும் நன்கு பரவியிருந்தது. அதன் கிளைகள் மதராஸ், கும்பகோணம், குடியாத்தம், குண்டூர், சித்தூர், மதுரை, திருச்சி, மற்றும் தஞ்சாவூரில் தொடங்கப்பட்டன. N.S. ஹார்திகர், அனைத்திந்திய இந்துஸ்தான் சேவாதள தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சேவாதள மதராஸ் கிளையின் ஒத்துழைப்புடன் காந்தி ஜெயந்தி அன்று கொளுத்துவதற்காக அந்நிய உடைகள் சேகரிக்கப்பட்டன. மாதத்தின் ஒவ்வொரு கடைசி வாரமும் தேசிய கொடி நாளை நாடு முழுவதும் சரியாக அனுசரிக்க வேண்டும் என்று காங்கிரஸ் டிசம்பர் 1929 கல்கத்தா அமர்வில் எடுத்த முடிவே அவ்வியக்கத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. மதராஸ் மாணவர்களால் தேசிய கொடி நாள் மிகச்சரியாக அனுசரிக்கப்பட்டது. தேசிய கொடி நாள் கூட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு மதராஸ் காவல்துறை கல்லூரி நிர்வாகத்துக்கு அறிவுறுத்தியது. விசாரணைக்குப்பின், பச்சையப்பா கல்லூரி நிருவாகம் மூன்று மாணவர்களை இடைநீக்கம் செய்தது, ஏழு மாணவர்களுக்கு அபராதம் விதித்தது.

சட்ட மறுப்பு இயக்கத்தின் தொடக்க காலகட்டமான 1929 முதல் 1930 வரை மதராஸ் மாகாணத்தின் 23 மாணவர்கள் அதில் பங்கெடுத்தனர். பச்சையப்பா மற்றும் பிரசிடென்சி கல்லூரியிலிருந்து வெளியேறி சில மாணவர்கள் சட்ட மறுப்பு இயக்கத்தில் கலந்து கொண்டனர். M. விநாயகம், S.T.V. சர்மா மற்றும் மார்கண்டேயன் ஆகிய மூன்று மாணவர்கள் தடையை மீறி விடுப்பெடுத்து மதராஸ் தேசிய தொண்டர்கள் படையின் உறுப்பினர் கூட்டத்தில் கலந்து கொண்டதற்காக அவர்களுக்கு பல்வேறு தண்டனைகள் அளிக்கப்பட்டது. கல்லூரி நிருவாகம் மாணவர்களின் பெற்றோரை அழைத்து தங்கள் பிள்ளைகள் இயக்கத்தில் ஈடுபடாத வண்ணம் பார்த்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தியது. இக்கல்லூரிகளின் மாணவர்கள் சேவாதள கூட்டங்களை தங்கள் கல்லூரி விடுதி வளாகங்களிலேயே இரகசியமாகக் கூட்டினார்கள். இவற்றை அறிந்த பச்சையப்பா கல்லூரியின் முதல்வர் மாணவர்களை விடுதியைவிட்டு வெளியேறுமாறு ஆணை யிட்டதோடு, மதராஸ் காவல்துறைக்கும் இத்தகவல்களைத் தெரிவித்தார். காவல்துறை சீருடையின்றி கல்லூரி வளாகத்தில் முகாமிட்டு மாணவர்களின் நடவடிக்கைகளை நோட்டமிட்டது. மதுரை, திருச்சி, மற்றும் கும்பகோணம் போன்ற நகர்ப்புற மையங்களிலும் இது போலான சம்பவங்கள் நடைபெற்றது தெரியவந்தது. இவ்வகையான நடவடிக்கைகளை கண்காணிக்குமாறு 1930 மார்ச் தொடக்கத்தில் மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சி மாவட்ட நீதிபதிகளுக்கு ஆணையிடப்பட்டது.

மதராஸ் மாவட்டத்தில் இளைஞர் கூட்டமைப்பின் பணிகள்

மதராஸ் மாநகரத்தின் தேசிய இளைஞர் தொண்டர்கள் படை 1930 ஏப்ரல், இரண்டாம் வாரம் மெரினா கடற்கரையில் உப்பு சத்தியாகிரக போராட்டங்களை ஒருங்கிணைத்தனர். திருவல்லிக்கேணி கடற்கரையில் ஒருங்கிணைக்கப்பட்ட கல்லூரி மாணவர்கள்,

B. சுப்பாராவ் மற்றும் P.S. பாஷ்யம் போன்ற மூத்த இளைஞர் அமைப்பு தலைவர்களால் ஊக்கப்படுத்தப்பட்டனர். ஆர்ப்பாட்டத்திற்கு மாணவர் சமூகத்திடமிருந்து தன்னிச்சையான எதிர்வினை நிகழ்ந்தது. காங்கிரசார் மாணவர்களுடன் இணைந்து உதயவனம் பகுதியில் மற்றொரு உப்பு முகாமை நடத்தினார்கள். அன்று உள்ளூர் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்ட சத்தியாகிரகிகளை விடுவிக்குமாறு மாணவர்கள் உதயவனம் கடற்கரையில் பேரணி நடத்தினர். அதே சமயத்தில் மதராஸ் சூளை ஆலையிலிருந்து வந்த போராட்டக்காரர்கள் ஆபத்தான பொருட்களைப் பயன்படுத்தியதால் 27 ஏப்ரல் 1930 அன்று கலவரம் வெடித்து பதட்டமான சூழல் உருவானபோது, இளைஞர்களின் தீவிர நடவடிக்கையால் நகரம் சீர்குலையாமல் காப்பாற்றப்பட்டது. ஜூலை 7 அன்று குடியாத்தத்தில் ஆறு காங்கிரஸ் தலைவர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து கலவரம் அரங்கேறியது. இளைஞர் கூட்டமைப்பின் கலவரத்தை கட்டுக்குள் கொண்டுவர காவல்துறை துப்பாக்கிச்சூடு நடத்த வேண்டியிருந்தது. இச்சம்பவத்திற்குப் பிறகு மாவட்டத்தின் பரபரப்பு அடங்கியது. பின்னர், இளைஞர் கூட்டமைப்பு மீண்டும் போராட்டத்தைத் தொடங்க முடிவு செய்தனர். ஆனால், இந்த முறை ஆங்காங்கே இதற்கு முன்பு நடந்தது போன்ற தீவிர நடவடிக்கையாக இல்லாமல் அமைதியான முறையில் நடத்த எண்ணினர்.

மதராஸ் மாவட்டத்தின் புறநகர்களில் 1930 மே மற்றும் ஜூலை மாதங்களுக்கு இடையில் சிறு சிறு சம்பவங்கள் நடந்தேறின. திண்டிவனம் பகுதியில் ஒரு தீவிர கலவரம் நடைபெற்றது. இது உள்ளூர் தலைவர்கள் கைதுக்குப்பின் அப்பகுதியின் இளைஞர் அமைப்பால் முன்னெடுக்கப்பட்டது. செங்கல்பட்டு மாவட்டத்தின் சோளிங்கநல்லூர் பகுதியில் இளைஞர் இயக்கம் திரண்டபோது அங்கு காவல்துறை மாணவர்கள்மீது தடியடி நடத்தியது. அவர்களின் ஒருமனதான ஒத்துழையாமை நடவடிக்கை 2 ஜூன் 1930 அன்று தொடங்கியது. அது கலவரமாக வெடித்தபோது, அக்கலவரத்தைக் கட்டுக்குள் கொண்டு வர காவல்துறை 37 சுற்றுகள் துப்பாக்கிச்சூடு நடத்தியது.

மதராஸ் சுதேசி கூட்டமைப்பு

மதராஸ் சுதேசி கூட்டமைப்பு, இந்தியர்கள் அந்நிய பொருட்கள் வாங்குவதைத் தவிர்த்து உள்நாட்டுப் பொருட்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துவதன் மூலம் இந்திய தொழில்துறையை ஊக்குவிக்க முனைந்தது. மதராஸ் கிறிஸ்தவக் கல்லூரியின் விரிவுரையாளராக இருந்த J.P. ஜோஷ்வா மாணவர் கூட்டமைப்பின் நடவடிக்கைகளை அரசியலிலிருந்து சமூக, பொருளாதார தடங்களுக்கு திசைதிருப்ப முனைந்தார்; அதற்கு கல்லூரியின் முதல்வர் டாக்டர் A.G. ஹாக் தன் முழு ஆதரவை நல்கினார். விரும்பத்தகாத அரசியல் நடவடிக்கைகளில் மாணவர்கள் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டுமானால் அவர்களுடைய தேசப்பற்று உணர்வுகளை நசுக்குவதால் மட்டுமே அது சாத்தியமாகாது. மாறாக, நாட்டின் சமூக, பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு நீங்கள் தன்னலமின்றி தியாகம் செய்து உங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்று கூறி அவர்தம் மனங்களை திசை திருப்ப வேண்டும் என்பதே பெரும்பாலோரின் எண்ணமாக இருந்ததாக ஜோஷ்வா கூறுகிறார். படிப்பைத் தவிர்த்து மாணவர்கள் தங்களுடைய தேசப்பற்றை சுயமாக வெளிப்படுத்த வேறு வழிகளைக் கண்டறிய வேண்டும் என்றும் அவர் கருதினார். இதை அரசியல் தவிர்த்து சமூக, பொருளாதார வழிகளிலேயே சாதிக்க முடியும் என்று அவர் எண்ணினார். ஜோஷ்வாவின் அணுகுமுறை மாணவர்களின் மனங்களை நெறிப்படுத்தியபோது கூட்டமைப்பு குறித்து மதராஸ் அரசு கேள்வி எழுப்பியது. குறிப்பாக, இந்திய பொருட்கள் குறித்த விவர புத்தகத்தை தயாரிக்கும் சுதேசி கூட்டமைப்பின் ஓர்

குழுவில் ஜோஷ்வா நியமிக்கப்பட்டதால் அரசு கேள்வியெழுப்பியது. தேசியவாதத்தின்மீது அவருக்கு இருக்கும் ஆர்வம் இது போன்ற சூழ்நிலைகளுக்கு வித்திடக் கூடும் என்று கிறிஸ்துவக் கல்லூரியின் முதல்வர் வாதிட்டார்.

காங்கிரசின் பிரச்சாரம் மாணவர் சமூகத்திடையே இன்னும் உயிர்ப்பாக இருந்தது என்பதற்கு திருச்சி நகரத்தின் மூன்று கல்லூரிகளில் மதராஸின் பிரபல கிளர்ச்சியாளரான V.A. சுந்தரம் நடத்திய மறியலில் கலந்துகொண்ட கூட்டத்தை வைத்து அறியலாம். நகர காவல்துறையின் கைகளில் சிக்காமல் அவர் மட்டும் தப்பித்தபோது மற்ற பல மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர் முன்னெடுத்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களை இச்சம்பவம் விரக்தியடையச் செய்தது. திருச்சி கல்லூரியின் மாணவர்கள் 3 செப்டம்பர் 1930 அன்று கல்லூரிகளுக்கு செல்லாமல் முழு அடைப்பு போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. சட்ட மறுப்பு இயக்கத்தில் இணையுமாறு மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கும் தாள்கள் மாணவர்களிடையே கண்டெடுக்கப்பட்டது. நகலெடுக்கும் இயந்திரத்தில் வடிவமைக்கப்பட்ட அத்தாள்கள், சுந்தரத்தின் கையெழுத்தோடு இருக்க, அம்மாணவர்கள் 4 செப்டம்பர் 1930 அன்று சுந்தரத்தின் கைதுக்கு முன்பே கைது செய்யப்பட்டார்கள். திருச்சி நகரின் மூன்று கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களை போராட்டத்துக்கு தலைமை தாங்கி வழிநடத்திச் சென்ற குற்றத்தை கிளர்ச்சியாளராக மாறிய மாணவர் V.A. சுந்தரம் மீது காவல்துறை சுமத்தியது. அவருடைய அன்றாட நடவடிக்கைகளை கண்காணிக்குமாறு காவல்துறை அதிகாரிகளுக்கு ஆணையிடப்பட்டது. சீருடை இல்லாத இரண்டு காவல்துறை அதிகாரிகள் அவர் வீட்டிற்கு முன்பு கண்காணிக்க நியமிக்கப்பட்டனர். அவர்கள் சுந்தரத்தின் ஆங்கிலேயருக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்த தகவல்களை சேகரித்தனர். குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் அவருடைய நடமாட்டங்களை காவல்துறை அதிகாரிகளுக்கு அவ்வப்போது தெரிவித்தனர்.

தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளில் நடைபெற்ற மாணவர் போராட்டங்களும் இங்கு குறிப்பிடத்தக்கவை ஆகும். கோயம்புத்தூரை சேர்ந்த மகாலிங்கம் ஐயர் என்னும் மாணவக் கிளர்ச்சியாளர் கல்லூரிகளைப் புறக்கணித்துவிட்டு போராட வருமாறு மாணவர்களைத் தூண்டினார். இதன் விளைவாக, பால் ராமசாமி என்கிற அரசு கல்லூரி மாணவர் உள்ளூர் கல்லூரிகளின் மாணவர்களைத் திரட்டி அவ்வூரில் அந்நிய துணிகளை விற்ற கடைகள் முன்பு புறக்கணிப்புப் போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தினார். ஈரோட்டை சேர்ந்த R. சுந்தரம் திருப்பூர் சென்று அங்கிருந்த கல்லூரி மாணவர்களை 12 செப்டம்பர் 1930 அன்று கல்லூரிகளைப் புறக்கணித்துவிட்டு போராடுமாறு வேண்டினார். உள்ளூர் காங்கிரசாரின் துணையுடன், திருப்பூரின் முக்கிய வீதிகளில் தங்கள் இயக்கத்திற்கு ஆதரவளிக்குமாறு மக்களிடையே வேண்டுகோள் விடுத்து செயல் விளக்கக்கூட்டங்களை மாணவர்கள் ஒருங்கிணைத்தனர். சேலம் சுதேசி கூட்டமைப்பு பார்த்தசாரதி என்னும் கல்லூரி மாணவரின் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தி சேலத்தில் உள்ள அந்நிய பொருட்கள் கடையை புறக்கணிக்க முன்வருமாறு மற்ற மாணவர்களுக்கு அழைப்பு விடுத்தது. கல்லூரி மாணவர்களின் ஒரு குழு 22 செப்டம்பர் 1930 அன்று கடை வீதிகளுக்குச் சென்று மக்களை கதராடைகள் உடுத்துமாறு வலியுறுத்தியது. அச்சமயம் காவல் அதிகாரிகள் உடனடியாக சம்பவ இடத்துக்கு சென்று தடியடி நடத்தி கூட்டத்தைக் கலைத்தனர். சுதேசி கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

சுதந்திர தினம், 26 ஜனவரி 1931

மதராஸ் மாநகரில் தேசியக்கொடி மற்றும் சுதந்திர தின கொண்டாட்டங்கள் மதராஸ் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியால் ஒருங்கிணைக்கப்பட்டது. தடை உத்தரவு ஏதும் இல்லாதது, மகாத்மா காந்தி மற்றும் மற்ற தலைவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட்டது போன்ற செய்திகளால் ஆர்ப்பாட்டத்தின் தீவிரம் கூடி 26 ஜனவரி 1931 அன்று ஓர் முழுமையான முழு அடைப்புப் போராட்டம் நடந்தேறியது. பள்ளி, கல்லூரிகள் முன்பு நடத்தப்படும் மறியல் போராட்டங்கள் காங்கிரஸின் முக்கிய திட்டங்களில் ஒன்றாக இருந்தது.

நன்கு திட்டமிடப்பட்ட இந்நிகழ்வில் நகர கல்லூரி மாணவர்களின் பங்கேற்பு குறிப்பிடத்தக்கதாக இருந்தது. ஒருபுறம், சில கல்வி நிறுவனங்களின் மாணவர்கள் தங்கள் நிறுவனத்தை வற்புறுத்தி விடுமுறை அறிவிக்குமாறு செய்ய, மறுபுறம் பச்சையப்பா கல்லூரியில் வெடித்த அமளி மேலும் தீவிரமடைந்தது. 26 ஜனவரி 1931 அன்று, பச்சையப்பா கல்லூரியின் மூத்த மாணவர்கள், தலைவர்களின் விடுதலையை கௌரவிக்கும் விதமாக பள்ளி மற்றும் கல்லூரியை மூடுமாறு அதன் முதல்வருக்கு அழுத்தம் கொடுத்தனர். அன்று கல்லூரியின் மாணவர் வருகை எண்ணிக்கை வலுவானதாக இருந்தது, மேலும் மாணவர்கள் அவரவர் வகுப்புகளின் உள்ளே அமர்ந்திருந்தனர். மாணவர்கள் வெளியில் செல்லாதவாறு, கல்லூரியின் முதல்வர் வளாகத்தை அடிக்கடி சுற்றிப் பார்த்தார். ஒலிவாங்கி மற்றும் வகுப்பறை ஒலிபெருக்கிகள் மூலமாக மாணவர்களுக்கு வருகைப் பதிவின் அவசியம் குறித்து அறிவுறுத்தினார். வேறொரு நாளில் விடுமுறை எடுத்துக் கொள்ளுமாறு கூறிய கல்லூரி முதல்வரின் ஆலோசனையை அலட்சியம் செய்த மாணவர்கள் கிறிஸ்தவக் கல்லூரி மற்றும் மற்ற உள்ளூர் கல்லூரிகள் தங்கள் மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க விடுமுறை அறிவித்ததுபோல தங்களுக்கும் விடுமுறை அளிக்குமாறு கூட்டமாகத் திரண்டு கோரிக்கை வைத்தனர்.

பச்சையப்பா கல்லூரியின் முதல்வர் இறுதியாக மாணவர்களின் கோரிக்கைக்கு செவிசாய்த்து 26 ஜனவரி 1931 அன்று விடுமுறை அறிவித்தார். அதன்பின், "வந்தே மாதரம்", "மகாத்மா காந்தி வாழ்க," என்னும் முழக்கங்களோடு மாணவர்கள் ஓர் நேர்த்தியான வரிசையில் கல்லூரியை விட்டு வெளியேறுவதை அவர் கண்டார். இதனிடையே, நுழைவாயிலில் கல்லூரியின் காவலாளியை தாக்கிவிட்டு காவல்துறை கல்லூரிக்குள் நுழைந்து, தாமதமின்றி மாணவர்கள்மீது தடியடியைத் துவங்கியது. மாணவர்கள் ஓர் அறையிலிருந்து மற்றொர் அறைக்கு ஓடினார்கள், கல்லூரியின் மத்திய கூடத்தில் பதுங்கினார்கள். ஐந்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கடுமையான காயங்களுக்கு உள்ளானதாக கல்லூரியின் மாணவர் அமைப்புச் செயலாளர் பின்னர் தெரிவித்தார். கிருஷ்ணமாச்சாரி என்னும் மாணவர் பொது மருத்துவமனைக்கு தூக்கிச் செல்லப்பட்டார். ராஜா என்னும் அப்பாவி மாணவர் காவல்துறையின் கடுமையான அடிகளுக்கு உள்ளாகியதால் அங்கேயே நினைவிழந்தார். மாணவர்கள், "செருப்புகள், கண்ணாடிக் குடுவைகள், செங்கற்கள் போன்றவற்றை வீசியெறியும்," நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்ட அனுமானங்களை கல்லூரி முதல்வர் மறுத்தார்.

நகரக் கல்லூரிகளின் மாணவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எரியும் தீயில் மேலும் எண்ணெயை வார்த்தது. பச்சையப்பா கல்லூரியின் மாணவர்களுக்கு நீதி வேண்டி காங்கிரஸ் கமிட்டி காவல்துறை ஆணையர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தியது. காவல்துறை நடத்திய தடியடி, காங்கிரஸ் வட்டங்கள் மற்றும் பத்திரிகைகளில் பெரும் விமர்சனத்திற்கு உள்ளானது. மாணவர்கள்மீது நடத்தப்பட்ட தடியடி குறித்து

பத்திரிகைகள் காவல் அதிகாரிகளிடம் கேள்விகள் எழுப்பின; மேலும், பாதிக்கப்பட்ட கல்லூரி மாணவர்களிடம் நேர்காணல்கள் எடுத்து, கட்டுரைகளாக்கி அவற்றை தவறாமல் வெளியிட்டன. காவல்துறையின் தடியடிக்கு எதிராக மதராஸ் சட்டக் கல்லூரி மாணவர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் 7 பிப்ரவரி 1931 அன்று ஓர் ஒழுங்குடன் கூடிய பேரணி ஒன்றை நடத்தினார்கள்.

ஆயினும், மதராஸ் சட்டக் கல்லூரியின் முதல்வர், பேரணி கல்லூரியின் நுழைவாயிலில் இருந்து தொடங்கியிருந்த போதும் கல்லூரிக்கும், அப்பேரணிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று கூறினார். பேரணியில் மூத்த வழக்கறிஞர்களும், மற்ற கல்லூரிகளின் மாணவர்களும் கலந்து கொண்டாலும், அது சட்டக் கல்லூரி மாணவர் பேரணி என்றே பொதுவாகக் கருதப்பட்டது. இத்தகைய அரசியல் நடவடிக்கைகளால் மதராஸ் காவல்துறை தலைமையகம் பதற்றமடைந்தது. காவல்துறை தலைமை இயக்குனர், காங்கிரஸ் இயக்கத்தில் மாணவர்கள் பங்கேற்பது குறித்து கல்லூரி முதல்வர்களுக்கு ஓர் அதிகாரப்பூர்வ சுற்றறிக்கையை அனுப்பினார். அவ்வறிக்கை, இயக்கப் பிரச்சாரங்களின் தாக்கத்தால் மாணவர்கள் ஒழுங்கின்மை நடவடிக்கைகளில் ஈடுபடாமல் தடுப்பதில் கல்லூரி முதல்வர்களின் பங்கை வலியுறுத்தியது. "முதல்வர், மாணவர்களுக்கு அறிவுரைகளைக் கூறி அரசியல் போராட்டங்களில் பங்கெடுக்காமல் தடுக்க வேண்டும். அவ்வாறு அரசியல் போராட்டங்களில் பங்கெடுப்பது அல்லது அப்போதைய மதராஸ் அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக பள்ளி, கல்லூரிகளுக்கு வராமல் விடுப்பு எடுப்பது போன்ற செயல்களில் ஈடுபடும் மாணவர்கள் குறித்த தகவல்களை அவர்களுடைய பாதுகாவலர்களுக்கு அனுப்புவதோடு அம்மாணவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்க வேண்டும். தண்டனைகள் மிகத் தீவிரமானதாகவும் கடுமையானதாகவும் கல்லூரியை விட்டு வெளியேற்றுதல் அல்லது இடை நீக்கம் செய்தல் என்கிற இரண்டில் ஏதாவது ஒன்றாக இருக்க வேண்டும். அவர்கள்மீது எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு, பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கு எவ்வித உத்திரவாதமளிக்கும் நடைமுறையும் கடைபிடிக்கப்படத் தேவையில்லை," என்று அவ்வறிக்கை தெரிவித்தது. இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மதராஸ் மாகாணத்தில் ஆங்கிலேயருக்கு எதிரான மாணவர்களின் நடவடிக்கைகளை கட்டுக்குள் கொண்டுவர உடனடியாக உதவியது.

இந்தியாவின் ஆங்கிலேய அதிகாரிகள், இளைஞர்களை முதிர்ச்சியற்ற மனம் கொண்டவர்களாகக் கருதினார்கள். கடுமையான ஆணைகள் மூலம் அவர்களின் இளம் மனங்களை கட்டுப்படுத்த நினைத்தார்கள். தேசிய இயக்கத்திற்கு இளைஞர்களை வரவேற்க ஜவஹர்லால் நேரு, சுபாஷ் சந்திர போஸ், மற்றும் மற்ற இளம் காங்கிரஸ் தலைவர்கள் ஓர் மேடையை அமைத்து தந்தனர். இளம் நேரு மற்றும் சுபாஷ் சந்திர போஸின் கருத்துக்கள்மீது மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்த மகாத்மா காந்தி, மாணவர்கள் தாங்களே முன்வந்து பொறுப்புகளை தங்கள் தோள்களில் சுமக்க வேண்டும் என்று மாணவர் சமூகத்துக்கு வேண்டுகோள் விடுத்தார். காங்கிரசின் முக்கிய தலைவர்கள் மீது அரசு நடவடிக்கைகள் எடுத்தபோது இளம் களப்பணியாளர்களே அதன் இரண்டாம் நிலை தலைமையை ஏற்றனர். இத்தகைய தலைமையின்கீழ் மட்டுமே, இந்திய இளைஞர்களும், மாணவர்களும் தங்கள் நடவடிக்கைகளுக்கு சாதகமான வழிகாட்டுதல் கிடைக்கப் பெற்றனர்.



13

சுதந்திரப் போராட்டத்தில் தமிழ் நாடு கிறிஸ்தவர்களின் பங்களிப்புகள்

டாக்டர் M.ஆரோக்கியசாமி சேவியர் S.J.
முதல்வர்
செயின்ட் ஜோசப் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

இந்திய கிறிஸ்தவர்களின் வரலாறு, 'அந்நிய திட்டம்' என்னும் பரிமாணத்தை வலியுறுத்தும் வெறும் மேற்கத்திய திருச்சபை வரலாற்றின் கிழக்கு திசை நீட்சி அல்ல. அது இந்திய வரலாறு என்னும் வண்ணக் கலவையின் ஓர் வசீகரமான பகுதி. கிறிஸ்தவர்கள், இந்தியா என்னும் பண்டைய நிலத்தின் அடிப்படை உறுப்புகள் ஆவர். கிறிஸ்தவத்தைத் தழுவினாலும், அவர்களின் இந்தியத் தன்மை குறித்து எப்போதும் கேள்வி எழுப்பப்பட்டதில்லை; அது பெரிதும் பாராட்டப்பட்ட ஒன்றாகவே இருந்தது. கிறிஸ்தவர்கள் குறித்து ஆவணக்காப்பக ஆதாரங்களில் கிடைக்கக்கூடிய வரலாற்று ஆவணங்கள் மற்றும் தனிப்பட்ட பதிவுகளை மேலோட்டமாகப் பார்வையிட்டாலே தமிழ்நாட்டின் உறுதிமிக்க கிறிஸ்தவ தேசியவாதிகளின் வசீகரமான ஒரு பட்டியல் கிடைக்கும்.

ஓர் நோக்கத்திற்காக தங்கள் உயிரையும் தியாகம் செய்ய அவர்கள் எப்போதும் தயாராக இருந்தார்கள். இந்திய தேசிய இயக்கங்களில் கிறிஸ்தவர்களின் மத மற்றும் பண்பாட்டு ரீதியிலான பங்களிப்பு குறித்த விசாரணை, கிறிஸ்தவ வரலாற்று வரைவியலில் ஓர் புதிய பக்கத்தை திறக்கிறது. சாதி, மதம், இனம் என்னும் தடைகளைக் கடந்து வாழ்வின் பல்வேறு நிலைகளில் உள்ள மக்கள் இந்திய தேசிய காங்கிரசுடன் இணைந்து தேசிய இயக்கத்திற்காக தங்களையே அர்ப்பணித்தனர். இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், தலித்துகள், ஆதிவாசிகள் மற்றும் பலர் என இந்தியாவின் ஒவ்வொரு சமூகமும் ஓர் ஒற்றை பொது நோக்கிற்காக தங்கள் ஆதரவை நல்க முன்வந்ததை எவரும் மறுக்க முடியாது.

விடுதலைப் போராட்டம் என்னும் பலிபீடத்தில் ஒவ்வொரு சமூகமும் பல உயிர்களை தியாகம் செய்தன. இந்திய கிறிஸ்தவ சமூகத்தின் சிறு அளவை கணக்கிடும்போது அவர்களின் பங்களிப்பு குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும். அதிகாரப்பூர்வ காங்கிரஸ் அறிக்கையின்படி 1887 மதராசில் நடந்த பொதுக்கூட்டத்தில் பங்கேற்ற பதிவு செய்த பிரதிநிதிகளின் எண்ணிக்கை 607. அதில் 35 பேர் கிறிஸ்தவர்கள், 7 பேர் யூராசியர்கள், 15 பேர் இந்திய கிறிஸ்தவர்கள். இந்திய மக்கள் தொகையில் கிறிஸ்தவர்கள் 0.79% ஆக இருந்தாலும் கூட்டத்தில் பங்கேற்ற கிறிஸ்தவர்களின் விகிதம் 2.5% ஆக இருந்தது.

1. தமிழ்நாடு சுதேசி இயக்கத்தில் கிறிஸ்தவர்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து மதராஸ் கிறிஸ்தவ தலைவர்கள் இந்திய தேசிய காங்கிரசை ஆதரித்தார்கள். காங்கிரஸ் கட்சிக்கு மதராசில் பல கிறிஸ்தவ அனுதாபிகளும் தீவிர களப்பணியாளர்களும் இருந்தனர். சுதேசி நீராவிக் கப்பல் நிறுவனத்தின் உரிமையாளர் வ.உ. சிதம்பரம், ரூ.10 இலட்சம் மதிப்பிலான தன் நிறுவனப் பங்குகளை விற்க முடிவு செய்தார். ஒரு பங்கின் விலை ரூ.25 என்று நிர்ணயிக்கப்பட்டது. நிறுவனத்தில் 31 இயக்குனர்கள் இருந்தார்கள். பால் பீட்டர் என்னும் கிறிஸ்தவர், நிறுவனத்தின் சட்ட ஆலோசகராக இருந்தார்.

சுதேசி இயக்கத்தின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட தூத்துக்குடியைச் சேர்ந்த தீவிர சுதேசியான மாசிலாமணி வ.உ.சி.யின் நெருங்கிய நண்பராகி அவருடைய முன்னெடுப்புகளை ஆதரித்தார். நிறுவனத்தைத் தொடங்கியதற்காக ஆங்கிலேயரின் வழக்குகளை எதிர்கொள்ள நேர்ந்தபோது, மாசிலாமணியின் துணை அத்தகைய துணிகர முயற்சிகளில் மிகுந்த உதவியாக இருந்தது. ஸ்ரீமான் மாசிலாமணிக்கு அறிமுகம் தேவை யில்லை. தாய் நாட்டின் சேவைக்காக தன் உயிரையும், உடலையும் அர்ப்பணித்த ஓர் கத்தோலிக்கர் அவர். அவர் இயற்றிய பல தேசப்பற்று பாடல்கள், தி ஹிந்து நாளிதழில் வெளியிடப்பட்டன.

மாசிலாமணி தன் சொந்த ஊரில் ஓர் மரக்கடை நடத்தி வந்தார். மேலும், மக்களிடையே சுதேசி உணர்வை ஊன்ற அவர் ராட்டைகளைத் தயாரித்து இலவசமாக விநியோகித்தார். அவரால் தயாரிக்கப்பட்ட கதராடைகளை மட்டுமே அவரும் குடும்பத்தாரும் அணிந்தார்கள். கதராடை இயக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக, தூத்துக்குடி அருகில் உள்ள சில்லாநத்தம் கிராமத்து மக்களுக்கு 30 கைராட்டைகளை அவர் இலவசமாக வழங்கினார்.

அக்கைராட்டையை எப்படி பயன்படுத்துவது என்பதை கிராமத்தினருக்கு கற்றுத்தர, தன் சொந்த செலவில் ஒருவரை நியமிக்கவும் செய்தார். இவ்விதம் தயாரிக்கப்பட்ட நூல் இங்கிருந்து காந்தி அவர்களுக்கு இம்மக்களின் காணிக்கையாக அனுப்பப்பட்டது.

மாசிலாமணி தமிழ், ஆங்கிலம் என இரு மொழிகளிலும் நல்ல பேச்சாளர் மற்றும் எழுத்தாளரும் ஆவார். தூத்துக்குடி பகுதியின் அனைத்து கிராமங்களிலும் தன்னுடைய பேச்சாற்றலால் மக்களிடையே அவர் சுதந்திர எண்ணங்களைத் தூண்டினார். ஜவகர்லால் நேரு ஒருமுறை தமிழ்நாடு வந்தபோது அவருடைய உரையை தமிழில் மொழிபெயர்க்க மாசிலாமணி அழைக்கப்பட்டார்.

ஒலிவாங்கி கூட இல்லாமல் நேருவின் ஆங்கில உரையை அவர் தமிழ்ப்படுத்திய விதம் அத்தனை சக்தி வாய்ந்ததாக இருந்தது. அது கேட்ட நேருவும், ''உங்களைப் போன்ற குரல் எனக்கும் இருந்தால் நன்றாக இருக்கும்'' என்றார். தனது எழுச்சிமிக்க எண்ணங்களால் மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டக்கூடியவர் அவர்.

அந்நிய பொருட்கள், குறிப்பாக அந்நிய துணிகள், புறக்கணிப்பு போராட்டத்தில் தீவிரமாக பங்கேற்றவர் J.P. ரோட்ரிகஸ். அவர் அந்நிய உடைகளை சேகரித்து நகரின் மத்தியில் வைத்து எரியூட்டினார். வெங்கால் சக்கரை என்னும் தீவிர கிறிஸ்தவ விடுதலைப் போராட்ட வீரரின் தலைமையில் செயல்பட்ட ஓர் இந்திய தீவிரவாதக் குழுவின் யோசனைகளால், தேசிய மதபோதகர் சங்கம் ஓர் புதிய சக்தியைப் பெற்றது.

இக்குழுவே இளம் தாராளவாதிகள் கூட்டமைப்பை உருவாக்கியது. வெங்கால் சக்கரை மதராஸ் கிறிஸ்தவ கல்லூரியில் தத்துவவியல் பட்டம் பெற்றதோடு, 1907இல் மதராஸ் சட்டக் கல்லூரியின் இளங்கலை சட்டப் படிப்பிலும் தேர்ச்சி பெற்றவராக இருந்தார். அவர் 1907இல் இந்திய தேசிய காங்கிரசின் சூரத் அமர்வில் கலந்துகொண்டபின் பால கங்காதர திலகரின் சீடரானார். இந்திய தேசியவாதத்தின் தாக்கம் காரணமாக 1910களில் 'இளம் தாராளவாதிகள் கூட்டமைப்பை' சக்கரை 'தென்னிந்திய கிறிஸ்தவ சமாஜம்' என்று மறுகட்டமைப்பு செய்தார். விவசாயத் தொழிலாளர்களிடையே சுதேசி கொள்கைகளை பரப்புவதற்கென அவர் சென்னையில் சுதேசி பிரச்சார சபையை துவங்கினார்.

சக்கரை 1911 முதல் மதராசிலிருந்து வெளியிடப்பட்ட கிறிஸ்தவ தேசாபிமானி (Christian Patriot) என்னும் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். அரசியல் விஷயங்களில் மிகுந்த நாட்டம் கொண்டவராக இருந்த அவர், படித்த தென்னிந்தியர்களிடையே தேசியவாத எண்ணங்களைப் பரப்புவதில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துபவராகவும் இருந்தார். இக்காலகட்டத்தில் தான் அவர் மகாத்மா காந்தியின் தொண்டரானார். மகாத்மா காந்தியுடன் ஏற்பட்ட தொடர்பு அவருடைய பார்வையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. சென்னையின் வடக்கு பகுதிகளில் சுதேசி கொள்கைகளை அவர் தொடர்ந்து பரப்பினார்.

தேசியத்தைக் குறித்த விழிப்புணர்வு கிறிஸ்தவர்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியபின், அதுவரை தன்னிறைவுடன் ஒதுங்கியிருந்தவர்கள் தாங்களே முன்வந்து பங்கெடுக்கத் தொடங்கினார்கள் என்று கூறுகிறார் சக்கரை. 1924 முதல் 1948 வரை, ஏறக்குறைய கால் நூற்றாண்டிற்கு அவர் மதராஸ் நகர சபையின் உறுப்பினராக (கவுன்சிலர்) இருந்தார்.

தூத்துக்குடி பனிமய மாதாவின் பக்தரான ஷெவாலியே ரோஷ் விக்டோரியா 1922இல் 'நம்பிக்கை அமைப்பு' (Organisation of Faith) என்னும் நிறுவனத்தை ஏற்படுத்தினார். அப்பகுதியில், போதை சாராயத்தை ஒழிக்க வேண்டும் என்கிற பிரதான நோக்குடன் அவ்வமைப்பு செயல்பட்டது. மகாத்மா காந்தியின் ஓர் தீவிர தொண்டராக, அவருடைய சுதேசி கொள்கைகளால் மிகவும் ஈர்க்கப்பட்டவராக இருந்தார். சுதேசி பொருட்களின் விற்பனையை ஊக்குவிக்க 1937 முதல், ஒவ்வொரு ஆண்டின் ஜூன் முதல் ஆகஸ்ட்

மாதம் வரை, சுதேசி கைத்தறி கண்காட்சியை அவர் நடத்தினார். தமிழ்நாடு சுதேசி இயக்கத்திற்கு பொருளாதார ரீதியிலான உதவிகளையும் அவர் செய்தார்.

2. தன்னாட்சி இயக்கத்தில் கிறிஸ்தவர்கள்

மதுரையைச் சேர்ந்த ஜார்ஜ் ஜோசப் (1887–1938) தன்னாட்சி இயக்கத்தில் சேர்ந்து, மதுரையில் இருந்தபடியே அவ்வியக்கத்தின் வளர்ச்சிக்கு கணிசமான பங்களிப்பை மேற்கொண்டார். இந்திய கிறிஸ்தவ சமூகம் தேசியவாதத்திற்கு ஆதரவாக செயல்பட்டதற்கு அவருடைய ஆற்றல்மிக்க தலைமையே முக்கிய காரணம். இங்கிலாந்து சென்று, பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இந்தியாவின் நிலை குறித்து விளக்குவதற்காக தன்னாட்சி இயக்கம் 1918இல் ஓர் குழுவை உருவாக்கியது. P.N. நரசிம்மன் மற்றும் மஞ்சேரி ராமன் ஆகியோரோடு ஜார்ஜ் ஜோசப்பும் இங்கிலாந்து செல்லும் அக்குழுவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

3. ரௌலெட் சட்டத்திற்கான எதிர்வினை

கொடூரமான ரௌலட் சட்டம் 1919இல் அறிவிக்கப்பட்டபோது, மகாத்மா காந்தி ஓர் முழு அடைப்பிற்கு அழைப்பு விடுத்தார். பல முக்கிய தேசியவாதிகள் 9 மார்ச் 1919 அன்று ஜார்ஜ் ஜோசப் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் 'சத்தியாகிரக உறுதிமொழி' எடுத்துக் கொண்டனர்.

அந்நிகழ்விற்கு இரண்டு வாரம் கழித்து மதராசில் மகாத்மா காந்தியை அவர் சந்தித்தார். அதற்கு சில காலம் முன்பு, கஸ்தூரி ரங்கன், இராஜாஜி மற்றும் ஜார்ஜ் ஜோசப் ஆகியோர் இணைந்து மான்டெகுசெல்ம்ஸ்ஃபோர்ட் சீர்திருத்தங்களை நிராகரித்து ஓர் அறிக்கையில் கையெழுத்திட்டிருந்தனர். மகாத்மா காந்தி, 23 மார்ச் 1919 அன்று தமிழ்நாட்டில் ஓர் விரிவான பயணம் மேற்கொள்வதற்காக சென்னை வந்தார். 26 மார்ச் 1919 அன்று அவர் மதுரையை அடைந்து ஜார்ஜ் அவர்களின் இல்லத்தில் 30 மார்ச் 1919 வரை தங்கினார்.

மகாத்மா காந்தி அவர்களுக்காக 29 மார்ச் 1919 அன்று மதுரையில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டத்தை ஒருங்கிணைத்து ஜார்ஜ் முக்கியப் பங்காற்றினார். கிட்டத்தட்ட 20,000 மக்கள் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். பொதுக்கூட்டத்தில், 6 ஏப்ரல் 1919 அன்று நடக்கவிருக்கும் முழு அடைப்பிற்கு மக்கள் தாங்கள் தயாராக இருப்பதாகவும், தங்கள் முழு ஆதரவை நல்குவதாகவும் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. போராட்டங்களுக்கு ஜார்ஜ் ஜோசப் தலைமை தாங்கினார்.

4. ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு

மாநகரப் பகுதிகளின் உயர்சாதி நகர்ப்புற தொழில் வல்லுநர்கள் மற்றும் செல்வந்தர்களின் அரசியல் சங்கமாக இருந்து வந்த காங்கிரஸ், தமிழ்நாட்டில் மக்களின் அரசியல் கட்சியாக மாறி ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் பல முக்கிய போராட்டங்களை நடத்தியது. தன்னாட்சி இயக்கத்தின் தீவிர உறுப்பினரான வெங்கால் சக்கரை, மகாத்மா காந்தி அவர்களால் ஈர்க்கப்பட்டு 1920இல் ஒத்துழையாமை இயக்கத்தில் இணைந்தார். இந்திய தேசிய காங்கிரஸின் ஆற்றல்மிக்க உறுப்பினராக இருந்த அவர் மதராஸ் மாகாண சங்கத்தின் பல பொதுக் கூட்டங்களை ஒருங்கிணைப்பதிலும் அரசியல் பிரச்சினைகளில் கேள்விகள் எழுப்பி விவாதப்படுத்துவதிலும் முக்கியப் பங்கு வகித்தார்.

இங்கிலாந்தில் சட்டக் கல்வியை முடித்துவிட்டு வந்த முதல் தொகுதி வழக்கறிஞர்களில் ஒருவரான ஜார்ஜ் ஜோசப், தேச சேவைக்காக தன் சுகங்களை தியாகம் செய்து ஒத்துழையாமை இயக்கத்தில் இணைந்தார். அந்நிய துணிகளை விற்கும் கடைகளின் முன்பு புறக்கணிப்புப் போராட்டங்களை நடத்திய அவர் மோதிலால் நேருவின் கோரிக்கையை ஏற்று தனது நாகரீக ஆடைகளை தூக்கியெறிந்து விட்டு உள்ளூரில் நெய்யப்பட்ட கரடு முரடான ஆடைகளுக்கு மாறினார்.

வ.உ.சி.யின் கடிதம் ஜார்ஜ் குறித்து கூறுகிறது, "பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப், வ.உ.சிதம்பரம் பிள்ளை, N.S. வரதாச்சாரி மற்றும் S. ராமநாதன் ஆகியோர் தங்கள் வழக்கறிஞர் பணியைக் கைவிட்டனர். அவர்கள் தங்கள் முழு ஆற்றலையும், நேரத்தையும் ஒத்துழையாமை இயக்கத்தின் பிரச்சாரங்களுக்காக செலவிட்டனர். சி. ராஜகோபாலச்சாரி ஜூன் 1921இல் அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு அனுப்பிய அறிக்கையில், ஒத்துழையாமை இயக்கத்திற்கு ஆதரவாக தமிழ்நாட்டிலிருந்து 36 வழக்கறிஞர்கள் தங்கள் தொழிலை கைவிட்டுவிட்டதாகத் தெரிவித்தார்."

ஒத்துழையாமை இயக்கப் பரப்புரைக்காக செப்டம்பர் 1921இல் மகாத்மா காந்தி தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தார். அரசிற்கான நாட்டின் ஆதரவை திரும்பப் பெறுவதன் மூலம் ஒட்டுமொத்த நிருவாகத்தையும் ஸ்தம்பிக்கச் செய்ய மகாத்மா காந்தி திட்டமிட்டார். இத்திட்டத்தில், துருக்கி விவகாரத்தில் ஆங்கிலேயருக்கு எதிராகத் திரும்பியிருந்த இஸ்லாமியர்களின் ஆதரவைப் பெற அவர் எண்ணியிருந்தார்.

இஸ்லாமியர்களின் நோக்கத்திற்கு ஆதரவளிக்குமாறு இந்துக்களுக்கு அவர் தீவிர வேண்டுகோள் விடுத்தார். ஒரு குழு அமைக்கப்பட்டு, தஞ்சாவூரை சேர்ந்த கிறிஸ்தவரான ஜோசப் கார்னீலியஸ் குமரப்பா அதன் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அவர் குழுவின் மற்ற உறுப்பினர்களை பள்ளிகள், கல்லூரிகள், மற்றும் நீதிமன்றங்களைப் புறக்கணித்தல், கள்ளுக்கடை மறியல்கள், அரசுப் பணிகளை கைவிடல், அந்நியப் பொருட்களை மறுத்து சுதேசி பொருட்களை பயன்படுத்துதல் ஆகியவற்றை மேற்கொள்ள தொடர்ந்து ஊக்கப்படுத்தினார்.

அனைத்திந்திய தேசிய காங்கிரஸ் 1920இல் ஒத்துழையாமை இயக்கத்தை அனுசரித்த போது, அலகாபாத்தில் தங்கியிருந்து ஜார்ஜ் ஜோசப் அதில் பங்கேற்றார். குற்ற திருத்த சட்டம் பிரிவு7இன்கீழ் ஆங்கிலேய அரசு உத்தரவின் பேரில் அவர் கைது செய்யப்பட்டு நைனிட்டால் சிறையில் அடைக்கப்பட்டார். சிறைவாசத்தின்போது ஜவஹர்லால் நேருவை சந்தித்த அவர், இந்திய சுதந்திர இயக்கம் குறித்த விஷயங்களை நேருவோடு ஆலோசித்தார்.

விடுதலைக்குப்பின் மதுரை வந்த ஜார்ஜ் ஜோசப், பல்வேறு பொதுக்கூட்டங்களில் உரையாற்றினார். யங் இந்தியா மற்றும் இண்டிபெண்டன்ட் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராக அலகாபாத்தில் பணிபுரிந்து வந்தபோது 1922இல் அவர் ராஜத்துரோக குற்றத்துக்காக கைது செய்யப்பட்டு, ஜவஹர்லால் நேரு, மகாதேவ் தேசாய், மற்றும் புருஷோத்தம்தாஸ் காந்தி ஆகியோருடன் சேர்ந்து ஒரு வருடம் லக்னோ மாவட்ட சிறையில் கழித்தார்.

காங்கிரசின் பெருந்தலைவரும் பின்னாளில் தமிழ்நாட்டின் முதல்வருமாக இருந்த காமராஜருக்கு ஜார்ஜ் ஜோசப் ஓர் தந்தையின் வடிவாக இருந்தார். காமராஜருக்காக ஜார்ஜ் ஓர் வழக்கிலும் வாதாடி இருக்கிறார். கயாவில் நடந்த இந்திய தேசிய காங்கிரசின்

36ஆவது அமர்வில் யங் இந்தியா இதழின் ஆசிரியராக ஜார்ஜ் ஜோசப் கலந்து கொண்டார். தி ஹார்வெஸ்ட் ஃபீல்டு என்னும் பத்திரிக்கையின் "ஒத்துழையாமை இயக்கத்தில் கிறிஸ்தவர்களின் பங்கு" என்னும் தலைப்பிலான தலையங்கம் கூறுகிறது,

"இவ்வியக்கத்தின் (ஒத்துழையாமை இயக்கம்) தேசப்பற்றால் சில கிறிஸ்தவர்கள் தன்னிலை மறந்தவர்கள் ஆனார்கள்." "சுய நிர்ணய உரிமை என்பது ஒரு நாட்டின் அடிப்படை உரிமைகளுள் ஒருங்கிணைந்த அங்கமாகும்..." என்று 31 டிசம்பர் 1927 அன்று அலகாபாத்தில் நடைபெற்ற அனைத்திந்திய கிறிஸ்தவ மாநாடு அறிவித்தது. மேலும், S.K. தத்தா 27 முதல் 30 டிசம்பர் 1922 வரை லக்னோவில் நடைபெற்ற அனைத்திந்திய கிறிஸ்தவர்கள் மாநாட்டில் தங்கள் அரசியல் நடவடிக்கைகளுக்காக சிறையில் வாடும் இந்திய கிறிஸ்தவர்களை குறித்து முன்பே குறிப்பிட்டிருந்தார்.

மேலும் சில கிறிஸ்தவ தேசப்பற்றாளர்கள் வெவ்வேறு இடங்களில் நடைபெற்ற ஒத்துழையாமைப் போராட்டங்களில் பங்கெடுத்தனர். தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த W.C. பீட்டர் அவர்களின் மகனான இக்னேஷியஸ், ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றதற்காக 1922இல் கைது செய்யப்பட்டு 7 மாதங்கள் திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

கன்னியாகுமரி மாவட்டத்தின் மயிலாடியைச் சேர்ந்த சான்ட்டியாகோ சவரிராஜன் 1923இல் இயக்கத்தில் சேர்ந்து அதே வருடம் நாக்பூர் கொடி இயக்க அணிவகுப்பில் பங்கெடுத்தார். ஓர் உற்சாகமிக்க தேசபக்தராக உப்பு சத்தியாகிரகம் மற்றும் வைக்கம் போராட்டம் போன்றவற்றில் பங்கேற்றதற்காக 11 மாதங்கள் வேலூர், திருச்சிராப்பள்ளி, மற்றும் ஷொரணூர் சிறைகளில் அவர் அடைக்கப்பட்டார்.

மதராசை சேர்ந்த B.A. பட்டதாரியான ஃபிலிப் 1926இல் இயக்கத்தில் சேர்ந்தார். ஆங்கிலேய அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக 1927, 1934, மற்றும் 1936 ஆகிய வருடங்களில் பம்பாய், மீரட், மற்றும் அலகாபாத் சிறைகளில் அவர் அடைக்கப்பட்டார்.

5. கிறிஸ்தவர்கள் மற்றும் சட்ட மறுப்பு இயக்கமும்

இந்திய சுதந்திரப் போராட்டத்திற்காக முத்து நகரம் அளித்த மற்றொரு முக்கிய கிறிஸ்தவ தலைவர், வலேரியன் ஃபெர்னான்டோ. தேசியத் தலைவர்களின் அழைப்பால் ஊக்கம் பெற்ற அவர் ஓர் உள்ளூர் தலைவராக உருவானார்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின்பால் தமிழ் இளைஞர்களை ஈர்க்கும் பொருட்டு 1930இல் ஜவஹர்லால் நேருவுடன் இலங்கைக்கு பயணித்தவர் வலேரியன். இந்திய விடுதலைக்காக இலங்கையில் உள்ள ஆங்கிலேய அரசுக்கு எதிராகப் போராட இளைஞர்களாலான ஓர் பெரும் தொண்டர் படையை அவர் ஒருங்கிணைத்தார். சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற இளைஞர்களுக்கு தூத்துக்குடியின் பழையகாயல் மற்றும் தருவைகுளம் ஆகிய ஊர்களில் உள்ள தன்னுடைய உப்பு உற்பத்தி நிலையங்களில் வேலைவாய்ப்புகளை அவர் அளித்தார்.

மதுரையில் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டபோது ஐந்து மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்த சமயம், அவருடைய தாய் மரணித்தபோது அவரால் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள முடியவில்லை. ஆர்ப்பாட்டங்களை ஒருங்கிணைத்தபோதும் போலீசாரால் தாக்கப்பட்டு ஆறு மாதங்களுக்கு சிறையில் அடைக்கப்பட்டார்.

மகாத்மா காந்தி தண்டி யாத்திரையை தலைமையேற்று நடத்தியபோது தூத்துக்குடியிலிருந்து ஏழு மைல்களுக்கு அப்பால் உள்ள தருவைகுளம் என்னும் ஊரில் J.P. ரோட்ரிகஸ் உப்பு யாத்திரையை தொடங்கினார். அங்கு கடற்கரையில் கை நிறைய உப்பை அள்ளி ஆங்கிலேய சட்டத்தை மீறினார்.

மே 1930 இறுதியில் ரோட்ரிகஸ் உட்பட அனைத்து முக்கியத் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். அவருக்கு ஓராண்டு சிறை தண்டனையும், 200 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. அந்நிய அரசின் அபராதத்தை ஏற்க மறுத்து, அதற்காக மேலும் ஆறு மாதங்கள் சிறைச் செல்லவும் தயாராக இருந்த அவரை வேலூர் சிறைக்கு அனுப்பினார்கள். ஓர் ஆற்றல்மிக்க தலைவராகவும், செயல்வீரராகவும் ஜே. பி. ரோட்ரிகஸ் தேசிய கிறிஸ்தவ தொண்டர் படையை தென் தமிழகத்தில் நிறுவினார்.

சுதந்திர வீரன் என்னும் வார இதழைத் தொடங்கி கிறிஸ்தவ சமூகத்தை எழுச்சியடையச் செய்தார். இவற்றையெல்லாம் குறித்து கேள்விப்பட்ட மங்களூரின் புகழ்பெற்ற சுதந்திரப் போராட்ட வீரர் ஜெரோம் சால்தானா தி எக்ஸாமினர் என்னும் கத்தோலிக்க தேசிய இதழில், "சுதந்திரப் போராட்டத்தில் மற்ற இந்தியர்களோடு தூத்துக்குடியின் வணிகர்களும் பெரும் ஆர்வம் கொண்டவர்களாக இருக்கிறார்கள்," என்று கருத்து தெரிவித்தார்.

ஜோசப் செல்லதுரை குமரப்பா என்னும் உருவில் கிறிஸ்தவ சமூகம் மற்றொரு உறுதிமிக்க தேசியவாதியை உருவாக்கித் தந்தது. J.C. குமரப்பா என்று பிரபலமாக அறியப்பட்ட அவரைக் குறித்து தி இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ், "அவர் ஒரு காந்தியப் பொருளாதார நிபுணர். ஓர் கொள்கை வீரர். கிராமப் பொருளாதாரத்தை ஆதரிக்கும் அவர், இயந்திரமயமாக்கல் மற்றும் பொருள்முதல்வாதத்தின் எதிரியும் ஆவார். மேலும், மகாத்மா காந்தியின் ஆக்கப்பூர்வமான திட்டங்களின் அயராத பிரச்சாரகர் அவர். மகாத்மா காந்தியின் நெருங்கிய நண்பர்களில் ஒருவராக, அவருடைய பொருளாதாரத் திட்டத்தின் முழுமைக்கும் அவரோடு இருந்தார். J.C. குமரப்பா சகோதரர்கள், சுதந்திரப் போராட்டத்தை வலுப்படுத்தும் பொருட்டு உள்ளூர் பொருட்களை பயன்படுத்துவதன் முக்கியத்துவம் மற்றும் மதிப்பை வலியுறுத்தினார்கள். அனைத்திந்திய நெசவாளர் சங்கம் மற்றும் கிராமிய தொழிற்சாலைகள் சங்கம் ஆகியவற்றின் மூலம் இந்தியா முழுவதும் கதர் ஆடைகளை பிரபலப்படுத்தினார்கள்.

J.C. குமரப்பா, "இந்திய வறுமைக்கு ஆங்கிலேயரின் சுரண்டல் கொள்கைகள் எங்கனம் பங்களித்தது", என்னும் தலைப்பில் தன் முனைவர் பட்ட ஆய்வை கொலம்பியா பல்கலைக்கழகத்தில் செய்து முடித்தார். அவருடைய பணிகளால் ஈர்க்கப்பட்ட மகாத்மா காந்தி 1929இல், தன்னுடன் சேர்ந்து பொருளாதாரக் கொள்கையை வகுப்பது, அனைத்திந்திய கிராமிய தொழில்களை மேற்பார்வையிடுவது மற்றும் யங் இந்தியா இதழின் ஆசிரியப் பணி என பல்வேறு பொறுப்புகளை அவரிடம் ஒப்படைத்தார்.

அவருடைய பொருளாதாரக் கொள்கைகளை மகாத்மா காந்தி எந்த அளவுக்கு மெச்சினார் என்றால், குமரப்பாவின் பொருளாதார ஆய்வறிக்கையிலிருந்து கிராமியத் தொழிற்சாலைகள், சுயசார்பு கொள்கைகள் போன்ற பல யோசனைகளை மகாத்மா காந்தி எடுத்துக் கொண்டார். அதே சமயம், நேருவைப் போல, மகாத்மா காந்தியுடன் வாதம் செய்யக் கூடிய வெகு சிலரில் ஒருவராக இருந்த குமரப்பா, முழுமையான சமாதானம் கிட்டும் வரை தன் கருத்திலிருந்து பின்வாங்காமல் வாதிக்கக்கூடிய அளவுக்கு நெருக்கமானவராகவும் இருந்தார்.

ஒத்துழையாமை இயக்க காலம் தொடங்கி J.C. குமரப்பா சுதந்திரப் போராட்டங்களில் பங்கேற்றார். மகாத்மா காந்தி தண்டி யாத்திரையில் இருந்தபோது "பொதுப்பொருளாதாரம் மற்றும் நம் வறுமை" என்னும் தலைப்பில் தொடர் கட்டுரைகளை வெளியிட்டார். இவற்றோடு மகாத்மா காந்தி தன்னுடைய யங் இந்தியா பத்திரிகையில், அப்போது பொறுப்பேற்றுக்கொண்ட மகாதேவ் தேசாய் உதவியுடன், தொடர்ந்து எழுதுமாறு கேட்டுக் கொண்டார்.

மகாத்மா காந்தியின் வேண்டுகோளுக்கிணங்க, பிரித்தானியப் பொருளாதாரத்தை குறித்த ஆய்வுகளை குமரப்பா யங் இந்தியா இதழில் வெளியிட்டார். இந்திய தேசிய காங்கிரஸின் கராச்சி அமர்வில், இந்தியாவின் பொருளாதாரநிலை குறித்த உண்மைகளை வெளிக்கொணர குமரப்பா தலைமையில் ஓர் பொருளாதார ஆய்வுக் குழு அமர்த்தப்பட்டது.

விசாரணைக்குப்பின் இக்குழு இந்திய தேசிய காங்கிரசுக்கு தனது அறிக்கையை சமர்ப்பித்தது. இந்திய ஆதாரங்களிலிருந்து, ஆங்கிலேய அரசு பெருந்தொகையை யுத்தம் மற்றும் ராணுவ நடவடிக்கைகளுக்கு செலவிட்டிருப்பது இக்குழுவின் அறிக்கையினால் நிரூபணமானது.

அவருடைய எழுத்து குறித்து ஆங்கிலேய அரசு குமரப்பாவிடம் கேள்வியெழுப்பியபோது, "தொடர்ந்து செய்திகளை வெளியிட வேண்டியது என்னுடைய பொறுப்பு, சிறைவாசம் குறித்து எனக்கு கவலை இல்லை," என்று அவர் பதிலளித்தார். அப்பதிலால் சினம் கொண்ட ஆங்கிலேய அரசு, 3 பிப்ரவரி 1931 அன்று இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 124(A)வின்கீழ் அவருக்கு கைதாணை பிறப்பித்தது. சட்டத்தின்படி நிறுவப்பட்ட அரசுக்கு எதிராக, யங் இந்தியா பத்திரிகையில் எழுதும் கட்டுரைகளின் மூலம் மக்களிடையே அரசு குறித்து அதிருப்தி மற்றும் வெறுப்பை உண்டாக்குவதாக அவர்மீது குற்றம் சாட்டியது. குமரப்பாவிற்கு ஓராண்டு மற்றும் ஆறு மாதங்கள் கடும் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. ஆயினும் காந்தி இர்வின் ஒப்பந்த விதிகளின்படி 31 மார்ச் 1931 அன்று குமரப்பா சிறையிலிருந்து வெளிவந்தார்.

இரண்டாவது வட்ட மேசை மாநாடு, 7 செப்டம்பர் 1931 அன்று, நடைபெற்ற சமயத்திற்குள் பல முக்கிய மாற்றங்கள் நடந்தேறின. இம்முறையும் குமரப்பா யங் இந்தியா பத்திரிகையின் ஆசிரியப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். பத்திரிகை வெளிவருவதைத் தடுக்க அரசு பல முயற்சிகளை செய்தது.

ஆயினும், பத்திரிகையைத் தொடர்ந்து வெளிக்கொணர்வதில் குமரப்பா தீவிர உறுதி பூண்டிருந்தார். ஆங்கிலேய அரசுக்கு எதிரான இந்த அறைகூவல் அவரை மீண்டும் சிறைக் கம்பிகளுக்கு பின்னே தள்ளியது. குமரப்பா சிறையில் தன் நேரத்தை வீணாக்காமல், நிரந்தரப் பொருளாதாரம் மற்றும் இயேசுவை அனுசரித்தலும் அவருடைய கட்டளைகளும் என்னும் தலைப்புகளில் இரு நூல்களை எழுதி முடித்தார்.

1930–1932 காலகட்டத்தில், வட்டமேசை மாநாடு ஆங்கிலேயரால் லண்டனில் நடத்தப்பட்டது. அனைத்து முக்கிய அரசியல் தலைவர்களுக்கும் மாநாட்டில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டது. மகாத்மா காந்தி மூன்றாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ள இங்கிலாந்து சென்றபோது J.C. குமரப்பா யங் இந்தியா இதழின் ஆசிரியராக இருந்தார். மாநாட்டில் விவாதிக்கப்பட்ட அனைத்து முக்கிய பிரச்சினைகள் குறித்தும் அவர் பத்திரிகையில் எழுதினார். அவ்வாறு எழுதியதற்காக 1932இல் அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

பின்னர் இரண்டரை ஆண்டுகள் சிறைத்தண்டனை அளிக்கப்பட்டு, நாசிக் சிறைக்கு அனுப்பப்பட்டார். சிறையில் இரண்டாண்டுகள் கழித்த பின்னர் அவருடைய உடல்நிலை நலிவடையத் தொடங்கியது.

K.T. பால், S.K. தத்தா மற்றும் V.S. அசாரியா என்னும் மூவர் படை 1900–1930 காலகட்டத்தில், கிறிஸ்தவ சமூகத்திடையே தேசிய உணர்வை ஊட்டுவதில் பெரும் பங்கு வகித்தனர். 'மதராஸ் கிறிஸ்தவ தேசபக்தர் குழு' மற்றும் 'இந்திய கிறிஸ்தவர் சங்கம்' போன்ற பல கிறிஸ்தவ அமைப்புகள் அவர்களின் நோக்கத்துக்கு ஆதரவளித்தன.

பள்ளிக்காலம் முதல் பால் அவர்களின் நண்பரான இராஜாஜி, அவரை 'தமிழ் காந்தி' என்றும் தென்னிந்திய ஒத்துழையாமை இயக்கத்தின் தலைவர்களில் ஒருவர் என்றும் அழைப்பார். மகாத்மா காந்தியை மிக நெருக்கமாக அறிந்த பால் அவருடைய ஆளுமையின் மீது பெருமதிப்பு கொண்டவராக இருந்தார். பால் கூறுகிறார், "எம்.கே.காந்தி தன் காந்தம் போன்ற ஆளுமையினால் தோழர்களை (இந்துக்கள் மற்றும் இஸ்லாமியர்கள்) ஒன்றிணைத்தார்; அது ஓர் இயற்கையான ஓர்மை, ஓர் சிலிர்ப்பூட்டும் கூட்டணி.

அதுவே ஒட்டுமொத்த இயக்கத்திற்கும் ஓர் புதிய பார்வையையும், உயர்வான நோக்கத்தையும், முன்னெப்போதும் இல்லாத உன்னத சாத்தியத்தையும் அளித்திருக்கிறது." இலண்டனில் 12 நவம்பர் 1930 முதல் 19 ஜனவரி 1931 வரை நடந்த முதல் வட்டமேசை மாநாட்டிற்கு இந்திய பிராட்டஸ்டண்ட் கிறிஸ்தவர்களின் ஒரே பிரதிநிதியாக K.T. பால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

காங்கிரஸ் 1930இல் உப்பு சத்தியாகிரகத்திற்கு அழைப்பு விடுத்தபோது, கன்னியாகுமரி காங்கிரஸ் கமிட்டி அதனை கொளச்சலில் ஒருங்கிணைத்தது. கன்னியாகுமரி மாவட்டம் வில்லுக்குறிக்கு அருகில் உள்ள மாடத்தட்டுவிளை கிராமத்திலிருந்து வந்த ராயப்பன் தேசியவாத உணர்வு நிரம்பியவராக இருந்தார். அவர் வேலை பார்த்த நிறுவனத்தின் மேலாளர் சத்தியமங்கலம் காங்கிரஸ் கூட்டத்தில் பங்கேற்பதற்கு ஆட்சேபம் தெரிவித்து எச்சரிக்கை செய்தபோது, அவர் சுந்தரேசன் என்னும் மற்றொரு தேசாபிமானியுடன் பின்விளைவுகளைக் குறித்து கவலைப்படாமல் தன் வேலையை ராஜினாமா செய்தார்.

அவர் சுதந்திரம் மற்றும் வேலாயுதம் ஆகியோருடன் இணைந்து கள்ளுக்கடை மறியல்களை ஒருங்கிணைத்ததோடு, உப்பு சத்தியாகிரகத்திற்கும் ஒரு பெருங்கூட்டத்தை சேர்த்தார். அந்தப் போராட்டத்தின்போது முக்கிய தலைவர்கள் மற்றும் காங்கிரசாருடன் ராயப்பனும் போலீசாரால் கைது செய்யப்பட்டு ஏழு வார சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு திருவனந்தபுரம் மத்திய சிறைக்கு அனுப்பப்பட்டார். சுசீந்திரத்தில் நடந்த மற்றொரு முக்கியமான போராட்டத்திலும் ராயப்பன் பங்கேற்றார்.

கன்னியாகுமரி மாவட்டத்தின் மயிலாடியைச் சேர்ந்த சந்தியாவூ, தேசியத் தலைவர்களால் ஈர்க்கப்பட்டு, தான் பார்த்துக் கொண்டிருந்த வேலையை விட்டுவிட்டு இந்திய தேசிய காங்கிரசில் இணைய விரும்பினார். கிராமத்தின் கத்தோலிக்க தேவாலயங்களில் ஜெபக்கூட்டத்திற்குப் பின்பு பெரும்பாலான நாட்கள் அவர் சுதந்திர சங்கு என்னும் இதழை விற்பனை செய்வார். தன் வாழ்நாளின் இறுதிக்காலம் வரை அவர் கதராடையே அணிந்தார். சோலை மேடு என்னும் இடத்தில் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டபோது காவல் துறையால் தாக்கப்பட்டு சந்தியாவூ பலத்த காயமடைந்தார்.

இராஜாஜி ஒருங்கிணைத்த வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்தில் கலந்துகொண்ட 42 காங்கிரஸ் தொண்டர்களில் இவரும் ஒருவர். சந்தியாவூ, 1932இல் கன்னியாகுமரி

மாவட்டத்தில் ஓர் உப்பு யாத்திரையை ஒருங்கிணைத்தபோது, மீண்டும் காவல்துறையின் கடுமையான தாக்குதலை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இராஜாஜி, ஓமந்தூர் ராமசாமியார், செங்கல்வராயன், மற்றும் M.V. பெருமாள் ஆகியோரோடு கைதாகி ஒன்பது மாத சிறைத் தண்டனையும் நூறு ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டார். அவருடைய ஏழ்மை காரணமாக அபராதத்தைக் கட்ட முடியாமல் போனபோது அவருடைய சிறைத் தண்டனை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டது.

ஸ்காட்லாந்திலிருந்து வந்த மதபோதகரும், தேசியவாதியுமான எர்னெஸ்ட் ஃபாரஸ்ட்டர் பேட்டன் அவர்கள் காவல்துறையால் மோசமாகத் தாக்கப்பட்டார், மதராசில் அவர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இப்பிரச்சினை பிரித்தானிய நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட பின்னர் அவர் மீதான வழக்கு திரும்பப் பெறப்பட்டது. இருப்பினும் அதன்பின்பான அவருடைய இயக்கம் கட்டுப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் பணியாற்றி வந்த G.P. ஹால்ஸ்டெட் மற்றும் மௌரிஸ் பலாங்கர் என்னும் இரு அமெரிக்க மெத்தாடிஸ்ட்கள், தேசிய இயக்கத்தில் ஈடுபட்டதற்காக நாடு கடத்தப்பட்டார்கள்.

கிறிஸ்தவர்கள் குறிப்பாக கிராம மற்றும் அரைநகர்ப்புர பகுதிகளிலிருந்து 1930 மற்றும் 1940களில் தேசிய இயக்கத்தில் இணைந்தார்கள். அதில் பெரும்பாலானோர் 1930 மற்றும் 1932க்கு இடையில் நடைபெற்ற போராட்டங்களில் கைது செய்யப்பட்டார்கள். அதில் சிலரைக் குறிப்பிட வேண்டுமென்றால்: நாகர்கோவிலைச் சேர்ந்த G. லசார் (1904), தோவாளை தாலுக்கா, எட்டமடை அழகியபாண்டியபுரம் மாசிலாமணி ஃபெர்னாண்டஸ், நாயக்கனார்குளம்சேரி, நல்லூர் இரவிப்புதூர் சத்யநேசன் ஜோசஃப் (1909), கிருஷ்ணன் கோவில் இன்னாஸ் ஃபர்னாந்து, கிளியனூர் அம்ப்ரோஸ் (1921), நெடுரிளை திப்பிரமலைக்கருங்கல் டி. கேப்ரியல் (1911); கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டத்தை சேர்ந்த P. பால் ரத்தினம் (1902), ஜெரிமையா ஃபெர்னாண்டஸ் (1896), மற்றும் தென்னார்க்காடு மாவட்டத்தை சேர்ந்த மாசிலாமணி ஃபெர்னாண்டஸ் (1905); தூத்துக்குடியை சேர்ந்த வியாகுளம் ஃபெர்னாண்டோ (1905), வின்சென்ட் ஃபெர்னாண்டஸ் (1906), மற்றும் ஜே. செல்லையா (1906); தற்போதைய தூத்துக்குடி மாவட்டம் புன்னைக்காயலை சேர்ந்த ஃபெர்னாண்டஸ் மாசிலாமணி (1903) மற்றும் ஃபெர்னாண்டோ எராமியர் (1896); திண்டுக்கல் ராபர்ட் (1910), திருநெல்வேலி M. ஆரோக்கியம் ஃபெர்னாண்டோ, செங்கல்பட்டு ஜோசப் (1911), மற்றும் மதராஸ் ஆரோக்கியசாமி (1916) ஆகியோர் நாட்டின் விடுதலைக்காக பெரும் துன்பங்களை அனுபவித்து தங்கள் வாழ்நாளில் ஆறு மாதம் முதல் மூன்று வருடங்கள் வரை சிறையில் கழித்த பல கிறிஸ்தவ விடுதலைப் போராட்ட வீரர்களில் சிலர் ஆவர்.

6. தனிநபர் சத்தியாகிரகம் மற்றும் கிறிஸ்தவர்கள்

இந்திய தேசிய காங்கிரஸ் 1940இல் போருக்கு எதிரான இயக்கத்தை ஒருங்கிணைத்தபோது மாசிலாமணியும், அவருடைய மனைவி ஜெபமணியும் அவ்வியக்கத்தில் இணைந்தனர். ஓர் அர்ப்பணிப்புள்ள கத்தோலிக்கர்களாக அவர்கள் தூத்துக்குடியின் பனிமய மாதா தேவாலயத்திற்கு சென்று, அங்கிருந்து தங்கள் போராட்டப் பேரணியைத் தொடங்கியபோது கைது செய்யப்பட்டார்கள். மாசிலாமணி ஆறு மாதங்களுக்கு வேலூர் சிறையில் அடைக்கப்பட, ஜெபமணி மற்றொரு சிறையில் ஒன்பது மாதங்களுக்கு அடைக்கப்பட்டார்.

மாசிலாமணி மீது மிகுந்த மரியாதை கொண்ட செந்தில்குமர நாடார் கல்லூரியின் முன்னாள் பொருளாளர் தங்கையா கூறுகிறார், "1922 முதல் அவருடன் நட்பில் இருந்ததில் எனக்கு பெரும் மகிழ்ச்சி. அவருடைய கூர்மையான அறிவு, பிரச்சனைகளைப் புரிந்து

கொள்ளும் திறன், அற்புத நினைவாற்றல், மற்றும் பேச்சாற்றல் என்னும் கொடை ஆகியவை அவரை ஓர் பிரபல தலைவராக ஆக்கியது. அவருடைய தேசபக்தியின் தீவிரத்தை இப்பகுதியில் உள்ள அனைவரும் அறிவர். அத்தீவிரத்துடனே அவர் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டார், அத்தீவிர தேசபக்தியின் காரணமாகவே அவர் பல்வேறு துன்பங்களுக்கும் உள்ளானார்."

மகாத்மா காந்தியின் அழைப்பை ஏற்று 1941இல் வலேரியன் ஃபெர்னான்டோ தனிநபர் சத்தியாகிரகத்தில் பங்கேற்றார், அதற்காக ஆறு மாதங்கள் அலிப்பூர் சிறைக்கு அனுப்பப்பட்டார். "என் உடலில் கடைசி சொட்டு ரத்தம் உள்ளவரை நான் என் நாட்டுக்காகப் போராடுவேன்," என்றார் வலேரியன். ஒரு கிறிஸ்தவ தேசாபிமானியின் தேச உணர்வு அதில் வெளிப்பட்டது. கடற்கரை மீனவ மக்களின் மதப்பற்றையும், மனநிலையையும் நன்கறிந்த மாசிலாமணி, மதத்துடன் தேச உணர்வை அழகாகக் கலந்தார்.

தூத்துக்குடி பனிமயமாதா ஆலயத்தின் முன்பு தன்னுடைய தனிநபர் சத்தியாகிரகத்தை 20 ஜனவரி 1941 அன்று தொடங்கி, அதன் மூலம் பல கிறிஸ்தவ தேசபக்தர்களை போராட்டத்திற்குள் இறங்கச் செய்தார். உண்மையும், அர்ப்பணிப்பும் உள்ள ஒரு கத்தோலிக்கன், தன் தாய்நாட்டிற்கு மிகுந்த விசுவாசமுடையவனாக இருப்பான்," என்று சொல்லி ஓர் உறுதிமிக்க தேசியவாதியாக பல கத்தோலிக்கர்களை போராட்டத்திற்குள் இழுத்தார்.

ஆங்கிலேய அரசு அவருக்கு எதிரான கைது உத்தரவு பிறப்பித்து, ஆறு மாதங்கள் சிறைத் தண்டனையும் 200 ரூபாய் அபராதமும் விதித்தது. அந்நிய அரசுக்கு அபராதம் கட்ட முடியாது என்று மறுக்க, அவரது எதிர்ப்பு அவருடைய சிறைத் தண்டனையை மேலும் இரண்டு மாதங்களுக்கு நீட்டிக்க செய்தது. ஜெபமணி கள்ளுக்கடை மறியல்கள் மற்றும் சுதேசி ஆர்ப்பாட்டங்கள் போன்றவற்றில் தன் கணவருடன் இணைந்து தீவிரமாகப் பங்கேற்றார். அவ்வாறே பல கிறிஸ்தவப் பெண்களுக்கு ஓர் உதாரணமாகத் திகழ்ந்தார்.

போராட்டங்களின்போது காவல்துறையினரால் தாக்கப்பட்டு காயமடைந்த ஜெபமணி, அவ்வாறு காயமடைந்த மற்ற தேசபக்தர்களை தன் வீட்டில் வைத்து சிகிச்சை அளித்தார் . இந்தியா இரண்டாம் உலகப் போரில் கலந்து கொண்டதற்காக ஆங்கிலேயரை எதிர்த்து போராட்டங்கள் நடத்துமாறு மகாத்மா காந்தி விடுத்த அழைப்பின் பேரில் 20 ஜனவரி 1941 அன்று மாசிலாமணி தன் மனைவியுடன், ஆங்கிலேயருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றார். அதற்காக இருவரும் சிறைத் தண்டனை பெற்றனர். இங்ஙனம், சுதந்திரப் போராட்டத்தில் சிறைக்குச் சென்ற முதல் கத்தோலிக்க தம்பதியர் இவர்களே ஆவர்.

1937 சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு 3,680 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற ஜெபமணி மாசிலாமணி, தேர்தலில் கலந்துகொண்ட முதல் மற்றும் ஒரே கிறிஸ்தவப் பெண்ணாக இருந்தார். மீண்டும் அவர் 1941 பத்மநாபபுரம் தொகுதியில் போட்டியிட்டு 75 சதவிகித வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். கத்தோலிக்க சுதந்திரப் போராட்ட வீரர்களான ஜெபமணியும், மாசிலாமணியும் தங்களின் ஆன்மீகத் தலைமைகள் மற்றும் தலைவர்களிடமிருந்து பெரும் ஆதரவைப் பெற்றனர்.

தூத்துக்குடியைச் சேர்ந்த S. ரிச்சர்ட் மொரைஸ் (1916), ஸ்ரீவைகுண்டம் பீட்டர் மொரைஸ் (1916), திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சாமுவேல் ஏசுதாசன் (1915), செங்கல்பட்டு மாவட்டம் வாலாஜாபாத் S. ஜோசப், மற்றும் உதகை அம்ப்ரோஸ் (1917) ஆகியோர் தனிநபர் சத்தியாகிரகத்தில் பங்கேற்ற அறியப்படாத தேசபக்தர்கள் ஆவர்.

7. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கிறிஸ்தவர்கள்

இந்திய தேசிய காங்கிரஸ் 9 ஆகஸ்ட் 1942 அன்று தன்னுடைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரகடனத்தில், ஆங்கிலேய ஆட்சியாளர்கள் உடனடியாக இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என்னும் தீர்மானத்தை நிறைவேற்றியது. அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன், இந்தியாவின் முழு சுதந்திரம் என்னும் தேசக் குறிக்கோளுக்கு தாங்கள் துணை நிற்பதாக முக்கிய கிறிஸ்தவ இயக்கங்களும், அமைப்புகளும் அறிவித்தன.

அவ்வாறு உடனடி சுதந்திரம் என்னும் கோரிக்கைக்கு ஆதரவாக தங்கள் ஆதரவை அறிவித்தவர்களில், 'இந்திய கிறிஸ்தவர்களின் அனைத்திந்திய கிறிஸ்தவ மாநாடு', 'இந்திய தேசிய கிறிஸ்தவ சபை', 'யுனைடெட் தியாலஜிக்கல் கல்லூரி' (பெங்களூர்), செராம்பூர் கல்லூரி (வங்காளம்), 'இளம் கிறிஸ்தவர்களின் செயல்பாட்டு சபை' கேரளா மற்றும் 'இந்திய மாணவ கிறிஸ்தவர் அமைப்பு' ஆகியவற்றின் கிறிஸ்தவ தலைவர்களும் மாணவக் குழுக்களும் உள்ளடங்கும். இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க கட்டத்தில் J.C. குமரப்பா யங் இந்தியா இதழில் "ஒரு கல் ஒரு ரொட்டிக்கு மாற்றாகுமா?" என்னும் தலைப்பிலான முக்கிய கட்டுரையை எழுதினார். அவருடைய புகழ்பெற்ற எழுத்துக்களுக்கு எதிராக ஆங்கிலேய அரசு கைதாணையை பிறப்பித்து அவரை சிறையில் அடைத்தது.

பல கிறிஸ்தவ மாணவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள் அல்லது கடினமான பணிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அவ்வாறு ஆறு மாத காலம் சிறையில் கழித்து, பின்னர் ஓர் பள்ளி ஆசிரியராகவும் மதபோதகராகவும் மாறியவர் பால் ராமசாமி. தேசிய கிறிஸ்தவ சபையின் அதிகாரப்பூர்வ ஏடான தி நேஷனல் கிறிஸ்டியன் ரெவ்யூ, கிறிஸ்தவர்கள் தேசத்தின் நன்மைக்காக தங்களின் பெருந்திரளான ஆதரவை அளித்தது குறித்து தெரிவிக்கும்போது, "உண்மையில், பேசிய அனைவரும் தங்கள் சக மனிதனின் ஆசைகள், துயரங்கள், மற்றும் போராட்டங்களோடு தங்களை அடையாளப்படுத்திக் கொண்டார்கள்.

இந்தியத் திருநாடு உயர் நலன்களை அடைவதற்கான ஆழ்ந்த அக்கறையை கிறிஸ்தவத் தலைவர்கள் அவர்களிடையே விதைத்திருக்கிறார்கள், என்று குறிப்பிட்டது" தமிழ்நாடு அரசு வெளியிட்ட எவரெல்லாம் சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்னும் தொகுதிகளில் கிறிஸ்தவ தேசபக்தர்கள் மற்றும் பல்வேறு கட்டங்களில் சுதந்திரப் போராட்டத்திற்கான அவர்களின் பங்களிப்புகள் ஆகியவை இடம்பெற்றிருக்கின்றன.

இவ்வாறான தேசபக்தர்களின் உறவினர்களோடு பேசும்போது, கிறிஸ்தவ விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகங்கள் குறித்து ஊக்கமளிக்கும் வகையிலான எண்ணற்ற கதைகள் வெளிச்சத்துக்கு வருகின்றன. ஒடுக்குமுறையாளர்களின் மதத்தைப் பின்பற்றினாலும், இத்தேசத்தின் மகன்கள் மற்றும் மகள்களான அவர்களின் தேசபக்தியை அக்கதைகள் வெளிப்படுத்துகின்றன. கிறிஸ்தவத்தை பின்பற்றினாலும், அவர்கள் முதலில் இந்தியர்களாக வாழ்ந்தார்கள். அவ்வாறான ஒரு கதை, திண்டுக்கல் வாடியார் சவரிமுத்து (1903–1986) அவர்களுடையது.

காங்கிரஸ் மற்றும் மகாத்மா காந்தியின் தனிநபர் சத்தியாகிரக அழைப்பிற்கு தேசத்துடன் சேர்ந்து திண்டுக்கல்லும் அதிர்ந்தது. தமிழ்நாட்டின் காங்கிரஸ் தலைவர்களான காமராஜர் மற்றும் பக்தவச்சலத்துடன் சவரிமுத்து ஓர் நெருக்கமான நட்பு கொண்டிருந்தார். இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் மகாத்மா காந்தி அவர்களுடனும்,

மிகுந்த நெருக்கம் கொண்டிருந்தாலும், சுதந்திரத்திற்குப்பிறகு தமிழக காங்கிரஸ் தலைவர்களின் சுயநலத்தைக்கண்டு பொறுக்க முடியாமல் காங்கிரஸ் கட்சியை விட்டு அவர் வெளியேறினார். பின்னர் சுதந்திரா கட்சியில் இணைந்து திண்டுக்கல் மக்களின் நலன்களுக்காகப் பாடுபட்டார்.

நீலகிரி மாவட்டம், கேத்தி அருகிலுள்ள சந்தூர், எட்வின் ஜோசப் சைமன் (1908), கோயம்புத்தூர் ராம்நகரைச் சேர்ந்த அந்தோணி முத்து (1916), கேப்ரியல் (1900), மற்றும் P. ஜோசப் (1922); கோயம்புத்தூர் மாவட்டத்தின் புளியகுளத்தைச் சேர்ந்த ஆரோக்கியசாமி (1926), அப்போதைய மதுரை மாவட்ட, உத்தமபாளையம் ஆனைமலையன்பட்டியைச் சேர்ந்த டேனியல் (1899), திருப்பூர், பனங்காட்டு பஞ்சு கிடங்கு சாலை சைமன் பால் (1917), தருமபுரி மாவட்டம், நல்லபள்ளி அடுத்த கோவிலூரைச் சேர்ந்த அந்தோணி க்ரூஸ் (1919), தருமபுரி மாவட்டம், அரூர் தாலுக்காவின், பொம்மிடி ஆரோக்கியசாமி (1918), திருவாடனை M. பிரகாசம் (1921), திருவாடனை கார்களத்தூரை சேர்ந்த ஏசுதாஸ் என்கிற புச்சி (1918), இராமநாதபுரம் மாவட்டம் நடராஜபுரம் அடுத்த பனங்குடியைச் சேர்ந்த R. சின்னப்பன் (1910), மதுரை மாவட்டம் பெரியகுளம் தாலுகாவைச் சேர்ந்த கோம்பை மாசிலாமணி (1912); திருப்பூந்துருத்தி ஜான் (1919), தஞ்சாவூர் மாவட்டம் கீழத்திருப்பூந்துருத்தி T. ஜோசப் (1924), திருச்செந்தூர் அடுத்த மூக்குபேரி ஐசக் (1908), வீரவநல்லூர் ஜெபமலை பெர்னார்ட் (1902), அப்போதைய திருநெல்வேலி மாவட்ட திருச்செந்தூர் தாலுகாவின் கரம்பனியை சேர்ந்த ஜெபமணி (1919), இவர்களுடன் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்ற கிறிஸ்தவ பெண் தேசபக்தர்களான கன்னியாகுமரி மாவட்டம் நடுத்தேர்விளை மருதங்காடு S. ஜான் ரோஸ் (1916), மதுரை ஜார்ஜ் ஜோசஃப் அவர்களின் மகள் மாயா ஜோசஃப் (1917), மற்றும் திண்டுக்கல் இக்னேஷியஸ் அம்மாள் (1908) ஆகியோர் இந்திய விடுதலைக்கான போராட்டத்தில் தமிழ்நாடு மற்றும் வேறு இடங்களில் சிறையில் அடைக்கப்பட்டனர் அல்லது தங்கள் இன்னுயிர்களை அளித்தனர்.

சுதந்திரப் போராட்டத்தில் கிறிஸ்தவ பங்கேற்பு குறித்த வாய்மொழிக் கதைகளில் பல கிறிஸ்தவ சுதந்திரப் போராட்ட வீரர்களின் உணர்ச்சிமிக்க அத்தியாயங்கள் வெளிக்கொண்டு வந்தன அவற்றில் ஒடுக்கப்பட்ட சமூகத்தை சேர்ந்த S.S. இருதயதாசன், திண்டுக்கல் S.P. சாண்டியாகோ, லசார், S.A. தியாகராஜன், தபால்காரர் செபாஸ்டியன், N. பாக்கியநாதன் மற்றும் பாண்டிச்சேரியிலிருந்து பலர் குறிப்பிடத் தகுந்தோர் ஆவர். இவ்வெண்ணிலடங்கா சுதந்திரப் போராட்ட வீரர்கள் ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிராகத் தொடர்ந்து போராடினார்கள். இவையனைத்தும் வெறும் பெயர்கள் அல்ல, தாய் நாட்டிற்காக தங்கள் வியர்வையையும், இரத்தத்தையும் சிந்தியவர்கள் மற்றும் சுதந்திரத்திற்காக தங்கள் இன்னுயிரையும் ஈந்த வீரர்கள் ஆவர்.

மற்ற மத சமூகங்களைப்போலவே விடுதலை இயக்கத்தில் கிறிஸ்தவர்களின் பங்கேற்பு அதிகரித்தபடி இருந்தது, குறிப்பாக, காங்கிரஸ் தலைமையிலான போராட்டங்கள் நடந்தபோது, "செய் அல்லது செத்துமடி" என்னும் முழக்கம் கிறிஸ்தவர்களையும் எழுச்சிக்குள்ளாக்கியது. அப்போது, குறிப்பிடத்தக்க வகையில், பெரும் எண்ணிக்கையிலான கிறிஸ்தவ இளைஞர்கள் வெறிகொண்டு இயக்கத்தில் இணைந்தார்கள். திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி, மதராஸ் கிறிஸ்தவக் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்ற கிறிஸ்தவ உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்கள் தாங்களே முன்வந்து போராட்டத்தில் பங்கேற்றனர்.

அக்கிறிஸ்தவ மாணவர்களின் தேச உணர்வுப் பெருக்கை கட்டுப்படுத்த முடியாத அக்கல்வி நிறுவனங்களின் தலைமைகள் பல சமயம் அவர்கள் விருப்பத்திற்கு இணங்க

வேண்டிய சூழல் அப்போது இருந்தது. தி இந்தியன் எவாஞ்சலிகல் ரெவ்யூ, தி நியூ லீடர், தி எக்ஸாமினர், தி கேத்தலிக் ஹெரால்ட் ஆஃப் இந்தியா, தி ஹார்வெஸ்ட் ஃபீல்டு போன்ற பத்திரிகைகளில் படித்த கிறிஸ்தவர்களால் எழுதப்பட்ட ஊக்கம் மிகுந்த எழுத்துகள் கிறிஸ்தவர்களிடையே தீவிர ஆங்கிலேய எதிர்ப்பைத் தூண்டியதாக ஆதாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

8. கிறிஸ்தவ முற்போக்காளர்கள்

பொதுவாக, பெரும்பாலான கிறிஸ்தவ தேசபக்தர்கள் அரசியலமைப்பின்படியான போராட்ட முறைகளை மட்டுமே பயன்படுத்தினாலும், சிலர் தேசத் தலைவர்களின் அழைப்பை ஏற்று தீவிர வழிகளிலும் கலந்து கொண்டார்கள். வலிமையான தேசிய உணர்வால் உந்தப்பட்டு அவர்கள் அமைதி அல்லாத வழிகளையும் தேர்ந்தெடுத்தார்கள். அப்போதைய திருநெல்வேலி மாவட்டத்தின், திருச்செந்தூர் அருகில் உள்ள அமலிபுரத்தைச் சேர்ந்த S. பெஞ்சமின் மிகப்பிற்படுத்தப்பட்ட கிறிஸ்தவ மீனவர் சமூகத்தைச் சேர்ந்தவர். நடுநிலைப் பள்ளியில் படிக்கும் காலம் முதலே அவர் காங்கிரஸ் கட்சியுடனும் அதன் தலைவர்களுடனும் நெருங்கிய தொடர்பில் இருந்தார்.

ஒரு திறமையான பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் மக்களிடையே, குறிப்பாக இளம் தலைமுறையினரிடையே, தேசப்பற்றை அவர் தூண்டினார். தமிழ், ஆங்கிலம், இந்தி மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்த அவர், இளம் வயதிலேயே சுதந்திரப் போராட்டப் படையில் இணைந்து ஆங்கிலேய ஆட்சியாளர்களின் உடல் மற்றும் மன ரீதியிலான கொடுமைகளுக்கு உள்ளானார். இளைஞர்களை தேச சேவைக்கு ஈர்க்கும் பொருட்டு தனது ஆலந்தலை கிராம காங்கிரஸ் தலைவர்கள் உதவியுடன் 'பெஞ்சமின் பாரத் மாதா தேசிய இளைஞர் சங்கத்தை' நிறுவினார்.

மகாத்மா காந்தி, 1939இல் தனிநபர் சத்தியாகிரகத்திற்கு அழைப்பு விடுத்தபோது, பெஞ்சமின் வார்தா சேவாகிரம ஆசிரமத்திற்கு சென்று மகாத்மா காந்தியை சந்தித்து தன் சொந்த கிராமத்தில் தனிநபர் சத்தியாகிரகத்தைத் தொடங்க அனுமதி கேட்டார். தன் ஆலந்தலை கிராமத்தில் 2 மே 1940 அன்று பெஞ்சமின் தனிநபர் சத்தியாகிரகத்தைத் தொடங்கியபோது திருச்செந்தூர் காவல்துறையால் கைது செய்யப்பட்டு, ஒரு மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். விடுதலைக்குப்பின், தூத்துக்குடியில் நடந்த "தில்லி செல்" இயக்கத்தில் பங்கேற்றார். வைத்தியநாதன் தலைமையில், 21 ஜூன் 1941 அன்று மதுரை ஜான்சி ராணி பார்க்கில் போருக்கு எதிரான போராட்டம் நடைபெற்றது அதில் பங்கேற்ற பெஞ்சமின் ஆறு மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு அலிப்புரம் சிறையில் அடைக்கப்பட்டார்.

'குலசேகரப்பட்டினம் சதி வழக்கு', தூக்குமேடை ராஜகோபால், காசிராஜன் ஆகியோருடன் சேர்த்து பெஞ்சமின் அவர்களின் விடுதலைப் போராட்ட ஈடுபாட்டை விவரிக்கும். இந்திய தண்டனைச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகள், இந்திய பாதுகாப்பு விதிகள் மற்றும் அபராத மேம்பாட்டு ஆணை III, 1942 ஆகியவற்றின்கீழ் குலசேகரப்பட்டினம் துணை ஆய்வாளரால் 20 செப்டம்பர் 1942 அன்று அவருடைய கிராமத்தில் நிகழ்ந்த கலவரம், தீவைத்தல், மற்றும் கொலை ஆகியவற்றின் அடிப்படையில் அவர்மீது குற்றம் சாட்டப்பட்டது.

பெஞ்சமின், 11 ஆகஸ்ட் 1942 அன்று இரவு, 150 ஆட்களுடன் குலசேகரப்பட்டினத்தின் உப்புப் படுகைகளைத் தாக்கினார். அப்பகுதியின் தொழிற்சங்கத் தலைவராக பெஞ்சமின் இருந்தார். அவர்களின் நோக்கம் அங்கிருந்த நான்கு காவலர்களின் துப்பாக்கிகளை கைப்பற்றுவதாகவே இருந்தது. ஆனால் துணை ஆய்வாளர் லோயேன் சம்பவ இடத்திற்கு

வந்தபோது, சூழ்நிலை அவர்களின் கட்டுப்பாட்டை மீறியது. இருப்பினும் அதற்கு முன்பே நான்கு பேர் துப்பாக்கிகளைக் கைப்பற்றி, அந்நான்கு காவலர்கள் மற்றும் உதவியாளரின் கைகளை ஓர் கம்பத்தில் கட்டிப் போட்டுவிட்டனர். 6 பிப்ரவரி 1943 அன்று விதிக்கப்பட்ட இறுதி தீர்ப்பில் ராஜகோபால் மற்றும் காசிராஜனை தூக்கிலிடுமாறு நீதிபதி ஆணையிட்டார்.

பெஞ்சமின் உள்ளிட்ட ஆறு பேருக்கு ஆயுள் தண்டனை அளிக்கப்பட்டு போலீசாரின் கடும் சித்திரவதைகளுக்கு ஆளானார்கள். தண்டனை பெற்று திருச்செந்தூர் சிறையில் இருந்த பெஞ்சமின் அவருடைய தந்தையின் இறுதிச் சடங்கிற்குக்கூட செல்ல முடியாமல் போனது.

9. இந்திய தேசியப் படையில் கிறிஸ்தவர்கள்

காரைக்குடியிலிருந்து பர்மாவின் ரங்கூனில் குடியேறிய கிறிஸ்தவ இளைஞரான ஆனந்தம், "உங்களுக்கு சுதந்திரம் வேண்டுமெனில் உங்கள் இரத்தத்தைத் தாருங்கள்" என்று சுபாஷ் சந்திர போஸ் விடுத்த அறைகூவல்களாலும், சுதந்திரத்தின் உயர் கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டு தன் பள்ளிக்காலம் முதலே இந்திய தேசியப் படையில் சேர விரும்பினார்.

தன் விருப்பத்தை பெற்றோர் மற்றும் மாமாவிடம் தெரிவித்தபோது அதை அவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். ஒரு நாள், எவருக்கும் சொல்லாமல் வீட்டிலிருந்து ஓடிச் சென்று 16 ஏப்ரல் 1944 அன்று ரங்கூன் இந்திய தேசியப் படையில் அவர் சேர்ந்தார். கள படைவகுப்பணி பிரிவு 103இல் அவருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

அதுபோன்றே, அரியலூர் ஆபிரகாம், அறந்தாங்கி S.A. அடைக்கலம், சின்ன தர்மாபுரம் அலெக்சாண்டர், திருச்சிராப்பள்ளி அமிர்தம், லால்குடி அந்தோணி, நாகப்பட்டினம் அந்தோணிசாமி, தேவதானம் M. அந்தோணிசாமி, கீழநடுவை S. அந்தோணிசாமி, பூண்டி M. ஆரோக்கியம், மானாமதுரை அருளானந்தம், வேலிவயல் அருளானந்தம், அந்தோணி தாஸ், மற்றும் சென்னை A. ஆரோக்கியசாமி ஆகியோர் இந்திய தேசியப் படையில் களவீரர்களாக தேசத்துக்காகப் பாடுபட்டார்கள். இந்திய தேசியப் படையின் சிறப்பு பிரிவான, கொரில்லா படைப்பிரிவு1இல் புதுக்கோட்டை M. அடைக்கலம் மற்றும் சோமலூர் Y. அருளானந்து ஆகியோர் போரிட்டனர்.

அதே படைப்பிரிவைச் சேர்ந்த மாதவரம் ஆல்பர்ட் செபாஸ்டின் தேசத்திற்காக ஜெர்மனி சென்று போராடினார். மதுரையைச் சேர்ந்த அருள்சாமி அதே கொரில்லாப் படையின் மூன்றாவது பிரிவிலும் கல்பாளையத்தைச் சேர்ந்த அருளப்பன் ஐந்தாவது பிரிவிலும் தேசத்திற்காகப் போராடினார்கள்.

இவர்களைத் தவிர்த்து, மேலும் சில கிறிஸ்தவர்கள், இந்திய தேசியப் படையின் முன்களப் பிரிவில் இந்திய சுதந்திரத்திற்காக கடுமையாகப் போராடினார்கள். கஞ்சனக்கன்பட்டி ஆல்பர்ட், மதுரை A. அந்தோணி, மற்றும் வியாசர்பாடி M. அந்தோணி ஆகியோர் பர்மா இந்திய தேசியப் படையின் பிரச்சாரப் பிரிவில் இருந்தனர். மதராசை சேர்ந்த J. அந்தோணி இந்திய தேசியப் படையின் சிங்கப்பூர் பிரிவில் பணிபுரிந்தார். சிங்கப்பூர் கொரில்லா படைப்பிரிவு8இல் பணியாற்றிய காரைக்குடி E. அருளானந்து மற்றும் அதே படையின் பொறியியல் துறையில் சேவையாற்றிய திருப்பத்தூர் R. ஆரோக்கியம் ஆகிய இருவரும் இந்திய தேசியப் படையின் மற்ற கிறிஸ்தவ தேசபக்தர்கள் ஆவர்.

முடிவுரை

இம்மண்ணின் மற்ற சகோதர, சகோதரிகளுடன் இணைந்து உறுதியுடன் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றதன்மூலம் இந்திய கிறிஸ்தவர்கள் தங்கள் கிறிஸ்தவ சமூகத்தை மட்டுமல்லாது மற்றவர்களையும் பெரிதும் ஊக்குவித்தனர். தேசியத்தைக் குறித்த தங்கள் சகோதரர்களின் சந்தேகங்களையும் சந்தேகக் கண்ணோட்டத்தையும், குறிப்பாக மத அடிப்படைவாதம் குறித்தும் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். மேலும், தங்களின் மதம் மற்றும் சமூகப் பின்னணியைக் கருத்தில் கொள்ளாமல், ஒரு குடிமகனாக தேசத்திற்கு ஒருவர் ஆற்ற வேண்டிய கடமையைக் குறித்து வலியுறுத்தினார்கள்.

தூத்துக்குடியில் 1930இல் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் ஸ்ரீவைகுண்டத்தைச் சேர்ந்த வரதாச்சாரியார் என்னும் பேச்சாளர், "நாம் முதலில் இந்தியர்கள், பின்னர் தான் இந்துக்கள் அல்லது இஸ்லாமியர்கள்," என்றார். அவருக்குப்பின் மேடை ஏறிய மாசிலாமணி, "இந்நிலத்தில் உள்ள எவரை விடவும், எவ்விதத்திலும் நான் தேசப்பற்றில் குறைந்தவனல்ல என்று பார்வையாளர்களுக்கு விளக்கினார். மேலும் அவர், மதம் மற்றும் அரசியல் இரண்டும் வெவ்வேறு விஷயங்கள் அவை ஒன்றுக்கொன்று எதிரி அல்ல. நம் அடையாளத்தை பாதுகாத்தபடியே நாம் நாட்டின் விடுதலைக்கு உழைக்கலாம். இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் என நம் மத அடையாளம் எதுவாக இருந்தாலும், நாம் நல்லிணக்கத்துடன் வாழ்ந்து நாட்டிற்காக உழைப்போம்" என்றார்.

இவ்வாறு தன் அடையாளம் குறித்தும் அதேசமயம் தாய்நாட்டிற்கான தன் கடமை குறித்தும் ஓர் தெளிவான பார்வையைக் கொண்டிருந்தனர். ஓர் இந்திய கத்தோலிக்கர் அதிகம் இந்தியராக இருக்கிறார் என்பதற்காக அவர் குறைவான கத்தோலிக்கர் ஆகிவிட முடியுமா? ஒருவர் தன்னை இந்திய விஷயங்களோடு இணைத்துக் கொள்வதால், தன் கத்தோலிக்க அடையாளத்தை ஏன் இழக்க வேண்டும்?" என்று கிறிஸ்தவர்கள் கேள்வி எழுப்பினர். இது தேசியத் தலைவர்களால் சரியாகப் புரிந்து கொள்ளப்பட்டது. பல இந்திய தலைவர்கள் பெருகிவரும் கிறிஸ்தவர்களின் தேசிய உணர்வை பொதுவெளிகளில் பகிரங்கமாக ஒப்புக்கொண்டனர். டிசம்பர் 1944இல், "தேசிய இயக்கத்திற்கு தங்களின் முழு ஆதரவை வழங்கியதன் மூலம் இந்திய கிறிஸ்தவ சமூகம் தனித்துவத்துடன் நிற்பது இந்திய தேசிய உலகிற்குத் தெரியாதா என்ன?" என்று இராஜாஜி பேசினார்.

கத்தோலிக்க சமூகத் தலைவர்கள் மற்றும் மக்கள் தங்களின் ஆன்மீக தலைமைகளிடமிருந்து மெச்சத்தக்க ஆதரவைப் பெற்றனர். தூத்துக்குடியின் அருட்தந்தை டாக்டர் பிரான்சிஸ் திபூர்த்தியஸ் ரோஸ் S.J. "ஓர் இந்தியனாக என் தேசத்தின் அனைத்து நியாயமான ஆசைகளையும் நான் ஆதரிக்கிறேன்," என்று துணிவுடன் அறிவித்தார். ஆன்மீகத் தலைவர்களின் இத்தகைய தேசப்பற்றுமிக்க உரைகள் கிறிஸ்தவ தேசியர்களை நாட்டின் நோக்கத்திற்காக தங்களை ஈடுபடுத்திக் கொள்ள ஊக்கப்படுத்தியது.

கிறிஸ்தவ தேசியவாதிகள், உற்சாகமான தேசபக்தர்களாக அனைத்து போராட்டங்கள் மற்றும் இயக்கங்களில் தாங்களே முன்வந்து பங்கேற்றனர். தேசிய இயக்கம் வேகம் பெற்றபோது கிறிஸ்தவ சமூகத்தின் பங்களிப்பும் உயர்ந்தது. பங்கேற்றவர்களின் பட்டியல் நாடு முழுவதுமாக பரவியிருந்தது. தேசத்திற்காகவும் தேசத்தின் விடுதலைக்காகவும் சிறை செல்லவும் தங்கள் உயிரை தியாகம் செய்யவும் எப்போதும் தயார் நிலையில் இருப்பதன் மூலம் அவர்களின் உறுதியை அறியலாம். சமத்துவப் போராட்டத்திற்கான முக்கியத்துவத்தை உணர்ந்த சில தேசாபிமானிகள் வைக்கம் கோவில் நுழைவு மற்றும் கள்ளுக்கடை மறியல் போன்ற போராட்டங்களில் பங்கெடுத்தனர்.

படித்த கிறிஸ்தவ உயரடுக்கை சேர்ந்தவர்கள் கிறிஸ்துவ கல்வி நிலையங்களில் பெற்ற மதச்சார்பற்ற கல்வியுடன், இந்திய தேசிய காங்கிரஸின் ஆரம்பகால தலைவர்களோடு இணைந்து தேசியத்தின் (காங்கிரசின்) கருத்தியல் ரீதியான கட்டமைப்பை உருவாக்குவதில் அதன் தொடக்க கட்டத்தில் பங்கெடுத்தனர். கிறிஸ்தவ கல்வி நிறுவனங்களில் மதச்சார்பற்ற கல்வியையும் மேற்கத்திய தாராளவாத எண்ணங்களையும் பெற்றவர்களே சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்த பல்வேறு பத்திரிகைகளின் ஆசிரியர்களாக, சித்தாந்தவாதிகளாக, தொழில்முறை வல்லுனர்களாக, அறிவுஜீவிகளாகத் திகழ்ந்தார்கள். அவர்கள் பல உறுதிமிக்க கிறிஸ்தவ தேசபக்தர்கள், தலைவர்கள், மற்றும் மாணவ தேசியவாதிகளை நாடு முழுவதும், குறிப்பாக தென்னிந்தியாவில், எழுச்சியடையச் செய்தார்கள். கிறிஸ்தவ நிறுவனங்களின் முக்கியப் பங்கு பின்வருவனவற்றில் தெளிவாக வெளிப்பட்டது:

அ) தேசியவாதத்திற்கு சித்தாந்த ரீதியிலான அடித்தளத்தை அளித்தது.

ஆ) ஜனநாயகக் கோட்பாடுகள் மீதான தத்துவார்த்த விவாதங்களை முன்னெடுத்தது, குறிப்பாக தன்னுறுதி உரிமைகளை வலியுறுத்தியது.

இ) இந்தியர்களின் நியாயமான ஜனநாயக கோரிக்கைகளை உயர்த்திப் பிடித்தது.

ஈ) மாணவர்களுக்கு தேச உணர்வை ஊட்டியது.

உ) தேசப்பற்றுமிக்க கிறிஸ்தவத் தலைவர்களை ஊக்குவித்து வலிமைப்படுத்தி ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான நேரடி மற்றும் மறைமுக செயல்பாடுகளை மேற்கொள்ளச்செய்தது மற்றும் ஜனநாயகத்தின் அரசியலமைப்பு ரீதியிலான வளர்ச்சிக்கு பங்களித்தது.



14

சுதந்திரப் போராட்டத்தில் இஸ்லாமியர்களின் பங்களிப்புகள்

டாக்டர் J.ராஜா முஹம்மது
இயக்குநர்
ஜமால் முகமது கல்லூரி, திருச்சிராப்பள்ளி

தமிழ்நாட்டின் இஸ்லாமியர்கள் இம்மண்ணின் மைந்தர்கள். பெரும்பாலானோர் பல தலைமுறைகளுக்கும் முன்பே மற்ற மதங்களில் இருந்து இஸ்லாமியராக மாறியவர்கள். இன அடிப்படையில் அவர்கள் திராவிடர்கள். தமிழ் அவர்களது தாய்மொழி. மாகாணத்தின் இரண்டாவது பெரும் மக்கள் தொகை அவர்களுடையது. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தமிழ்நாடு இஸ்லாமியர்களின், இஸ்லாமிய சமூகத்தின் பங்கு குறித்த புரிதல் விளிம்பு நிலையிலேயே உள்ளது. அது சரியான ஆய்வுக்கு உட்படுத்தப்படாமல் உள்ளது அல்லது சிதைக்கப்பட்டுள்ளது என்றே கூறலாம். எனவே, அவர்களை சரியான இடத்தில் நிறுத்த வேண்டியதற்கான தேவை இங்குள்ளது. இக்கட்டுரை இந்திய சுதந்திரப் போராட்டத்தில் இஸ்லாமியர்களின் பங்கை முதன்மையான ஆதாரங்களின் அடிப்படையில் விவாதிக்கிறது. தமிழ்நாட்டில் இஸ்லாமியரின் அரசியலை வரலாற்றுப் பார்வையில் நின்று ஆய்வு செய்ய வேண்டும். இஸ்லாமிய மக்கள் இங்கு பன்முகத்தன்மை கொண்டவர்களாக, மொழி, பண்பாடு, வரலாறு, மற்றும் இன ரீதியில் பிரிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். இஸ்லாமியரில் பரந்துபட்ட தோற்றத்துக்குரிய இரு பிரிவுகள் என்றால் அது உருது பேசும் தக்கான இஸ்லாமியர்கள் மற்றும் தமிழ் பேசும் இஸ்லாமியர்கள். அவர்களிடையே சமூகம் மற்றும் பொருளாதாரம் சார்ந்து ஒருவரோடொருவருக்கு இடையிலான தொடர்புகளில் பல்வேறு சமூகக் காரணிகள் செயல்பாட்டில் உள்ளன. ஆயினும், தேச அரசியலில் கைகளைக் கோர்க்க, பண்பாட்டு வேறுபாடுகள் எப்போதும் அவர்களுக்கு ஓர் தடையாய் இருந்ததில்லை. ஆகவே தமிழ்நாட்டின் இஸ்லாமிய மக்கள், 'தமிழக இஸ்லாமியர்கள்' என்னும் ஓரணியாகவே எப்போதும் நிற்கிறார்கள்.

1857க்கு முன்பு

19ஆம் நூற்றாண்டின் அரசியல் மெல்லிசையும், பொருளாதாரச் சோகமும் ஒன்றிணைந்து ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக ஓர் பரவலான கசப்பை விதைத்தது. உள்நாட்டு சக்திகளான பாளையக்காரர்கள் ஆற்காடு நவாபுகளுக்கு எதிரான கிளர்ச்சியை 1750கள் தொடங்கி நடத்தி வந்தார்கள், அவர்களை கிழக்கிந்திய கம்பெனி ஆதரித்தது. இறுதியில் அது தெற்கிந்திய கலகமாக மாறி 1801 வரை தொடர்ந்தது. இதன் காரணமாக பாளையக்காரர்கள் தங்கள் அதிகாரத்தை இழக்க, 1801இல் ஆங்கிலேய ஆட்சி தொடங்கியது. இக்கலகத்தை 'முதலாம் சுதந்திரப் போர்' என்று சில வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். கிளர்ச்சியில், பாளையக்காரர்கள் படையில் பங்கேற்று போரிட்ட சில இஸ்லாமிய வீரர்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன. திண்டுக்கல் படையைச் சேர்ந்த ஷேக் உசேன் என்னும் முக்கிய தளபதி கைது செய்யப்பட்டு வேல்ஸ் இளவரசர் தீவிற்கு (பினாங்கு) நாடு கடத்தப்பட்டார். தென்னிந்திய கிளர்ச்சியில் பல இஸ்லாமியர்கள் பங்கேற்றது குறித்து நாட்டுப்புறப்பாடல்களின் மூலம் தெரிய வருகிறது.



உள்ளூர் படைப்பிரிவுகளின் படை வீரர்கள் பல தொடர் போராட்டங்களை நடத்தியபோது அதில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான இஸ்லாமிய வீரர்களும் இருந்திருக்கிறார்கள் என்று வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன. 1775இல் மதராஸ் படையின் ஒன்பதாவது பட்டாளம் கிளர்ச்சியில் ஈடுபட்டது. அது தளபதி மக்தும் சாகிப்பால் தூண்டப்பட்டது என்று அதிகாரிகளுக்கு தெரியவந்தபோது, கலகம் மற்றும் தேசத் துரோகம் ஆகிய குற்றங்கள் அவர்மீது சுமத்தப்பட்டு 7 மே 1784 அன்று வேலூரில் அவர் தூக்கிலிடப்பட்டார். 1796இல் மதராசில் தங்கியிருந்த 35ஆவது பட்டாளம் மற்றொரு கலகத்திற்கான முயற்சியை செய்தது. சுபேதார் ஷேக் இப்ராஹிம், சுபேதார் குலாம் மொகைதீன், மற்றும் தளபதி ஷேக் முகமது ஆகியோரே கலகத்தின் தலைவர்கள் என்றறிந்த ராணுவ நீதிமன்றம் அவர்களை தண்டித்தது.

பொதுவாகவே, ஆங்கிலேய ஆட்சியில் அவர்களின் ஆட்சிக்கு எதிராக முதலில் எழுந்து நிற்பவர்கள் இஸ்லாமியர்களாகவே இருந்தனர். வேலூர், மதராஸ், மற்றும் அவர்களுக்கருகில் இருந்த மற்ற ஊர்கள் ஆங்கிலேயருக்கு எதிரான நடவடிக்கைகளின் மையங்களாகத் திகழ்ந்தன. அனைத்து இஸ்லாமியர் பிரிவும் வஹாபிகளும் இந்நடவடிக்கைகளுக்கு பின்பு இருந்தனர். வேலூர் நகரமெங்கும் நாடோடி ஃபாக்கீர்களும், இஸ்லாமிய பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவோரும் திரண்டிருந்தனர். அவர்கள் ஆங்கிலேய நிர்வாகத்திற்கு எதிரான நாசகார கோட்பாடுகளையும் திட்டங்களையும் இரகசியமாகப் பரப்பியபடி இருந்தனர். அவர்களின் தொடர்புவலை இராணுவ மையங்களிலும் ஊடுருவியிருந்தது. வேலூர் பகுதி மக்களிடையே தேசத் துரோக துண்டறிக்கைகள் விநியோகிக்கப்படவும், அது தொடர்பாக லத்தீஃப் சாஹிப் கைது செய்யப்பட்டார். சுல்தானா அக்பர் என்னும் பாரசீக பத்திரிகையும் அங்கு விநியோகிக்கப்பட்டது. ஹாஜி சையத் அமீன் அவர்களின் தலைமையில் ஒரு குழு இஸ்லாமியர்களை தூண்டுவதற்காக மதுரை மற்றும் தஞ்சாவூருக்குப் பயணித்தது. அக்குழுவிற்கு ஆட்களை சேர்க்கவும், பொருளாதாரத்

தேவைகளுக்கும் உள்ளூர் சகோதரர்கள் உதவினார்கள். வரலாற்று ஆசிரியர்களின் உரிய கவனத்தைப் பெறத் தவறிய ஓர் முக்கியமான தொடக்க கால கிளர்ச்சி 1763ஆம் ஆண்டு மதுரையில் யூசுப் கான் அவர்களால் நடத்தப்பட்டதாகும். ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் வரலாற்றில் முதல்முறையாக ஓர் கிளர்ச்சி "தனித்து சுதந்திரத்தை நோக்கிய போராக" தொடங்கியது. ஆங்கிலேயர்கள் தங்களுக்குள்ளாக யூசுப் கானின் கிளர்ச்சியை "சுதந்திரமான" ஒன்று என்று தொடர்ந்து குறிப்பிட்டு வந்தார்கள். இதன் மூலம் "சுதந்திரத்திற்கான முதல் போர்" அது என்னும் அதற்குரிய கௌரவம் அளிக்கப்பட்டிருக்கலாம், ஆனால் அம்மரியாதை மறுக்கப்பட்டது.



1806இல் வேலூர் கோட்டையில் காவல் பணியில் இருந்த உள்ளூர் சிப்பாய்கள், குறிப்பாக இஸ்லாமியர்கள், கலவரத்தில் ஈடுபட்டனர். உடை குறித்து ஏற்படுத்தப்பட்ட புதிய கட்டுப்பாடுகளே கிளர்ச்சிக்கான முதல் பொறியாக இருந்தது. அப்பிரச்சினையை சரிவர கையாளாத அதிகாரிகள் காரணமாகவும், அச்சமயம் வேலூர் கோட்டையில் வைக்கப்பட்டிருந்த திப்புவின் குடும்பமும், அவருடைய ஆதரவாளர்களும் சூழ்நிலையைத் திறமையாக தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டதும் கிளர்ச்சிக்கு வழி வகுத்தன. திப்புவின் படையில் இருந்த முகமது ஜாஃபர் என்னும் சிப்பாயே மற்ற சிப்பாய்களிடம் கிளர்ச்சிக்கான எண்ணத்தை முன்னெடுத்தது. கிளர்ச்சி 10 ஜூலை 1806 அன்று திடீரென தொடங்கியது, ஆனால் விரைவில் தோல்வியடைந்தது. கிளர்ச்சி குறித்த விசாரணை அறிக்கை, அக்கலகம் இஸ்லாமியப் படை வீரர்களின் தலைமையிலேயே தொடங்கப்பட்டதாக தெரிவிக்கிறது.

பெருங்கலகம் - 1857

1857இல் ஏற்பட்ட ராணுவக் கிளர்ச்சிக்கான மூல காரணம் உள்ளூர் படை வீரர்கள் மரியாதைக் குறைவாக நடத்தப்பட்டதே ஆகும். அவர்களின் குறையை நிவர்த்தி செய்ய உள்ளூர் மக்கள் அவர்களோடு கைகோர்த்தார்கள். சுதந்திரத்துக்கான எழுச்சி தென்னிந்தியாவை பெரிதாக பாதிக்காதது போன்ற ஓர் பொதுவான தோற்றம் இருக்கிறது; மேலும் இஸ்லாமியர்களின் பங்கேற்பு குறித்தும் ஓர் அமைதி நிலவுகிறது. ஆயினும், அக்காலகட்டம் குறித்து பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் முக்கியமான போராட்டங்களில் மதராஸ் மாகாணத்தின் பங்களிப்பு குறித்து பல்வேறு தகவல்களை அளிக்கின்றன, குறிப்பாக இந்து மற்றும் இஸ்லாமிய பங்கேற்பை விவரிக்கின்றன. பங்கேற்பாளர்களில் இஸ்லாமியரின் எண்ணிக்கை அதிக அளவில் இருந்ததோடு, அதில் பெரும்பான்மையானோர் கிளர்ச்சிக்காக தண்டனை அனுபவித்தவர்கள்.

வங்காளத்தின் பாரக்பூரில் 31 மார்ச் 1857 அன்று கிளர்ச்சி வெடித்தபோது அதன் அதிர்வு மதராஸ் மாகாணத்திலும் பிரதிபலித்து, மதராஸ் புரட்சியின் முக்கிய மையமாக மாறியது. ஆங்கிலேய நிருவாகத்திற்கு எதிரான இரகசிய கூட்டங்கள் வேலூர் பகுதிகளில் நடைபெற்றன. அவ்வாறான இரகசிய நடவடிக்கைகளுக்கு பின்னிருந்த சையத் குசா மொஹம்மத் ஆகுசே உசேன் மார்ச் 1857இல் கைது செய்யப்பட்டார். அச்சமயம் மக்களிடையே பெரும் குழப்பம் நிலவியது. ஃபாக்கீர்கள் என்னும் போர்வையில் இருந்த

ஆட்கள் மதராஸ் நகருக்குள் நுழைய தடை செய்யப்பட்டார்கள், மேலும் சந்தேகத்துக்குரிய பல இஸ்லாமியர்கள் கைது செய்யப்பட்டார்கள். முகலாய ராஜ குடும்பத்தின் உறுப்பினரான சுல்தான் பக்ஷ் ஜூலை 1857இல் செங்கல்பட்டு வந்து, அப்பகுதியின் முன்னணி இந்து மற்றும் இஸ்லாமிய தலைவர்களோடு இரகசிய சந்திப்புகளை மேற்கொண்டார். தொலைபேசி கம்பிகளை வெட்டி அறுப்பதன் மூலம் ஆங்கிலேயர்களின் தொலைத்தொடர்பு அமைப்பை தகர்ப்பதே அவர்களின் முக்கிய நோக்கமாக இருந்தது. அப்பகுதி இஸ்லாமியர்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில், ராஜத்துரோக குற்றம் சுமத்தப்பட்டு சுல்தான் பக்ஷ் கைது செய்யப்பட்டார். பிப்ரவரி 1857இல் 'தானியப் புரட்சி' என்னும் விவசாயிகள் போராட்டம் இராணிப்பேட்டையில் நடைபெற்றது, முகைதீன் சாஹிப் என்பவர் இது தொடர்பாக கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டார்.

முன்பு நவாபுகளின் அரியாசனமாக இருந்த திருவல்லிக்கேணி, கிளர்ச்சியின் மையமாக மாறியது. நவாப்களின் திடீர் வெளியேற்றம், மதராசை சுற்றி இருந்த மக்களின் சமூக, பொருளாதார நிலையில் ஓர் வீச்சியை ஏற்படுத்தியது. "ஃபிரங்கிகளுக்கு (ஆங்கிலேயருக்கு) எதிராகப் போரிட நாங்கள் தயார். அவர்கள் வன்முறையை கட்டவிழ்த்து விட்டு நம்மை அடிமைகளாக நடத்துகிறார்கள். நாங்கள் போருக்கான முரசை அறைகிறோம், மக்கள் ஓர் புரட்சிக்குத் தயாராக வேண்டும்," என்று திருவல்லிக்கேணியில் இஸ்லாமியர்கள் அறி வித்தார்கள். குலாம் கௌஸ் மற்றும் ஷேக் முன்னா போன்ற முக்கிய செயல்பாட்டாளர்கள் ராஜத்துரோக குற்றம் சுமத்தப்பட்டு, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு அந்தமான் சிறைக்கு அனுப்பப்பட்டனர். பல்லாவரத்தில் பல போராட்டக்காரர்கள் தொலைபேசி கம்பிகளை வெட்டினார்கள் அவர்களில் குறிப்பிடத்தக்க அளவில் இருந்தவர்கள் இஸ்லாமியர்கள். கோயம்புத்தூரில் வன்முறையைத் தூண்டியதாக ஷேக் அப்துல்லா என்பவர் கைது செய்யப்பட்டார். கடலூரில் சையத் காசிம் மற்றும் ஷேக் இமாம் கைது செய்யப்பட்டனர். சேலத்தில் ஆங்காங்கே குழப்பங்கள் நிலவின, மேலும் அரசுப் பணியில் உதவியாளராக இருந்த ஹைதர் என்பவர் பிரித்தானிய கொடியை அவமரியாதையாகப் பேசியதற்காக ராஜத்துரோக குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டார். செங்கல்பட்டில், சையத் ஹமீத் ஜலீல் முன்ஷி என்னும் நீதிமன்றப் பணியாளர் பல்வேறு செய்தி அமைப்புகளிலிருந்து கிளர்ச்சித் தகவல்களை சேகரித்து அப்பகுதியின் கிராமத்தினருக்கும் ராணுவ வீரர்களுக்கும் அனுப்பி வந்தார். ராஜத்துரோக குற்றத்திற்காக அவர் கைது செய்யப்பட்டு ஏழு ஆண்டுகளுக்கு சிறையில் அடைக்கப்பட்டார்.

ஜூன் 1857இல் மதராஸ் படையணியின் எட்டாவது குதிரைப் படை ஸ்ரீபெரும்புதூரில் முகாமிட்டிருந்தபோது, அதன் இஸ்லாமியப் படைவீரர்களின் முழு வலிமையுடன் கிளர்ச்சியில் இறங்கியது. அவர்கள் பச்சைக் கொடியை கோவில் கோபுரத்தின்மீது பறக்க விட்டார்கள். ஆயினும் கலகம் உடனடியாக அடக்கப்பட்டது. சுபேதார் மேஜர் சையத் தீர், சுபேதார் சையத் முகைதீன் மற்றும் அவில்தார் மேஜர் ஷேக் ஹுசைன் ஆகியோர் ராணுவ விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு பணி நீக்கம் செய்யப்பட்டனர். பல படை வீரர்கள் அந்தமான் தீவுகளுக்கு நாடு கடத்தப்பட்டனர். தஞ்சாவூரைச் சேர்ந்த ஷேக் இப்ராஹிம் என்னும் வீரர் தூக்கிலிடப்பட்டார். இவ்வாறு 1857 கிளர்ச்சியில் தமிழ்நாடு இஸ்லாமியர்கள் தங்கள் பங்களிப்பை வழங்கினார்கள்.

தொடக்க காலம்

மாகாணத்தின் தமிழ்ப் பகுதியில் தேசிய அரசியலின் தொடக்க காலத்தின்போது, ஆற்காடு நவாபின் வாரிசுகளான ஆற்காடு இளவரசர் குலாம் முகமது அலி மற்றும் அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த நவாப் முஹம்மத் ஹபிபுல்லா, முகமது லத்தீஃப்

ஃபாருக்கி ஆகியோர் உள்ளூர் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டனர். மாகாணத்து இஸ்லாமியர்களின் பார்வைகள் மற்றும் குறைகள் ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் நோக்கில் ஹபிபுல்லா முஸ்லிம் ஹெரால்ட் என்னும் பத்திரிகையை தொடங்கி நடத்தினார். சி. அப்துல் ஹக்கீம் போன்ற உருது பேசும் வணிக மேட்டுக்குடியினர் அவருடன் இணைந்து கொண்டனர். ஆங்கிலேய அரசு அவர்களை மாகாணத்தின் இயல்பான இஸ்லாமியத் தலைவர்களாகப் பாவித்தது. மதராசிற்கு தெற்கே வாழ்ந்த மக்களில் பெரும்பாலானோர் பல்வேறு வகையான வணிகங்களில் ஈடுபட்டிருந்த காரணத்தால் அரசியல் நடவடிக்கைகளில் அவர்கள் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை.

இந்திய தேசிய காங்கிரஸ் 1885இல் தொடங்கப்பட்டபோது அது இஸ்லாமியர்களை சென்றடைய மிகவும் சிரமப்பட்டது. மேலும் அதன் முதல் அமர்வில் இஸ்லாமிய பிரதிநிதித்துவம் மிகச் சிறிய அளவிலேயே இருந்தது. ஆயினும், 1887இல் மூன்றாம் அமர்வு மதராசில் நடத்தப்பட்டபோது புகழ்பெற்ற வணிகரும் திப்பு சுல்தானின் வாரிசுமான ஹுமாயூன் ஜா பகதூர், குலாம் தஸ்தகீர் சாஹிப், கான் சாஹிப் சின்ன மரைக்காயர், மற்றும் V.M. முகமது கனி ராவுத்தர் போன்ற பல இஸ்லாமியப் பிரதிநிதிகள் மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பங்கெடுத்தார்கள். ஹுமாயூன் ஜா அந்த அமர்வின் புரவலராக இருந்தார். அதன் பின்பான, 10ஆம் அமர்வு (1894), 14ஆம் அமர்வு (1898), 19ஆம் அமர்வு (1903), 24ஆம் அமர்வு (1908) மற்றும் பல அமர்வுகளில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான இஸ்லாமியப் பிரதிநிதிகள் தேசிய இயக்கத்தில் பங்கேற்றனர், அவர்களின் பெயர் பட்டியல் மிக நீண்டதாக இருந்தது.

இஸ்லாமியர்களின் அரசியல் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் மேலும் அவற்றை முன்நகர்த்திச் செல்ல வேண்டும் என்னும் நோக்கத்துடன் 1906இல் முஸ்லிம் லீக் தொடங்கப்பட்டபோது மாகாணத்தின் இஸ்லாமியர்கள் அவ்வியக்கத்தில் இணைந்தனர். லீகின் கிளை மாகாணத்தில் 1908இல் தொடங்கப்பட்டது. ஆற்காடு இளவரசர் குலாம் முகமத் அலி அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆற்காடு நவாப் அவர்களின் தலைமை பெரும் எண்ணிக்கையிலான இஸ்லாமியர்களை இயக்கத்தின்பால் ஈர்த்தது. லீகின் சாதனையாக, இஸ்லாமியர்களுக்கு தனித்தொகுதி கிட்டியது, அதன்மீதான ஈர்ப்பை மேலும் அதிகரித்தது. பல இஸ்லாமியர்கள் காங்கிரஸ் மற்றும் லீக் இரண்டிலும் உறுப்பினர்களாக இருந்தார்கள். ஆயினும், காங்கிரஸ் மற்றும் லீகின் எதிர் சித்தாந்தங்களால் அவை பிரிந்து சென்றன. லக்னோ ஒப்பந்தம் 1913இல் கையெழுத்தான போதே இஸ்லாமியர்களுக்கு தனித் தொகுதி அளிக்கும் திட்டத்தை காங்கிரஸ் ஏற்றது; அதன் பின்னர் ஆங்கிலேய அரசை எதிர்ப்பதற்கு ஒரே மேடையில் இரு கட்சிகளும் கைகோர்த்து நின்றன.

அன்னி பெசன்ட் அம்மையாரின் தன்னாட்சி இயக்கத்தில் 1916 முதல் வட ஆற்காடு, செங்கல்பட்டு, தஞ்சாவூர், மற்றும் பல மாவட்டங்களிலிருந்தும் இஸ்லாமியர்கள் பங்கேற்றனர். மதுரை மௌலானா மற்றும் வேலூர் உபயதுல்லா போன்ற முக்கிய இஸ்லாமிய தலைவர்கள் அன்னி பெசன்ட் அம்மையாரின் தீவிர ஆதரவாளர்களாக இருந்தனர். இவ்வாறான தேசிய அரசியல் சூழலில், மாகாணத்தின் தென் மாவட்டத்து இஸ்லாமிய மக்களின் பெரும்பான்மையானோர் கிலாபத் இயக்கம் தொடங்கப்பட்டதும் தேசிய அரசியலின்பால் ஈர்க்கப்பட்டனர். இவ்வகையில், மாகாணத்தின் இஸ்லாமிய மக்கள் தேசிய மேடைகளில் பங்கெடுப்பது 1920கள் முதல் வேகம் பெற்று, அது சுதந்திரம் அடையும் வரை தொடர்ந்தது.

கிலாபத் மற்றும் ஒத்துழையாமை இயக்கம்

முதலாம் உலகப் போரில் துருக்கி தோற்கடிக்கப்பட்டு அதன் சாம்ராஜ்யம் துண்டாடப்பட்டு பிரிட்டன் தலைமையில் மேற்கத்திய நாடுகளுக்கு இடையில் பிரித்துக் கொள்ளப்பட்டது. பாரம்பரியமாக உலகம் முழுவதும் உள்ள சுன்னி இஸ்லாமியர்களின் ஆன்மிகத் தலைமையாகக் கருதப்பட்ட துருக்கியின் ஆட்சியாளரான கலிஃபா தன் அதிகாரத்தை இழந்தார். துருக்கியை போருக்கு முன்பான நிலைக்கு மீட்டெடுக்க வேண்டும் என்ற நோக்குடன் துருக்கிக்கு ஆதரவாக இந்தியாவில் தொடங்கப்பட்ட போராட்டமே கிலாபத் இயக்கமாகும். குறைகளை சரி செய்வதாக வாக்களித்த பிரிட்டன் அவ்வாறு செய்யவில்லை. மௌலானா முஹம்மது அலியின் தலைமையில் கிலாபத் இயக்கத்தின் போராட்டம் மேலும் வலுவடைந்தது.

மகாத்மா காந்தியும், காங்கிரஸும் கிலாபத் இயக்கத்தை தங்கள் சொந்த இயக்கமாக தழுவிக் கொண்டனர். அது இந்து, முஸ்லிம் ஒற்றுமையை வளர்க்கும் என்று மகாத்மா காந்தி நம்பினார். 24 நவம்பர் 1919 அன்று நடந்த கிலாபத் மாநாட்டில் மகாத்மா காந்தி அதன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒத்துழையாமை மற்றும் கிலாபத் இயக்கங்களின் சங்கமமாக மகாத்மா காந்தி திகழ்ந்தார், அதனால் கொண்டாடப்படும் தலைவரானார். காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் லீக் ஆகிய இரு கட்சிகளின் அனுதாபிகளும் கிலாபத்தின் நோக்கத்திற்கு ஆதரவளித்தார்கள். பஞ்சாப் ஜாலியன் வாலாபாக் படுகொலையும், கிலாபத்தின் தவறுகளும் ஒத்துழையாமை இயக்கம் உருவாகக் காரணமாக இருந்தன.

போராட்டம் தீவிரமடைந்தது. மதராஸ் சட்டசபையின் உறுப்பினரான யாகூப் ஹாசன் சேட் மற்றும் குவாமி ரிப்போர்ட் பத்திரிகையின் ஆசிரியரான அப்துல் மஜீத் ஷரார் ஆகியோரது தலைமையின்கீழ் மதராசில் ஆர்ப்பாட்டக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இத்தகைய கூட்டங்களில் இந்துக்கள் பெருமளவில் பங்கேற்றனர். கிலாபத் இயக்கத்தை நீதிக்கட்சியும் ஆதரித்தது. இராஜாஜி இஸ்லாமியரோடு நட்பாகி யாகூப் ஹாசன் சேட்டுடன் கைகோர்த்தார். இராஜாஜியின் செல்வாக்கு அதிக எண்ணிக்கையிலான இந்துக்களை கிலாபத் ஆர்ப்பாட்டங்களுக்கு கொணர்ந்தது. மதராஸ் மாகாணத்தில் 17 அக்டோபர் 1919 அன்று முதல் கிலாபத் நாள் அனுசரிக்கப்பட்டபோது, மதராஸின் அனைத்துக் கடைகளும் மூடப்பட்டன. அன்று மாலை அப்துல் குத்தூஸ் பாஷா தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் இந்துக்களும் முஸ்லிம்களாக 20,000த்திற்கும் மேற்பட்ட மக்கள் அதில் பங்கேற்றனர். மாகாணத்தின் பல இடங்களில் முழு அடைப்பு கடைபிடிக்கப்பட்டது. மீண்டும் மார்ச் 1920இல் முழு அடைப்பு அனுசரிக்கப்பட்டது.

ஏப்ரல் 1920இல் ஷௌக்கத் அலி அவர்களின் தலைமையில் கிலாபத் மாநாடு மதராசில் நடைபெற்றது. "கிலாபத் விவகாரத்தில் சமரசம் எட்டப்படாவிட்டால், நாம் மகாத்மா காந்தி அவர்களின் வழிகாட்டலுடன் ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்கலாம்," என்று ஷௌக்கத் அலி அம்மாநாட்டில் ஆவேசமான தொனியில் அறிவித்தார். மகாத்மா காந்தி ஏற்கனவே, ஒத்துழையாமை தான் ஆக்கப்பூர்வமான தீர்வு என்று அறிவித்திருந்தார். அம்மாநாடு ஒத்துழையாமை இயக்கத்தின் முக்கிய அம்சங்களையும் அறிவித்தது. 1) அனைத்து கௌரவ பதவிகளையும், பட்டங்களையும் துறக்க வேண்டும். 2) மாணவர்கள் தங்கள் கல்வி நிறுவனங்களை புறக்கணிக்க வேண்டும். 3) ஊதியம் அளிக்கும் அனைத்து அரசுப் பணிகளையும் இராஜினாமா செய்ய வேண்டும். 4) காவல்துறை மற்றும் இராணுவத்தின் அனைத்து நியமனங்களையும் கைவிட வேண்டும். மற்றும் 5) அரசாங்கத்திற்கு வரி செலுத்த மறுக்க வேண்டும்.

நவம்பர் 1920இல் ஜமாத் உல் உலேமா ஓர் ஃபத்வாவை (இஸ்லாமிய சட்டப்படியான தீர்ப்பு) அறிவித்தது. அதன்படி, ஒத்துழையாமையை இஸ்லாமியர்களின் கடமையாகக்கொண்டு மகாத்மா காந்தியின் பாதையை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று அறிவிக்கப்படவும், அது நல்ல விளைவை ஏற்படுத்தியது. ஏராளமான இஸ்லாமியர்கள் தாங்களே முன்வந்து ஒத்துழையாமை இயக்கத்தில் இணைந்தனர். இளம் இஸ்லாமியர்கள் அத்திட்டத்தின் மிகச்சிறந்த பிரச்சாரகர்களாக இருந்தனர். தேச எழுச்சியில் உலேமாக்களின் பங்களிப்பும், அவர்கள் இந்துக்களோடு இணைந்ததும், ஆங்கிலேயரின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு ஓர் மரண அடியாக அமைந்தது. இந்துக்களும், இஸ்லாமியரும் ஒற்றுமை, பரஸ்பர நம்பிக்கை, மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றின் வலிமையை உணர்ந்தார்கள். மூன்றாவது கிலாபத் நாள் 1 ஆகஸ்ட் 1920 அன்று அனுசரிக்கப்பட்டது.

ஆகஸ்ட் 1920இல் மகாத்மா காந்தியும், ஷௌக்கத் அலியும் மதராஸிற்கு வருகை புரிந்தனர். அங்கு பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய மகாத்மா காந்தி கிலாபத் விவகாரங்களுக்கு தன்னுடைய ஆதரவை தெரிவித்தார். மேலும், ஒத்துழையாமை இயக்கத்தை ஆக்கப்பூர்வமாக செயல்படுத்த இஸ்லாமியர்களின் ஒத்துழைப்பை வேண்டினார். தஞ்சாவூர், நாகப்பட்டினம், நாகூர் மற்றும் சேலம் ஆகிய நகரங்களுக்கும் மகாத்மா காந்தி பயணித்தார். இஸ்லாமியர்களும், இந்துக்களும் அவருக்கு ஆரவாரமான வரவேற்பை அளித்தனர். பொதுக்கூட்டங்களில் பெரும் எண்ணிக்கையிலான இஸ்லாமியப் பெண்கள் கலந்து கொண்டனர். மகாத்மா காந்தியின் முன்னிலையில் பல புகழ்பெற்ற இஸ்லாமியர்கள் தங்களின் கௌரவப் பட்டங்களை துறப்பதாக அறிவித்தனர்.

திருச்சிராப்பள்ளி, கிலாபத் இயக்கத்தின் ஓர் முக்கிய மையமாகத் திகழ்ந்தது. இராஜாஜி T.S. ராஜன் மற்றும் T.S. சுவாமிநாத சாஸ்திரி ஆகியோரின் வழிகாட்டலுடன், காஜாமியான் ராவுத்தர், சையத் முர்தாசா, ஆகியோரின் துணையுடன், V.S. முகமது இப்ராஹிம் போராட்ட கூட்டங்களை ஒருங்கிணைத்தார். மகாத்மா காந்தி, 18 ஆகஸ்ட் அன்று திருச்சிராப்பள்ளிக்கு வருகை தந்தபோது பெரும் எண்ணிக்கையிலான இஸ்லாமியர்கள் ஒன்று திரண்டு அவரை வரவேற்றனர். அம்மாவட்டத்தின் இஸ்லாமியர்கள் ஒத்துழையாமை இயக்கப் பிரகடனத்தில் கையெழுத்திட்டு இயக்கத்திற்கான தங்களின் ஆதரவை வெளிப்படுத்தினர். அதில் கலந்துகொண்ட ரஹ்மத் பீவி என்னும் முக்கியமான பெண் தொண்டர் கைது செய்யப்பட்டு, ஆறு மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். மிக அதிக எண்ணிக்கையிலான இஸ்லாமியர்கள் தங்களின் கௌரவப் பதவிகளை ராஜினாமா செய்தனர். முகமது இஸ்மாயில் (பின்னர் காயிதே மில்லத்) தன்னுடைய கல்லூரிப் படிப்பை கைவிட்டுவிட்டு இயக்கத்தில் இணைந்தார். யாகூப் ஹாசன் சேட் தன்னுடைய சட்டசபை உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தார். அவருடைய மனைவி கிலாபத் பெண்கள் குழுவை ஒருங்கிணைத்தார்.

கிலாபத் போராட்டங்கள் பொதுவாக அமைதியான முறையில் நடைபெற்றாலும் அரசு ஓர் அடக்குமுறைக் கொள்கையைப் பின்பற்றியது. கிலாபத் தொண்டர்களும், தலைவர்களும் கைது செய்யப்பட்டு, ஓர் போலி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். கிலாபத் பிரச்சாரத்தை மேற்கொண்டதற்காக யாகூப் ஹாசன் சேட் மற்றும் அப்துல் மஜீத் ஷரார் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். கிலாபத் மாநாட்டில் உரையாற்றியதற்காக மதுரையைச் சேர்ந்த ஹாஜி முஹம்மத் மௌலானா சாஹிப் தஞ்சை, திருக்காட்டுப்பள்ளியில் வைத்து 23 மார்ச் 1921 அன்று கைது செய்யப்பட்டார். மகாத்மா காந்தி மீண்டும் செப்டம்பர் 1921இல் மதராசிற்கு வருகை புரிந்தார். மதராஸ் பொதுக்கூட்டங்களை முடித்துக்கொண்டு, 19 செப்டம்பர் 1921 அன்று அவர் திருச்சிராப்பள்ளி

சென்றார். இரயில் நிலையத்தில், நகராட்சி தலைவர் காஜாமியான் ராவுத்தர் மற்றும் P. கலிஃபுல்லா தலைமையில் அவருக்கு ஓர் பிரம்மாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது; மேலும் சையத் முர்தாசா ஓர் வரவேற்புரையை வழங்கினார். அக்கூட்டங்களில் மகாத்மா காந்தி கிலாபத் இயக்கத்திற்கு ஆதரவாக உரையாற்றினார். கும்பகோணம் மற்றும் திருநெல்வேலியில் நடைபெற்ற அவருடைய பொதுக்கூட்டங்களில் இஸ்லாமியர்கள் மிகப்பெரும் அளவில் பங்கேற்றனர்.

உத்தரப்பிரதேசத்தின் சவுரி சவுராவில் 5 பிப்ரவரி 1922 அன்று நடைபெற்ற வன்முறை சம்பவங்களின் காரணமாக மகாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்தார். நிறுத்தத்தை இந்துக்களும், இஸ்லாமியரும் விரும்பவில்லை. கிலாபத் தலைவர்களும் தொண்டர்களும் மாகாணத்தில் தங்கள் போராட்டங்களை தொடர்ந்ததோடு, இந்து சகோதரர்களின் ஆதரவையும் நாடினார்கள். 1923இல் துருக்கி ஓர் குடியரசாக கட்டமைக்கப்பட்ட பின்பு, 1924இன் தொடக்க காலத்தில் கலீஃபத் தலைமையகம் துருக்கியின் பிரதமரான முஸ்தபா கமால் பாஷாவினால் ஒழிக்கப்பட்ட பின்பு, கிலாபத் இயக்கம் அதன் முக்கியத்துவத்தை இழந்தது. 1919 முதல் 1923 வரை யிலான கிலாபத் மற்றும் ஒத்துழையாமை இயக்க காலகட்டம், சுதந்திரப் போராட்ட வரலாற்றில் ஓர் மைல்கல்லாகும். அக்காலக்கட்டத்தில்தான் இந்துக்களும், இஸ்லாமியரும் தங்கள் வேற்றுமைகளை கைவிட்டு தேசியம் என்னும் அலையில் தங்களைத் தாங்களே மூழ்கடித்துக்கொண்டு இனியும் நீங்கள் இக்காலகட்டத்தின் உணர்வை எதிர்க்க முடியாது என்று அரசுக்கு ஓர் பலமான செய்தியை அனுப்பினார்கள்.

தேசியப் போராட்டங்கள் 1923-1930

நாக்பூர் கொடி சத்தியாகிரகம்

மகாராஷ்டிராவின் நாக்பூரில் ஏப்ரல் 1923இல் ஓர் கொடி அணிவகுப்பு அறப்போராட்டம் தொடங்கப்பட்டது. மக்கள் தேசியக் கொடியை கையில் ஏந்தியபடி ஓர் பேரணியாக செல்ல முயன்றபோது நாக்பூர் காவல்துறை அனுமதி மறுத்தது, அதன் தொடர்ச்சியாக தொடங்கப்பட்டதே நாக்பூர் கொடி சத்தியாகிரகம். நாக்பூரைச் சேர்ந்த தேசியவாதிகள் தங்கள் கைகளில் கொடிகளை ஏந்தி சென்றதற்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இச்செய்தி காட்டுத் தீயாய் பரவி, மக்களை ஆவேசப்படுத்தியதன் விளைவாக நாக்பூர் கொடி சத்தியாகிரகம் என்னும் தேசிய இயக்கமாக அது மாறியது. இவ்விவகாரத்தை கையில் எடுத்த காங்கிரஸ், தேசியக்கொடியை கையில் ஏந்திச் செல்லும் பேரணிகளை ஒருங்கிணைத்ததோடு, அப்போராட்டத்தை ஆதரிக்கும் விதமாக நாடு முழுவதிலுமிருந்து தொண்டர்களை நாக்பூருக்கு அனுப்பும்படி மக்களிடம் வேண்டுகோள் விடுத்தது.

நாக்பூர் கொடி சத்தியாகிரகத்திற்கு ஆதரவாக மாகாணம் முழுவதும் பல்வேறு இடங்களில் பொதுக்கூட்டங்களும், பேரணிகளும் ஒருங்கிணைக்கப்பட்டன. மேலும், 18 ஜூலை 1923 கொடிநாளாக அனுசரிக்கப்பட்டது. மதுரையிலிருந்து 23 ஜூன் அன்று முதல் தொகுதியாக 16 தொண்டர்கள் நாக்பூருக்கு அனுப்பப்பட்டனர். அதில் ஒருவரான சந்தன வியாபாரி ஆதம் சாஹிப் கைது செய்யப்பட்டு ஒன்பது மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். மேலும், அப்போராட்டத்தில் பங்கெடுத்த இஸ்லாமியர்களில் மதுரையின் பாபு சாஹிப் ஆறு மாதங்களும், திண்டுக்கல் முகைதீன் கான் ஒரு வருடமும், முகைதீன் சாஹிப் இரண்டு மாதங்களும் சிறைத் தண்டனை அனுபவித்தனர். திருச்சிராப்பள்ளியைச்

சேர்ந்த சையத் உசேன் மற்றும் அவருடைய மனைவி மரியம் பீவி இருவரும் ஆறு மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, கடலூர் சிறைக்கு அனுப்பப்பட்டனர். மாகாணத் திலிருந்து நாக்பூர் சத்தியாகிரகத்தில் பங்கேற்ற இஸ்லாமியர்களின் பட்டியல் இன்னும் நீண்டு கொண்டே போகும்.

சைமன் குழு புறக்கணிப்பு

ஆங்கிலேய அரசு ஜான் சைமன் என்பவரது தலைமையில் இந்திய அரசியலமைப்பில் மேலும் சீர்திருத்தங்கள் செய்வதற்கான ஆய்வை மேற்கொள்ள ஓர் குழுவை நியமித்தது. அக்குழுவின் அனைத்து உறுப்பினர்களும், ஆங்கிலேயர்கள். காங்கிரசும், மற்ற கட்சிகளும் அக்குழுவை புறக்கணிக்க முடிவு செய்தன. அக்குழு 3 பிப்ரவரி 1920 அன்று பம்பாய் வந்தடைந்தது. அவர்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக நாடு முழுவதும் முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. S. சத்தியமூர்த்தி அவர்களின் தலைமையில் பஷீர் அகமத் சையத், யாகூப் ஹாசன் சேட், மற்றும் ஹமீத் கான் ஆகியோர் மதராசில் முழு அடைப்பை ஒருங்கிணைத்தனர். பெரும் எண்ணிக்கையிலான இஸ்லாமியர்கள் அதில் பங்கேற்றனர்; மேலும், இஸ்லாமிய மாணவர்கள் கல்வி நிறுவனங்களை புறக்கணித்தனர். தஞ்சாவூர், கும்பகோணம், மற்றும் மதுரை போன்ற இடங்களில் ஆர்ப்பாட்டக் கூட்டங்கள் இஸ்லாமியர்களால், குறிப்பாக இளைஞர்கள் மற்றும் மாணவர்களால், ஒருங்கிணைக்கப்பட்டன. சைமன் குழு தங்களின் இரண்டாவது பயணமாக பிப்ரவரி 1929இல் மதராஸிற்கு வந்தபோது "சைமன், திரும்பிச் செல்" என்னும் முழக்கங்களுடனான பலத்த எதிர்ப்பினை சந்தித்தது. அப்பிரச்சாரம், இஸ்லாமியரின் பங்களிப்புடன் பெரும் வெற்றி பெற்றது.

நீல் சிலை சத்தியாகிரகம்

ஆங்கிலேய படைத்தலைவர் ஜேம்ஸ் ஜார்ஜ் ஸ்மித் நீல் 1857இல் அலகாபாத், வாரணாசி, மற்றும் லக்னோவில் எழுந்த பெரும் கிளர்ச்சியை அடக்குவதில் முக்கிய பங்காற்றியவர். அதில் நூற்றுக்கணக்கான மக்கள் தூக்கிலிடப்பட்டனர், பல கிராமங்கள் அதன் குடிமக்களோடு சிதைக்கப்பட்டன. தேசிய புரட்சியாளர்களால் 25 செப்டம்பர் 1857 அன்று நீல் சுட்டுக் கொல்லப்பட்டார். அரசு மிகப்பெரும் இராணுவ மரியாதைகளால் அவரை அலங்கரித்தது. மதராசிலிருந்த அவருடைய நண்பர்கள், படைத்தலைவரின் துணையுடன், லண்டனிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நீலின் பிரம்மாண்டமான உருவச் சிலையை 24 ஆகஸ்ட் 1861 அன்று மதராஸ் மவுண்ட் சாலையில் (தற்போதைய ஸ்பென்சர் அருகில்) நிறுவினர்.

இதனைக் கண்டு நாடு அவமான உணர்வில் கொந்தளித்தது. பொது இடத்திலிருந்து நீலின் சிலை அகற்றப்பட வேண்டும் என்று துடித்தது. சட்டமன்றத்தின் இஸ்லாமிய உறுப்பினர்கள் சிலையை அகற்றுமாறு படைத் தலைவரிடம் ஓர் மனுவை அளித்தனர். தேசியத் தொண்டர்கள் 1927இல் சத்தியாகிரக பிரச்சாரத்தைத் தொடங்கினார்கள். சிலையை தகர்க்க வேண்டும் என்னும் சிந்தனை மதுரையில் உதித்தது; முஹம்மத் சாலியா மற்றும் சுப்பராயலு ஆகியோர் மதராஸ் வந்தடைந்து 11 ஆகஸ்ட் 1927 அன்று சிலையிலிருந்த வாளின் உரையை உடைத்தார்கள். இருவரும் கைது செய்யப்பட்டு, ஆறு மாத கடும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. சிலையை சிதைக்கத் துணிந்த மதராஸ் வாசனைத் திரவிய வியாபாரி S.M. அசீஸ், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த கொல்லர் காசிம் ராவுத்தர், மற்றும் பண்ருட்டியை சேர்ந்த முகமது உசேன் ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டனர். மதராஸ் சட்டமன்றத்தின் இஸ்லாமிய உறுப்பினர்களான பஷீர் அகமத்

சையித், உப்பி சாகிப் மற்றும் அப்துல் ஹமீத் கான் ஆகியோர் 21 அக்டோபர் 1927 அன்று சிலையை அகற்ற ஓர் தீர்மானத்தைக் கொண்டு வந்தனர். ஆனால் ஆளும் நீதிக்கட்சியின் எதிர்ப்பு காரணமாக தீர்மானம் தோல்வியுற்றது. தொடர் போராட்டங்களுக்குப் பின்னர் 19 நவம்பர் 1937 அன்று இராஜாஜி அரசால் சிலை அகற்றப்பட்டு மதராஸ் அரசு அருங்காட்சியகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

சட்ட மறுப்பு இயக்கம்

சட்ட மறுப்பு இயக்கம், காங்கிரஸ் கட்சியால் பிப்ரவரி 1930இல் மகாத்மா காந்தி தலைமையின்கீழ் தொடங்கப்பட்டது. உப்பு சட்டத்தை எதிர்த்தல், அந்நிய துணிகள் மற்றும் அந்நிய பொருட்களை நிராகரித்தல், மற்றும் கள்ளுக்கடை மறியல்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அவ்வியக்கம் இருந்தது. உப்பு சட்டத்தை எதிர்த்து 12 மார்ச் 1930இல் மகாத்மா காந்தி தண்டி என்னும் இடத்தில் ஓர் யாத்திரையை தொடங்கினார். அதே போராட்டம் மதராஸ் மாகாணத்தில் இராஜாஜி தலைமையில் நடைபெற்றது. இதற்கு இஸ்லாமியர்கள் பெரும் ஆதரவை அளித்தார்கள். இராஜாஜி, 13 ஏப்ரல் 1930 அன்று வேதாரண்யம் நோக்கி உப்பு சத்தியாகிரகத்தை தொடங்கியபோது மதுரை, மதராஸ், திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் சேலம் மாவட்டங்களிலிருந்து அவருடன் பயணிக்க 100 தொண்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வேதாரண்யம் யாத்திரையில் இஸ்லாமியர்களின் பங்கேற்பு மிகக் குறைவு என்று அரசு குறிப்பிட்டது. ஆனால், உண்மையில், இஸ்லாமியர்களின் பங்கேற்பு மிகப்பெரும் எண்ணிக்கையில் இருந்தது.

வேதாரண்ய யாத்திரை திட்டம் இராஜாஜி அவர்களால் மதுரையில் A. வைத்தியநாத ஐயர், சுப்புராமன் மற்றும் முகமது மௌலானா சாகிப் ஆகிய தலைவர்களுடன் நடத்தப்பட்ட ஆலோசனைக்குப் பின்பே முடிவு செய்யப்பட்டது. மதுரை பகுதியிலிருந்து மட்டும் 24 தொண்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் ஆறு பேர் இஸ்லாமியர்கள். யாத்திரையின் தொடக்கத்திற்கு வெகு முன்பாகவே அவர்கள் ஆறு பேரும் இரயில் மூலம் திருச்சிராப்பள்ளி சென்றடைந்தனர், அங்கிருந்து ஹாஜி முஹம்மத் மௌலானா சாகிப்பின் தலைமையில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

யாத்திரை 13 ஏப்ரல் 1930 அன்று திருச்சிராப்பள்ளியில் தொடங்கியது; ஸ்ரீரங்கத்தை அடைந்தபோது, அங்கு இஸ்லாமியர்கள் புனித குரான் ஓதி அன்பாக வரவேற்றார்கள். அந்த வழிநெடுக இஸ்லாமியர்கள் சத்தியாகிரகிகளுக்கு வரவேற்பளித்து தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர். யாத்திரை 18 ஏப்ரல் அன்று அய்யம்பேட்டையை அடைந்தபோதும், 19 ஏப்ரல் அன்று பாபநாசத்தை அடைந்தபோதும் வீதிகள் அலங்கரிக்கப்பட்டு ஊரே விழாக்கோலம் பூண்டிருந்தது. ராஜகிரி, பண்டாரவடை, கும்பகோணம், வலங்கைமான், மற்றும் தோப்புத்துறை ஆகிய ஊர்களைச் சேர்ந்த இஸ்லாமியர்கள் சத்தியாகிரகிகளுக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து கைப்பைகளை அன்பளிப்பாக அளித்தனர். சத்தியாகிரகிகளுடன் சேர்ந்து கும்பகோணம் மற்றும் நீடாமங்கலத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் பங்கேற்ற முஹம்மது மௌலானா சாகிப் கைது செய்யப்பட்டார்.

வேதாரண்யம் அருகில் உள்ள அகஸ்தியம்பள்ளி கிராமத்தில் 30 ஏப்ரல் அன்று இராஜாஜி உப்பு சட்டத்திற்கு எதிராக படுகையிலிருந்து உப்பை அள்ளியபோது, கைது செய்யப்பட்டார். இப்போராட்டம் ஒன்றரை மாதங்களுக்கு நீடித்தது. மொத்த தொண்டர் பட்டாளமும், மே மாதம் கைது செய்யப்பட்டார்கள். அவர்களில், மதுரையைச் சேர்ந்த S. பாவா முகைதீன், திருமங்கலத்தைச் சேர்ந்த அச்சி பாட்ஷா ராவுத்தர், மேலூர் S.H.A. ரகுமான், திண்டுக்கல் சையத் இப்ராஹிம், அதிராம்பட்டினம் அலியார் சேட்,

திருமுல்லைவாசல் அப்துல் காதர் ஆகியோர் பல்வேறு மாதங்களுக்கு சிறையில் அடைக்கப்பட்டனர். இவ்வாறு, விடுதலைப் போராட்டங்களுக்கான இஸ்லாமியர்களின் ஆதரவையும் பங்கேற்பையும் ஆவணங்கள் வெளிச்சமிட்டு காண்பிக்கின்றன. ஆயினும், வேதாரண்யம் சத்தியாகிரகத்தில் பங்கெடுத்த 100 தொண்டர்களை கௌரவிக்கும் விதமாக காங்கிரஸ் கட்சி நடத்திய நிகழ்வில் ஒரு இஸ்லாமிய சத்தியாகிரகியின் பெயர்கூட பட்டியலில் சேர்க்கப்படாதது மிகுந்த வியப்பை உண்டாக்கியது. T. பிரகாசம் 13 ஏப்ரல் 1930 அன்று மதராஸ் திருவல்லிக்கேணி கடற்கரையில் உப்பு சட்டத்திற்கு எதிராக பல தொண்டர்களை வழிநடத்தி அழைத்துச் சென்றபோது அதில் பங்கேற்ற வேலூர் K. உபயதுல்லா கைது செய்யப்பட்டு 18 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். மதராஸ் சத்தியாகிரகத்திலும் பல இஸ்லாமிய தொண்டர்கள் பங்கேற்றார்கள்.

அந்நிய ஆடைகள் விற்கும் கடை முன்பான மறியல் மதராசில் தொடங்கப்பட்டது. அவ்வாறான அந்நிய உடைகள் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த பலர் இஸ்லாமியர்கள். இப்போராட்டம் காரணமாக தங்கள் பொருளாதாரத்தின் அடிப்படையே ஆட்டம் கண்டு விடுமோ என்று அவர்கள் அஞ்சினர். பெரும் எண்ணிக்கையிலான இஸ்லாமிய வணிகர்கள், அந்நிய துணிகள் இறக்குமதியை நிறுத்த ஒப்புக்கொண்டனர். மாகாணத்தின் தெற்குப் பகுதியில் அந்நிய துணிக்கடைகள் மறியல் மிகத் தீவிரமாக இருந்தது. மதுரையைச் சேர்ந்த இஸ்லாமியர்கள் மறியல் போராட்டங்களை ஒருங்கிணைத்ததோடு, அந்நிய துணிகளை சேகரித்து பொது இடங்களில் எரிக்கச் செய்தனர். மற்ற பல்வேறு இடங்களிலும் இத்தகைய சம்பவங்களை இஸ்லாமியர்கள் முன்நின்று நடத்தியதாக தெரிவிக்கப்பட்டது. மதுக்கடைகளுக்கு எதிரான போராட்டங்களில் மதுரை முக்கியப் பங்கு வகித்தது. ஹாஜி மொஹமத் மௌலானா சாகிப் தலைமையில் அவ்வாறான போராட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டன. இஸ்லாமியப் பெண்களும் அதில் கலந்து கொண்டனர். மதுரை காவல்துறை 17 ஜூலை 1930 அன்று போராட்டக்காரர்கள்மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது. அதில் சத்தியாகிரகி காதர் பாட்ஷா உயிரிழந்தார். பெரும் எண்ணிக்கையிலான இஸ்லாமியத் தொண்டர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். கோம்பை, பெரியகுளம், திண்டுக்கல், நாமக்கல், மற்றும் பல இடங்களில் நடைபெற்ற கள்ளுக்கடை மறியல் போராட்டங்களில் இஸ்லாமியர்கள் பங்கேற்றனர். சட்ட மறுப்பு இயக்கத்திற்கு ஆதரவான கூட்டங்கள் மஸூதிகளில் ஒருங்கிணைக்கப்பட்டன.

காதி உடைகளை பிரபலப்படுத்தும் நோக்குடன் 'கதர் இயக்கம்' தொடங்கப்பட்டு இஸ்லாமியர்களால் ஆதரிக்கப்பட்டது. அவர்கள் கதர் அணியுமாறு மக்களை ஊக்கப்படுத்தினர். சில உலேமாக்கள் கதராடை அணிந்த மணமகன்களின் திருமணங்களை மட்டுமே அதிகாரப்பூர்வமாக நடத்தி வைப்போம் என்று அறிவித்தனர். இஸ்லாமிய தேசியவாதிகளான K.R. முகமது இஸ்மாயில், உத்தமபாளையம் தங்க மீரான், மற்றும் மதுரை மௌலானா ஆகியோர் மக்களிடையே கதர் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இஸ்லாமியப் புரவலரான உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் கதர் ஆடைகளை கொள்முதல் செய்து ஏழை மக்களுக்கு விநியோகித்தார். திருச்சிராப்பள்ளி, கதர் பயன்பாட்டின் முக்கியப் பிரச்சார மையமாகத் திகழ்ந்தது. ஆங்கிலேய அரசின் முன்னாள் காவல்துறை அதிகாரியாக இருந்த பீர் முகமது பாவலர், சட்ட மறுப்பு இயக்கத்திற்கு ஆதரவாக தன் பணியை இராஜினாமா செய்துவிட்டு மாவட்டம் முழுவதும் பயணித்து கதரின் நன்மைகள் மற்றும் குடிப்பழக்கத்தின் தீமைகள் ஆகியவற்றைக் குறித்து பிரச்சாரம் செய்தார். கரூர், முசிறி, அரியலூர், துறையூர், குளித்தலை, போன்ற பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட கதர் விழிப்புணர்வு கூட்டங்களில் பெரும் எண்ணிக்கையிலான இஸ்லாமியர்கள் பங்கேற்றனர். திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது



கல்லூரியின் நிறுவனர்களில் ஒருவரான காஜா மியான் ராவுத்தர் 50,000 ரூபாய் செலவில் ஓர் கதர் துணி உற்பத்தி தொழிற்சாலையை நிறுவி கதர் ஆடைகளை மக்களுக்கு மிகக் குறைவான விலையில் விற்றது மட்டுமல்லாமல் ஏழை மாணவர்களுக்கு இலவசமாக விநியோகிக்கவும் செய்தார்.

சட்ட மறுப்பு இயக்கம் 1933இல் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டபோது, மகாத்மா காந்தி சத்தியாகிரகத்தை முன்னெடுக்குமாறு தனி நபர்களை வேண்டினார்; அதில் ஏராளமான இஸ்லாமியர்கள் பங்கெடுத்தனர். பிப்ரவரி 1934இல் மகாத்மா காந்தி மதராஸ் வந்தபோது இஸ்லாமியர்கள் சிறப்பான வரவேற்பு அளித்தார்கள், குறிப்பாக, அவரை வரவேற்க இஸ்லாமியப் பெண்கள் பெரும் கூட்டமாக திரண்டிருந்தனர். பெரியகுளம், தேனி, சின்னமனூர், உத்தமபாளையம் போன்ற பல இடங்களில் பணமுடிப்புகள் அவரிடம் பரிசாக அளிக்கப்பட்ட நிகழ்வுகள் குறித்து ஆவணப் பதிவுகள் உள்ளன. அதில் பல இஸ்லாமியப் புரவலர்கள் விடுதலைப் போராட்டத்திற்காக பெருந்தொகை அளித்தது குறித்தும் பதிவு செய்யப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரியின் நிறுவனர்களில் ஒருவரான ஜமால் முகமது, மகாத்மா காந்தியிடம் ஓர் வெற்று காசோலையை அளித்து அவர் விரும்பும் தொகையை நிரப்பிக் கொள்ளுமாறு கூறினார். சட்ட மறுப்பு இயக்கம் தொடர்பாக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட இஸ்லாமியர்களின் பட்டியல் மிக நீளமானது, அதுவே விடுதலைப் போராட்டத்திற்கான அவர்களுடைய பங்கை தெரிவிக்கிறது.

1935 முதல் 1941 வரை

மாகாணத்தின் 1937 தேர்தல்களில் முஸ்லிம் லீக் கட்சியின் செயல்திறன் மெச்சத்தக்கதாக இருந்தாலும், காங்கிரஸ் பெரும்பான்மை பெற்று ஆட்சியைப் பிடித்தது. சில மாதங்களே நீடித்த ஓர் இடைக்கால அரசு அமைக்கப்பட்டபோது லீகை சேர்ந்த P. கலிஃபுல்லா அதில் இடம்பெற்றார். ஜூலை 1937இல் காங்கிரஸ் ராஜகோபாலச்சாரியை அமைச்சரவையின் முதல் மந்திரியாக தேர்ந்தெடுத்தது. யாகூப் ஹாசன் சேட்

அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். முஸ்லிம் லீக் 1941இல் இஸ்லாமியர்களுக்கான தனிநாடாக பாகிஸ்தானை அறிவிக்குமாறு கோரிக்கை எழுப்பியது. இருப்பினும், வேலூர் உபயதுல்லா, மதுரை மௌலானா, ஜமால் முஹம்மது, சையத் முர்தாசா S.A. ரஹீம் மற்றும் பஷீர் அகமத் சையித் போன்ற இஸ்லாமியத் தலைவர்கள் பாகிஸ்தான் திட்டத்திற்கு எதிராக இருந்தனர்.

பாகிஸ்தான் கோரிக்கை மற்றும் மற்ற பிரச்சனைகள் ஒருபுறம் இருந்தாலும், தேச முக்கியத்துவம் வாய்ந்த தனிநபர் சத்தியாகிரகம், வரி கொடா இயக்கம், மற்றும் போருக்கு எதிரான பிரச்சாரங்கள் போன்ற போராட்டங்களில் இஸ்லாமியர்கள் பங்கெடுத்தார்கள். இப்போராட்டங்களில் பெரும் எண்ணிக்கையிலான இஸ்லாமியர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். எல்லாவற்றிற்கும் மேலாக, 1942இல் மகாத்மா காந்தி விடுத்த அழைப்பிற்கு பெருந்திரளான ஆதரவை இஸ்லாமியர்கள் அளித்தனர். ஈ.வே.ராமசாமி நாயக்கர் 1925இல் சுயமரியாதை இயக்கத்தை தொடங்கிய காலம் முதலே, இஸ்லாமியர்கள் அவருடன் நல்லுறவு கொண்டிருந்தனர். சுயமரியாதை இயக்கம் முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் லீகின் கோரிக்கைகளை ஆதரித்தது. அவ்வியக்கம் இஸ்லாமியரிடையே திராவிட உணர்வை விதைத்தது; அவர்களும் அரசியல் மற்றும் பண்பாட்டுத் தளங்களில் தங்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்க அதுவே முக்கிய அம்சமாக இருக்கும் என்பதை உணர்ந்தனர். ஈ.வே.ராமசாமி நாயக்கர் 1938இல் நீதிக்கட்சியின் தலைவரானார்.

வெள்ளையனே வெளியேறு இயக்கம்

ஆங்கிலேயரை இந்தியாவை விட்டு உடனடியாக வெளியேறக் கோரி தொடங்கப்பட்ட வெள்ளையனே வெளியேறு இயக்கம் 8 ஆகஸ்ட் 1942இல் தொடங்கப்பட்டது. இதை அடைய காங்கிரஸ் மகாத்மா காந்தி தலைமையில் ஓர் அறவழிப் போராட்டத்தை தொடங்கியது. மகாத்மா காந்தி மற்றும் முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். காங்கிரஸ் இயக்கம் சட்டத்திற்கு புறம்பானது என்று அறிவிக்கப்பட்டது. மற்றொரு புறம் முஸ்லிம் லீக் இந்திய இஸ்லாமியர்களின் உரிமைகளைப் பாதுகாக்க பாகிஸ்தான் ஒன்றே தீர்வு என்று முடிவு செய்தது. மேலும் அதன் மதப் பரிமாணம் மாகாணத்தின் இஸ்லாமியரிடையே ஓர் தாக்கத்தை ஏற்படுத்தியது. பாகிஸ்தான் விவகாரம் அவர்களின் மென் உணர்வுகளை தூண்டினாலும், மகாத்மா காந்திக்கு முக்கியத்துவமளித்து இஸ்லாமியர்களின் ஒரு பெரும் பகுதி வெள்ளையனே வெளியேறு இயக்கத்திற்கு ஆதரவுக் கரங்களை நீட்டினர்.

மகாத்மா காந்தி உட்பட்ட தேசத் தலைவர்கள் கைது செய்யப்பட்டபோது இந்துக்களும், முஸ்லிம்களும் கோபங்கொண்டு ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்க பெரும் ஆர்வம் காட்டினர். மாணவர்கள், தொழிலாளர்கள், மற்றும் பொதுமக்கள் இணைந்து போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தினர். மாகாணம் முழுவதும் உள்ள இரயில் நிலையங்கள், பொது நிறுவனங்கள், காவல் நிலையங்கள், மற்றும் தொலைத்தொடர்பு அமைப்புகள் ஆகியவற்றை குறிவைத்து போராட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். பல இடங்களில் துப்பாக்கிச்சூடுகள் நடத்தப்பட்டு, பலர் அவற்றில் கொல்லப்பட்டனர்.

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் இஸ்லாமியர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாக இருந்தது. மதுரையில் நகராட்சித் தலைவராக இருந்த முகமத் மௌலானா சாஹிப் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் முழு அடைப்பு ஆகியவற்றை ஒருங்கிணைப்பதில் முக்கியப் பங்கு வகித்தார். இந்தியன் என்னும் தமிழ் வாராந்திரியின் ஆசிரியரான சையத் இஸ்மாயில் "வெள்ளையனே வெளியேறு" என்னும் முழக்கத்தை அப்பத்திரிகையில் வெளியிட்டார். பெரும் எண்ணிக்கையிலான இஸ்லாமியர்கள் போராட்டத்தில் பங்கெடுத்தனர்.

குலாம் முகைதீன் என்னும் அமெரிக்க கல்லூரி மாணவர் பெருந்திரளான மாணவர் கூட்டத்தைக் கூட்டினார், அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டார்கள். அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் மாணவரான கரிமுதீன் கைது செய்யப்பட்டார். கோயம்புத்தூரில் ஆலைத் தொழிலாளர்கள் அப்துல் மஜீத் மற்றும் A.K. அப்துல் ரஹீம் தலைமையில் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டபோது D.I.R. விதிகளின்கீழ் கைது செய்யப்பட்டனர். திண்டுக்கல்லைச் சேர்ந்த அப்துல் சத்தார் பொதுமக்களையும் மாணவர்களையும் திரட்டி ஆர்ப்பாட்டங்கள் செய்ததற்காக பலமுறை கைது செய்யப்பட்டார்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஒத்துழையாமை இயக்கத்திற்கு மக்களிடையிலும் மாணவர்களிடையிலும் பெரும் ஆதரவு இருந்தது. ஆர்ப்பாட்டக்காரர்கள் திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தையும், ஜெயங்கொண்டபுரத்தில் இருந்த தாலுகா அலுவலகத்தையும் வெடிவைத்து தகர்க்க முயன்றபோது போலீசாரால் அது தடுத்து நிறுத்தப்பட்டு, அத்திட்டத்தை தீட்டிய ஜெயங்கொண்டபுரத்தைச் சேர்ந்த காதர் கான் கைது செய்யப்பட்டார். கரூரில் நானா சாகிப் என்பவரால் சத்தியாகிரகம் ஒருங்கிணைக்கப்பட்டது. அதில் பங்கேற்ற அவருடைய கர்ப்பிணி மனைவி பியாரி பீவி கைது செய்யப்பட்டார். புகலூர் இரயில் தடம் புரண்ட சம்பவம் 16 ஆகஸ்ட் 1942இல் நடந்தபோது அதன் பின்னிருந்து அத்திட்டத்தை செயல்படுத்தியவர் நானா சாகிப். அவருடைய மைத்துனரான பஜன் சாகிபும் தன் மனைவியுடன் போராட்டத்தில் பங்கேற்றார். இவ்வாறு பல்வேறு மாவட்டங்களிலிருந்து வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் இஸ்லாமியர்கள் ஆற்றிய பங்கு குறித்தும் பெருமளவிலான இஸ்லாமிய மக்கள் கைது செய்யப்பட்டு சிறைத் தண்டனைகள் அனுபவித்தது குறித்தும் பாதுகாக்கப்பட்ட ஆவண ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தேசிய இஸ்லாமியத் தலைவர்கள் பாகிஸ்தான் உருவாக்கத்தை மிகத் தீவிரமாக விமர்சித்தார்கள். K. உபயதுல்லா, S.A. ரஹீம், மதுரை மௌலானா சாகிப் மற்றும் சையத் முர்தாசா போன்ற தலைவர்கள் ஜூன் 1941இல் பிரிவினைக்கு எதிரான மாநாட்டை கும்பகோணத்தில் நடத்தினர், அதில் இந்தியப் பிரிவினைக்கு எதிரான தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றினர்.

தேசப் போராட்டங்களுக்கு ஆதரவாக தமிழ் மற்றும் உருதுவில் பல பத்திரிகைகள் இஸ்லாமியர்களால் வெளியிடப்பட்டன. சைஃபுல் இஸ்லாம் (1910), அல் ஹிலால் (1906), பாரத கேசரி (1936), சமரசம் (1937), முசல்மான் (1923) ஆகியவை அவற்றில் சில. இப்பத்திரிகைகளின் ஆசிரியர்கள் பலமுறை சிறைப்படுத்தப்பட்ட காரணத்தால் அவர்கள் குறைந்த காலமே வாழ்ந்தார்கள் என்பதற்கு பாதுகாக்கப்பட்ட ஆவணப் பதிவுகள் சாட்சியங்களாக நிற்கின்றன.

இந்திய தேசியப் படை

நேதாஜியின் இந்திய தேசியப் படைக்கு இஸ்லாமியர்களின் பங்களிப்பு இன்றியமையாதது. மாகாணத்தின் படை வீரர்களில் 10% இஸ்லாமியர்களாக இருந்தார்கள். நேதாஜி சிங்கப்பூரில் அமைத்த 'ஆசாத் ஹிந்த்' அரசாங்கத்தின் இருபது உறுப்பினர் அமைச்சரவையில் தமிழ்நாட்டின் சோத்துக்குடியைச் சேர்ந்த கரிம் கனியும் இடம்பெற்றிருந்தார். கரூர் மாவட்டத்தின் பள்ளப்பட்டியைச் சேர்ந்த M.J. கலியூர் ரஹ்மான் இந்திய தேசியப் படையின் சைகோன் பிரச்சாரப் பிரிவிற்கு பொறுப்பாளராக இருந்தார். தஞ்சாவூர் மாவட்டத்தின் ராஜகிரியைச் சேர்ந்த டத்தோதான் ஸ்ரீ உபயதுல்லா, ஜகார்த்தா வானொலி நிலையத்தின் மூலம் இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு பங்களித்தார். இந்திய தேசியப் படை வீரரான ஷாகுல் ஹமீது 10 செப்டம்பர் 1945 அன்று மதராஸ் சிறையில் தூக்கிலிடப்பட்டார்.

சுதந்திரத்திற்கு முன்தினம் மாலை

பிப்ரவரி 1947இல் இந்தியர்களிடம் அதிகாரத்தை அளிக்க ஆங்கிலேயர் முடிவு செய்தனர். இந்தியாவில் நடைபெற்றுவந்த ஆங்கிலேய ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வரும் வேலைகளை முன்னெடுக்க லார்ட் மவுண்ட்பேட்டன் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். 14 ஜூன் 1947 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டி பிரிவினை திட்டத்தை ஏற்றுக் கொண்டது. மகாத்மா காந்தியும் அதற்குத் தன் சம்மதத்தை தெரிவித்தார். ஆகஸ்ட் 1947இல் பாகிஸ்தான் மற்றும் இந்தியா என்கிற இரண்டு சுதந்திர நாடுகள் பிறந்தன. ஆகஸ்ட் 14 அன்று முகமது அலி ஜின்னாவை ஜனாதிபதியாகக் கொண்டு பாகிஸ்தான் சுதந்திரம் அடைந்தது, ஆகஸ்ட் 15 அன்று ஜவஹர்லால் நேருவை பிரதமராகக் கொண்டு இந்தியா சுதந்திரம் அடைந்தது.

நிலவியல் ரீதியாக மாகாணத்தின் தமிழ் பகுதியான தமிழ்நாட்டின் இஸ்லாமியர்கள் வெகுதூரத்தில் இருந்தாலும் பாகிஸ்தான் என்னும் சிந்தனையை உடனடியாக ஏற்றுக் கொண்டனர். அதே சமயம் தங்களின் இந்தியத் தன்மையையும், திராவிட அடையாளத்தையும் வெளிப்படுத்தும் வகையில், புதிய இந்தியாவின் ஒரு பகுதியாக அவர்கள் இங்கேயே தங்கினர். முஸ்லிம் லீக் தலைவர் முகமது இஸ்மாயில் (காயிதே மில்லத்), காங்கிரஸ் மற்றும் நண்பர்களுடன் இணைந்து 15 ஆகஸ்ட் 1947 அன்று இந்திய சுதந்திர தினத்தைக் கொண்டாடுமாறு இஸ்லாமியர்களுக்கு அழைப்பு விடுத்தார். "இந்திய சுதந்திர நாள் கொண்டாட்டங்களில் நாம் கட்டாயத்துக்காக கலந்து கொள்ளவில்லை, ஆனால் சுதந்திர இந்திய ஒன்றியத்தின் சுதந்திரக் குடிமக்களாக நாம் அதைக் கொண்டாடுகிறோம்" என்றும் அவர் அறிவித்தார். மாகாணத்தின் அனைத்து நகரங்கள் மற்றும் கிராமங்களில் சுதந்திர தினத்தை இஸ்லாமியர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடினார்கள். மேலும், அமைதி மற்றும் நல்லிணக்கத்துடன் வாழவும், தங்கள் கனவுகளை நனவாக்கவும், 1947க்கு பின்பான இந்தியாவில் முன்னேற்றிச் செல்லவும், தங்கள் அடையாளத்தை உறுதி செய்துகொள்ளவும், புதிய அரசியல் சூழலுக்கு தங்களை தகவமைத்துக் கொண்டார்கள்.

தமிழ்நாட்டின் இஸ்லாமியர்கள் குறித்த மேற்கண்ட சிறு குறிப்புகள் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் அவர்களின் பங்களிப்பை எடுத்துரைக்கின்றன. இந்திய சுதந்திரத்தை அடைய தங்கள் உயிர்களை தியாகம் செய்த இஸ்லாமியர்கள் மற்றும் அவர்களின் தலைவர்கள் குறித்த நீண்ட பட்டியலை ஆவண ஆதாரங்கள் தெளிவுபடுத்துகின்றன. மதுரை மொஹம்மத் மௌலானா, வேலூர் உபயதுல்லா, முஹம்மது இஸ்மாயில் ஜமால் முஹம்மது, காஜாமியான் ராவுத்தர், சையத் முர்தாசா, யாகூப் ஹாசன் சேட், P. கலிஃபுல்லா, ஹாஜி கருத்த ராவுத்தர், ஜஸ்டிஸ் பஷீர் அகமத் சையீது, C. அப்துல் ஹக்கீம், பீர் முகமது பாவலர், S.A. ரஹீம், அப்துல் மஜீத் ஷரார், அப்துல் லத்தீஃப் ஃபாரூக்கி ஆகியோர் அவர்களின் தேச சேவைகளுக்காக அவசியம் குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய இஸ்லாமிய தலைவர்கள் ஆவர்.


வீரமைவர் பாதமாந்தர்
வெல்க ஐக்கியம்
வெல்க சுதந்தியம்!

15

தமிழ்நாடு சட்ட மறுப்பு இயக்கத்தில் ஐரோப்பிய மேட்டுக்குடியினரின் காந்திய ஆதரவு அணுகுமுறை (1930-1932)

டாக்டர் V.வெங்கட்ராமன்
முன்னாள் முதல்வர்
இராஜபாளையம் இராஜீஸ் கல்லூரி

காந்திய வியூகம் இந்திய மக்களிடையே மட்டுமல்ல ஐரோப்பியர்களிடத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்திய மக்களின் உளவியலை அறிந்து கொள்வதற்காக மகாத்மா காந்தி 1915 முதல் 1927 வரை மொத்த தேசத்தையும் உள்ளடக்கிய ஓர் விரிவான பயணத்தை மேற்கொண்டார். மீண்டும் அதே காரணத்திற்காக 1933 முதல் 1934 வரையிலும் மற்றொரு பயணத்தை மகாத்மா காந்தி மேற்கொண்டார். இப்பயணங்களின் மூலம் தேசத்தின் முயற்சிகளை நாம் கண்டிப்பாக ஆதரிக்க வேண்டும் என்று தங்கள் ஆழ்மனங்களில் மக்கள் முறையாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று அவர் அறிந்து கொண்டார். இதனால் எரிச்சலடைந்த ஆங்கிலேயர், தங்களிடமிருந்து தேசத்திற்கு சுதந்திரம் பெற்றுத் தரும் மகாத்மா காந்தியின் வியூகத்தைத் தடுக்கும் நோக்கில் வழக்கம்போல் பல்வேறு விதமான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இருப்பினும், மகாத்மா காந்தியும், சக காங்கிரசாரும் ஆங்கிலேயரின் கொடூரமான அணுகுமுறைகளை கருத்தில் கொள்ளாமல், ஆங்கிலேயருக்கு எதிரான நாட்டு மக்களின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் தங்கள் முழு ஆதரவை மிகத் தீவிரமான முறையில் வழங்கினர்.

சவுரி சவுராவில், 5 பிப்ரவரி 1922 அன்று நடந்த போராட்டத்தில் சத்யாகிரகிகள் வன்முறையில் ஈடுபட்ட காரணத்தால் ஒத்துழையாமை இயக்கம் நிறுத்தப்பட்டது. காங்கிரஸின் முந்தைய இயக்கங்களான சம்பரன், கேதா, அகமதாபாத் சத்தியாகிரகங்கள், ரௌலட் சத்தியாகிரகம் மற்றும் ஒத்துழையாமை இயக்கம் ஆகியவற்றுக்கு இந்தியர்கள் தங்கள் ஆதரவை அளித்தது போன்றே ஒத்துழையாமை இயக்கம் நிறுத்தப்பட்ட பின்னரும் தங்கள் ஆதரவைத் தொடர்ந்தனர். மகாத்மா காந்தி, காங்கிரஸ் கட்சியின் மற்ற மூத்த தலைவர்களை கலந்தாலோசிக்காமல் ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தியதோடு, காங்கிரஸ் தொண்டர்கள் சவுரி சவுராவில் நிகழ்த்திய குற்றத்திற்கு தானே பொறுப்பேற்பதாக அறிவித்தார். இச்சம்பவம் மகாத்மா காந்தியின் கைதுக்கு வித்திட்டது. இந்தியா முழுவதும் முன்னெடுக்கப்பட்ட மகாத்மா காந்தியின் அப்பெரும் மக்கள் இயக்கம் திடீரென முடிவுக்கு வந்தது. மகாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்திய காலகட்டத்தில் தான் 'அகிம்சை' என்னும் சொல் ஓர் மந்திர உச்சரிப்பு போல் ஆனது; பெரும்பான்மையான இந்தியர்களால் அது மனதார ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஜனவரி 1923இல் சுயராஜ்ய கட்சியை தோற்றுவித்த C.R. தாஸ், அவ்வியக்கம் முன்கூட்டியே முடிக்கப்பட்டதை எதிர்த்தார். ஆயினும், பெரும்பான்மை இந்திய மக்கள் மகாத்மா காந்தியை ஆதரித்தனர். மகாத்மா காந்தி 1924இல் விடுதலை செய்யப்பட்ட பின்பு, ஆக்கபூர்வமான திட்டங்களில் தன் கவனத்தை செலுத்தி அவற்றிற்கு ஆதரவு திரட்ட இந்தியா முழுதும் பயணித்தார்.

இந்திய தேசிய காங்கிரஸின் டிசம்பர் 1929 லாகூர் அமர்வில் மகாத்மா காந்தி பங்கேற்றபோது அவருடைய அரசியல் சித்தாந்தத்தில் ஏற்பட்டிருந்த முக்கிய மாற்றம் கண்கூடாகத் தெரிந்தது. தேசம் முழுவதற்குமான மற்றொரு ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்க வேண்டும் என்னும் நேரு மற்றும் சுபாஷ் சந்திர போஸ் போன்ற இளம் காங்கிரஸ் தலைவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை மகாத்மா காந்தி ஏற்றார். ஆனால், மகாத்மா காந்தியின் எதிர்பார்ப்பிற்கு லார்ட் இர்வின் எந்த ஒரு மாற்றத்தையும் வெளிப்படுத்தவில்லை. டிசம்பர் 1929 லாகூர் காங்கிரஸ் அமர்வில் முடிவெடுத்தது போன்று மகாத்மா காந்தி, தனது புதிய திட்டத்தின் தொடக்கமாக சட்ட மறுப்பு இயக்கத்தை அறிவித்தார்.

அத்தருணத்தில், 1930ஆம் ஆண்டின் 26 ஜனவரியை சுதந்திர தினமாக கொண்டாடுமாறு காங்கிரஸ் கட்சியினருக்கு வேண்டுகோள் விடுத்தார்; மேலும் அவர் தனது 11அம்ச திட்டத்தையும் அறிமுகம் செய்தார். மகாத்மா காந்தியின் 11 அம்சத் திட்டம் இந்திய பத்திரிகைகளில் மட்டுமல்ல, ஆங்கிலேயப் பத்திரிகைகளிலும் ஓர் பெரும் ஆத்திரப் புயலை உண்டாக்கியது. பிப்ரவரி 1930இல் சட்ட மறுப்பு இயக்கத் திட்டத்தை வடிவமைக்க காங்கிரஸ் காரிய கமிட்டி சபர்மதி ஆசிரமத்தில் கூடியது. "சட்ட மறுப்பு, சில சமயம் அன்பின் மீதான முன்கூட்டிய கோரிக்கையாக இருக்கக்கூடும். அது மட்டுமே, வன்முறை என்னும் தீயை சிதைக்கத்தக்க, ஆத்மாவிற்கான ஒரே வன்முறையற்ற தப்பித்தல்," என்றார் மகாத்மா காந்தி. இந்தியா மீதான ஆங்கிலேயரின் இக்கொடிய ஏகபோகத்தை முடிவுக்குக் கொண்டு வரக்கூடிய சில முறைகள் குறித்து மகாத்மா காந்தி ஆழமாக சிந்தித்து வந்தார்.

அதே காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டத்தில், ஒத்துழையாமை இயக்கத்திற்கான அடையாளத் திட்டமாக, தனது 11 அம்சங்களின் அடிப்படையில், 'உப்பு சத்தியாகிரகம்' திட்டத்தை மகாத்மா காந்தி அறிவித்தார். உப்புக்கு வரி விதிக்கும் ஆங்கிலேயரின் புதிய கொள்கைக்கு எதிராக அவ்வியக்கத்தை தொடங்க மகாத்மா காந்தி முடிவு செய்தார். சபர்மதி ஆசிரமத்திலிருந்து 200 மைல்களுக்கு அப்பால் உள்ள தண்டி என்னும் கிராமத்தின் கலங்கரை விளக்கத்தை உப்பு சட்டத்தை மீறும் போராட்டக் களமாக மகாத்மா காந்தி தேர்ந்தெடுத்தார், தற்போது அது ஓர் கைவிடப்பட்ட கடற்கரை கிராமமாக உள்ளது.

பஞ்சாப், குஜராத், மகாராஷ்டிரா, உத்தரப்பிரதேசம், கட்ச், சிந், கேரளா, ராஜபுதனம், ஆந்திரப் பிரதேசம், கருநாடகா, தமிழ்நாடு, பிஹார், வங்காளம், நேபால் மற்றும் ஃபிஜி ஆகிய இடங்களிலிருந்து வந்த விண்ணப்பங்களை கவனமாக ஆய்வு செய்து, இறுதியாக 79 சத்தியாகிரகிகளை மகாத்மா காந்தி தேர்ந்தெடுத்தார். அவர் தேர்ந்தெடுத்த 79 தன்னார்வலர்களில் இரண்டு பேர் இஸ்லாமியர்கள், ஒருவர் கிறிஸ்தவர், ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த இருவர் உட்பட மற்றவர் அனைவரும் இந்துக்கள். இப்படையுடன், 11 மார்ச் 1930 அன்று, 'தண்டி யாத்திரை' என்ற தன் புகழ்பெற்ற சத்தியாகிரக யாத்திரையை மகாத்மா காந்தி தொடங்கினார். தண்டி கடற்கரையை அடையும் வரை மக்கள் வழிநெடுக சத்தியாகிரகிகளை அன்புடன் வரவேற்றார்கள். அவர்கள், 5 ஏப்ரல் 1930 அன்று தண்டி சென்றடைந்தனர். தனது 79 தொண்டர்களுடன் 6 ஏப்ரல் 1930 அன்று கடற்கரையை அடைந்து கடலுக்குள் மூழ்கி எழுந்து சரியாக மாலை 6.30 மணிக்கு ஓர் சிறிய குழியில் இருந்த இயற்கை உப்பை கைகளால் அள்ளி, மகாத்மா காந்தி உப்பு சட்டத்தை மீறினார். இவ்வாறே, சட்ட மறுப்பு இயக்கத்தை சத்தியாகிரகிகளுடன் அதிகாரப்பூர்வமாக மகாத்மா காந்தி தொடங்கினார்.

மகாத்மா காந்தி உப்பு சட்டத்தை மீறிய பின்னர், உப்பு சட்டத்தின் கீழான வழக்கை எதிர்கொள்ளக்கூடிய ஒவ்வொரு இந்தியனும், அவரவர் பகுதிகளில் உப்பு தயாரிக்கலாம் என்று அறிவித்தார். மகாத்மா காந்தியின் இந்த முக்கிய வேண்டுகோளை ஏற்று, மக்கள் அனைவரும் ஒன்றுபோல தெளிவாக செயல்பட்டனர். மதராஸ் மாகாணத்தில் உப்பு யாத்திரைகள், ஆந்திர பிரதேச காங்கிரஸ் கமிட்டியால் 22 ஏப்ரல் 1930 அன்று மெரினா கடற்கரையில் ஒருங்கிணைக்கப்பட்டன. மேலும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ராஜகோபாலச்சாரி தலைமையில் காந்திய வழியைப் பின்பற்றி, தமிழ்நாடு முழுவதிலுமிருந்து 100 பேரை தேர்ந்தெடுத்து 13 ஏப்ரல் 1930 அன்று திருச்சியில் தொடங்கி வேதாரண்யம் வரையிலான 180 கிலோமீட்டர் உப்பு யாத்திரையை ஒருங்கிணைத்தது. போராட்டக்காரர்கள் 28 ஏப்ரல் 1930 அன்று வேதாரண்யத்தை சென்றடைந்தனர்.

ஆந்திரா காங்கிரஸ் தலைவர்கள் T.பிரகாசம் மற்றும் K. நாகேஸ்வர ராவ் ஆகியோர் 27 ஏப்ரல் 1930 அன்று மதராஸ் மெரினா கடற்கரையில் உப்பு தயாரித்த போது கைது செய்யப்பட்டனர். ராஜகோபாலச்சாரியும் மற்ற முக்கியத் தலைவர்களும் 29 ஏப்ரல் 1930 அன்று வேதாரண்யத்தில் உப்பு சட்டத்தை மீறிய போது கைது செய்யப்பட்டனர். இதன் காரணமாக, 1 ஏப்ரல் முதல் 30 டிசம்பர் 1930 வரை மதராஸ் மாகாணத்தில் ஆங்கிலேயர் 16 முறை பொதுமக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர்; இவற்றில் 13 சம்பவங்கள் தமிழ்நாட்டில் நடந்தவை. மேற்கண்ட இரண்டு உப்பு சத்தியாகிரக முகாம்களை சேர்ந்த போராட்டக்காரர்கள் ஆங்கிலேய காவல்துறையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

மகாத்மா காந்தியின் உப்பு சத்தியாகிரகத்திற்கு பின்பு சட்ட மறுப்பு இயக்கத்தின் ஒரு பகுதியாக புறக்கணிப்பு திட்டங்கள் தொடங்கப்பட்டன. இந்தியா முழுவதும் ஆயிரக்கணக்கான மக்கள் தாங்களே முன்வந்து காங்கிரஸ் தன்னார்வலர்களாக பதிவு செய்துகொண்டு புறக்கணிப்புப் போராட்டங்களில் தீவிரமாகப் பங்கேற்றனர். மகாத்மா காந்தியின் 11 அம்ச திட்டத்தின் அடிப்படையில் இயக்கத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முடிவு செய்ய காங்கிரஸ் காரிய கமிட்டி 30 ஜூலை முதல், 1 ஆகஸ்ட் 1930 வரை பம்பாயில் ஒன்று கூடியது. நாட்டின் சொந்த மக்களைத் தவிர்த்து, காந்திய முயற்சிகளில் சில ஐரோப்பிய மேட்டுக்குடியினர் தங்களின் ஆங்கிலேயப் பத்திரிகைகள் மூலமாகவும், பிரித்தானிய நாடாளுமன்ற நடவடிக்கைகள் மூலமாகவும், பிரித்தானிய இந்தியாவில் ஏற்பட்ட சில அரசியல் நிகழ்வுகளில் பங்கெடுத்தனர். இந்திய ஆதரவு

இயக்கமான 'இந்தியா லீக்' உதவியுடன் தனிப்பட்ட முறையில் இந்தியாவிற்கு வருகை தந்து 1930 முதல் 1932 வரையிலான அரசியல் நடவடிக்கைகளை பார்வையிட்ட அவர்கள், இந்தியர்களுக்கு தங்கள் ஆதரவை அளிக்க விரும்பினர்.

ஆங்கிலேய ஆதரவின் ஆரம்ப கட்டம்

ஒத்துழையாமை இயக்கத்திற்குப் பின்னர், மகாத்மா காந்தியின் அகிம்சை போராட்டங்களால் ஈர்க்கப்பட்ட ஒத்த கருத்துடைய ஆங்கிலேய மேட்டுக்குடியினர் தாங்களே முன்வந்து இந்தியாவிற்கு வருகை புரிந்து சபர்மதி ஆசிரமத்தில் அவரை பிரத்யேகமாக சந்தித்தனர். மீராபென் மற்றும் ரெஜினால்ட் ரெனால்ட்ஸ் ஆகிய இருவரும் மகாத்மா காந்தியை ஆதரித்த ஆங்கிலேய மேட்டுக்குடிகளில் முன்னோடிகள் ஆவர். தண்டி யாத்திரைக்கு மகாத்மா காந்தி 79 சத்தியாகிரகிகளை தேர்ந்தெடுத்த போது மீராபென் மற்றும் ரெஜினா ரெனால்ட்ஸ் இருவரும் அந்த முதல் 79 பேர் குழுவில் இடம் பெற விரும்பினார்கள். ஆங்கிலேய மேட்டுக்குடியினரின் சத்தியாகிரக யாத்திரைகளில் பங்கேற்பதற்கான தொடர் ஆர்வமும், ஆதரவும் குறுகிய காலத்திற்கானதாகவே இருந்தது. அவ்விரு பெண்மணிகளும் தொடர்ந்து மகாத்மா காந்தியை வற்புறுத்தினாலும், அவ்விருவரையும் சத்யாகிரகிகளின் முதல் பட்டியலில் இணைத்துக்கொள்ள அவர் மறுத்துவிட்டார். அரசியல் சூழலை முன்கணித்த மகாத்மா காந்தி, அவர்களை முதல் தொகுதியில் சேர்த்துக்கொள்ள "முடியாது" என்று கூறிவிட்டார். உங்களுக்கு இதைவிட பெரும் புனிதப்பணி இருக்கின்றது. இதைக்காட்டிலும் ஓர் பெருந்தவத்தை இங்கிலாந்தில் பிறந்த உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன். அது, துன்பத்தை விரும்பி அழைக்கும் ஆசையை மறந்து விட்டு நீங்கள் ஆசிரமத்திலேயே தங்கியிருந்து அதன் அத்தனை நடவடிக்கைகளிலும் உதவ வேண்டுமென்று நான் விரும்புகிறேன்."

மீரா பென்னும், ரெஜினால்டும் அதன் பின்னர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளுமாறு மகாத்மா காந்தியை வற்புறுத்தவில்லை. அவர்கள் இருவரும் 1920களின் பிற்பகுதியில் காந்திய முயற்சிகளில் அவருக்கு மிக நெருக்கமான கூட்டாளிகளாக இருந்த போதும், மகாத்மா காந்தியின் முடிவை மதித்து அவர் தண்டி யாத்திரையில் ஈடுபட்டிருந்தபோது ஆசிரமத்திலேயே அமைதியாக தங்கியிருந்தனர். பிறகு அவர்கள் அடிக்கடி வந்து ஆசிரமத்தின் மற்ற பல முக்கிய விருந்தினர்களோடு தங்கி அளவளாவியதோடு, மகாத்மா காந்தியின் அனைத்து புறக்கணிப்பு போராட்டங்களுக்கும் ஆக்கப்பூர்வமான திட்டங்களுக்கும் தங்கள் ஆதரவை அளித்தனர். சிறையிலிருந்து வெளிவந்த பின் மகாத்மா காந்தி மீரா பென்னை தனது நெருக்கமான சீடர்களில் ஒருவராக ஏற்றுக்கொள்ள, அவரும், மகாத்மா காந்தியை மிகுந்த அக்கறையுடன் கவனித்துக் கொண்டார். அதன் பின்னர், 30 ஜனவரி 1948இல் காந்தி டெல்லியில் மரணிக்கும் வரை அவருடைய அத்தனை பயணங்களிலும், நிகழ்ச்சிகளிலும் மீராபென் உடன் இருந்தார்.

ஐரோப்பிய மேட்டுக்குடியினரும், காந்திய அனுதாபமும்

லாகூர் காங்கிரஸ் அமர்வு சட்ட மறுப்பு இயக்கத்தை தலைமை தாங்கும் அதிகாரத்தை மகாத்மா காந்திக்கு வழங்கியது. மகாத்மா காந்தி முன்மொழிந்த சட்ட மறுப்பு இயக்கத்தின் மூலமான 'முழுமையான சுதந்திரம்' அல்லது 'பூர்ண ஸ்வராஜ்' என்னும் தீர்மானத்தை குறித்த செய்திகளை ஆங்கிலேயப் பத்திரிகைகள் விரிவாக வெளியிட்டன.

மகாத்மா காந்தி முன்னெடுத்து நடத்தும் அவ்வியக்கத்தின் ஒட்டுமொத்த போக்கையும் முழுமையாகப் பின்தொடர்ந்து ஆவணப்படுத்துமாறு பிரித்தானிய ஒளிபரப்பு நிறுவனம் (BBC) தனது அதிகாரிகளை வலியுறுத்தியது. அந்நிறுவனத்தின் குழு, அகிம்சை

என்னும் காந்திய சித்தாந்தத்தின்மீது அனுதாபம் கொண்ட, சபர்மதி ஆசிரமத்திற்கு அடிக்கடி சென்று மகாத்மா காந்தியின் தேசியவாத நடவடிக்கைகளில் அவருடன் நின்ற, இந்தியஆதரவு ஆங்கிலேய அரசியல்வாதிகளால் வழிநடத்தப்பட்டது. பின்னர் அக்குழு, மகாத்மா காந்தி குறித்தும், காந்திய திட்டங்கள் குறித்தும் இந்திய மண்ணிலிருந்து தாங்கள் சேகரித்த அத்தனை தகவல்களையும் ஆங்கிலேயப் பத்திரிகைகள், ஆங்கிலேய வானொலி, மற்றும் ஆங்கிலேய நாடாளுமன்றத்தின் மூத்த உறுப்பினர்கள் ஆகியோருக்கு உடனுக்குடன் அனுப்பி வைத்தது.

ஆங்கிலேய அரசியல்வாதிகளின் காந்திய ஆதரவு முயற்சிகளைத் தவிர்த்து, சில அறிவு ஜீவிகள், கிறிஸ்தவ மதபோதகர்கள், மற்றும் ஆங்கிலேய அரசு சாரா உதவி நிறுவனங்கள் ஆகியோர் மகாத்மா காந்தியும், காந்தியத் தொண்டர்களும் இந்தியா முழுவதும் முன்னெடுத்த புறக்கணிப்புப் போராட்டங்களில் அந்தந்த நகரங்களுக்கே நேரடியாகச்சென்று அவற்றில் பங்கெடுத்து காந்திய முயற்சிகளுக்கு தங்கள் ஆதரவை நல்கினர். ஆதரவளித்த ஐரோப்பிய மேட்டுக்குடியினர் இங்கிலாந்திலிருந்து மட்டும் வந்தவர்களல்ல, ஸ்காட்லாந்து மற்றும் அயர்லாந்தில் இருந்தும் பலர் வந்திருந்தனர். மேற்கண்ட நாடுகளிலிருந்து வந்த ஐரோப்பிய மேட்டுக்குடியினர், அடிப்படையில் அமைதி விரும்பும் மக்கள் ஆவர்; பம்பாய், கல்கத்தா, புதுடெல்லி மற்றும் மதராஸ் போன்ற இந்திய நகரங்களுக்கும், மதராஸ் மாகாணத்தின் உள்நகரங்களுக்கும் பயணித்தனர்.

இந்திய மகளிர் சங்கத்தின் முயற்சிகள்

இந்திய மகளிர் சங்கம், மதராஸின் 20 முக்கியப் பெண்மணிகளுடன், தாராபாய் அவர்களின் தலைமையில் மதராஸின் கோக்கலே அரங்கத்தில் 21 மே 1930 அன்று ஓர் அரசியல் பொதுக்கூட்டத்தை ஒருங்கிணைத்தது. கூட்டத்தில் ஏறக்குறைய 200 பேர் கலந்து கொண்டனர்.

மார்கரெட் எலிசபெத் கசின்ஸ் மற்றும் திருமதி ஹிதாவுத் ஆகிய இருவரும் இக்கூட்டத்தின் முக்கியப் பேச்சாளர்களாக இருந்தனர். கூட்டத்தின் தொடக்கத்தில், அடுத்து வரவிருக்கும் வட்டமேசை மாநாட்டில் இந்தியாவில் அமைதியும், நல்லெண்ணமும் திரும்புவதற்கான முதல் முக்கியப் படியாக தன்னாட்சி அந்தஸ்து பெற்ற நாடாக இந்திய அரசியல் அமைப்பை வடிவமைக்க வேண்டும் என ஆங்கிலேய அரசையும், அப்போதைய இராஜப் பிரதிநிதியான லார்ட் இர்வினையும் வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருமதி கசின்ஸ் பேசியபோது, ஆங்கிலேய அதிகாரிகள் காங்கிரஸ் கூட்டங்களை தடை செய்த செயல்களையும் மகாத்மா காந்தி உட்பட்ட மற்ற பல காங்கிரஸ் தலைவர்களை சிறையில் அடைத்ததன் மூலம் இந்திய மக்களுக்கு முக்கியமான நேரத்தில் கிடைக்க வேண்டிய ஆலோசனைகளை கிடைக்க விடாமல் தடுத்ததையும் கண்டனம் செய்து, இவையெல்லாம் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு பொருத்தமான செயல்கள் அல்ல என்றார். மேலும் அவர், எந்த நாடும் மற்றோர் அந்நிய நாட்டின் ஆதிக்கத்தின்கீழ் இருக்கக்கூடாது என்றார். சட்டப்படி தனக்கு சொந்தமான எந்த ஒன்றும் மறுக்கப்பட்டால் எந்த ஒரு நாடும் அதை ஏற்றுக் கொள்ளாத வகையில் தான் உலகின் தற்போதைய நிலை உள்ளது. தன்னுடைய அதிகாரத்தையும், தன்னை தானே ஆட்சி செய்து கொள்ளும் உரிமையையும் இந்தியா கேட்கிறது என்றார் திருமதி கசின்ஸ்.

மேலும் திருமதி கசின்ஸ் கூறுகையில், மற்ற நாடுகள் இரத்தம் சிந்த வேண்டிய நிலையில் உள்ளன, ஆனால் தனது தலைவர்களின் ஆன்மீக சக்திகள் காரணமாக

இந்தியாவிற்கு அத்தகைய பயங்கரங்களுக்கான அவசியம் இல்லை; இந்தியாவுக்கு தன்னாட்சி அளிப்பதன் மூலம் இங்கு நிலவும் பதட்டத்தையும், நல்லெண்ண குறைவையும் ஆங்கிலேய அரசு போக்கும் என்று தான் நம்புவதாக கூறினார். திருமதி கசின்ஸ் 1915இல் தனது கணவர் டாக்டர் கசின்ஸ் அவர்களுடன் இந்தியா வந்து மதராஸின் அடையாரில் தங்கினார்; பின்னர் அவர் அன்னி பெசன்ட் அம்மையாரின் தன்னாட்சி இயக்கத்துடனும் பிரம்மஞான சபையுடனும் தன்னை இணைத்துக் கொண்டார். அயர்லாந்து நாட்டிலிருந்து வந்த டாக்டர் கசின்ஸ், தன் மனைவியை மதராசில் தங்க அனுமதித்துவிட்டு அயர்லாந்து சென்றபோதும், இந்தியாவை தன் தாய்நாடாகக் கருதியதால், சில காலத்திலேயே இந்தியா திரும்பினார்.

மார்கரெட் கசின்ஸ் அவர்களின் உரைகளை மதராஸ் மக்கள் மிகவும் வரவேற்றனர். இந்திய மகளிர் சங்கம் 30 மே 1930 அன்று மற்றொரு கூட்டத்தை மதராசின் மயிலாப்பூரில் உள்ள ரானடே கூடத்தில் ஒருங்கிணைத்தது. சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்ட திருமதி கசின்ஸ் அன்று சுதேசி கருத்தியலைக் குறித்து உரையாற்றினார். தனது உரையில், இந்தியாவிற்கு தன்னாட்சியை அதன் முழு அம்சங்களுடன் வழங்க வேண்டும் என்றும், காங்கிரஸ் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ள வரை, சமரசத்திற்கு சாத்தியமில்லை என்றும் அவர் கூறினார். மேலும், அனைத்து காங்கிரஸ் சிறைவாசிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என்று ஆங்கிலேய அரசிற்கு வேண்டுகோள் விடுத்த அவர், இங்கிலாந்தின் உண்மையான எண்ணத்தை வெளிப்படுத்துவதில் முதற்படியாக அது அமையும் என்றார்.

சுதேசியை செயல்படுத்துவது ஒன்றே இந்தியாவின் நிதி இந்தியாவை விட்டு வெளியேறுவதைத் தடுப்பதற்கும் இங்கிலாந்து இந்தியாவின்மீது கொண்டிருக்கும் இரும்புப் பிடியைத் தளர்த்துவதற்கும் நிச்சயமான வழி என்று திருமதி கசின்ஸ் தெரிவித்தார். இங்கிலாந்தில் உள்ள பலர் இந்தியா மீது முழுமையான அனுதாபம் கொண்டிருக்கிறார்கள், இந்தியாவின் கோரிக்கை நிறைவேற்றப்பட இங்கிலாந்தில் அதற்கு சரியான பிரதிநிதித்துவம் மட்டுமே இப்போது வேண்டும். தன்னாட்சி இயக்கத் தொண்டர்களும் மாகாணத்தின் உள்ளார்ந்த தமிழ் பகுதிகளை சேர்ந்த காங்கிரசாரும் திருமதி கசின்ஸ் சட்டமறுப்பு இயக்கத்தின்போது மேற்கொண்ட பயணங்களை பயன்படுத்திக்கொள்ள விரும்பினர். திருப்பூர் காங்கிரஸ் கமிட்டி திருமதி கசின்ஸ் அவர்களை சுதேசி உரைகளை நிகழ்த்த அழைப்பு விடுத்தது. மதராஸ் இளைஞர் கூட்டமைப்பு சார்பாக ஜூன் 1930இன் இரண்டாம் வாரத்தில் திருப்பூரில் நடத்தப்பட்ட கூட்டத்திற்கு விசாலாட்சி அம்மாளுடன் திருமதி கசின்ஸ் சென்றார். திருப்பூரைச் சுற்றியுள்ள பல்வேறு இடங்களில் 1930 ஜூன் 13 முதல் 15 வரை பல தொடர் சுதேசி கூட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டன. திருப்பூர் ஸ்பென்சர் கட்டிடத்தில் 14ஆம் தேதி மாலை 6.45 மணிக்கு நடைபெற்ற அரசியல் பொதுக்கூட்டத்திற்கு நாமியா ஷம்பூர், திருமதி கசின்சை அழைத்தார். அக்கூட்டம் குறித்த தகவல்களை மத்திய புலனாய்வுத்துறை அதிகாரிகள் மாவட்ட ஆட்சியரிடம் தெரிவித்தபடி இருந்ததால், கூட்டம் நடக்கும் இடத்திற்கு திருமதி கசின்ஸ், சரஸ்வதி அம்மாள், அனுமந்தராவ், மற்றும் விசாலாட்சி அம்மாள் ஆகியோருடன் இரகசியமாக வந்தடைந்தார்.

அந்த ஞாயிற்றுக்கிழமை நடக்கவிருக்கும் கூட்டத்தை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு மதராசின் மாவட்ட ஆட்சியாளர் உள்ளூர் அதிகாரிகளுக்கு தந்தி மூலம் தெரிவித்தார். ஆங்கிலேய அரசுக்கு எதிரான சுதேசி இயக்கத்தின் செயல்பாட்டை அனுமதிக்கும் நோக்கில் தந்தி இருந்தாலும் மாவட்ட ஆட்சியரின் பார்வையில் அங்கு நடக்கும் நிகழ்வுகள் ஆட்சேபகரமானதாக இருந்தன.

அன்று நடக்கவிருந்த கூட்டம் தடுத்து நிறுத்தப்பட்டாலும் திருமதி கசின்ஸ் தன் பிரச்சாரங்களால் இந்திய மகளிர் சபையின் கிளைகளை தட்டியெழுப்பி, அவர்களின் விரிவான தகவல் பரிமாற்றங்கள் மூலம் அவர்களால் இயன்ற பங்களிப்பைச் செய்ய வைத்தார். இந்திய மகளிர் சபை எப்போதும் சுதேசியை ஆதரிப்பதாக அவர் தெளிவாக தெரிவித்தார். மேலும் அவர், உப்பு சத்தியாகிரக போராட்டத்தில் 24 ஏப்ரல் 1930 அன்று மதராசில் கைது செய்யப்பட்டு தண்டனை அளிக்கப்பட்ட சங்கத்தின் முக்கிய தலைவர்களான கமலா தேவி மற்றும் துர்காபாயை பாராட்டிப் பேசினார்.

மதராஸ் சுதேசி கூட்டமைப்பின் பொதுக்கூட்டம்

குற்றப்புலனாய்வுத்துறையின் சிறப்புப் பிரிவு அதிகாரி, மதராசின் கோக்கலே அரங்கத்தில், 5 ஜூலை 1930 அன்று மதராஸ் சுதேசி கூட்டமைப்பு மற்றும் பெண்கள் சுதேசி கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் திருமதி கசின்ஸ் நிகழ்த்திய உரை குறித்த ரகசிய அறிக்கையை மதராஸ் அரசின் தலைமைச்செயலாளருக்கு அனுப்பினார். தற்கால சூழலுக்குத் தேவையான காந்திய கொள்கைகளான 'கதர்' மற்றும் 'புறக்கணிப்பு' ஆகியவற்றை ஆதரித்து திருமதி கசின்ஸ் பேசியதாக அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. சுதேசி உடைகளை அணிவதே ஆங்கிலேயரின் பொருளாதாரக் கொள்கைக்கு எதிரான ஒரே தீர்வு என்று அவர் வலியுறுத்தினார்.

"பல ஆயிரம் ஆண்டுகளாக, இந்நாட்டின் மக்களுக்கு தங்களின் எந்தவொரு தேவைக்கும், அது உணவு, உடை என்று எதுவாக இருந்தாலும், இந்தியாவைவிட்டு வெளியே செல்லும் அவசியம் இருந்ததே இல்லை என்பதை இந்திய பெண்கள் நன்கறிவார்கள்." சுதேசி ஓர் அரசியல் விவாதப் பொருள் என்று சிலர் கூறியபோது அவர் திட்டவட்டமாக மறுத்தார். "அரசியல் சார்ந்த, அரசியலற்ற, மதம் சார்ந்த, மதச்சார்பற்ற என்று வேறுபடுத்துவதே ஒட்டுமொத்தமாகத் தவறு. இவை மக்களின் இன்றியமையாத தேவைகளை பாதிக்கும், குறிப்பாக, வாழ்க்கை ஓட்டம், ரத்தவோட்டம் போன்ற மக்களின் சொந்த ஜீவாதாரங்களையும் அவர்களின் அபிவிருத்தி மற்றும் சக்தியை பாதிக்கும் ஒவ்வொரு சிறிய விஷயத்தையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும். மேலும் அவர்கள் தங்கள் சொந்தத் தயாரிப்பு உடைகளை அணிவது அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும்" என்றார் கசின்ஸ்.

மேலும், வருடத்திற்கு ரூ.63 கோடி மற்றொரு நாட்டிற்கு செல்கிறது, இந்தியர்களை வளப்படுத்துவதற்கு பதிலாக வேற்றுநாட்டை வளப்படுத்துகிறது என்று அவர் கூறினார். ரூ.63 கோடிகளை வைத்துக்கொண்டு அவர்கள் என்ன செய்வார்கள்? தங்கள் தேவைகளுக்காக ஆங்கிலேய அரசை எதிர்பார்த்திராமல், இந்தியர்கள் சிறந்த கல்வி மற்றும் சுகாதாரச் சேவைகளை அதன் மூலம் பெறலாம். கசின்ஸ் இங்கு இருந்ததற்கு முக்கியக் காரணம், ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த இலட்சக்கணக்கான மக்களின் அனுதாபத்தையும் வாழ்த்துக்களையும் இந்திய மக்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்பதே ஆகும். இந்திய நாட்டின் சுயமரியாதை, சுய அறிவு மற்றும் சுய கட்டுப்பாடு போன்ற கொள்கைகளின்மீது அமெரிக்க மக்கள் கொண்டிருந்த அனுசரணையை அவர் மிகவும் பாராட்டினார். சமூக, பொருளாதா, அரசியல் சார்ந்தும், தார்மீக மற்றும் ஆன்மீக ரீதியிலும் இந்தியா விடுதலை பெறுவதற்கான காந்திய இயக்கங்களுக்கு தன் முழு ஆதரவையும் அவர் அளித்தார். தன் உரையின் இறுதியில், சட்ட மறுப்பு இயக்கத்தில் தீவிரமாகப் பங்கேற்குமாறு இந்தியர்களுக்கு அவர் வெளிப்படையாக அழைப்பு விடுத்தார்.

காந்தி பிறந்தநாள் கொண்டாட்டம்

மதராஸ் மகாஜன சபா, இளைஞர் கூட்டமைப்பு, பெண்கள் சுதேசி கூட்டமைப்பு, மற்றும் மதராஸ் சுதேசி கூட்டமைப்பு ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் 2 அக்டோபர் 1930 அன்று மகாத்மா காந்தியின் பிறந்த நாளைக் கொண்டாட மதராஸின் கோக்கலே அரங்கத்தில் ஓர் பொதுக்கூட்டம் ஒருங்கிணைக்கப்பட்டது. மேற்கண்ட நிறுவனங்கள் மற்றும் மதராஸ் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி ஆகியவற்றைச் சேர்ந்த 250 பிரதிநிதிகள் அத்தருணத்தில் கூடியிருந்தனர்.

மகாத்மா காந்தி குறித்தும் அவருடைய திட்டம் குறித்தும் திருமதி கசின்ஸ் விரிவாக உரையாற்றினார். மகாத்மா காந்தி உலகின் புனித மனிதராக உலகெங்கும் கருதப்படுகிறார். "மகாத்மா காந்தி இந்தியாவுக்கான விடுதலையை மட்டும் கோரவில்லை, உலகெங்கிலும் நடக்கும் ஒவ்வொரு சண்டையையும், மோதலையும் தீர்ப்பதற்கான வழியாக, வன்முறை மற்றும் வன்மையின்மீது கொண்டிருக்கும் நம்பிக்கை என்னும் பெருஞ்சுமையிலிருந்து ஒட்டுமொத்த உலகிற்குமான விடுதலையை அவர் கோருகிறார். அவர்கள் (இந்தியர்கள்) அகிம்சை என்னும் காந்தியக் கொள்கையை கண்டிப்பாக கடைபிடிக்கத் தொடங்கினால், விரைவில் இந்தியாவை மொத்த உலகிற்கும் எடுத்துக்காட்டாக மாற்றி விடுவார்கள்; அதில் இனி போர் என்ற பேச்சுக்கே இடமில்லாத ஓர் புதிய அமைப்பு உருவாகியிருக்கும்.

சுதந்திரமான மக்கள் குறித்து பேசுகையில், "தங்கள் மனசாட்சிப்படி நடந்து கொண்ட ஒரே காரணத்திற்காக தற்போது சிறையில் உள்ள 30,000 ஆண், பெண்கள் குறித்து என்னால் நினைக்காமல் இருக்க முடியவில்லை. இன்று மாலை, இங்கு கூடியிருந்த மக்களின் அன்பு தங்கள் தாய் நாட்டின் விடுதலைக்காக தியாகங்கள் செய்த அவர்களை கண்டிப்பாக சென்றடைந்திருக்கும்" என்றார்.

திருமதி கசின்ஸ் அவர்களின் தொடர் முயற்சிகள் மற்றும் உண்மையான பங்களிப்புகள் குறித்து கேள்வியுற்ற மதராஸ் மாகாணத்தின் காங்கிரஸ் தலைவர்கள், அவரை தங்கள் பகுதிகளுக்கு அழைக்க விரும்பினர். சுதேசி உரைகளை ஆற்ற ஆந்திர பிரதேசம், தமிழ்நாடு, மற்றும் மலபார் பிரதேசங்களிலிருந்து திருமதி கசின்ஸ் அவர்களுக்கு எண்ணிலடங்கா அழைப்புகள் வந்தன. திருமதி கசின்ஸின் இத்தகைய அரசியல் நடவடிக்கைகள் மதராஸ் அரசின் தலைமைச் செயலரால் தொடர்ந்து கவனிக்கப்பட்டதோடு, மதராஸ் மாகாணத்தில் அவர் மேற்கொண்ட இந்திய ஆதரவு முயற்சிகளுக்கு தடை போடும் விதமாக அவருக்கு நீதிமன்ற அழைப்பு அனுப்பப்பட்டது.

திருமதி கசின்ஸ் காங்கிரஸ் மற்றும் பிரதேசத் தலைவர்களுடன் கொண்டிருக்கும் தகவல் தொடர்புகளை துண்டிக்க நினைத்த மதராஸ் அரசு, இந்திய மகளிர் சங்கம், பேந்தியன் கார்டன்ஸ், எக்மோர், மதராஸ் அல்லது எண்.15, லீஸ்பீட்டர்ஸ் சேம்பர்ஸ், அடையார், மதராஸ் என்கிற இரண்டு இடங்களிலும் வசிக்கிற திருமதி கசின்ஸ் அவர்களின் கடிதப் பரிமாற்றங்களை இடைமறிக்கும் ஓர் ஆணையைப் பிறப்பித்தது. பொதுத்துறை, 14 அக்டோபர் 1930 தேதியிட்ட அரசாணை எண்16 கூறியதாவது, மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்திய தபால் அலுவலக சட்டம், 1898 பிரிவு26(1)இன்கீழ் ஆளுநரின் அறிவுரையின் பெயரில் திருமதி கசின்ஸ் மற்றும் இந்திய மகளிர் சங்க அலுவலகத்திலிருந்து செல்லும் மற்றும் அலுவலகத்திற்கு வரும் அனைத்து கடிதப் பறிமாற்றங்களும் ஓராண்டுக்கு இடைமறிக்கப்பட்டு, அவை காவல்துறை டிஐஜியின் உதவியாளர் மற்றும் மதராசின் இரயில்துறை மற்றும் குற்றப்புலனாய்வுத்துறை ஆகியவற்றின் உதவியாளர்களுக்கும் உடனடியாக அனுப்பி வைக்கப்படும்.

மதராஸ் அரசின் தலைமைச் செயலாளர் அறிவித்த இந்த தடுப்பாணை குறித்து அறிந்திராத திருமதி கசின்ஸ், மாகாணத்தின் பிரதேச காங்கிரஸ் தலைவர்களுக்கு தொடர் கடிதங்களை எழுதினார்.

இடைமறிக்கப்பட்ட திருமதி கசின்ஸின் கடிதங்கள்

கோழிக்கோட்டின் கேரள பிரதேச காங்கிரஸ் கமிட்டி செயலருக்கு திருமதி கசின்ஸ் எழுதிய கடிதம் அடையார் தபால் நிலையத்தால் இடைமறிக்கப்பட்டது. அதில், மார்ச் 1930 முதல் தேசிய இயக்கத்திற்கு தமிழ்நாடு மட்டும் அளித்த சத்தியாகிரக அரசியல் கைதிகளின் எண்ணிக்கை மற்றும் மொத்த மதராஸ் மாகாண எண்ணிக்கையை குறித்து தகவல் அளிக்குமாறு கேட்டிருந்தார். அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டி சார்பாக இந்த புள்ளி விவரங்களை அவர் சேகரித்தார்.

பாம்பே காங்கிரஸ் புல்லட்டின் பத்திரிகை ஆசிரியருக்கு திருமதி கசின்ஸ் எழுதி இடைமறிக்கப்பட்ட மற்றொரு கடிதத்தில் இந்திய மகளிர் சங்கத்தைச் சேர்ந்த திருமதி சுப்பராயன் அவர்களின் கடிதத்திற்கு அளித்த அவமதிப்பான பதிலின் ஓர் நகலை கேட்டிருந்தார். லண்டனில் அடுத்து நடக்கவிருக்கும் வட்டமேசை மாநாட்டில் இந்திய பெண்கள் தொடர்பான எந்த விஷயத்தைக் குறித்தும் கருத்து தெரிவிக்குமாறு ஆங்கிலேய ஆதரவு மனப்பான்மை கொண்ட திருமதி சுப்பராயன் அதில் கேட்டிருந்தார்.

டப்ளின், அயர்லாந்தைச் சேர்ந்த திருமதி செச்சி ஸ்கெஃபிங்க்டன் அவர்களுக்கு திருமதி கசின்ஸ் எழுதிய கடிதம் தபால் அலுவலகச் சட்டம் 1898, பிரிவு26இன்கீழ் இடைமறிக்கப்பட்டது. பம்பாயில் ஒருங்கிணைக்கப்பட்ட மகாத்மா காந்தியின் சட்ட மறுப்பு இயக்கம் அரசின் நடவடிக்கைகளில் தடங்கலை ஏற்படுத்தியுள்ளது என்று அக்கடிதம் தெரிவித்தது. மேலும் அதே கடிதத்தில் இந்தியப் போராட்டங்களின்மீது அயர்லாந்துக்கு இருக்கும் அனுதாபத்தைத் தெரிவிக்கும் விதமாக அயர்லாந்தின் பிரதிநிதிகளாக சிலர் இந்தியாவுக்கு அனுப்பப்பட வேண்டும், அவர்கள் தன்னைப்போலவே ஒட்டுமொத்த இயக்கத்துடன் தங்களை அடையாளப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கசின்ஸ் தெரிவித்திருந்தார்.

மக்கள் இந்தியாவுக்குள் நுழைவதை இந்திய ஆங்கிலேய அரசு தடுத்து நிறுத்தினால் அது அவருக்கும் இந்தியாவில் உள்ள அயர்லாந்து மக்களுக்கும் நல்லதொரு விளம்பரம் தரும் வகையிலான போராட்டத்தை முன்னெடுக்க ஓர் வாய்ப்பாக அமையும்; மேலும் எந்தப் பெண்ணும் ஜனவரி 1931இல் நடக்கவிருக்கும் அனைத்திந்திய மற்றும் அனைத்து ஆசிய மாநாட்டின் பார்வையாளராக உள்நுழைந்து அதன்பின்னர் தாங்கள் இந்திய சுதந்திர இயக்கத்தின் ஐரிஷ் பிரதிநிதிகள் என்று தங்கள் ஆதார சான்றுகளைக் காட்டி நிரூபித்துக் கொள்ளலாம் என்றார் திருமதி கசின்ஸ். அவருடைய அனைத்து கடிதப் போக்குவரத்தையும் இடைமறித்த பின்னர், திருமதி கசின்ஸ் எழுதிய அனைத்து கடிதங்களையும் தணிக்கைக்கு உட்படுத்துமாறு மாவட்ட நீதிபதிக்கு மதராஸ் அரசு ஆணையிட்டது. அவருடைய பல கடிதங்கள் 14 அக்டோபர் 1930 முதல் செப்டம்பர் 1931 வரை காவல்துறை மற்றும் தபால் அதிகாரிகளால் தணிக்கை செய்யப்பட்டன.

மதராஸ் சுதேசி கூட்டமைப்பு, மதராஸ் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி, மதராஸ் மகாஜன சபா, மற்றும் இளைஞர் கூட்டமைப்பு ஆகியவை ஒன்றிணைந்து கோக்கலே அரங்கத்தில் 18 அக்டோபர் 1930 அன்று ஓர் பொதுக்கூட்டத்தை ஒருங்கிணைத்தது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னணி தலைவர்கள் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



சிறப்புப் பேச்சாளரான திருமதி கசின்ஸ் 'சுதேசி' மற்றும் 'தீபாவளி' குறித்து பேசினார்; 'காந்தி ஆடைகளை' அணியுமாறு இந்தியர்களை வலியுறுத்தினார்.

இந்தியாவின் தற்போதைய முக்கிய விவாதப் பொருள் ஆடையே ஆகும். ஏனெனில், ஆடை ஓர் வெற்றிகரமான மற்றும் மிக அடிப்படையான கருவி, அதைக்கொண்டு அந்நியப் பேயை விரட்டி விடலாம். இவர்கள் இதை ஓர் புதிய தீபாவளி பாரம்பரியமாக நினைத்துக் கொள்ளவேண்டும். இவர்கள் எல்லாம் கிருஷ்ணார்கள், நாட்டின் ரட்சகர்கள், இந்திய நாட்டை துன்புறுத்தி வரும் பேயை விரட்ட வந்த மீட்பர்கள் மற்றும் இந்நாட்டின் சீர்திருத்தவாதிகள்; ஏனெனில், அது இந்திய நாட்டின் பணத்தை இங்கிலாந்துக்கு எடுத்துச் செல்கிறது. இவர்கள் எல்லாம் அந்நியப் பேயுடன் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள், சிந்தனையின்றி, அறிவின்றி துணிகளை வாங்கும் பழைய வழக்கத்தை மாற்றிக்கொள்வதன் மூலம் இந்த தீபாவளிக்கு அந்த சண்டையை ஒவ்வொருவரும் செய்யலாம். சில காலத்தில் அவர்கள் புதிய தீபாவளியைக் கொண்டாடலாம், தங்களை சுரண்டி வந்த அந்நியப் பேய்களை விரட்ட மேற்கொண்ட பணிகளின் வெற்றியைத் தெரிவிக்கும் விதமாக புதிய வானவேடிக்கைகளை நிகழ்த்தலாம். அந்த வானவேடிக்கைகள் தொடர்ந்து, இந்தியா சுதந்திரத்தை அடைந்த பின்னர் அவை கலங்கரை விளக்க தீப்பந்தமாக இந்தியா முழுவதும் ஒளிரும்.

மதராஸ் மாநகராட்சி தனது அனைத்துப் பணியாளர்களுக்கும் காதி உடை வழங்கத் தீர்மானத்திருப்பதும், குஜராத்திகள் இதுவரை பெரும் பணத்தை செலவிட்டு தீபாவளி கொண்டாடியதைப்போல் அல்லாமல் இவ்வாண்டு தீபாவளி கொண்டாடும் முடிவை கைவிட்டுவிட்டதாக அறிவித்திருப்பதும் தனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருவதாக திருமதி கசின்ஸ் கூறினார். இறுதியாக கசின்ஸ் தனது உரையில், இந்தியர்களும், பொதுவாக, இந்தியத் தொழிலாளர்களும் கதர் உடுத்துவது, சுதேசி கொள்கையை பின்பற்றுவது போன்ற வகைகளில் காந்தியத் திட்டங்களை ஆதரிக்க வேண்டும்; அதுவே இந்திய சுதந்திரத்திற்கான ஒரே வழி என்று கூறி முடித்தார்.

ஆன் ஃபோப்லாக்ட் – ஓர் ஜரிய குடியரசுப் பத்திரிகை

"ஆன் ஃபோப்லாக்ட்" என்னும் ஜரிய குடியரசுப் பத்திரிகை, மார்கரெட் எலிசபெத் கசின்ஸ் எழுதிய, "கிழக்கு முகப்பில் அனைவரும் அமைதியற்று இருக்கின்றனர்" என்னும்

தலைப்பிலான கட்டுரையை வெளியிட்டது. அப்பத்திரிகை தனது 11 அக்டோபர் 1930 பதிப்பில், இந்திய தேசிய இயக்கம் மற்றும் உப்பு யாத்திரை குறித்து பல்வேறு விதமான கட்டுரைகளை வெளியிட்டது. மதராஸில் இருந்த திருமதி கசின்ஸ் அவர்களுக்கு அயர்லாந்திலிருந்து அப்பத்திரிகை அனுப்பி வைக்கப்பட்டபோது, இந்திய தபால் அலுவலகச் சட்டம் 1898, பிரிவு26(1)இன்கீழ் மதராஸ் குற்றப்புலனாய்வுத் துறையினரால் இடைமறிக்கப்பட்டது. ஆங்கிலேயப் படைவீரர்கள் இந்தியர்களை நிர்வாணமாக்கி கேவலப்படுத்தும் நிழற்படங்களை உள்ளடக்கிய கட்டுரைகள் அதில் இருந்தன. குற்றப் புலனாய்வுத்துறை, அப்படங்களையும் கட்டுரைகளையும் மிகுந்த ஆட்சேபகரமானவை என்று தெரிவித்து கடல் சுங்க சட்டம் 1878இன்படி அவற்றை கைப்பற்றுமாறு இந்திய அரசுக்கு பரிந்துரை செய்தது.

மேலும் திருமதி கசின்ஸ் மீது நடவடிக்கை எடுக்குமாறு கடுமையாக பரிந்துரைத்த குற்றப்புலனாய்வுத்துறை, அவரை நாடு கடத்த வேண்டாம், அது மிகக் கடுமையான நடவடிக்கையாக இருக்கும் என்றும் ஆலோசனை கூறியது. அரசின் சாதாரண சட்டங்களின்படியும் அவர்மீது இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர் மிக சாதூர்யமாக நடந்து கொள்கிறார், அதனால் அவருக்கு மிகக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். நாடு கடத்தப்பட்டால் அது அவருக்கு ஓர் நல்ல விளம்பரமாக அமைந்து விடும், ஆனால் ஏதாவது காரணத்தால் அவர் இந்தியாவை விட்டுச் சென்றால் மீண்டும் அவர் இந்தியாவுக்குள் நுழைவதை எளிதாக தடுத்து விடலாம் என்று குற்றப் புலனாய்வுத்துறை தனது பரிந்துரையில் கூறியிருந்தது.

திருமதி கசின்ஸ் அவர்களை தொடர் கண்காணிப்பில் வைத்திருந்த இந்திய அரசு 1930களின் பிற்பகுதியில் அவரை அயர்லாந்துக்கு நாடு கடத்தியது. டாக்டர் கசின்ஸ் மற்றும் திருமதி கசின்ஸ் இருவரும் 1932இன் தொடக்க காலத்தில் மீண்டும் இந்தியா திரும்ப திட்டமிட்டனர். இந்திய அரசின் உளவுத்துறை இயக்குனர் அவர்கள் இந்தியா திரும்புவதைக் கடுமையாக எதிர்த்தார். ஆங்கிலேய உளவுத்துறை அதிகாரியான D.R. ஆல்வின் I.C.S., சட்டமறுப்பு இயக்கம் தொடரும் வரை அத்தம்பதிகள் இருவரும் இந்தியா திரும்ப அனுமதி அளிக்க வேண்டாம் என மதராஸ் அரசின் சார்புச் செயலரை கேட்டுக் கொண்டார்.

மதராஸ் அடையாறில் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்த டாக்டர் கசின்ஸ், 1915 முதல் 17 வருடங்களாக திருமதி கசின்ஸ் அவர்களுடன் அடையாறில் வசித்து வந்தார். டாக்டர் கசின்ஸ் இந்தியா திரும்புவதை அரசு அனுமதித்தால், திருமதி மார்கரெட் கசின்ஸ் மீண்டும் இந்தியாவுக்குள் நுழைவதை தவிர்ப்பது மிகச் சிரமமாக இருக்கும் என்று காவல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இறுதியாக, மீதமுள்ள தங்கள் வாழ்நாளைக் கழிக்க அவ்வயதான தம்பதிகள் இந்தியா திரும்பலாம் என்று மதராஸ் அரசு அனுமதி அளித்தது. தனது கணவர் டாக்டர் கசின்ஸுடன் மார்கரெட் கசின்ஸ் 1933இல் இந்தியா திரும்பி தங்கள் வாழ்நாள் முழுவதும் இந்நாட்டில் ஒன்றாக வாழ்ந்தனர். இந்தியாவில் காங்கிரஸ் இயக்கத்துடனான அவருடைய நெருக்கமும் தொடர்ந்தது.

ஸ்காட்லாந்தின் டாக்டர் ஈ.எப்.பேட்டன்

குற்றப் புலனாய்வுத்துறையின் சிறப்புப் பிரிவு, தமிழ் பிரதேசத்தில் காந்திய திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் மற்றும் மனிதநேய சேவைகளை வழங்கும் ஐரோப்பிய தன்னார்வல நிறுவனங்களை நெருக்கமாக கண்காணித்து வந்தது. மதராஸ் அரசின் தலைமை சார்பு செயலாளர் C.F.V. வில்லியம் I.C.S., ஜூன் 1930 உப்பு சத்தியாகிரகத்திற்குப்

பின்னர், அவர்கள் மீதான தீவிர கண்காணிப்பைத் தொடருமாறு மாகாணத்தின் அனைத்து மாவட்ட ஆட்சியர்களையும் அறிவுறுத்தினார். அவ்வாறான நிறுவனங்களின் காந்திய ஆதரவு அணுகுமுறை குறித்த தகவல்களை சேகரித்து அனுப்புமாறு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களின் குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகளுக்கும் ஆணை யிடப்பட்டது.

வட ஆற்காடு மாவட்ட குற்றப்புலனாய்வுத்துறை, சட்ட மறுப்பு இயக்கத்தில் ஈடுபட்ட "கிறிஸ்துகுல ஆசிரமம்" ஒன்றை திருப்பூரில் கண்டுபிடித்தது. அந்த ஆசிரமத்திற்கு டாக்டர் E. ஃபாரஸ்ட்டர் பேட்டன் நிதியுதவி அளித்து வந்தார். ஏழை இந்தியர்களுக்காக ஓர் நவீன மருத்துவமனையை நடத்த வேண்டும் என்கிற நோக்கில் ஸ்காட்லாந்து நாட்டின் அலோகா நகரத்திலிருந்து 1916இல் இந்தியா வந்து திருப்பூரில் குடியேறி வசித்து வருபவரும் டாக்டர் பேட்டனின் மாணவருமான டாக்டர் S. ஜேசுதாசனும் அவருக்கு உதவி வந்தார். ஜூன் 1930 முதல் வாரத்தில் இந்திய கிறிஸ்தவர்களின் ஒரு குழு டாக்டர் பேட்டனுடன் இணைந்து ஓர் கூட்டத்தை ஒருங்கிணைத்து மகாத்மா காந்தியின் சட்ட மறுப்பு இயக்கத்திற்கு ஆதரவாக சில தீர்மானங்களை நிறைவேற்றியது. அவ்வாசிரமத்தின் உறுப்பினர்கள் மற்றவர்களை சமமாக நடத்தியதோடு தினமும் கதராடைகளையே அணிந்தனர். அவ்வாசிரமத்தில் காந்திய வாழ்க்கை முறை பின்பற்றப்பட்டது. டாக்டர் பேட்டன் உட்பட அதன் உறுப்பினர்கள் அனைவருக்கும் சைவ உணவு வழங்கப்பட்டது. மேலும், மகாத்மா காந்தியைப் போன்றே டாக்டர் பேட்டன் எப்போதும் தரையிலேயே அமர்ந்தார். ஒரே விதமான காலணிகளையே அனைவரும் அணிந்தனர். மகாத்மா காந்தியின் தீவிர அபிமானிகளாக இருந்த அவர்கள், இந்திய ஆங்கிலேய அரசாங்கத்தின் ஒடுக்குமுறைக் கொள்கைகளை வெளிப்படையாக கண்டனம் செய்தனர். 1930ஆம் ஆண்டின் மே முதல் ஜூன் மாதம் வரை, டாக்டர் பேட்டன் தன் குழுவினருடன் திருப்பூர் தாலுகாவுக்கு அருகில் உள்ள கிராமங்களில் காந்திய ஆதரவுப் பிரச்சாரங்களை அடிக்கடி மேற்கொண்டார்.

வேலூரில் முகாமிட்டிருந்த வட ஆற்காடு மாவட்ட ஆட்சியரை காந்திய இயக்கங்களில் டாக்டர் பேட்டனின் ஈடுபாடு குறித்து விசாரிக்குமாறு மதராஸ் அரசின் சார்புச் செயலாளர் கூறினார். மாவட்ட ஆட்சியர் தனது பதிலில் தான் பிரத்யேகமாக மேற்கொண்ட விசாரணை குறித்து பின்வருமாறு கூறுகிறார், "டாக்டர் பேட்டன் ஒரு பிரித்தானிய குடிமகன். அரசியலில் இருந்து ஒதுங்கி இருப்பதாக அவர் எந்த ஒரு ஆவணத்திலும் கையெழுத்திடவில்லை. எட்டு ஆண்டுகளுக்கு முன்பு நான் அந்நகரத்தில் இருந்தபோது அவரை நன்றாக அறிவேன். அப்போது அவர் சாதாரண காலணிகளை அணிந்தபடி நடந்து செல்வார். ஆனால் அவர் நிதானத்தைக் கடைபிடிப்பது குறித்தும் கதர் அணியத் தொடங்கியது குறித்தும் எனக்குத் தெரியாது. அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க எந்த ஒரு முகாந்திரமும் இல்லையென என் விசாரணையில் தெரியவந்துள்ளது."

ஒட்டுமொத்தமாக, டாக்டர் பேட்டன் எந்த விதமான தேசத்துரோக நோக்கமும் இல்லாத ஓர் வினோதமான மனிதர் என்று அவர் உறுதி செய்தார். அவர் ஓர் உண்மையான மருத்துவர்; சமீபத்தில் அப்பகுதியில் உள்ள கிராமத்து மக்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக ஒரு பெரிய நிலத்தை வாங்கி அதில் ஓர் தொழிற்கல்வி நிலையத்தையும், பண்ணையையும் நடத்தி வருகிறார். மாவட்ட ஆட்சியரின் இந்த வாக்குமூலத்தைக் கேட்ட சார்புச் செயலர் C.F.V.வில்லியம்ஸ் இதனால் திருப்தியுற்று டாக்டர் பேட்டனை கைது செய்யும் முடிவைக் கைவிட்டார். இருப்பினும், அவருடைய அன்றாட நடவடிக்கைகளை கண்காணிக்குமாறு குற்றப் புலனாய்வுத்துறைக்கு ஆணையிட்டார்.

டாக்டர் பேட்டன் மீதான ஆங்கிலேய அடக்குமுறை

லண்டனில் டிசம்பர் 1931இல் நடந்த இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்ட மகாத்மா காந்தி வெறுங்கையோடு இந்தியா திரும்பினார். சட்ட மறுப்பு இயக்கத்தை 3 ஜனவரி 1932 அன்று மீண்டும் மகாத்மா காந்தி தொடங்கியபோது மறுநாள் அவர் கைது செய்யப்பட்டு பூனா சிறைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவ்வியக்கம் புறக்கணிப்பு போராட்டங்களோடு மீண்டும் தொடங்கப்பட்டது. கள்ளுக்கடைகள், மதுக்கடைகள், மற்றும் அந்நிய துணிகளைவிற்கும் கடைகள் ஆகியவை காங்கிரஸ் தொண்டர்களின் முக்கிய இலக்காக இருந்தன. 1932ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை, மறியல் மற்றும் புறக்கணிப்புப் போராட்டங்களையே, காங்கிரஸார் தங்கள் அன்றாட நிகழ்ச்சி நிரலாகக் கொண்டிருந்தனர். அதே ஆண்டின் ஜனவரி முதல் டிசம்பர் வரை இந்திய இராஜப் பிரதிநிதியான லார்ட் வெலிங்டன், காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைகளை எதிர்கொள்ளவும், இந்தியப் பத்திரிகைகளில் வெளியாகும் ஆங்கிலேயருக்கு எதிரான எழுத்துகளையும் அரசியல் இலக்கியங்களை எதிர்கொள்ளும் பொருட்டும் 10 அவசரச் சட்டங்களை இயற்றினார்.

டாக்டர் பேட்டன் 15 ஜனவரி 1932 அன்று பெங்களூர் எக்ஸ்பிரஸ் ரயில் மூலமாக வேலூரில் இருந்து நண்பகல் 2.20 மணிக்கு சென்னை வந்தடைந்தார். மதராஸ் கிறிஸ்தவக் கல்லூரிக்கு செல்லும் நோக்குடன் எக்மோர் பாலத்தின் அருகில் ஓர் பேருந்தில் ஏறினார். மறியல் செய்யும் காங்கிரஸ் சார்பு தொண்டர்கள் மதராஸ் காவல்துறையால் மோசமாக நடத்தப்படுவது குறித்து கேள்விப்பட்டிருந்த டாக்டர் பேட்டன், அவர்களைக் காணவும் அப்போராட்டத்தில் பங்கெடுக்கவும் விரும்பினார். ஆறு தொண்டர்களுடன் ரத்தன் பஜார் வீதியில் நடந்தபடி, அந்நிய துணிகளை புறக்கணிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் போலீசாரின் மிரட்டல்களுக்கு அஞ்ச வேண்டாம் என்றும் மக்களிடம் பிரச்சாரம் செய்தார். அந்நிய துணிகளை விற்கும் ஓர் கடையின் முன்பு அவர்கள் மறியல் செய்து கொண்டிருந்தபோது காவல்துறை இடைநிலை அதிகாரி H.M. பட்டர் மற்றும் துணை ஆய்வாளர் சையத் ஆகியோர் நான்கு காவலர்களுடன் பேட்டனை நோக்கி விரைந்தார்கள். கிஷன் சந்த் செல்லாராம் என்பவர் நடத்தி வந்த அக்கடையைப் புறக்கணிக்குமாறு பேட்டன் மற்றும் தொண்டர்கள் போராட்டம் நடத்தினர். கடையைச்சுற்றி கிட்டத்தட்ட 300 பேர் அளவுக்கு கூட்டம் கூடியது. நீங்கள் ஒரு குற்றத்தை செய்து கொண்டிருக்கிறீர்கள், உடனடியாக அனைவரும் கலைந்து செல்லுங்கள் என்று பட்லர் கூறியபோதும் பேட்டனும் தொண்டர்களும் அங்கிருந்து செல்ல மறுத்தனர். அவர்களைக் கட்டாயப்படுத்தி அங்கிருந்து செல்லுமாறு காவல்துறை கூற, கதராடையும், காந்தி குல்லாவும் அணிந்திருந்த டாக்டர் பேட்டனும் தொண்டர்களும், பெருங்கூட்டம் பின்தொடர சாலையின் மறுபுறம் சென்று அங்கு நின்று, "மகாத்மா காந்திக்கு ஜெய்", "வந்தே மாதரம்" என்று முழக்கமிட்டனர். ஆந்திர பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் முக்கியத் தலைவரான கே. நாகேஸ்வர ராவ் அவர்களைக் கைது கைது செய்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏற்கனவே அங்கு கொண்டு வந்து நிறுத்தி வைக்கப்பட்ட தீயணைப்பு வண்டியின் குழாய் மூலம் தண்ணீரைப் பீய்ச்சி அடித்து டாக்டர் பேட்டன் உட்பட கூட்டத்தை மதராஸ் காவல்துறை கலைத்தது.

இதனிடையே காவல்துறை ஆய்வாளர் V.A. கர்ரி, டாக்டர் பேட்டன் மற்றும் குழுவினர் மீது நடவடிக்கை எடுக்குமாறு காவல்துறை இடைநிலை அதிகாரி பட்டர், சாண்டர்ஸ், நோய் மற்றும் பிரிங்காம் ஆகியோருக்கு கட்டளையிட்டார். மதராஸ் காவல்துறையின் மனநிலையை அறிந்து கொண்ட டாக்டர் பேட்டன் பிரான்சர் சாலை வழியாக உடனடியாக வெளியேறினார். சற்று நேரத்திற்கெல்லாம் அவரை தடுத்து நிறுத்திய காவல்துறை

இடைநிலை அதிகாரி பட்டர் அவருடைய காந்திய உடை குறித்து கேள்வி எழுப்பினார். அதற்கு டாக்டர் பேட்டன் தான் ஏழை மக்களுக்காக பணிபுரிவதாகவும் அதனால் அவ்விதமாக கதராடையை உடுத்துவதாகவும் கூறினார். அவருடைய பதிலுக்கு காத்திராத காவலர்கள் அவர்மீது தடியடிகளை பிரயோகித்தவாறு மற்றொரு காவலரிடம் தண்ணீரைப் பீய்ச்சி அடிக்குமாறு சைகை செய்தனர். உடனடியாக டாக்டர் பேட்டன் பூக்கடை காவல் நிலையம் இருந்த திசையில் வேகமாக நடக்கத் தொடங்கினார். தடியடியை நிறுத்திய காவல்துறை இடைநிலை அதிகாரி சாண்டர்ஸ், மற்றொரு வழியாக பேட்டனை திரும்ப வரச் சொன்னார். திரும்பி வந்த பேட்டன்மீது மீண்டும் தண்ணீரைப் பீய்ச்சி அடித்தனர். வேறெங்கும் அடைக்கலம் தேட முடியாமல், அவர் அங்கிருந்த தள்ளு வண்டியின் பின்னால் மறைந்து கொண்டார். தள்ளு வண்டியை தள்ளிவிட்டு காவல்துறை மீண்டும் அவர்மீது தண்ணீரைப் பாய்ச்ச பேட்டன் தெற்கு நோக்கி வேகமாக ஓடத் தொடங்கினார். தண்ணீர் பீய்ச்சி அடிப்பதை நிறுத்திவிட்டு அவர் எங்கு செல்கிறார் என்பதைப் பார்க்குமாறு காவல்துறை இடைநிலை அதிகாரி பட்டர் காவலர்களுக்கு ஆணையிட்டார். பேட்டன், பிரான்சர் பாலம் வழியாக மதராஸ் சட்டக் கல்லூரி நோக்கி நடக்க தொடங்கினார். அதுவரை தனியாக இருந்த டாக்டர் பேட்டனை கிட்டத்தட்ட 100 பேர் கொண்ட ஒரு கூட்டம் பின்தொடரத் தொடங்கியது. சத்யகிரகிகள் முன்பே சென்று விட்டனர். இளம் கிறிஸ்தவ ஆண்கள் சங்கம் (YMCA) சென்ற டாக்டர் பேட்டன் அங்கு தன் உடைகளை மாற்றிக்கொண்டு, மதராஸ் கிறிஸ்தவ கல்லூரி (MCC) அலுவலகத்தை அடைந்து அங்கு அதன் முதல்வர் டாக்டர் ஹாக் அவர்களை சந்தித்தார்.

காவல்துறை இடைநிலை அதிகாரி பட்டர் இவை அனைத்தையும் காவல் ஆய்வாளர் V.A. கர்ரிக்கு தெரிவிக்க, அவர்கள் கல்லூரிக்கு விரைந்து அங்கு பாஷ்யம் அய்யங்கார், வெங்கட்ராம சாஸ்திரி, மற்றும் டாக்டர் ஹாக் முன்னிலையில் டாக்டர் பேட்டனை கைது செய்தனர். 16 ஜனவரி 1932 அன்று மதராஸ் எக்மோரில் காவல்துறை ஆணையர் முன்பு அவரை நிறுத்தினர். அவர், நடந்த சம்பவங்கள் குறித்து அனைவருக்கும் உகந்த வகையில் அங்கேயே விசாரித்தபின் இப்பிரச்சினையை நீதிமன்றத்திற்கு எடுத்துச்செல்ல பரிந்துரைத்தார். சொந்த அங்கீகாரத்தில் அவரை விடுவித்த காவல் ஆணையர், மாகாணத்தின் தலைமை நீதிபதி முன்பு அவரை 18 ஜனவரி 1932 அன்று நிறுத்தினார். சட்டத்திற்கு இடையூறாக நடந்து கொண்டதாக மட்டுமே அவர்மீது குற்றம் சொல்லப்பட்டது. மேலும் நீதிபதி, வட மதராஸ் காவல்துறை உதவி ஆணையர் அனந்தாச்சாரியாரை இச்சம்பவம் குறித்து விசாரித்து நேரடி சாட்சியங்களைக் கொண்டு வருமாறு கூறினார்.

வழக்கின் மொத்த விசாரணையையும் நடத்திய அனந்தாச்சாரியார், காவல்துறை சாட்சியங்களை மூன்று முறை குறுக்கு விசாரணை செய்த பின்னர் டாக்டர் பேட்டனையும் விசாரித்தார். இதனிடையே டாக்டர் பேட்டனின் தனிப்பட்ட நடத்தை குறித்து திருப்பத்தூர் துணை ஆட்சியர் ராமச்சந்திரன் நடத்திய விசாரணை குறித்த இரு கடிதங்களை வட ஆற்காடு மாவட்ட ஆட்சியர் பென்னட் அனுப்பியிருந்தார். மதராஸ் காவல்துறையின் குற்றச்சாட்டுகளை மறுத்த டாக்டர் பேட்டன், தான் தனிப்பட்ட முறையில் புறக்கணிப்பு மற்றும் மறியல் போராட்டங்களை காண ஓர் பார்வையாளராக வந்ததாகவும், மேலும் போலீசாரின் தடியடியில் சிக்கி காயமடைந்த தொண்டர்களுக்கு முதலுதவி அளிப்பதற்காகவும்தான் வந்ததாகக் கூறினார்.

டாக்டர் பேட்டனுக்கு எதிரான சாட்சியங்கள் தங்கள் வாக்குமூலங்களில் மிக உறுதியாக இருந்ததால் உதவி ஆணையர் அனைவரது நலனையும் கருத்தில்கொண்டு இந்த விசாரணை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என்று கருதினார். மேலும் டாக்டர் பேட்டன் திருப்பத்தூரில் ஓர் காந்திய அனுதாபியாக கடந்த ஆண்டு செயல்பட்ட நிகழ்வுகள் குறித்து கேள்விப்பட்ட அவர், பேட்டனுக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கான

பின்புலம் மேலும் உறுதிப்படுவதாக நம்பினார். சட்டம் ஒழுங்கு துணை ஆணையர் குற்றவியல் நடைமுறைச் சட்டம் மூலம் உண்மைகளை அறிந்த காவல்துறை ஆணையர் பேட்டனுக்கு எதிரான வழக்கை அவருடைய மறுப்பின் அடிப்படையிலேயே தொடங்கினார். மதராஸ் மாகாண தலைமை நீதிபதியான அப்பாஸ் அலி முன்பு வழக்கு வந்தது. டாக்டர் பேட்டன் மீது பிரிவு 528-A of Cr.P.C. மற்றும் சட்ட எண்.v of 1932, பிரிவு 4இன்கீழ் குற்றம் சுமத்தப்பட்டது.

டாக்டர் பேட்டனுக்கு எதிரான தீர்ப்பு

டாக்டர் பேட்டனுக்காக வாதாடிய ஜெயராம் ஐயரின் அனைத்து வாதங்களையும் கேட்ட மதராஸ் மாகாண தலைமை நீதிபதி அப்பாஸ் அலி, இறுதியாக குற்றம் சாட்டப்பட்ட டாக்டர் பேட்டனை விசாரிப்பது தனது அதிகார வரம்புக்கு உட்பட்டதே எனக் கூறினார். குற்றவியல் நடைமுறை சட்டத்திற்கு உட்பட்ட சிறப்பு ஏற்பாடுகள் அத்தியாயம் 33இன் படி ஓர் ஐரோப்பிய பிரித்தானிய குடிமகனான டாக்டர் பேட்டனை விசாரிப்பது தனியொரு மாகாண நீதிபதியின் அதிகார வரம்புக்குள் வராது என்று ஜெயராம் ஐயர் தன்னுடைய வாதத்தில் முன்வைத்தபோது மேற்கண்ட பதிலை நீதிபதி வழங்கினார்.

தீர்ப்பின் அடிப்படையில் மதராஸ் காவல்துறை ஆணையர், பேட்டனின் இயக்க செயல்பாடுகள் குறித்து ஓர் விரிவான அறிக்கையை மதராஸ் அரசின் தலைமைச் செயலருக்கு அனுப்பி அவர்மீது நடவடிக்கை எடுக்குமாறு கூறினார். தலைமைச் செயலர் G.T.H. ப்ராக்கன், 8 பிப்ரவரி 1932 அன்று தலைமை காவல்துறை ஆணையருக்கு பேட்டனை கைது செய்யுமாறு ஆணையிட்டார். டாக்டர் பேட்டன் கைது செய்யப்பட்டு, சட்ட மறுப்பு இயக்கத்தில் பங்கேற்றதற்காக காவல்துறையால் எச்சரிக்கை செய்யப்பட்டு பின்னர் மதராஸ் அரசின் பிரத்யேக உறுதி மொழியில் விடுவிக்கப்பட்டார். குற்றப்புலனாய்வுத்துறை அதிகாரிகள் மூலம், திருப்பூரில் டாக்டர் பேட்டனின் நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணிக்குமாறு வட ஆற்காடு மாவட்ட ஆட்சியருக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்திய கூட்டமைப்பு பிரதிநிதிகள் குழு

மதராஸ் அரசின் தலைமைச் செயலர் G.T.H. ப்ராக்கனுக்கு இந்திய அரசின் உள்துறையிலிருந்து 9 ஆகஸ்ட் 1932 அன்று உள்துறைச் செயலர் சிம்லாவிலிருந்து எழுதிய கடிதம் ஒன்று வந்தது. கடிதம் இந்திய அரசுக்கு வரவிருக்கும் மற்றொரு முக்கிய அச்சுறுத்தலை குறித்து தெரிவித்தது; அதாவது லண்டன் இந்திய கூட்டமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் 17 ஆகஸ்ட் 1932 அன்று பம்பாய் வந்தடைந்து அங்கிருந்து சட்ட மறுப்பு இயக்கத்தில் பங்கேற்றதற்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை சந்திக்க சிறைகளுக்கு செல்லவிருப்பதாக அக்கடிதம் தெரிவித்தது. திருமிகு வில்கின்சன் தலைமையிலான அப்பிரதிநிதி குழுவில் மோனிகா வாட்லி, லியோனார்ட் மேட்டர்ஸ், மற்றும் V. கிருஷ்ண மேனன் ஆகியோர் உறுப்பினர்களாக இடம் பெற்றிருந்தனர். அதில் முதல் மூவரும், இங்கிலாந்தின் உழைப்பாளர் கட்சியைச் சேர்ந்த ஆங்கிலேய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆவர்.

அக்குழு எவ்விதமான அரசியல் இயக்கத்திலும் பங்கேற்காது மற்றும் எங்கும் உரை நிகழ்த்தாது என்று இந்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும், "அவர்களுக்கு இந்திய ஆங்கிலேய அதிகாரிகளை சங்கடப்படுத்தும் நோக்கம் ஏதுமில்லை என்றும், இங்கிருக்கும் நிலவரம் குறித்து தகவல்களை சேகரித்து அனுப்புவதன் மூலம் பிரித்தானிய நாடாளுமன்றத்திற்கும் பிரித்தானிய மக்களுக்கும் ஏதாவதொரு வகையில் உதவி புரிவதே அவர்களின் பணி என்றும் தெரிவிக்கப்பட்டது." உண்மையில் இக்குழுவின் வருகை காங்கிரஸ் கட்சியின் முன்திட்டமிடப்பட்ட வேலை அதன் மூத்த தலைவரான

மதன் மோகன் மாளவியா அவர்களின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட ஒன்று. மூன்று முக்கிய மாகாணங்களான மதராஸ், பம்பாய், மற்றும் வங்காளம் ஆகியவற்றிற்கும் மற்ற உள்ளூர் அரசுகளுக்கும் இக்குழுவின் வருகையைக் கண்காணிக்க அறிவுறுத்தி இந்திய தலைமைச் செயலரின் தகவல் அனுப்பப்பட்டது. சிறைக்குச் சென்று அரசியல் கைதிகளை சந்திக்க வேண்டாம் என்று குழு உறுப்பினர்களுக்கு இந்திய தலைமைச் செயலர் அலுவலகத்திலிருந்து தெரிவிக்கப்பட்டது. குழு உறுப்பினர்கள், ஆங்கிலேய அதிகாரிகளுடன் எப்போதும் தொடர்பில் இருக்குமாறும் அவ்வாறு செய்தால் சரியான தகவல்களை பெறுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தித்தர ஏதுவாக இருக்கும் என்றும் இந்திய தலைமைச் செயலர் அவர்களுக்கு ஆலோசனை கூறினார்.

இந்திய கூட்டமைப்புப் பிரதிநிதிகள் குழு பம்பாய் மற்றும் பூனா சென்ற பின்பு 25 ஆகஸ்ட் 1932 அன்று பம்பாய் எக்ஸ்பிரஸ் இரயில் மூலமாக சென்னை வந்தடைந்தது. K. பாஷ்யம் ஐயங்கார், K. நாகேஸ்வர ராவ், N.S. வரதாச்சாரி, M. பக்தவச்சலம், B. ஜகன்னாத தாஸ், டாக்டர் சுப்பராயன், T.V. வெங்கட்ராம சாஸ்திரி, திரு மற்றும் திருமதி சிவராம் மற்றும் K. நாராயண மேனன் ஆகியோர் இரயில் நிலையத்தில் அக்குழுவை வரவேற்றனர். அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டியின் செயலாளரான ஜெயப்பிரகாஷ் நாராயணன் குழுவிற்கு வழிகாட்டும் பொருட்டு, பிரதிநிதிகள் குழு பூனாவிலிருந்து கிளம்பும் முன்பே அங்கு வந்தடைந்திருந்தார்.

மறுநாள் லியோனார்ட் மேட்டர்ஸ் மற்றும் வில்கின்சன் ஆகிய இரு உறுப்பினர்களும் திரு. B. சிவராவ் அவர்களுடன் சென்று பல உழைப்பாளர் மையங்களையும் குடிசை வாழ் பகுதிகளையும் பார்வையிட்டனர்; மதராஸ் உழைப்பாளர் கூட்டமைப்பின் காரிய கமிட்டி உறுப்பினர்களுக்கு அவர்களை சிவராவ் அறிமுகம் செய்து வைத்தார். இதனிடையே திருமிகு. வில்கின்சன், திரு. V.K. மேனன் இருவரும் தி இந்து மற்றும் மெட்ராஸ் மெயில் பத்திரிகைகளுக்கு நேர்காணல் அளித்தனர். மாலை, நான்கு உறுப்பினர்களும், திரு. K. நாகேஸ்வர ராவ் அவர்களின் இல்லத்தில் நடந்த தோட்ட விருந்தில் பங்கேற்றபோது, சமீபமாக சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட காங்கிரசாரை அங்கு சந்தித்தனர். இப்பிரதிநிதிகள் குழுவை வரவேற்பதற்காக மதராஸ் மாவட்ட காங்கிரஸ் ஓர் பேரணியை ஏற்பாடு செய்திருந்தது, இறுதியில், பேரணியில் கலந்துகொண்ட அனைவரும் கைது செய்யப்பட்டு மதராஸ் எக்மோரில் உள்ள காவல் ஆணையர் அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர். அன்று காலையே, தார்ச் சாலைகளில் "ஆங்கிலேயப் பொருட்களை புறக்கணியுங்கள்" என்னும் காங்கிரஸ் முழக்கங்கள் ஆங்காங்கே வரையப்பட்டிருந்தன. ஆகஸ்ட் 27 அன்று அக்குழுவினர், G.A. நடேசன், டாக்டர் சுப்பராயன், A. ராமசாமி முதலியார், யாகூப் ஹாசன், ஜமால் முகமது, மாகாண காவல் துறை ஆணையர், மற்றும் மதராஸ் அரசின் தலைமைச் செயலர் G.T.H. ப்ராக்கன் ஆகியோரை சந்தித்தனர். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, திருமிகு வில்கின்சனை மதராஸ் இந்திய மகளிர் சங்கத்திற்கு அழைத்துச் சென்று, இயக்கத்திற்கான மதராஸ் மகளிரின் பங்களிப்பு குறித்து விளக்கினார். ஆகஸ்ட் 28 அன்று முற்போக்கு தலைவர் T.R. வெங்கட்ராம சாஸ்திரி மற்றும் காங்கிரஸ் கமிட்டி தலைவர் C. ராஜகோபாலச்சாரி ஆகியோரை அவர்கள் சந்தித்தனர். சட்ட மறுப்பு இயக்கம் குறித்த அறிக்கைகள், நிழற்படங்கள், போன்ற விவரங்களோடு புறக்கணிப்பு போராட்டங்கள் மற்றும் உப்பு சத்தியாகிரகம் போன்றவற்றில் பங்கெடுத்து ஆங்கிலேய காவல்துறையால் கடுமையான தாக்குதலுக்கு உள்ளான காங்கிரஸ் தொண்டர்களின் கோரிக்கைகளும் அவர்களிடம் அளிக்கப்பட்டது.

ஆகஸ்ட் 29 அன்று பிரதிநிதிகள் குழு உறுப்பினர்கள், ஃபென்னர் ப்ராக்வேவின் சகோதரி திருமிகு ப்ராக்வே அவர்களையும், திரு. லட்சுமிபதி, சமய பரப்புரைக் கல்வியாளர் திருமதி தாம்சன் மற்றும் பல இந்தியப் பெண்களை சந்தித்தனர்.

பெரம்பூர் M.S.M. இரயில்வே தொழிற்சங்கத் தொழிலாளர்கள் மற்றும் பெரம்பூர் இராணுவ குடியிருப்பு பணியாளர்கள் ஆகியோரிடையே திருமிகு வில்கின்சன் உரையாற்றினார். அன்று மாலை சி. ராஜகோபாலச்சாரி, பிரதிநிதிக் குழுவை சேர்ந்த இவ்விரு பெண்களையும் ரயிலில் திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்றார். காங்கிரஸ் தலைவர்கள் பிரதிநிதிகள் குழுவிடம் காங்கிரஸின் அனைத்து செயல்பாடுகளைக் குறித்தும் விவரித்தனர்; அதன் மூலம் கட்சியின் நடவடிக்கைகளுக்கு அவர்களது அனுதாபத்தைப் பெற்றனர். அதே நாள் மாலை, பிரதிநிதிகள் குழுவுடன் சென்ற ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஆங்கிலேயருக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக கைது செய்யப்பட்டார்.

மேற்குறிப்பிடப்பட்ட திருமதி தாம்சன் உடனான நேர்காணல், சட்ட மறுப்பு இயக்கம் உட்பட்ட காங்கிரஸின் திட்டங்கள் மற்றும் குறிக்கோள்களை நியாயப்படுத்தும் விதமான பதில்களைப் பெறும் நோக்கில் மோனிகா வாட்டலி சில கேள்விகளை எழுப்பும்படி, வடிவமைக்கப்பட்டது. திருமிகு வாட்டலியைப் பொறுத்தவரை, சட்ட மறுப்பு இயக்கம் தோற்கடிக்கப்படவில்லை. அது, இங்கிலாந்து மற்றும் இந்தியாவில் உள்ள அரசின் தற்போதைய கொள்கைகளால், ஆங்கிலேய நலன்களுக்கு கேடு விளைவிக்கும் விதமாக மண்ணுக்கடியில் தள்ளப்பட்டிருக்கிறது. பிரதிநிதிகள் குழுவுடனான நேர்காணலுக்குப் பின்பு திருமதி தாம்சன் ஆங்கிலேய மூத்த அதிகாரிகளின் கோபத்திற்கு இலக்கானார். அவர்கள் திறந்த மனதுடன் இந்தியாவுக்கு வரவில்லை என்பது வெளிப்பட்டிருக்கிறது என்று ஆங்கிலேய அரசு தெரிவித்தது.

திருமிகு வாட்டலி, திரு. C. ராஜகோபாலச்சாரி மற்றும் N. ராமச்சந்திரன் ஆகியோருடன் 31 ஆகஸ்ட் 1932 அன்று காலை 7.30 மணிக்கு சேலத்திலிருந்து மதுரைக்கு இரயில் மூலம் சென்றடைந்தார். அங்கு காங்கிரஸ் கொடிகளுடன் "மகாத்மா காந்திக்கு ஜே", "வந்தே மாதரம்" போன்ற முழக்கங்களுடன் உள்ளூர் காங்கிரஸ் தலைவர்கள் அவர்களை வரவேற்றனர். அன்று R. ராம அய்யங்கார், I.K. துளசிராம், S.R. வரதராஜுலு நாயுடு, L. கிருஷ்ணஸ்வாமி பாரதி, S.S. பாரதி, M.S. சேஷு ஐயங்கார், ராஸ் சாஹிப், நரசிம்ம ஐயங்கார், மற்றும் டாக்டர் ராமையா போன்ற பத்துக்கும் மேற்பட்ட உள்ளூர் பிரமுகர்களை வாட்டலி பேட்டி கண்டார்.

தீவிர காந்தியரான L. கிருஷ்ணஸ்வாமி பாரதி, காங்கிரஸ் இயக்கம் குறித்தும், மதுரை மற்றும் இராமநாதபுரம் பகுதிகளில் காங்கிரஸ் தொண்டர்கள் மீது போலீசார் நடத்திய ஒடுக்குமுறை குறித்தும் விரிவான ஓர் அறிக்கையை திருமிகு வாட்டலியிடம் அளித்தார். காங்கிரஸ் தொண்டர்கள் மீதான காவல்துறையின் அத்துமீறலைக் குறித்து விவரித்த அவர், அவர்களின் ஒடுக்குமுறைக்கு ஆதாரமாக சில நிழற்படங்களையும் சமர்ப்பித்தார். காவல்துறையின் தாக்குதலுக்கு உள்ளாகிய ஆறு காங்கிரசார் அவர் முன் நிறுத்தப்பட்டனர், அவர்களுடைய வாக்குமூலங்களை வாட்டலி பதிவு செய்தார். திருமங்கலம் போலீசாரால் தலையில் மண்ணெண்ணெய் கொட்டப்பட்டு மோசமாக நடத்தப்பட்ட ஒரு காங்கிரஸ் தொண்டரின் வாக்குமூலத்தையும் அவர் பதிவு செய்தார்.

திரு. ராஜகோபாலச்சாரியும் திருமிகு வாட்டலியும் மதுரா ஆலைக்குச் சென்று அதன் மேலாளர் D.W. ஆஸ்போர்னை சந்தித்தனர். மதுரையில் புகழ்பெற்ற அந்நிய ஆடைகள் விற்கும் கடைகளைப் பார்வையிட 1 செப்டம்பர் 1932 அன்று ராஜகோபாலச்சாரி, வாட்டலி அவர்களை அழைத்துச் சென்றார். அங்கு கடைகளின் முன்பு காங்கிரஸ் தொண்டர்கள் "அந்நிய துணிகளைப் புறக்கணியுங்கள்" என்னும் முழக்கங்களுடன் மறியல் செய்து கொண்டிருந்தனர். தொண்டர்களுடன் திருமிகு வாட்டலி ஒரு கடையில் நுழைய முயன்றபோது அவர்களை தடுத்து நிறுத்திய காவல்துறை அவர்கள்மீது தடியடியைப்

பிரயோகித்தது. அவரின் வருகைக்குப் பின்பு சில காங்கிரஸ் தொண்டர்கள் மற்ற கடைகள் முன்பு மீண்டும் மறியல் செய்யத் தொடங்கினர். அவர்களை கலைந்து செல்லுமாறு காவல்துறை எச்சரித்தும் மறுத்த அவர்கள் தரையில் அமர்ந்து காங்கிரஸ் கோஷங்களை முழக்கமிட்டனர். இறுதியாக காவல்துறை அவர்களை கைது செய்து மத்திய காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றது. அங்கு, 2 செப்டம்பர் 1932 அன்று, அவர்களுக்கு ஆறு மாத கடும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது, மற்றவர்கள் காவல் நிலையத்தை விட்டு வெளியே அனுப்பப்பட்டனர்.

அன்று நண்பகல் திருமிகு வாட்டலி, மேலும் சில காங்கிரஸ் தொண்டர்களையும் சில காங்கிரஸ் பெண் தொண்டர்களையும் பேட்டி கண்டார். பின்னர் அவர், சேலம் மாவட்டத்தில் உள்ள C. ராஜகோபாலச்சாரியின் ஆசிரமத்துடன் தொடர்புடைய டாக்டர் சுப்பராயன் அவர்களின் காந்தி ஆசிரம காதி பந்தர் என்னும் கதராடை கடை திறப்பு விழாவில் கலந்து கொண்டார். விழாவில் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டது திருமிகு வாட்டலியின் வருகைக்கு மக்கள் காட்டிய ஆர்வத்தையும், பொதுவாக அச்சமயம் காங்கிரஸ் இயக்கத்தின் செயல்பாடுகள் மீதான மக்களின் நாட்டத்தையும் வெளிப்படுத்தியது. அவ்விழாவில் காங்கிரஸ் கட்சியின் ஆண் மற்றும் பெண் உறுப்பினர்கள் பாரதியின் பாடல்களை உரக்கப் பாடினர். டாக்டர் சுப்பராயன் மற்றும் T.C. சீனிவாச ஐயங்கார் மகாத்மா காந்தியின் தியாகங்கள் மற்றும் கதரின் முக்கியத்துவம் குறித்து உரைகள் நிகழ்த்தியபின் கடை திறந்து வைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதே நாள் மாலை, ராஜகோபாலச்சாரியும், டாக்டர் சுப்பராயனும் மதுரை அனைத்திந்திய நெசவாளர் சங்கத்தின் கதர் பண்டகசாலைக்குச் சென்றனர். திருமிகு வாட்டலி இரவு 10.30க்கு இரயில் மூலம் மதராஸ் சென்றார். அப்பயணத்தால் மிகவும் கவரப்பட்ட திருமிகு வாட்டலி தன் உணர்வுகளை காங்கிரஸ் தொண்டர்களிடமும் வெளிப்படுத்தினார்.

பிரதிநிதிகள் குழுவின் அறிக்கை

இந்திய கூட்டமைப்பு உறுப்பினர்கள், தங்கள் பிரதிநிதிகள் குழுவின் அறிக்கையை 29 நவம்பர் 1932 அன்று மதராஸ் அரசிற்கு சமர்ப்பித்தனர். மக்களிடையே எவ்விதமான வேறுபாடுகள் இருந்தாலும், அடக்குமுறை மற்றும் சட்டங்களை அனைத்து சமூகங்களும் ஒற்றுமையாக எதிர்க்கின்றனர் என்று அவ்வறிக்கை குறிப்பிட்டது. சட்டசபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மை உறுப்பினர்கள், மக்களின் சட்ட ஒத்துழையாமையை எதிர்கொள்ள அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு தொடர் ஆதரவை அளித்தனர் என்கிற உண்மையை அவர்கள் பொருட்படுத்தவில்லை. காவல்துறையின் அளவில்லா அடக்குமுறைகளை கண்டனம் செய்த எதிர்க்கட்சிகளின் சட்டசபைத் தீர்மானங்களையும் அவர்கள் நிராகரித்தனர்.

காங்கிரஸ் தான் வலிமையான கட்சி, சுதந்திரமான தேர்தல் நடைபெற்றால் அக்கட்சி எளிதாக வெற்றி பெறும் என்று பிரதிநிதிகள் குழு தெரிவித்தது. மகாத்மா காந்தியின் சமீபத்திய அரசியல் நடவடிக்கைகளால் காங்கிரசின் ஆதரவாளர்கள் பலர் தங்களை அக்கட்சியிலிருந்து தற்போது அந்நியப்படுத்திக் கொண்டார்கள். குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களை கோவிலுக்குள் அனுமதிக்க வேண்டும் என்று மகாத்மா காந்தி வலியுறுத்தியது, வைதீகத்தை பின்பற்றுபவர்களின் எதிர்ப்பைக் கிளப்பியது. இதன் காரணமாகவே, மற்றொரு புறம், நீதிக்கட்சி அடுத்த தேர்தலில் காங்கிரஸுக்கு எதிராகப் போட்டியிட்டு பெரும்பான்மை பெற்றுவிடும் நம்பிக்கையுடன் தங்களை வலுவாகக் கட்டமைத்து வந்தது. உண்மை என்னவென்றால், மகாத்மா காந்தி 1930 ஜனவரியில் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்கிய காலத்திலிருந்து தொடர்ந்து அவர் தன் அடித்தளத்தை இழந்து வருகிறார். மக்கள் சட்ட மறுப்பு இயக்கத்தின் பயனற்ற தன்மை காரணமாக அதன் மீதான

நம்பிக்கையை இழந்தது மட்டுமல்லாமல், அதன் பயன் இனியுமே கிடைக்காது என்று சோர்ந்து விட்டார்கள்.

அடுத்து, அவ்வறிக்கையில் காவல்துறை மீது எதிர்பாராத ஓர் குற்றச்சாட்டு இருந்தது. காவல்துறையின் கடும் ஒடுக்குமுறை காரணமாக கிராமங்களில் மக்களின் வாழ்க்கை, தாங்க முடியாத, மிகவும் நிலையற்ற ஒன்றாக மாறியிருப்பதை தாங்கள் எடுத்த சில நிழற்படங்கள் மூலம் தெளிவாக விளக்கப்பட்டிருந்தது. சட்ட மறுப்பு இயக்கம் தீவிரமானபோது, காவல்துறையின் படை 300 ஓய்வுபெற்ற அதிகாரிகளின் மறுசேர்க்கையால் வலிமைப்படுத்தப்பட்டது. மேலும், அவ்வறிக்கை சிறைகளைக் குறித்து கேள்வியெழுப்பி, சிறையில் உள்ள அரசியல் கைதிகளை சந்திப்பதற்கான அனுமதி பெறுவதில் பெரும் சிரமம் இருந்ததாக புகார் தெரிவித்திருந்தது. இறுதியாக, காந்தியத் தொண்டர்கள் மீதான மதராஸ் நிர்வாகத்தின் ஒடுக்குமுறை போக்கை பிரதிநிதிகள் குழு எச்சரித்தது.

ஐரோப்பிய மேட்டுக்குடியினரின் இந்திய வருகை மற்றும் மதராஸ் மாகாணத்தில் சட்ட மறுப்பு இயக்கத்தின்போது இந்தியர்களுக்கு அவர்கள் அளித்த ஆதரவு ஆகியவை இந்திய தேச இயக்கத்தில் ஓர் புதிய சகாப்தத்தைத் தொடங்கியது. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தொடக்க காலத்தில் சுதேசி இயக்கத்திற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவளிக்க எந்த ஐரோப்பியரும் முன் வரவில்லை. அயர்லாந்து, ரஷ்யா, ஸ்காட்லாந்து, மற்றும் இங்கிலாந்திலிருந்து வெகு சில ஆங்கிலேயர்கள் மட்டுமே அன்னி பெசன்ட் அம்மையாரின் தன்னாட்சி இயக்கத்திற்கு தங்களின் தார்மீக ஆதரவை அளித்தனர். அன்னி பெசன்ட் அம்மையார், இந்தியாவிற்கு தன்னாட்சி பெற்றுத் தரும் குறிக்கோளுடன், அதற்காக ஆங்கிலேய அரசியல்வாதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் சில மதபோதகர்களின் ஆதரவைப் பெறும் பொருட்டு 1912இல் லண்டனில் இந்திய தன்னாட்சி கூட்டமைப்பைத் தொடங்கினார். ஆனால் ஆங்கிலேய மேட்டுக்குடியினர் அன்னி பெசன்ட் அம்மையாரின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யாத காரணத்தால் தன்னுடைய இயக்கத்திற்கு அவர்களின் ஆதரவைப் பெறும் முயற்சிகளை அவர் கைவிட்டார்.

தென்னாப்பிரிக்காவின் ஆங்கிலேய அதிகாரிகளுக்கு எதிராக மகாத்மா காந்தி முன்னெடுத்த சட்ட மறுப்பு இயக்கமும், 'அகிம்சை' என்னும் கருத்தியலும் காந்திய திட்டத்தின் நெறிகளையும், விழுமியங்களையும், ஆங்கிலேயப் பத்திரிகைகள் வழியாக பல ஐரோப்பியர்களைச் சென்றடைந்தது. இவற்றையெல்லாம் தாமதமாக உணர்ந்து கொண்ட ஐரோப்பிய மேட்டுக்குடியினர் 1920களில் இந்தியா வந்து மகாத்மா காந்தியை தனிப்பட்ட முறையில் சந்தித்து அவருடனே தங்கவும் செய்தனர். சட்ட மறுப்பு இயக்கத்தை மார்ச் 1930இல் மகாத்மா காந்தி தொடங்கியபோது இவ்வுயர்குடிகள் மற்றும் மதபோதகப் பணியாளர்கள் அதில் முழுமனதுடன் பங்கெடுத்ததோடு காந்திய இயக்கங்களில் இணையுமாறு மற்ற ஐரோப்பியர்களையும் ஊக்கப்படுத்தினர். கதர் உடுத்துவது மற்றும் இயற்கை உணவுகளை உண்பது போன்ற வழக்கங்களைப் பின்பற்றி உண்மையான காந்தியர்களாகவே அவர்கள் மாறினார். காந்திய தேசியவாத கொள்கைகளும் விழுமியங்களும் அவர்களிடையே பெரும் தாக்கத்தை உண்டாக்கிய காரணத்தால் இந்திய சுதந்திரத்திற்காக மகாத்மா காந்தியுடன் அவர்கள் தொடர்ந்து பணி செய்தனர்.


முதல்வர் முத்துலக்குரல் தொடுத்த
வரலாற்றுப் பைக்கட்டபொம்மன்
சீலையெடுத்தவர்
தமிழக முதலமைச்சர்
டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்

16

தியாகத்தின் அடையாளங்கள்: தமிழ்நாட்டின் சுதந்திரப் போராட்ட நினைவுச் சின்னங்கள்

டாக்டர் K.அசோக், டாக்டர் P.சுமபாலா மற்றும் டாக்டர் S.தீபிகா
உதவிப் பேராசிரியர்கள்
சென்னை கிறிஸ்தவக் கல்லூரி மற்றும் காயிதேமில்லத் அரசு மகளிர் கல்லூரி

கடந்த காலத்தை நினைவில் கொண்டுவந்து நிறுத்துவது என்பது ஒருவரின் சுய அடையாளத்தை வரையறுப்பதற்கும், மறுகட்டமைப்பு செய்வதற்குமான ஓர் வழியாகும், அதுவே வரலாற்றின் பிரதான செயல்பாடாகும். கடந்த காலத்தை நினைவில் நிறுத்த பல வழிகள் உண்டு. அதில் புதுமையான ஒரு வழி, நினைவுச் சின்னங்களை சென்று காண்பதும் அவற்றைப் புரிந்து கொள்வதும் ஆகும். நினைவுச் சின்னங்கள் வெறும் செங்கற்களும், கற்களுமே அல்ல, அவை ஒரு நிகழ்வு, ஒரு நிறுவனம் அல்லது ஓர் ஆளுமையின் பிரதிநிதித்துவமாகும். நினைவுச் சின்னங்கள் நம் பண்பாட்டு நினைவுகளின் ஓர் பகுதி; மேலும், அவை நம்மிடம் சொல்லவும், நினைவில் கொள்ளவும், நினைவுகூர்ந்து கொண்டாடவும், சிந்தையில் இறுத்திப் போற்றவும் ஓர் கதையை வைத்திருக்கின்றன.

சுதந்திரப் போராட்ட இயக்கத்துடன் வலிமையாக பிணைக்கப்பட்ட பல நினைவுச் சின்னங்கள் நம் தமிழ்நாட்டில் உள்ளன. இந்த நினைவுச் சின்னங்கள் நம் தியாகிகளின் பங்கு மற்றும் பங்களிப்புகளையும், சில சுதந்திரப் போராட்டகால கட்டிடங்களின் முக்கியத்துவத்தையும் நினைவுபடுத்தும் ஓர் நினைவுக்குறிப்பு உதவியாளராக செயல்படுகின்றன. இவை நம் தலைவர்களுடைய பெரும் தியாகங்களின் மௌன சாட்சிகளாகவும், எதிர்கால சந்ததிக்கு உறுதியான வரலாற்று ஆவணங்களாகவும் திகழ்கின்றன. இந்த அத்தியாயம், சில முக்கிய நினைவுச் சின்னங்கள் குறித்தும், தமிழ்நாடு சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் அடிப்படையில் அவற்றின் இன்றியமையாமை குறித்தும் விவரிக்க முயற்சிக்கிறது. நினைவுச் சின்னங்கள் அவற்றின் செயல்பாட்டு அடிப்படையில் தொட்டுணரக்கூடிய கட்டிட நினைவுச் சின்னங்கள், நிகழ்வு அடிப்படை யிலான நினைவு சின்னங்கள் மற்றும் ஆளுமை அடிப்படையிலான நினைவுச் சின்னங்கள் என விரிவாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

கட்டிட நினைவுச் சின்னங்கள்: செயின்ட் ஜார்ஜ் கோட்டை, வேலூர் கோட்டை, திலக் பவன், வாஞ்சி மணியாச்சி ரயில் நிலையம், பாஞ்சாலங்குறிச்சி கோட்டை மற்றும் காந்தி அருங்காட்சியகம்.

நிகழ்வு அடிப்படையிலான நினைவுச் சின்னங்கள்: திலகர் திடல், திருச்சி உப்பு சத்தியாகிரக நினைவுச் சின்னம் மற்றும் வேதாரண்யம் மற்றும் திருச்சியில் உள்ள உப்பு சத்தியாகிரக நினைவகங்கள்.

ஆளுமை அடிப்படையிலான நினைவுச் சின்னங்கள்: காளையார் கோவில் மருதுபாண்டியர் சகோதரர்கள் நினைவகம், சிவகங்கை வீரமங்கை வேலு நாச்சியார் நினைவகம், தில்லையாடி வள்ளியம்மை நினைவகம், திருவல்லிக்கேணி சுப்பிரமணிய பாரதி இல்லம் மற்றும் எட்டயபுர நினைவகம், திருப்பூர் குமரன் நினைவுச் சிலை மற்றும் ஒட்டப்பிடாரம் வ.உ.சி. நினைவு இல்லம்.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை: இந்தியாவின் முதல் ஆங்கிலேய கோட்டை



ஆங்கிலேயர் 1639இல் செயின்ட் ஜார்ஜ் கோட்டையை நிறுவி சென்னை நகரத்தை நிர்மாணித்தனர். அக்கோட்டை நிறுவப்பட்டது நறுமண சமையல் பொருட்களுக்காகவோ, தங்கத்திற்காகவோ அல்ல, பருத்திக்காகவே அது நிறுவப்பட்டது. இவ்விடத்தின் அண்டைப் பகுதிகளில் கிடைக்கும் பருத்தியின் மூலமே ஆங்கிலேயர் இந்த இடத்தைக் கண்டுபிடித்தனர். செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் தான் ராபர்ட் கிளைவ், எலிஹூ யேல், வாரன் ஹேஸ்ட்டிங்ஸ், வில்லியம் பென்டிங்க் மற்றும் தாமஸ் மன்றோ போன்ற தொடக்ககால ஆங்கிலேய நிர்வாகிகள் தங்கள் தொழில் வாழ்க்கையைத் தொடங்கினர். இக்கோட்டை, நவீனகால நிறுவனங்களின் உருவாக்கத்திற்கான சோதனைக்களமாக விளங்கியது; கிழக்கிந்திய கம்பெனி, மேஜர் ஸ்ட்ரிங்கர் லாரன்ஸால் உருவாக்கப்பட்ட ராணுவப்படை, மற்றும் வங்கித்துறை போன்றவை அவற்றில் சில. 'அட்மிரால்ட்டி இல்லம்' என்றும் அழைக்கப்படும் க்ளைவ் இல்லம், வெலஸ்லி இல்லம் (திப்பு சுல்தானுக்கு சொந்தமான பீரங்கிகள் இவ்வில்லத்தின் கொத்தளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன), மற்றும் நாட்டின் முதல் ஆங்கிலேய தேவாலயமான செயின்ட் மேரி தேவாலயம் போன்ற பல கட்டிடங்கள் இக்கோட்டைக்குள் உள்ளன. இக்கோட்டையின் மிக முக்கியமான கட்டிடமான கோட்டை அருங்காட்சியகம், முன்பு மதராஸ் வங்கி அலுவலகமாக இருந்தது. இந்த அருங்காட்சியகத்தின் மூன்றாம் தளத்தில் சுதந்திரம் கிடைத்த அன்று ஏற்றப்பட்ட தேசியக்கொடி பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும், திப்புவின் மகன்களைப் பணயக் கைதிகளாக வைத்திருந்த லார்ட் கார்ன்வாலிஸ்சின் சர்ச்சைக்குரிய சலவைக்கல் சிலையை அருங்காட்சியகத்தின் தரைத்தளத்தில் காணலாம். இந்த அருங்காட்சியகத்திற்கு ஒருமுறை சென்று பார்வையிட்டால், பார்வையாளர்களை அது காலனித்துவ நாட்களுக்கு அழைத்துச் செல்லும். செயின்ட் ஜார்ஜ் கோட்டை, 1947க்கு முன்பு வரை ஏகாதிபத்திய அதிகாரத்தின் இருக்கையாகப் பார்க்கப்பட்டது; 1947க்குப் பின்பு அது மக்கள் அதிகாரத்தின் இருக்கையாக இருக்கிறது. தற்போது, தமிழ்நாடு அரசின் நிர்வாக மற்றும் சட்டமன்ற அலுவலகங்கள் அதனுள் இருக்கின்றன.

வேலூர் கோட்டை: தமிழ்நாட்டின் பாஸ்டீல்

ஜூலை மாதத்திற்கும் புரட்சிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு; உதாரணம், அமெரிக்க சுதந்திரப் போர் மற்றும் ஃபிரெஞ்சுப் புரட்சி. 10 ஜூலை 1806 அன்று வேலூர் கோட்டையில் ஒரு சம்பவம் நடந்தது; 1857 இந்தியப் பெருங்கலகத்திற்கு முன்னோடியாகக் கருத்தப்பட்ட கலகம், இந்திய வரலாற்றுக் குறிப்பேடுகளில் 'வேலூர் கலகம்' என்று பதிவு செய்யப்பட்டது. சென்னைக்கும், பெங்களூருக்கும் இடையில் உள்ள நகரமான வேலூரில் புகழ்பெற்ற கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி உள்ளது. அக்கோட்டை விஜயநகரப் பேரரசின் சதாசிவராயருக்கு கீழிருந்த சின்ன பொம்மி நாயக்கரால் கி.பி.1566இல் கட்டப்பட்டது.



செவ்வக வடிவத்திலான மூன்று கிலோமீட்டர் சுற்றளவு கொண்ட மொத்த கோட்டையும் மிகப்பெரும் பாறைகளிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட கருங்கற்களால் கட்டப்பட்டது. 1760இல் ஆங்கிலேயரால் ஆக்கிரமிக்கப்பட்ட அக்கோட்டை அவர்களின் இராணுவப் பாதுகாப்பு அரணாக பயன்படுத்தப்பட்டது. நான்காம் ஆங்கிலோ மைசூர் போரில் திப்பு சுல்தான் தோற்கடிக்கப்பட்டபோது, அவருடைய வாரிசுகள் வேலூர் கோட்டையில் காவலில் வைக்கப்பட்டனர். மதராஸ் அரசு அறிமுகப்படுத்திய புதிய விதிமுறைகள் அதிருப்தியை ஏற்படுத்த, 10 ஜூலை 1806 அன்று உள்ளூர் ராணுவ வீரர்கள் திப்புவின் மகன்களில் ஒருவரான ஃபத்தே ஹைதர் தலைமையில் ஆங்கிலேயருக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தினர். இரும்புக்கரங்களைக்கொண்டு ஆங்கிலேயர் அப்புரட்சியை அடக்கினர். ஆங்கிலேயருக்கு எதிரான ராணுவ வீரர்களின் முதல் முயற்சி இதுவே ஆகும். இக்கோட்டைக்குள், திப்பு மஹால், பேகம் மஹால், கண்டி மஹால், ஜலகண்டேஸ்வரர் கோவில், ஒரு மஸ்ஜித், மற்றும் ஒரு தேவாலயம் என மதச்சார்புடைய மற்றும் மதச்சார்பற்ற இருவகைக் கட்டிடங்களும் உள்ளன. ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் இக்கோட்டை மிகக் கடுமையான சிறைகளுள் ஒன்றாக இருந்தது. கண்டியின் கடைசி மன்னரான ஸ்ரீ விக்ரம ராஜசிம்ஹா (மன்னரின் நினைவாக தமிழ்நாடு அரசு ஓர் நினைவகத்தை பின்னர் இங்கு எழுப்பியது) மற்றும் வெள்ளையனே வெளியேறு இயக்க காலத்தில் அம்மு சுவாமிநாதன் போன்ற பல முக்கியமான அரசியல் கைதிகள் இங்கு சிறைவைக்கப்பட்டனர்.

வாஞ்சி மணியாச்சி இரயில் நிலையம்: தமிழ்நாட்டின் பீட்டர்மாரிட்ஸ்பர்க்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலம் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் பல புரட்சிகர இயக்கங்களின் தோற்றத்தைக் கண்டது. தங்களுடைய வீர சாகசங்கள் மற்றும் மகத்தான சுயதியாகங்களை உண்மையான உதாரணங்களாக்கியதன் மூலம் பெருந்திரளான மக்களை பெரும் விழிப்புணர்வு அடையச் செய்ததே அப்புரட்சி இயக்கங்களின் பிரதான பங்களிப்பாக இருந்தது. ஆங்கிலேய ஆட்சியர் ராபர்ட் ஆஷை 1911இல் வாஞ்சிநாதன் படுகொலை செய்தது, அவ்வாறான ஓர் அத்தியாயமே. வ.உ.சியின் சுதேசி நீராவிக் கப்பல் நிறுவனத்தை அழிக்க முனைந்ததிலும், தெற்கு தமிழகத்தில் பின்னர் நடந்த கிளர்ச்சிகளிலும் ஆஷ் முக்கியப் பங்காற்றியதே வாஞ்சிநாதனை ஆத்திரப்படுத்திய காரணங்கள். கிளர்ச்சி சூழலுக்கு வ.உ.சி. மற்றும் சுப்பிரமணிய சிவா இருவருமே பொறுப்பாளர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். அவர்கள் இருவரும் சிறையில் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டதே வாஞ்சிநாதன் ஆட்சியர் ஆஷை படுகொலை செய்ய வித்திட்டது. ஆட்சியர் ஆஷ், தன் மனைவியுடன் 17 ஜூன் 1911 அன்று காலை 9:30 மணிக்கு திருநெல்வேலி இரயில் சந்திப்பிலிருந்து கிளம்பி கொடைக்கானல் செல்லும் மற்றொரு இரயிலைப் பிடிக்க மணியாச்சி இரயில் நிலையம் சென்றடைந்தார். அங்கு இரயில் வருவதற்காக தங்களின் முதல் வகுப்புப் பெட்டியிலேயே அத்தம்பதிகள் காத்திருந்தபோது வாஞ்சிநாதன் பெட்டிக்குள் நுழைந்து ஆஷை சுட்டார். ஆஷை சுட்ட பின்பு வாஞ்சிநாதன் தன்னைத்தானே



சுட்டுக்கொண்டு இறந்தார். அந்நிய ஆட்சியை விரட்டியடித்து சுயராஜ்யத்தை நிறுவ மக்கள் தங்களால் இயன்றதை செய்ய வேண்டும் என்று கூறிய ஓர் கடிதம் வாஞ்சிநாதனின் உடலிலிருந்து கண்டெடுக்கப்பட்டது. இச்சம்பவத்தின் நினைவாக அந்த இரயில் நிலையம் வாஞ்சி மணியாச்சி இரயில் நிலையம் என்று பெயர் சூட்டப்பட்டது. வாஞ்சிநாதனின் பிறப்பிடமான செங்கோட்டையில் தமிழ்நாடு அரசு ஓர் நினைவகத்தையும் எழுப்பியது.

சுப்பிரமணிய சிவா நினைவகம், பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம்
பாரதமாதா கோவில்



சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் பல்வேறு கட்டங்களை புரிந்துகொள்ள தமிழ்நாடு ஓர் மையப்புள்ளியாக இருக்கும். இங்குதான் மக்கள் நாட்டை ஓர் தாய்க் கடவுளாகப் பார்த்தார்கள், மேலும் இந்தியத் தாய்க்கு ஓர் கோவில் எழுப்பவும் திட்டமிட்டார்கள். அது சுப்பிரமணிய சிவாவின் கனவாக இருந்தது. மதராஸ் மாகாணத்தின் முதல் அரசியல் கைதியாக இருந்த அவர் ராஜதுரோகக் குற்றங்களுக்காக பலமுறை சிறையிலடைக்கப்பட்டு துன்பங்களை அனுபவித்தார். ஆங்கிலேயரால் காவலில் எடுக்கப்பட்டபோது சுப்பிரமணிய சிவா நீதிமன்றத்தில் தன்னை தற்காத்துக்கொள்ள திருக்குறளிலிருந்து மேற்கோள் காட்டி வாதாடினார். தமிழ்மீது எல்லையில்லா அன்பும் மதிப்பும் கொண்டிருந்த சிவா, சமஸ்கிருத மொழியிலும் புலமை பெற்றவராக இருந்தார். தனது கருத்தியல் நிலைப்பாட்டின்படி, தமிழ் மொழிமீது கொண்ட அன்பின் காரணமாக சொந்த நாட்டின் மீதான அன்பில் வேற்றுமை இருக்கும் என்பதை அவர் ஏற்கவில்லை. ஒருவரின் தாய்மொழியைக் கைவிடுவது குற்றம் மட்டுமல்ல, அது தற்கொலைக்கு இணையானது என்று அவர் கருதினார். இந்தியத்தாய் பாரத மாதாவிற்கு தர்மபுரியின் பாப்பாரப்பட்டியில் ஓர் கோவிலைக் கட்டி எழுப்பும் முயற்சியாக 1923இல் அதற்கான அடிக்கல்லை நாட்டினார். ஆயினும் அவருடைய சுகவீனம் காரணமாக அவரால் அதைக்கட்ட முடியவில்லை. சுப்பிரமணிய சிவாவிற்கு ஓர் நினைவகத்தை எழுப்பிய தமிழ்நாடு அரசு, அவருடைய கனவை பூர்த்தி செய்யும் விதமாக பாரதமாதா கோவிலையும் கட்டியது.

மதுரை காந்தி நினைவக அருங்காட்சியகம்:
காந்தியிலிருந்து மகாத்மாவான மாற்றத்திற்கு ஓர் சாட்சியம்

பாண்டியர்களின் தலைநகரமான மதுரை, மகாத்மா காந்தியின் வாழ்க்கையில் ஓர் இன்றியமையாத தாக்கத்தை ஏற்படுத்தியது. மதுரையில்தான் 22 செப்டம்பர் 1921 அன்று காந்தி தன் குஜராத்தி உடையைக் கைவிட்டு, இடுப்பில் மட்டும் அணியும் இந்திய உழவர் உடையான அரையாடையைத் தேர்ந்தெடுத்தார். 1959இல் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட மதுரை காந்தி நினைவக அருங்காட்சியகமே மகாத்மா காந்திக்கான முதல் நினைவக அருங்காட்சியகமாகும். இந்த அருங்காட்சியகத்தில், மகாத்மா காந்தி படுகொலை செய்யப்பட்டபோது அணிந்திருந்த ரத்தம் தோய்ந்த அரையாடை, சுப்பிரமணிய பாரதியார், மகாத்மா காந்திக்கு அனுப்பிய வாழ்த்து மடல், மற்றும் காந்தி 'அன்பு நண்பா' என்று தொடங்கி அடால்ஃப் ஹிட்லருக்கு



எழுதிய ஓர் சுவாரஸ்யமான கடிதம் உட்பட மகாத்மா காந்திக்கு சொந்தமான 14 பொருட்கள் உள்ளன. சேவாகிராமத்தில் உள்ள மகாத்மா காந்தியின் குடிசை போன்றே ஓர் 'காந்தி குடில்' இந்த அருங்காட்சியகத்திற்குள் உள்ளது. காந்தியின் வாழ்க்கை தொடர்பான பல நிழற்படங்கள், ஓவியங்கள், சிற்பங்கள், கையெழுத்துப் பிரதிகள், மேற்கோள்கள், மற்றும் 2,70,000 கடிதங்களின் நகல்களும், 62 நுண்பட சுருள்களுடன் இந்த அருங்காட்சியகம் பார்வையாளர்களுக்கு ஓர் காட்சி விருந்தைப் படைக்கிறது.

திருச்சி மற்றும் வேதாரண்யத்தில் உப்பு சத்தியாகிரக நினைவுச் சின்னம்: தமிழகத்தில் தண்டி யாத்திரை

ஒரு பிடி உப்பு வரிவிதிப்பிற்கு எதிராக தொடங்கப்பட்ட வரலாற்று புகழ்மிக்க தண்டி யாத்திரையை பின்பற்றி தொடங்கப்பட்டதே வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகம். தமிழ் புத்தாண்டு நாளான 13 ஏப்ரல் 1930 அன்று திருச்சியின் முக்கிய காங்கிரஸ் பணியாளர் திரு. T.S.S. ராஜன் அவர்களின் இல்லத்திலிருந்து தொடங்கி ஏப்ரல் 28 அன்று அது முடிவடைந்தது. உப்பு வியாபாரி சர்தார் வேதரத்தினம், K. காமராஜ் K. பக்தவச்சலம், P. கக்கன், T.S.S. ராஜன் மற்றும் முக்கியமான பலர் யாத்திரையில் பங்கேற்றனர். "கத்தியின்றி, ரத்தமின்றி, யுத்தமொன்று வருகுது, சத்தியத்தின் நித்தியத்தை, நம்பும் யாரும் சேருவீர்" என்று நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை இயக்கத்தின் மனப்போக்கு மற்றும் சாராம்சத்தை பின்பற்றிப் பாடினார். சத்தியாகிரகிகள் தஞ்சாவூர் மாவட்டத்தை அடைந்தபோது அதன் மாவட்ட ஆட்சியர் J.A. தார்ன், இ.கு.ப., போராட்டக்காரர்களுக்கு யாராவது உணவும், இருப்பிடமும் அளித்தால் ஆறு மாத சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும் என்ற எச்சரிக்கையின் மூலம் யாத்திரையை நிறுத்த நினைத்தார். இயக்க ஆதரவாளர்கள் ஓர் புதுமையான வழியைக் கண்டுபிடித்தனர்; சாலையோரங்களில் உள்ள மரங்களின் கிளைகளில் இரகசியமாக உணவுப் பொட்டலங்களையும், தண்ணீரையும் கட்டித் தொங்கவிட்டனர். இராஜாஜி வெற்றிகரமாக உப்பு வரி சட்டத்தை மீறி கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட பலரில், ருக்மணி லட்சுமிபதி உப்பு சத்தியாகிரக இயக்கத்தில் பங்கேற்று சிறைத் தண்டனையை அனுபவித்த முதல் பெண்மணி ஆவார். இந்நிகழ்வின் நினைவாக, திருச்சி இரயில் நிலையத்திற்கு செல்லும் சந்திப்பில் இரு நினைவுத் தூண்களை தமிழ்நாடு அரசு நிர்மாணித்துள்ளது. முதல் நினைவுத்தூண் 1973லும் இரண்டாவது 1986லும் நிர்மாணிக்கப்பட்டது. இதேபோன்று,



வேதாரண்யம் மற்றும் நாகப்பட்டினத்தில் உப்பு சத்தியாகிரக நினைவகங்களை தமிழ்நாடு அரசு நிறுவியது.

திலகர் திடல்: சுயராஜ்யத்துக்கான எழுச்சிக் குரல்



பொதுமக்கள் அரசியலில் முக்கியப் பங்காற்றினர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் நம் தலைவர்கள் நாடெங்கும் பயணித்து தங்களின் அனல் தெறிக்கும் பேச்சுகளால் தேசிய உணர்வை உயிர்ப்புடன் வைத்திருந்தார்கள். மதராசில் பெரும்பாலான தலைவர்கள் மெரினா கடற்கரையில் மக்களுக்கு உரை நிகழ்த்தினார்கள். சுப்பிரமணிய சிவா 1908இல் மெரினா கடற்கரையில் உள்ள ஓர் இடத்திற்கு திலகரை கௌரவிக்கும் விதமாக 'திலகர் கட்டம்' என்று பெயர் சூட்டினார். "வங்காள விரிகுடா ஓரத்தில் உள்ள மதராஸ் நகரின் மெரினா கடற்கரையின் வெள்ளி மணல் படுக்கையில் தான் பெரும் அரசியல் தலைவர்கள் மக்களிடையே உரையாற்றி அவர்களின் தேச உணர்வுகளை எழுச்சி பெறச் செய்வார்கள்," என்ற வாசகம் மெரினா கடற்கரையில் உள்ள திலகர் திடல் நினைவுக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் மகாத்மா காந்தி ஏழு பொதுக்கூட்டங்களில் உரையாற்றி இருக்கிறார். நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், லாலா லஜபதி ராய், C.R. தாஸ் வ.உ. சிதம்பரம், பிபின் சந்திர பால், நேரு, இராஜாஜி, G. சுப்பிரமணிய ஐயர், S. சத்தியமூர்த்தி, K. காமராஜ் போன்ற பல தேசத் தலைவர்கள் இவ்விடத்தை தங்கள் உரைகளை நிகழ்த்த பயன்படுத்தி இருக்கிறார்கள். துர்காபாய் தேஷ்முக் தலைமையில் 1930இல் பெரும் எண்ணிக்கையிலான பெண்கள் இவ்விடத்தில் ஒன்றிணைந்து உப்பு சத்தியாகிரகத்தில் பங்கேற்றார்கள்.

திலக் மாளிகை: ஒத்துழையாமை இயக்கத்தின் பிறப்பிடம்



சுதந்திர இயக்கத்தில் சென்னைக்கு ஓர் சிறப்பு வாய்ந்த இடம் உண்டு. அதில் திலக் மாளிகை முக்கியமான ஒன்றாகும். தி இந்து நிறுவனரான கஸ்தூரிரங்க ஐயங்காரின் இல்லமாக இருந்த அந்த இடத்தில் தற்போது வெல்கம் ஹோட்டல் உள்ளது. பல சுதந்திரப் போராட்ட வீரர்கள் இங்கு தங்கி இருந்தனர். கடும் எதிர்ப்புக்கிடையில் ரௌலட் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது, 1919 மார்ச் மாதத்தின் 18 மற்றும் 19ஆம் தேதியில் மகாத்மா காந்தி இங்கு தங்கியிருந்தார். இச்சட்டம் மகாத்மா காந்தியைப் பெரிதும் காயப்படுத்தியது; அவரை தூங்கவிடாமல் செய்து அவர் கனவுகளில் பொது வேலைநிறுத்தம்

என்னும் எண்ணத்தை ஏற்படுத்தியது, அதுவே பின்னர் அகிம்சாவழி ஒத்துழையாமை இயக்கமாக மலர்ந்தது. நினைவுத்தூண் கல்வெட்டில் அக்கட்டடத்தைக் குறித்தும், அதன் முக்கியத்துவம் குறித்தும், தமிழிலும், ஆங்கிலத்திலும் விவரங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவ்விடம் குறித்து கூறுகையில், ஓர் நினைவுகூரத்தக்க மாலையை செலவிட்டேன் என்று மகாத்மா காந்தி எழுதினார் "பொது வேலை நிறுத்தத்தை அனுசரிக்குமாறு நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுக்க வேண்டும் என்ற அந்த எண்ணம் உதித்தபோது நான் உறக்கத்திற்கும், நினைவிற்கும் இடையிலான அந்திமாலை நிலையில் தான் இருந்தேன்."

பாஞ்சாலங்குறிச்சி கோட்டை: வீரம் மற்றும் துரோகத்தின் கலவை



தமிழ்நாட்டின் தூத்துக்குடியில் இருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள பாஞ்சாலங்குறிச்சி, காலனித்துவ எதிர்ப்பில் பெரும் வீர பாரம்பரியம் கொண்ட ஒரு வரலாற்றுப் புகழ்பெற்ற சிறிய கிராமம் ஆகும். அச்சிறு கிராமம் ஒரு காலத்தில் பாஞ்சாலங்குறிச்சி பாளையத்தின் பரபரப்பான கோட்டை வளாகத்திற்குள் ஓர் முதன்மையான கிராமமாக இருந்தது. கருநாடகப் போர்களின்போது ஆங்கிலேயருக்கு தான் செலுத்த வேண்டிய கடனுக்கு பதிலாக ஆற்காடு நவாப் அப்பகுதியில் வரி வசூலிக்கும் உரிமையை அவர்களுக்கு அளித்தார். பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரரான வீரபாண்டிய கட்டபொம்மன் கிழக்கிந்திய கம்பெனிக்கு தான் செலுத்த வேண்டிய வரி நிலுவையைத் தர மறுத்து, அவர்களுக்கு எதிராக தீவிர சதியாலோசனையில் ஈடுபட்டார்.

இதன் விளைவாக, அவருடைய எதிர்ப்பு மேலும் கவனிக்கத்தக்க ஒன்றாக ஆன பின்பு, கம்பெனி பாஞ்சாலங்குறிச்சி கோட்டையின்மீது தாக்குதல் நடத்தி கட்டபொம்மனை கைதுசெய்து கொண்டுவருமாறு மேஜர் ஜான் பேனர்மேன் தலைமையில் ஓர் படையை அனுப்பியது. பாஞ்சாலங்குறிச்சி கோட்டையின் வெளிப்புறச் சுவர்கள் பெரும் கருங்கற்களால் கட்டப்பட்டவை. கொத்தனாரால் கட்டப்பட்ட கோட்டையைவிட மேம்பட்டதாக இல்லாவிட்டாலும், கடுமையான சூரியனால் சுடப்பட்ட மண் சுவர்கள் அதற்கு இணையாகவும் ஆங்கிலேய பீரங்கிகளை அடிக்கடி கடும் சோதனைக்கு உட்படுத்தக் கூடியதாகவும் இருந்தன. கம்பெனி மிகுந்த ஆக்ரோஷத்துடன் தாக்குதலை நடத்தியபோது, கட்டபொம்மன் தன் வீரர்களுடன் கோட்டையைவிட்டு வெளியேறி நாடோடியாக சுற்றித் திரிந்தார். சிறிது காலத்துக்குப்பின் புதுக்கோட்டை மன்னர் விஜய ரகுநாத தொண்டைமானின் படை வீரர்கள் அவரைப் பிடித்து ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தனர்.

வழக்கு நடத்தப்பட்டு கட்டபொம்மனுக்கு மரண தண்டனை தீர்ப்பாக அளிக்கப்பட்டது. 16 அக்டோபர் 1799 அன்று கயத்தாறில் அவர் தூக்கிலிடப்பட்டார். கம்பெனியின் பழிவாங்கும் நடவடிக்கை கட்டபொம்மன் மற்றும் சக வீரர்களோடு நின்று விடவில்லை. மாறாக, அக்கோட்டையோடு தொடர்புடைய பொருட்களையும், நினைவுகளையும்

ஒட்டுமொத்தமாக அழிக்க வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. முதலில், பாஞ்சாலங்குறிச்சி என்னும் பெயர் அனைத்து ஆதாரப்பூர்வமான ஆவணங்களிலிருந்தும் நீக்கப்பட்டது. அடுத்து, அரண்மனை வளாகம் உட்பட பாஞ்சாலங்குறிச்சி மண் கோட்டை முழுவதுமாக இடித்துத் தள்ளப்பட்டது. இறுதி நடவடிக்கையாக, கோட்டை அரணின் அடையாளமாகத் திகழ்ந்த அதனைச்சுற்றி வளர்ந்திருந்த காஞ்சியம் மற்றும் செஞ்சி புதர்களை வேரோடு பிடுங்கியெறிந்துவிட்டு அங்கு உப்பும், ஆமணக்கு விதைகளும் தூவப்பட்டது.

பழைய கோட்டையின் இடிபாடுகளை அகற்றி அதற்கருகே 1974இல் அப்பெரும் வீரனின் நினைவாக நவீன பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை தமிழ்நாடு அரசு கட்டியது. புதிய கோட்டை, சில அடுக்குகள் கொண்ட கோபுர வடிவ கூரை மற்றும் இலை வடிவிலான சாளரங்கள் கொண்ட ஓர் அற்புதமான கட்டடமாக இருந்தது. கட்டபொம்மனின் வீர வரலாற்றை பறைசாற்றும் விதமான அழகிய வண்ணமயமான ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கட்டபொம்மனின் குலதெய்வமான தேவி ஜக்கம்மாளுக்கு ஒரு கோவிலும் அக்கோட்டைக்குள் எழுப்பப்பட்டது. கோவிலின் வாயிற்கதவில் அவர்களுடைய குடும்பச் சின்னமான இரு வாள்களும் கேடயமும் பொறிக்கப்பட்டிருந்தன. இப்புதிய கோட்டையின் சுற்றுப் பரப்பிற்கு அருகிலேயே பழைய கோட்டையின் இடிபாடுகளைக் காணலாம். மறுகட்டமைப்பு செய்யப்பட்ட கோட்டை, கட்டபொம்மன் நடத்திய கிளர்ச்சியின் நினைவைக் கொண்டாடவும், பாதுகாக்கவும் செய்கிறது; மேலும் அது தமிழ் மக்களுக்கு ஓர் தேசியப் பெருமையை அளிப்பதோடு, அவர்களின் உத்வேகத்திற்கான ஆதாரமாகவும் திகழ்கிறது.

மருது பாண்டியர் சகோதரர்களின் நினைவகம், காளையார் கோவில்: இரட்டை தியாகத்தின் களம்



மதுரையிலிருந்து 64 கி.மீ. தொலைவில் உள்ள காளையார் கோவிலில் மருதுபாண்டியர் நினைவகம் உள்ளது. அன்றைய மதுரை மாவட்டத்திற்கு உட்பட்டிருந்த காளையார்கோவில் தற்போது சிவகங்கை மாவட்டத்திற்கு உட்பட்டதாக இருக்கிறது. காளையார்கோவிலின் ஆலயத்திற்கு அருகே நல்லடக்கம் செய்யப்பட்ட வீரமிக்க இரட்டையர்களை நினைவுகூரும் வகையில் அங்கேயே நினைவகம் அமைக்கப்பட்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க நகரமான காளையார்கோவிலில் புகழ்பெற்ற சிவன் ஆலயம் உள்ளது. அவ்வாலயம் ஆன்மீகத் தலமாக மட்டுமல்லாமல், போர்க்காலங்களில் ஓர் ராணுவ வலிமைமிக்க கோட்டையாகவும் திகழ்ந்தது.

ஒரு காலத்தில் சிவகங்கைச் சீமையை கட்டியாண்ட மருது சகோதரர்கள் ராஜ பரம்பரையிலிருந்து வந்தவர்களோ, உயர் செல்வந்த குடும்பத்தில் பிறந்தவர்களோ அல்ல. மாறாக, நாட்டின் இராணுவப் படிநிலையில் கீழ்படியிலிருந்து மேலெழும்பி இந்த நிலைக்கு வந்தவர்கள். சிவகங்கை ராஜாங்கத்தின் மன்னரான முத்து வடுகநாத தேவரிடம்

சிப்பாயாகப் பணிபுரிந்த மொக்க பழனிச்சாமி தேவரின் மகன்கள், தங்களின் வீரதீரச் செயல்களால் விரைந்து வளர்ந்து பெரும் புகழையும் 'பாண்டியர்' என்னும் பட்டத்தையும் அடைந்தார்கள். அவர்களுடைய தீரமான வளரியின் வீச்சில் (பூமராங் போன்ற ஆயுதம்) எதிரிகள் சிதறி ஓடினார்கள் என்று அவர்களின் வீரத்தைப் போற்றும் நாட்டுப்புறப் பாடல்கள் இன்றும் அப்பகுதிகளில் பாடப்படுகின்றன. ஆயினும் அவர்களுடைய குலத் தலைவரான சிவகங்கை மன்னர் நவாப் ஆங்கிலேய கூட்டணியின் சதியால் படுகொலை செய்யப்பட்டபோது அந்த ராஜாங்கம் முடிவுக்கு வந்தது. மருது சகோதரர்கள் சிவகங்கையின் முதல் ராணியான வேலு நாச்சியாருடன் இணைந்து, மைசூர் படைகளின் துணையோடு இழந்த ராஜாங்கத்தை மீண்டும் கைப்பற்றினர்.

வேலு நாச்சியாரின் எதிர்பாராத மரணத்திற்குப் பின்பு ஆங்கிலேயருக்கு எதிரான போரில் இவ்விரட்டையர்கள் முக்கியப் பங்காற்றினார்கள். கட்டபொம்மனின் சகோதரர்களான ஊமைத்துரை மற்றும் செவத்தையாவை சிறையிலிருந்து தப்பிக்கச் செய்ததன் மூலம் பாளையக்காரர்களுடன் ஓர் இரகசிய கூட்டணியை ஏற்படுத்திக் கொண்டார்கள். ஆங்கிலேயர் தப்பித்த இருவரையும் ஒப்படைக்குமாறு கேட்டபோது இவர்கள் மறுத்து விட்டார்கள். இப்பெருந்தன்மைமிக்க செயலுக்கு விலையாக ஆங்கிலேயருடன் ஓர் போரில் இறங்க வேண்டிய சூழலுக்கு சகோதரர்கள் தள்ளப்பட்டார்கள். இறுதியாக மருது சகோதரர்கள் அவர்களுடைய உறவினர்களோடு திருப்பத்தூரில் தூக்கிலிடப்பட்டார்கள். எஞ்சி இருந்த ஒரே ஆண் வாரிசான துரைசாமியும் அவருடன் 70 கிளர்ச்சியாளர்களும் வேல்ஸ் இளவரசர் தீவிற்கு நாடு கடத்தப்பட்டார்கள். அந்தப் போர் அவ்விரு வீரர்களை மட்டுமன்றி, அவர்களின் ஒட்டுமொத்த வம்சத்தையும் பலி கொண்டது. பழம்பெரும் அப்போர் வீரர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் காளையார்கோவில் நினைவகமானது, உள்நாட்டு மக்களின் விடுதலை தாகத்தையும், அவர்களுடைய வீரத்தையும் குறிக்கும் ஓர் இடமாகும். காளையார் கோவிலில் உள்ள ஆலயத்தின் கோபுரம், சுதந்திரத்திற்கான நேர்மையான பாதையில் பாடுபட்ட மருது சகோதரர்களுடைய தியாகத்தின் பிரம்மாண்டத்தைக் குறிக்கும் விதமாக மண்ணிலிருந்து விண்ணுக்கு நீண்டிருக்கும்.

வீரமங்கை வேலுநாச்சியார் நினைவகம், சிவகங்கை: ராணியும், கம்பெனியும்

ராணி வேலு நாச்சியாரின் பெயர் இடம்பெறாமல் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஆண்டுக்குறிப்பு முழுமை அடையாது. அவருடைய துணிச்சலான செயல்பாடுகளும், அரசியல் மதிநுட்பமும் அவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த எந்தவொரு ஆணுக்கும் குறைந்ததல்ல. மதுரையில் இருந்து 50 கிலோமீட்டர் தொலைவில் உள்ள சிவகங்கை நகரில் உள்ள வீரமங்கை வேலு நாச்சியாரின் நினைவகம், ஆங்கிலேய காலனித்துவத்துக்கு எதிராக சுதந்திரப் போராட்டத்தில் அவருடைய இணையற்ற பங்களிப்புகளை பிரதிபலிக்கும் விதமான ஓர் உயிர்ப்புடன் கூடிய அமைப்பாகும். வேலு நாச்சியார் ராமநாத சேதுபதிகளின் ராணுவ அரச குடும்ப வழித்தோன்றல் ஆவார். அனைத்து முதன்மையான போர் நுட்பங்களிலும் பயிற்சி பெற்ற அவர், மற்ற வகையான அறிவு நுட்பங்களிலுல் பயிற்றுவிக்கப்பட்டவர் ஆவார். சிவகங்கை மன்னர் முத்து வடுகநாத தேவரை மணந்த பின்பு அவர் ராணி என்னும் அந்தஸ்தைப் பெற்றார். சுதந்திர உணர்வில் சிவகங்கை மன்னரும் அவருடைய இணையருக்கு சற்றும் குறைந்தவர் இல்லை. தென் தமிழகம் முழுவதையும் கைப்பற்றிய கம்பெனி, வரி கேட்டு பாளையக்காரர்களை கசக்கி வந்த நிலையில், அதை முதன்முதலில் எதிர்த்தவர்களில் சிவகங்கை மன்னரும் ஒருவர். இதன் விளைவாக, கிழக்கிந்திய கம்பெனியின் சதிகார அடியாட்களால் முத்து வடுகநாத தேவர்



படுகொலை செய்யப்பட, ராஜாங்கம் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்குக்கீழ் சென்றது. போர் வியூகத்தின்படி தன்னுடைய விசுவாசமான தளபதிகளான மருது பாண்டியர்களுடன் பின்வாங்கிய வேலுநாச்சியார், திண்டுக்கல் விருப்பாட்சி மன்னரின் கோட்டைக்குள் தஞ்சமடைந்தார். அங்கிருந்து தான் அவர் மைசூர் படைகளின் அரசியல் மற்றும் இராணுவ உதவிகளைப் பெற்றார். 1780இல் கோபால நாயக்கர் மற்றும் ஹைதர் அலியின் திறன்மிகு வழிகாட்டலில், எதிரிகளை பழி தீர்க்க வேலு நாச்சியார் சிவகங்கை நோக்கி தன் படையை அணிவகுத்துச் சென்றார். அணிவகுத்துச் சென்ற இராணுவப் படையின் வரிசையை தலைமை தாங்கி வழிநடத்திய தலைவர்களின் வரம்பு மருது சகோதரர் தொடங்கி குயிலி வரை எளிமையான பின்னணி கொண்டதாக இருந்தது. காலம் காலமாக திணிக்கப்பட்ட சாதிய, பாலினப் பாகுபாடுகளைக் கடந்து அனைத்து தரப்பு மக்களையும் உள்ளடக்கிய அப்படையின் சமூகமதக் கலவை அமைப்பு அதன் மிகக் குறிப்பிடத்தக்க அம்சமாக விளங்கியது. இறுதியில், வேலு நாச்சியார் இந்தியாவில் ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடிய முதல் ராணியாக மட்டுமல்ல, இழந்த அரியணையை மீண்டும் கைப்பற்றிய முதல் அரசியாகவும் மாறினார்.

திருவல்லிக்கேணி சுப்பிரமணிய பாரதி இல்லம் மற்றும் எட்டயபுர நினைவகம்: கடிதங்களின் சக்தி

வங்கத்தின் ரவீந்திரநாத் தாகூர் போன்றே தமிழகத்தின் சுப்ரமணிய பாரதி உள்ளிட்ட தேசப்பற்றுமிக்க கவிஞர்களின் வரிசையால் இந்திய சுதந்திர இயக்கத்தின் பதாகை உயர்த்திப் பிடிக்கப்பட்டது. சுப்பிரமணியனாக திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரத்தில் (தற்போது தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ளது) 1882இல் பிறந்த அவருக்கு, அவ்விடமே அவருடைய வரலாற்றை நினைவுகூரும் விதமாக ஓர் நினைவகம் எழுப்பப்பட்டுள்ளது. 11 வயதில் 'பாரதி' என்னும் பட்டத்தை எட்டயபுர அரசரிடமிருந்து அவருடைய கவிதைப்



புலமைக்காகப் பெற்றார். பின்னர் அவர் காசிக்கு சென்றபோது அந்நகரம் அவருக்குள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. காசியில்தான் சமூக அமைப்புகளுக்கு எதிராக கிளர்ச்சி செய்யும் விதமான அவருடைய புகழ்பெற்ற தலைப்பாகை, முறுக்கு மீசை, மற்றும் கலைந்த தாடி தோற்றத்தை அவர் ஏற்றார். அதன்பின் மதராஸ் வந்தடைந்த அவர் பல்வேறு விதமான இதழ்களிலும், செய்தித்தாள்களிலும் தொடர்ந்து தீவிரமாக எழுதத் தொடங்கினார். அச்சு ஊடகத்தை தேசியப் பிரச்சாரக் கருவியாகப் பயன்படுத்தி, இந்திய மக்களை சுதந்திரப் போராட்டத்தை நோக்கி திருப்பும் விதமான தன்னுடைய தேசப்பற்றுமிக்க கவிதைகளையும், பாடல்களையும் அவர் வெளியிட்டார்.

அவருடைய கவிதைகளின் குறிப்பிடத்தக்க அம்சங்களாக இருந்தவை: தமிழ் மொழியின் மீதான அவருடைய அன்பு, தாய்நாடு (பாரதமாதா), தேசியத் தலைவர்களின் தியாகங்கள், ஆன்மீகம், சமூக சீர்திருத்தம், மற்றும் எதிர்கால சுதந்திர இந்தியாவுக்கான அவருடைய கனவுகள். தன்னுடைய 'புதிய ரஷ்யா' என்னும் தலைப்பிலான கவிதையின் மூலம் ரஷ்ய புரட்சியை முதலில் வரவேற்ற சில இந்தியர்களில் அவரும் ஒருவர். "நம் ரஷ்ய நண்பர்களின் நேர்மையான முயற்சிகளை ஈசன் ஆசீர்வதிக்கட்டும்", என்று தன் கவிதையில் அவர் விவரிக்கிறார்.

இருப்பினும் ஆங்கிலேய காலனித்துவ நாட்டில் கொடூரமான அரச ஒடுக்குமுறைக்கும், கடுமையான தணிக்கைக்கும் பாரதி உள்ளாக வேண்டியிருந்தது. அவர் எழுதியவற்றை வெளியிட்டு வந்த பல நாளிதழ்கள் மற்றும் வார இதழ்கள், தேசத் துரோக குற்றம் சுமத்தப்பட்டு தடை செய்யப்பட்டன. விரைவில் பாரதி, மற்ற புரட்சியாளர்களைப்போல, ஃபிரெஞ்சு ஆளுகைக்குகீழ் இருந்த பாண்டிச்சேரியில் தஞ்சம் புகுந்தார். தமிழ்நாட்டிலிருந்து வெளியேறி பாண்டிச்சேரியில் இருந்த காலத்தில்தான் அவருடைய பல புகழ்பெற்ற இலக்கியங்களை அவர் படைத்தார். அதன்பின் அவர் ஆங்கிலேய இந்தியாவுக்குள் நுழைய

முயன்றபோது கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அந்தக் காலத்திற்குள் அவர் வறுமையில் உழன்று, நோயினால் உடல் நலிந்தவர் ஆனார். சிறைவாசம் அவருக்குள் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியது, 1920இல் பிறப்பிக்கப்பட்ட பொதுமன்னிப்பு ஆணை அவருடைய பயண வரம்புகளை நீக்கியபோதும், அவர் ஏற்கனவே பொருளாதாரத்திற்கான போராட்ட நிலையில் இருந்தார். இறுதியில், அவருடைய உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டு, சென்னை, திருவல்லிக்கேணியில் உள்ள அவர் வீட்டில் மரணமடைந்தார். அவர் தங்கியிருந்த வீடு, தமிழ்நாடு அரசால் 1993இல், மறுசீரமைக்கப்பட்டு 'பாரதி இல்லம்' என்று பெயர் சூட்டப்பட்டது.

வ. உ. சி. நினைவு இல்லம், ஓட்டப்பிடாரம்: கப்பல், வேலை நிறுத்தம் மற்றும் சுதேசி கதை

கப்பலோட்டிய தமிழன் என்று அழைக்கப்படும் வ.உ. சிதம்பரம், 'சுதேசி' என்னும் பன்முக கருத்தியலை மதராஸ் மாகாணத்தில் முன்னெடுத்த சிலரில் ஒருவர். அக்கருத்தியலை தேச நோக்கத்திற்காகவும், மக்களை விடுவிக்கவும் அவரால் இயன்ற அத்தனை வழிகளிலும் பயன்படுத்தினார். தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஓட்டப்பிடாரத்தில் 5 செப்டம்பர் 1872 அன்று அவர் பிறந்தார். 1905 வங்கப் பிரிவினைக்குப் பின்னர், வ.உ.சி. உலகியல் வாழ்க்கையிலிருந்து தன்னைப் பிரித்துக்கொண்டு தேச நோக்கத்திற்கு தன்னை முழுவதுமாக ஒப்படைத்தார். "சுயராஜ்யம் என்னுடைய பிறப்புரிமை, அதை நான் அடைந்தே தீருவேன்" என்னும் வீரிய முழக்கமே பால கங்காதர திலகரின் தீவிர சீடரான வ.உ.சி.யின் உணர்வும், கருத்துமாக இருந்தது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள சுதேசி தலைவர்கள் 1906இல் சுதேசியம் என்னும் நோக்கத்திற்காக வ.உ.சி. தலைமையில் பாளையங்கோட்டையில் ஒன்றிணைந்தார்கள். இதன் விளைவாக சுதேசிக் கொள்கைகள் உருவாக்கப்பட்டு வணிகத்தில் ஆங்கிலேயரின் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் நோக்கில், தூத்துக்குடி தொழில்கள் நல சங்கம், தர்ம சங்க நெசவு சாலை (உள்ளூர் தயாரிப்பு துணிகளை ஊக்குவிக்கும் பொருட்டு), தேசிய பண்டகசாலை (சுதேசி பொருட்களை விற்கும் கடை) போன்ற உள்ளூர் அமைப்புகள் உருவாக்கப்பட்டன. ஆயினும், அப்பகுதியின் மக்கள் உணர்வை எழுச்சிபெறச் செய்த சுதேசி இயக்கம், வ.உ.சி, பாண்டித்துரை தேவர், மற்றும் ஃபாக்கீர் முகமது ஆகியோருடனான



கூட்டு முயற்சியில் சுதேசி நீராவி கப்பல் நிறுவனம் (SSNC) என்னும் சுதேசி நீராவிக் கப்பல் நிறுவனத்தை ஆங்கிலேய இந்திய நீராவிக் கப்பல் நிறுவனத்தின் ஏகபோகத்துக்கு எதிராகத் தொடங்கியபோதே அது தேச கவனத்தைப் பெற்றது. எஸ்.எஸ். கலியா மற்றும் எஸ்.எஸ். லாவோ என்னும் பெயரில் இரண்டு நீராவிக் கப்பல்களை வ.உ.சி. வாங்கினார். அவருடைய தோழர் பாரதி, இது குறித்து தனது இந்தியா இதழில் எழுதியபோது "குழந்தை இல்லாமல் இருந்த ஒரு தாய் இரட்டைக் குழந்தைகளை பெற்றெடுத்தபோது பெறும் மகிழ்வைப்போல, தற்போது நம் பாரதமாதாவும் இரண்டு கப்பல்களை பெற்றிருப்பதன் மூலம் பெருமையும், மகிழ்ச்சியும் அடைவாள்" என்று குறிப்பிட்டார். கப்பல் நிறுவனத்துக்கு புரவலர்களின் ஆதரவும் அதன் பிரபல தன்மையும் அதிகரித்தபோது ஆங்கிலேயர் அந்நிறுவனத்தை நசுக்க அனைத்து முயற்சிகளும் செய்தனர்.

இருப்பினும் வ.உ.சி யின் அரசியல் செயல்பாடு மேட்டுக்குடி செல்வந்தர்களுக்கும் படித்தவர்களுக்கும் மத்தியிலேயே நின்றுவிடவில்லை, அவர் ஒடுக்கப்பட்ட மக்களின் நன்மைகளுக்காகவும் பாடுபட்டார். 1908இல் வ.உ.சி, சுப்பிரமணிய சிவாவுடன் இணைந்து பவழ ஆலை தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு, வாராந்திர விடுமுறை, மற்றும் மற்ற தொழிலாளர் நன்மைகளையும் வழங்க வேண்டும் என்று கூறி வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தார். கூலி உயர்வு மற்றும் தொழிலாளர் உரிமைகள் உழைப்பாளர் வர்க்கத்தை அணிதிரட்ட உதவியதோடு அந்த வேலை நிறுத்தம் தேசிய அரங்கிற்கு கடத்தப்பட்டு சுதேசி சொல்லாட்சியாக மாறியது. "வந்தே மாதரம்" என்னும் முழக்கம் தொழிற்சாலைகளின் புகைபோக்கிகளிலும், ஆங்கிலேயரின் அலுவலகங்களிலும் தூத்துக்குடியின் வீதிகளிலும் ஒன்றுபோலவே எதிரொலித்தன.

வ.உ.சி.யின் அரசியல் ஈடுபாடு 1908 வாக்கில் ஆங்கிலேயரின் கவனத்தை ஈர்த்தது. உள்ளூர் அதிகாரிகளை எதிர்த்தபடி, பிபின் சந்திர பால் அவர்களின் விடுதலையைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்த காரணத்தால் வ.உ.சி, சுப்பிரமணிய சிவா, மற்றும் பத்மநாப ஐயர் ஆகியோருக்கு நீதிமன்ற அழைப்பு விடுக்கப்பட்டு மூவரும் ராஜத்துரோக குற்றத்துக்காக கைது செய்யப்பட்டார்கள். அவர்களது கைதுக்குப்பின் மக்கள் போராட்டம் பரவலாக வெடித்தது. இறுதியில், வ.உ.சி. குற்றம் புரிந்தவர் என்று தீர்ப்பளிக்கப்பட்டு அவருக்கு கடும் ஆயுள் சிறைத்தண்டனை அளிக்கப்பட்டது. சிறைவாசத்தின்போது ஆயுள் தண்டனைக் கைதியாக நடத்தப்பட்டு, கடுமையான வேலைகள் செய்யும்படி வ.உ.சி. கட்டாயப்படுத்தப்பட்டார். மாடுகளைக் கொண்டு செக்கிழுத்து எண்ணெய் பிழியும் இயந்திரத்தில் மாட்டிற்கு பதிலாக அவரைக் கட்டி இழுக்குமாறு துன்புறுத்தினார்கள், இதன் காரணமாகவே 'செக்கிழுத்த செம்மல்' என்னும் அழியாப் பெயரை அவர் பெற்றார். சிறைக்காலம் அவருடைய உடல்நிலையை பாதித்ததோடு, அவரையும், குடும்பத்தாரையும் வறுமையிலும் தள்ளியது. பின்னர் இந்திய சுதந்திரத்திற்காகவும், தமிழ் மறுமலர்ச்சிக்காகவும் அவர் தொடர்ந்து பணியாற்றினார். இறுதியில், உடல் நலமின்மை மற்றும் வறுமை காரணமாக 18 நவம்பர் 1936 அன்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தூத்துக்குடி அலுவலகத்தில் மரணத்தைத் தழுவினார். இம்மாபெரும் ஆளுமைக்கு, தூத்துக்குடியிலிருந்து 33 கி.மீ. தொலைவில் உள்ள ஒட்டப்பிடாரத்தில், தமிழ்நாடு அரசு ஓர் நினைவு இல்லத்தை எழுப்பியது.

தில்லையாடி வள்ளியம்மை நினைவகம்: பெருங்கடல் கடந்து ஓர் விடுதலைக் குரல்

"குழந்தையும் அல்ல, குற்றவாளியும் அல்ல", 16 வயது வள்ளியம்மை ஒரு புரட்சிகரமான சுதந்திரப் போராட்ட வீராங்கனை; அதற்காகவே கொடூரமான காலனித்துவ நிர்வாகத்தால் சிறையில் தள்ளப்பட்டவர். தென்னாப்பிரிக்காவில் இருந்தபடி மகாத்மா காந்தியின் சத்தியாகிரக போராட்டத்திற்கு ஆதரவளித்த வள்ளியம்மையை மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் சத்தியாகிரகம் என்னும் தன் நூலில் 'ஓர் தன்னலமற்ற சத்தியாகிரகி' என்று பெருமையாக குறிப்பிட்டுப் பாராட்டினார். தென்னாப்பிரிக்காவில் குடியேறிய நல்ல வசதிமிக்க தமிழ் தம்பதியர்க்கு 22 பிப்ரவரி 1898 அன்று ஜொகன்னஸ்பர்க் நகரில் வள்ளியம்மை பிறந்தார். அவருடைய பெற்றோர் இந்தியாவின் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள தில்லையாடி என்னும் சிறு கிராமத்திலிருந்து வந்த காரணத்தால் அவருக்கு தில்லையாடி என்னும் முன்னொட்டு அளிக்கப்பட்டது.

இந்தியர்களுக்கு எதிரானதாக மாறிவரும் ஒரு சூழலில் தில்லையாடி வள்ளியம்மை வளர நேரிட்டது. தென்னாப்பிரிக்காவுக்கு வெளியில், இந்தியப் பாரம்பரிய முறையில் நடத்தப்பட்ட திருமணங்கள் சட்டத்திற்குப் புறம்பானவை என்கிற 14 மார்ச் 1913 தேதியிலான தென்னாப்பிரிக்க நீதிமன்ற அறிவிவிப்பின்படி தான் ஓர் முறையற்ற குழந்தையாக மாற்றப்பட்டபோதே, வள்ளியம்மை தென்னாப்பிரிக்காவில் நிலவிய இனவெறியின் தாக்கத்தை முதன்முதலில் உணர்ந்தார். இதன் விளைவாக வள்ளியம்மையும், அவருடைய தாய் மங்களத்தம்மாளும் அத்தகைய பாரபட்சமான சட்டங்களுக்கு எதிரான பேரணியில் வீரமிக்க பெண்கள் படையில் தங்களை இணைத்துக்கொண்டு 23 அக்டோபர் 1913 அன்று ஜொகன்னஸ்பர்கிலிருந்து நியூகாஸ்ட்ல் நகருக்கு நடைபயணம் சென்றனர். காலனித்துவ காவல்துறை அவர்களை ஒடுக்கும் விதமாக பெண்களை குழுக்களாக கைது செய்தது. வள்ளியம்மையும் அவர் தாயும் மற்றவர்களைப்போலவே கைது செய்யப்பட்டு மாரிட்ஸ்பர்க் சிறையில் அடைக்கப்பட்டனர். அங்குதான் மகாத்மா காந்தியின் துணைவியார் கஸ்தூரிபா காந்தியும் சிறை வைக்கப்பட்டிருந்தார்.



கைது செய்யப்பட்ட பெண்கள் மற்ற வழக்கமான குற்றவாளிகளோடு சேர்த்து அடைக்கப்பட்டபோது, தென்னாப்பிரிக்காவிலும், இந்தியாவிலும் அச்சம்பவம் ஒன்றுபோல அதிர்வலைகளை உண்டாக்கியது. மாரிட்ஸ்பர்க் சிறையில் பெண்களின் பரிதாபகரமான நிலையைக் குறித்து மகாத்மா காந்தி தன் வேதனையை வெளிப்படுத்தி, "அப்பெண்களின் வீரத்தை விவரிக்க வார்த்தைகளே இல்லை", என்று கூறினார். சிறையின் மனிதாபிமானமற்ற வாழ்க்கைச் சூழல் வள்ளியம்மையின் உடல்நிலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பின்னர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு, உடல் நலிந்து படுக்கையில் இருந்த அவரை மகாத்மா காந்தி சந்தித்தார். தங்கள் இருவருக்குமிடையில் நடைபெற்ற உரையாடலை மகாத்மா காந்தி தன் தென்னாப்பிரிக்காவில் சத்தியாகிரகம் என்னும் நூலில் பதிவு செய்துள்ளார்.

"வள்ளியம்மை, சிறை சென்றதற்காக நீ வருத்தப்படுகிறாயா?," நான் கேட்டேன்

"வருத்தமா? நான் கைது செய்யப்பட்டால், இப்போதுகூட சிறைசெல்ல தயாராக இருக்கிறேன்," என்றார் வள்ளியம்மை.

"ஆனால் அது உனக்கு மரணத்தை விளைவித்தால் என்ன செய்வாய்?" நான் தொடர்ந்தேன்.

"அது குறித்து எனக்கு கவலை இல்லை. தன் தாய்நாட்டுக்காக உயிரைத் தர யார் தான் விரும்ப மாட்டார்?"

இந்த உரையாடல் நடந்த சில நாட்களிலேயே வள்ளியம்மை, 22 பிப்ரவரி 1914 அன்று மரணமடைந்தார். எனினும் தியாகம், சுயநலமின்மை, தீரம் ஆகியவற்றாலான அவருடைய நெடுங்கதை, தமிழ் மக்களின் நினைவுகளில் அழியாமல் நிற்கின்றன. இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு அவருடைய பங்களிப்புகளை நினைவுகூரும் வகையில் தமிழ்நாட்டின் மயிலாடுதுறை மாவட்டத்திலுள்ள தில்லையாடி கிராமத்தில் தமிழ்நாடு அரசு தில்லையாடி வள்ளியம்மை நினைவகத்தை நிறுவியது.

திருப்பூர் குமரன் நினைவுச்சிலை: ஒரு கொடி காத்த தியாகியின் கதை

"இரத்தம் மட்டுமே சுதந்திரத்திற்கான விலையை கொடுக்க முடியும்", என்று சுபாஷ் சந்திர போஸ் கூறியதைப்போல, இந்திய விடுதலைக்காக எண்ணிலடங்கா இளம் தியாகிகள் தங்கள் உயிர்களை ஈந்துள்ளனர். அவ்வாறு அகிம்சையின் பாதையில் தன் உயிரைக் கிடத்திய தீரமிக்க ஓர் இளைஞன் திருப்பூர் குமரன் ஆவார். தற்போதைய ஈரோடு மாவட்டத்தில் உள்ள சென்னிமலை கிராமத்தில் 4 அக்டோபர் 1904 அன்று ஓர் எளிய நெசவாளர் குடும்பத்தில் பிறந்தவர், திருப்பூர் குமரன் எனப்படும் குமாரசாமி முதலியார். வறுமையின் காரணமாக தன் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு குடும்பத் தொழிலை செய்யத் தொடங்கினார்.


இதனிடையே நாட்டில் வீசிக் கொண்டிருந்த தேசியவாத அலையிலிருந்து அந்த இளைஞன் அந்நியப்பட்டுவிடவில்லை. மகாத்மா காந்தியின் போதனைகளால் ஈர்க்கப்பட்ட அவர் விரைவில் காலனித்துவத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்கத் தொடங்கினார். காலனித்துவத்திற்கு எதிரான பேச்சுகள் அவருள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த, இந்திய சுதந்திரத்திற்காக தன்னை முழுமையாக அர்ப்பணிக்க தீர்மானித்தார். பின்னர் அவர், தேசபந்து இளைஞர் சங்கத்தை நிறுவினார். தமிழ்நாடு முழுவதிலும்



இளைஞர்களை அணிதிரட்டி, ஆங்கிலேய நிருவாகத்திற்கு எதிராகப் பேரணிகள் நடத்துவதே அச்சங்கத்தின் பிரதான பணியாக இருந்தது.

பம்பாயில் ஓர் ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கியதற்காக 1932இல் ஆங்கிலேய அதிகாரிகளால் மகாத்மா காந்தி சிறையில் அடைக்கப்பட்டபோது, நாடு முழுவதும் வன்முறைகளும், போராட்டங்களும் வெடித்தன. அச்சமயம், திருப்பூர் தியாகி P.S. சுந்தரம் ஆங்கிலேய நிருவாகத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக நடத்திய தேசபக்தி பேரணியில் குமரன் கலந்து கொண்டார். அந்த ஆர்ப்பாட்டம் பெரிய அளவில் நடைபெற்றது, அதில் பங்கேற்றவர்கள் அப்போது தடை விதிக்கப்பட்டிருந்த மூவர்ணக் கொடியை ஏந்தியபடி சென்றனர். அணிவகுத்துச் சென்ற சத்தியாகிரகிகளை ஒடுக்கும் பொருட்டு அவர்கள்மீது ஆங்கிலேய அரசு தடியடி நடத்தியது. காவல்துறையின் அடிகளை தாங்க முடியாத பல போராட்டக்காரர்கள் அவ்விடத்திலிருந்து கலைந்து சென்றாலும், குமரன் பிடிவாதமாக அவ்வளாகத்தைவிட்டு வெளியேற மறுத்து தொடர்ந்து ஏற்பட்ட குழப்பத்தில் சிக்கிக் கொண்டார். லாலா லஜபதி ராய் ஒருமுறை சொன்னார், "அவர்கள் நம்மீது வீசிய ஒவ்வொரு அடியும், ஏகாதிபத்தியத்தின் சவப்பெட்டியில் அடிக்கப்பட்ட இன்னுமொரு ஆணியாகும்". ஆனால் இங்கு கொடுக்கப்பட்ட அடிகள் குமரனின் சவப்பெட்டியில் ஆணியை செலுத்தியது; தேசியக் கொடியை விடாமல் கையில் பிடித்த நிலையில் வீதியில் இறந்து கிடந்த அவர் பின்னர் கண்டெடுக்கப்பட்டார். இத்தீரச்செயலே அவருக்கு 'கொடி காத்த குமரன்' என்னும் பெயரைப் பெற்றுத் தந்தது.

குமரன் ஓர் தனிநபராக மரணித்தாலும், அவர் எந்த இலட்சியத்திற்காக தன் உயிரை தியாகம் செய்தாரோ அது பல ஆயிரம் தொண்டர்களில் மறுஉருவமெடுத்தது. திருப்பூர் குமரனின் இந்தப் பெருமைமிகு வரலாறு இந்திய சுதந்திரப் போராட்ட காலம் முதல் தற்காலம் வரை இளைஞர்களுக்கு பெரும் ஊக்கமளிக்கும் ஒன்றாக இருக்கிறது. கொடி காத்த தியாகியின் தன்னலமற்ற தியாகத்தையும், வீரத்தையும் நினைவுகூரும் பொருட்டு, திருப்பூர் குமரன் கையில் மூவர்ணக்கொடியை ஏந்தியபடி நிற்பது போன்ற ஓர் நினைவுச் சிலையை திருப்பூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு நிறுவியது.



17

இந்திய தேசியவாதமும் புதுச்சேரியின் விடுதலையும்

டாக்டர் M.P.ராமானுஜம்
உறுப்பினர்
பாண்டிச்சேரி மாநில உயர்கல்வி மன்றம்.

முன்னுரை

தேசியவாதம் என்பது ஒரு தனிநபர் அல்லது ஒரு குழுவின் நன்மைகளைக் கடந்து ஒரு நாட்டின் மீதான விசுவாசம், பக்தி, மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை வலியுறுத்துவதே ஆகும். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் தேசியவாதம் மலர்ந்தது, அது காலனித்துவம் மற்றும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான சக்திவாய்ந்த தேசிய இயக்கங்களின் எழுச்சியையும், போராட்டங்களையும் கண்டது. வங்கத்தைப் பிரிக்க ஆங்கிலேயர் எடுத்த முடிவே சுதேசி இயக்கம் தோன்றுவதற்கான தூண்டுகோலாக இருந்தது; பின்னர் அது ஆங்கிலேயரிடமிருந்து இந்தியாவும், ஃபிரெஞ்சுக்காரர்களிடமிருந்து புதுச்சேரியும், சுதந்திரம் பெறுவதற்கான ஓர் சக்திவாய்ந்த அறவழியிலான போராட்டமாக உருவெடுத்தது (வெபர் 1996: 2828–31)

ஆங்கிலேயரை எதிர்த்து, 1906இல் சுதேசி நீராவிக் கப்பல் நிறுவனத்தை நிறுவிய 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ. சிதம்பரம் பிள்ளையே தென்னிந்தியாவின் முதல் சுதேசி ஆவார். அவர் தேசிய அரங்கிற்குள் அடியெடுத்து வைத்தபின், முதலில் தமிழ்நாட்டிலும், பின்னர் புதுச்சேரியிலும் தேசியவாதத்தின் பரவலான வளர்ச்சி பெருகத் தொடங்கியது. புதுச்சேரியில் தேசியவாதம் 1840களில் ஸ்தாபனத்திற்கு எதிரான உணர்வாகத் தொடங்கி பின்னர் அது ஃபிரெஞ்சுக்காரர்களுக்கு எதிரானதாகவும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரானதாகவும் மாறியது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் இந்திய தேசியவாதிகளின் ஊடுருவல் ஃபிரெஞ்சு இந்தியர்களுக்கிடையே இந்திய தேசியவாதத்திற்கான விதையை விதைத்தது. இந்திய மாநிலங்களிலேயே புதுச்சேரி ஓர் தனித்துவமான வேறுபாடு கொண்டது. தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி என்னும் இவ்விரு அரசியல் நிறுவனங்களிலும் தேசியவாதம் உருவெடுத்தபோது அதன் பிரதிபலனை சுதந்திரப் போராட்டங்களின் வழியாக இரு மாநிலங்களும் பகிர்ந்து கொண்டன.

புதுச்சேரியின் இந்திய தேசியவாதிகள்

பிரித்தானிய இந்தியாவுக்கு வெளியே, ஆனால் மிக அருகிலும் ஓர் வசதியான தொலைவிலும் அமைந்திருந்த புதுச்சேரி, பிரித்தானிய இந்தியாவால் வேட்டையாடப்படும் புரட்சியாளர்களுக்கு ஓர் சிறந்த புகலிடம் என்னும் அடையாளத்தைப் பெற்றது. மேலும் தேசிய உணர்வுகளைப் பரப்புவதற்கான தூண்டுவிசையாகவும், தேசபக்தி நிரம்பிய வெளியீடுகளுக்கான ஏவுதளமாகவும் மற்றும் புரட்சியாளர்களுக்கான ஆயுதக் களஞ் சியமாகவும் பயிற்சிக்களமாகவும் திகழ்ந்தது.

தமிழ்நாட்டின் சுதேசிகளை புதுச்சேரியுடன் இணைக்கும் முதல் பெயர் சுப்பிரமணிய பாரதியினுடையது. ஆங்கிலேய அரசால் கைது செய்யப்படக்கூடிய நிலையிலிருந்த பாரதி, செப்டம்பர் 1908இல் ஃபிரெஞ்சு ஆட்சியின் கீழிருந்த புதுச்சேரிக்கு தப்பிச் சென்றார். மற்ற புரட்சியாளர்களான பாரீசிலிருந்து V.V.S. ஐயர், தமிழ்நாட்டிலிருந்து நீலகண்ட பிரம்மச்சாரி, சுப்பிரமணிய சிவா, வாஞ்சிநாதன், மற்றும் மாடசாமி ஆகியோரும் விரைவில் அவருடன் இணைந்து கொண்டார்கள். பாரதியின் உத்தரவின்பேரில், 1910இல், வங்கத்திலிருந்து தன் சக பணியாளர்களுடன் அரபிந்தோ கோஷ் புதுச்சேரி வந்தடைந்தார் (தீனதயாளன் 2002:31; அருள்ராஜ் 2005:56–57).

புதுச்சேரி வந்தடைந்தவுடன் பரலிஸ் நெல்லையப்பர் மற்றும் ஹரிஹர ஷர்மா ஆகிய இரு அகதிகளை உதவியாளராகக்கொண்டு, இந்தியா என்னும் வார இதழை பாரதி தொடங்கினார். மேலும் புதுச்சேரியில் இருந்தபடி ஆசிரியராக, விஜயா என்னும் தமிழ் நாளிதழையும், பாலபாரதி என்கிற ஆங்கில மாத இதழையும் சூர்யோதயம் என்னும் உள்ளூர் வார இதழையும் பாரதி வெளியிட்டார். பாரதியின் வெளியீட்டை நசுக்கும் விதமாக அவருக்கு அனுப்பப்பட்ட பணத்தையும், அவருடைய பத்திரிகைகளின் ஆசிரியர் பகுதிகளுக்கு வந்த கடிதங்களையும் ஆங்கிலேய அரசு கைப்பற்றியது. இந்தியா மற்றும் விஜயா ஆகிய இரு பத்திரிகைகளும் 1909இல் தடை செய்யப்பட்டன (மோர் 2022:56)

வியட்நாம் நாட்டில் குடியேறிய சைகோன் சின்னையா என்னும் தேசபக்தர், பாரதிக்கு உதவும் நோக்கில் 1906 முதல் தான் வெளியிட்டு வந்த சூர்யோதயம் என்னும் வட்டார மொழி பத்திரிகையின் கௌரவ ஆசிரியர் பொறுப்பை வழங்கினார். ஆயினும், ஆங்கிலேய காவல்துறையின் தொடர் சித்திரவதை காரணமாக பாரதியின் பத்திரிகையாளர் பணி









1910இல் திடீரென்று முடிவுக்கு வந்தது (மோர் 2022:56–57).

மன உளைச்சலில் இருந்த கவிஞருக்கு, திரு. அரபிந்தோவின் வருகை ஆறுதலாக அமைந்தது. பாரதி, அரபிந்தோ மற்றும் V.V.S.ஐயர் மூவரும் கடற்கரையில் இலக்கியம், தத்துவம், மற்றும் மாயவாதம் குறித்து மணிக்கணக்காக விவாதித்தனர். அவ்வூரின் அழகும், அமைதியும் நிறைந்த சூழல் பாரதிக்கு பெரும் உந்து சக்தியாக அமைந்து, அவரை ஓர் ஆத்மஞானியாக பரிணமிக்க செய்து, 'மகாகவி' என்னும் அந்தஸ்தை அவருக்குப் பெற்றுத் தந்த குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, மற்றும் பாஞ்சாலி சபதம் என்னும் மூன்று மிகப்பெரும் படைப்புகளை 1912இல் படைக்கச் செய்தது (முருகேசன் 2013:328)

பாரதி தனக்குத்தானே விதித்துக்கொண்ட நாடுகடத்தலில், புதுச்சேரியில் சிட்டி குப்புசாமி ஐயங்கார் இல்லத்தில் தங்கத் தொடங்கினார். வெள்ளாச்சு கிருஷ்ணசாமி செட்டியார், ஆறுமுகம் செட்டியார், வல்லூரு நாயக்கர், மண்டையம் ஸ்ரீனிவாசாச்சாரி, பொன்னு முருகேசம் பிள்ளை, தெய்வசிகாமணி நாயக்கர், பாரதிதாசன், சைகோன் சின்னையா, ஜெகந்நாதம் கிராமணி, கொடியாலம் ஸ்ரீனிவாச ஐயங்கார், குறிப்பாக சுந்தரேச ஐயர் போன்றோர் கடினமான காலங்களில் அவருக்கு உதவினர். அம்மாக்கண்ணு மற்றும் வேணுகோபால நாயக்கர் ஆகிய இருவரும் குடும்பத்தை கவனித்துக் கொள்ளும் விசுவாசமிக்க உதவியாளர்களாக இருந்தார்கள் (கோதண்டராமன் 1980:38–39). வறுமை அவரை வாட்டிய நிலையில், புதுச்சேரியை விட்டுச்செல்ல பாரதி முடிவெடுத்தபோது அம்மாக்கண்ணு அம்முடிவுக்கு எதிராக அவரை சமாதானப்படுத்த முயன்றும் பாரதி ரயில்

நிலையத்தை அடைந்தார். இதுகுறித்து கேள்விப்பட்ட பாரதிதாசன் அவருக்கு ஆறுதல் கூறி, திரும்பி வருமாறு வற்புறுத்தினார். அவர் அவ்வாறு செய்திருக்காவிட்டால், மகாகவி வசித்த இடம் என்னும் வரலாற்றின் ஓர் பொன்னேட்டை புதுச்சேரி இழந்திருக்கும் (மன்னர் மன்னன் 1980:91) பாரதி புதுச்சேரியில் கழித்த பத்து வருடங்கள் மிகக் கடினமான காலமாக இருந்தாலும், அவர் வாழ்வின் மிகப் பிரகாசமான காலமாக அது இருந்தது. ஃபிஜி மற்றும் ஆப்பிரிக்க கரும்பு தோட்டங்களில் அடிமைகளாக வாழும் மக்களின் நிலைகளைக் குறித்த கவிதைகளும், கனகலிங்கம் என்னும் தலித் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவருக்கு பூணூல் அணிவிக்கும் 'உபநயனம்' என்னும் சடங்கை செய்வித்ததும், சக்கரவர்த்தினி என்னும் பத்திரிகையின் தலையங்கத்தில் 'சதி' ஒரு காட்டுமிராண்டித்தனமான, காலத்திற்கு ஒவ்வாத வழக்கம் என்று சாடியதும், அடிமைத்தனம், பெண்ணடிமைத்தனம், சாதி அமைப்பு, மற்றும் தீண்டாமை ஆகிய வழக்கங்களுக்கு பாரதி அளித்த சவுக்கடிகள். புதுச்சேரியின் வாழ்க்கை, அங்கு குடிபுகுந்தவர் மனங்களில் மட்டுமல்ல புதுச்சேரி இளைஞர்கள் மத்தியிலும் தேசப்பற்று என்னும் தீயைப் பற்றவைத்ததோடு இந்தியம் என்னும் உணர்வையும் தூண்டியது. அவ்வாறான தீயைப் பரவச்செய்ததில் மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, மற்றும் அனைத்து தேசியத் தலைவர்களையும் பாரதி விஞ்சி நிற்கிறார்.

புதுச்சேரியில் தஞ்சமடைந்த சுதந்திரப் போராட்டத்தின் தீவிரவாதப் பிரிவைச் சேர்ந்த மற்றொரு புகழ்பெற்ற தலைவர் அரபிந்தோ கோஷ். அவர் 1950இல் தன் மரணம் வரை அங்கு புலம்பெயர்ந்து வசித்தார். ஆயினும் அவரை அரசியலுக்குள் மீண்டும் கொண்டுவர காங்கிரஸ் உறுப்பினர்கள் பல முயற்சிகள் செய்தும், நேருவின் பெரும் ஏமாற்றத்திற்கிடையிலும், அவர் தன் அரசியல் நடவடிக்கைகளை நிறுத்திக்கொண்டு ஆன்மீகத்திற்கு தன்னை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்டார் (கெனாட் 2015:211).

இந்திய அலுவலகம்

இந்திய அலுவலகம் என்னும் ரகசிய சங்கம் புதுச்சேரியின் 58, ரூ டி மிஷன் எத்ராஞ்சியர்ஸ் என்னும் முகவரியில் செயல்பட்டது அங்கிருந்து தான் இந்தியா இதழ் வெளியிடப்பட்டது. V.V.S. ஐயர், சுப்பிரமணிய பாரதி, ஸ்ரீநிவாசாச்சாரி, நாகசாமி ஐயர், அப்பாதுரை ஐயர், குருசாமி ஐயர், மற்றும் மாடசாமி போன்றோர் அச்சங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் ஆவர். இப்புரட்சித் தலைவர்கள் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் உள்ள போராட்ட மையங்களோடு தொடர்பில் இருந்தார்கள். குறிப்பாக, லண்டனில் உள்ள திருமலைச்சாரி, ஷியாம்ஜி கிருஷ்ணா, மற்றும் பாரிஸில் உள்ள மேடம் காமா ஆகியோருடன் தொடர்பில் இருந்தார்கள் (சுரேஷ் 2010:222).

ஆயுதக் கிடங்கு மற்றும் இராணுவ முகாம்

நீலகண்ட பிரம்மச்சாரி, 'பாரத மாதா சங்கம்' என்னும் அமைப்பை தமிழ்நாட்டின் புனலூரில் தொடங்கி, சக்திவாய்ந்த ஆங்கிலேயர்களை படுகொலை செய்யத் திட்டமிட்டார். காவல்துறையின் கண்காணிப்பிலிருந்து தப்பிய அவர் புதுச்சேரி வந்து சேர்ந்து தர்மாலயத்தில் தங்கினார். V.V.S. ஐயர் 1910இல், ஓர் இஸ்லாமியர்போல் வேடமிட்டு பாரிஸிலிருந்து தப்பி புதுச்சேரி வந்தடைந்தார். மீண்டும் ஒரு பிச்சைக்காரர் போல் வேடமணிந்து அவரும் தர்மாலயத்திற்குள் நுழைந்தார். தன் பணியிலிருந்து மூன்று மாதங்கள் இடைவெளி எடுத்த வாஞ்சிநாதன் அவர்களுடன் இணைந்து கொண்டார் (அருள்ராஜ் 2005:60–61).

ஆஷ் படுகொலை

ராபர்ட் வில்லியம் ஆஷ் 1911இல் திருநெல்வேலி மாவட்டத்தின் ஆட்சியராகவும், மாவட்ட நீதிபதியாகவும் இருந்தார். வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்களால் தொடங்கப்பட்ட சுதேசி நீராவிக் கப்பல் நிறுவனத்தை அழிப்பதற்கு தன் சக்திக்குட்பட்ட அனைத்தையும் ஆஷ் செய்தார்; மேலும், வ.உ.சி.யை சிறையில் அடைப்பதிலும் முக்கியப் பங்கு வகித்தார். இவை கிளர்ச்சியாளர்களிடையே அவரைப் பழிவாங்க வேண்டும் என்னும் எண்ணத்தைத் தூண்டியது. ஆஷை படுகொலை செய்வதற்கான ஏற்பாடுகள் ஜனவரி 1911இல் தொடங்கியது. அதைச் செய்வதற்கு பல பெயர்கள் பரிசீலிக்கப்பட்டு, வாஞ்சிநாதன் தேர்ந்தெடுக்கப்பட்டார். V.V.S. ஐயர் மற்றும் உள்ளூர் ஆசிரியரான முத்துக்குமாரசாமி பிள்ளை ஆகிய இருவரும் வாஞ்சிநாதனுக்கு துப்பாக்கி சுடும் பயிற்சியை அளித்தார்கள். பாரிஸ்டராக பட்டம் பெற்றபின் பாரிஸிலிருந்து காரைக்கால் திரும்பிய மேரி ஜோசப் சேவியர் என்பவர் மூலம் ஐந்து துப்பாக்கிகள் அங்கிருந்து கடத்தப்பட்டன. மேலும், துப்பாக்கி உரிமம் பெற்றிருந்த பிள்ளை, ஐந்து வெற்று குண்டுகளை வழங்கினார். சித்தானந்த சுவாமி கோவிலின் வாய்க்கால் அருகிலும் அரியாங்குப்பம் கிராமத்தின் தென்னந்தோப்புகளிலும் (அருள்ராஜ் 2005:60–61) அந்திசாயும் நேரங்களில் சோதனை ஒத்திகைகள் நடைபெற்றன. மேற்குறிப்பிடப்பட்ட அதே பிள்ளை தான் பிந்நாட்களில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் உயரமான கொடிக்கம்பத்தில் தேசியக்கொடியைப் பறக்கவிட்ட பாஷ்யத்தின் பயிற்சிக்கு கைத்துப்பாக்கிகளை அனுப்பியவரும் ஆவார் (முருகேசன் 2013:330).

தர்மாலயம்

தமிழ்நாட்டிலிருந்து வந்த தேசியவாதிகளுக்கு தர்மாலயம் ஓர் பாதுகாப்பான புகலிடமாக இருந்தது. மண்டையம் ஸ்ரீனிவாசாச்சாரி, தர்மம் என்னும் மாதமிருமுறை வெளிவரும் இதழை அச்சடிக்க ஓர் அச்சு இயந்திரத்தை அங்கு நிறுவியிருந்த காரணத்தால் அவ்விடம் தர்மாலயம் என்று பெயர் பெற்றது. தேசப்பற்றுமிக்க வெளிநாட்டு இலக்கியங்கள் அங்கு இறக்குமதி செய்யப்பட்டு, அங்கிருந்து ரயில் மூலம் தமிழ்நாடு முழுவதும் விநியோகிக்கப்பட்டது. புரட்சிகர இளைஞர்களுக்கு அங்கு உடற்பயிற்சிகள் மற்றும் தற்காப்பு கலைகளில் பயிற்சி அளிக்கப்பட்டன. அவர்களுடைய ரகசிய சந்திப்புகள், வினோதமான சடங்குகளைக்கொண்ட, மற்றவர் எளிதில் விளங்கிக்கொள்ள முடியாத, ஓர் இரகசிய சிறு குழுவின் அனைத்து அம்சங்களுடன் இருக்கும். அவர்கள் நெற்றியில் விபூதியும், குங்குமமும் வைத்துக் கொண்டு பெண் தெய்வமான காளியை வணங்கினார்கள். குங்குமத்தை நீரில் கரைத்து அதை வெள்ளைக்காரர்களின் இரத்தமாகக்கருதி காகிதத்தின் மேல் பூசினார்கள்; மையாக அதில் முக்கியெடுத்து வந்தே மாதரம் என்று எழுதினார்கள்; மேலும் வெள்ளைக்காரனைப் பழிவாங்கும் விதமாக அதை உள்ளுக்கும் குடித்தார்கள் (அருள்ராஜ் 2005:62–64).

விதிவசப்பட்ட அந்நாளில், வாஞ்சிநாதனுடன் முத்துக்குமாரசுவாமியும், நாகசாமியும் இணைந்து வழியில் உள்ள சுங்கச்சாவடி தடைகளைக் கடந்து திருப்பாப்புலியூரை அடைய உதவினர். முத்துக்குமாரசுவாமி தன் விரலை அறுத்து அதிலிருந்து வழியும் இரத்தத்தால் வாஞ்சிநாதன் நெற்றியில் திலகமிட்டு அவரை வாழ்த்தி வழியனுப்பினார். ஆஷ் மணியாச்சி சந்திப்பில் 17 ஜூன் 1911 அன்று சுட்டுக் கொல்லப்பட்டான். புதுச்சேரி என்னும் பெயர் அந்நாளின் வரலாற்றில் செதுக்கப்பட்டது (அருள்ராஜ் 2005:87).

பாரதிதாசன் என்னும் தேசியவாதி

பாரதியினால் ஏற்பட்ட தாக்கத்தின் காரணமாக கனகசுப்புரத்தினம் என்னும் ஆசிரியர் தன் பெயரை பாரதிதாசன் என்று சூட்டிக்கொண்டார். தேசபக்தராக தன் பணியைத் தொடங்கிய அவர், சிறுவர் சிறுமியர் தேசிய கீதம், தொண்டர் படைப் பாட்டு, கதர் ராட்டினப் பாட்டு போன்ற தேசபக்திமிக்க படைப்புகளை உருவாக்கினார். சில சமயம், ஆங்கிலேய உளவாளிகளிடமிருந்து சுதேசிகளைப் பாதுகாக்க, உணவு சமைக்க அரிசியை மேல்துண்டில் மறைத்து எடுத்துச்சென்று கொடுத்தார்.

நூதன முறையில் பிரச்சாரம்

மக்களிடையே தேசபக்தி உணர்வைத் தூண்டுவதற்காக பாரதிதாசன் ஓர் புதுமையான வழியை வடிவமைத்தார். மயிலம் சுப்ரமணியக் கடவுள் மீதும், செஞ்சி ரங்கநாதர் மீதும் கீர்த்தனைகள் எழுதி அதன் வரிகளை உக்கிரமான தேசபக்தியால் இழைத்தார். தன்னுடைய நண்பர்கள் சைகோன் சின்னையா, மற்றும் ஜெகநாதன் கிராமணி ஆகியோரின் உதவியுடன் மாசிமக தீர்த்தவாரி விழாவுக்கு புதுச்சேரி வரும் அவ்விரு தெய்வங்களின் சிலையை வரவேற்கும் விதமான பதாகைகளாக அப்பாடல்களை மக்களின் கண்களில் படும்படி காட்சிப்படுத்தினார்.

அப்பதாகைகளில் ஒன்று

“தெய்வமே முருகா, அநீதியான இந்த ஆட்சியை அழிப்பாயாக” என்று வேண்டியது.

மற்றொரு பதாகை

“ஆழ்கடலின் மேலே உள்ள நிலத்தில், ஓ இறைவா பாரதத்தை உயர்த்து மணிக்கொடியை வானுயரப் பறக்கச் செய். எட்டுத் திக்கிலிருந்தும் புகழ் மாலைகள் வந்து பொழியட்டும்” என்றது.

இந்தச் செய்தி உடனடியாக காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது. அரைகுறை தமிழறிவு கொண்ட அதிகாரிகளை வைத்து மொழிபெயர்த்த காரணத்தால் அப்பதாகையின் வரிகளில் உள்ள மறைபொருளை உணர்ந்துகொள்ள முடியாமல் ஃபிரெஞ்சு காவல்துறை அவ்விடத்திலிருந்து கிளம்பியது. மற்றொரு சமயம், பாரதிதாசனும், சுகாபிவிருத்தினி இதழின் ஆசிரியர் வெங்கடாசல நாயக்கரும் தாங்கள் இயற்றிய தேசபக்திப் பாடல்களை 300 பிரதிகள் எடுத்து பக்தர்களிடையே விநியோகித்தனர். (மன்னர் மன்னன் 1980:188)

அனைத்து முரண்களுக்கிடையே பாதுகாப்பு

பாரதியின் தமிழ்நாடு வருகைக்குப் பிறகு, சென்னையில் உள்ள ஆங்கிலேய அதிகாரிகள் புதுச்சேரியில் உள்ள சக அதிகாரிகளிடம் அங்கு பாரதி மற்றும் அவருடைய கூட்டாளிகள் மேற்கொண்ட தேசவிரோத நடவடிக்கைகள் குறித்து எச்சரிக்கை செய்து உடனடியாக அவர்மீது வழக்கு தொடுக்குமாறு கேட்டது. பாரிஸ் உடன்படிக்கை 1814இன் படி, இரு நாடுகளின் நன்மைகளுக்கு எதிராகச் செயல்படும் நபர்களை நாடு கடத்துவது கட்டாயம் என்றாலும் ஃபிரெஞ்சு நிருவாகம் அரபிந்தோ, சுப்பிரமணிய பாரதி, மற்றும் மற்ற பல தேசியவாதிகளை நாடுகடத்த மறுத்து விட்டது (வெபர் 1996:327).

ஆஷின் படுகொலைக்குப்பின்பு பிரச்சினைகள் தீவிரமடைந்தன. ஆங்கிலேயரின் தொடர் வற்புறுத்தல் காரணமாக, ஒரு காவல் அதிகாரி அரபிந்தோவின் வீட்டை சோதனை

யிட்டார். அவரை குற்றவாளியாக கருதக்கூடிய எந்த ஒரு பொருளையும் அவரால் அங்கு கண்டெடுக்க முடியவில்லை மாறாக கிரேக்கம் மற்றும் லத்தீன் மொழிகளில் தத்துவ நூல்களை அங்கு கண்டார். அரபிந்தோவின் அறிவுக்கூர்மையைக் கண்டு வியந்த அவர், மற்ற இன்னும் பாதுகாப்பான ஃபிரெஞ்சு காலனிகளான அல்ஜீரியா அல்லது ரீயூனியன் போன்ற நாடுகளுக்கு குடிபெயரும் யோசனையை அவருக்குப் பரிந்துரைத்தார் (கோதண்டராமன் 1980:61). அரபிந்தோ மற்றும் பாரதியை கைது செய்யுமாறு மற்றொரு வேண்டுகோள் வந்தது. அந்தக் காவல்துறை அதிகாரியின் அதே யோசனையை, பாரதி மற்றும் அரபிந்தோவுடன் நல்லதொரு நட்பை வளர்த்துக்கொண்ட ஃபிரெஞ்சு தத்துவவாதியும், அரசியல்வாதியுமான பால் ப்ளூய்சென் தெரிவித்தபோதும் அரபிந்தோ மறுத்துவிட்டார். ஆளுநர் அல்ஃபிரெட் மார்ட்டினியூ குற்றச்சாட்டுகளைத் தள்ளுபடி செய்தார் (மோர் 2022:117–119). ஃபிரெஞ்சு காவல்துறையின் மனப்போக்கோடு ஒப்பிடும்போது, சென்னை காவல்துறை 1939இல் அங்கு தலைமறைவாக இருந்த சுப்பையாவை வேட்டையாடி ஃபிரெஞ்சு இந்தியாவிடம் ஒப்படைக்க முனைப்பு காட்டவில்லை. (சுப்பையா 1990:197; கெனாட் 2015:327).

உதவிக்கு வந்த தனிநபர்கள்

சுதேசிகளை பல நிறுவனங்கள் மட்டுமல்லாமல், சமயங்களில் சில தனிநபர்களும், தங்கள் உயிரையும் பணயம் வைத்துக் காப்பாற்றினர். ஒரு முறை பாரதியார் அம்மாக்கண்ணு வீட்டில் தங்கியிருந்தபோது ஆங்கிலேய காவல்துறையின் கடுமையான கண்காணிப்பும் வீட்டைச்சுற்றி பல உளவாளிகளின் நடமாட்டமும் இருந்தது. நிலைமையை உணர்ந்த அம்மாக்கண்ணு, பாரதியை பெண் உடையை அணியச் செய்து, பல் வலியால் அவதியுறுவதுபோல் அவருடைய முகத்தைப் புடவையால் மூடியபடி அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேற்றினார் (தீனதயாளன் 2002:32–33).

ஆஷ் கொலை வழக்கில் மாடசாமி ஓர் ஐயத்துக்குரிய முதன்மை நபராக இருந்தார். ஆங்கிலேய காவல்துறையினர் அவரை கைது செய்வதை தவிர்க்க சிங்கப்பூருக்கு அனுப்ப ஏற்பாடாகி இருந்த சமயம் அவரது பாதுகாப்பில் பாரதிதாசனுக்கு ஒரு சோதனை ஏற்பட்டது. ஒரு நாள், எரிமலை நூலின் இரு பிரதிகளை மாடசாமியிடம் அளிக்க கையில் எடுத்தபடி வந்த பாரதிதாசன் அவர் தன்னை நோக்கி வருவதைக் கண்டார், அவருக்குப் பின்னால் ஆங்கிலேய போலீசார் மாடசாமியை பின்தொடர்வதையும் கண்டு கொண்டார். போலீசாரை திசைதிருப்ப பாரதிதாசன் உடனடியாக தலைப்பாகை அணிந்துகொண்டு அருகில் உள்ள கோவிலுக்குள் விரைந்தார். அங்கு நூல்களை மறைத்து வைத்துவிட்டு 30 அடி உயர சுவரைத் தாண்டி மறுபக்கம் இருந்த சாலையில் குதித்து தப்பி ஓடினார். இதனிடையே மற்றொரு வீதி வழியாக மாடசாமி தப்பிச் சென்றார். பாரதிதாசனை பின்தொடர்ந்த காவலர்கள் மாடசாமியைக் கைது செய்வதையும் தவறவிட்டுவிட்டோமே என்று ஏமாற்றமடைந்தனர். (முருகேசன் 2013:330)



மீண்டும் சிங்கப்பூருக்கு கிளம்புவதற்கு முன்தினம் பாரதிதாசன் மாடசாமியை ஓர் கட்டுமரத்தில் கடலுக்குள் அழைத்துச்சென்று அங்கு குளிரிலும், கும்மிருட்டிலும் ஒரு நாளெல்லாம் கழித்த பின்னர், நடுக்கடலில் அவரைப் பாதுகாப்பாக கப்பலில் ஏற்றினார்.

மேலும் பாரதிதாசன், மற்ற இடங்களில் உள்ள புரட்சியாளர்களுக்கு விநியோகிப்பதற்காக பாரதியின் வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட சிறு பாரதமாதா மண் சிலைகளுக்குள் துப்பாக்கிகளை மறைத்து வைத்து சென்னைக்கு எடுத்துச் செல்லும் ஆபத்தான ஓர் பணியையும் செய்தார் (மன்னர்மன்னன் 1980:235–236).

புதுச்சேரியில் தேசியவாதிகளின் எழுச்சி

இணை செயல்பாடுகள்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்ககாலம் வரை ஃபிரெஞ்சுக்காரர்களுக்கு எதிரான வெளிப்படையான அரசியல் நடவடிக்கைகள் சாத்தியமானதாக இல்லை, அதே சமயம் அதற்கான தேவையும் அங்கு எழவில்லை. இருப்பினும், இந்தியர்களைப் பின்பற்றி இணை நடவடிக்கைகள் தொடங்கின. 1933இல் தொடங்கப்பட்ட ஹரிஜன் சேவா சங்கம் தீண்டாமைக்கு எதிராக போதித்தது. மேலும் அது ராட்டை மற்றும் காதித் துணிகளை மக்களிடையே பிரபலப்படுத்தியது (சுப்பையா 1990:32–33). 'அந்நிய பொருட்களைப் புறக்கணியுங்கள்' இயக்கத்திற்கு கிடைத்த வரவேற்பிற்குப்பின் மகாத்மா காந்தி அவர்களால் தொடங்கப்பட்ட காதி இயக்கத்திற்கு மக்களிடையே பெரும் ஆதரவு கிடைத்தது. கதர் நடேசன் தன் தலை நிறைய காதித் துணிகளை சுமந்துசென்று மிகக் குறைவான விலையில் விற்றதோடு, வறுமையில் வாடியோருக்கு இலவசமாகவும் அளித்தார். பாரதிதாசன் அதன் பெருமையை உணர்த்த கதர் ராட்டினப் பாட்டு இயற்றியபோது அரங்கசாமி நாயக்கரும், அன்சாரி துரைசாமியும் தங்கள் வாழ்நாள் முழுவதும் காதி மட்டுமே அணியப் போவதாக சபதமிட்டனர். மகாத்மா காந்தியின் கதர்குல்லாக்களை விரும்பி அணிந்துவந்த மாணவர்கள் பள்ளிகளில் கண்டிக்கப்பட்டனர். காரைக்காலைச் சேர்ந்த ஜோசப் சேவரிப் பிள்ளை என்னும் வழக்கறிஞர் நீதிமன்றத்திற்கு காதி உடை

அணிந்து வந்ததற்காக வெளியேற்றப்பட்டார். ஆயினும் அவர் பாரிஸ் வரையிலான ஓர் சட்டப் போராட்டத்தை நடத்தி தனது உரிமையை வென்றார். கஸ்தூரிபா மற்றும் திருவள்ளுவர் பெயர்களில் காதி நூற்பு நிலையங்கள் ஆங்காங்கே முளைத்தன. புதுச்சேரி இளைஞர்கள், பாரத மாதா சங்கம், ஐந்து உறுப்பினர் குழு, பரஸ்பர சகோதரத்துவ சங்கம், திருப்பணி சேனை, ராமகிருஷ்ண வாசக சாலை, விவசாயத் தொழிலாளர் சங்கம், நேதாஜி சேவா சங்கம், சரஸ்வதி விலாச சபா போன்ற பல்வேறு சங்கங்களைத் தொடங்கினர். புதுவை முரசு, சுஜநிரஞ்சனி, சுகாபிவிருத்தினி, சுதந்திரம் மற்றும் குடியரசு போன்ற பத்திரிகைகள் அச்சு ஊடகக் குழுவில் இணைந்தன.

ராமகிருஷ்ண வாசக சாலை

புதுச்சேரி, காந்தி சாலையில் அமைந்துள்ள ராமகிருஷ்ண வாசக சாலை என்னும் படிப்பகம் மகாத்மா காந்தியின் கொள்கைகளை பின்பற்றும் மற்றோர் அமைப்பாகும். தேசியவாதம் குறித்த வளமான நூல்களின் தொகுதியை அந்நூலகம் கொண்டிருந்தது. அதன் உறுப்பினர்கள் தீண்டாமையை ஒழிக்க பரப்புரையை மேற்கொண்டார்கள், மேலும் அவர்கள் அதை தடை செய்ய வலியுறுத்தி மேடை நாடகங்களை நடத்தினார்கள். மக்களிடையே தேசிய உணர்வை எழுப்ப, குளிர்கால கச்சேரிகளைப் பயன்படுத்தி அதில் பாரதியின் தேசபக்தி பாடல்களை பாடினார்கள் (அருள்ராஜ் 2005:68–69).

தமிழ்நாடு முழுவதும் இரகசியமாக விநியோகிக்கப்பட்ட துப்பாக்கிகளை பதுக்கி எடுத்துச்செல்ல, பாரதியால் வடிவமைக்கப்பட்ட பாரத மாதா உருவ சிறு மண் சிலைகள் இந்த மையத்தில்தான் பெரும் எண்ணிக்கையில் தயாரிக்கப்பட்டதாக பாரதிதாசன் கூறுகிறார் (மன்னர்மன்னன் 1980:235–236).

தேசிய உணர்வால் தூண்டப்பட்ட புதுச்சேரியை சேர்ந்த தனிநபர்களான அன்சாரி துரைசாமி, சேதுராமன் செட்டியார், சுப்பையா, அருள்ராஜ், மற்றும் காரைக்காலைச் சேர்ந்த 'ஃபிரெஞ்சு இந்தியாவின் காந்தி' என்றழைக்கப்பட்ட அரங்கசாமி நாயக்கர், கோவிந்தசாமி செட்டியார், ஜோசஃப் சேவரிப் பிள்ளை, ராம சீனிவாசன் ஆகியோர் காந்தியக் கொள்கைகளைத் தீவிரமாகப் பின்பற்றியதோடு, இந்திய சுதந்திரப் போராட்டத்திலும் பங்கெடுத்தனர். புதுச்சேரிக்கு அருகில் உள்ள வளவனூரைச் சேர்ந்த S.R. சுப்பிரமணியம் என்பவர் புதுச்சேரியில் குடியேறி அங்கேயே நிரந்தரமாகத் தங்கி இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தீவிர பங்காற்றினார். கோயம்புத்தூரில் ஒரு வானொலி நிலையத்தை நிறுவி தேசபக்தி தகவல்களை அளித்து வந்த அவர் தமிழ்நாட்டில் பல முறை சிறைத்தண்டனைகளை அனுபவித்தார் (அருள்ராஜ் 2005:99).

காந்தி மற்றும் நேருவின் வருகை

சுப்பையா அவர்களின் வற்புறுத்தலின் பேரில் பிப்ரவரி 1934இல் பாண்டிச்சேரிக்கு வருகை புரிந்த மகாத்மா காந்தி பின்னர் காரைக்காலுக்கும் சென்று அங்கு சாதிப் பாகுபாடுகள் மற்றும் மத அடையாளங்களுக்கு எதிரான போராட்டங்களில் பங்கெடுக்குமாறு மக்களுக்கு அழைப்பு விடுத்து அப்பிரச்சினைகளை அரசியல்மயப்படுத்தினார். போராட்டத்தில் ஈடுபட்டு வந்த துணி ஆலைத் தொழிலாளர்களை ஆதரித்து புதுச்சேரியில் ஒரு பொதுக்கூட்டத்தில் நேரு உரையாற்றினார். மாஹியில் 1936இல் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில், ஆங்கிலேய இந்தியாவிற்கும், ஃபிரெஞ்சு இந்தியாவிற்கும்

எந்த ஒரு வேறுபாடும் இல்லை, அந்நியர்களின் ஆக்கிரமிப்பில் இருக்கும் நம் மண்ணின் ஒவ்வொரு அங்குலத்தையும் விடுவிக்க வேண்டும் என்பதற்காகவே இப்போராட்டம், என்ற வலிமையான செய்தியை காந்தி தன் உரையில் தெரிவித்தார் (சுப்பையா 1990:32–33; கெனாட் 2015:332).

முதல் அரசியல் அமைப்பு

மகாஜன சபா என்னும் புதிய கட்சி 1937இல் ஃபிரெஞ்சு மேலாதிக்கத்தை எதிர்த்து அதன் இரட்டைப் பட்டியல் முறையை நீக்கக்கோரி, ஒற்றைத் தேர்தல் முறைக்கு ஆதரவாகப் போட்டியிட்டது. ஃபிரெஞ்சு இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் அரசியல் கட்சி அதுவே ஆகும். மேலும் அதன் நடவடிக்கைகள், நேருவின் நெருங்கிய நண்பரான V.V. கிரி உள்ளிட்ட இந்திய தேசிய காங்கிரஸ் பிரதிநிதிகளால் கண்காணிக்கப்பட்டது. (வெபர் 1996:335).

பிப்ரவரி 1937இல் நடந்த மதராஸ் மாகாண தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி பெற்ற வெற்றியினால் ஊக்கமடைந்த மகாஜன சபா, "ஃபிரெஞ்சு இந்தியா எதிர் இந்திய இந்தியா" என்னும் பிரச்சினையை முன்னிறுத்தி மே 1937 புதுவை நகராட்சி தேர்தல்களில் போட்டியிட்டது. அனைத்து இடங்களிலும் அக்கட்சி பெற்ற வெற்றி, இந்திய தேசியத் தலைவர்களின் வருகைகள், அரசியல் அகதிகள் ஏற்படுத்திய தாக்கம், மற்றும் வெற்றிகரமான தொழிலாளர் போராட்டங்கள் ஆகியவை ஃபிரெஞ்சு இந்தியாவின் மக்களிடையே தேச உணர்வை ஊன்றி விதைத்திருப்பதை நிரூபித்தது. இருப்பினும், ஃபிரெஞ்சு ஆதரவு சக்திகள் தேர்தலில் பெரும் வன்முறை மற்றும் முறைகேடுகளில் ஈடுபட்டன; ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கும் விதமாக, ஃபிரெஞ்சு நிர்வாகம் மகாஜன சபையின் வெற்றியை ரத்து செய்து ஃபிரெஞ்சு ஆதரவு வேட்பாளர்கள் வெற்றி பெற்றதாக அறிவித்தது. அத்துடன் அடங்கி விடாமல், குறைந்த காலமேயானாலும், மகாஜன சபை மிகுந்த நம்பிக்கையுடன் காந்தியக் கொள்கையான சட்ட மறுப்பு இயக்கத்தை ஃபிரெஞ்சு இந்தியா முழுவதும் வெற்றிகரமாக செயல்படுத்தியது (சுப்பையா 1990:157–169; வெபர் 1996:335).

முதன்முதலில் பெருவாரியான மக்கள் பங்கேற்பு

இரண்டாம் உலகப் போர் வெடித்த அதே 1942 காலகட்டத்தில், வெள்ளையனே வெளியேறு இயக்கம் தொடங்கப்பட்டபோது, அது ஃபிரெஞ்சு இந்தியாவின் பல பகுதிகளில் தன்னிச்சையான மக்கள் பங்கேற்பைக் கண்டது. இவ்வாறாக எல்லை கடந்து, மக்கள் ஒருவருக்கொருவர் உதவும் மற்றும் பங்கேற்கும் நடவடிக்கைகள் ஃபிரெஞ்சு இந்தியர்களுக்கு மத்தியில் 'அனைத்திந்திய தேசம்' என்னும் சிந்தனையை விதைத்தது (கெனாட் 2015:218; அருள்ராஜ் 2005:92–93).

அந்நிய மண்ணிலிருந்து ஆதரவு

புலம்பெயர் இந்தியர்கள் அந்நிய நாடுகளில் வசித்தாலும் தேசிய உணர்வைப் போற்றினார்கள். மேலும், இந்திய மற்றும் ஃபிரெஞ்சு இந்திய சுதந்திரத்திற்கு பல்வேறு வகைகளிலும் பங்களித்தார்கள்.



மேடம் காமா என்றழைக்கப்பட்ட பிகாஜி ருஸ்தம், காமா இந்திய தன்னாட்சி சபையின் லண்டன் கிளையோடு தொடர்புடைய, ஓர் செல்வச் செழிப்பான பார்சி இந்திய தேசபக்தர் ஆவார். ஜெர்மனியின் ஸ்டுட்கார்ட் நகரில் 1907இல் இந்தியக் கொடியை வடிவமைத்து ஏற்றியதன் மூலம் அந்நிய மண்ணில் இந்தியக் கொடியை பறக்க விட்ட முதல் நபர் என்ற பெயர் பெற்றவர். அவர் 1909இல் பாரிஸுக்கு குடிபெயர்ந்து, அங்கு இந்திய தேசியவாதிகளுக்கு ஆதரவளித்த பாரிஸ் இந்திய சங்கத்தை வேறு இருவருடன் இணைந்து நிறுவினார். காமா, வந்தே மாதரம் மற்றும் மதன்'ஸ் தள்வார் என்னும் இரு புரட்சிகர இலக்கியங்களை எழுதி வெளியிட்டார். அந்நூல்கள், லண்டன், பாரிஸ், மற்றும் நியூயார்க் போன்ற பல்வேறு நகரங்களிலிருந்து வெளிவந்த கேலிக் அமெரிக்கன், இந்தியன் சோசியாலஜிஸ்ட், நியூயார்க் கால், மற்றும் ஈவினிங் போஸ்ட் போன்ற மற்ற தடை செய்யப்பட்ட பத்திரிகைகளுடன் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு, புதுச்சேரியின் தர்மாலயத்தில் சேமித்து வைக்கப்பட்டன. பின்னர் இவை அனைத்தும் ஆங்கிலேய இந்தியப் பிரதேசங்களுக்குள் கடத்தப்பட்டு அங்கு விநியோகிக்கப்பட்டன. ஆட்சியர் ஆஷை படுகொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட கைத்துப்பாக்கி, மேடம் காமா பாரிஸிலிருந்து அனுப்பிய ஐந்து துப்பாக்கிகளில் ஒன்றாகும் (அருள்ராஜ் 2005:61–62; கீதா 2008:62–63).

இந்தோ-சீனாவில்...

புதுச்சேரியிலிருந்து இந்தோ–சீனப் பகுதிகளில் குடியேறியவர்கள், ஃபிரெஞ்சு குடிமக்களாக இருந்தாலும் தங்களை இந்தியர்களாகவே கருதினர். "ஆவணங்களின்படி நாங்கள் பிரெஞ்சுக்காரர்களாக இருந்தாலும், பிறப்பின்படி நாங்கள் இந்தியர்களே," என்று முரண்டு பிடித்தார்கள். ஹரிஜன சேவா சங்கத்தின் ஒரு கிளை சைகோனில் இருந்தது. அதன் செயல்பாடுகளில் ஒன்றாக அச்சங்கம் நடத்திய மாநாட்டில் உயர் பொறுப்பிலிருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.

இந்தியா சிந்தனைகளைப் பரப்புவதற்காக சைகோன் சின்னையா, தேச சேவகன் என்னும் மாதமிருமுறை இந்திய இந்தோ–சீன இதழ்களை வெளியிட்டார். அவர் புதுச்சேரி திரும்பி 1906இல் 'சூர்யோதயம்' என்னும் பத்திரிகையைத் தொடங்கினார்; பாரதி தன் பத்திரிகை வெளியீடுகள் நிறுத்தப்பட்டதால் மன உளைச்சலில் இருந்தபோது

அவரை தன் ஆசிரியர் குழுவில் இணைந்துகொள்ள அழைப்பு விடுத்தார் சின்னையா. பாரதிதாசன், ஜெகநாதம்கிராமணி மற்றும் மற்ற சுதேசிகளின் துணையுடன் தன் தேசபக்தி நடவடிக்கைகளை தொடர்ந்த சின்னையா 1922இல் தேச சேவகன் பத்திரிகையை மீண்டும் வெளியிட்டார்.



ஓர் வங்கி அதிகாரியாக இருந்த ப்ருச்சன்டி, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் தொடங்கிய இந்திய தேசிய கூட்டமைப்பில் இணைவதற்காக தன் பணியை இராஜினாமா செய்தார். அதன் செயல் அலுவலகம் அவருடைய வீட்டிலிருந்தே செயல்பட்டது. இந்தியா வாரக் கொண்டாட்டங்களில் பங்கேற்க நேதாஜி 1945இல் சைகோனுக்கு வருகை தந்தபோது அவருக்கு ஓர் ஆரவாரமான வரவேற்பை ப்ருச்சன்டி அளித்தார். நேதாஜியின் உயிரைப் பறித்த அக்கொடிய விமான விபத்திற்கு முன்தினமான 18 ஆகஸ்ட் 1945 அன்று எதிர்கால திட்டங்கள் குறித்து ப்ருச்சன்டி அவருடன் ஆலோசித்தார்.

நேதாஜியை சந்தித்த கடைசி நபர் அவர் என்பதால் ஜப்பான் இராணுவம் அவரைக் கைது செய்து, நேதாஜியின் திட்டங்கள் மற்றும் அவருடைய உடைமைகள் குறித்த விவரங்களைக் கூறுமாறு அவரை சிறையிலடைத்து சித்திரவதைகள் செய்தது. அக்கொடூரமான சித்திரவதைகள் அவரை ஓர் நடைபிணமாக மாற்றியது; பின்னர் புதுவைக்கு கொண்டுவரப்பட்ட அவர், தன் வாழ்நாளை ஓர் மனித இயந்திரம்போலக் கழித்து இறந்தார்.

நேதாஜியின் இந்திய தேசியப் படையில் இருந்த புதுச்சேரியின் பல ஃபிரெஞ்சு இந்தியர்கள், ஆங்கிலேயரிடமிருந்து இந்தியாவை விடுவிக்கும் நோக்கில் பர்மாவை நோக்கி படையெடுத்தபோது, அதில் பங்கேற்று தங்கள் இன்னுயிரை ஈந்தனர். (மோர் 2022:463–470).

இந்தியா, தமிழ்நாடு மற்றும் ஃபிரெஞ்சு இந்தியா

சுதந்திரத்திற்கு முந்தைய நிகழ்வு

அட்லியின் 1946 பிரகடனத்திற்கு பின்பு இந்தியாவுக்கு விரைவில் சுதந்திரம் கிடைத்துவிடும் என்பது வெளிப்படையாக தெரியத் தொடங்கியது. ஃபிரெஞ்சு இந்தியாவைப் பொறுத்தவரை, ஃபிரெஞ்சுகாரர்களும் அதைப் பின்பற்றி அவ்வாறே

செய்வார்கள் எனும் ஒரு பொதுவான எண்ணம் இருந்தது. ஆனால், பொருளாதார, உணர்வுப்பூர்வமான மற்றும் போர்த்திறம் சார்ந்த அடிப்படையில், ஃபிரெஞ்சு இந்தியாவை தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள எண்ணி ஃபிரான்ஸ் பின்வாங்கியபோது, இந்திய தேசியத்தின் ஓர் புதிய எழுச்சி ஃபிரெஞ்சு இந்தியாவில் உருவாகியது. அந்த எழுச்சி, இந்திய அரசாங்கத்தால் மறைமுகமாகவும், மற்ற அரசியல் கட்சிகளால் வெளிப்படையாகவும் மேலும் வளர்க்கப்பட்டது. (சாந்தினி 2005:247).

1946ஆம் வருடம் தொடங்கி நடைபெற்ற சம்பவங்கள் இந்திய தேசியம் எவ்வாறு வெளிப்பட்டது, குறிப்பாக தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகளான காங்கிரஸ், கம்யூனிஸ்ட், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், ஆகியவை ஃபிரெஞ்சு சுதந்திரப் போராட்டத்தில் ஏற்படுத்திய தாக்கம், என இவையனைத்தும் ஒன்றிணைந்து இறுதியாக ஃபிரெஞ்சு இந்தியாவின் விடுதலையைப் பெற்றுத் தந்தது. (அகிலா யெச்சூரி 2015:143–144).

அரசியல் கட்சிகளின் தோற்றம்

பிரெஞ்சு இந்தியாவிற்கு தன்னாட்சி உரிமையைப் பெறும் குறிக்கோளுடன், சுப்பையாவின் கம்யூனிஸ்ட் கட்சி, செல்லா நாயக்கரின் இந்தியா கட்சி, மற்றும் மற்ற பல முற்போக்கு குழுக்களின் இணைப்பால் தேசிய ஜனநாயக முன்னணி (NDF) 15 செப்டம்பர் 1945 அன்று உருவாக்கப்பட்டது. இருப்பினும், இந்திய விடுதலைக்கான வாய்ப்புகள் பிரகாசமாக இருந்த சூழ்நிலையில், தேசிய ஜனநாயக முன்னணி 1947இல் உடைந்து சிதறியது. சுப்பையா 1942இல் தான் தொடங்கிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு புத்துயிர் அளித்தார். காங்கிரஸ் கட்சி வித்தியாசமாகப் பிளவுபட்டது. அப்போதைய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக (TNCC) காமராஜர் இருந்தபோது, ஃபிரெஞ்சு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி (FINC) மற்றும் காரைக்கால் தேசிய காங்கிரஸ் ஆகியவை 1946இல் இந்திய தேசிய காங்கிரஸின் (INC) கிளைகளாகத் தொடங்கப்பட்டன. S.R. சுப்பிரமணியம், காங்கிரஸ் சோஷலிச கட்சியை உருவாக்கினார். ஃபிரெஞ்சு இந்திய சோஷலிச கட்சியை (FISP) தொடங்கிய எட்வர்ட் குபேர், அரசியல் அரங்கிற்குள் தாமத நுழைவாக வந்தார் (கிருஷ்ணமூர்த்தி 1991:50–56).

இணைப்பிற்கான முதல் கோரிக்கை

R.L. புருஷோத்தம ரெட்டியார் அவர்களின் தலைமையில், 1947 ஜனவரி 24 மற்றும் 25இல் ஃபிரெஞ்சு இந்திய தேசிய காங்கிரஸ் புதுச்சேரியில் ஒருங்கிணைத்த பொது மாநாட்டில், காமராஜர், ம.பொ.சிவஞானம், மற்றும் ரவீந்திரவர்மா ஆகியோர் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் தான் ஃபிரெஞ்சு இந்தியா விடுதலை செய்யப்பட்டு, நிபந்தனைகளின்றி இந்திய ஒன்றியத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கை முதன்முதலாக எழுந்தது. (சாந்தினி 2005:247).

இக்கோரிக்கைக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவு உடனடியாகக் கிடைத்தது; மேலும் அதன் தலைவர் காமராஜர் கோயம்புத்தூரில் நடந்த 43ஆவது மாநில மாநாட்டில், ஃபிரான்ஸ் உடனடியாக வெளியேறாவிட்டால் அதற்குரிய நேரடி நடவடிக்கையை எடுக்கவேண்டிய கட்டாயத்திற்கு தமிழ்நாடு காங்கிரஸ் தள்ளப்படும் என்று எச்சரித்தார். ஃபிரெஞ்சு சுதந்திர இயக்கத்தை வழிநடத்துவதற்காக C.P. ஆதித்தன் தலைமையிலான சட்டசபை உறுப்பினர்களைக் கொண்ட ஓர் குழு உடனடியாக உருவாக்கப்பட்டது. (கல்வித்துறை 2004:93).

இருப்பினும் 19 ஜூன் 1948 அன்று, இந்தியா மற்றும் ஃபிரான்ஸ் அரசாங்கங்கள் இணைந்து மேற்கொண்ட கூட்டுப் பிரகடனத்தில், ஃபிரெஞ்சு இந்திய குடியிருப்பில் உள்ள மக்கள் தங்கள் எதிர்காலத்தை ஓர் சுதந்திரமான வாக்கெடுப்பின் மூலம் முடிவு செய்வார்கள் என்று அறிவித்தது. இந்திய தேசிய காங்கிரஸ், இந்தியாவின் இந்நகர்வை ஓர் எதிர்பாராத மற்றும் அறிவற்ற செயலாகக் கருதியது; மேலும் ஃபிரெஞ்சு இந்திய தேசிய காங்கிரஸ், தாய்நாட்டுடன் இணைய ஏங்கிக் கொண்டிருக்கும் மக்களின் தார்மீக உரிமைக்கு விடுக்கப்பட்ட சவாலாகவும், அவமதிப்பாகவும் இதனைக் கருதியது. (கிருஷ்ணமூர்த்தி 1991:65–66).

நகராட்சித் தேர்தல்கள்: பிழைகளின் நகைச்சுவை

பொது வாக்கெடுப்பின் முன்னோட்டமாக அக்டோபர் 1948இல் நகராட்சித் தேர்தல்கள் நடத்தப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டன. தன்னாட்சி அந்தஸ்தைக் கோரிய ஃபிரெஞ்சு இந்திய சோஷலிசக் கட்சியும், இந்தியாவுடன் இணைக்கப்பட வேண்டும் என்று கோரிய ஃபிரெஞ்சு இந்திய காங்கிரஸ் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் திராவிடர் கழகம் ஆகியவற்றை உள்ளடக்கிய முற்போக்கு ஜனநாயக கூட்டணியும் தேர்தலில் தனித்தனியாகப் போட்டியிட்டன. (கிருஷ்ணமூர்த்தி 1991:66).

ஓர் சுவாரஸ்யமான திருப்பம்

தமிழ்நாடு திராவிட இயக்கத்தின் ஓர் சிறு கிளையான இந்திய ஒன்றியத்தில் சேர மறுப்போர் கழகம், பாரதிதாசன் தலைமையில், முற்போக்கு ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகித்தது. இந்திய ஒன்றியத்துடன் இணைவதைத் தடுப்பதற்காக ஃபிரெஞ்சு இந்தியாவிற்கு ஃபிரெஞ்சு ஒன்றியத்திற்குள் தன்னாட்சி அந்தஸ்தை தற்போதைக்கு அது கோரியது; திராவிட நாடு நனவாகும்போது ஃபிரெஞ்சு இந்தியா பின்னர் அதனுடன் இணைந்து கொள்ளலாம் என அக்கூட்டணி திட்டமிட்டது. நேரு தலைமையிலான இந்திய அரசாங்கம் கம்யூனிஸ்டுகளுக்கு எதிரானது, ஆங்கிலஅமெரிக்க சார்பானது என்று கருதிய கம்யூனிஸ்ட் கட்சி, ஃபிரெஞ்சு இந்தியா முதலில் ஃபிரெஞ்சு ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற வேண்டும் பின்னர் படிப்படியாக இந்திய ஒன்றியத்துடன் இணைவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என்றும் கருதியது. (குயில், அக்டோபர் 12, 1948; சாந்தினி 2005:254).

வன்முறையின் சுவை

வாக்கெடுப்பின் போக்கை தீர்மானிக்கக் கூடியதாக இருந்த காரணத்தால் நகராட்சித் தேர்தல் முடிவுகள் மிக முக்கியமானதாக கருதப்பட்டது. தேர்ந்தெடுக்கப்படும் புதிய நகராட்சிகளே வாக்கெடுப்பின் தேதி மற்றும் முறைகளைத் தீர்மானிக்கும் என்பதால் அவை மேலும் முக்கியத்துவம் பெற்றன. (ராஜ்குமார் 1951:59).

இணைப்புக்கு எதிரான குழு தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி சூழ்ச்சியான வகையில் வாக்காளர் பட்டியலில் முறைகேடுகள் செய்ததோடு பணம் மற்றும் பலத்தைப் பிரயோகித்து அனைத்து வகையான ஊழல்களிலும் ஈடுபட்டது. மிரட்டல், தீ வைத்தல், வன்முறை போன்ற மக்களை அச்சுறுத்தும் சம்பவங்கள் அதிகரித்தன. எனவே, அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டி, டாக்டர் N.V. ராஜ்குமார் மற்றும் டாக்டர் P. சுப்பராயன் ஆகியோரை புதுச்சேரிக்கும் நாகப்பட்டினத்தைச் சேர்ந்த A.M. சாமிநாத செட்டியாரை காரைக்காலுக்கும், கண்காணிப்பாளர்களாக நியமித்தது. (கிருஷ்ணமூர்த்தி 1991:66).

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஓமந்தூர் P. ராமசாமி ரெட்டியார் கடலூரைச் சேர்ந்த செல்லான் நாயக்கரிடம் ஆலோசித்தார். காமராஜர், டாக்டர் P. சுப்பராயன், மற்றும் S.P. ஆதித்தன் ஆகியோர் தங்கள் பிரச்சாரப் பயணத்தில் காரைக்கால் பகுதியில் நடந்த காந்தி ஜெயந்தி விழாவில் இணைப்புக்காக மக்களை போற்றிப் புகழ்ந்தனர். இணைப்புக்கு எதிரான குண்டர்கள் பொதுக் கூட்டத்திற்குள் புகுந்து கற்களை எறிந்தபோது அவர்கள் வன்முறையை சந்திக்க நேரிட்டது. அதிர்ஷ்டவசமாக காங்கிரஸ் தலைவர்கள் காயமின்றி தப்பினர் (சாந்தினி 2005:148).

ஃபிரெஞ்சு இந்திய தேசிய காங்கிரஸ், நடுநிலையான கண்காணிப்பாளர்களைக் கோரியபோது, அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. 24 அக்டோபர் 1948 அன்று தேர்தல் நடைபெற்றது. ஃபிரெஞ்சு நிருவாகத்தின் ஒத்துழைப்போடு வாக்காளர்களின் உண்மையான தேர்வுக்கு எதிராக, திருநள்ளாறு தவிர்த்த மற்ற அனைத்து தொகுதிகளிலும் ஃபிரெஞ்சு இந்திய சோஷலிசக் கட்சியின் அனைத்து வேட்பாளர்களும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஒட்டுமொத்த வாக்கெடுப்பு முறைக்கும் இச்சம்பவம் களங்கத்தை ஏற்படுத்தியது. (கீதா 2008:166). "தற்போதைய தேர்தல் முடிவுகளை வழிகாட்டலாக எடுத்துக் கொள்வது பாதுகாப்பற்றது; பிரபலமான மக்கள் விருப்பத்திற்கு எதிராக தற்போது நடந்திருப்பது ஓர் ஜனநாயக விபச்சாரம்," என்று N.V. ராஜ்குமார் கடுமையாகச் சாடினார் (ராஜ்குமார் 1951:59).

குபேர்ட் – சூழ்ச்சி வல்லுனர்

ஃபிரெஞ்சு இந்திய சோஷலிசக் கட்சியின் தலைவரான குபேர்ட், தான் பெற்ற அப்பிரபலமான சந்தேகத்துக்குரிய வெற்றி ஆணை மற்றும் ஃபிரெஞ்சு நிருவாகத்தின் ஆதரவு ஆகியவை அளித்த துணிச்சலுடன் தனது மாபெரும் அரசியல் சூழ்ச்சிகளைத் தொடங்கினார். ஜூலை 1949இல் குபேர்ட் ஒரு பிரதிநிதிகள் குழுவை தலைமை தாங்கி பாரிஸுக்கு அழைத்துச்சென்று அங்கு அரசாங்கத்திடம் ஃபிரெஞ்சு இந்தியாவிற்கு ஃபிரெஞ்சு ஒன்றியம் என்கிற கட்டமைப்புக்குட்பட்டு தன்னாட்சி வழங்கும் நடவடிக்கைகளுக்கு உறுதிமொழி அளிக்குமாறு கேட்டார். மேலும், அத்தன்னாட்சியை பொது வாக்கெடுப்பிற்கு முன்பாக அளிக்குமாறு வலியுறுத்தினார். ஆயினும் பிரெஞ்சு அதிகாரிகள் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. (தி இந்து, 18 அக்டோபர் 1949).

இதனால் ஏமாற்றமடைந்த பாண்டிச்சேரி பிரதிநிதிகள் குழு, டெல்லி சென்று இந்தியப் பிரதமர் நேரு, தலைமை ஆளுநர் இராஜாஜி மற்ற இந்தியத் தலைவர்கள், புதுதில்லி அதிகாரிகள் என மிக நீண்ட ஆலோசனைகளை நடத்தியது. பேச்சுவார்த்தைகளின் முடிவில், இந்தியாவுடன் இணையும்பட்சத்தில், பரந்த நோக்கில், ஃபிரெஞ்சு இந்தியா ஒரு மாகாணமாக அல்லது மாகாணங்களாக அல்லது இந்திய ஒன்றியத்தின் ஓர் மாநிலமாக நடத்தப்படும் என்ற உறுதிமொழியை இந்திய அரசாங்கம் வழங்கியது. (கீதா 2008:202–203).

இந்திய அரசின் உறுதிமொழியால் வெளிப்படையாக மகிழ்ச்சியடைந்த விலி குபேர்ட், தங்களுடைய கட்சி ஏற்கனவே கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான ஒன்றாக இருப்பதால், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தங்களை எதிர்ப்பதை இனி தவிர்க்க வேண்டும் என்று நேருவிடம் கோரினார் (கீதா 2008:203). இதன்படி அப்போதைய மதராஸ் மாகாண முதல்வரான குமாரசுவாமி ராஜாவிற்கு ஓர் இரகசிய கடிதத்தை எழுதிய நேரு, தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி புதுச்சேரியின் எதிர் குழுக்களுக்குள் நடக்கும் மோதலைத் தவிர்க்குமாறும், குறிப்பாக ஃபிரெஞ்சு இந்திய சோஷலிசக் கட்சியுடன் எவ்வித மோதலும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளுமாறும் நேரு அக்கடிதத்தில் தெரிவித்தார்.

அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவரான பட்டாபி சீதாராமையாவும் புதுச்சேரியின் R.L. புருஷோத்தம ரெட்டியாருக்கு இதே ரீதியிலான ஒரு கடிதத்தை எழுதினார். இருப்பினும், புதுச்சேரி சென்றடைந்த குபேர் ஃபிரெஞ்சு அரசிடமிருந்து தன்னாட்சி பெறுவதற்கான தனது பொறுப்பை உறுதிப்படுத்தியபடி பொது வாக்கெடுப்பிற்கான ஏற்பாடுகளைத் தொடங்கினார். இதனால் நேரு மிகுந்த வருத்தம் அடைந்தார். (கீதா 2008:203–204).

சுங்க ஒன்றியமும், பொருளாதாரத் தடையும்

இதனிடையே, ஃபிரான்ஸ் நாட்டின் அலட்சியத்தால் சுங்க ஒன்றிய ஒப்பந்தம் காலாவதியானது. ஆயினும், ஃபிரெஞ்சு இந்திய துறைமுகங்களுக்கு சுங்கமில்லா அந்தஸ்தை அறிவித்தது; இதனால் இம்முனைகள் கடத்தல்காரர்களின் சொர்க்கமாக மாறியது. புதுச்சேரிக்கான இந்தியத் தூதர் ரஷீத் அலி, பொருளாதாரத் தடையை அறிவிக்க வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டார். தவிர்க்க முடியாத சூழலில் ஓர் பனிப்போர் தொடங்கித் தொடர்ந்தது. ஆத்திரமடைந்த ஃபிரான்ஸ், 11 டிசம்பர் 1949 அன்று பொது வாக்கெடுப்பு நடைபெறும் என அறிவித்தது. (கெனாட் 2015:231–235).

ஃபிரெஞ்சு இந்தியப் பகுதிகளில் அரசியல் செயல்பாடுகளில் ஈடுபட இந்தியர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. எனவே தமிழ்நாட்டில் மட்டுமிருந்தே செயல்பட வேண்டும் என்ற நிலையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய தேசியவாதிகள், சென்னையை ஒருங்கிணைப்பிற்கான மையமாகக்கொண்டு, ஃபிரெஞ்சு இந்தியப் பகுதிகளுக்கு அருகில் உள்ள கடலூர், விழுப்புரம், தற்போதைய புதுச்சேரியின் கோட்டகுப்பம், நாகப்பட்டினம், மற்றும் காரைக்கால் பகுதியின் தரங்கம்பாடி போன்ற இடங்களிலிருந்து செயல்பட்டனர்.

இணைப்பிற்காக ரஷீத் அலி அவர்களால் சீரமைக்கப்பட்ட முதல் முக்கிய கூட்டணியான தேசிய விடுதலை முன்னணி (NLF) முடியும் தருவாயில் இருந்தது. இணைப்பு ஆதரவு குழுக்கள் பல்வேறு வகையில் பிளவுபட்டிருந்தன. ஆகவே, காங்கிரசின் பிரிவுகளை கடலூருக்கு அழைத்த ராஜ்குமார், அவர்களை ஒன்றிணைத்து 'பாண்டிச்சேரி இணைப்புக் குழு' மற்றும் 'காரைக்கால் இணைப்பு காங்கிரஸ்' ஆகியவற்றை 1949இல் ஏற்படுத்தினார். (கிருஷ்ணமூர்த்தி 1991:72).

ஒத்திவைக்கப்பட்ட வாக்கெடுப்பு

கருத்து முரண்களை முடக்கும் பொருட்டு ஆட்சியாளர்கள் துணையுடன், சோஷலிசக் கட்சி வன்முறையைக் கட்டவிழ்த்தது. அக்கட்சி, பிரதானமாக கம்யூனிஸ்டுகளுக்கு எதிராகவும், இரண்டாவதாக இணைப்புக் குழுக்கள் மற்றும் காங்கிரஸின் பதாகைகளை ஏந்தியபடி பேரணி சென்ற இணைப்பு ஆதரவாளர்களுக்கு எதிராகவும் வன்முறையை நிகழ்த்தியது (கிருஷ்ணமூர்த்தி 1991:75).

மாணவர்களை ஆற்றுபடுத்திய ஓமந்தூரார்

கல்வே கல்லூரியின் காங்கிரஸ் மாணவர்கள் 1949இல் நடத்திய சத்தியாகிரகத்தின்போது காவல்துறையால் கொடூரமாகத் தாக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் புதுச்சேரியிலிருந்து கடலூர் வரை பேரணியாகச் சென்று அங்கு முகாமிட்டிருந்த தமிழ்நாடு முதலமைச்சர் O.P. ராமசாமி ரெட்டியாரிடம் புகார் அளித்தனர். மாணவர்களை சமாதானப்படுத்திய ஓமந்தூரார், 'பாடலி' திரையரங்கத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் வன்முறை விரைவில் முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்று வெளிப்படையாக அவர்களுக்கு உறுதிமொழி அளித்தார். (அருள்ராஜ் 2005:121).

குபேர்ட் மீதான தாக்குதலும், அதன் பின்விளைவுகளும்

சோஷலிஸ்ட்களுக்கு எதிராக தேசியவாதிகள் பதிலடி கொடுத்தபோதும், குபேர்ட்டின் குழுவே அப்பகுதியை தனது முழு கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. 1950இல் ஒரு நாள், தனிப்பட்ட முறையில் குபேர்ட் மீது கோபம் கொண்ட அவரால் பாதிக்கப்பட்ட ஒரு நபர் முருங்கப்பாக்கத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் குபேர்ட் மீது குண்டு வீசினார்; ஆனால் குபேர்ட் காயமின்றி தப்பினார்.

இதன் விளைவாக ஆத்திரமடைந்த ஃபிரெஞ்சு இந்திய சோஷலிச கட்சி யினர், முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு முதலில் நகரத்திலும், பின்னர் கிராமங்களிலும் வன்முறை கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். வீடுகள் கொளுத்தப்பட்டன, கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன, அப்பாவிகள் மிரட்டப்பட்டனர், சிலர் கொலையும் செய்யப்பட்டனர். ஜனவரி 13 அன்று சுப்பையாவின் வீடு தீ வைக்கப்பட்டது, அவருடைய சுதந்திரம் பத்திரிகை அலுவலகம் சூறையாடப்பட்டது. தாக்குதல்களின் கடுமையைத் தாங்க முடியாத மக்கள், அருகிலிருந்த எல்லையோர கிராமங்களுக்குத் தப்பியோடி தஞ்சமடைந்தனர். தமிழ்நாட்டின் தேசப்பற்றுமிக்க புரவலர்கள் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அம்மக்களுக்கு தங்களின் தார்மீக மற்றும் பொருளாதார ரீதியிலான உதவிகளை நல்கினர். (முருகேசன் 2004:145).

இத்தகைய குழப்பமான சூழலை மேற்கோள்காட்டி அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டியின் செயலாளர் ஜுகல் கிஷோர் வாக்கெடுப்பை ஒத்தி வைக்க வேண்டும் அல்லது வாக்கெடுப்பு நடுநிலைப் பார்வையாளர்களால் கண்காணிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். ஆயினும் ஃபிரான்ஸ் அக்கோரிக்கையை மறுத்தது, வன்முறை தொடர்ந்தது. (ராஜ்குமார் 1951:29–30).

இயக்கத்தின் தளர்ச்சி

இணைப்பு ஆதரவாளர்கள் சிதைக்கப்பட்டனர், கம்யூனிஸ்டுகள் அமைதியாக்கப்பட்டனர். பாதுகாப்பு தேடி மக்கள் எல்லை கிராமங்களை நாடிச் செல்வது அதிகரித்தது. தவிர்க்க முடியாமல் இணைப்பு நடவடிக்கைகளில் ஓர் சுணக்க நிலை ஏற்பட்டது. ஆயினும், கடத்தல்கள் எவ்விதத் தடையுமின்றி நடைபெற்றன. இதன் காரணமாக, பொருளாதாரம் மற்றும் செயல்திறன் சார்ந்த தொடர் அழுத்தங்களை அளித்து இந்தியா சூழலை இறுக்கியது. (கிருஷ்ணமூர்த்தி 1991:75).

தமிழ்நாடு கவலை கொண்டது

சுதந்திரப் போராட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கும் நோக்கில், 21 மார்ச் 1950 அன்று ராஜ்குமார், செல்லான் நாயக்கர் தலைமையில் ஓர் நடவடிக்கைக் குழுவை அமைத்தார். இத்தகைய கடினமான சூழலில், தங்களது தனிப்பட்ட விருப்பங்களையும், வேற்றுமைகளையும் ஒதுக்கிவைத்து, இந்திய ஒன்றியத்துடனான இணைப்பிற்கு அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் என்று காமராஜர் இணைப்பு ஆதரவாளர்களிடம் வேண்டினார் (நியோஜி 1997:164). இதன் பின்னர், இணைப்புக்கு எதிரானவர்கள் எல்லை கடந்து அகதிகள் முகாம்களிலும், தங்களின் தாக்குதல்களை நடத்தினர். இடைவிடாத தொடர் தாக்குதல்கள் காரணமாக, செல்லான் நாயக்கர் 16 ஆகஸ்ட் 1950 அன்று காமராஜரை நாடிச்சென்று தமிழ்நாட்டில் உள்ள அகதிகளுக்கு ஆதரவளிக்குமாறு கோரினார்.

ஆதரவுக்கரம் நீட்டிய இந்தியா

இந்திய அரசு, பாண்டிச்சேரிக்கான இந்தியத் தூதர், மண்டல காங்கிரஸ் கமிட்டிகள், மற்ற அமைப்புகள் மற்றும் இந்தியப் பத்திரிகைகள் ஆகியவை இணைப்பு ஆதரவு செயல்பாட்டாளர்களுக்கு தங்களின் வலிமையான ஆதரவை தொடர்வதிலும், அரசியல் அகதிகளுக்கு தஞ்சம் அளிப்பதிலும் மிக உறுதியாக இருந்தன. மதராசிலிருந்து அமைச்சர்கள் பக்தவச்சலம் மற்றும் சீதாராம் ரெட்டியார் ஆகியோரை 12 அக்டோபர் 1951 அன்று புதுச்சேரி விவகாரங்களை கவனிக்க நியமித்ததன் மூலம் காங்கிரஸ் கமிட்டி தனது ஆதரவைத் தொடர்ந்தது.

தவிர்க்க முடியாத சிக்கல்

தீவிரவாதக் கொள்கையும், அதன் விளைவாக நிலவிய அச்ச சூழலும் 1951க்கு மத்தியில் இணைப்புக்கான ஆக்கப்பூர்வ அரசியல் நடவடிக்கைகளை நிறுத்தியது. இருப்பினும், இந்தியத் தூதர் R.K. டேண்டன் எல்லைகளை ஒட்டிய ஃபிரெஞ்சு எதிர் நடவடிக்கைகளுக்கான வலைப்பின்னலை ஒருங்கிணைக்கும் தனது முயற்சிகளைத் தொடர்ந்தார். இயக்கத்திற்கு புத்துயிரூட்ட மக்கள் ஆதரவு பெற்ற ஓர் வலிமையான தலைவருக்கான தேவை எழுந்தது. சுப்பையாவே அதற்கான இறுதித் தேர்வாக இருந்தார். (கீதா 2008:224).

சுப்பையா திரும்பினார்

நேரு அவர்களின் உத்தரவின் பேரில், சிலோன் இந்திய தூதரகத்தின் உயர் ஆணையரான V.V. கிரி ஜூலை 1951இல் புதுச்சேரிக்கு வருகைபுரிந்து அங்குள்ள சூழ்நிலையை ஆய்வு செய்தார். அதுவரை எவ்வித செயல்பாடுகளிலும் ஈடுபடாமல் மதராஸில் இருந்த V. சுப்பையாவை சந்தித்த கிரி அவரை சமாதானப்படுத்தி, மீண்டும் இயக்கத்தில் ஈடுபடுமாறு வேண்டினார். அவருடைய ஆலோசனையின்பேரில் சுப்பையா மீதான கைதாணை ரத்து செய்யப்பட்டு, இணைப்பு இயக்கத்தின் வரலாற்றில் ஓர் புதிய அத்தியாயம் தொடங்கியது. (சுப்பையா 1990:295).

ராமமூர்த்தி, கல்யாணசுந்தரம், கந்தசாமி, மற்றும் இலக்கியவாதி திருக்குறள் முனுசாமி போன்ற தோழர்களின் ஈடுபாட்டுடன் விழுப்புரம் மற்றும் கோட்டகுப்பம் இரண்டும் முக்கிய செயல்பாட்டு மையங்களாக இருந்தன. சுப்பையா செயல்பாட்டில் இல்லாத சமயத்தில் சுப்பையாவிற்கும், புதுச்சேரிக்குமான தொடர்பாக இருந்த V.P. சிந்தன் அதன் பின்னர் பரபரப்பான ஒருவராக மாறினார். சுதந்திரம் பத்திரிகையின் அச்சு இயந்திரங்கள் ஓர் இரவில் விழுப்புரத்திற்கு இடமாற்றப்பட்டு அதன் வெளியீடு மீண்டும் தொடங்கப்பட்டது. (அருள்ராஜ் 2005:122, 158–161).

காரைக்கால் மறுபார்வை

பிப்ரவரி 1952இல் காங்கிரஸ் கமிட்டியின் ஓர் பொதுக்குழுக் கூட்டம் காமராஜர் தலைமையில் தரங்கம்பாடியில் நடந்தது. காரைக்கால் பகுதியில் இணைப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க பக்தவச்சலம் மற்றும் நாகை T.N. ராமச்சந்திரன் ஆகியோர் அடங்கிய ஓர் துணைக்குழுவை அமைக்க அதில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதன் விளைவாக 'ஃபிரெஞ்சு இந்திய விடுதலை முன்னணி' என்னும் ஓர் புதிய இயக்கம் திருமலைராஜன்பட்டினத்திலிருந்து செயல்படத் தொடங்கியது. (சாந்தினி 2005:146).

புதிய தூதர் R.K.டேண்டன் அவர்களின் முன்னெடுப்பில், ஃபிரெஞ்சு இந்தியப் பகுதிகளில் உள்ள தேசியவாதிகளை ஒன்றிணைக்க 1952இல் 'ஒற்றுமை முன்னணி' தொடங்கப்பட்டது. புதிய முன்னணி சார்பில், ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட ஓர் அகதிகள் மாநாடு கடலூரில் ஒருங்கிணைக்கப்பட்டது. ஆகஸ்ட் 1952இல் அப்பகுதியின் அகதிகளை கவனித்துக்கொண்ட S.S. ராமசாமி படையாச்சி மற்றும் C.P. ஆதித்தன் ஆகியோர் புதுச்சேரி தேசியவாதிகளின் உணர்வுகளைத் தூண்டியெழுப்பும் விதமாக இயக்கத்தில் பங்கேற்றனர். "ஃபிரெஞ்சு அரசாங்கம் உடனடியாக ஃபிரெஞ்சு இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும்; இந்திய அரசு, இந்திய அரசியல் கட்சிகள், மற்றும் இந்திய மக்கள் அனைவரும் ஃபிரெஞ்சு இந்திய மக்களின் உரிமைகளுக்கான போராட்டத்தை ஆதரிக்க வேண்டும்", என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது (முருகேசன் 2004:152–53).

நாடாளுமன்றத்தில் தாக்குதல் குறித்த பிரச்சினை

ஃபிரெஞ்சு சோஷலிசக் கட்சியின் குண்டர்கள் அடிக்கடி இந்தியப் பகுதிகளுக்குள் ஊடுருவி அகதிகளைத் தாக்கினர். தமிழ்நாட்டின் பள்ளிநெளியனூர் கிராமத்திலிருந்த அகதிகள் முகாமை நெட்டப்பாக்கத்தைச் சேர்ந்த ஒரு கும்பல் தாக்கியது. மத்திய அரசின் கவனத்தைப்பெற எல்லை தாண்டிய தாக்குதல்கள் குறித்த பிரச்சனையை R. வெங்கட்ராமன் நாடாளுமன்றத்தில் எழுப்பினார். எல்லை தாண்டிய நடவடிக்கைகள் மீண்டும் தொடர்ந்தால் இந்திய அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கத் தயங்காது என்று நேரு எச்சரித்தார். (நியோகி 1997:232–234; அருள்ராஜ் 2005:130).

இராஜாஜியின் அக்கறையின்மை

தமிழ்நாட்டில் 1952இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இராஜாஜி முதலமைச்சர் ஆனார். 1949லேயே குபேர்ட்டின் பிரதிநிதிகள் குழுவை ஊக்குவிக்க வேண்டாம், அவர்களிடம் கடுமையான நிலைப்பாட்டை நாம் வெளிப்படுத்த வேண்டும் என்று இராஜாஜி, நேருவுக்கு ஆலோசனை கூறியிருந்தார். பொருளாதாரத்தடை மற்றும் காட்டுமிராண்டித் தாக்குதல்கள் ஆகியவற்றால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். ஆயினும், அவற்றையெல்லாம் கண்டும் காணாத ஒருவராக இராஜாஜி இருந்தார். மே 13 அன்று எல்லை தாண்டிய தாக்குதல்களை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டி செல்லான் நாயக்கரின் குழு இராஜாஜியை சந்திக்கச் சென்றபோது அது தெளிவாகத் தெரிந்தது. ஃபிரெஞ்சு இந்தியா ஓர் அந்நியப் பிரதேசம் ஆகவே நீங்கள் தில்லியை அணுகுங்கள் என்று அவர்களுக்கு இராஜாஜி அறிவுறுத்தினார். (அஜித் நியோகி 1997:203).

செல்லான் நாயக்கரின் உயிரைக் கொல்லும் முயற்சி

காங்கிரஸின் பிரிவுகளை ஒன்றிணைப்பதில் செல்லான் நாயக்கர் காட்டிய உறுதிப்பாடு ஃபிரெஞ்சு ஆதரவு குண்டர்களை சினமூட்டியது. 31 ஆகஸ்ட் 1952 அன்று செல்லான் நாயக்கரின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்த குண்டர்கள் அவர்மீது துப்பாக்கியால் சுட்டபோது அவர் கடுமையாக காயமடைந்தார்.

மனமிரங்கிய நேரு

படுகொலை முயற்சி மற்றும் அதைத் தொடர்ந்த தொடர் வன்முறைகள் ஆகியவை அனுபவமிக்க ஜனநாயகவாதியான நேருவை அசைத்தன. மதராஸில் அக்டோபர் 9 அன்று நடந்த பொதுக்கூட்டத்தைத் தேர்ந்தெடுத்து, "எதிர்ப்புறத்தில் உள்ளவர்கள் தங்களின்

வஞ்சகம் மற்றும் மோசடிகளால் வாக்கெடுப்பு என்னும் எண்ணத்தையே நசுக்கி விட்டார்கள்; மேலும், இந்தியாவுடனான இணைப்பிற்காக மக்கள் வாக்களிப்பதைத் தடுக்கும் பொருட்டு தீவிரவாதச் சூழலை உருவாக்கும் பல முயற்சிகள் அவர்களால் மேற்கொள்ளப்பட்டன," என்று நேரு அறிவித்தார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர்களை ஃபிரெஞ்சு இந்திய அகதிகளுக்கு தங்களால் இயன்ற அனைத்து உதவிகளையும் அளிக்குமாறு நேரு வலியுறுத்தினார். (நியோகி 1997:203).

பாண்டிச்சேரி, காரைக்கால், மற்றும் மாஹி ஆகியவற்றின் எல்லைக் கிராமங்களில், இணைப்புத் தலைவர்கள் ஒன்றிணைந்து ஃபிரெஞ்சு எதிர் நடவடிக்கைகளுக்கான முகாம்களை அமைக்க ஏற்பாடுகள் செய்தனர். அவர்களின் இயக்கத்திற்கு தார்மீக, பொருளாதார, மற்றும் தளவாட ஆதரவை வழங்குவதைத் தவிர இந்திய அரசுக்கு வேறு தெரிவு இல்லை. இணைப்பின்மீதான தேசியவாத உணர்வுகளை ஒருமுகப்படுத்தும்படி உள்ளூர் பத்திரிகைகளை அவ்வியக்கம் ஊக்கப்படுத்தியது. இந்திய அரசின் நிதியுதவியுடன், 'புதுவை முரசு' என்னும் புதிய பத்திரிகை தொடங்கப்பட்டு, ஒவ்வொரு இதழும் 3000 பிரதிகள் அச்சடிக்கப்பட்டு மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன (கிருஷ்ணமூர்த்தி 1991:77).

பத்திரிகைகள் மீதான இறுக்கம்

பொதுக்கூட்டங்கள் மற்றும் பேரணிகளுக்கு தடைவிதித்து ஃபிரெஞ்சு இந்திய நிர்வாகம் எதிர்வினை ஆற்றியது. தங்களின் தளராத ஆதரவைத் தொடர்ந்து அளித்து வந்த தமிழ்நாட்டுப் பத்திரிகைகளான பாரதமாதா, தினசரி, தினமணி, சுதேசமித்ரன், கல்கி போன்றவை ஃபிரெஞ்சு இந்தியாவுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டன. எவற்றிற்கும் அஞ்சாத சுதேசமித்ரன், தினமணி, தினத்தந்தி, தி இந்து, தி மெயில், மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற நாளிதழ்கள் தங்கள் ஆதரவைத் தொடர்ந்தன (கிருஷ்ணமூர்த்தி 1991:78).

மத்திய நடவடிக்கைக் குழு

1953ஆம் ஆண்டு முழுவதும், இணைப்புக்கான மக்கள் இயக்கம் ஃபிரெஞ்சு இந்தியக் குடியிருப்புகளை தொடர்ந்து உலுக்கியது. இதற்கு பதிலடியாக பிரெஞ்சு இந்தியாவின் அதிகாரிகள் ஒடுக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்; மேலும், அவர்கள் இணைப்பு ஆதரவாளர்களை அச்சுறுத்தும்படி இணைப்புக்கு எதிரான சக்திகளைத் தூண்டி விட்டனர்.

மத்திய நடவடிக்கைக் குழுவின் சார்பாக செல்லான் நாயக்கர் தலைமையில் 5 ஏப்ரல் 1953 அன்று ஓர் அனைத்துக் கட்சிக் கூட்டம் கடலூரில் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் கலந்துகொண்ட சித்தானந்த பாரதி, உதவிகளைத் தொடருமாறு காமராஜருக்கும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கும் மீண்டும் வேண்டுகோள் விடுத்தார். ஃபிரெஞ்சு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் 1953 முடிவில் ஓர் அனைத்துக்கட்சி மாநாட்டை சுப்பையா அவர்களின் மேற்பார்வையில் ஒருங்கிணைத்தது. அதில், இணைப்பு இயக்கத்தின் வேகத்தை அதிகரிக்க அனைத்து இணைப்பு ஆதரவு சக்திகளும், ஒன்றிணைந்து செயல்பட வேண்டுமென்று சுப்பையா அழைப்பு விடுத்தார். (கிருஷ்ணமூர்த்தி 1991:78).

சுரங்கத்தின் முடிவில் வெளிச்சம்

பாண்டிச்சேரிக்கான புதிய இந்தியத் தூதராக அக்டோபர் 1953இல் பொறுப்பேற்ற கேவல் சிங், சண்டையிடும் குழுக்களுக்கும், தலைவர்களுக்கும் மத்தியில் ஓர் திட்டமிட்ட

சமநிலையைப் பேணியதோடு இந்திய அரசிற்கு ஒரு பாலமாகவும் விளங்கினார். அவர் அளித்த ஊக்கத்தின் காரணமாக, ஜனவரி 1954இல், ஃபிரெஞ்சு இந்திய மைய இணைப்பு காங்கிரஸ், கடலூரில் ஒன்றுகூடி செல்லான் நாயக்கரைத் தலைவராகவும் கேவல் சிங்கின் உத்தரவின்பேரில் காவல் ஆய்வாளர் பதவியை இராஜினாமா செய்த தடாலா ரமணய்யாவை செயலாளராகவும் தேர்ந்தெடுத்தது. தடாலா, கடலூரில் தங்கியிருந்து, பாகூர் பகுதியில் இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்தார். (நியோகி 1997:224).

புதுச்சேரி தலைவர்கள், தங்கள் ஒற்றுமையின் உறுதிப்பாட்டை நிரூபிக்க ஜனவரி 1954இல் மதராசில் ஓர் இணைப்பு மாநாட்டை நடத்தினர். C.P. ராமசாமி ஐயர் அவர்களின் கூற்றுப்படி, காமராஜர், பக்தவச்சலம், வெங்கட்ராமன், எத்திராஜுலு மற்றும் I.S. கரையாளர் ஆகியோரைக் கொண்ட ஒரு குழு உருவாக்கப்பட்டு, 'ஃபிரெஞ்சு இந்தியாவை விட்டு உடனடியாக வெளியேறு' இயக்கம் தொடங்கப்பட்டது. தலைவர்களை செயலுக்கு உட்படுத்த R. வெங்கட்ராமன் புதுச்சேரி சென்றார். (கிருஷ்ணமூர்த்தி 1991:78; அருள்ராஜ் 2005:130–135).

நேர்மை துரோகமாக மாறியது

அதே காலத்தில், சோஷலிசத் தலைவர்களின் குற்றச் செயல்கள் மற்றும் நிதி முறைகேடுகள் குறித்த குற்றச்சாட்டின் காரணமாக ஃபிரெஞ்சு இந்திய நிர்வாகத்திற்கும், குபேர்ட் குழுவிற்கும் இடையில் ஏற்பட்ட பிளவைப் பயன்படுத்திக்கொள்வதில் கேவல் சிங் துரிதமாக இயங்கினார். வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்ட சிங், மதராசில் வைத்து குபேர்ட்டுடன் ரகசியப் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். இந்தியாவின் பக்கம் சேர்வதே ஃபிரெஞ்சு அரசின் தண்டனை நடவடிக்கையிலிருந்து தப்புவதற்கு உதவும் என்று குபேர்ட்டை சமாதானப்படுத்தினார். இதன்படி ஃபிரெஞ்சு இந்திய சோஷலிசக் கட்சி தன்னுடைய ஃபிரெஞ்சு ஆதரவு நிலைப்பாட்டை தலைகீழாக மாற்றிக் கொண்டது. குபேர்ட்டும் மேயர் முத்து பிள்ளையும் மார்ச் 25 அன்று புதுச்சேரியிலிருந்து கிளம்பி திண்டிவனம் சுற்றுலா மாளிகையில் தங்கினர். அடுத்த இரண்டு நாட்களுக்கு ஃபிரெஞ்சு அரசிடம் உள்ள முனையங்களை ஒப்படைக்கும் பெரும் நடவடிக்கைகளுக்கான திட்டங்கள் இறுதிசெய்யப்பட்டன.

பெருங்கருணையாளர் என்.எஸ்.கே.

கடுமையான நிதி நெருக்கடியைச் சந்தித்த இளைஞர் காங்கிரசார் கலைவாணர் N.S. கிருஷ்ணன் மற்றும் T.A. மதுரம் தம்பதியரை சந்தித்தனர். அவர் உடனடியாக நிதி திரட்டும் பொருட்டு ஓர் நாடகத்தை நடத்த சம்மதித்தார். புதுச்சேரியில் நிலவும் பாதுகாப்பற்ற சூழலைக் குறித்து விளக்கி நாடகத்தை விழுப்புரத்தில் வைத்துக் கொள்ளலாம் என அவர்கள் கலைவாணரிடம் கோரினர். 'பணம்' என்ற தலைப்பிலான அந்நாடகம் பெருவெற்றி பெற்றது என்.எஸ்.கே. வசூலான மொத்தத் தொகையையும் பெருந்தன்மையுடன் இயக்கத்திற்கு நன்கொடையாக அளித்தார். மேலும் அவர்களுடைய பயணச் செலவுகளைக்கூட ஏற்க மறுத்தார். (அருள்ராஜ் 2005:149).

முடிவெடுக்கும் தருணம்

ஜவஹர்லால் நேரு 14 மார்ச் 1954 அன்று சிதம்பரத்திற்கு வருகை புரிந்தார். அச்சமயம், கேவல் சிங்கின் முன்னெடுப்பில், குபேர்ட், முத்துக்குமரப்ப ரெட்டியார் மற்றும்

இளையபெருமாள் அடங்கிய ஓர் ஏழு உறுப்பினர் குழு சோஷலிசக் கட்சி சார்பாக நேருவை சந்தித்தது. நேரு பரிந்துரைத்த செயல்திட்டத்திற்கும் அதற்கான நிதியுதவிக்கு அவர் அளித்த வாக்குறுதிக்கும் இளையபெருமாள் உறுதிமொழி அளித்தார். "ஃபிரெஞ் சுக்காரர்கள் மேலும் ஒரு நிமிடம்கூட இந்தியாவில் தங்குவதில் நியாயமில்லை", என்று அன்று நடந்த பொதுக்கூட்டத்தில் நேரு தீர்க்கமாக அறிவித்தார். (முருகேசன் 2004:178).

நகராட்சிகளின் விடுதலை

குபேர்ட்டின் குழு ஃபிரெஞ்சு இந்தியப் பகுதிகளைக் கடந்து மார்ச் 27 அன்று நெட்டப்பாக்கத்தை அடைந்தது. அங்கு, மேயர் வெங்கடசுப்பா ரெட்டியார், முத்துக்குமரப்ப ரெட்டியார், மற்றும் குபேர்ட்டின் ஆதரவாளர்கள் தயாராக இருந்தனர். காமராஜரும், ஓமந்தூராரும் அவர்களுக்கு பின்னிருந்து பணம், ஆள் பலம், மற்றும் பொருட்களை வழங்கினர். தமிழ்நாட்டிலிருந்து 200 ஓய்வுபெற்ற ராணுவ வீரர்களும், காவல்துறையைச் சேர்ந்த 100 பேரும் சாதாரண உடைகளில் நெட்டப்பாக்கத்திற்கு அருகில் உள்ள சிறுவந்தாடு கிராமத்தில் இறுதி நடவடிக்கைக்காக குழுமியிருந்தனர். தமிழ்நாடு அரசு அளித்த பாதுகாப்புடன் அங்கு கூடியிருந்த மக்கள் நெட்டப்பாக்கம் நகராட்சியைக் கைப்பற்றினர்; மேலும் அங்கு காவல் நிலையத்தில் தேசியக்கொடியை ஏற்றினர். பின்னர் அவர்கள் பாகூர், கடுவனூர் மற்றும் பல கிராமங்களை அடுத்தடுத்து எந்த எதிர்ப்புமின்றி கைப்பற்றினர். மார்ச் 31 அன்று இப்பகுதிகள் ஃபிரெஞ்சு கொடுங்கோல் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (கிருஷ்ணமூர்த்தி 1991:79).

காரைக்காலில் இதேபோல ஒரு முயற்சியை மேற்கொள்ள, இளைஞர் காங்கிரஸ் தொண்டர்களின் ஒரு சிறு குழு கைகளில் தேசியக்கொடிகளை ஏந்தியபடி புதியதாக உருவாக்கப்பட்ட 'ஒற்றுமை இணைப்பு முன்னணி'யின் ஆசியுடன் நாகப்பட்டினத்திலிருந்து மார்ச் 27 அன்று காரைக்கால் நகரத்திற்குள் நுழைந்தபோது அவர்கள் ஒடுக்கப்பட்டனர். (கிருஷ்ணமூர்த்தி 1991:90).

எதிர்ப்பு செயல்பாடு

கம்யூனிஸ்ட் குழு, மிகுதியான உற்சாகத்துடன் ஏப்ரல் 6 அன்று மண்ணாடிப்பட்டு நகராட்சியைக் கைப்பற்றி தன்னாட்சி அறிவித்தது. ஆயினும், மறுநாள் இரண்டு சரக்குந்துகள் நிறைய ஆயுதங்கள் ஏந்திய நபர்களின் துணையுடன் வந்த ஒரு தொண்டர்கள் குழு நெட்டப்பாக்கத்திலிருந்து பேரணியாக வந்து கம்யூனிஸ்டுகளை துரத்தியடித்து நகராட்சியை மீண்டும் கைப்பற்றி அங்கு தேசியக்கொடியை ஏற்றியது. (அருள்ராஜ் 2005:135).

சக்கரத்தின் கம்பி

சுப்பையா, ஏப்ரல் 1954இல் தில்லி சென்று புதுச்சேரியில் நிலவும் சூழல் குறித்து நேருவுடன் விரிவான ஆலோசனை நடத்தினார். குபேர்ட் மதராசில் காமராஜருடன் ஆலோசனை நடத்தினார். காமராஜரின் முயற்சியில், 8 ஏப்ரல் 1954 அன்று கடலூரில் கூடிய அனைத்துக் கட்சிக் கூட்டம், நிலைமை குறித்து மதிப்பாய்வு செய்தது. அதுவரை தனி நபர்களாக செயல்பட்டு வந்த செல்லான் நாயக்கர், சுப்பையா, லாம்பர்ட் சரவண், துரை முனுசாமி, டடலா ரமணய்யா மாரியப்பன், மற்றும் அருள்ராஜ் ஆகியோர் அங்கு ஒன்றாக கூடியிருந்தனர். நகரத்தில் போராட்டத்தைத் தீவிரப்படுத்த, 'பாண்டிச்சேரி நடவடிக்கை' என்னும் இயக்கத்தை தொடங்க முடிவு செய்யப்பட்டது. தங்களுக்குள்ளான அடிப்படை அரசியல் வேறுபாடுகளை புறந்தள்ளி ஒற்றுமையான ஓர் போராட்டத்தை முன்னெடுப்பது

என்று அவர்கள் உறுதி பூண்டனர். சுப்பையா ஒரு தீவிரவாத நிலைப்பாடு கொண்டவராக இருந்தபோது, செல்லான் ஓர் மிதவாதியாக இருந்தார். மக்களிடையே பெரும் செல்வாக்கு கொண்டவர்களாக இருந்த அவ்விருவரும் இணைந்து, ஒற்றுமையாக போராட்டத்தில் இறங்குமாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்து ஓர் கூட்டறிக்கையை வெளியிட்டனர். ஆயினும், பின்னர் அதைத் தொடர செல்லான் நாயக்கர் தயக்கம் காட்டியதற்கான காரணங்கள் தெரியவில்லை (நியோகி 197:237; அருள்ராஜ் 2005:138).

புதுச்சேரியில் நடத்தப்பட்ட போராட்டங்கள்

திட்டமிட்டபடி புதுச்சேரியின் நான்கு மூலைகளிலிருந்தும் பேரணியாகச்சென்று தலைமைச் செயலகத்தை நோக்கி போராட்டக்காரர்கள் குவிந்தனர். சைகோனிலிருந்து வரவழைக்கப்பட்ட காவல்துறையும், இராணுவமும் அவர்களைக் கொன்று குவித்தனர். காவல்துறை அடக்குமுறையைக் கண்டிக்கும் வகையில், 14ஆம் தேதி ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு, அதே விதியை எதிர்கொண்டது. 26 ஏப்ரல் அன்று FINCஆல் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சி மாநாடு, பிரெஞ்சு இந்திய நிர்வாகத்தின் முழுத் தோல்விக்காகவும், மிருகத்தனமான பலத்தைப் பயன்படுத்தியதற்காகவும் கண்டனம் செய்தது. பிரெஞ்சு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மத்திய இணைப்பு காங்கிரஸ், பிரெஞ்சு இந்திய தேசிய காங்கிரஸ், இளைஞர் காங்கிரஸ், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் பல்வேறு ஆதரவு இணைப்பு அமைப்புகளைக்கொண்ட ஒரு கூட்டு முன்னணி ஏப்ரல் 29 அன்று உருவாக்கப்பட்டது. காந்தியக் கொள்கையான அகிம்சையைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்து போராட்டத்தைத் தீவிரப்படுத்த இரட்டிப்பு வீரியத்துடன் தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர் (அருள்ராஜ் 2005:149).

திராவிட இயக்கங்களின் எதிர்பாரா மாற்றம்

22 மார்ச் 1954, ஓர் முக்கிய திருப்புமுனை நாளாக அமைந்தது. தங்களது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்த திராவிடர் கழகமும், திராவிடர் முன்னேற்றக் கழகமும் விடுதலை இயக்கத்திற்கு ஆதரவளிக்க முன்வந்தன. தூத்துக்குடியில் பெரியார் கலந்து கொண்ட ஒரு மாநாட்டில், ஃபிரெஞ்சுக்காரர்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என்னும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது (முருகேசன் 2004:193).

அண்ணாவின் ஆதரவு

இளைஞர் காங்கிரஸ், திமுக, மற்றும் புதுச்சேரி கம்யூனிஸ்ட் தலைவர்கள் அடங்கிய ஓர் பிரதிநிதிகள் குழு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளரான அண்ணாவை சந்தித்து இயக்கத்திற்கான அவருடைய ஆதரவை வேண்டியது. தன்னுடைய ஆதரவிற்கு உறுதியளித்த அண்ணா, கழகத்தின் அதிகாரப்பூர்வ ஏடான நம் நாடு பத்திரிகையில், "தொண்டர்கள் போராட்டத்தைத் தொடங்கினர் வெள்ளையர் நடுங்கினர்", "தி.மு.க. கிளர்ச்சி புதுவை எழுச்சி", போன்ற தலைப்புகளில் தொடர் கட்டுரைகளையும், தலையங்கங்களையும் வெளியிட்டார். அதன் பின்னர், புதுச்சேரி திமுக தொண்டர்கள் இயக்கத்தின் கடைசி கட்டங்களில் முழுமனதுடன் முழுவீச்சில் பங்கேற்றனர் (அருள்ராஜ் 2005:159).

போராட்டம் தீவிரமடைந்தது

விழுப்புரம் நகராட்சித் தலைவர் சண்முகம் உடையாரின் அரிசி ஆலையில் ஓர் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை 2 மே 1954 அன்று சுப்பையா கூட்டினார். விழுப்புரத்திற்கும்,

கோட்டகுப்பத்திற்கும் இடையிலான இலகுவான பரப்பில் தொண்டர்களுக்கான பயிற்சியை தீவிரப்படுத்த வேண்டும் என்று அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. பரப்புரை அறிக்கைகளை அச்சடிக்க V.P. சிந்தன் ஒரு அச்சு இயந்திரத்தை ஏற்பாடு செய்து அதை விழுப்புரத்தில் ஓர் நிலவறையில் நிறுவினார். இந்த முன்னேற்றங்கள் நிச்சயமாக ஃபிரெஞ்சு நிருவாகத்தை அசைத்தது. (அருள்ராஜ் 2005:149–161).

சுதந்திர அரசு

மே 16 ஓர் நினைவுகூரத்தக்க நன்நாளாக இருந்தது. நெட்டப்பாக்கம் ஓர் பிரம்மாண்டமான வெற்றிக் கொண்டாட்டத்தைக் கண்டது. ஏப்ரல் 13 அன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக உவகையுடன் பொறுப்பேற்றிருந்த காமராஜர், குறிக்கோளை அடைந்து விட்டோம் என்கிற பெருமித உணர்வுடன் அதில் பங்கேற்றார். மே 17 அன்று நிருவாகத்தை மேலாண்மை செய்வதற்கான 12 உறுப்பினர்கள் கொண்ட ஆலோசனைக் குழுவின் ஆதரவுடன் ஓர் சுதந்திர அரசாங்கம் அமைக்கப்பட்டது. அக்குழுவின் இரண்டு உறுப்பினர்களான கிளியனூர் வெங்கடகிருஷ்ண ரெட்டியார் மற்றும் சிறுவந்தாடு லட்சுமிநாராயண ரெட்டியார் ஆகிய இருவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆவர். தமிழ்நாட்டின் ஓய்வுபெற்ற ஆட்சியரான H.S.S. பால் அரசின் நிருவாகியாகவும், புதுச்சேரி சிவா தலைமை நீதிபதியாகவும், மதராஸ் காவல்துறையின் முன்னாள் துணை ஆணையரான ராஜா முகமது புதுச்சேரி காவல்துறையின் தலைமைப் பொறுப்பிலும் நியமிக்கப்பட்டனர். எட்டு மாதங்களுக்கு இந்த சுதந்திர அரசு முழுவதுமாக செயல்பட்டது, மேலும் இந்திய அரசாங்கம் இதன் செலவுகளுக்கு நான்கு இலட்சம் ரூபாய் நிதியையும் விடுவித்தது. (அருள்ராஜ் 2005:152).



அடி மேல் அடி

ஃபிரெஞ்சு இந்திய ஆக்கிரமிப்பில் இருந்த கால்பங்கு பகுதிகள் 30 ஏப்ரல் 1954க்குள், இணைப்பு ஆதரவு சக்திகளால் விடுவிக்கப்பட்டன. ஏனாம் ஜூன் மாதத்திலும், மாஹி ஜூலை மாதத்திலும், கடும் மக்கள் போராட்டத்திற்குப் பின்பு விடுவிக்கப்பட்டன. (நியோகி 1997:248).



La signature historique du transfert de facto, 1er novembre 1954

தில்லியிலும், பாரிஸிலும் நடந்த பரபரப்பான பேச்சுவார்த்தைகள் மற்றும் முடிவுகளுக்குப் பின்பு, ஃபிரெஞ்சு இந்தியாவின் சட்டசபை உறுப்பினர்கள் மற்றும் நகராட்சி உறுப்பினர்கள் 178 பேர், அதில் பெரும்பாலானோர் தமிழர்கள், அக்டோபர் 18 அன்று கீழுரில் கூடினர். இங்கு மீண்டும் ஃபிரெஞ்சு நிருவாகத்தின் கடைசி நிமிட சாகசங்களைத் தவிர்க்க, கேவல் சிங் செயல்திறத்துடன் 200 மீட்டர் தள்ளி ஓர் பாதுகாப்புப் படையை நியமித்திருந்தார். (நியோகி 1887:270).

இதனைத் தொடர்ந்து, 21 அக்டோபர் 1954 அன்று புதுடெல்லியில் நடைமுறை பரிமாற்ற ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அதிகார இடமாற்ற ஒப்பந்தத்தில் இந்தியா சார்பாக கேவல் சிங்கும், ஃபிரான்சின் பிரதிநிதியாக பியர் லாண்டியும் 1 நவம்பர் 1954 அன்று கையெழுத்திட்டபோது, தென்னிந்தியாவின் நான்கு குடியிருப்புப் பகுதிகளை ஏறக்குறைய 280 ஆண்டுகளாக ஆண்டு கொண்டிருந்த ஃபிரெஞ்ச் ஆட்சி முடிவுக்கு வந்தது. (கிருஷ்ணமூர்த்தி 1991:88–89).



தன்னுடைய மகிழ்ச்சியை மக்களுடன் பகிர்ந்துகொள்ள 16 ஜனவரி 1955 அன்று பிரதமர் நேரு, காமராஜருடன் புதுச்சேரி வந்து வெற்றிக் கொண்டாட்டத்தில் பங்கேற்றார். மக்கள் வீதிகளில் அணி அணியாகத் திரண்டு அவருக்கு நன்றியுடன் ஓர் உற்சாகமான வரவேற்பை அளித்தனர். பின்னோக்கிப் பார்க்கும்போது, ராமருக்கு அணில் உதவுவதுபோல, புதுச்சேரி, இந்தியாவிற்கு குறிப்பாகத் தமிழ்நாட்டிற்கு உதவியது. அதற்குப் பிரதிபலனாக, தன் வயிற்றுப் பையில் அழுத்தமான அக்கறையுடன் குட்டியை வைத்து பராமரிக்கும் ஓர் கங்காருவைப்போல, தமிழ்நாடு, புதுச்சேரியைப் பாதுகாத்தது. சுருக்கமாகக் கூறவேண்டுமானால், வரலாறு, பண்பாடு, மொழி மற்றும் பிரதேச தொடர்புகளின் பின்னணியில், மாநிலங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பின் வெளிப்பாடாக இருந்தது.



விடுதலைப் போராட்டத்தில் தமிழ் நாட்டின் பங்களிப்பு

சிறப்பு மலர்

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்:

த. மோகன், இ.ஆ.ப.,

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

வடிவமைப்பு:
இரா.தமிழரசு

அச்சிட்டோர்:
தமிழரசு அச்சகம்


எண்.5, இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை - 600 113.
தொலைபேசி : 044-22542224 / 22542221
மின்னஞ்சல்: ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம்: www.tndipr.gov.in

தமிழரசு
செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

“நம்முடைய தமிழ்ச் சமூகமானது சிந்தனையால், பண்பாட்டால், நாகரிகத்தால், பழக்கவழக்கத்தால் உயர்வடைய வேண்டும். அதாவது ஏற்றத்தாழ்வு அற்ற, உயர்வு தாழ்வு அற்ற ஒரு மனித உரிமைச் சமூகமாக நாம் மாற வேண்டும். அதைத்தான் நம்முடைய சுதந்திரப் போராட்டத் தியாகிகள் விரும்பினார்கள், அதற்காகத்தான் போராடினார்கள், அதற்காகத்தான் தியாகம் செய்தார்கள்.” ”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்



வெளியீடு

தமிழரசு

செய்தி – மக்கள் தொடர்புத் துறை